எழுநா

இதழ் 28

நவம்பர்
2024

எழுநா

இதழ் 28

பதிப்பாசிரியர்
கணேசானந்தன் சசீவன்

பொறுப்பாசிரியர்கள்
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ் – சஞ்சிகை
ஜனனி பாலசுந்தரம் – வலைத்தளம்
விஜயதர்சினி தினேஸ் – கற்கை வட்டம்
பவித்ரா இரமணீகரசர்மா – குரல் வடிவம்
மதுஹரி சத்தியலோகநாதன் – குரல் வடிவம்

வளவாளர்கள்
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு
கதிர் சயந்தன் – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு
சுவர்ணலதா செந்தில்குமார் – மெய்ப்புத் திருத்தம்
தங்கராஜா பிரபாகரன் – மெய்ப்புத் திருத்தம்
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி/ விவரணப்படம்
சிறிதரன் சோமிதரன் – காணொலி / விவரணப்படம்
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு
பரமசிவம் பவதாரணி – செயல்பாட்டு மேலாண்மை
நிவேதிகா இராசன் – செயல்பாட்டு மேலாண்மை
சிவகுமார் சிவகஜன் – கற்கை வட்டம்

துறை சார் ஆலோசகர் குழு
ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
கந்தையா ரமணிதரன் – நீரியலும் நீர்ப்பாசனமும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்ட முறைமையும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப் பல்வகைமையும்
தர்சன் அம்பலவாணர் – சமயமும் இறையியலும்
பால சிவகடாட்சம் – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்
நாகமுத்து பிரதீபராஜா – புவியியலும் திட்டமிடலும்
பரமு புஸ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
சனாதனன் தமோதரம்பிள்ளை – கட்புல அரங்கேற்ற கலைகள்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் – பொருளியலும் நிதியியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்றலும்
மரியோ அருள்தாஸ் – அரசியலும் மெய்யியலும்
இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
கந்தையா பகீரதன் – விவசாயமும் மீன்பிடியும்

நிதிப்பங்களிப்பாளர்கள்
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே
சிவா சிவானந்தன்
கனக சுகுமார்

ஆதரவளிப்போர்
தமிழ் ஊடகத் திரட்டு – ஆவணப்பட வரிசை
மானுடம் நிறுவனம் – நூல் வரிசை
வரதராஜன் ஞாபகார்த்த கல்வி அறக்கட்டளை – கற்கை வட்டம்

கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்
நடராஜா முரளிதரன் – கனடா

அச்சுப்பதித்து விநியோகிப்போர்
நடராஜா முரளிதரன் – நாளை வெளியீடு கனடா

அட்டைப்படம்
சூழலுக்கு கெடுதியான தொழிற்சாலை செயற்பாடுகளும் அவற்றிற்கு எதிரான மக்கள் போராட்டங்களும்.

Source : www.pinterest.com/rawpixel
Edited By : Paramasivam Bavatharani

FOLLOW

எழுநா

- https://ezhunaonline.com/
- https://youtube.com/user/Ezhuna
- https://www.facebook.com/Ezhunax/
- https://twitter.com/Ezhuna
- https://www.instagram.com/ezhunaa/
- https://www.tiktok.com/@ezhuna
- https://open.spotify.com/show/4Xn
- https://tinyurl.com/ykj8ru3f
- https://tinyurl.com/3zfkzxme
- https://tinyurl.com/2p83m8zj
- https://pca.st/swr6zomk
- https://radiopublic.com/6rX3L4
- https://tinyurl.com/bdeky92h
- https://anchor.fm/ezhuna
- https://www.clubhouse.com/club/ezhuna
- https://www.magzter.com/publishers/

தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

உள்ளே...

இடதுசாரி நோக்கில் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய விமர்சனம் – பகுதி 1,2,3 — 04
- ஆங்கில மூலம் : ஜயம்பதி விக்கிரமரட்ண
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

நீலாசோதையன் என்னும் துணைத்தெய்வம் — 26
- தி. செல்வமனோகரன்

சுன்னாகம் நிலத்தடி நீர்: குடிக்கலாமா, கூடாதா? — 37
- மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஹௌ மக்களும் தமிழ் மக்களும் (பொ.ஆ 300 – 900) பகுதி – 1,2,3 — 49
- கா.இந்திரபாலா

கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை: அறிமுகம் — 96
- எம். எம். ஜெயசீலன்

பூநகரிப் பிராந்தியத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வேள், ஈழம் பற்றிய தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் — 111
- பரமு புஷ்பரட்ணம்

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – நல்லூர் — 120
- இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இலங்கையுடனான அரேபியர் மற்றும் பாரசீகர்களின் வர்த்தக, கலாசார தொடர்புகள்: கி.பி 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டுகள் வரை — 126
- அப்துல் ரஹீம் ஜெஸ்மில்

கைதி #1056 : ரோய் ரத்தினவேல் அவர்களின் சுயசரிதை — 144
- இளங்கோ

பாட்டாளி வர்க்க, விடுதலைத் தேசியப் புரட்சிகள் — 153
- நடேசன் இரவீந்திரன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்: ஒரு வரலாற்றுக் குறிப்பு – பகுதி 3 — 163
- நடராஜா செல்வராஜா

இலங்கையில் சூஃபித்துவம்: ஓர் அறிமுகம் — 172
- ஜிஃப்ரி ஹாசன்

இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சேர்.பொன். அருணாசலத்தின் வகிபாகம் — 178
- இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா

'மில்க் வைற்' சுதேச நிறுவனம்: உள்ளூர் உற்பத்திக்கான உந்து சக்தி — 193
-வை. ஜெயமுருகன்

நாக மன்னன் பற்றியும், நாகக் கால்வாய் பற்றியும் குறிப்பிடும் இலங்கைத்துறை, கல்லடி நீலியம்மன் மலைக் கல்வெட்டுகள் — 200
-என். கே. எஸ். திருச்செல்வம்

நாகர் பற்றிக் குறிப்பிடும் ரஜகல எனும் ராசமலைக் கல்வெட்டுகள் — 211
- என். கே. எஸ். திருச்செல்வம்

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ் புதிய உயரடுக்கும் பழைய உயரடுக்கும் — 222
- பி. ஏ. காதர்

சிலிக்கன் பள்ளத்தாக்கை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரும் 'யாழ் ஜீக் சலஞ்' மற்றும் 'அரிமா டெக்னோலொஜீஸ்' — 228
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன்

கூட்டுறவுக்குள் கூட்டுறவு : பிலிப்பைன்ஸ் அனுபவம் — 236
- வை. ஜெயமுருகன்

கறவை மாடுகளின் நலன் (welfare) தொடர்பான அவதானிப்புகள்: இலங்கை நிலைப்பாடு — 247
- சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

வட மாகாணத்தில் இடி – மின்னல் நிகழ்வுகள் — 253
- நாகமுத்து பிரதீபராஜா

ஈழத்தில் கற்ற அடிப்படையில் சிலிக்கன் வலியில் வணிகம் — 259
- கணபதிப்பிள்ளை ரூபன்

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் மனிதவள அபிவிருத்தியில் கல்வி முதலீடு — 264
-அமரசிங்கம் கேதீஸ்வரன்

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்றுக் கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.

கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

ஆங்கில மூலம் : ஜயம்பதி விக்கிரமரட்ண

இடதுசாரி நோக்கில் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய விமர்சனம்

பகுதி I

2024 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இலங்கையின் நிறைவேற்று அதிகார முறையை ஒழித்தல் என்னும் விடயம் முக்கிய பேசுபொருளாக ஆகியுள்ளது. எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள், இம் முறையை நீக்கி பாராளுமன்ற முறைக்கு (Parliamentary System) மீண்டும் திரும்புவதற்கான சாதக நிலையை உருவாக்கலாம் என நம்பப்படுகின்றது. இப் பின்புலத்தில் நிறைவேற்று ஜனாதிபதிமுறை பற்றிய விமர்சன நோக்கிலான ஆய்வுகளைத் தமிழ் வாசகர்களின் கவனத்திற்கு கொண்டு வரும் நோக்கில் இத் தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.



ஜே.ஆர். ஜெயவர்த்தன
Image Source : http://www.reddit.com/r/srilanka/comments

ஆங்கிலத்தில் நிறைவேற்று ஜனாதிபதிமுறை பற்றிய விமர்சனமாக அமையும் ஆய்வுக் கட்டுரைகள் ஏராளம் எழுதப்பட்டுள்ளன; ஆய்வு நூல்கள் பலவும் வெளிவந்துள்ளன. இவ்வகை ஆய்வுகளை இரு பிரிவுகளாக வகுத்துக் கொள்ளலாம்.

1. லிபரல் ஜனநாயகவாதிகள் (Liberal Democrats) என்னும் வகையினரான அறிவாளிகளின் ஆய்வுகள்.

2. இடதுசாரிகள் (Leftists) அல்லது மார்க்சிஸ்டுகள் என்ற வகையினரான அறிவாளிகளின் ஆய்வுகள்.

இந்த இரு வகையான ஆய்வாளர்களினதும் கட்டுரைகள் சிலவற்றை 'எழுநா'வில் தொடர்ந்து அறிமுகம் செய்யவுள்ளோம். மேற்கூறிய இரு பிரிவுகளில் இரண்டாவதான இடதுசாரிகளின் நோக்கு நிலை நின்று சட்ட அறிஞர் ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் எழுதிய 'EXECU TIVE PRESIDENCY - A LEFT PERSPECTIVE' என்னும் தலைப்பிலான கட்டுரையின் பிரதான கருத்துகளைச் சுருக்கமாக இத் தமிழ்க் கட்டுரையில் எடுத்துக் கூறவுள்ளோம். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் எழுதிய 'TOWARDS DEMOCRATIC GOVERNANCE IN SRI LANKA : A CONSTITU TIONAL MISCELLANY (2014)' என்ற நூலின் மூன்றாவது அத்தியாயமாக அமைந்துள்ளது. எமது இத் தமிழ்க் கட்டுரை மொழிபெயர்ப்பாக அல்லாது மூலத்தின் கருத்துகளைச் சுருக்கியும், தழுவியும் எமது வார்த்தைகளில் கூறுவதாக அமைந்துள்ளது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் அவசியமானது.

இலங்கையில் ஜனநாயக ஆளுகையை நிறுவுதல்

ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் 2014 ஆம் ஆண்டு நூலின் தலைப்பு 'இலங்கையில் ஜனநாயக ஆளுகையை நிறுவுதல்' (Towards Democratic Governance) என்ற நோக்கு நிலை நின்று எழுதப்பட்ட கட்டுரைகளின் கதம்பம் (Miscellany) என்பதை உணர்த்துவதைக் காணலாம். விக்கிரமரட்ண போன்ற இடதுசாரிகளில் பெரும்பான்மையினர் இன்று இலங்கையில் ஜனநாயக ஆளுகையை நிறுவுதல் என்ற விவாதத்தை, வெறுமனே ஜனாதிபதி முறையா? அல்லது பாராளுமன்ற முறையா? என்ற பட்டிமன்ற விவாதமாகக் குறுக்குவதனை விரும்புவதில்லை. இவ் விவாதத்தினை பன்மைப் பண்பாட்டுச் சமூகமான (Multi - Cultural Society) இலங்கையின் தேசிய இனங்களின் பிரச்சினையை, அதிகாரப் பரவலாக்கல் (Devolution of Power) மூலம் தீர்வு செய்தல் என்ற பொதுப் பிரச்சினையுடன் இணைத்தே பார்க்க வேண்டும் என்பதே அவர்களது நோக்கமாகும். ஆகையால் ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் நூலிலுள்ள 10 கட்டுரைகளில் ஒன்றான 3 ஆவது அத்தியாயமான 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை' பற்றிய விடயத்தை ஏனைய கட்டுரைகளில் இருந்து தனிமைப்படுத்தி நோக்குதல் ஆகாது என்பதையும் இவ்விடத்து வாசகர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். குறிப்பாக 4 ஆவது அத்தியாயமான 'LEGAL ASPECTS OF DEVOLUTION IN SRI LANKA', 5 ஆவது அத்தியாயமான 'POWER SHARING IN THE PERIPHERY' ஆகியவை அதிகாரப் பரவலாக்கல் (Devolution), பிராந்தியங்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளுதல் (Power Sharing) ஆகிய விடயங்களுக்கு அழுத்தம் கொடுப்பவை.

அரசியல் யாப்பை வரைதல் (Constitutional Making), இலங்கை போன்ற பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் சர்வதேச அனுபவங்களினைக் கவனத்தில் கொண்டு நடத்தப்பட வேண்டிய விவகாரம் என்பதையும் அதிகாரப் பரவலாக்கத்தின் அவசியத்தையும் அழுத்திக் கூறும் 'CONSTI TUTION MAKING IN MULTI - CULTURAL

SOCIETIES : SOME INTERNATIONAL EXPERIENCES' என்னும் தலைப்பிலான முதலாவது அத்தியாயத்தினையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதனையும் குறிப்பிடுதல் சாலவும் பொருத்தமானது.

அடுத்து ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் கட்டுரையின் முக்கியமான கருத்துகளை நோக்குவோம்.

ஜனாதிபதி முறையை ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தினார். புதிய அரசியல் யாப்புச் சட்டம் அவ்வாண்டு நடைமுறைக்கு வந்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் இத்திட்டத்தை தொடக்கம் முதலே இடதுசாரிகள் வன்மையாக எதிர்த்தனர். இடதுசாரிகளின் இந்த எதிர்ப்பியக்க வரலாற்றை விபரிப்பது மட்டும் தமது கட்டுரையின் நோக்கமன்று; இடதுசாரிகளின் எதிர்ப்புக்கு பின்னால் உள்ள ஜனநாயகத் தத்துவங்களை (*Democratic Principles*) எடுத்துக் காட்டுவதே தமது நோக்கம் என்று கட்டுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

1971 ஆம் ஆண்டில் நடைபெற்ற விவாதங்கள்

ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 இல் ஜனாதிபதி முறை அரசியல் யாப்பை நடைமுறைக்கு கொண்டு வந்தார் என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால் அவர் ஜனாதிபதி முறையை இலங்கையில் புகுத்த வேண்டும் எனும் கருத்தை 1971 இலேயே முன்வைத்தார்; அது பற்றிய சர்ச்சையைத் தொடங்கினார் என்பது பலர் அறியாத விடயமாகும். 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கம் புதிய அரசியல் யாப்பை வரைவதற்காக அரசியலமைப்புச் சபை ஒன்றை அமைத்தது. அச்சபையில் ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசியல் யாப்பு பற்றிய விவாதங்களில் பங்கு கொண்டு, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை

ஜே.ஆர். ஜெயவர்த்தன 1978 இல் ஜனாதிபதி முறை அரசியல் யாப்பை நடைமுறைக்கு கொண்டு வந்தார் என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால் அவர் ஜனாதிபதி முறையை இலங்கையில் புகுத்த வேண்டும் எனும் கருத்தை 1971 இலேயே முன்வைத்தார்; அது பற்றிய சர்ச்சையைத் தொடங்கினார் என்பது பலர் அறியாத விடயமாகும்.

இலங்கைக்கு அவசியமானது என்ற பிரேரணையை முன்மொழிந்தார் என்பதை விக்கிரமரட்ண அவர்கள் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறார். 1978 இல் சர்வ அதிகாரமும் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதிமுறை புகுத்தப்பட்டதன் பயனாக ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் நீண்டகாலக் கனவு ஒன்று நிறைவேற்றப்பட்டது என்பதே உண்மை. ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக இருந்த ஜெயவர்த்தன 1971 யூலை 2 ஆம் திகதி அரசியல் யாப்புச் சபையில் முன்வைத்த பிரேரணையில்,

அ) நிறைவேற்று ஜனாதிபதி 7 ஆண்டு காலத்திற்குப் பதவி வகிக்க வேண்டும்.

ஆ) பிரதமருடன் கலந்தாலோசித்த பின் பாராளுமன்றத்தை எவ்வேளையிலும் கலைக்கும் அதிகாரம் உடையவராக இருக்க வேண்டும்.

என்ற இரு முக்கிய விடயங்களை உள்ளடக்கியிருந்தார்.

அவரின் இக்கருத்தோடு அக்காலத்தின் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்கள் சிலர் முரண்பாடு கொண்டவர்களாய் இருந்தனர். ஏ.சி.எஸ். ஹமீட் அவர்களில் ஒருவராவர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான டட்லி சேனநாயக்கவும் ஜனாதிபதிமுறை இலங்கைக்குப் பொருத்தமற்றது என்ற

கருத்தைக் கொண்டிருந்தார். கட்சிக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருந்த போதும், ஜெயவர்த்தன அவர்கள் தமது பிரேரணையை அரசியல் யாப்புச் சபையில் முன் வைக்கலாம் எனக் கட்சி அனுமதியளித்தது. அவரது பிரேரணையை ஆர். பிரேமதாச அரசியல் யாப்புச் சபையில் வழி மொழிந்தார். இவ்விருவரும் 1978 இல் புதிய அரசியல் யாப்பு நடைமுறைக்கு வந்த பின் நிறைவேற்று ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தனர். அவர்களின் ஆட்சிக் காலத்து நிகழ்வுகள் ஜனாதிபதி முறையின் தீங்குகளை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது என்பது வரலாறு. இருவரும் சர்வாதிகாரிகளாகவே விளங்கினர்.

ஏ.சி.எஸ். ஹமீட் அரசியல் யாப்புச் சபை விவாதத்தின் போது, ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் பிரேரணைக்கு மாறான தமது கருத்தைக் கூறியிருந்தார். "இலங்கை முழுவதிலும் உள்ள மக்களினால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறை இலங்கையின் சிறுபான்மை இனத்தவர்களுக்குத் தீங்கானதாகவே அமையும்" என்பது ஹமீட் அவர்களின் கருத்தாகும் (பக். 99).

ஜனாதிபதி முறை இலங்கைக்குப் பேரழிவையே கொண்டு வரும் என்ற கருத்துடையவரான டட்லி சேனநாயக்க அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதி முறை சிறப்பாகச் செயற்பட்டதற்கு அந்நாட்டின் பிரத்தியேகமான, விசேட வரலாற்றுச் சூழலே (Special Historical Situation) காரணமாகும். பிரான்ஸ் தேசத்திலேயும் ஜனாதிபதி முறை இவ்வாறே விசேட வரலாற்றுக் காரணங்களால் சிறப்பாக இயங்கி வருகிறது. ஆனால் இலங்கைக்கு அம்முறை பேரழிவையே கொண்டு வரும். அம்முறை இலங்கையில் 'சீசரிசம்' (Caesarism) எனப்படும் சர்வாதிகார ஆட்சி மரபை உருவாக்கி விடும். அது ஒரு தனி நபரின் கைகளில் அதிகாரம் முழுவதையும் குவிப்பதாக அமைந்து விடும்; பாராளுமன்றத்தை அதிகாரம் அற்ற சபையாக மாற்றி விடும். அமெரிக்காவிலும் பிரான்சிலும் ஜனாதிபதி முறை சிறப்பாகச் செயற்பட்டிருக்கலாம். ஆயினும் அம்முறை நிக்குருமா, நாசர் போன்றவர்களை உருவாக்கலாம். சுதந்திரமான ஜனநாயக சமூகத்திற்கு சர்வாதிகாரிகள் ஆபத்தானவர்கள்; இதனால் இம்முறை எமக்குப் பொருத்தமற்றது (பக். 99100)."

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களான ஹமீட், டட்லி சேனநாயக்க ஆகியோரின் கூற்றுகளை மேற்கோள் காட்டும் ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் ஜெயவர்த்தனவின் கருத்துகள் இடதுசாரிகளால் மட்டுமன்றி வலதுசாரி அரசியல் தலைவர்களாலும் நாட்டிற்குப் பேரழிவை ஏற்படுத்தும் எனப் புறந்தள்ளப்பட்டிருந்தன என்பதை எடுத்துக் காட்டுகிறார்.

ஒரு யுகத்தின் முடிவு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான டட்லி சேனநாயக்க, அக்கட்சியின் பிரதித் தலைவரான ஜே.ஆர். ஜெயவர்த்தன என்ற இருவரும் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்துடையவர்களாக இருந்தனர் என்பதை மேலே விளக்கிக் கூறினோம். டட்லி ஒரு ஜனநாயகவாதி; ஜே.ஆர். ஜெயவர்த்தன அதிகார வெறி பிடித்த சர்வாதிகாரி என்று இம் முரண்பாடு பலராலும் விளக்கப்படுவதுண்டு. இந்த முரண்பாட்டை ஜயம்பதி விக்கிரமரட்ண தனிநபர்களுக்கிடையிலான கருத்து முரண்பாடாகப் பார்க்காமல், கட்சிக்குக்குள்ளே ஏற்பட்ட கருத்தியல் முரண்பாடாக கருதுகிறார்.

டட்லி, ஜே.ஆர் என்னும் இரு நபர்களுக்கிடையிலான இந்த

முரண்பாட்டை இலங்கையின் முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஏற்படும் கருத்தியல் முரண்பாடாக விக்கிரமரட்ண எடுத்துக் காட்டுகிறார். *1948* முதல் *1970* கள் வரையான கால் நூற்றாண்டு காலத்தில் வலதுசாரிகளான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களிடையே 'பாராளுமன்ற ஜனநாயகம் இலங்கைக்குப் பொருத்தமற்றது; இலங்கை சர்வாதிகார முறையை நோக்கி நகர வேண்டிய தேவை உள்ளது.' என்ற கருத்துடையவர்களிற்கு ஆதரவு பெருகியது.

"ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இவ்வாறான (சர்வாதிகார முறை தேவை என்ற) கருத்துகள் தோன்றியிருந்தமை ஆச்சரியத்துக்குரியதன்று. இலங்கையின் சமூக முறைமைக்குள் முதலாளித்துவ முறைக்கு எதிர்ப்பும் ஆபத்தும் தோன்றியிருந்ததை முதலாளித்துவ வர்க்கம் உணர்ந்து கொண்டமையின் விளைவே இதுவெனலாம். 'பொது மகன்' (*Common Man*) என்ற கருத்து தேவையற்றது என்ற முடிவுக்கு அவர்கள் வந்தனர். முதலாளி வர்க்கத்திடம் நாட்டை வழிநடத்தும் அறிவும் ஆற்றலும் உள்ளது; அவ்வர்க்கம் இந் நாட்டில் உறுதிநிலையுடைய ஆட்சியை நடத்தும் தகைமை உடையது என்றும் அவர்கள் கூறத் தலைப்பட்டனர் (பக். *100 - 101*)." இது நவ தாராளவாதத்தின் கருத்தியல் ஆகும்.

1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறை என்ற சர்வாதிகார முறையை நிறுவினார். அதற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்பே *1971* இல் இலங்கைக்கு சர்வாதிகார முறை தேவை என்பதை அவர் உரத்துக் கூறினார். மார்கிரட் தட்சரும் றொனால்ட் றீகனும் நவ - தாராளவாதம் (*Neo - Liberalism*) என்பதைப் பேசவும் நடைமுறைப்படுத்தவும் தொடங்குவதற்கு முன்பே அதனை எடுத்துக் கூறியவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. அது மட்டுமல்லாமல் *1978* இல் நவ - தாராளவாதத்தின் சர்வாதிகார அரசியல் மாதிரியை அவர் இலங்கையில் நடைமுறைப்படுத்தவும் செய்தார்.

1973 இல் லிபரல் ஜனநாயகவாதத்தைப் பிரதிநிதித்துவம் செய்த டட்லி சேனநாயக்க காலமானார். அவரது மறைவுக்குப் பின் கட்சிக்குள் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களின் கை மேலோங்கியது. டட்லியின் மறைவை 'ஒரு யுகத்தின் முடிவு' (*End of an Era*) எனத் தமது கட்சியான சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா கூறியிருப்பதை விக்கிரமரட்ண சுட்டிக் காட்டுகிறார். பொது மக்களிடம் இருந்து எழும் அழுத்தம், பாராளுமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் அழுத்தம் என்ற இரண்டைப் பற்றியுமே கரிசனை கொள்ளும் தேவை இன்றைய அரசியல் யாப்பு முறையில் உள்ளது. இதுவொரு அவப்பேறு. நாம் நாட்டை இந்த முறையில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற கருத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அவரது ஆதரவாளர்களும் முன்னெடுத்தனர். பெரும்பான்மைப் பலம் கிடைத்ததும் இலங்கையைச் சர்வாதிகாரப் பாதையில் எடுத்துச் சென்றனர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அவரது ஆதரவாளர்களும் ஜனாதிபதி முறைக்கு ஆதரவாகத் தெரிவித்த கருத்துகள், பாராளுமன்ற மந்திரி சபை முறை அல்லது வெஸ்ட் மினிஸ்டர் (*Westminster*) மாதிரிக்கு எதிராக முன்வைத்த கருத்துகளாகும்.

அ) பாராளுமன்ற மந்திரிசபை முறையில் நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர், வாக்காளர்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்திற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவராவர். இதனால் அவர் பொது மக்களின் மறைமுகமான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவர். இலங்கையில் சாதாரண மனிதர்களின் அழுத்தம் *1956* இற்கு முற்பட்ட காலத்து அரசியலில் இருக்கவில்லை. அக் காலப்பகுதியில் ஆங்கிலம் கற்ற உயர் குழாம் பாராளுமன்ற அரசியலில் செல்வாக்கு

வகித்தது. 1956 இற்குப் பின்னர் படிப்படியாக அரசியல்வாதிகள் மீது சாதாரண மக்களின் அழுத்தம் (Common Man's Pressure) அதிகரித்துச் சென்றது. ஏறக்குறைய 15 ஆண்டுகள் கடந்த பின் 1970 களின் முற்பகுதியில் பொது மக்களின் அழுத்தம் எல்லை மீறிப் போய்விட்டதென இலங்கையின் வலதுசாரி அரசியல்வாதிகள் குறை கூறலாயினர்.

ஆ) பாராளுமன்ற மந்திரிசபை முறையின் இரண்டாவது பெரிய குறையாக வலதுசாரிகள் கூறியது; நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமர், தமது அரசாங்கத் தரப்பில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்நேரமும் தன்னைப் பதவியில் இருந்து நீக்கி விடலாம், காலை வாரி விடலாம் என்ற அச்சத்தோடு இருப்பார்; அதனால் அவர் பாராளுமன்ற உறுப்பினர்களின் அழுத்தத்திற்கும் உட்பட்டவராகப் பலவீனம்மிக்க ஒருவராக இருப்பார் என்பதாகும்.

ஒரு அரசியல் முறைமையில் இருக்க வேண்டிய கட்டுப்படுத்தல்களும் சமன் செய்தல்களும் (Checks and Balances) தேவையற்றவை; அநாவசியமானவை என்ற கருத்தை ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் அவரது ஆதரவாளர்களும் ஒரு கொள்கைத் திட்டமாக முன்வைத்தனர் என்பது தெளிவாகிறது.

1972 அரசியல் யாப்பு - ஜனநாயகத்திற்கு வைத்த ஆப்பு

நிறைவேற்று ஜனாதிபதிமுறை கருக் கொண்டு வளர்ந்த வரலாற்றுப் பின்புலத்தை 5 பக்கங்களில் (97101) விளக்கிய பின்னர் ஜயம்பதி விக்கிரமரட்ண மிக முக்கியமான வினாவொன்றை முன்வைக்கிறார்.

'Jayawardene's proposal was defeated and the parlia mentary system survived, at least until 1978. But one is entitled to ask : did not the various unsatisfac tory features of the 1972 constitution also lead to a degree of authoritarianism?'

மேற் தரப்பட்ட ஆங்கில வாசகத்தின் பொருள் வருமாறு : "ஜே.ஆர். ஜெயவர்த்தன 1971 இல் முன்வைத்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டது; இலங்கையில் பாராளுமன்ற முறை 1978 வரை நிலைத்திருந்தது. ஆயினும் இவ்விடத்தில் நாம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டியவர்களாக உள்ளோம். 1972 அரசியல் யாப்பு பல மோசமான கூறுகளை உட்புகுத்தியதல்லவா? இந்த மோசமான கூறுகள் சர்வாதிகாரம் என்ற வல்லாட்சிக் கொள்கை பலம் பெறுவதற்கும், 1978 இல் நிறைவேற்று ஜனாதிபதி முறை என்ற வடிவில் அது இலங்கை மக்கள் மீது திணிக்கப்படுவதற்கும் உதவின அல்லவா?"

இந்த நியாயமான கேள்வியை முன்வைக்கும் ஜயம்பதி விக்கிரமரட்ண 1972 அரசியல் யாப்பு பின்வரும் மோசமான கூறுகளைக் கொண்டிருந்தது என்று குறிப்பிடுகிறார்.

1. ஒற்றையாட்சி அரசு (The Unitary State)
2. பௌத்த சமயத்திற்கு முதன்மையிடம்/ விசேட இடம்(Special Place of Buddhism)
3. சிங்களம் மட்டுமே இலங்கையின் உத்தியோக மொழி (Sinhala as The Official Language)
4. பாராளுமன்றம் சட்டங்களை இயற்றிய பின்னர் 'நீதி மீளாய்வு' மூலம் அச்சட்டத்தை வறிதாக்கும் நீதிமன்ற அதிகாரத்தை இல்லாமல் செய்தமை (Lack of Post - Enactment of Judicial Review)
5. பொதுச் சேவையினை அரசியல் மயப்படுத்தியமை (Politicization of The Public Service)
6. நீதிமன்ற முறையின் கீழ் மட்டங்களில் (உயர் நீதிமன்றம் தவிர்ந்த பிற நீதிமன்றங்களில்) நிர்வாகத் துறையின் அதிகாரம் பிரயோகிக்கப்படுதல் (Executive's Power Over The Lower Judiciary)

1972 இன் அரசியல் யாப்பின் மேற்குறிப்பிட்ட மோசமான கூறுகள் இலங்கை அரசியலில் சர்வாதிகாரப் போக்கை அதிகரித்தன. 1975 இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தம்முடன் கூட்டுச் சேர்ந்திருந்த இடதுசாரிகளான சமசமாஜிஸ்டுகளை வெளியேற்றினார். அதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் வலதுசாரிகளின் ஆதிக்கம் மேலோங்கியது. 1972 - 1977 காலம், பாராளுமன்ற முறையின் கீழ் சர்வாதிகாரத்தை எப்படிக் கொண்டியக்கலாம் என்பதை பண்டாரநாயக்க அரசாங்கம் நடைமுறைப்படுத்திக் காட்டியது. 1978 இல் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் புகுத்துவதற்கு கருத்தியல் மட்டத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டிருந்தன. ஜெயவர்த்தனவிற்கு முன்பிருந்த சிறிமா பண்டாரநாயக்கவும் அவரது கட்சியினரும் புனிதர்கள் அல்ல என்பதை விக்கிரமரட்ண சுட்டிக்காட்டுகிறார்.



ஏ.சீ.எஸ். ஹமீட்
Image Source : http://en.wikipedia.org/

இலங்கையின் அரசனாக முடி சூட்டிக் கொண்ட ஜே.ஆர். ஜெயவர்த்தன

1977 பொதுத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையைக் கொண்டு வரப்போவதாக ஜே. ஆர். ஜெயவர்த்தன நாட்டு மக்களுக்கு அறிவித்தார். பெரும்பான்மைப் பலத்துடன் தேர்தலில் வெற்றி பெற்ற அவர், கொடுத்த 'வாக்குறுதியை' நிறைவேற்றினார்.

1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்று இரண்டு மாதங்கள் கழிந்த பின்னர், அவ்வாண்டு ஒக்டோபர் 4 ஆம் திகதி ஜே.ஆர். ஜெயவர்த்தன 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்புச் சட்டத்திற்கு ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். 1972 அரசியல் யாப்பின் 2 ஆவது திருத்தச் சட்டம் என அழைக்கப்படும் இச் சட்டத் திருத்தம் மூலம் அவர் தன்னை நிறைவேற்று ஜனாதிபதியாக உருமாற்றிக் கொண்டார். இத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட முறை பற்றி இன்னொரு ஆய்வாளரின் நூலிலிருந்து ஒரு மேற்கோளை கீழே தந்துள்ளோம்.

"முக்கியம் வாய்ந்த இத் திருத்தச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர், அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவிற்கு (Parliamentary Group) சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் அந்நடைமுறை பின்பற்றப்படவில்லை. இத்திருத்தம் 1972 ஆண்டு அரசியல் யாப்பின் 94 ஆவது பிரிவைத் திருத்தம் செய்வதன் மூலம் பிரதம மந்திரியின் அதிகாரங்கள் சிலவற்றைப் பறித்தெடுத்தது; அமைச்சர்களின் எண்ணிக்கை எவ்வளவாக இருக்க வேண்டும், ஒவ்வொரு அமைச்சர்களுக்கும்

டட்லி சேனநாயக்க

Image Source : http://archives1.dailynews.lk/

எவ்வெவ் விடயங்கள் ஒதுக்கப்பட வேண்டும், என்ன விடயங்களுக்கு அமைச்சர்களை நியமிக்க வேண்டியதில்லை என்பனவற்றைத் தீர்மானிக்கும் அதிகாரங்கள் பிரதம மந்திரியிடமிருந்து பறிக்கப்பட்டு நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களாக்கப்பட்டன. இந்த முக்கியமான மசோதா அன்றைய பாராளுமன்றத்தில் (நாஷனல் ஸ்டேட் அசெம்பிளி - NSA) விவாதிப்பதற்கு மூன்று மணிநேரம் மட்டுமே அனுமதியளிக்கப்பட்டது. எதிர்க்கட்சியினர் அவ்விவாதத்தில் கலந்து கொள்ளாது பகிஷ்கரிப்புச் செய்தனர். இத்திருத்தச் சட்டம் பற்றிய விவாதம் பாராளுமன்றத்திற்கு வெளியே நடைபெற்றதா என்று கேட்டால் அவ்வாறு நடந்தது என்று சொல்வதற்கு இல்லை. அரசியல் கட்சிகளுக்குள் இவ்விவாதம் நடைபெற்றதென்று வேண்டுமானால் கூறலாம். இத்திருத்தச் சட்டத்தின் பின்னர் பாராளுமன்றம் அரச அதிகாரத்தின் உறைவிடம் என்ற தகுதியை இழந்து விட்டது. அரசாங்க அதிகாரம் ஜனாதிபதியின் அதிகாரிகள் (*Presidential Staff*) கைகளுக்கு மாறி விட்டது என சிறிலங்கா சுதந்திரக் கட்சி அபிப்பிராயம் தெரிவித்தது. முன்னாள் அமைச்சர்களில் ஒருவரான டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா இத்திருத்தச் சட்டம் சர்வாதிகாரியான ஜனாதிபதியை (*Presidential Dictator*) உருவாக்கியுள்ளது; இச் சர்வாதிகாரி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவராக இருக்கப் போவதில்லை" (*V.K.* நாணயக்கார, *IN SEARCH OF A NEW SRI LANKAN CONSTITUTION*, 2016:60 - எளிமைப்படுத்திய தமிழாக்கம்).

மேற்குறித்தவாறாக பிரதமர் என்ற பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட ஜே.ஆர். ஜெயவர்த்தன, அத்தெரிவு நடைபெற்று இரண்டு மாதங்கள் மட்டுமே கடந்த நிலையில், 1972 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பிற்குத் திருத்தத்தைக் கொண்டு வருவதன் மூலம் தன்னை ஜனாதிபதியாக மாற்றிக்கொள்ள வழி செய்தார். 1977 ஒக்டோபரில் உறுதிப்படுத்தப்பட்ட இத்திருத்தம் 1978 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 04 ஆம் திகதி சுதந்திர தினத்தன்று நடைமுறைக்கு வந்தது.

அன்றைய தினம் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஜனாதிபதியாகப் பதிவியேற்றார். இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு 1978 ஆம் ஆண்டு செப்டெம்பர் 07 ஆம் திகதி நடைமுறைக்கு வந்தது (பக். 102).

பகுதி 2

இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதிமுறை அறிமுகம் செய்யப்பட்டு 46 ஆண்டுகள் கடந்து விட்டன. இந் நீண்டகால எல்லையுள் இம்முறையின் கீழ் நடந்தேறிய அனைத்து ஜனநாயக விரோதச் (Un - Democratic) செயற்பாடுகளையும் மூன்று கருத்தியல்களின் (Ideologies) துணையுடன் புரிந்து கொள்ள முடியும் எனக் கருதுகின்றோம்.

1. பெரும்பான்மைவாதம் (Majoritarianism)

2. நவதாராளவாதம் (Neo - Liberalism)

3. தனிநபர் சர்வாதிகாரம் (Caesarism)

முதலாவதான பெரும்பான்மைவாதம் இலங்கையின் சிறுபான்மைத் தேசிய இனங்களின் ஒடுக்கு முறைக்கான அரசியல் நிறுவனங்களை (Political Institu tions) கட்டமைத்து அவற்றைப் பலப்படுத்த உதவியது. இரண்டாவது, மூன்றாவதான நவதாராளவாதம், தனிநபர் சர்வாதிகாரம் என்பன முழு நாட்டினதும் மக்களிற்குத் தீங்கானது என்பதைப் பற்றிய விழிப்புணர்வு அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ளது. ஆயினும் பெரும்பான்மைவாதத்தின் ஜனநாயக விரோதப் பண்புகளையும், அது ஏனைய இரண்டினோடும் கொண்டுள்ள பிணைப்புகளையும் பற்றிய புரிதல் எம் மத்தியில் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜயம்பதி விக்கிரமரட்ணவின் கட்டுரை பற்றிய இவ்வறிமுகத்தில் நாம் மேற்குறித்த மூன்று கருத்தியல்களினையும் ஒன்றிணைத்து முழுமையான விமர்சனத்தை முன்வைக்கவுள்ளோம்.

இலங்கைச் சமசமாஜக் கட்சியின் நீண்டகால உறுப்பினராக இருந்து வரும் ஜயம்பதி விக்கிரமரட்ண, நிறைவேற்று ஜனாதிபதிமுறை பற்றிய விமர்சனத்தை கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, கலாநிதி என். எம். பெரேரா ஆகிய இருவரின் உரைகள், அவர்களது நூல்கள் என்பனவற்றில் இருந்து மேற்கோள் காட்டி முன்வைக்கிறார்.

சிங்களத்தை மட்டும் உத்தியோக மொழியாக ஆக்க வேண்டும் என்ற முனைப்பு எழுந்த 1955 ஆம் ஆண்டில் கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா புகழ்பெற்ற தீர்க்கதரிசனமான கூற்றொன்றைக் கூறினார்: "One Language, Two Nations; Two Languages, One Nation" (தமிழில் : "ஒரு மொழி இரு தேசங்கள்; இரு மொழிகள் ஒரு தேசம்.")

இது உண்மையில் ஒரு தீர்க்கதரிசனமான கூற்று என்பதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. இதற்கு ஒப்பான இன்னொரு தீர்க்கதரிசனமான கூற்றைக் கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்கள் 1988 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 'SRI LANKA'S NEW CAPITALISM AND THE EROSION OF DEMOCRACY' நூலில் பதிவிட்டுள்ளதை மேற்கோள் காட்டுகிறார் (பக். 103). அது வருமாறு:

"மனதில் கலக்கத்தை ஏற்படுத்தும் பிரகடனம் ஒன்றை (நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி) வெளியிட்டுள்ளார். 'நான் இலங்கையின் 14 மில்லியன் மக்களின் தலைவன்!' எனும் அவரது திகிலூட்டும் சொற்கள் மனதில் பயங்கரமான நினைவுகளைக் கிளறுகின்றன. 'நான் ஜேர்மன் மக்களின் தலைவன்; அவர்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் அவர்களுக்கெல்லாம் தலைவன் நானே!' இப்படிக் கூறியவர் ஹிட்லர் அல்லவா? அவர் ஜேர்மானியர்களை எவ்வழியில் கொண்டு

சென்றார்; உலகத்தை எத்தகைய நரகத்திற்குள் வீழ்த்தினார் என்பதை முழு உலகமும் நன்கு அறியும்.

இன்று ஐக்கிய தேசிய கட்சியின் கோஷம் 'ஒரு கட்சி, ஒரே கொள்கை, ஒரு தலைவன்' என்பதாகும். இக்கோஷத்தில் 'தலைவன்' என்ற சொல்லிற்கு எல்லாச் சந்தர்ப்பத்திலும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. நாம் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம்? தேசம் முழுமைக்கும் ஒரு கட்சி, ஒரே ஒரு கொள்கை, ஒரே ஒரு தலைவன் என்பதை நோக்கி அல்லவா போகின்றோம்? (எளிமைப்படுத்திய மொழிபெயர்ப்பு)"

சொல்லாற்றலில் வல்லவரான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா 1955 இல் கூறியதை (ஒரு மொழி இரு தேசங்கள்; இரு மொழிகள் ஒரு தேசம்) ஒத்த 'One Party, One Policy, One Leader' எனும் தீர்க்கதரிசனமான கூற்றை 1988 ஆம் ஆண்டிலும் கூறி வைத்தார். கொல்வின் ஆர்.டி. சில்வா இன்னொன்றையும் கூறினார்:

"ஜனாதிபதியின் இத் தொடக்கம் மனதைச் சங்கடப்படுத்துகிறது. ஜனாதிபதிக்கு இத் தருணம் மங்கலமான சுபகாரியத்தின் தொடக்கமாக இருக்கலாம். ஆனால் இத்தேசத்திற்கு இது மங்கலமான தருணம் தானா?" (பக். 104).

கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்களின் மேற்குறித்த 'இலங்கையின் புதிய முதலாளித்துவமும் ஜனநாயகத்தின் அழிவும்' (SRI LANKA'S NEW CAPITALISM AND THE EROSION OF DEMOCRACY) நூல் நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றிய முக்கியமான விமர்சன நூல் என்பதை கட்டுரையாசிரியர் எமது கவனத்திற்கு கொண்டு வருகிறார். ஜனாதிபதிமுறை பற்றிய விமர்சனமாக அமையும் சிறு நூல் ஒன்றை கலாநிதி என்.எம். பெரேரா 'A CRITICAL ANALYSIS OF THE 1978 CONSTITUTION OF SRI LANKA' என்னும் தலைப்பில் வெளியிட்டார். இந்நூல் பாராளுமன்ற முறைக்கு நாம் ஏன் திரும்ப வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல்; அனைவரும் படிக்க வேண்டிய நூல் என ஜயம்பதி விக்கிரமரட்ண புகழ்ந்துரைக்கிறார் (பக். 104).

என்.எம். பெரேரா அவர்கள் பாராளுமன்றமுறை பற்றிய ஆராய்வைச் செய்து லண்டன் பல்கலைக்கழகத்தில் D.SC பட்டம் பெற்ற அறிவாளி. இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலம் கடமையாற்றி அது பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தவர். பாராளுமன்ற முறையே இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு ஏற்றது என்பதை 1978 அரசியல் யாப்புப் பற்றிய விமர்சன நூலில் அவர் விளக்கிக் கூறியிருந்தார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன 1972 அரசியல் யாப்புக்கு 2 ஆவது திருத்தத்தை அவசர அவசரமாகக் கொண்டு வந்து, பிரதமராக தெரிவு செய்யப்பட்ட தம்மை, ஜனாதிபதியாக உருமாற்றிக் கொள்ள முயற்சித்த வேளையில், அவர் பாராளுமன்ற முறை ஏன் ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு போலியான பல நியாயங்களை முன்வைத்தார். உறுதியான நிலையான அரசாங்கம் (Stable Government) ஒன்றை அமைப்பதற்கு பாராளுமன்றமுறை தடையாக அமைகிறது என்பது அவர் முன்வைத்த வாதங்களில் ஒன்று. இலங்கையின் வரலாற்றில் இருந்து இரண்டு உதாரணங்களை இதற்குச் சான்றாக அவர் எடுத்துக் காட்டினார்.

1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தல் முடிவுகளின்படி டட்லி சேனநாயக்க பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பதவியேற்றார். அவ்வாறு பதவியேற்ற பின் நடைபெற்ற கொள்கைப் பிரகடன அறிக்கை அல்லது

கொல்வின் ஆர்.டி. சில்வா

Image Source : archives1.dailynews.lk

சிம்மாசனப் பிரசங்கத்தை (Throne Speech) அடுத்த விவாதத்தின் போது, அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டு டட்லி சேனநாயக்க பதவியை இராஜினாமாச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டார். 1960 யூலையில் மீண்டும் தேர்தல் நடைபெற்றது. சிறிமா பண்டாரநாயக்க பதவிக்கு வந்தார். சிறிமா பண்டாரநாயக்கவும் 1964 டிசம்பர் மாதம் நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவியிழந்தார். ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

இவை பாராளுமன்ற முறையின் ஸ்திரமின்மைக்கு உதாரணங்களாக ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களால் எடுத்துக்காட்டப்பட்டன. இதற்குப் பதிலளிக்கும் வகையில் என்.எம். பெரேரா பின்வருமாறு குறிப்பிட்டார். அவர் காட்டிய இந்த இரண்டு உதாரணங்களும் பாராளுமன்ற முறையின் பலத்தை நிரூபிப்பன என்றே கூற முடியும். இவை ஜனநாயகத்தின் சக்தியை (The Power of Democracy) எடுத்துக் காட்டுவன. இரண்டு சந்தர்ப்பங்களிலும் அரசாங்கங்களின் தோல்வியை அடுத்து வந்த தேர்தல்கள் புதிதாகப் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் இயல்பிலும், தன்மையிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. உண்மையில் இப்படியான முக்கிய தருணங்களில் தான் ஜனநாயகத்தின் வீரியமும் சிறப்பும் வெளிப்பட்டுத் தெரிகின்றன. அவர் காட்டும் உதாரணங்கள் எந்த அளவு கோல்களைக் கொண்டு மதிப்பிட்டாலும் பாராளுமன்ற முறை மேலானது; உயர்ந்தது என்பதற்குச் சான்றாக அமைகின்றன. (பக். 105).

ஜனாதிபதியின் அதிகாரங்கள்

1978 அரசியல் யாப்பு ஜனாதிபதிக்கு வழங்கியுள்ள எல்லையற்ற அதிகாரங்களை ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் ஏறக்குறைய ஆறு பக்கங்களில் (105 - 111) உதாரணங்கள் பலவற்றைக் காட்டி விபரிக்கிறார்.

1978 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட 1972 அரசியல் யாப்பு, 1947 சோல்பரி அரசியல் யாப்பு என்ற இரு அரசியல் யாப்புகளிலும்

அரசுத் தலைவர் (*Head of State*), அரசாங்கத் தலைவர் (*Head of Government*) என்ற இரு நபர்கள் பதவி வகித்தனர். உதாரணமாக *1972 - 77* காலத்தில் வில்லியம் கோபல்லவ ஜனாதிபதியாக நாட்டின் அரசுத் தலைவராக இருந்தார். சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கத்தின் தலைவராக (பிரதமராக) இருந்தார். ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஒரே சமயத்தில் அரசின் தலைவராகவும் அரசாங்கத்தின் தலைவராகவும் தன்னை மாற்றிக் கொண்டார். அது மட்டுமல்லாமல் அவர் ஆயுதப் படைகளின் தலைவராகவும் (*Head of the Armed Forces*) தன்னை உயர்த்திக் கொண்டார். அமைச்சர்கள் அனைவரையும் அவரே நியமனம் செய்வார்; அந் நியமனங்கள் பற்றிப் பிரதமரின் ஆலோசனையைப் பெறும் தேவை அவருக்கு இல்லை. தேவையேற்பட்டால் ஆலோசனை பெறலாம்; பெறாமலும் விடலாம். ஜனாதிபதி தமது விருப்பின்படி அமைச்சர் ஒருவரைப் பதவியில் இருந்து நீக்கலாம். பிரதமரையும் தமது விருப்பின்படி நியமனம் செய்யும் ஜனாதிபதி அவரை எந்த வேளையிலும் பதவியில் இருந்து நீக்கவும் முடியும். தனது கட்சியைச் சேராத ஒருவர் பிரதமராக இருக்கும் வேளையிலும் குறித்த பிரதமரைப் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கி விடலாம். இவை அமைச்சர்கள், பிரதமர் என்போரது நியமனம், பதவி நீக்கம் தொடர்பான எல்லையற்ற அதிகாரங்களாகும். இந்த எல்லையற்ற அதிகாரங்களை 1978 இற்குப் பின்னர் பதவிக்கு வந்த ஜனாதிபதிகள் பிரயோகித்து வந்தனர். இவ்விடத்தில் *V.K.* நாணயக்கார அவர்களின் நூலின் 128 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ள சுவாரசியமான குறிப்பு ஒன்றை மேற்கோள் காட்ட விரும்புகிறோம். நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாகப் பதவி வகித்த சந்திரிகா குமாரதுங்க அவர்கள் இரு தடவைகள் பாராளுமன்றத்தைக் கலைத்து பிரதமர்களையும் அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்தார். அவர் ஒரு தடவை பின்வருமாறு குறிப்பிட்டாராம்:

“Under our constitution the prime minister is merely a glorified minister. It takes just a one sentence letter from me to dismiss the prime minister and his entire cabinet”

இக்கூற்று *International Herald Tribune, October* *15, 2003* இல் பதிவானது என *V.K.* நாணயக்கார நூலின் அடிக்குறிப்பில் தெரிவித்துள்ளார். இக்கூற்றின் பொருள்: “எமது அரசியல் யாப்பின்படி பிரதமர் என்பவர் வெறுமனே புகழேற்றப்படும் அமைச்சர் தான். பிரதமரையும் அவரது அமைச்சரவையையும் என்னால் வெறும் ஒரு வசனக் கடிதத்தை அனுப்புவதன் மூலமே பதவி நீக்கி விட முடியும். (*V.K. NANAYAKKARA, IN SEARCH OF A NEW SRI LANKAN CONSTITUTION : 2016 : 128*)

பாராளுமன்றத்தின் மீதான ஜனாதிபதியின் அதிகாரங்கள் எல்லையற்றனவாக உள்ளன என ஜயம்பதி விக்கிரமரட்ண குறிப்பிடுகிறார். இவ்வாறு எல்லையற்ற அதிகாரமுடைய ஜனாதிபதி முறைக்கு பிற நாடுகளில் இருந்தும் உதாரணம் காட்ட முடியாதென அவர் அபிப்பிராயப்படுகிறார். ஜனாதிபதி முறையின் இயல்புகளை நடைமுறையில் பரீட்சிப்பதற்கு இலங்கை வரலாற்றில் 2001 - 2004 காலத்தில் அரிய வாய்ப்பு ஒன்று கிட்டியது. அவ்வேளை சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் ஜனாதிபதியாகவும், அவரது கட்சியைச் சாராதவரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் பதவி வகித்தனர். தொடக்கத்தில் ஜனாதிபதி விட்டுக்கொடுப்போடு நடந்து கொண்டார். *‘Cohabitation Period’* (இணக்கமான வாழ்க்கைக் காலம்) என அழைக்கப்பட்ட

இக்காலத்தின் தொடக்கத்தில் ரணில் விக்கிரமசிங்க, தனது மாமனார் ஜே.ஆர். ஜெயவர்த்தன உருவாக்கிய ஜனாதிபதி என்ற பதவிக்குரியவரின் அதிகாரங்களைப் பற்றித் தப்புக் கணக்கு போட்டிருக்க வேண்டும் என ஜயம்பதி விக்கிரமரட்ண அபிப்பிராயப்படுகிறார். ரணில் விக்கிரமசிங்க சிபாரிசு செய்த அமைச்சர்களை குமாரதுங்க அவர்கள் எவ்வித மறுப்பும் இன்றி நியமித்தார். பாதுகாப்பு அமைச்சுப் பதவியையும் தாமே எடுத்துக் கொள்ளாமல் விட்டுக் கொடுத்தார். ரணில் விக்கிரமசிங்க, குமாரதுங்க அவர்களை ஓரங்கட்டி விட்டு தாமாகவே கருமங்களை ஆற்றத் தொடங்கினார். "சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீளத் தொடங்கிய விக்கிரமசிங்க, ஜனாதிபதியை அதிலிருந்து விலக்கி வைத்தார். அவரது அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் முறையில் நடந்து கொண்டனர். அரசியல் யாப்பின்படி அமைச்சரவையின் தலைவரான ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டங்களிற்குச் சமூகமளிக்காமல் ஒதுங்கிக் கொள்ளும் கட்டாயம் ஏற்பட்டது." (பக். 106).

2003 மே மாதம் சந்திரிகா குமாரதுங்க அவர்கள் அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனது அதிகாரத்திற்கு உட்பட்டதாக மாற்றுவதற்கு விரும்பினார்.

இந் நோக்கத்தோடு அவரால் தயாரித்து அனுப்பப்பட்ட 'கசற்' அறிவித்தலை அரசாங்க அச்சகத்தில் அச்சிடுவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது; ஜனாதிபதி அவமதிக்கப்பட்டார். இதனால் உறவுகள் பாதிக்கப்பட்டன. தருணம் பார்த்துக் காத்திருந்த ஜனாதிபதி, பிரதமர் விக்கிரமசிங்க வெளிநாடொன்றுக்குச் சென்றிருந்த வேளையில் 2003 நவம்பர் மாதத்தில் பாதுகாப்பு அமைச்சரையும், வெளிநாட்டு அலுவல்களுக்கும்

என்.எம். பெரேரா
Image Source : www.dailymirror.lk

ஊடகங்களுக்கும் பொறுப்பான அமைச்சரையும் பதவி நீக்கம் செய்தார். பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தம் பொறுப்பில் வைத்துக் கொண்டார். அவர் தமது கட்சியைச் சேர்ந்த இருவரை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, ஊடகத்துறைகள் அமைச்சு ஆகியவற்றிற்கு நியமனம் செய்தார். அது மட்டுமன்றி 2004 பெப்ரவரி மாதம் ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது 39 அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் பதவி இழக்கச் செய்தார்.

ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்களின் நூலின் (2014 இல் பிரசுரமானது) 3 ஆம் அத்தியாயம், 1978 முதல் 2003 வரையான 35 ஆண்டுகால ஜனாதிபதி முறையின் செயற்பாடுகளை மட்டுமே விபரிப்பதாக அமைந்துள்ளதால் கடந்த 21 ஆண்டுகால நிகழ்வுகள் பற்றிய விபரங்களை அவர்களின் கட்டுரை வாயிலாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லை.

விக்கிரமரட்ண அவர்கள் ஜனாதிபதிமுறை பற்றிய விமர்சனத்தை கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, கலாநிதி என்.எம். பெரேரா

ஆகியவர்களின் உரைகளில் இருந்தும், அவ்விருவரது நூல்களில் இருந்தும், மேற்கோள்கள் பலவற்றைத் தருவதன் மூலம் சுவாரசியமுடையதாக ஆக்கியுள்ளார். இவ்விருவரதும் கருத்துகள் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் ஜனாதிபதி முறையைப் புகுத்திய சமயத்திலும், அதற்கு அண்மிய காலத்திலும் வெளியிடப்பட்ட எதிர்வினைகளாக அமைந்தவை. பல்லாண்டுகள் கழிந்த பின் இவ்விருவரதும் ஆக்கங்களைப் பின்னோக்கிப் பார்க்கும் போது, அவர்கள் இருவரும் தீர்க்கதரிசனத்துடன் பல கருத்துகளைக் கூறியிருப்பதைக் காண முடிகிறது.

ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்தல்

1978 இன் அரசியல் யாப்பின் உறுப்புரை 38 பின்வரும் காரணங்களுக்காக ஜனாதிபதி ஒருவர் பதவியில் இருந்து நீக்கப்படலாம் என்று குறிப்பிட்டுள்ளது. 'Impeachment' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் இப் பதவி நீக்க நடைமுறை மிக மிகச் சிக்கலானது. அந் நடைமுறையில் உள்ள சிக்கல்கள் பற்றி நோக்குவதற்கு முன்னர் என்ன காரணங்களுக்காக ஒரு ஜனாதிபதி குற்றம் சாட்டப்பட்டுப் பதவி நீக்கப்படலாம் என்பதைப் பார்ப்போம். V.K. நாணயக்கார அவர்கள் 5 காரணங்களுக்காக அவர் மீது குற்றம் சாட்டப்படலாம் எனக் குறிப்பிடுகிறார் (அவரது 2016 ஆம் ஆண்டு நூல், பக். 136).

1. வேண்டுமென்றே அரசியல் யாப்பினை மீறிச் செயற்படுதல் (Intentional Violation of the Constitution)
2. தேசத் துரோகம்
3. இலஞ்ச ஊழல் (Bribery)
4. தனது அதிகாரங்களைத் துஸ்பிரயோகம் செய்து முறைகேடான அல்லது ஊழல் புரிவதான நடவடிக்கையில் ஈடுபடுதல்
5. ஏதாவதொரு இயற்றப்பட்ட சட்டத்திற்கு மாறான ஒழுக்கமற்ற குற்றத்தைச் செய்தல் (இக் குற்றச்சாட்டு உயர் நீதிமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டு, உயர் நீதிமன்ற விசாரணையறிக்கை சபாநாயகருக்கு அறிவிக்கப்படும். அதன் பின்னர் பாராளுமன்றம் நடவடிக்கையை ஆரம்பிக்கும்.)

மேற்குறித்த குற்றஞ் சாட்டுதல் நடவடிக்கை நடைமுறையில் சாத்தியமற்றது என்பதை 1991 இல் ஜனாதிபதி பிரேமதாச அவர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட நடவடிக்கையின் தோல்வி எடுத்துக் காட்டுகிறது. அப்போது அவர் மீதான குற்றச்சாட்டுப் பிரேரணை (Impeachment Motion) 120 பாராளுமன்ற உறுப்பினர்களால் ஒப்பமிடப்பட்டு எதிர்க் கட்சியினரால் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அப்பிரேரணை அடுத்த கட்டத்திற்கு நகர முடியவில்லை. இவ் வரலாற்று முக்கியத்துவம் உடைய சம்பவம் பற்றி இத் தமிழ்க் கட்டுரையில் நாம் மேலதிக விபரங்களைத் தருவதையோ அவ்விடயம் தொடர்பான சாதக, பாதகமான கருத்துகளைக் கூறுவதையோ விரும்பவில்லை. இவ்வரலாற்று முக்கியத்துவம் உடைய சம்பவம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டதன் நோக்கம், இலங்கை அரசியல் யாப்பின்படி ஜனாதிபதி மீது குற்றஞ் சாட்டிப் பதவி நீக்கம் செய்தல் நடைமுறையில் சாத்தியமற்றது என்பதை எடுத்துக் காட்டுவதற்கேயாகும்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்களால் புகுத்தப்பட்ட ஜனாதிபதிமுறை ஒரு சர்வாதிகார முறை. அம்முறையின் கீழ் பதவிக்கு வரும் ஒருவரை அவர் இழைக்கும் குற்றங்களுக்காகப் பதவியில் இருந்து நீக்குதல் சாத்தியமற்றது என்பதை கூர்ந்த மதியுடைய கலாநிதி என்.எம். பெரேரா அவர்கள் தமது நூலின் 30 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பதை ஐயம்பதி

ஆர். பிரேமதாச
Image Source : archives1.dailynews.lk

விக்கிரமரட்ண மேற்கோள் காட்டுகின்றார் (பக். 108). அத் தீர்க்கதரிசனம் மிக்க கூற்று வருமாறு:

"Can the president be removed from office before the expiration of his allotted time - spans? Yes, certainly but the process is so complicated and will entail such delay that 'One can safely predict that such an event will never arise'

இக் கூற்றின் பொருள் வருமாறு: "ஜனாதிபதி ஒருவரை அவரது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவியில் இருந்து நீக்க முடியுமா? ஆம் என்றே அரசியல் யாப்பு உறுப்புரை கூறுகிறது. ஆயினும் பதவி நீக்கச் செயல்முறை மிக மிகச் சிக்கலானது. அது நீண்ட கால விரயம் கொண்ட நடைமுறை. இறுதியில் அது சாத்தியமற்றதாகத் தோல்வியில் முடியும் நடவடிக்கையாகவே அமையும் என்பதை நாம் துணிந்து எதிர்வு கூறலாம்."

கலாநிதி V.K. நாணயக்கார விபரித்துக் கூறிய 5 வகைக் குற்றங்களுக்காக ஒரு ஜனாதிபதி மீது பதவி நீக்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்பதை மேலே குறிப்பிட்டோம். இதனை விட ஜனாதிபதி ஒருவர் திறமையற்றவராகச் செயற்படுகிறார்; அவர் செயல் திறனற்றவராக உள்ளார் என்பதற்காக பதவி நீக்கம் செய்யப்பட முடியுமா என்ற கேள்வி வாசகர் மனதில் எழலாம். அக் கேள்விக்கான பதில்; திறமையற்றவர், செயல் திறன் அற்றவர் என்பன (Incompetence and Inefficiency) பதவி நீக்கம் செய்வதற்கான காரணங்களாகா என்பதாகும். இன்னொரு கேள்விக்கும் இவ்விடத்தில் பதில் கூறியே ஆக வேண்டும். ஒரு ஜனாதிபதி நிரந்தரமான உள, உடல் ஊனமுற்றவராய் தமது கடமையை ஆற்ற முடியாதவராய் உள்ள நிலை ஏற்படக் கூடுமல்லவா? அவ்வாறான நிலை எழுந்தால் அவரைப் பதவியில் இருந்து நீக்கலாமா? இலங்கையின் அரசியல் யாப்புச் சட்டம் அவ்வாறான நிலை ஏற்படும் போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியை அவரது பதவிக் காலம் முடியும் முன்பே பதவி நீக்கம் செய்யலாம் என்றே கூறுகிறது. இது பற்றி ஆங்கிலத்தில் 'Rhetoric' (றிற்றோறிக்) எனக் கூறப்படும் பேச்சுக் கலையில் வல்லவரான நாவன்மை மிக்க கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா கூறியிருப்பவற்றை ஐயம்பதி விக்கரமரட்ண அவர்கள் மேற்கோள் காட்டுகிறார்.

"Even in the case of the president being permanently in capable of performing the functions of his office by reason of mental or physical infirmity, The same procedure has to be restored to : so that we can be ruled by a mad president for quite a time" (பக். 108 - 109).

இதன் பொருள் : அவ்வாறான நிலை ஒன்று தோன்றும் போது பதவி நீக்க நடைமுறையானது, குற்றம் இழைத்தமைக்கான (Wrong Doing) பதவி நீக்க நடைமுறை போல் சிக்கலானதும் நீண்ட காலம் தேவைப்படுவதுமாகவே அமையும். ஆகையால் நாட்டை மனநோயாளியான ஒரு ஜனாதிபதி குறிப்பிட்டளவு காலம் ஆட்சி செய்யும் சாத்தியப்பாடு உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை!

பகுதி 3

ஐக்கிய அமெரிக்காவும் பிரான்சும்

ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதிமுறை 200 ஆண்டுகால வரலாற்றை உடையது. சட்ட ஆக்கத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை என்பனவற்றிற்கிடையிலான அதிகாரப்பிரிப்பு (Seperation of Power), பலமான இரு கட்சிமுறையின் வளர்ச்சி, கட்டுப்படுத்தல்களும் சமப்படுத்தல்களும் (Checks and Balances) என்னும் தத்துவத்தின் செயற்பாடு என்பன அந்நாட்டின் அரசியல் முறையின் ஸ்திரத்தன்மைக்கு காரணமாக அமைந்தன. ஆயினும் அந்நாட்டின் ஜனாதிபதி முறையினை மாதிரியாகக் கொண்ட தென் அமெரிக்க நாடுகளில் ஜனாதிபதி முறை தோல்வியடைந்துள்ளது. அந்நாடுகளில் ஜனாதிபதி முறை சர்வாதிகார ஆட்சிக்கே வழிவகுத்துள்ளது. ஜனாதிபதிமுறை அப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டவருக்கு அளவற்ற அதிகாரத்தை வழங்குகிறது. ஒரு தடவை கட்டுப்பாடற்ற அதிகாரத்தை அனுபவித்தவர் பின்னர் அந்த அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதில்லை என்பதை வரலாறு உணர்த்தியுள்ளது. இலங்கையிலும் 1978 இல் ஜனாதிபதிமுறை புகுத்தப்பட்டமை துரதிஷ்டமானது. ஐக்கிய அமெரிக்காவிலும் பிரான்சிலும் அந்நாடுகளின் அரசியல் யாப்புகளில் காணப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகள், இலங்கையின் 1978 அரசியல் யாப்பில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

ஐக்கிய அமெரிக்காவில் ஜனாதிபதியினால் செனற்றைக் கலைக்க முடியாது, கீழ்ச்சபையான சனப்பிரதிநிதிகள் சபையையும் கலைக்க முடியாது. காங்கிரஸ் குழுக்கள் (Congressional Committee) நிர்வாக விடயங்கள் பலவற்றை ஆராய்கின்றன; சட்ட ஆக்கத்துறையினருக்கு நிர்வாக அதிகாரங்களைக் கட்டுப்படுத்த முடிகிறது. அந்நாட்டின் சட்டவாக்கத்துறையில் இருந்து அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவதில்லை. அவர்கள் யாவரும் வெளியே இருந்து நியமனம் செய்யப்படுகிறார்கள். ஆயினும் காங்கிரஸ் குழுக்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை அமைச்சர்களுக்கு உள்ளது. காங்கிரஸ் குழுக்கள் விசாரணைகளை நடத்தும் அதிகாரங்களைக் (Investigative Powers) கொண்டுள்ளன. அவை நிர்வாக நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் அதிகாரம் உடையன. அக்குழுக்கள் பொது விசாரணைகளை நடத்துகின்றன.

பிரான்ஸ் நாட்டில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் சபை (Council of Ministers) என்னும் மூன்று வெவ்வேறு அரசாங்கத் துறைகளுக்கிடையே அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. ஜனாதிபதி பிரதமரை நியமனம் செய்வார்; ஏனைய அமைச்சர்கள் பிரதமர் பெயர் குறித்து முன்வைக்கும் பிரேரணையின்படி நியமிக்கப்படுவர். அரசாங்கத்தின் நிர்வாக அலுவல்களைப் பிரதமரே கொண்டியக்குகின்றார். பிரதமரே பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பானவர். அரசாங்கம் பாராளுமன்றத்திற்கும் பொறுப்புக் கூற வேண்டியதாக உள்ளது. நாட்டின் கொள்கை வகுத்தலையும் கொள்கையை நடைமுறைப்படுத்துவதையும் பிரதமர் தலைமையிலான அரசாங்கமே கொண்டிருக்கிறது. தேசிய அசெம்பிளி (National Assembly) எனப்படும் அவையை ஜனாதிபதி தன் எண்ணப்படி கலைக்க முடியாது. ஜனாதிபதி பிரதமரையும் இரு அவைகளினதும் தலைவர்களையும் கலந்தாலோசித்த பின்னரே கலைக்கலாம். தேசிய அசெம்பிளி அரசாங்கத்தின் மீது கண்டனப் பிரேரணையை நிறைவேற்றுதல், அரசாங்கத்தின் செயற்திட்டத்தை

நிராகரித்தல் அல்லது கொள்கைப் பிரகடனத்தை நிராகரித்தல் ஆகிய சந்தர்ப்பங்களில் பிரதமர் தனது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பார்.

இவ்வாறாக ஐக்கிய அமெரிக்காவிலும், பிரான்சிலும் ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் ஏற்பாடுகள் இருப்பதை ஐயம்பதி விக்கிரமரட்ண எடுத்துக் காட்டுகிறார். 1978 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆளும் குழுக்கள் தமது ஜனநாயக விரோதச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி முறையை நன்கு பயன்படுத்தின.

1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 3 ஆவது, 4 ஆவது யாப்புத் திருத்தங்கள்

1978 யாப்பின்படி ஜனாதிபதி பதவிக்கான தேர்தல்கள் 1984,1990 ….. என ஒவ்வொரு ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒழுங்காக நடைபெற்றிருக்க வேண்டும். தனக்கு வாய்ப்பான தருணத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த விரும்பிய ஜே.ஆர். ஜெயவர்த்தன, யாப்பிற்கான 3 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். 6 ஆண்டுகள் ‘நிரந்தரக்காலம்’ (Fixed Term of Office) என விதிக்கப்பட்டதை ‘நெகிழ்ந்து கொடுக்கும்’ (Flexible Term of Office) ஆக மாற்றுவதற்கு அவர் முடிவு செய்தார். நான்கு ஆண்டுகள் கழிந்தபின் ஜனாதிபதி மறு தேர்தலை தமது விருப்பப்படி எந்தச் சமயத்திலும் நடத்துவதற்கு ஆணையிடலாம் எனத்திருத்தம் செய்யும் 3 ஆவது திருத்தத்தை 27.08.1982 இல் நிறைவேற்றினார். பாராளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலத்தை வைத்திருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இத் திருத்தத்தைக் கொண்டு வந்தது. இதன் பயனாக 1982 இற்கும் 1984 இற்கும் இடைப்பட்ட காலத்தில் தமக்கு மிகவும் சாதகமான சந்தர்ப்பம் எதுவோ அப்போது ஜனாதிபதித் தேர்தலை அறிவிக்கும் தந்திரோபாயத்தை அவரால் கையாள முடிந்தது. 1982 டிசம்பர் 22 ஆம் திகதி மறு தேர்தலை அறிவித்து, அதில் அவர் வெற்றி பெற்றார். அவரது ஆட்சி 1988 வரை தொடர்ந்தது. உலகில் ஜனாதிபதிமுறை நடைமுறையில் உள்ள நாடுகளில் ஜனாதிபதி 5 அல்லது 6 ஆண்டுகள் எனக் குறிப்பிட்ட காலம் பதவி வகிக்கும் முறையே உள்ளது. குறிப்பிட்ட கால முடிவில் சாதகமான நிலை இருந்தால் என்ன, பாதகமான நிலை இருந்தால் என்ன, தேர்தலை நடத்த வேண்டும் என்பதே விதிமுறை. இவ் விதிக்கு மாறான முறை சர்வாதிகாரியான பெர்டினன்ட் மார்க்கோசின் பிலிப்பைன்ஸ் நாட்டில் பின்பற்றப்பட்டது. 3 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் 4 ஆண்டுகள் முடிந்த பின் எந்நேரமும் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கியது; ஜே.ஆர். பிலிப்பைன்ஸ் வழியில் சென்றார்.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் இத்துடன் நின்றுவிடவில்லை. அரசியல் யாப்பிற்கான 4 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். இத்திருத்தம் அரசியல் யாப்பின் உறுப்புரை 161 ஐ திருத்தம் செய்வதாக அமைந்தது. இத்திருத்தம், 1977 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தை, பாராளுமன்றத் தேர்தலை நடத்தாமலே 1989 ஆகஸ்ட் 04 ஆம் திகதி வரை மேலும் 6 ஆண்டு காலம் தொடர்ந்து இருப்பதற்கு வழிசெய்தது. இத்திருத்தத்தைச் செய்வதற்கான பொதுசன வாக்கெடுப்பு (Referendum) ஒன்றை 1982 டிசம்பர் மாதம் நடத்தி, தனது ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு மக்கள் அங்கீகாரத்தை அவர் பெற்றுக் கொண்டார்.

பொதுசன வாக்கெடுப்புக்கான பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஜனநாயக

விரோதச் செயலைக் கண்டித்து எழுதிய கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, பொதுசன வாக்கெடுப்பு மூலம் பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தல் நடைபெறாது தடுக்க முயற்சி எடுக்கப்படுகிறது எனக் குறிப்பிட்டார். அவர் கூற்று வருமாறு:

"இப்போது ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் நோக்கமும், அவர் அரசியல் யாப்புச் சட்டத்தை எப்படித் தன் தேவைக்கேற்ப திருத்தப் போகிறார் என்பதும் தெளிவாகின்றன. அவர் செய்யப்போகும் வேலையின் ஜனநாயக விரோதத் தன்மை எவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கும். மக்களின் ஆலோசனையைப் பொதுசன வாக்கெடுப்பு மூலம் பெறப்போகிறேன் என்று கூறி அவர் நடத்தும் நாடகம் மூலம் அவர் செய்யப் போவது இதுதான்: தேர்தல் நடைமுறை மூலம் குறிப்பிட்டதொரு காலத் தவணைக்கு ஆட்சி செய்வதற்கென அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய்யும் மக்களின் ஜனநாயக உரிமை பறிக்கப்படப் போகிறது." (எளிமைப்படுத்தப்பட்ட தமிழாக்கம் - பக். 113 இல் தரப்பட்ட மேற்கோள்)

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் 1982 இல் நடத்தப்பட்ட பொதுசன வாக்கெடுப்புக்கான தேர்தல், கறைபடிந்த பக்கங்களில் ஒன்று என ஜயம்பதி விக்கிரமரட்ண குறிப்பிடுகின்றார் (பக். 114).

சீர்திருத்தமா? பாராளுமன்ற முறைக்குத் திரும்புவதா?

1978 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஜனாதிபதி முறையில் சில திருத்தங்களைச் செய்து அதனைத் தொடர்வதா அல்லது அம்முறையை முற்றாக நீக்கிவிட்டுப் பாராளுமன்ற முறைக்குத் திரும்புவதா என்ற வாதம் இன்று வரை இலங்கையில் தொடர்வதைக் காணலாம். ஜனாதிபதி முறை இலங்கைக்குத் தேவை என்பதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்வைத்த வாதங்களில் சில மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அவரின் "ஒரு கட்சி, ஒரே ஒரு கொள்கை, ஒரு தலைவன்" (*One party, One policy, One leader*) கொள்கை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களால் மட்டுமன்றி சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர்களாலும் நாட்டைச் சரியான வழியில் நடத்துவதற்கான வழிகாட்டும் தத்துவமாகப் போற்றப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக அரசியல் உறுதிநிலை (*Political Stability*), பொருளாதார வளர்ச்சி என்பன ஜனாதிபதி என்ற தனிநபர் ஒருவரால் தான் சாதிக்கப்பட முடியும் என்ற மாயை தொடர்ந்தது. 2009 ஆம் ஆண்டின் பின் இன்னொரு வாதமும் முன்வைக்கப்பட்டது.

"ஜனாதிபதி முறை இருந்திருக்காவிட்டால் பிரிவினைவாதிகளுக்கு எதிரான போரை வென்றிருக்க முடியாது" என்பதே அந்த வாதம்.

திருத்தம் செய்வதா அல்லது ஜனாதிபதி முறையை ஒழிப்பதா? (*Reform or Abolition?*) என்ற தலைப்பில் நான்கு பக்கங்களில் (114 117) ஜயம்பதி விக்கிரமரட்ண இந்த விடயத்தை ஆராய்கிறார். உங்களுக்கு உறுதி நிலையான ஆட்சி வேண்டுமா அல்லது ஜனநாயகம் வேண்டுமா? என்று மக்களைப் பார்த்துக் கேட்பது போல் அமையும் 'உறுதிநிலை எதிர் ஜனநாயகம்' விவாதம் மேற்குறித்த நான்கு பக்கங்களில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

எமது அண்மை நாடான இந்தியாவில் பாராளுமன்றமுறை இருந்து வருகிறது. பல்லினச் சமூகங்களைக் கொண்ட பெரிய தேசமாக விளங்கும் இந்தியாவின்

மஹிந்த ராஜபக்ஷ

Image Source : www.nytimes.com

பிரச்சினைகள் சிக்கலானவை: இந்தியா தனது அயல் நாடான சீனாவுடனும், பாகிஸ்தானுடனும் போர்களை நடத்தியது. இந்தியாவிற்குள்ளேயும், பயங்கரவாதத்தையும் வன்முறையான ஆயுதப் போராட்டங்களையும் எதிர்த்துப் போர் புரிந்து வந்துள்ளது. அந்நாட்டில் மதக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. மொழிசார் முரண்பாடுகள், வறுமை, பொருளாதாரப் பின்னடைவு ஆகியன இந்தியாவின் பல மாநிலங்களில் மிகத் தீவிரமான பிரச்சினைகளாக உள்ளன. இப்பிரச்சினைகளுக்கு மத்தியிலும் இந்தியாவில் சுதந்திரமடைந்த காலம் முதல் பாராளுமன்றமுறை வேரூன்றி நிலைத்துள்ளது. நிறைவேற்று ஜனாதிபதிமுறை (Executive Presidency) இந்தியாவுக்கு வேண்டும் என்ற வலுவான கோரிக்கை அங்கு எழவில்லை எனக் குறிப்பிடும் ஜயம்பதி விக்கிரமரட்ண விக்ரம் ராகவன் (VIKRAM RAGHAVAN) என்னும் எழுத்தாளரின் கூற்றொன்றை மேற்கோள் காட்டுகிறார் (பக். 117).

“இந்திய அரசியல் யாப்பை உருவாக்கியவர்கள் ஏன் பாராளுமன்ற முறையைத் தெரிவு செய்தனர்? அவர்கள் பிரித்தானிய மாதிரியைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றினார்களா? ஏனைய மாற்று மாதிரிகள் பற்றிச் சிந்திப்பதற்கு தவறினார்களா? எமது நற்பேறாக அவர்கள் மிகுந்த கவனத்தோடுதான் இப் பிரச்சினையைப் பரிசீலித்தார்கள். 1787 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் அரசியல் யாப்பை

வரைவதற்கான சபை (Constitutional Convention) கூடிய போது, அச்சபையினர் ஆங்கிலேயரின் முடியாட்சியின் அடக்குமுறை மீது தீவிர வெறுப்பை உடையவர்களாய் இருந்தனர். அதனால் அவர்கள் அரசாங்கத்தின் ஒரு அங்கமாக விளங்கும் ஒரு பதவியில் ஒரு நபரிடம் அரசியல் அதிகாரத்தைக் குவிப்பதை விரும்பவில்லை. எமது தலைவர்களும் அரசியல் யாப்பை வரைந்த போது உலகின் பல நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் இருப்பதையும், எந்தப் பக்கம் திரும்பினாலும் ஒரு சர்வாதிகாரி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பதையும் கண்கூடாகக் கண்டனர். இதனால் எமது அரசியல் யாப்புச் சபை எம் நாட்டில் எதிர்காலத்தில் ஒரு சர்வாதிகாரி தோன்றுவதற்கு இடமளிக்க விரும்பவில்லை.

எமது அரசியல் யாப்பை வரைந்தவர்கள் எதிர்நோக்கிய சங்கடமான நிலையை, 1948 நவம்பரில் ஆற்றிய உரை ஒன்றின் போது அம்பேத்கர் அவர்கள் தமக்கே உரித்தான மொழியாற்றலுடன் எடுத்துக் கூறினார். ஒரு நாட்டின் நிர்வாகத் தலைவர் உறுதி நிலையைப் பேண வேண்டும்; அத்தோடு தன்னைத் தெரிவு செய்த வாக்காளர்களான மக்களுக்குப் பொறுப்புக் கூறுபவராகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டு இலக்குகளையும் சமவிகிதத்தில் அடையக்கூடிய அரசியல்முறை உலகில் எங்கும் கிடையாது என்று அம்பேத்கர் வாதிட்டார். அமெரிக்காவிலும் சுவிற்சர்லாந்திலும் ஜனாதிபதிமுறை குறிப்பிடத்தக்க அளவுக்கு உறுதிநிலையை (Stability) அந்நாடுகளுக்கு வழங்கின. ஆனால் பிரித்தானியாவின் மந்திரிசபை முறை அரசாங்கங்கள் (British Cabinet Governments) அந்நாட்டு மக்களுக்குப் பொறுப்புச் சொல்வனவாக அமைந்தன. இவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்த அரசியல் யாப்புச்சபை உறுதிநிலையை விட பொறுப்புக் கூறலே முதன்மையானது என்ற முடிவுக்கு வந்தது. அம் முடிவின்படி அமெரிக்கா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் ஜனாதிபதிமுறையை விடுத்து பிரித்தானியாவின் மந்திரிசபை முறையிலான அரசுக்கட்டமைப்பை அரசியல் யாப்புச்சபை இந்தியாவிற்கு வழங்கியது." (பக். 107 இல் தரப்பட்ட மேற்கோள். 2012 மே 27 'THE HINDU' இதழில் VIKRAM RAGHAVAN எழுதிய 'ALL THE PRESIDENT'S MEN' என்ற தலைப்பிலான கட்டுரையில் இருந்து எடுக்கப்பட்ட கூற்று.)

இந்தியா ஜனாதிபதிமுறையைத் தெரிவு செய்யவில்லை; பாராளுமன்ற முறையைத் தெரிவு செய்தது. உறுதிநிலை, பொறுப்புக்கூறல் என்ற இரண்டு இலக்குகளையும் சம விகிதத்தில் அடைவதற்கு, பாராளுமன்றமுறை இந்தியாவிற்கான சிறந்த தெரிவாக அமைந்தது.

1994 இற்குப் பிந்திய காலம்

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி, ஜனாதிபதி முறையின் கீழ் 17 ஆண்டு காலம் தொடர்ந்தது. 1994 இல் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பன நடைபெற்றன. ஜனாதிபதிமுறையை ஒழிப்பதற்கும், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குமான வாய்ப்புகள் காணப்பட்டன. ஐயம்பதி விக்கிரமரட்ணவின் நூலில் ஏறக்குறைய 5 பக்கங்களில் (பக். 118 - 122) '1994 AND AFTER - A GOLDEN OPPORTUNITY MISSED' என்ற தலைப்பில் 1994 இற்குப் பிந்திய காலத்தில் அரசியல் யாப்பைத் திருத்தி, புதியதொரு யாப்பினை அறிமுகம் செய்வதன் மூலம் ஜனாதிபதி முறையை நீக்குதல், அதிகாரப் பகிர்வு (Devolution of Powers) ஊடாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் ஆகிய இரு இலக்குகளையும்

சிறிமாவோ பண்டாரநாயக்க

Image Source : www.indiatoday.in

அடைவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தமை விளக்கிக் கூறப்பட்டுள்ளது.

1977 தேர்தலில் 5/6 பெரும்பான்மைப் பலத்துடன் பதவிக்கு வந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன 'FIRST - PAST - POST SYSTEM' தேர்தல் முறை மூலம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார். அவர் ஜனாதிபதி முறையைப் புகுத்தியதோடு விகிதாசாரத் தேர்தல் முறையையும் புகுத்தினார். விகிதாசாரத் தேர்தல் முறையின்படி அரசியல் யாப்பைத் திருத்துவதற்கான 2/3 பெரும்பான்மைப் பலத்தைப் பெறுதல் சாத்தியமற்றதாக ஆக்கப்பட்டிருந்தது. 1994 பாராளுமன்றத் தேர்தலில் 225 ஆசனங்களைக் கொண்ட பாரளுமன்றத்தில் 94 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டிருந்த எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் சம்மதத்தைப் பெறாமல் அரசியல் யாப்புத் திருத்தத்தை நிறைவேற்ற முடியாமல் இருந்தது. சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இவ்விடயத்தில் இடம்பெற்ற இழுபறிகள், இழுத்தடிப்புகள் என்பனவற்றை ஐயம்பதி விக்கிரமரட்ண இப்பகுதியில் விபரித்துக் கூறுகிறார்.

18 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் - ஜனாதிபதிமுறையை மேலும் பலப்படுத்தல்

2010 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ச, அரசியல் யாப்புக்கான 18 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தார். இந்தத் திருத்தம், ஜனாதிபதியின் பதவிக்காலம் 12 ஆண்டுகளுக்கு மேற்பட முடியாது என்ற தடையை நீக்கி, பதவியில் உள்ள ஜனாதிபதி ஒருவர் எத்தனை தடவையும், அதாவது இரண்டு தடவைகளுக்கு (Two Elected Terms) மேலும் போட்டியிடலாம் என்னும் வரப்பிரசாதத்தை மகிந்த ராஜபக்சவிற்கு வழங்கியது. 18 ஆவது திருத்தம் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் சிலவற்றையும் பறித்தது. இதனை விட மேலும் பல அம்சங்கள் இத்திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டு, 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன தனக்கு உரியதாக ஆக்கிக் கொண்ட அதிகாரங்களையும் விட கூடிய

அதிகாரங்களை உடைய ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்சவை அரியணையில் அமர வைத்தது.

ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் புகுத்தும் திருத்தச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வேளை இடம்பெற்ற விவாதத்தின் போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான சிறிமாவோ பண்டாரநாயக்க பின்வருமாறு கூறினார்:

”இச் சட்டத் திருத்தத்தின் விளைவாக ஜனாதிபதி தேசிய அரசுப் பேரவையிலும் (*National State Assembly*) மேலானவராக மட்டுமன்றி, சட்டத்திற்கும், நீதிமன்றங்களுக்கும் மேலானவராகவும் (*Above the Law and the Courts*) தன்னை மாற்றிக் கொள்ளப் போகிறார். இதனால் எதிர்காலத்தில் இப்பதவியை வகிக்கப் போகிறவர், அவர் யாராக இருந்தாலும் சர்வாதிகாரியாக தனிநபர் ஒருவரின் கையில் சகல அதிகாரங்களையும் குவித்து வைத்திருக்கும் தனிநபராக இருக்கப் போகின்றார். இவ்வாறு அரசியல் யாப்புச் சட்டத்தைத் திருத்தம் செய்து ஒரு நபரின் கையில் அதிகாரத்தைக் குவியச் செய்து சர்வாதிகாரிகளை உருவாக்கியமைக்கு உலகில் பல உதாரணங்கள் உள்ளன. அதன் விளைவாக அந்த நாடுகளில் ஏற்பட்ட விபரீத விளைவுகளிற்கும் பல வரலாற்று உதாரணங்கள் உள்ளன. இதனால் நாம் இந்தச் சட்ட மூலத்தை வன்மையாக ஒரே குரலில் எதிர்க்கின்றோம். இச் சட்டத்திருத்தம் எமது நாட்டைச் சர்வாதிகார ஆட்சிக்கு இட்டுச் செல்லப் போகிறது. இதிலிருந்து நாம் மீண்டு வருவதற்கான வழி கிடையாது. இச்சட்டம் இலங்கையில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விடும். காலம் சென்ற டட்லி சேனநாயக்க அவர்கள், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இந்த யோசனை முன்வைக்கப்பட்ட போது, ‘ஜனாதிபதிமுறை ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிக்கும்’ என்ற கருத்தை முன்கூட்டியே கூறினார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம் (பக். 103104 எளிமைப்படுத்திய மொழிபெயர்ப்பு).” இக் கூற்றில் உள்ள நகைமுரண் கவனிக்கத்தக்கது.

மகிந்த ராஜபக்ச தமது கட்சியின் தலைவியாகிய, காலம் சென்ற சிறிமா பண்டாரநாயக்கவின் தலைமையில் செயற்பட்ட காலத்தில், ஜனாதிபதி முறையினை எதிர்த்தார். பின்னர் அவரே, நிறைவேற்று ஜனாதிபதி முறையினை மேலும் பலப்படுத்தும் கைங்கரியத்தை பல்லாண்டுகள் கடந்த பின் செய்து முடித்தார்.

முடிவுரை

தென்னிலங்கையின் இரு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் 1977 முதல் 2024 வரை ஆட்சி செய்தன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த இவ்விரு கட்சிகளின் அரசாங்கங்களும் ஜனாதிபதி முறையினை மேலும் மேலும் பலப்படுத்தி ஜனநாயக விரோத நடவடிக்கையைத் தொடர்ந்தன. 2024 செப்டெம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் மூன்றாவது சக்தியொன்று பேரலையாக எழுச்சி பெற்றுள்ளது. இத்தேர்தலில் வெற்றி பெற்ற மேதகு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தென்னிலங்கை மக்களினால் நம்பிக்கை நட்சத்திரமாகப் பார்க்கப்படுகிறார். எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பலமுடைய அரசாங்கத்தை அவரது தேசிய மக்கள் சக்தி (NPP) கட்சியினால் அமைக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் எதிர்பார்ப்பு நிறைவேறுமிடத்து ஜனாதிபதி முறையின் ஒழிப்பினையும் உள்ளடக்கியதான ‘முறைமை மாற்றம்’ (*System Change*) இலங்கையில் ஏற்படலாம் என நம்பலாம்.

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் 'மேனிலையாக்கம்' எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே 'ஈழத்து நாட்டார் தெய்வங்கள்' எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.

தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார்.

இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். 'சொற்களால் அமையுலகு' என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

நீலாசோதையன் என்னும் துணைத்தெய்வம்

அறிமுகம்

மனிதகுலம் ஏனைய உயிரினங்களில் இருந்து வேறுபட்டு தனி அடையாளங்களோடு - பகுத்தறிதலோடு இயங்கத் தொடங்கிய இனக்குழுமக் காலந்தொட்டு வீரம் - போர் என்பன தவிர்க்க முடியாதவையாகி விட்டன. தனக்காக மட்டுமன்றி இனக் குழுவுக்காகப் போராடுதலும் இன்றியமையாததாயிற்று. தமக்காகப் போராடி உயிர்நீத்த தலைவனை அல்லது வீரனை அவ்வவ் இனக்குழு மக்கள் போற்றினர். இனக்குழுவின் பகையை வெல்லல், வேட்டை, குழுவின் தேவைகளை நிறைவேற்றல், பகை விலங்குகளைக் கொல்லுதல் - வெல்லுதல் என 'வீரன்' சாகசம் காட்ட பல சந்தர்ப்பங்கள் காத்துக்

புன்னைச்சோலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய நீலாசோதையன் பரிவாரக் கோயில்

கிடந்தன. காலங்காலமாக அவர்களது வீரம் கதை கதையாகக் கூறப்பட்டது. அதன் வழி நீத்தார் வழிபாடு, முன்னோர் வழிபாடு, நினைவுக்கல் அல்லது நடுகல் வழிபாடு உருவாயிற்று.

இயற்கையான போராட்ட வாழ்வில் தொழில் வழி மனித இனக்குழுக்கள் உருவாயின. தம்மை, தம் இனக்குழுவைக் காத்த தலைவனும் வீரனும் அவ்வவ் மக்களால் போற்றப்பட்டனர். காலப்போக்கில் அவர்கள் குழுவின் - குலத்தின் தெய்வமாக்கப்பட்டனர். குலதெய்வம் உருவாயிற்று. வீரவேங்கையிலிருந்து தலைவன் வரை இவ்வழிபாடு நிகழ்த்தப்பட்டதாயினும் அவரவர் வீரபராக்கிமங்களுக்கும் அவரவர் பற்றிய கதைகளுக்கும் காலச்சூழலுக்கும் ஏற்ப அவர்கள் காலங்கடந்தும் வழிபடப்பட்டனர். அது குலமரபாக பரம்பரைகள் பல கடந்தும் நீடித்தது. ஒரு கட்டத்தில் வாய்மொழி மரபுக் கதைகள் இழை அறுந்தறுந்து போக கதைகள் அற்ற, காரணம் தெரியாத, ஆனால் மரபுவழி நம்பிக்கையால் வழிபடப்படும் தெய்வங்களாக அது மாறத் தொடங்கியது. குல ஏற்றத்தாழ்வுற்ற மக்களின் சாதிய நீக்கவுணர்வின் வழியும் பிற்காலப் பகுத்தறிவு வாதத்தின் வழியும் இவ்வழிபாடுகள் கைவிடப்பட்டன அல்லது காரணம் தெரியாத மூட நம்பிக்கைகளாகக் கருதப்பட்டன.

ஆனால் இத்தெய்வங்களின் பத்ததிகளும் வாய்மொழி வழக்காறுகளும் அந்த நிலத்தின் சுதேச வரலாற்றை எழுத பெரிதும் உதவ வல்லன என்ற வரலாற்றுச் செய்தி முக்கியமானதாகும். இவ்வாறு மறக்கப்பட்டு வருகின்ற - வீர வரலாற்றை உடைய துணைத்தெய்வமே நீலாசோதையன் எனும் தெய்வமாகும்.

நாட்டார் தெய்வம் பற்றிய எழுநா எழுத்துகள் பற்றி உரையாடிய பின் நண்பர் - கிழக்குப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் - கலாநிதி வாமன், நீலாசோதையன் பற்றி எமக்குத் தெரிவித்ததோடு நின்றுவிடாமல் புன்னைச்சோலை பூசாரியையும் அறிமுகப்படுத்தி வைத்தார். இதன்வழி உருவான அருட்டுணர்வால் மாணவ நண்பர்கள் சு. தாரங்கன், எஸ். அபிக்ஷனா, ஈ. நவிசா மற்றும் யாழ் பல்கலைக்கழக ஊடகத்துறை முகாமைத்துவ உதவியாளர் நண்பர் விஜிகரன் ஆகியோரின் உதவியுடன் இதற்குரிய கள ஆய்வில் ஈடுபட்டோம்.

நீலாசோதையன்

ஈழத்தில் நின்று நிலவுகின்ற குலதெய்வங்களுள் ஒன்று பெரியதம்பிரான். சலவைத் தொழிலாளர்களின் குலதெய்வம் இது. தக்கன் சிவனை அழைக்காது செய்த யாகத்தில் யாக புருக்ஷனாகத் தோன்றியவன் பெரியதம்பிரான் என்றும், யாகத்தை அழிக்கத் தோன்றிய சிவனின் அம்சமான வீரபத்திரர் தக்கனின் தலைகிள்ளி ஏனைய தேவர்கள் உள்ளிட்டவர்களை துவம்சம் செய்ததைக் கண்டு அஞ்சியோடியவர்களில் ஒருவனே பெரியதம்பிரான். அவ்வாறு ஓடிப்போனவன் குளத்தங்கரையொன்றில் துணி துவைத்துக் கொண்டிருந்த சலவைத் தொழிலாளி ஒருவனிடம் தன்னைக் காப்பாற்றுமாறு வேண்டினான். அத்தொழிலாளியும் துவைக்கப் பயன்படுத்தும் பெரிய ஜாடியை அவன் மேல் கவிழ்த்து மூடிவிட்டான். அவனைத் தேடி வந்த வீரபத்திரரைச் சிறிது தேற்றி தான் பெரியதம்பிரானை ஒளித்து வைத்த வரலாற்றை உரைத்தான். அவனது சாமர்த்தியத்தைப் பாராட்டிய வீரபத்திரர் சாடிக்குள் உள்ளவனே உங்கள் குலதெய்வம் என்றும் அவன்

உங்கள் பிணி, துன்பம் முதலியவற்றை நீக்க வல்லான் என்றும் கூறிச் சென்றார். அன்று தொட்டு சலவைத் தொழிலாளிகளின் (வண்ணார் - கட்டாடியார்) குலதெய்வமாகப் பெரியதம்பிரான் விளங்கி வருகின்றார் என்பது பொதுநிலைக் கருத்தாகும் (கனகரத்தினம், இரா. வை., 2016). யாகத்திலிருந்து எழுந்த யாக புருக்ஷனைக் காட்டி "இவர் யார்?" என தேவர்கள் வினாவ, பிரம்மா "எம் தம்பிரான் பெரியதம்பிரான்" எனக் கூறியதாகவும் கூறப்படுகிறது (நேர்காணல்: கிருக்ஷ்ணபிள்ளை புவனேசராசா. புன்னைச்சோலை, மட்டக்களப்பு).

புன்னைச்சோலை காளிகோயில் பூசாரியான கி. புவனேசராசா (யோகன் ஐயா) சாடி கொண்டு மூடிய கதையை மறுத்து, தலையில் கட்டி இருந்த சால்வையை (சால் - சால்வை) அவிட்டு பாதையின் குறுக்கே போட்டு அதனைத் தாண்டிச் செல்ல முடியாதபடி செய்ததாகவும் இதுவே 'சால்வை தாண்டுதல்' சம்பிரதாயமானதாயும் கூறுகிறார். மேலும் பெரியதம்பிரானுக்கு பூஜை செய்து வழிபடுமாறு கூறியபோது "தீட்டுத் துணியை அன்றாடம் தொடும் நான் எவ்வாறு பூசை செய்ய இயலும்" என காளியன் கேட்டதாகவும் "உன் குலத்தோர்க்குத் தீட்டேதும் இன்று தொட்டு இல்லை" எனக் கூறியதாகவும் யோகன் பூசாரியும் மறவன்புலோ ஆனந்தரஞ்சனும் கூறுகின்றனர். அத்தோடு இவ்வரம் பெற்ற காளியன் "இவ்வரம் தந்த நீ எதிர்ப்பூசைக்கு இவ்வாலயத்தில் இருக்க வேண்டும்" என வேண்டியதாகவும் அவரும் சம்மதித்து வரம் தந்ததாகவும் கூறப்படுகிறது. அத்தோடு புன்னைச்சோலை யோகன் பூசாரி "சிவனுக்கழைப்பில்லாத யாகத்தில், யாக குண்டத்தில் இருந்து சிவனின் அம்சமான பெரியதம்பிரான் தோன்றியிருக்க முடியாது என்றும் அதனை சிவனின் இன்னொரு அம்சமான வீரபத்திரர் கொல்வதற்குத் துரத்துவாரா என்றும் கூறி, ஆகவே பெரியதம்பிரான் விக்ஷ்ணுவின் அம்சம்" என்கின்றார். இத்தர்க்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதே. அதேநேரம் துரத்திச் சென்றது வீரபத்திரரல்ல சனீஸ்வரன் எனத் தனிக் கதையை மறவன்புபுலவு ஆனந்தரஞ்சன் (செல்லக்கிளி) முன்வைக்கின்றார்.

இந்தப் பெரியதம்பிரான் இருக்குமிடமெல்லாம் இவரோடு இருக்கும் தெய்வம் நீலாசோதையன். நீலன் அவரது பெயர் என்றும், சோதையன் என்பது சாதிப்பெயர் என்றும் கூறப்படுகின்றது. சோதையன் என்பது குளம் வெட்டும் மக்களைக் குறிக்கும். அவர்களின் தெய்வம் நீலாசோதையன். குளத்தில் சலவைத் தொழில் செய்பவர்களான வண்ணார், கட்டாடியார் ஆகிய இரு சாதிகளினதும் கலப்பின் வழி ஒரு கோயிற் தெய்வங்களாகி, பின் சோதையர் குலம் அருக, பெரியதம்பிரான் முதன்மைத் தெய்வமாகியிருக்கலாம். யாழ்ப்பாணத்துப் பெரியதம்பிரான் பூசாரிகள் பலரும் (ஏழாலை பெரியதம்பிரான் பூசாரி, இருபாலை பெரியதம்பிரான் பூசாரி தவிர) இரண்டும் ஒருவரையே குறிக்கின்றது என்கின்றனர்; மறுபெயர்கள் என்கின்றனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இரு தெய்வமும் இணைத் தெய்வங்களாகக் கருதப்பட்டு, பெரியதம்பிரான் கோயில் எனக் கூறப்பட்டாலும், ஒரே சடங்கு - வழிபாட்டுத் தெய்வங்களாகவே அவை சுட்டப்படுகின்றன.

ஈழத்துப் பெரியதம்பிரான் கோயில் மரபில் தெய்வமாடி பெரியதம்பிரானை முன்னுறுத்தி சொற்ப நேரமே கலையாடுவதும் நீலாசோதையனாகவே பெரிதும் தெய்வமாடுவதையும் அவதானிக்க முடிகின்றது. யாழ்ப்பாண மரபில் இரு தெய்வங்களுக்குமான தனிக் கதைகள் அருகிவிட்டன. பெரியதம்பிரானே



இருபாலை பெரியதம்பிரான் ஆலயம் - நீலாசோதையன்

குலதெய்வமாக - பெருந்தெய்வமாக மேலெழுந்து நிற்கின்றார். கிழக்கிலங்கையில் இன்றும் நீலாசோதையனுக்கு தனியிடம் வழங்குதல் குறிப்பிடத்தக்கது.

நீலாசோதையன் பற்றிய கதைகள்

இலங்கையில் ஆதி மாமலையில் பிறந்து மகர மாமலையில் வளர்ந்து தம்பளம் மலையில் (தம்பதெனிய - சிகிரியா ஆக இருக்கலாம்) பெரியதம்பிரான் முடி சூட்டுகின்றார். இவரை வளர்த்தவர் 'சிறுக்கியன்' இராசா எனப்படுகிறார். பெரியதம்பிரானது புத்திசாலித்தனம் கண்டு வியந்த இராசா, சோதிடத்தில் வல்ல அந்தணரை அழைத்து இவரது வாழ்வைக் கணிக்கச் சொல்கின்றார். தக்கன் யாகம் நடத்தப்பட்ட காலத்தில் எல்லாக் கிரகங்களும் ஒரே நேர்கோட்டில் நின்றது போல இவரது பிறப்புக் காலத்திலும் நின்றதனால் '720' காதவெளி தூரம் ஒரு குடையின் கீழ் ஆளுவார்; கருடக்கொடி, வெண்சங்கு, வெண் முத்துமாலை தரித்து (இவை பிற்கால வைணவ - விஷ்ணு அடையாளங்கள் என்பது கவனிக்கத்தக்கது) ஆட்சி செய்வார் எனக் கணித்தனர்; அதுவே நடந்தது. பராக்கிரமம் மிக்க அரசனானான்.

இவர் பிறந்த அதே நேரத்தில் வலவை (உடவளவ) அரசாட்சிப் பிரதேசத்தில் நீலன் - யசோதை எனும் சலவைத் தொழிலாள தம்பதியினருக்கு ஒரு மகவு பிறந்தது. அதுவே நீலாசோதையன். இத் தம்பதியினர் அரண்மனையில் வாழ்பவர்களின் ஆடைகளை சலவை செய்து கொடுப்பவர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். ஒரு நாள் தாயுடன் நீலாசோதையனும் அரண்மனைக்குச் சென்றான். தாய், மகனை ஒரு இடத்தில் நிறுத்திவிட்டு அரண்மனைக்குள் சென்றாள். மகன் நின்ற இடத்துக்கருகே அரசனின் உடற்பயிற்சிக்கூடம் இருந்தது. அங்கு அரசன் பயிற்சி செய்யும் '1000' துலாம் நிறையுடைய தண்டாயுதம் இருந்தது. அந்தளவு நிறையுடைய தண்டாயுதத்தைத் தூக்குவார் அரசனைத் தவிர யாருமில்லை. நீலாசோதையன் அத் தண்டாயுதத்தைத்

தூக்கி எறிந்தான். அது மறுதிசையில் விழுந்தது. அவன் தாயுடன் வீட்டுக்குச் சென்று விட்டான். உடற்பயிற்சிக் கூடத்துக்கு வந்த அரசன் உரிய இடத்தில் தண்டாயுதம் இல்லாததையும் வேறு திசையில் அது இருப்பதையும் கண்டு காவலர்களை வினாவி நடந்ததை அறிந்தான்; நீலாசோதையனை அழைப்பித்தான்; பரீட்சித்தான். அவன் பராக்கிரமம் கண்டு மகிழ்ந்து நண்பனுமாய் மந்திரியுமாய் ஆக்கிக் கொண்டான்.

ஒரு பொழுது இருவரும் வடதிசை நோக்கி, நகரச் சோதனை சென்றபோது பெண்ணின் அழுகுரல் ஒன்று கேட்டது. நீலாசோதையன் அத்திசையில் ஒரு பெண் சிறுவெளிச்சத்தில் இருந்து அழுவதைக் கண்டு நடந்ததை வினாவினார். "மதுரை இராசா, உங்கள் இராசாவைக் கொலை செய்து விட்டான்" என அறிவித்துவிட்டு அங்கிருந்த "6000 ஆண்களைக் கைது செய்து, கொண்டு சென்று விட்டான்" எனக் கூறி அழுதாள்.

அவர்களை மீட்க அரசனும் நீலாசோதையனுமாக '60' குமாரர்களைத் திரட்டி படையெடுத்துச் சென்று நந்தூர்க் கடலில் (இது முல்லைத்தீவு நந்திக் கடலாக இருக்கலாம்) தரித்து நின்றனர். இவர்களிடம் மரக்கலங்கள் இருக்கவில்லை. நாள் செல்லச் செல்ல படைவீரர்கள் மெல்ல மெல்லத் தத்தம் வீடு திரும்பினர். எஞ்சியவர் அரசனும் மந்திரியுமே. கோபங்கொண்ட நீலாசோதையன் தண்டாயுதத்தால் கடலை அடிக்க கடல் பிரிந்து வழி விட்டது. தொடர்ந்து தண்டாயுதத்தால் அடித்து அடித்து அக்கரையை சென்றடைந்தனர். தண்டாயுத்தால் கடலை அடித்து பாதை ஏற்படுத்தியவர் பெரியதம்பிரான் என்று பாண்டிருப்பு பூசாரி வே. கணபதிப்பிள்ளை கூறுகிறார் (கனகரத்தினம், இரா. வை., 2016). அரசன் அரண்மனைக்குள் உட்புக, நீலாசோதையனோ குஞ்சரப்பந்தி புகுந்து (யானைகள் கட்டுமிடம்) யானையை யானையால் அடித்துக் கொன்றான். நேரே உட்புகுந்த அரசனின் பராக்கிரமத்தைக் கண்ட மதுரை இராசா அரியணையில் ஒரு ஓரத்தில் உட்கார, அதில் அரசன் உட்கார்ந்து தண்டாயுதத்தைத் தன் மடியில் வைத்து அதன் நுனியை மதுரை இராசாவின் மடியில் வைத்தான். கனம் தாங்காது மதுரை இராசா தவிக்கும்போது யானைகள் கொல்லப்படும் சேதியை காவலன் உரைக்கின்றான். மதுரை இராசா இறுதியில் இவர்களிடம் மன்னிப்புக் கேட்டு செல்வமும் அளித்து வழியனுப்புகின்றான். அரசனும் நீலாசோதையனும் 6000 பேரை மீட்டதோடு 12,000 மக்களைச் சிறை பிடித்து இலங்கை மீண்டனர். அனுராதபுரக் காட்டை வெட்டி 12,000 பேரையும் குடியமர்த்தினர். இதனாலேயே பெரியதம்பிரான் பத்ததிப் பாடல்களில் 'அனுராதபுரி அரசே' எனும் விளிப்புக் காணப்படுகிறது. இக்கதையின் பெரும்பகுதி இரா.வை. கனகரத்தினம், புன்னைச்சோலை காளியம்மன் பூசாரி யோகன் ஐயா உள்ளிட்டவர்களால் ஒரே மாதிரியாகவே கூறப்படுகின்றது. அதேவேளை யோகன் ஐயா அந்த அரசன் கஜபாகு மன்னன் என்றும் அவன் கி.பி 2 ஆம் - 3 ஆம் நூற்றாண்டுக்குக்குரியவன் என்றும் கூறுகின்றார். ஆயினும் இதற்கான ஆதாரத்தைத் தேடுதல் கடினமாகவே உள்ளது.

அதேவேளை ஆலய பூசகர் இறந்திருந்ததை அறிந்து குளக்கோட்ட மன்னன் கோணேசர் கோயிலைத் தரிசிக்க குதிரையிலேயே வந்த போது, சுரங்க மண்டபம் தரிசித்ததாகவும் சிவ நடனத்தைக் கண்டு தன்னிலை மறந்து நின்றதாகவும், இதனால் பக்தி மேலிட்ட மன்னன் கோயிலைப் புனரமைத்துப் பணியாளர்களை நியமித்ததாகவும்,

சம்பூர் - தோப்பூர் முதலிய இடங்களில் இந்தியாவிலிருந்து குடிகளை அழைத்து வந்து குடியேற்றியதாகவும் கோணேசர் கல்வெட்டு (வடிவேல் இ., (பதி), 1995) கூறுகின்றது. அக்குடிகளின் வம்சத்தினர் இன்றும் வாழ்கின்றனர். அதேபோல கோணேசர் கல்வெட்டு, அரசன் கந்தளாய்க் குளத்தை அமைத்து நீலாசோதையன் பொறுப்பில் விட்டதாகக் கூறுகின்றது (கோணேசர் கல்வெட்டு, 28). மேலும் அப்பாடலில்,

> "எட்டிசை மண்வெட்டிக் கொண்டே ஏழரைச் சுற்றாம்
> மரத்தை இனதா வெட்டி
> தட்டி ஒரு காலாலே எற்றி அது வீழ முன்னம்
> தரணி மீதில்
> ஒட்டி ஒரு குளம் சமைத்து ஆங்கு உறுநீரும் கொண்டு
> அருளையுற்ற வீரன்
> அட்டதிக்கும் புகழ்ந்தருளும் நீலாசோதையன் படையும்
> அரசர்மாரும்"

என நீலாசோதையனின் வீர பராக்கிரமம் கூறப்பட்டுள்ளது.

வேதியன் ஒருவன் இந்திய தேசத்தைத் தன் மந்திர வலிமையால் அடிமையாக்கி, பின் இலங்கையை அடிமையாக்க வந்தான் என்றும், அதனால் சில பேய்களை ஏவினான் என்றும், நீலாசோதையன் அவற்றை எதிர் கொண்டழித்ததாகவும் கூறப்படுகிறது. அதேவேளை அவ்வேதியன் இராமாயணத்து வாலியைப் போல தன்னெதிரே நின்று போரிடுபவரின் பாதி சக்தியைப் பெற்றுவிடும் ஆற்றல் உள்ளவன். ஆகவே நீலாசோதையன் காளியனிடம் (சலவைத் தொழிலாளி) அடைக்கலம் புக, அவன் சாடியினுள் புகச்செய்தான். இதனையே யோகன் பூசாரி 'சால் - சால்வை' எனப் பொருள்கொண்டு குளத்தினுள் நீலாசோதையனை மூழ்கியிருக்க வைத்து, சால்வையைக் குறுக்கே போட்டு அவ்வழி செல்லாது வேதியனை தடுத்து அப்பால் செல்ல வைத்தான் என்கிறார். வேதியன் அப்பால் செல்லும்போது மறைந்திருந்த நீலாசோதையன் விஸ்வரூபம் கொண்டு தண்டாயுதத்தால் தாக்கி வேதியனைத் தந்திரமாகக் கொன்றான் எனப்படுகிறது. ஆயினும் வேதியன் ஏவிய கம்பளி வைரவர், ஊத்தைக்காளி முதலான பன்னீராயிரம் துக்ஷ்ட சக்திகள் நின்றன. அவை மக்களைத் தாக்காத வண்ணம் நீலாசோதையன் இன்றுவரை காப்பதாக நம்பப்படுகின்றது (நேர்காணல் :யோகன் ஐயா, புன்னைச்சோலை காளி கோயில் பூசாரி). இக்கதை மரபில் இருந்து சற்று மாறுபட்டு வேதியன் ஒருவன் தன் நாட்டை சலவைத் தொழிலாளர் ஆள்வதா எனக் கருதி மந்திர சக்தியால் பேய், காளி உள்ளிட்ட துக்ஷ்ட சக்திகளை ஏவியதாகவும் அதனை எதிர்கொள்ள முடியாமல் தந்திரமாக சலவைத் தொழிலாளியின் உதவியுடன் நீலாசோதையன் அவனைக் கொன்றதாகவும் கூறப்படுகின்றது (கனகரத்தினம்,இரா. வை., 2016). அதேவேளை மந்திர சக்தியின் மூலவரான (குரு) மாகாமுனி பரசுராமர் நீலாசோதையனிடம் இத் துக்ஷ்ட சக்திகளுக்கு அவற்றைக் கட்டுப்படுத்த உரிய அவிர்ப்பாகம் வழங்குமாறு கூறினார் எனவும் அதன் வழி நின்றே இன்றும் 'நோர்ப்பெறிதல்' சடங்கு எனும் சடங்கு நிகழ்த்தப்படுதலையும் அறியமுடிகிறது.

நீலாசோதையன் வழிபாடு இலங்கைக்கே உரிய தெய்வ வழிபாடாகும். நீலாசோதையன் காவியம் (ஏறத்தாழ 65 பாடல்கள்) இத்தெய்வம் பற்றி விரிவுற உரைக்கிறது. வீரபத்திர காவியம், பெரியதம்பிரான் காவியம், வண்ணார் பத்ததி, கட்டாடிமார் பத்ததி, கோணேசர் கல்வெட்டு முதலியனவும் நீலாசோதையன்

பற்றி உரைக்கின்றன. ஏழாலை பெரியதம்பிரான் கோயிலில் பொங்கல் அன்று நிகழும் கிரியாமுறையின் போது பாடும் பாடல்கள் 200 வருடங்களுக்கு மேலான ஏடொான்றில் உண்டு. அதில் பிள்ளையார் துதி, சுப்பிரமணியர் துதி, தேவி துதி என்பவற்றுக்கு அடுத்ததாக நீலாசோதையன் துதி காணப்படுகின்றது. அதில்,

> "தாருலகில் நீலவண்ண ணாகத் தோன்றித்
> தவமுனிவர் சாபமது தீர வந்து
> பேருலகில் சிவன் தன்னைப் போற்றி செய்து
> பெரிய தெய்வமென்பதொரு பேரினாலே
> சீருலவு கொன்றை யந்தர் சிறந்த நாதன்
> சிவவரு வில்லா வளமை செப்புங்கோயில்
> பாரலகில் திருநீலா சோதையன் தான்
> பரிந்துயில் கொல்பவர் வினைகள் தீர்ப்பாம்"

எனவுள்ளது. மேலும் பலிமுறைப் பாடலிலே "நீலா சோதை யனையும் பவள நாடு திறை கொண்ட தம்பிரானே" எனவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நீலாசோதையன் அமைவிடங்கள்

மட்டக்களப்பு, அம்பாறை, யாழ்ப்பாணம் உள்ளிட்ட மாவட்டங்களில் பெரியதம்பிரான் ஆலயங்களில் நீலாசோதையன் பரிவாரத் தெய்வமாக, சடங்கில் மட்டும் உருவகிக்கப்படும் தெய்வமாக, பெரியதம்பிரானாக அமைந்திருக்கின்றார். மட்டக்களப்பு மாவட்டத்தில் புன்னைச்சோலை போன்ற இடங்களில் அமைந்துள்ள காளி கோயில்களில் நீலாசோதையனுக்குத் தனியிடமுண்டு. அங்கு நிரந்தரக் கட்டடமுமுண்டு. சில கோயில்களில் சடங்கு காலங்களில் தற்காலிகப் பந்தலமைத்து வழிபட்ட பின், சடங்கு முடிந்த பின் அப்பந்தலை அகற்றி விடுவர். பல ஆலயங்களில் சூலமும், சில ஆலயங்களில் உருவங்கள் அற்றும் இருக்கின்றன. நீலாசோதையனுக்கு உருவம் இல்லை. கல், சூலம் என்பவற்றால் குறி வழிபாடு நிகழ்த்தப்படுகின்றது. பெரும்பாலும் திறந்த மண்டபத்தில் மந்திரத்தால் உருவகிக்கப்படும் தெய்வமாகவே உள்ளது. விதிவிலக்காக கோட்டைமுனை ஆலயத்தில் பெரியதம்பிரானுக்கும் நீலாசோதையனுக்கும் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன என இரா. வை. கனகரெத்தினம் குறிப்பிடுகிறார். மட்டக்களப்பு - புன்னச்சோலையில் நீலாசோதையனுக்கு சிறு கோவிலுண்டு. இதில் வேல் வைக்கப்பட்டுள்ளது.

"தக்கனது யாகத்தில் அவதரித்து
அதிரமாமலையில் சோழ குலம்தனில்

பூமிதனில் வந்து வரு பெரியதம்பிரானும்
நீலா சோதையனும் ஒன்றாய்

இருபேரும் பொய்யாமலே வளர்ந்து
காளியர் குலம் தனில் மெய்யான

தெய்வமாய் மானிலத்தோர் அக்கரைப்பற்று
பதிதனில் ஆலமர நிழல் தனில்

கோயில் கொண்டமர்ந்தாய் யாகேஸ்வர
பெரிய தெய்வமே போற்றி போற்றி"

என்னும் பாடல் அக்கரைப்பற்றில் உள்ள நீலாசோதையன் பெரியதம்பிரான் கோவில் பற்றிக் குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஏழாலையில் சாடியடி, நீலாசோதையன் கோயில், பெரியதம்பிரான் கோயில் என்பன தனித்தனியேயுள்ளன. இருபாலையில் உள்ள பெரியதம்பிரான் கோயிலில் மூலக் கோயிலுக்கு எதிரில் நீலாசோதையனுக்கு ஆலமரத்தடியில் நிரந்தரக்



சாவகச்சேரி மறவன்புலவு நீலாசோதையன் பெரியதம்பிரான் ஆலயம்



மட்டக்களப்பு சித்தாண்டி - முறக்கொட்டாஞ்சேனை மஹா பெரிய தம்பிரான் ஆலயத்தில் பெரியதம்பிரானும் நீலாசோதையனும்

கட்டடமுண்டு. நீலாசோதையனுக்கு கைதடி பெரியதம்பிரான் கோயிலில் யாககுண்டத்துக்கு முன்பே ஆகமக் கோயிலில் தம்ப மண்டபம் இருக்கக்கூடிய இடத்தில் பெரிய சூலமுண்டு. அதனை நீலாசோதையன் என்கின்றனர். இது மூலாதார கணபதிக்குச் சமமான அந்தஸ்து எனப்படுகிறது. இத்தெய்வத்தை நீலாசோதைய வைரவர் எனவும் குறிப்பிடுகின்றனர்.

சடங்கு முறைகள்

பொதுவாக நீலாசோதையன் இருக்கும் பெரியதம்பிரான் ஆலயங்களில் புதன், சனிக்கிழமைகளில் விளக்கு வைக்கப்பட்டு வருகின்றன. ஆயினும் இன்று வசதிக்கேற்ப ஏனைய நாட்களிலும் விளக்கு வைக்கப்படுகின்றது. இக்கோயிலில் பழைய ஐதீகக் கதையின் நம்பிக்கையின் படி சலவைத் தொழிலாளர்களாலேயே பூசை செய்யப்படுகிறது. தைப்பொங்கல்,

சித்திரைப் பொங்கல் என்பவற்றோடு பங்குனி, புரட்டாதி மாதங்களில் வளர்ந்துப் பொங்கலும் நடைபெறுகின்றது.

> **"ஆலயத்து மணிமுற்றை தடர்ந்து வளர்த்தோங்கும்**
> **அருகு நிறை பூவரசின் ஒரு மலர் வேண்டி**
> **பாலனழும் போது தாயார் பறித்தீய பறந்த**
> **கரம் வழங்கதை பான்மை தரு செய்து**
> **சீதமொடு புரட்டாதி தோறும் அதில்**
> **செம்மையோடு குளிர்த்தியுடன்**
> **பூசனை புரியும் தேவர்களும் ஏற்ற வயல்**
> **பதிலாழும் எம்பிரான் பெரிய தம்பிரானே"**
>
> *(தகவல்: உக்ஷிரா தினேக்ஷ் சங்கர், தெல்லிப்பழை)*

பெரியதம்பிரானுக்கு வழங்கும் அதே சடங்கு, பூசை நீலாசோதையனுக்கும் நிகழ்த்தப்படுகின்றது. ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்தில் சித்திரைப் பொங்கல் சடங்கில் பூசாரி வாய் கட்டிப் பூசை செய்கின்றார். சித்திரை வருடப் பிறப்பின் பின்னான புதன்கிழமை ஆரம்பமாகி அடுத்துவரும் புதன் இரவு பெரும் பொங்கல் இடம்பெறும்.

மாதம்தோறும் மடை வைத்தல் ஆவணி மாதக் கடைசிப் புதன் நடைபெறும். பெரிய மடையுடன் முடிவுறும். பொங்கலுக்கு இரு நாட்களுக்கு முன்பு வாழைக்குலை பழுக்கப் போடுதல் சடங்கு நடைபெறும்.

சித்திரை மாத முதல் புதன்கிழமை கமுகு மரம் நடப்பட்டு கொடியேற்றமும் நடைபெறும். இவ்வாலயத்தின் ஆரம்பப் பூசை சாடியடியில் நடைபெறும். ஆலயத்தில் இருந்து 250 மீட்டர் தூர அளவில் மருத, அரச மரங்கள் சூழ சிறிய மண்டபம் உண்டு. கன்னிமார், நாச்சிமார் வழிபாடு இங்கு நடைபெறும்.

நீலாசோதையன் ஆலய முன்றிலில், நீலாசோதையன் துதி படிக்கப்பட்டு சிறு பொங்கல் நடைபெறும். முதல் நாள் மற்றவர் அறியா வண்ணம் நேர்ந்து கட்டிய இழையினை அவிழ்த்து அப்பொருட்களைப் பொங்கல் பண்டங்களாகக் கொண்டு, பொங்கிப் படைத்து அதன் ஒரு பகுதியை பூசாரியும், உதவியாட்களும், வளர்ந்துக்குரியவர்களும் உணவாக உட்கொள்வர். இது கட்டாயமானது; உரிமை சார்ந்தது. இதன் பின்பே பெரியதம்பிரானுக்கு மடைப்பண்டம் எடுத்தல் நடைபெறும். மடைப்பண்டங்கள் யாவற்றையும் நீலாசோதையன் ஆலயத்தின் முன்றலில் வைத்து பூஜை செய்து வழங்கிய பின் பெரியதம்பிரான் ஆலயத்திற்கு கொண்டு செல்வர். அங்கு உரிய சடங்குகள் நடைபெற்றபின் மடை பரவப்படும். பல்வேறு மடைகள் எல்லாத் தெய்வங்களுக்கும் வைக்கப்படும். பூசை நடைபெற்ற பின் மடையேற்றலுக்கான

ஏழாலை பெரியதம்பிரான் ஆலய நீலாசோதையன் கோயில்

பாடல் நடைபெறும். பத்ததியின் 'கெசபலி சாந்தி' படிக்கும்போது படிமத்தானாகிய பூசாரி கலையாடுவார். மடை மீது தண்ணீர் தெளிப்பார். பின்னர் பலிக்குரிய குங்குமம் கலந்த அல்லது மஞ்சள் கலந்த அரிசியை எடுத்து எட்டுத்திக்கும் கைமாறி வீசுவார். கொழுத்தப்பட்ட விளக்குத்திரிகளை அவ்வாறே கைமாறி வீசுவார். இது மட்டக்களப்பில் நிகழும் 'நோர்ப்பெறிதலுக்கு' (நோர்ப்புச் சடங்கு) சமமானதாகும். இதுவே ஆகமக் கோவில்களில் எட்டுத்திக்குப் பலியாக வளர்ந்திருக்கலாம்.

இதன்பின் கண்ணூறு கழித்தல், வழிவெட்டல், கொடியிறக்கம் முதலிய சடங்குகள் தம்பிரான் கோயிலில் நடைபெறும். கொடி இறக்கிய பின் ஞாயிறு பொங்கல் நடைபெறும். இது நீலாசோதையன் ஆலய முன்றிலில் நடைபெறும். பொங்கல் வேள்வியில் தாம் அறிந்தும் அறியாமலும் செய்த தவறுகளை மன்னித்து சகல நன்மைகளும் தருமாறு நீலாசோதையனை வேண்டுவர்.

> "காய்ந்தவர் முகத்தினில் கல்லெறியாய்
> சிரித்தார் முகத்தினில் சீதேவியாய்
> பகைத்தார் முகத்தினில் பதிகமாய்
> அவ்வடியார் கையைப் பிடித்துக் கரையேற்றிக்
> கொள்ள வேணும் நீலாசோதையனே நல்லதம்பிரானே"
>
> (பூசாரி, சின்னத்தம்பி பஞ்சலிங்கம் {சோமுஐயா})

எனப் பலவாறு வேண்டி வழிபடலுடன் பொங்கல் நிறைவுறும்.

இருபாலை கோட்டயபுரத்து பெரியதம்பிரான் ஆலயப் பூசாரி கந்தையா சின்னராசாவும் கைதடி பூந்தோட்டம்

ஏழாலை பெரியதம்பிரான் ஆலயம்

பெரியதம்பிரான் ஆலயத் தலைவர் மதிகாந்தனும் நீலாசோதையனை கிருக்ஷ்ணராகவே தாம் கருதுவதாகக் கூறுவதும், ஏழாலை பெரியதம்பிரான் ஏடு 'நீலவண்ணத்தான்' என நீலாசோதையனை வர்ணிப்பதும் சுற்றியுரைக்கத்தக்கது.

பெரியதம்பிரான் ஆலயங்களில் நீலாசோதையன் தவிர காளி, அம்மன், கன்னிமார், நாச்சிமார், காத்தவராயன், முனி, மாடன், கிங்கிலியர், நாகதம்பிரான், வீரபத்திரர், வைரவர், விநாயகர், முருக தெய்வங்களும் பரிவார மூர்த்திகளாக அமைந்துள்ளனர்.

புன்னைச்சோலை காளி கோயிலில் சடங்குகளின் முடிவில் ஆயுதங்களை நீலாசோதையனிடம் ஒப்படைத்தல் சடங்கு நடைபெறுதல் நீலாசோதையன் வீரனாக விளங்குகிறதை தெளிவுபடுத்துகின்றது. மட்டக்களப்பில் நீலாசோதையன் உள்ள ஆலயங்களில் 'நோர்ப்புச் சடங்கு' நடைபெறுகின்றது. தெய்வத்தன்மை இல்லாத தீய சக்திகளுக்காக பால், பழம், சோறு, கறி போன்றவற்றை (சில இடங்களில் மடைப்பண்டத்தில் ஒரு

பகுதியை) ஆலயத்தைச் சுற்றி எறிவர். புன்னைச்சோலை காளி கோயிலில் இச் சடங்கு இன்றும் நடைபெறுகிறது. ஏறாவூர் காளிகோயில் 'நேர்ப்புக் கட்டுதல்' நடைபெறுகிறது. அதனை உண்ணக் கொடுப்பர்; எறிவதில்லை.

முடிவுரை

நீலாசோதையன் வழிபாடு பெரியதம்பிரான் வழிபாட்டுடன் பிரிப்பின்றிக் கலந்துவிட்டது.

இது இரு சாதிகளின் கலப்புருப் பண்பாட்டின் வழியும் அமைந்திருக்கலாம். அன்றி காவியம், கோணேசர் கல்வெட்டு வழி கஜபாகு - குளக்கோட்ட மன்னன் அவனது மந்திரி - படைத்தளபதி நீலாசோதையன் பற்றிய தொன்மம் வழி எழுந்த வீர - முன்னோர் வழிபாடாகவும் இருக்கலாம். இக்கதையில் வரலாறும், நம்பிக்கையும், புனைவும் கலந்து நிற்பதை அவதானிக்க முடிகிறது. எது எவ்வாறாயினும் சலவைத் தொழிலாளர்களின் குலதெய்வ வழிபாட்டுடன் இணைந்த துணைத் தெய்வமாகவே இன்று நீலாசோதையன் அடையாளப்படுத்தப்படுகின்றார்.

பெரியதம்பிரான், நீலாசோதையன் ஆகியோரை விக்ஷ்ணுவின் அம்சங்களாக பூசாரிகள் கூறியிருப்பது முக்கியமானது. இது ஈழத்து வைணவ மரபு பற்றிய ஆய்வுக்கான கதவை அகலத் திறக்கிறது. 'நீலாசோதையன் பெரியதம்பிரான்' எனும் மறவன்புலவு ஆலயம் இரண்டும் ஒன்றான கதையின், மேலாண்மையின் கதையாடலுக்கான சாட்சியாகிறது. அவ்வாலயத்தைச் சேர்ந்த ஆனந்தரஞ்சன், 1990 களுக்கு முன் தங்களது பட்டி மாடுகளுக்கு முதுகில் 'நீ' (நீலாசோதையன்) எனும் எழுத்தும் தொடையில் பெரிய வட்டமும் (குளம்) அதனுள் சிறு நீள் சதுரமும் (சலவைக்கல்) பொறிக்கப்பட்டு இருந்ததாகக் கூறினார்.

இது சாதியம், தெய்வம், கால்நடை வளர்ப்பியல், விவசாயம் என்பன பற்றிய விடயங்களை ஆவணப்படுத்துகின்றது. அரசனும் நீலாசோதையனும் மரக்கலமற்று நின்றமை அக்கால அரசுகளின் நிலை, படை பலம், அரசு - மக்கள் தொடர்பு பற்றிய பல புதிய உரையாடல்களை ஆரம்பிக்க உதவுகின்றன.

நீலாசோதையன் இலங்கையின் வரலாறு மற்றும் சமூகவியல் சார்ந்த பல்வேறு பரிணாமங்களை உடைய உரையாடல்களுக்கான திறவுகோல் 'தெய்வமாக' அமைந்துள்ளது.

கைதடி பூந்தோட்டம் பெரியதம்பிரான் ஆலய நீலாசோதையன் சூலம்

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.

மீநிலங்கோ தெய்வேந்திரன்

ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார்.

பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

சுன்னாகம் நிலத்தடி நீர்: குடிக்கலாமா, கூடாதா?

தொடக்கக் குறிப்புகள்

போருக்குப் பிந்தைய இலங்கையின் வரலாற்றில் வடபுலத்தில் முன்னெடுக்கப்பட்ட முக்கியமான சூழலியல் போராட்டமானது சுன்னாகத்தின் நிலத்தடி நீர் பற்றியதாகும். இலங்கையின் வடபுலத்தில் நிகழ்ந்த ஏனைய போராட்டங்கள் போலன்றி எதுவித வேறுபாடுகளுமின்றி அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்த போராட்டம் என்ற வகையில் இது முக்கியமானது. அதேவேளை வடமாகாண சபை தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் இயங்கிக் கொண்டிருந்தபோது நடைபெற்ற போராட்டம் என்பதும் இங்கு கவனிப்புக்குரியது. இந்தப் போராட்டம் மூன்று விடயங்களைப் பற்றியது. முதலாவது யாழ்ப்பாணத்தின் நீர்வளம், சூழலியல் எதிர்காலம் பற்றியது. இரண்டாவது, அரசியற் பிரதிநிதிகளின் இயலாமையும் கயமையையும் பற்றியது. மூன்றாவது, ஒரு சமூகமாக இந்தப் போராட்டங்களின் வழி பெற்றுக்கொண்ட பாடங்களை நாம் கவனத்தில் எடுத்திருக்கிறோமா என்ற வினா பற்றியது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் காணப்படும் முக்கிய மண் வகை கால்சிக் சிவப்பு - மஞ்சள் லாடோசோல்கள் ஆகும். இது

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையம்

Image Source : www.bbc.com

அதிக ஊடுருவல் விகிதத்துடன் நன்றாக வடிவமைக்கப்பட்ட மற்றும் நன்கு வடிகட்டிய மண்ணாகும். யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வற்றாத ஆறுகள் இல்லாததாலும், மழைக்காலங்களில் மட்டும் நீர் ஓடும் வற்றாத மூன்று ஆறுகள் மட்டுமே இருப்பதாலும் யாழ்ப்பாண மக்கள் தங்கள் நுகர்வு, தொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு நிலத்தடி நீரைச் சார்ந்துள்ளனர். அதன் தட்டையான நிலப்பரப்பு காரணமாக இப்பகுதியில் நீர்த்தேக்கத்தை அமைப்பதும் சாத்தியமற்றது. இந்தப் பகுதி மயோசீன் சுண்ணாம்புக் கற்களாலானது. இது நிலத்தடி நீர்த்தேக்கங்களின் வளர்ச்சிக்கு ஏற்ற பொருளாகக் கருதப்படுகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான்கு முக்கிய நிலத்தடி நீர்த்தேக்கங்கள் காணப்படுகின்றன; அதாவது, சுன்னாகம் (வலிகாமம் பகுதி), வடமராட்சி, தென்மராட்சி, ஊர்காவற்றுறை.

மழைக்காலத்தில் நிலத்தடி நீர்த்தேக்கங்கள் தங்களை மீள்நிரப்பிக் கொள்கின்றன. சுன்னாகம் நீர்நிலையானது அதிக நீர்க் கொள்ளளவைக் கொண்டுள்ளது. ஏனைய மூன்று நிலத்தடி நீர்த்தேக்கங்களுடன் ஒப்பிடும் போது சுன்னாகம் நிலத்தடி நீர்த்தேக்கத்தில் காணப்படும் நீரின் தரம் சிறப்பானது. குடிப்பதற்கும் ஏனைய பாவனைகளுக்கும், அதிக கொள்ளளவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான நீரையும் சுன்னாக நிலத்தடி நீர்த்தேக்கமானது கொண்டுள்ளது. இந்த அதிக கொள்ளளவு மற்றும் நல்ல தரம் காரணமாக, இந்தப் பகுதியில் இருந்து தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது. இக்காரணங்களால் இப்பிரதேசத்தில் இருந்து பல நீர் விநியோகங்கள் ஆரம்பிக்கப்பட்டு காரைநகர், அச்சுவேலி, நவாலி, யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட நீர்ப்பற்றாக்குறைப் பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

யாழ்ப்பாண மக்கள் தமது பாவனைக்காக ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் கைப்பம்புகள் மூலம் தமது அன்றாடப் பயன்பாட்டுக்கான நீரைப் பெறுகிறார்கள். விவசாயக் கிணறுகளைப் பயன்படுத்தி தமது பயிர்ச்செய்கைகளுக்கு நீரைப் பெறுகின்றனர்.

சுதந்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் யாழ்ப்பாணத்தின் மின்சாரத் தேவையை காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் உற்பத்தியாகும் மின்சாரம் தீர்த்து வைத்தது. எனினும் சுதந்திரத்தின் பின்பு யாழ்ப்பாணத்தின் அதிகரிக்கும் மின்சாரத் தேவையைக் கருத்திற்கொண்டு 1958 இல் சுன்னாகத்தில் டீசலில் இயங்கும் மின்சக்தி உற்பத்தி நிலையம் தொடங்கப்பட்டது. 1973 இல் இலங்கையின் பிரதான மின்னிணைப்புப் பரிமாற்ற வலையமைப்புடன் யாழ்ப்பாணம் இணைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து லக்சபான நீர்மின்நிலையத்தில் இருந்து மின்சாரத்தை யாழ்ப்பாணம் பெற்றது. இனப் பிரச்சினை போராகியதன் பின்புலத்தில் மின்சாரம் தடைப்பட்டது. 1995 ஆம் ஆண்டு இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்தை முழுமையாகத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததன் பின்னர் மீண்டும் சுன்னாக மின்நிலையம் செயற்படத் தொடங்கியது. புதிய மின்சாரத் தேவைகளைக் கருத்தில் கொண்டு 2007 இல் இலங்கை மின்சார சபை நோர்த்தேன் பவர் என்கிற தனியார் மின் உற்பத்தி நிலையத்துக்கு அனுமதியளித்தது. 2008 ஏப்ரல் முதலாம் திகதி முதல் குறித்த மின்உற்பத்தி நிலையம் இயங்கி வருகிறது.

குறித்த மின்நிலையத்தின் உருவாக்கம் என்பது பல சர்ச்சைகளை உள்ளடக்கியது. குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கான மின்விநியோகம் என்பதே பாரிய முறைகேடுகள், ஊழல்கள் நிறைந்ததாக இருந்தது. குறிப்பாக 1999 - 2003 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கான மின்சாரம் அவ்வப்போது தடைப்பட்டது. இந்தச் சூழ்நிலையின் காரணமாக இப்பகுதியின் மின் தேவையை குறுகிய கால அடிப்படையில் பூர்த்தி செய்ய 2 தனியார் அனல்மின் நிலையங்களுக்கான (15MV மின்உற்பத்தி வலுவுள்ள Agirco மற்றும் 13MV மின்உற்பத்தி வலுவுள்ள Cool Air) அனுமதியை இலங்கை மின்சார சபை வழங்கியது. எவ்வாறாயினும், இந்த இரண்டு அனல்மின் நிலையங்களின் மின்சாரச் செலவு மற்றவற்றை விட ஒப்பீட்டளவில் அதிகமாக இருந்தது. இலங்கை மின்சார சபை ஏனைய தனியார் மின் உற்பத்தியாளர்களின் விலைகளுடன் ஒப்பிடும் போது மிக அதிக விலைக்கே மின்சாரத்தை வாங்கியது. எனினும் வேறு வாய்ப்புகள் இல்லாமையால் தொடர்ச்சியாக இவ்விரு நிறுவனங்களிடமே மின்சாரத்தை வாங்க வேண்டியிருந்தது. இந்தச் செயன்முறையில் பாரிய ஊழல் நடைபெற்றிருப்பதாக பல ஆதாரங்களுடன் பத்திரிகைகள் எழுதின.

இந்தப் பின்புலத்தில் 24 மே 2006 திகதியிடப்பட்ட ஒரு வர்த்தமானி அறிவிப்பின்படி அப்போதைய மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் ஜோன் செனவிரத்ன, இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக 2007 ஆம் ஆண்டளவில் முந்தைய 2 அனல்மின் நிலையங்களை அகற்ற முடிவு செய்து அதற்குப் பதிலாகவே ‘நோர்த்தேன் பவர்’ அனல் மின் நிலையத்தை முன்மொழிந்தார்.

குறித்த நிறுவனத்துக்கும் இலங்கை மின்சார சபைக்குமிடையிலான ஒப்பந்தமானது முதலில் 15MV மின்உற்பத்திற்கு அனுமதியளித்தது. பின்னர் அது 30MV ஆக அதிகரிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் பாரிய குளறுபடிகளைக்

கொண்டது. முதலாவது, பொதுவாக இவ்வாறான ஒப்பந்தங்களில் குறித்த நிறுவனமானது புதிய இயந்திரங்களையே பயன்படுத்த வேண்டும் என்று வரையறை செய்யப்படும். மின்சார சபை அதுவரை காலமும் மின்சாரத்தைக் கொள்வனவு செய்த அனைத்து அனல்மின் உற்பத்தி நிறுவனங்களுடனும் செய்து கொண்ட உடன்படிக்கையில் இவ்வாறானதொரு சரத்து இருந்தது. ஆனால் குறித்த ஒப்பந்தத்தில் அந்தச் சரத்து இருக்கவில்லை. ஏனெனில் அது வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படவில்லை. எனவே 'நோர்த்தேன் பவர்' நிறுவனம் 30 ஆண்டுகள் பழமையான இயந்திரங்களை இறக்குமதி செய்தது.

இரண்டாவது, குறித்த இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒரு கட்டுப்பாடு இருந்தது. ஏனெனில் அதை விற்பனை செய்யும் நிறுவனம் இயங்கிய நாட்டில் இவ்வாறு பழைய, சூழலுக்குத் தீங்கானவற்றை விற்பனை செய்வதற்கான சில நெறிமுறைகள் இருந்தன. அதன்படி, குறித்த இயந்திரங்கள் நிறுவப்படவுள்ள பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதியின் ஒப்புதல் கடிதம் கட்டாயமானது. அவ்வகையில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில் வெற்றியீட்டி பாராளுமன்ற உறுப்பினரான இருந்த ஒருவரின் ஒப்புதல் கடிதம் (குறித்த பகுதியில் இதை நிறுவுவதால் சூழலுக்கும் மக்களுக்கும் ஏற்படும் பாதிப்புகளை அறிந்தும் மக்களின் தேவை கருதி இந்த இயந்திரங்கள் அவசியமானவை என்று குறிப்பிட்டு) பெறப்பட்டே இவ்வியந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

மூன்றாவதாக, பழைய இயந்திரங்களுக்கு கூட புதிய இயந்திரங்களின் விலைகள் குறிப்பிடப்பட்டன. ஆனால் அவை கேள்விக்குட்படுத்தப்படாமல் அனுமதியளிக்கப்பட்டன. நான்காவதாக, மின்சார சபையானது, கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களின் பொருத்தப்பாடு குறித்தோ அவற்றின் நிலைமை குறித்தோ ஆராய்ந்து சான்றளிக்கவில்லை. எவ்வாறாயினும், மின்சார சபையின் பொது முகாமையாளர் தனிப்பட்ட முறையில் தலையிட்டு சம்பந்தப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு சான்றிதழை வழங்கினார் என்ற உண்மையையும் ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இவ்வாறு பல பிரச்சினைகளுடன் நடைமுறைக்கு வந்த நோர்த்தேன் பவர் அனல்மின் நிலையம் தொடர்ந்தும் ஊழலில் ஈடுபட்டது. இயந்திரங்களுக்கான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்யும் போர்வையில், மின்சார சபையின் நிதியில் முழு இயந்திரங்களையும் குறித்த நிறுவனம் மாற்றியுள்ளது. எவ்வாறாயினும், இவ்வளவு செலவுகள் இருந்தபோதிலும், ஒப்புக் கொள்ளப்பட்ட 30MV மின்சாரத்தை குறித்த நிறுவனத்தால் வழங்க இயலவில்லை. இந்தப் பின்புலத்தில் 2009 இல் 'Cool Air' அனல்மின் நிலையத்தை மின்சார சபையால் மூட முடிந்தாலும், 'Agirco' இனை மூட முடியவில்லை. உடன்படிக்கையின் படி, நோர்த்தேன் பவர் வழங்க ஒப்புக்கொண்ட மின்சாரத்தின் அளவை வழங்காமையானது, யாழ்ப்பாணத்தில் 2 வருடங்கள் மட்டுமே ஒப்பந்தம் செய்து கொண்ட 'Agirco' இனை 10 வருடங்கள் தொடர வழி வகுத்தது.

யாழ்ப்பாணத்திற்கான மின்சாரமானது பெருமளவில் அனல்மின் நிலையங்களின் வழியே உற்பத்தி செய்யப்பட்டது. 2009 வரையிலான போர்க் காலத்தில், சுமார் 20 இலட்சம் லிட்டர் வரையிலான மசகு எண்ணெய் சுற்றியுள்ள நிலத்திற்குள் கொட்டப்பட்டுள்ளதாக அறிக்கைகள்

தெரிவிக்கின்றன. மேலும் 1990 ஆம் ஆண்டு சுன்னாகம் அனல்மின் நிலையத்திற்கு அருகாமையில் 1500 சதுரஅடிகள் கொண்ட டீசல் தாங்கிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலாலும் பாரியளவு எண்ணெய் நிலத்தடி நீருடன் கலந்தது. ஹைட்ரோகார்பன்கள் சுற்றுச்சூழலில் வெளியிடப்படும் போது, அவை பாரிய சூழலியல் தாக்கங்களை ஏற்படுத்தும். அதன் ஒரு பகுதி தண்ணீருடன் கலந்து மண்ணில் அசுத்தங்களை உருவாக்கும். மேலும் மூலக்கூறு பரவல் மற்றும் நீர்த்தலின் ஒருங்கிணைந்த விளைவுகளால் அவை ஹைட்ரோடைனமிக் என்று அழைக்கப்படுகின்றன. நீர்த்தல் என்பது மாசுபடாத நீரை எண்ணெய்யுடன் கலக்கும் முறையாகும். நீர்த்தேக்கத்தில் ஓட்டம் இல்லாதபோது, அசுத்தமான கழிவுகள் இலகுவில் பரவுகின்றன. நிலத்தடி நீர் மாசுபடுவதானது, வேதியியல் மற்றும் உயிரியல் காரணிகளைப் பொறுத்தது. இந்தப் பின்புலத்திலேயே சுன்னாகம் நிலத்தடி நீரின் சிக்கலை நாம் நோக்க வேண்டியுள்ளது.

நிலத்தடி நீர் மாசாதல்

2008 ஆம் ஆண்டளவில் சுன்னாகம் பகுதி விவசாயிகள் தங்கள் தோட்டக் கிணறுகளில் எண்ணெய்க் கழிவுகள் கலந்திருப்பதை அவதானித்தார்கள். இதையடுத்து அதேயாண்டு சுன்னாகம் தெற்கு விசாயிகள் சம்மேளனம் தமது தோட்டக் கிணறுகளில் கழிவு எண்ணெய் கலந்திருப்பது பற்றி அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு கடிதம் மூலம் முறையிட்டிருந்தது. இது தொடர்பில் அரசாங்க அதிபரால் சுன்னாகம் மின் நிலைய முகாமையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்திற்கு எவ்வித பதில் நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

2010 ஆம் ஆண்டளவில் இவ்வகையான எண்ணெய்க் கழிவுகள், சுன்னாகம் பகுதி மக்களின் வீட்டுக் கிணறுகளிலும் தோன்றின. இதையடுத்து இது தொடர்பில் ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் யாழ். குடாநாட்டின் இறுக்கமான பாதுகாப்பு நிலவரமானது பாரிய நெருக்கடியாக இருந்தது. இருந்தபோதும் தொடர்ச்சியான மக்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதைத் தொடர்ந்து நீர் வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை இது தொடர்பிலான ஆய்வொன்றை மேற்கொண்டது.

இந்த ஆய்வானது, 2013 நவெம்பர் மாதத்திற்கும் 2014 ஆகஸ்ட் மாதத்திற்கு இடையில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி சுன்னாகம் மின்நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் எண்ணெய் மற்றும் கிரீஸ் செறிவு இருந்ததாகச் சொல்லப்பட்ட 150 இடங்களில் பகுப்பாய்வு செய்யப்பட்டது. பரிசோதனைக்கு உள்ளான 150 கிணறுகளில் 116 இல் எண்ணெய் மற்றும் கிரீஸ் மாசுகள் இருந்தன. மின் நிலையத்திலிருந்து 200 மீற்றர் சுற்றுவட்டாரத்திற்குள் இருந்த 81% கிணறுகளிலும் 200 தொடக்கம் 500 மீற்றர் தொலைவுக்குள் இருந்த கிணறுகளில் 74% கிணறுகளிலும் 500 மீற்றருக்கு அதிகமான தொலைவில் உள்ளவற்றில் 51% கிணறுகளிலும் எண்ணெய் மற்றும் கிரீஸ் மாசுகள் இருந்ததை இவ்வாய்வு உறுதி செய்தது. இலங்கையில் அனுமதிக்கப்பட்ட தர நிர்ணய அளவுகளை விட 32 மடங்கு அதிகமான மாசுக்களை சில கிணறுகள் கொண்டிருந்தன. இக்கிணறுகளில் ஒன்று மின் நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள சுகாதார அமைச்சின் அலுவலகத்தில் அமைந்திருந்தது. கிணறுகளின்

கழிவு எண்ணெய் காணப்படும் கிணறு

Image Source : www.virakesari.lk

மேற்பரப்பில் மெல்லிய எண்ணெய்ப் படலத்தைக் கொண்டிருந்த பெரும்பாலான கிணறுகள் மின் நிலையத்திற்கு அருகாமையில் இருந்தவையாகும். இது மின்நிலையத்துக்கும் குறித்த கழிவுகளுக்கும் தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்தியது.

இந்த ஆய்வைத் தொடர்ந்து தெல்லிப்பளை, உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் போன்ற பிரதேச செயலக பிரிவுகளில் நீரில் கழிவெண்ணெய் கலந்திருப்பது உறுதிசெய்யப்பட்டு, அந் நீர் உடல் நலத்துக்குத் தீங்கானது எனத் தடை செய்யப்பட்டது. அன்றிலிருந்து இப்பகுதி மக்கள் காலங்காலமாகத் தமது தாகத்துக்கு அமிர்தமாக எண்ணிப் பருகிய அவர்களது கிணற்று நீரை நஞ்சாக ஒதுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன், அன்றிலிருந்து தற்காலிக நீர்த் தொட்டிகளிலும், போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரிலும் தங்கி நிற்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர்.

2015 பெப்ரவரியில் சுகாதார அமைச்சு உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய 4 சுகாதார வைத்திய அதிகார பணிமனைப் பிரிவுகளுக்கு உட்பட்ட 30 கிணறுகளின் நீர் மாதிரிகளை ஆய்வு செய்ததில், 30 இலும் கழிவு எண்ணெய் அதிகளவில்

கலந்திருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இப்போராட்டங்கள் நடைபெற்ற காலப்பகுதியில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டு புதிய மாகாண சபை 2013 இல் ஆட்சிக்கு வந்திருந்தது. தொடக்கத்தில், வடமாகாண சபை, குறித்த பிரச்சினையை பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் தொடர்ச்சியான மக்கள் போராட்டங்களின் விளைவாக 2015 ஜனவரியில் இவ்விடயத்தை ஆராய்வதற்கு ஒரு நிபுணர் குழுவை நியமித்தது.

வட மாகாண சபை அமைத்த நிபுணர் குழுவின் அறிக்கை, நிலத்தடி நீரில் கழிவெண்ணெய்க் கலப்பு இல்லை என கூறியது. மேலும், நிபுணர் குழுவின் அறிக்கை, மலத்தொற்றும், உரப் பாவனை அதிகரிப்பால் நைற்றேற்றும் நீரில் கலந்துள்ளது எனக் கூறியது. ஆனால் அவற்றின் அடர்த்தியும் ஆபத்துகளும் பற்றிய தகவல்கள் எதுவும் தரப்படவில்லை. ஊடகங்களில் வெளிவந்த தகவல்களில், நிபுணர் குழுவின் அறிக்கையானது சுன்னாகம் நிலத்தடி நீரின் தன்மை பற்றிப் பேசுவதைக் குறைத்து முழுக் குடாநாட்டு நிலத்தடி நீரையும் பற்றியே பேசியது என்பது தெளிவானது. ஆய்வின் முழு விபரங்களும் பகிரங்கமாக வெளிப்படுத்தப்படாத அவ்வறிக்கையின் பின்னரும் மாகாண சபையோ, மத்திய அரசோ வழமைபோல மக்கள் அச்சமின்றித் தத்தமது கிணற்று நீரைப் பருகலாம் என உறுதி வழங்கவில்லை.

மக்கள் போராட்டங்கள்

சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பிரச்சினையானது கவனம் பெறுவதற்கான காரணம் மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களே. குறிப்பாக 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நாட்டில் நிலவிய கடுமையான பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் மக்கள் தமது நீருரிமைக்காகத் தொடர்ச்சியாகப் போராடி வந்திருக்கிறார்கள். இதில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பங்களிப்பு மிகப் பெரியது. பாதிக்கப்பட்ட இரண்டரை லட்சத்துக்கு மேற்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு குடிநீரும் உணவுத் தேவைகளுக்கான தரமான நீரும் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு மக்களுடன் இணைந்து போராடியது.

வடமாகாண சபை நியமித்த நிபுணர் குழு அறிக்கையின்படி, நிலத்தடி நீரில் கரைந்துள்ள நச்சுப் பார உலோகங்களில் மிகவும் ஆபத்தானதான ஈயம், நிக்கல் ஆகியன கண்ணுக்குத் தெரியாததுடன், உடல் ஆரோக்கியத்துக்குப் பெரும் தீங்கு விளைவிப்பனவுமாகும். அவை சிறுநீரகத்தைச் செயலிழக்கச் செய்தல், மலட்டுத்தன்மை, புற்றுநோய் ஆகிய பாரதூரமான நோய்களை ஏற்படுத்தும் என வைத்தியர்கள் அக் காலப்பகுதிகளில் சுட்டிக்காட்டினர். ஆனால் இது குறித்து மாகாண சபையோ, அரசாங்கமோ கவனஞ் செலுத்தவில்லை. 2015 இன் நடுப்பகுதியில் முன்னர் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த நீர் விநியோகத்தைத் தற்போது பல இடங்களிலும் நிறுத்தியுள்ளமையால், பொதுமக்கள் மிகவும் அசௌகரியப்படுவதுடன் குடிநீருக்காகப் போத்தல்களுடன் அலையும் நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகினர். இந்நிலை மாசடைந்த நீரைப் பயன்படுத்துமாறு மக்களை நிர்ப்பந்தித்தது. இதனால் மக்கள் மாசடைந்த நீரை அருந்தியதுடன்,

மக்கள் போராட்டம்

Image Source : www.tamilguardian.com

குளிக்கவும் விவசாயத் தேவைகளுக்காகவும் பயன்படுத்தினர்.

இவற்றைக் கவனத்தில் கொண்ட சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு மாபெரும் துண்டுப் பிரசுர இயக்கத்தை யாழ். குடாநாடு எங்கும் நடாத்தியது. முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளாக பின்வருவன குறிப்பிடப்பட்டன:

1. பாதிக்கப்பட்ட நான்கு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பிரதேசம் முழுவதற்கும் நன்னீர் விநியோகத்தை எத் தாமதமுமின்றித் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டும்.
2. நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகார சபை இவ் அனர்த்தம் தொடர்பாக அதிகூடிய கவனமெடுப்பதுடன், பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள அனைத்துக் கிணறுகளின் நீரையும் ஆய்வுக்குட்படுத்தி, அக் கிணறுகளின் உரிமையாளர்களுக்கு அவை பற்றித் தனித்தனி அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.
3. பாதிக்கப்பட்ட பிரதேச மக்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அத்துடன் உடலியல் பாதிப்புக்கான மருத்துவ நிவாரணத்தை உடனடியாக வழங்கவேண்டும்.

4. இப் பாதிப்பிலிருந்து மண்ணையும், மக்களையும் காப்பதற்கான நிரந்தர செயற்திட்டம் உருவாக்கப்பட்டு, விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். நிலத்தடி நீரில் கலந்துள்ள கழிவெண்ணெய்யையும் பார உலோகங்களையும் முற்றாக அகற்றுவதற்கான செயற்திட்டமாக அது அமைய வேண்டும். ஆபத்தான நச்சுப் பதார்த்தங்கள் கொண்ட எண்ணெய்க் கழிவுகள் புதைந்துள்ள இடங்களை அடையாளங் கண்டு அவற்றைப் பாதுகாப்பாக அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கிணற்று நீரை வடிகட்ட, தூண்டப்பட்ட காபன் நீர் வடிகட்டிகளை இலவசமாக வழங்க வேண்டும்.

6. இப் பிரதேசத்தில் நீரியல் ஆய்வு மையம் ஒன்றினை நிறுவ வேண்டும். தொடர்ச்சியான ஆய்வுகளைச் சரியான முறையில் விரைவாக முன்னெடுக்க வேண்டும்.

7. இவ் இயற்கைப் பேரனர்த்தத்திற்குச் சரியான தீர்வு கிடைக்கும் வரையும், குற்றவாளிகளையும் அவர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்டவர்களையும் இனங்கண்டு தண்டிக்கும் வரையும், ஏற்பட்ட பாதிப்புகளுக்கான சரியான நட்ட ஈட்டைப் பெறும்வரையும் மக்கள் அனைவரும் அணிதிரண்டு போராடவேண்டும்.

இந்தப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கலந்து கொண்ட சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம், அங்கு விநியோகித்த துண்டுப் பிரசுரம் சில முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்தது. அவை சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பிரச்சினைக்குரியதாக மட்டுமன்றி பரந்தளவில் யாழ். குடாநாட்டினதும் இலங்கை முழுவதினதும் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியது. அதன் கோரிக்கைகளாவன:

1. யாழ். குடாநாட்டில் பாதிக்கப்பட்ட கிணறுகளின் எண்ணிக்கை, பாதிப்பின் அளவு, பாதிப்பின் தன்மை போன்றவை தொடர்பான தகவல்களைப் பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படுத்த வேண்டும். இது தொடர்பாக இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகளின் முடிவுகளை, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் உடனடியாகப் பொதுமக்களின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும்.

2. பாதிப்பின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

3. நீர் மாசடைவுக்குக் காரணமானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி, தாமதிக்காமல் மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும். 'Northern Powers' நிறுவனத்தின் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும்.

4. நீர்த்தாங்கிகளில் குடிநீர் விநியோகிப்பது சரியான உடனடித் தீர்வல்ல. மாறாக, கிணற்றை நம்பி வாழும் மக்கள் அன்றாடத் தேவைகளுக்கும் விவசாயத்துக்கும் அதே கிணற்று நீரைப் பயன்படுத்தும் வண்ணம், சுத்திகரிப்புக் கருவிகளை அரசு மக்களுக்கு வழங்க வேண்டும். கருவிகளை இயக்குவதற்கான எரிபொருளையும் மின்சாரத்தையும்

மானியமாக வழங்க வேண்டும். இவற்றுக்கான செலவினை, நீரை மாசுபடுத்தியவர்களிடம் இருந்து அறவிடவேண்டும்.

5. நீர் மாசினால் ஏற்படக்கூடிய தீங்குகள் தொடர்பில் மக்களுக்குப் போதிய தகவல்களை வழங்கி அறிவூட்ட வேண்டும்.

6. உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்களின் உதவியினை உடனடியாகப் பெற்று மாசடைந்த நீரை நீண்டகாலப் பயன்பாட்டுக்குத் தூய்மைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை உடனடியாகத் தொடங்க வேண்டும்.

7. பிராந்தியப் பல்கலைக்கழகங்கள், இம்மாசடைவு பற்றிய ஆய்வுகளைச் செய்ய வேண்டும்.

8. துறைசார் நிபுணர்கள் நீர்மாசடைவு தொடர்பான ஆய்வுகளுக்கும் தீர்வுகளுக்கும் உங்களாலான பங்களிப்புகளைச் செய்ய உடனடியாக முன்வர வேண்டும்.

9. ஐக்கிய நாடுகள் சபை, நீரை அடிப்படை மனித உரிமையாக அங்கீகரிக்க வேண்டும்.

சுன்னாகம் நிலத்தடி நீர்ப் பிரச்சினையில் அரசியல்வாதிகளின் அசமந்தப் போக்கை எதிர்த்து தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்கள் நடந்தன. குறிப்பாக வடமாகாண சபை உறுப்பினர்கள் போகுமிடமெல்லாம் மக்கள் ஒரே கேள்வியை மீண்டு மீண்டும் கேட்டார்கள்: “இந்தத் தண்ணீரைக் குடிக்கலாமா?”. இந்தக் கேள்வி அதிகாரத்தை உலுக்கியது. இக் கேள்விக்குப் பதிலளிக்க மாகாண சபை உறுப்பினர்களோ யாழ்ப்பாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களோ தயாராக இல்லை. ஏராளமான மழுப்பல் பதில்கள் சொல்லப்பட்டன. ஆனால் இத் தண்ணீரைக் குடிக்கலாம் என்றோ குடிக்கக் கூடாது என்றோ யாரும் சொல்லவில்லை. நீர்வழங்கல் வடிகாலமைப்பு மற்றும் நகர் நிர்மாண அமைச்சர் ரவூப் ஹக்கீம் “இப்பகுதியில் உள்ள தண்ணீர் குடிப்பதற்கு உகந்ததல்ல. இப்பகுதி மக்கள் இத் தண்ணீரைப் பயன்படுத்த முடியாது” என்று தெரிவித்ததும் இங்கு நோக்கற்குரியது.

நீதிமன்றம் தந்த நீதி

‘சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை ஆய்வு மையத்தின் தலைவர் டாக்டர் ரவீந்திர குணவர்தன காரியவசம், உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். சுன்னாகம் அனல்மின் நிலையம் வெளியிடும் பெட்ரோலியக் கழிவுகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பயன்படுத்தும் நீரேந்துக் கிணறு உட்பட, சுன்னாகம் பிரதேசத்திலுள்ள நிலத்தடி நீர், கிணறுகள் மற்றும் ஏனைய நீர் ஆதாரங்களில் எண்ணெய் மாசுபாட்டிற்கு காரணமாகி ‘பாரிய சுற்றுச்சூழல் மாசுபாட்டை’ ஏற்படுத்தியுள்ளது என்று கூறி, ஒரு அடிப்படை உரிமை மனுவை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த வழக்குத் தொடர்பாக உயர் நீதிமன்றம் மூன்று முக்கிய கேள்விகளை தீர்க்க வேண்டியிருந்தது. (அ) சுன்னாகம் அனல்மின் நிலையத்தில் இருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் மற்றும் பெட்ரோலியக் கழிவுப் பொருட்கள் அப்பகுதியின் நிலத்தடி நீரையும் மண்ணையும் மாசுபடுத்தியதா? (ஆ) சட்டபூர்வ அதிகாரிகள் தங்கள் சட்டபூர்வமான பொறுப்புகளைச் செய்யத் தவறிவிட்டார்களா? (இ) பிரதிவாதிகள்,

மக்கள் போராட்டம்

Image Source : www.tamilguardian.com

சுன்னாகம் பகுதியில் வசிப்பவர்கள் மற்றும் மனுதாரரின் அடிப்படை உரிமைகளை மீறினார்களா?

1 ஆவது கேள்வி ஓரளவு அறிவியல் பூர்வமாக இருந்ததால், மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்கள் சமர்ப்பித்த அறிவியல் அறிக்கைகள் மீது உயர் நீதிமன்றம் கவனம் செலுத்தியது. 2 ஆவது மற்றும் 3 ஆவது கேள்விகளுக்கான பதில்களைத் தேடும் போது, உயர் நீதிமன்றம் சட்டங்கள் - தீர்ப்புகள் - ஒழுங்குமுறைகள் மற்றும் நிபுணர் அமைப்புகளின் அறிக்கைகளை ஆய்வு செய்ய வேண்டியிருந்தது. இலங்கையின் அடிப்படை உரிமைகள் அதிகார வரம்பில் ‘பொது நம்பிக்கைக் கோட்பாடு’ முக்கிய பங்கு வகிக்கிறது.

நீதிமன்றம், சுன்னாகம் பிரதேசத்தில் நிலத்தடி நீர் மற்றும் மண் மாசுபடுவதால் சுன்னாகம் பிரதேச வாசிகளுக்கு ஏற்படும் கணிசமான இழப்பு, பாதிப்பு மற்றும் சேதத்தின் ஒரு பகுதியையாவது ஈடுசெய்ய 20 மில்லியன் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இது இலங்கையில் ஒரு முன்னோடியான தீர்ப்பானது.

10. இலங்கையின் அரசியலமைப்பின்படி, நிறைவேற்று மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் மட்டுமே உயர் நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் அதிகார வரம்பிற்கு உட்பட்டது. சுன்னாகம் மின் நிலைய வழக்கில், உயர் நீதிமன்றம் அதிகாரத்திற்கு

எதிரான இழப்பீட்டு உத்தரவை நியாயப்படுத்துவதில் ‘மாசுபடுத்துபவர் செலுத்தும் கோட்பாட்டை’ கோடுகாட்டியது. சுன்னாகம் நிலத்தடி நீர் விவகாரம் குறித்து உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் மூலம், இலங்கையின் சுற்றுச்சூழல் உரிமைகள் மீதான குறுகிய பாதையை நீதித்துறையால் விரிவாக்க முடிந்தது.

நிறைவுக் குறிப்புகள்

சுன்னாகம் நிலத்தடி நீர் மாசடைதலானது யாழ்ப்பாணத்திற்கு மட்டுமன்றி முழு இலங்கைக்குமான சில அடிப்படையான சூழலியல் கேள்விகளை எழுப்புகிறது. நிலத்தடி நீர் என்பது அனைவருக்கும் இன்றியமையாத ஒன்று. நன்னீரைப் பற்றிச் சிந்திக்கும்போது, ஓடும் நீரோடைகள் மற்றும் தெள்ளத் தெளிவான ஏரிகள் போன்ற படங்கள் நினைவுக்கு வருகின்றன. ஆனால் உண்மையில், உலகில் உள்ள அனைத்து நன்னீரும் நிலத்தடி நீராகும். நிலத்தடி நீரே நமது நதிகளை ஓட வைக்க உதவுகிறது. நமது வாழ்வியலுக்கு அத்தியாவசியமான நீரின் இருப்பிடம் நிலத்தடி நீரே. எனவே அதைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

வேகமாக அதிகரித்து வரும் மக்கள்தொகை மற்றும் உணவுத் தேவைகளால் உலகளாவிய உணவுப் பாதுகாப்புச் சவால்கள் அதிகரித்து வருகின்றன. இச் சிக்கலைத் தீர்ப்பதற்கு பாதுகாப்பான மற்றும் உயர்தர விவசாயம் மிக முக்கியமான தீர்வுகளில் ஒன்றாகும். பாதுகாப்பான விவசாயத்தில், பாதுகாப்பான நீர் ஆதாரமே பயிரின் தரத்தையும் உணவுப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும். நிலத்தடி நீர் விவசாயத்திற்கு மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்படும் நீர் ஆதாரமாகும்.

மக்கள் போராட்டம்
Image Source : www.tamilguardian.com

காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளை நாம் எதிர்நோக்கியிருக்கையில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பது இன்றியமையாதது. ஆனால் சுன்னாகம் நிலத்தடி நீர் அனுபவம் சமூக நலன்களை விட அரசியல் நலன்களும், இலாபமும், ஊழலும் முக்கியத்துவம் பெறுவதைக் காட்டி நிற்கிறது. குடிதண்ணீரை உத்தரவாதப்படுத்தாத அரசியல் அவலம் கேவலமானது. சுத்தமான நீரும் காற்றும் எமது அடிப்படை உரிமைகள். அதையே மறுப்பவர்கள் எமக்கு அரசியல் உரிமைகளைப் பெற்றுத்தருவார்கள் என்று இனியும் தமிழ்ச் சமூகம் நம்புமாயின் அதைவிட அவலம் ஏதுமில்லை.

‘இலங்கையில் தமிழ் பௌத்தம்’ என்னும் இப் புதிய தொடரில் ஏறக்குறைய 12 வரையான ஆய்வுக் கட்டுரைகளை பிரசுரிக்கவுள்ளோம். இக்கட்டுரைகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆய்விதழ்களில் பிரசுரிக்கப்பட்டவை. ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம், சுருக்க அறிமுகமும் விமர்சனமும் என்ற மூவகையில் அமைவனவாக இருக்கும். சி. பத்மநாதன், ஆ. வேலுப்பிள்ளை, பீட்டர் ஷல்க், சிவா. தியாகராஜா, பரமு. புஷ்பரட்ணம், அகிலன் பாக்கியநாதன் ஆகியவர்களின் கட்டுரைகள் இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலையை விளக்குவனவாக அமையவுள்ளன. இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலை, இலங்கையின் கடந்த கால வரலாறு முழுவதும் மேலாதிக்கம் பெற்றுள்ள சிங்கள பௌத்த இனக் குழுமத்தின் முழுமையான உரிமையும் உடைமையும் என்ற நோக்கிலான கருத்தியலுக்கு மாறுபட்டது என்று சுருக்கமாகக் கூறலாம். சுனில் ஆரியரட்ண, ஜி.வி.பி. சோமரத்தின, எலிசபெத் ஹரிஸ் ஆகிய மூன்று ஆய்வாளர்களின் கட்டுரைகளும் இத்தொடரில் இடம்பெறவுள்ளன. இம் மூவரது கட்டுரைகளும் சிங்கள பௌத்த நோக்கு நிலை தமிழர் நோக்கு நிலை என்ற இரண்டையும் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள உதவுவன.

ஹெள மக்களும் தமிழ் மக்களும் (பொ.ஆ 300 –900)

பகுதி 1

கா.இந்திரபாலா

பேராசிரியர் கார்த்திகேசு இந்திரபாலா இலங்கையின் வரலாற்றாய்வாளர், மொழியியலாளர் மற்றும் நெடுங்கால தொல்லியல் அனுபவம் உடையவரும் ஆவார். இவர் இலங்கைத் தமிழரின் வரலாறு தொடர்பான வரலாற்று நூல்களை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவியரும் ஆவார். யாழ்ப்பாணக் கல்லூரியில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் தமிழ் மட்டுமன்றி ஆங்கிலம், யேர்மன், சிங்களம், பாளி, சமசுகிருதம், யப்பானியம் என பன்மொழி கற்றறிந்தவராவார். ஆதி இலங்கையில் இந்துமதம், இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை, யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், The Evolution of an Ethnic Identity, இலங்கையில் தமிழர் ஆகியன இவரின் குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

ஆதி வரலாற்றுக் காலத்துக்குப் பின் அடுத்து வந்த நூற்றாண்டுகளில் தொடர்ந்து இரு பிரதான இனக் குழுக்களின் ஆக்கம் நடைபெற்றது. பொ.ஆ. 300க்கும், 900க்கும் இடையில் மிகவும் தெளிவாகத் தனித்துவப் பண்புகளுடன் இவை பரிணாம வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருந்தன எனலாம். முதல் தடவையாக இக் காலத்துக் கல்வெட்டுகளில் சிங்கள மொழியின் பழைய வடிவமாகிய ஹெள (எளு) மொழியில் சிங்கள இனக் குழுவுக்கு ஹெள என்ற பெயரும் தமிழ் இனக் குழுவுக்கு தெமெள என்ற பெயரும் காணப்படுகின்றன. அதே போல தமிழ் நாட்டுக் கல்வெட்டுச் சான்று மூலம் சிங்களர் என்ற பெயர் தமிழில் வழங்கியதையும் அறியலாம். இதே காலத்தில் இலங்கையில் எழுத்து மொழியாக இருந்த பிராகிருதம் மாற்றமடைந்து பழைய சிங்கள மொழி (ஹெள) தோன்றியிருந்தது. இம் மொழியும் தமிழ் மொழியும் இக்காலப் பகுதியில் இலங்கையில் கல்வெட்டுக்களிலே பயன்படுத்தப்பட்டன. இவ்வாறாக, மொழிப் பரிணாம வளர்ச்சியும் இனக் குழுப் பரிணாம வளர்ச்சியும் மேலும் முன்னேற்றம் அடைந்தன.

சிங்கள மொழியின் பரிணாம வளர்ச்சியை ஆய்வு செய்யத் தொடர்ச்சியாக ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஆனால், இதேபோன்று, சிங்கள இனக்குழு மற்றும் தமிழ் இனக் குழு ஆகியவற்றின்

வளர்ச்சியைப் படிப்படியாகக் காட்டக் கூடிய வகையில் சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை எனலாம். சிறப்பாக, அநுராதபுர அரசுக்கு வெளியே அதிகம் கல்வெட்டுச் சான்றோ இலக்கியச் சான்றோ வரலாற்றை ஆய்வு செய்யக் கிடைக்கவில்லை.

தமிழர் இன்று பெரும்பாலும் வாழும் இடங்களாகிய வடக்கு இலங்கையிலும் கிழக்கு இலங்கையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அறியப் போதிய சான்றுகள் இல்லை. அப்பிரதேசங்களைப் பொறுத்தமட்டில் இக்காலப்பகுதி ஒரு

ஆதி வரலாற்றுக் காலத்தில் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்த பல்வேறு இனக் குழுக்கள் மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் தெற்கு இலங்கையில் சிங்கள இனக் குழுவினுள் கலந்து போக, வடக்கில் கூடுதலாகத் தமிழ் இனக் குழுவினுள் கலந்து போகும் போக்குக் காணப்பட்டிருக்கும். வடக்கில் தமிழ்மொழியின் செல்வாக்கு மக்கள் மத்தியில் மேலோங்கியிருக்கும். ஆனாலும் தொடக்கத்தில் சமயத்தைப் பொறுத்த மட்டில் பௌத்தம் மேலோங்கியிருந்தது எனலாம்.

நீண்ட வரலாற்று இரவு எனலாம். ஆனாலும் இந்த இருள் சூழ்ந்த காலம்தான் இலங்கைத் தமிழர் ஆக்கம் பெற்ற வரலாற்றில் மிகவும் முக்கியமான காலம். ஏனெனில், இக்காலம் தொடங்கும் கட்டத்தில் இலங்கையில் வாழ்ந்த தமிழ் இனக் குழுவைப் பற்றித் தெளிவாக எதுவும் அறிய முடியாத நிலை காணப்பட்டது. இக் காலம் முடிவுறும் கட்டத்தில் இலங்கையின் தமிழ் இனக்குழு ஆக்கம் பெற்று வெளிப்படும் நிலை காணப்படுகின்றது.

ஆதி வரலாற்றுக் காலத்தில் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்த பல்வேறு இனக் குழுக்கள் மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் தெற்கு இலங்கையில் சிங்கள இனக் குழுவினுள் கலந்து போக, வடக்கில் கூடுதலாகத் தமிழ் இனக் குழுவினுள் கலந்து போகும் போக்குக் காணப்பட்டிருக்கும். வடக்கில் தமிழ்மொழியின் செல்வாக்கு மக்கள் மத்தியில் மேலோங்கியிருக்கும். ஆனாலும் தொடக்கத்தில் சமயத்தைப் பொறுத்த மட்டில் பௌத்தம் மேலோங்கியிருந்தது எனலாம். இந்நிலை ஏழாம் எட்டாம் நூற்றாண்டுகளில் மாறத் தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டளவில் சைவத்தின் செல்வாக்கு மேலோங்கி வளரத் தொடங்கியிருக்கும். இத்தகைய போக்குகள் இலங்கையில் உருவாகிய தமிழ் இனக் குழுவுக்குத் தமிழ் மொழியும் சைவ மதமும் முக்கியப் பண்புகளாக இருக்கச் செய்தன. இதேபோல, தெற்கில் உருவாகிய சிங்கள இனக் குழுவுக்குச் சிங்கள மொழியும் பௌத்த மதமும் முக்கிய பண்புகளாயின. இலங்கையின் இருபெரும் இனக் குழுக்களின் ஆக்கத்தில் மொழியும் மதமும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

பல்லினக் கலப்பு

இந்த அத்தியாயத்தில் எடுத்துக் கொள்ளப்படும் காலப் பகுதியில் இலங்கையில் ஒரு தமிழ் இனக் குழுவின் பரிணாமம் பல குழுக்களின் சேர்க்கையால் நடைபெற்றது எனலாம். இப்படி ஒன்றிணைந்த குழுக்களுள் முக்கியமான ஒரு குழு நாகர் என்ற பெயரைக் கொண்டிருந்தோராவர். இவர்கள் ஒரு மர்மமான இனக் குழுவினர். இன்னொரு குழு ஆந்திரப் பிரதேசத்திலிருந்து வந்த தெலுங்குக் குழுவினர் என்று கருத இடமுண்டு. இவர்களைப் போன்று கேரளத்திலிருந்தும்

கேரளர் (மலையாளத்தவர்) வந்திருக்கலாம் என்று கொள்வதற்கும் இடமுண்டு. குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களுடைய தேசவழமைச் சட்டத்தில் கேரளத்து மருமக்கள் தாயச் சட்டத்தின் பண்புகள் இருப்பதாலும் வேறு வழக்க முறைகள் கேரளத்து முறைகளை ஒத்திருப்பதாலும் இவ்வாறு கருத இடமுண்டு. வடக்கில் மிகவும் முக்கியமான இனக் குழுவாகத் தமிழ் பேசும் குழு ஆதிக்கம் பெற்றிருந்தது என்பதையும் ஊகிக்கலாம். அவ்வாறு இக்குழு ஆதிக்கத்துடன் இருந்தமையாலேதான் ஒன்பதாம் நூற்றாண்டளவில் ஓரளவு தெளிவான சான்றுகள் கிடைக்கத் தொடங்க, தமிழ் இனக் குழு அங்கு ஏனைய குழுக்களை உள்ளடக்கி எழுச்சி பெறுவதைக் காண முடிகின்றது. இவ்வாறு உள்ளடக்கப்பட்ட பிற இனக் குழுக்களுள் ஹெள (சிங்கள) இனக் குழுவைச் சேர்ந்தோரும் இருந்திருப்பர்.

இக் காலப்பகுதியில் வடக்கு இலங்கையில் தமிழ் இனக்குழு வலுப்பெறுவதற்குப் பல காரணிகள் உதவின. அநுராதபுரத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் பல இனக் குழுக்களை ஒரு பண்பாட்டுக்குள் இணைக்கும் போக்கு நடைபெற்றாலும், அப் போக்கு வடக்கிலும் பரவுவதற்கு இக் காரணிகள் தடையாய் இருந்தன. அவ்வாறு செயற்பட்ட காரணிகளை மூன்று பிரிவுகளில் அடக்கலாம்: அரசியல் காரணிகள், பொருளியல் காரணிகள் மற்றும் சமயக் காரணிகள்.

அரசியல் காரணிகளுள் ஒன்று தமிழ்நாட்டிலிருந்து குறிப்பாகவும், தென்னிந்தியாவிலிருந்து பொதுவாகவும் படை திரட்டிப் போராளிகளை இலங்கையைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு இக்காலப் பகுதி முழுவதிலும் இலங்கைக்கு கொண்டு சென்றமையாகும். இன்னொன்று இலங்கையின் அரசுகளில் ஆட்சி நடத்தியோர் தமிழ்நாட்டிலிருந்து பாதுகாப்புத் தேவைகளுக்காகப் படையினரை வேலைக்கு அமர்த்தியிருந்தமையாகும். இது தொடர்பாக, அநுராதபுரத்து மன்னர்கள் தமிழ் மெய்க்காப்பாளர்களை வேலைக்கு அமர்த்தியமை குறிப்பிடத்தக்கது.

பொருளியல் காரணியாகக் குறிப்பிடத்தக்கது தென்னிந்திய வணிக கணங்களின் நடவடிக்கைகளாகும். பல்லவப் பேரரசின் எழுச்சியின் விளைவாகக் கடல் வணிகம் பெரிதும் வளர்ச்சி பெற்று இலங்கை மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்குப் பரவியபோது தென்னிந்திய வணிகர் இலங்கையின் துறைமுகப் பட்டினங்களிலும் உள்ளூர் வர்த்தக மையங்களிலும் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். வணிக கணங்களுடன் பல்வேறு தொழில் புரிவோரும் கூடவே சென்றனர். தமிழ் நாட்டாரையும் பிற தென்னிந்தியரையும் இலங்கைக்குச் செல்வதற்குத் தூண்டிய இன்னொரு பொருளியல் காரணி நீர்ப்பாசன வசதிகள் தொடர்பாக ஏற்பட்ட வளர்ச்சியாகும்.

சமயக் காரணியாகத் தமிழ்நாட்டில் நடைபெற்ற பக்தி இயக்கத்தின் விளைவாகப் பௌத்தர்கள் இலங்கைக்குப் புலம் பெயரத் தூண்டிய காரணியைக் குறிப்பிடலாம். பல நூற்றாண்டுகளாக இலங்கைப் பௌத்த சங்கத்தார் தமிழ் நாட்டு விகாரைகளுக்குச் செல்வதும், தமிழ்நாட்டுப் பௌத்த சங்கத்தார் இலங்கையிலிருந்த விகாரைகளுக்குச் செல்வதும் வழக்கமாக இருந்தது. ஆனால் ஐந்தாம் நூற்றாண்டின் பின் பௌத்தம் தமிழ்நாட்டில் வீழ்ச்சியடையத் தொடங்க

பௌத்த சங்கத்தார் மட்டுமன்றி பௌத்த பொதுமக்களும் இலங்கையில் அடைக்கலம் பெற்றிருப்பர்.

நாகர்

பொ.ஆ. 300 அளவில், இன்றைய யாழ்ப்பாண மாவட்டம் அமைந்துள்ள வடபாகம், குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பம், தொடர்ந்து நாகதீப என்ற பெயரைப் பாளி நூல்களில் பெற்றிருந்தது. இங்கு கிடைக்கும் பழைய பொன்னேடு ஒன்றில் இப்பெயர் நகதிவ என்ற பிராகிருத வடிவத்தில் உள்ளது. இதே காலமளவில் தமிழ் இலக்கியத்தில் நாகநாடு என்ற ஓர் இடம் தமிழ்நாட்டுக்கு அப்பால் கடல் கடந்து சென்றதும் அடையக் கூடிய இடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நாக நாட்டில் நாகபுரம் என்ற நகரத்தில் ஆட்சி நடத்தியோர் சமஸ்கிருதப் பெயர்களுடன் குறிப்பிடப்பட்டுள்ளனர். பாளி இலக்கியத்தில் நாகதீப என்ற இடத்தை ஆண்ட மன்னன் முன்னர் குறிப்பிடப்பட்டது போல் தீபராஜ என்ற விருதைப் பெற்றிருப்பதைக் காணலாம். இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கிரேக்க, உரோம நூல்களில் நாகடீப என்ற ஓர் இடம் இலங்கையின் முக்கிய கரையோரப் பட்டினங்களுள் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கிரேக்க - உரோமர் வரைந்த தேசப் படத்தில் இவ்விடம் இலங்கையின் வடக்கில் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு பாளி, பிராகிருதம், தமிழ் மற்றும் கிரேக்க மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் நாகதீவு அல்லது நாகநாடு என்று பொருள்படும் இடம் இலங்கையின் வடக்கெல்லையில் இருந்த இடம் என்பதை அறியலாம்.

பழைய பௌத்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு பாளி வரலாற்று நூல்களும் தமிழ் இலக்கியமும் நாகதீவில் நாகர் என்போர் வாழ்ந்தனர் என்பதை அறிவிக்கின்றன. நாக தீவு என்ற இடம் நாகர் என்ற ஓர் இனக் குழுவினர் வாழ்ந்த இடம் என்பதை ஏற்றுக் கொள்ளலாம். இந்த நாகர் ஆதி இரும்புக் காலத்தில் இலங்கையின் பல பாகங்களில், குறிப்பாக வடக்கில் வாழ்ந்த மக்கள் என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

நாகர் இலங்கையில் மட்டுமின்றித் தென்னிந்தியாவிலும் வாழ்ந்தனர். இவர்கள் தென்னிந்தியாவிலிருந்தே இலங்கைக்குச் சென்றிருக்க வேண்டும். ஆதி வரலாற்றுக் காலத்தில் தாய்மொழி மாற்றம் ஏற்படத் தொடங்கிப் பல்வேறு சிறு இனக் குழுக்கள் பேரினக் குழுக்களுடன் கலக்கின்ற போக்குக் காணப்பட்டது. நாகர் என்ற இனக் குழுவினர் தென்னிந்தியா, இலங்கைப் பிராந்தியத்தில் ஆக்கம் பெறத் தொடங்கிய பேரினக் குழுக்களுடன் கலக்கத் தொடங்கினர். நாகர் பேசிய மொழி வழக்கற்றுப் போயிற்று. தமிழ்நாட்டில் நாகர், தமிழ் இனக் குழுவுள் அடங்கினர். இலங்கையில் அனுராதபுரத்திலும் பிற தென் பாகங்களிலும் உருவாகிக் கொண்டிருந்த, பிராகிருத மொழியைத் தழுவிய, ஹெள (இள) இனக் குழுவுள் நாகருள் ஒரு சாரார் கலந்து கொள்ள, பிற நாகர் வடக்கில் தமிழ் இனக் குழுவுள் கலந்து கொண்டனர். கேரளத்தில் வாழ்ந்த நாகர், அங்கு பின்னர் மலையாள மொழி பேசும் சமூகப் பிரிவாகிய நாயர் என்ற பிரிவாகப் பரிணாமம் பெற்றுக் கேரள இனக் குழுவுள் அடங்கினர் என்ற ஒரு கருத்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் ஆதிக்கம் பெற்று வளரத் தொடங்கிய பேரினங்களுள் நாகர் கலக்கத் தொடங்கினர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் இலக்கியச் சான்றும்

கல்வெட்டுச் சான்றும் உள்ளன. இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் உயர் குழாத்தைச் சேர்ந்த பலர் நாகர் என்ற பொருள்படும் பெயராகிய நக என்ற பெயரைப் பெற்றோராய், பிராகிருத மொழியைப் பயன்படுத்துவோராய்க் காணப்படுகின்றனர். இதேபோல அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய பல மன்னர்கள் நாக என்ற பெயரைப் பெற்றிருந்தனர் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் நாகர் இனக் குழுவைச் சேர்ந்தவர்கள். ஆனால், பிராகிருத மொழியைப் பயன்படுத்திய பேரினக் குழுவுள் கலந்து விட்டனர் என்று கொள்ளக் கிடக்கின்றது.

இதேபோன்று, தமிழ்நாட்டில் சங்க இலக்கியத்தில் நாகர் என்ற பெயரையுடைய பல புலவர்கள் தமிழில் செய்யுள்கள் இயற்றியதைக் காண்கின்றோம். இவர்கள் தமிழர் இனக் குழுவுள் அக் காலகட்டமளவில் கலந்து விட்டனர் எனலாம்.

இலங்கையில் ஆதி வரலாற்றுக் காலத்தில் நாக தீவில் வாழ்ந்த நாகர் தமிழ் மொழியின் செல்வாக்கால் அம் மொழியைத் தம் தாய்மொழியாக்கி படிப்படியாகத் தமிழ் இனக்குழுவுள் கலந்தனர் என்பதில் ஐயமில்லை. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னர் நாகர், ஹெள இனக் குழுவுடனும் தமிழர் இனக் குழுவுடனும் கலந்து விட்டனர் எனலாம். ஒன்பதாம் நூற்றாண்டின் பின் நாகர் பற்றிய தகவல்கள் இலங்கையில் வரலாற்று மூலங்களில் இல்லை. பத்தாம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்புகள் நடைபெற்ற போது வடக்கில் தமிழ் இனக் குழு மேலாதிக்கம் பெற்றிருந்தமை நாகரும் பிற இனக் குழுக்களைச் சேர்ந்தோரும் தமிழர் இனக் குழுவுள் கலந்து விட்டதைக் காட்டுகின்றது.

தென்னிந்தியப் பின்னணி

இலங்கையின் தமிழ் இனக் குழுவின் வளர்ச்சிக்கு உதவிய அரசியல், பொருளியல் மற்றும் சமயக் காரணிகளை விளக்குவதற்கு தென்னிந்தியப் பின்னணியை அறிவது அவசியமாகும். மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதி தமிழ்நாட்டின் வரலாற்றில் ஓர் இருள் சூழ்ந்த காலமாகப் பொதுவாகக் கருதப்பட்டு வந்துள்ளது. இக் காலத்து அரசியல் நிகழ்ச்சிகளை அறியப் போதிய சான்றுகள் இல்லை. மூன்றாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் நாட்டில் சிறப்பிடம் பெற்றிருந்த சோழரும் பாண்டியரும் இக் காலப்பகுதியில் ஆட்சி செலுத்தியதுக்குச் சான்றில்லை. அவ் வம்சங்களைக் களப்பிரர் என்போர் வெற்றி கொண்டு, தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தினர் எனப் பாளி இலக்கியத்திலும் கல்வெட்டிலும் வரும் சில சான்றுகள் உதவியுடன் ஒரு கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆதி வரலாற்றுக் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருந்த சோழரும் பாண்டியரும் இக்காலப் பகுதியில் ஆட்சியிழந்து மறைந்தனர் என்பது தற்பொழுதுள்ள சான்றுகளின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அவர்கள் ஆட்சி நடத்திய இடங்களில் களப்பிரர் என்போரும் பிற ஆட்சியாளரும் ஆதிக்கம் பெற்றிருக்கலாம். எனினும், இக் காரணத்துக்காக நாட்டில் அரசியல் உறுதியின்மையோ, குழப்பமோ காணப்பட்டது என்று கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. ஆதி வரலாற்றுக் காலத்தில் சோழரும் பாண்டியரும் தத்தம் ஆதிக்கத்தையும் ஆள் புலத்தையும் பெருக்கிக் கொள்ளப் பல போர்களில் ஈடுபட்டனர். அக்காலத்து

அரசியல் நிலைமைக்கும் மூன்றாம் நூற்றாண்டின் பின் ஆறாம் நூற்றாண்டு வரை காணப்பட்ட நிலைமைக்கும் இடையில் பெரும் வேறுபாடு இருந்தது என்று கூற முடியாது. சேர, சோழ, பாண்டியர் முடியுடை மூவேந்தர் எனச் சங்க காலப் புலவர்களால் போற்றப்பட்டதன் விளைவாக அவர்கள் ஆண்ட காலம் ஒரு பொற்காலம் என்ற கருத்து உருவாகியதனால், அம் மன்னர்கள் ஆட்சி மறைந்ததும் அரசியலில் குழப்பம் ஏற்பட்டது என்ற கருத்துத் தோன்றியது எனலாம்.

களப்பிரர் ஆட்சி

தமிழ்நாட்டில் சோழரையும் பாண்டியரையும் வென்று ஆதிக்கத்தை நிலைநாட்டியோர் யார் என்பது இலகுவில் அறியக் கூடிய விஷயமாகாது. இப்படி வெற்றி பெற்றோர் தனியொரு வம்சத்தையோ இனக் குழுவையோ சேர்ந்தவர்கள் என்றும் கொள்ள முடியாது. களப்பிரர் இவர்களுள் ஒரு பிரிவினராக இருக்கலாம். இவர்கள் யாராக இருந்தாலும், இவர்கள் வெற்றியால் தமிழ்நாட்டில் பல நூற்றாண்டுகளாக ஆட்சி நடத்திய பழைய ஆட்சிக் குடும்பங்களைச் சேர்ந்தோர் ஆதிக்கத்தை இழந்தனர் எனத் தோன்றுகிறது. ஆதிக்கத்தை இழந்தாலும், இக் குடும்பங்களைச் சேர்ந்த பலர் தத்தம் நகரங்களில் இருந்திருக்கலாம். ஆனால் சிலர் வேறிடங்களுக்குப் புலம் பெயர்ந்தனர் என்று கொள்ள இடமுண்டு. சிலர் தமிழ்நாட்டுக்கு வடக்கே செல்ல வேறு சிலர் தெற்கே இலங்கைக்குச் சென்றனர் எனலாம்.

அரசியற் குழப்பங்கள் ஏற்படும் காலத்தில் ஓர் அரசில் ஆதிக்கம் இழந்தோர் இன்னோர் அரசில் அடைக்கலம் பெறுவது தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியத்தில் பொ.ஆ. தொடக்கத்திலிருந்தே காணக் கூடியதாய் உள்ளது. இதற்கு அமைய, சோழ நாட்டில் ஆதிக்கம் இழந்த சிலர் வடக்கே ஆந்திரப் பகுதிக்குச் சென்று அடைக்கலம் பெற்றனர் என்பது சில பிற்பட்ட தெலுங்கு மூலாதாரங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. இவ்வாறே பாண்டியர் குலத்தைச் சேர்ந்த சிலர் இலங்கைக்குச் சென்றனர் என்று கொள்ள முடியும். ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய தமிழ்த் தலைவர்களுள் முதலாவதாகக் குறிப்பிடப்படுபவன் பண்டு என்ற பெயரைக் கொண்டுள்ளான்.

இது பாளியில் பாண்டியரைக் குறிப்பதாகும். தமிழ்நாட்டில் மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் வலிமை வாய்ந்த அரசுகள் எழுச்சி பெறவில்லை எனலாம். இதனால் தமிழ் அரசுகளின் படையெடுப்புகள் எதுவும் இலங்கையை நோக்கி நடத்தப்படவில்லை.

ஆறாம் நூற்றாண்டின் பின் தமிழ்நாட்டின் அரசியலில் முக்கியமான சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முதல் தடவையாகப் பேரரசுகள் என்று வர்ணிக்கத்தக்க இரண்டு அரசுகள் தமிழ்நாட்டின் பெரும் பாகத்தை உள்ளடக்கி எழுச்சி பெற்றன. முதலாவது, தொண்டை மண்டலத்தில் எழுச்சி பெற்ற பல்லவப் பேரரசு. மற்றது பாண்டியப் பேரரசு. இவையிரண்டும் தங்கள் ஆதிக்கப் படர்ச்சியின் போது இலங்கைக்கும் படையெடுப்பு நடத்தின. இதனால் இலங்கையில் தமிழ் இனக் குழுவின் வளர்ச்சியில் இந்த அரசியல் காரணி ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

பௌத்த - சமண மதங்களின் எழுச்சி

இக் காலப் பகுதியில் தென்னிந்தியாவின், குறிப்பாகத் தமிழ்நாட்டின், சமய நிலை இலங்கை வரலாற்றை விளங்கிக் கொள்ள முக்கியமானது. மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் பௌத்தமும் சமணமும் பெரும் வளர்ச்சி பெற்றிருந்தன. ஆறாம் நூற்றாண்டில் இவை வீழ்ச்சியடைய, சைவமும் வைணவமும் மேலோங்கி எழுந்தன. இந்நிகழ்ச்சிகள் இலங்கையில் தமிழ் இனக் குழு வளர்ச்சி பெற்ற வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் காரணிகளாம்.

ஆந்திரப் பிரதேசத்தில், சிறப்பாக நாகார்ஜுனக் கொண்டா மற்றும் அமராவதி ஆகிய இடங்களில், பௌத்தம் பொ.ஆ.மு. காலத்திலிருந்தே வளர்ச்சி பெற்று பொ.ஆ. மூன்றாம் நான்காம் நூற்றாண்டுகளில் உச்ச நிலையடைந்திருந்தது. தமிழ்நாட்டில் பொ.ஆ.மு. காலத்தில் பௌத்தமும் சமணமும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும், பொ.ஆ. மூன்றாம் நூற்றாண்டின் பின்னரே அவை பெரிதும் வளர்ச்சியுற்றன. காஞ்சி, மதுரை, உறையூர் மற்றும் காவிரிப்பூம்பட்டினம் ஆகிய இடங்கள் இச் சமயங்கள் சிறப்புற்ற மையங்களாக எழுந்தன. இவ்விடங்கள் பாளி மொழி வளர்ச்சிக்கு உதவிய மையங்களாகவும் அமைந்தன. இக்காலப் பகுதியில் தமிழ்நாடு தனது தலைசிறந்த அறிஞர்களைப் பௌத்த உலகுக்கு அளித்துப் பௌத்த மத வளர்ச்சிக்கு உதவியது. இக் காலப்பகுதியிலேயே பிரசித்தி பெற்ற தமிழ்ப் பௌத்த காவியங்களாகிய மணிமேகலையும் குண்டலகேசியும் படைக்கப்பட்டன. அவற்றைப் போன்று தமிழ்ச் சமண காவியமாகிய சிலப்பதிகாரமும் இக்காலத்தில் படைக்கப்பட்டதே.

கட்டிடக் கலை மற்றும் சிற்பக் கலை ஆகியவற்றைப் பொறுத்து ஆந்திரப் பிரதேசத்தில் பௌத்தக் கட்டிடக் கலை, சிற்பக் கலை சிறப்பான வளர்ச்சி பெற்று இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும் செல்வாக்குப் பெற்றன.

பொருளியல் காரணிகள் - தென்னந்திய வணிக கணங்கள்

ஆறாம் நூற்றாண்டின் பின் இலங்கையில் தமிழ் இனக் குழுவின் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியத்துவம் பெறும் ஒரு பொருளியல் காரணி தென்னிந்திய வணிக கணங்களின் எழுச்சியாகும். பல்லவப் பேரரசின் வளர்ச்சியுடன் கடல் வணிகம் துரிதமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதன் விளைவாக முன்னர் இல்லாத அளவுக்கு வர்த்தக நடவடிக்கைகளில் தென்னிந்திய வணிகர்கள் ஈடுபட்டதன் விளைவாகத் தென்கிழக்காசியாவுடனும் மேற்காசியாவுடனும் நெருங்கிய வர்த்தக உறவுகள் ஏற்பட்டதுடன், வலிமை வாய்ந்த வணிக கணங்களும் தோன்றின. இவை இலங்கையிலும் முக்கிய வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

நீர்ப்பாசனவியல் வளர்ச்சி

இக்காலப்பகுதியில் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் மிகவும் வளர்ச்சி பெற்ற ஒரு துறையாகக் காணப்படுவது நீர்ப்பாசனவியல் துறையாகும். பொ.ஆ.மு. நூற்றாண்டுகளில் சிறிய அளவில் குளங்கள் மற்றும் கால்வாய்கள் ஆகியவற்றை அமைத்து விவசாயம் நடத்திய நிலையிலிருந்து படிப்படியாகப் பெரும் குளங்கள், அணைகள் மற்றும் நீண்ட கால்வாய்கள் ஆகியவற்றை அமைக்கும் அளவுக்கு இக்காலப் பகுதியில் நீர்ப்பாசனம் தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியத்தில் ஒரு பொது

வளர்ச்சியாகக் காணப்பட்டது. இத்தகைய வளர்ச்சிக்குத் தென்னிந்தியத் தொழில்நுட்பமும் இலங்கைத் தொழில்நுட்பமும் கருத்துப் பரிமாறலில் ஈடுபட்டதுடன் இரு நிலப் பகுதிகளிலிருந்தும் வேலையாட்களும் விற்பன்னர்களும் சென்று வந்தனர் என்றும் கொள்ள முடியும். இதன் ஒரு விளைவாக இலங்கையில் வளர்ச்சி பெற்ற தமிழ் இனக்குழு மேலும் வலுப் பெற்றது.

அநுராதபுர அரசில் தமிழர் ஆட்சி

ஏழாம் நூற்றாண்டில் பல்லவ அரசும் பாண்டிய அரசும் எழுச்சி பெறும் வரை இலங்கையின் அரசியல் தென்னிந்திய அரசியற் சம்பவங்களினால் பாரதூரமாகப் பாதிக்கப்படவில்லை. முன்னர் போல, தமிழ்நாட்டிலிருந்து சிலர் படையெடுத்து வந்து அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றினர். அநுராதபுரத்திலிருந்து சிலர் தென்னிந்தியாவுக்குச் சென்று படை திரட்டி வந்து ஆட்சியைக் கைப்பற்ற முயன்றனர். பொ.ஆ. 300க்கும் 900க்கும் இடையில் குறைந்தது ஒன்பது தடவையாவது இவ்வாறு அநுராதபுரத்து இளவரசர்கள் தென்னிந்தியாவுக்கு உதவி பெறச் சென்று படைகளுடன் வந்தனர் எனப் பாளி வரலாற்று நூல்கள் வாயிலாக அறியலாம். இவை மட்டுமின்றி, தமிழ்நாட்டு அரச குடும்பங்களில் சில சிங்கள அரசர்கள் மணம் முடித்து அரசியரை அழைத்திருந்தனர் என்றும் அறிய முடிகின்றது. இத்தகைய அரசியல் தொடர்புகள் அநுராதபுரத்தில் இருந்த தமிழர் செல்வாக்குத் தொடர்ந்தும் வலுவுடன் இருக்க உதவின.

ஐந்தாம் நூற்றாண்டின் முற்பாதியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை நோக்கினால் தமிழர் செல்வாக்கு எந்தளவுக்கு அநுராதபுரத்தின் அரச சபையில் வளர்ந்திருந்தது என்பதைக் காணலாம். அநுராதபுரத்தின் மன்னனாக 406 இல் மஹாநாம என்பவன் பதவியேற்றான். அவனுடைய அரசியருள் ஒருத்தி தமிழ்ப் பெண். இவ்வாறு ஒரு தமிழ்ப் பெண்ணை மணம் முடித்தமைக்கு அம்மன்னன் தமிழ் உயர்குழாத்துக் குடும்பங்களுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தமை அல்லது தமிழ்நாட்டு அரச குடும்பம் ஒன்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமை காரணமாகலாம். எவ்வாறாயினும், மன்னனுடைய தமிழ் அரசி பெற்றிருந்த செல்வாக்கும், அரச சபையில் தமிழ் உயர் குழாத்தினர் பெற்றிருந்த செல்வாக்கும் குறிப்பிடத்தக்கதாக இருந்திருக்க முடியும் என்பதையும் தமிழ், சிங்கள வேறுபாடு இல்லாத அரசியல் நிலை காணப்பட்டது என்பதையும் வெளிப்படுத்தும் வகையில் மன்னன் இறந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சிகள் அமைகின்றன.

மஹாநாம மன்னன் 428 இல் இறந்தபோது புதிய மன்னனாகப் பதவியேற்றவன் தமிழ் அரசிக்குப் பிறந்த சொத்திஸேனன் என்பவன். ஆனால் அவன் ஆட்சியேற்றதும் அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்து, சொத்திஸேனன் கொல்லப்பட்டு, ஒருவர் பின் ஒருவராக மூன்று மன்னர்கள் ஓராண்டுக் காலத்தில் பதவியேற்பதைக் காணலாம். இக் குழப்ப நிலையில் பண்டு என்ற ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றி அநுராதபுரத்தின் மன்னனாக ஆண்டான் என்று பாளி வரலாற்று நூல்களால் அறிகின்றோம்.

மஹாநாம மன்னன் 428 இல் இறந்தபோது புதிய மன்னனாகப் பதவியேற்றவன் தமிழ் அரசிக்குப் பிறந்த சொத்திஸேனன் என்பவன். ஆனால் அவன் ஆட்சியேற்றதும் அரசியல் குழப்பங்கள் நிகழ்ந்து, சொத்திஸேனன் கொல்லப்பட்டு,

ஒருவர் பின் ஒருவராக மூன்று மன்னர்கள் ஓராண்டுக் காலத்தில் பதவியேற்பதைக் காணலாம். இக் குழப்ப நிலையில் பண்டு என்ற ஒருவன் ஆட்சியைக் கைப்பற்றி அநுராதபுரத்தின் மன்னனாக ஆண்டான் என்று பாளி வரலாற்று நூல்களால் அறிகின்றோம்.

பாளி மொழியில் பண்டு என்ற பெயர் பாண்டியரைக் குறிக்கும். ஆகவே, இவ்வாறு ஆட்சி பெற்றவன் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவன் என ஊகிக்க இடமுண்டு. இக் காலத்துத் தமிழ் நாட்டு அரசியல் பின்னணியை நோக்கினால், அங்கு களப்பிரர் என்ற குழுவினர் பாண்டி நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றிப் பாண்டியரை ஆதிக்கத்திலிருந்து நீக்கினர் என்று அறியக் கிடக்கின்றது. இச் சூழ்நிலையில் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்த சிலர் அநுராதபுரத்துக்கு வந்திருக்கலாம். மஹாநாம மன்னனின் தமிழ் அரசி பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவளாக இருந்திருந்தால், அத் தொடர்பாலும் பாண்டிய வம்சத்தவர் அநுராதபுரத்தில் ஆட்சிபெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கலாம். எது எவ்வாறாயினும் *429* அளவில் தமிழ் மன்னன் ஒருவனுடைய ஆட்சி தொடங்கியது என்பதை வரலாற்று மூலாதாரங்கள் எடுத்துரைக்கின்றன.

இப் பாண்டிய மன்னனும் அவனுடைய வழித்தோன்றல்களும் அடுத்த கால் நூற்றாண்டு காலமாக *(439 - 455)* அநுராதபுரத்தை ஆண்டனர். இம் மன்னர்கள் சிங்கள மன்னர்கள் போலவே அநுராதபுரத்து மரபுகளின்படி ஆண்டனர் எனத் தெரிகின்றது. இவர்கள் பௌத்தர்களாகவும், பௌத்தத்தை ஆதரிப்போராகவும், ஹெள (ஆதிச் சிங்கள) மொழியைத் தம் கல்வெட்டுகளில் பயன்படுத்தியோராகவும் ஆண்டனர் என்பதற்குச் சான்றுண்டு. கால் நூற்றாண்டுக் காலம் ஆட்சி நடத்த முடிந்தமை அவர்களது ஆட்சி ஏற்றுக் கொள்ளப்பட்டதற்குச் சான்றாகும்.

முதலில் ஆண்ட பண்டு மன்னன் பற்றி அறிய அதிக சான்றில்லை. அவனுடைய உண்மைப் பெயர் கூடப் பேணப்படவில்லை. அவன் ஐந்து ஆண்டுகள் ஆட்சி நடத்திய பின் அவனுடைய மகன் பதவியேற்றான். இவன் பெயர் பாளியில் பாரிந்த எனக் கொடுக்கப்பட்டுள்ளது. ஹெள மொழியில் இது பரிததேவ எனக் காணப்படுகிறது. இப்பெயரை சமஸ்கிருதத்தில் பாரீந்திர தேவ எனவும், தமிழில் பாரிந்திர தேவன் எனவும் கூறலாம். இவன் ஒரு பௌளத்தனாக இருந்தான். இவன் பௌத்த பள்ளி ஒன்றுக்கு அளித்த தானம் பற்றிய செய்தி ஒரு ஹெள மொழிக் கல்வெட்டில் உள்ளது. இவன் மூன்று ஆண்டுகள் மட்டுமே ஆட்சி புரிந்தான். அவனுக்குப் பின் அவன் தம்பி இளம் பாரிந்திரன்/ பாரி தேவன் (ஹெள மொழியில் - பரிதேவ) பதவியேற்றான்.

இளம் பாரிந்திரன் தமையனைப் போன்று ஒரு பௌத்தனாக ஆட்சி நடத்தியதுடன், முன் ஆண்ட சிங்கள மன்னர் கொண்டிருந்த விருதாகிய ‘புத தஸ’ (புத்ததாசன்) என்ற விருதையும் ஏற்றிருந்தான். இவனுடைய அரசி பௌத்த பள்ளி ஒன்றுக்கு வழங்கிய தானம் பற்றி ஒரு ஹெள மொழிக் கல்வெட்டில் தகவல் கிடைக்கின்றது.

இளம் பாரிந்திரனுக்குப் பின் மூன்று தமிழ் மன்னர் சிறு சிறு காலப்பகுதி அநுராதபுரத்தில் ஒருவர் பின் ஒருவராக ஆண்டனர். பாளி வரலாற்றேடுகள் இவர்களைப் பற்றி அதிகம் தகவல்களைத் தரவில்லை. ஆனால் இவர்களுள்

இருவரைப் பற்றிக் குறிப்பிடும் ஒரு ஹௌ மொழிக் கல்வெட்டு கிடைத்திருப்பது கவனிக்கத்தக்கது. இளம் பாரிந்திரனுக்கு அடுத்ததாக ஆண்டவன் திரீதர (தமிழ்: திருதரன், சமஸ்கிருதம்: ஸ்ரீதர) என்பவன் ஆவான். இவன் சில மாதங்கள் ஆண்டபின், இவனுடைய மகன் தாடிய (தாடியன்) என்பவன் ஆட்சி நடத்தினான். இவன் இயற்பெயர் மஹாநாகன் என்பது கல்வெட்டு ஒன்றின் மூலம் அறியக் கூடியதாய் உள்ளது. தந்தை திருதரன் என்ற வைணவப் பெயரைப் பெற்றிருந்தபடியால் பௌத்தனாக இருந்தானோ என்பதைக் கண்டுகொள்ள முடியவில்லை. ஆனால் மகன் மஹாநாகன் பௌத்த நிறுவனம் ஒன்றை ஆதரித்தான் என்பது கல்வெட்டுச் சான்று கொண்டு கூறக் கூடியதாய் உள்ளது. இதனால் மஹாநாகன் இளம் பாரிந்திரனைப் போன்று பௌத்தனாக இருந்திருக்கலாம். இவனுக்குப் பின் பீடிய என்ற தமிழ் மன்னன் ஆண்டதாக அறிகின்றோம். இவன் ஏழு மாதங்கள் ஆண்டபின் தாதுஸேன என்ற சிங்கள இளவரசன் ஆட்சியைக் கைப்பற்றி அநுராதபுரத்தில் மீண்டும் சிங்கள வம்சத்தின் ஆட்சியை நிறுவினான்.

இவ்வாறாக ஆறு தமிழ் மன்னர்கள் ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் 25 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டனர். தமிழ் நாட்டில் பௌத்தம் எழுச்சி பெற்றிருந்த அந்த நூற்றாண்டில் இவர்கள் பௌத்தர்களாக இருந்தமை வியப்புக்குரியதன்று. அநுராதபுரத்து மக்களுடைய ஆதரவைப் பெறுவதற்காக இவர்கள் பௌத்தத்தை ஆதரித்தனர் என்று கூற அவசியமில்லை. இத்தகைய கருத்துத் தவறாகும். அதுமட்டுமன்றி, அநுராதபுரத்திலிருந்த உயர்குழாத்தினருடைய ஆதரவு இம்மன்னர்களுக்கு இருந்தது என்பதையும் பாளி நூல்கள் மூலம் அறியலாம்.

தமிழ் மெய்க்காப்பர்

தாதுஸேன மன்னனுடைய ஆட்சியின் (455 - 478) பின் அநுராதபுரத்து அரசியல் சிறிது காலம் உறுதி பெற்றிருந்தது. தாதுஸேனனின் ஆட்சியின் போது நீர்ப்பாசன வசதிகள் பல அமைக்கப்பட்டன; விவசாயம் வளர்ச்சியடைந்தது. ஆனாலும், அநுராதபுரத்தின் பிரசித்தி பெற்ற மன்னர்களுள் ஒருவராகப் பெயர் பெறும் தாதுஸேன பரிதாபத்துக்குரிய வகையில் அவன் மகன் காஸ்யப என்பவனால் கொல்லப்பட்டான். அதன்பின் காஸ்யப மன்னனாக ஆட்சியேற்க, அவன் சகோதரன் முகலன் தென்னிந்தியாவுக்குத் தப்பியோடிச் சென்று, பதினெட்டு ஆண்டுகள் அங்கு தங்கியிருந்து, இறுதியில் அங்கிருந்து ஒரு படையுடன் வந்து காஸ்யப மன்னனை வென்று ஆட்சியைக் கைப்பற்றினான்.

முகலன் தென்னிந்தியாவுக்கு ஓடிச் சென்று, வாய்ப்பு ஏற்படும்போது படைத் திரட்டி வந்து ஆட்சியைக் கைப்பற்ற எடுத்த முயற்சி எந்த விதத்திலும் ஒரு புது முயற்சியாகாது. முதலாம் நூற்றாண்டில் இருந்தே அநுராதபுரத்தில் ஆட்சியை இழந்தவர்கள் அல்லது ஆட்சியைக் கைப்பற்ற நோக்கங் கொண்டவர்கள் தென்னிந்தியாவுக்குச் சென்று படை திரட்டி வருவது வழக்கமாக இருந்தது. இப்படைகள் பொதுவாக இலங்கைக்கு அருகில் இருந்த தமிழ் அரசுகளில் இருந்தே கொண்டுவரப்பட்டன. இவ்வழக்கத்தின் முக்கியத்துவம் என்னவெனில், அடிக்கடி இவ்வாறு படைகள் கொண்டுவரப்பட்ட போது தமிழரும் பிற தென்னிந்தியச் சமூகத்தினரும் கூடுதலாக இலங்கையில் குடியேறுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டன. முகலன் ஆட்சிக் காலத்தில் இப்படிப் பல தலைவர்கள் படைகளுடன்

வருவது புறக்கணிக்க முடியாத ஒரு பிரச்சினையாக இருந்தது எனத் தோன்றுகிறது. ஏனெனில், இப்படி வருவோரைத் தடுப்பதற்கு முகலன் கரையோரக் காவற் படைகளைப் பயன்படுத்தினான் என அறிகின்றோம். ஆனால், முகலன் காலத்துக்குப் பின் இத்தகைய நிகழ்ச்சிகள் மேலும் கூடினவே ஒழிய, குறையவில்லை.

இக்காலப்பகுதியில் அரண்மனைச் சதிகளும் அரசியல் சூழ்ச்சிகளும் நம்பிக்கையின்மையும் மலிந்து காணப்பட்ட போது அநுராதபுரத்து மன்னர்கள் தமிழ் மெய்க்காப்பரில் தங்கியிருக்கும் நிலை உருவாகியது. தங்கள் சொந்தப் பாதுகாப்புக்கும் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும் இந்த மெய்க்காப்பர் பெரிதும் தேவைப்பட்டனர். தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியத்தில் இருந்த அரசுகளில் மட்டுமின்றி, உலகின் வேறு பாகங்களிலும் தங்கள் சொந்தப் பாதுகாப்புத் தேவைகளைக் கவனிக்க பிற நாட்டவரைக் காவலராக நியமிப்பது மன்னர்களுடைய பொது வழக்காக இருந்தது. தமிழ்நாட்டில் முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் மன்னர்கள் யவன (கிரேக்க உரோம்) மெய்க்காப்பரை வேலைக்கு அமர்த்தினர். அநுராதபுரத்திலும் யவனப் படையினர் முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகளில் பணியாற்றியிருக்க முடியும். இக் காலப்பகுதியில் தமிழ் மெய்க்காப்பர் சிங்கள மன்னர்களைப் பாதுகாத்தது போன்று, தமிழ்நாட்டில் சிங்கள மெய்க்காப்பர் பணியாற்றினர்.

இவ்வாறு, ஆட்சியைக் கைப்பற்ற நோக்கங் கொண்டோர் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வந்த படைகளும் அநுராதபுரத்து மன்னர் தமக்குப் பணிபுரிய வருவித்த தென்னிந்திய மெய்க்காப்பரும் ஆறாம் நூற்றாண்டின் பின் மேலும் அதிகரிக்க, பிரச்சினைகள் எழுந்தன. தென்னிந்தியாவிலிருந்து படைகளைக் கொண்டு வருவது ஏழாம் நூற்றாண்டில் உச்ச நிலையடைந்தது. இந்நூற்றாண்டில், 628 இலிருந்து ஒரு குறுகிய 55 ஆண்டுக் காலத்துள், எட்டுத் தடவைகளாவது ஆட்சியைக் கைப்பற்ற விரும்பிய சிங்களத் தலைவர்கள் தென்னிந்தியப் படைகளை அழைத்து வந்திருந்தனர். இவ்வாறு வந்த படையினரின் எண்ணிக்கை படிப்படியாகக் கூடியதும், பல பிரச்சினைகள் தோன்றின. தமிழ்ப் படையினரைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மன்னர்கள் தவித்தனர். அரச சபையில் உயர் பதவிகளில் தமிழர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். நான்காம் அக்கிரபோதி மன்னன் ஆட்சியின்பேது (667 - 683) பொத்தகுட்ட, பொத்தஸாத மற்றும் மஹாகந்த ஆகிய தமிழ் அதிகாரிகள் உயர் பதவிகளை வகித்து, பௌத்த நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்கியோராய்க் காணப்படுகின்றனர். ஏழாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நிகழ்ந்த சமய இயக்கங்களின் விளைவாக அங்கிருந்து இலங்கைக்குச் சில தமிழ் பௌத்தர்கள் புலம் பெயர்ந்து சென்றிருக்கலாம். அவர்களுள் சிலர் அநுராதபுரத்தில் செல்வாக்குப் பெற்றிருக்கலாம். இவர்களை விட அநுராதபுரத்தில் முன்பிருந்தே வாழ்ந்த தமிழ்க் குடும்பங்களை சேர்ந்த பௌத்தர்களும் செல்வாக்குடன் விளக்கியிருப்பர்.

ஏழாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தில் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய ஒரு தமிழன் பாளி நூல்களில் பொத்தகுட்ட என்ற பெயருடன் காணப்படுகின்றான். இவன் செல்வம் மிகுந்தவனாகவும், பௌத்த சங்கத்துக்குக் குறிப்பிடத்தக்க

தானங்களை வழங்கியவனாகவும் விளங்கியதுடன், அநுராதபுரத்து அரசியலில் பெரும் செல்வாக்கும் பெற்றிருந்தான். உயர் குழாத்தினர் மத்தியில் இவனுக்கு ஆதரவு இருந்தது என்று தோன்றுகிறது. அத்துடன் போதிய படை பலமும் அவனுக்கு இருந்திருக்கும். இதனால் அக்கிரபோதி மன்னன் இறந்தவுடன், பொத்தகுட்ட தனது படை பலத்தைக் கொண்டு அரச பதவி பெற இருந்த யுவராஜனாகிய தாட்டாசிவ என்பவனைக் கைப்பற்றிச் சிறையில் இட்டபின் அரசின் நிர்வாகத்தைத் தானே பொறுப்பேற்று நடத்தினான். 'அரச பதவியில் தான் விரும்பியவர்களை வைத்து அவன் நிர்வாகத்தை நடத்தினான். இவ்வாறு நியமிக்கப்பட்ட இவனது கைப்பொம்மை அரசர்கள் நீண்ட காலம் பதவியில் இருக்கவில்லை.

பல்லவர் ஆதிக்கப் படர்ச்சி

பொத்தகுட்ட செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில் தமிழ்நாட்டில் முதல் தடவையாக ஒரு பேரரசு எழுச்சி பெற்றிருந்தது. இது தொண்டை மண்டலத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த பல்லவப் பேரரசாகும். ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சிம்ம விஷ்ணு மன்னன் தொடக்கி வைத்த ஆதிக்கப் படர்ச்சி, ஏழாம் நூற்றாண்டின் முற்பாதியில் முதலாம் மகேந்திரவர்மன் மற்றும் முதலாம் நரசிம்ம வர்மன் ஆகியோர் ஆட்சியில் மேலும் வளர்ச்சி பெற்றுத் தமிழ்நாட்டின் மேலோங்கிய பேரரசாகப் பல்லவ அரசை மாற்றியது. இத்தகைய அரசியல் வளர்ச்சி இலங்கையையும் பாதித்தது. முதல் தடவையாக இலங்கையில் இருந்த ஆட்சியாளர் தென்னிந்திய ஆட்சியாளர்களுடைய அரசியல் விவகாரங்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலை உருவாகியது.

முன்னர் கூறப்பட்டதுபோல், பல்லவர் எழுச்சிக்கு முன்னரே அநுராதபுரத்து அரச குடும்பத்தினர் பல தடவைகள் தென்னிந்தியாவுக்குச் சென்று படையுதவி பெற்று வந்தனர். அவர்களுக்கு உதவியோர் குறுநில மன்னர்களா அல்லது மூவேந்தர் எனப்பட்ட சோழ, சேர, பாண்டிய மன்னர்களா என்பது பற்றிச் சான்றில்லை. ஆறாம் நூற்றாண்டுக்கு முன் தமிழ் நாட்டிலிருந்து படை கொண்டு வந்து அநுராதபுரத்தில் ஆட்சியைக் கைப்பற்றிய தமிழர்கள் மூவேந்தர் சார்பாகப் படையெடுப்பு நடத்தினர் என்று கொள்வதற்கும் சான்றில்லை. ஆனால் இந்நிலை ஆறாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து பல்லவப் பேரரசின் எழுச்சியுடன் மாறுவதைக் காணலாம்.

இலங்கை மன்னன் ஒருவனை வெற்றி கொண்ட ஒருவனாகக் கல்வெட்டுச் சான்று மூலம் நாம் அறியும் முதலாவது தமிழ்நாட்டு அரசு ஒன்றின் மன்னன் பல்லவ சிம்ம விஷ்ணு ஆவான். இவன் வெற்றி கொண்ட மன்னர் வரிசையில் சிங்கள மன்னனையும் சேர்த்துள்ளான். ஆனால், இலங்கை மூலாதாரங்களில் பல்லவர் படையெடுப்புப் பற்றியோ, வெற்றி பற்றியோ எதுவிதக் குறிப்பும் இல்லாமையால், சிம்ம விஷ்ணுவின் கூற்றுப் பொதுவாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. எனினும் இக்காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை நோக்கினால், பல்லவ மன்னன் இலங்கைக்கும் படையெடுத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பல்லவ மன்னன் முதலாம் நரசிம்ம வர்மன் (603-688) ஆட்சியின்போது அநுராதபுரத்துச் சிங்கள அரச வம்சத்தைச் சேர்ந்த இளவரசன் ஒருவன், மானவர்மன்

என்பான், பல்லவர் தலைநகராகிய காஞ்சிக்குச் சென்று பல்லவ மன்னன் ஆதரவைப் பெற்றுச் சில காலம் அங்கு தங்கியிருந்தான். அவ்வாறு தங்கியிருந்த காலத்தில் நரசிம்ம வர்மனுக்குப் போர்களில் உதவியும் புரிந்தான். இவ்வாறாக சிங்கள இளவரசன் ஒருவன் பல்லவப் பேரரசன் சபையில் செல்வாக்குப் பெற்றுக் காஞ்சியில் பல ஆண்டுகள் தங்கியிருப்பதை நோக்குமிடத்து, பல்லவ அரசுடன், அநுராதபுர மன்னர்கள் ஏலவே அரசியல் தொடர்புகள் கொண்டிருந்தனர் என்று கொள்ள இடமுண்டு.

அநுராதபுரத்தில் ஏழாம் நூற்றாண்டின் பிற்பாதியில் பொத்தகுட்ட செல்வாக்குப் பெற்றிருந்தபோது, பல்லவ நரசிம்ம வர்மன் உதவியுடன் மானவர்மன் படையெடுப்பு நடத்தி அநுராதபுரத்தைத் தாக்கினான். ஆனால் அங்கு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்ற முன், திடீரெனத் தன் படைகளுடன் காஞ்சிக்கு மானவர்மன் திரும்ப நேரிட்டது. இதற்குக் காரணம் நரசிம்ம வர்மன் நோயுற்றிருந்தமை எனக் கூறப்பட்டுள்ளது. மானவர்மன் திரும்பிச் சென்றபின், நரசிம்மவர்மன் இறந்ததினாலோ என்னவோ மேலும் பல ஆண்டுகள் காஞ்சியில் அவன் தங்கியிருந்து, மீண்டும் ஒரு படையெடுப்பை இரண்டாவது நரசிம்மவர்மன் காலத்தில் (680 - 720) நடத்தினான். இப்படையெடுப்பின் போது பொத்தகுட்டனுடன் அவன் நியமித்திருந்த மன்னனும் கொல்லப்பட்டான். மானவர்மன் வெற்றிகரமாக அநுராதபுரத்தின் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.

இலங்கை மன்னன் ஒருவனை வெற்றி கொண்ட ஒருவனாகக் கல்வெட்டுச் சான்று மூலம் நாம் அறியும் முதலாவது தமிழ்நாட்டு அரசு ஒன்றின் மன்னன் பல்லவ சிம்ம விஷ்ணு ஆவான். இவன் வெற்றி கொண்ட மன்னர் வரிசையில் சிங்கள மன்னனையும் சேர்த்துள்ளான். ஆனால், இலங்கை மூலாதாரங்களில் பல்லவர் படையெடுப்புப் பற்றியோ, வெற்றி பற்றியோ எதுவிதக் குறிப்பும் இல்லாமையால், சிம்ம விஷ்ணுவின் கூற்றுப் பொதுவாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை. எனினும் இக்காலத்து நிகழ்ச்சிகள் சிலவற்றை நோக்கினால், பல்லவ மன்னன் இலங்கைக்கும் படையெடுத்திருக்கலாம் எனத் தோன்றுகிறது.

பாண்டியர் எழுச்சி

மானவர்மன் ஆட்சிக் காலத்தின் பின் தமிழ்நாட்டில் அரசியல் நிலை மாறத் தொடங்கியது. மதுரையை மையமாகக் கொண்டு பாண்டிய வம்சத்தினர் படிப்படியாக எழுச்சி பெறத் தொடங்கினர். அவர்கள் ஆதிக்கம் வளர, தவிர்க்க முடியாத வகையில் பல்லவருடன் மோத வேண்டிய நிலை உருவாகியது.

ஆறாம் நூற்றாண்டில் கடுங்கோன் என்ற பாண்டியன் களப்பிர மன்னன் ஒருவனை வெற்றி கொண்டு பாண்டி நாட்டில் ஆட்சியைத் தொடங்கியதிலிருந்து பாண்டியர் எழுச்சி நடைபெற்றது. இம் மன்னனுக்குப் பின் படிப்படியாக ஏற்பட்ட எழுச்சியைக் காட்டுவதற்குப் போதிய சான்றுகள் இல்லை. எனினும் ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் அரிகேசரி மற்றும் ராஜசிம்மன் போன்ற மன்னர்கள் பல குறுநில அரசர்களை வென்று பாண்டிய அரசை வலுப்படுத்தினர் என அறிய முடிகின்றது.

ஒன்பதாம் நூற்றாண்டில் பாண்டியப் பேரரசு உச்ச நிலையை அடைந்தது

எனலாம். இந்த நூற்றாண்டில் பாண்டிய மன்னனாகப் பதவி பெற்ற ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் (815 - 862) பாண்டியர் ஆதிக்கத்தைப் பெருக்கிப் பல்லவப் பேரரசுடன் மோதினான். இந்நிகழ்ச்சியின் போது இலங்கையும் தென்னிந்திய அரசியலில் சிக்கிக் கொள்வதைக் காணலாம். முதல் தடவையாகப் பாண்டிய மன்னன் ஒருவன் இலங்கைக்குப் படையெடுத்துச் செல்வதை இக் காலத்தில் காணலாம். அநுராதபுரத்தில் முதலாம் ஸேன மன்னன் (833 - 853) ஆட்சி நடத்தியபோது, ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் வடக்கு இலங்கையில் படையுடன் வந்திறங்கி அநுராதபுரத்தை நோக்கிச் செல்ல, ஸேன மன்னன் அந்நகரத்தை விட்டு மலை நாட்டுக்குச் சென்றான்.

பாண்டிய மன்னன் அநுராதபுரத்தில் கிடைத்த செல்வத்துடன் தன் நாடு திரும்பினான். இவ்வாறு பாண்டியப் பேரரசு எழுச்சி பெற்று அநுராதபுரத்து அரசையும் அடக்க முற்பட்டதன் விளைவாக இலங்கை தென்னிந்திய அரசியலில் மேலும் சிக்கிக் கொண்டது. வலிமை வாய்ந்த ஓர் அரசு எழுச்சி பெறும்போது அந்த எழுச்சியால் பாதிக்கப்படுவோர் ஒன்று கூடுவது இயல்பே. அதற்கமைய, இலங்கை பல்லவ அரசுடன் இணைந்து பாண்டியப் பேரரசை எதிர்த்தது.

இந்நிலையில் பாண்டியப் பேரரசன் மகனாகிய வரகுணப் பாண்டியன் தந்தையுடன் தகராறில் ஈடுபட்டு, இலங்கைக்குத் தப்பியோடிச் சென்றான். பாண்டியர் குடும்பத்தில் ஏற்பட்ட பிளவினைப் பயன்படுத்தி சிங்கள மன்னனும் பல்லவ மன்னனும் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபனுக்கு எதிராகப் போர் தொடுத்தனர். பல்லவ நிருபதுங்கவர்மன் பாண்டி நாட்டை வடக்கிலிருந்து தாக்க, அநுராதபுரத்து மன்னன் இரண்டாம் ஸேன (853 - 857) அனுப்பிய படைகள் பாண்டி நாட்டின் தென் பகுதியைத் தாக்கி மதுரையை நோக்கி முன்னேறின. வடக்கில் பாண்டியப் படைகளும் பல்லவர் படைகளும் அரிசில் என்ற இடத்தில் மோதின. அரிசில் போரில் பல்லவர் பாண்டியரை வெற்றி கொண்டனர். அதேவேளை, தெற்கில் சிங்கள மன்னன் அனுப்பிய படைகள் மதுரையைத் தாக்கி வெற்றி பெற்றன. அரிசில் போரில் தோல்வியுற்ற பாண்டியர் படை இதனைக் கேள்வியுற்று மதுரைக்கு விரைந்தது. மதுரையில் அப்படை நடத்திய போரில் ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் உயிரிழந்தான். சிங்கள மன்னன் படை வரகுணப் பாண்டியனைப் புதிய பாண்டிய மன்னனாக முடிசூட்டியது. இது 862 இல் நடந்த நிகழ்ச்சியாகும். இவ்வாறு தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பேரரசு எழுச்சி பெற்ற காலங்களில் இலங்கையையும் பாதிப்பது தவிர்க்க முடியாதது என்பது வெளிப்படையாகின்றது. தவிர்க்க முடியாதவாறு இலங்கை தென்னிந்திய அரசியலில் சிக்கிக் கொண்டது. ஏழாம் நூற்றாண்டில் பல்லவர் எழுச்சியுடன் ஏற்பட்ட தொடர்பு இலங்கையைத் தென்னிந்தியப் பேரரசுகளுக்கிடையிலான போராட்டங்களில் பங்குகொள்ள வழிவகுத்தது.

முதலில் பல்லவரும் பாண்டியரும் மேலாதிக்கத்துக்காகப் போராடிய போது, சிங்கள மன்னர் பல்லவருக்குச் சார்பாக இருந்தனர். பின்னர் சோழப் பேரரசு எழுச்சி பெற, அதனால் பாதிக்கப்பட்ட பாண்டியருடனும் சேரருடனும் சிங்கள மன்னர் இணைந்து சோழரை எதிர்த்தனர். இந்த அரசியல் வளர்ச்சிகள் அனைத்தும் இலங்கையில் தமிழர் இனக் குழு வலுப்பெற இறுதியில் உதவின.

சமய அபிவிருத்திகள்

தேரவாத பௌத்தம்

பகுதி 2

தமிழ்நாட்டில் தேரவாத பௌத்தம் எழுச்சி பெற்றதன் விளைவாக அங்கு பாளி இலக்கியம் சிறப்புற்று வளர்ந்தது. இந்த வரலாறு இன்று மறக்கப்பட்ட ஒரு வரலாறாகி விட்டது. நான்காம் நூற்றாண்டு தொடக்கம் ஆறாம் நூற்றாண்டின் இறுதிவரை, தமிழ்நாட்டில் இருந்த தேரவாத பௌத்த மையங்களில், சிறப்பாகக் காஞ்சி, மதுரை, காவிரிப்பட்டினம் மற்றும் உறையூர் ஆகிய நகரங்களில் அமைந்திருந்த பௌத்தப் பெரும் பள்ளிகளில் தலைசிறந்த பௌத்த அறிஞர்கள் பாளி மொழியில் பல நூல்களை இயற்றியும் உரை நூல்களை எழுதியும் பாளி இலக்கிய வளர்ச்சிக்கு உதவினர். கவலைக்குரிய வகையில் இப்படைப்புகள் தமிழ்நாட்டில் பேணப்படவில்லை. பெரும்பாலும் இலங்கையிலேயே இவை பேணப்பட்டுள்ளன.

இக்காலப் பகுதியில் பௌத்த உலகில் மூன்று பெரும் அறிஞர்களாகக் கருதப்படும் புத்தகோசர், புத்ததத்தர் மற்றும் தம்மபாலர் ஆகியோர் தமிழ்நாட்டுப் பௌத்தப் பெரும்பள்ளிகளில் கடமையாற்றியவர்கள். இவர்களுள் இருவர், புத்ததத்தரும் தம்மபாலரும், தமிழ்ப் பௌத்தப் பிக்குமார் என்பது குறிப்பிடத்தக்கது. இம் மூவருள் கூடிய பிரசித்தி பெற்ற அறிஞர் புத்தகோசர். ஆனால் அவருடைய வாழ்க்கை வரலாறு பற்றி அதிக நம்பகமான தகவல்கள் இல்லை.

புத்தகோசர் இயற்றிய பாளி நூல்களுள் மிகவும் பிரபல்யமான இரு நூல்கள் அங்குத்தர நிகாய மற்றும் மஜ்ஜிம நிகாய ஆகியவற்றுக்கு அவர் எழுதிய உரை நூல்களாம். முதலாவது, புத்தகோசர் காஞ்சியில் இருந்த காலத்தில் எழுதப்பட்டது. மற்றது மயூரரூபபட்டன எனப் பாளியில் பெயர் பெறும் ஓர் இடத்தில் இருந்த பௌத்தப் பள்ளியில் அவர் வாழ்ந்தபோது எழுதப்பட்டது. இந்த இடம் மயிலாப்பூரைக் குறிக்கும் என ஒரு கருத்து உண்டு.

புத்ததத்தர் சோழநாட்டில் பிறந்தவர்; ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; வயதால் புத்தகோசருக்கு மூத்தவர். பௌத்த குருவாக காவேரிப்பட்டினம், உறையூர், பூதமங்கலம், காஞ்சி மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களில் இருந்த பெரும்பள்ளிகளில் பல பதவிகளை வகித்தவர். அவர் எழுதிய பாளி நூல்களுள் மிகவும் பிரபல்யமானவை விநய விநிச்சய, உத்தர விநிச்சய மற்றும் ஜினாலங்கார காவ்ய ஆகியவையாம். புத்ததத்தர் பெற்றுள்ள புகழுக்கு முக்கிய காரணம் அவர் எழுதிய உரை நூல்களே. இவர் அநுராதபுரத்துக்குச் சென்று அங்கு பழைய சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த உரை நூல்கள் பலவற்றைப் பாளியில் பெயர்த்தும் புதிதாக உரை நூல்கள் பல பாளியில் எழுதியும் புகழ் பெற்றுள்ளார். அவற்றுள் முக்கியமானவை மதுரத்த விலாஸினி மற்றும் அபிதம்மாவதார ஆகியவை.

தம்மபாலர் பற்றிய தகவல்கள் இலகுவில் பெற முடியாதவை. பல பௌத்த அறிஞர்கள் தம்மபால என்ற பெயர் பெற்றிருந்த காரணத்தால் அவர்கள் பற்றிய செய்திகள் வேறுபடுத்த முடியாத வகையில் கலந்து விட்டன. தமிழ்நாட்டில் பதரதித்த (கடலூர்) என்னும் இடத்தில் இருந்த பௌத்தப் பள்ளியில் வசித்த தம்மபாலர் ஓர் உரையாசிரியராகப் புத்தகோசரைப் போன்று புகழ் பெற்றவர். பல உரை நூல்களை எழுதியவர். அவற்றுள் மிகப் பிரபல்யம் பெற்ற நூல் பரமத்த தீபனீ

புத்தகோஷர் குறித்த ஓவியம்

Image source - www.flickr.com

என்பதாகும். நாகபட்டினத்தில் ஒரு பள்ளியில் வாழ்ந்த இன்னொரு தம்மபாலர் நெத்திபகரண என்ற நூலுக்கு உரை எழுதியவர்.

மஹாயான பௌத்தம்

இதுவரை குறிப்பிடப்பட்ட தமிழ்ப் பௌத்த அறிஞர்கள் அனைவரும் தேரவாத பௌத்தத்தைத் தழுவியவர்கள். அவர்கள் பெற்ற புகழ் காரணமாகத் தமிழ்நாட்டில் மேலோங்கிய பௌத்தப் பிரிவாகத் தேரவாதம் விளங்கியது என்ற கருத்துக்கு இடமுண்டு. ஆனால், இத்தேரவாத அறிஞர்களைப் போன்று சிறப்புப் பெற்ற பல மஹாயான பௌத்த அறிஞர்களும் இக்காலத்தில் தமிழ்நாட்டில் தோன்றினர். மஹாயானம் மட்டுமின்றி வேறு பௌத்த மதப்பிரிவுகளும் தமிழ்நாட்டில் இருந்தன. காஞ்சி போன்ற நகரங்களில் இம் மதப் பிரிவுகளைச் சேர்ந்த பள்ளிகள் இருந்தன. ஆனாலும் இவை பற்றிய வரலாற்றுத் தகவல்கள் அதிகம் பேணப்படவில்லை. பள்ளிகளின் அழிபாடுகளும் மறைந்து போயின. பேணப்பட்டுள்ள சமஸ்கிருத மஹாயான நூல்கள் மூலமாகவும் சீன நூல்கள் வாயிலாகவும் ஒரு சில தகவல்களைப் பெறக் கூடியதாய் உள்ளது.

தமிழ்நாடு தந்த பிரசித்தி பெற்ற மஹாயான அறிஞர்களுள் சிறப்பாக குறிப்பிடத்தக்க ஒருவர் பௌத்த மெய்யியலாளராகிய திண்ணாகர் (திக்நாக) என்பவராவர். இவர் காஞ்சிக்குத் தெற்கே சீயமங்கலம் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் வட இந்தியாவுக்குச் சென்று, பிரபல மஹாயான அறிஞராகிய வஸுபந்து என்பவருடைய போதனைகளை ஏற்று நாலந்தாவில் இருந்த பௌத்த கல்வி நிலையத்தில் (நாலந்தாப் பல்கலைக்கழகம் எனப் பொதுவாக இன்று பெயர் பெறும் நிறுவனத்தில்) ஒரு மெய்யியலாளராகவும், வாது செய்வதில் விற்பன்னராகவும் விளங்கினார். பின்னர் காஞ்சிக்குத் திரும்பி வந்து அங்கு தன் பிற்காலத்தைக் கழித்தார். பௌத்த மதத்தின் ஒரு தத்துவப் பிரிவாகிய விஞ்ஞானவாதத்தை விளக்கி முன் வைத்தவராக இவர் கருதப்படுகின்றார். இவர் எழுதிய இரண்டு முக்கிய நூல்கள் நியாயப்ரவேஸ மற்றும் நியாயஸமுச்சய ஆகிய சமஸ்கிருத நூல்களாம்.

இக்காலப் பகுதியில் தென்கிழக்காசியாவுடனான வர்த்தகம் துரித வளர்ச்சியடைய இந்தியத் துறைகளிலிருந்து சமயக் குரவர்களும், வணிகர்களுடன் தென்கிழக்காசிய அரசுகளுக்குச் சென்று வைணவம், சைவம் மற்றும் பௌத்தம் ஆகிய மதங்களின் வளர்ச்சிக்கு உதவினர். இந்தப் பண்பாட்டுப் பரம்பலில் தமிழ்நாட்டார் முக்கிய பங்கெடுத்தனர். தமிழ்ப் பௌத்த குருமார் மாமல்லபுரம், காவேரிப்பட்டினம், நாகபட்டினம் ஆகிய துறைகள் வழியாகத் தென் கிழக்காசியாவுக்கும் அப்பால் சீனாவுக்கும் சென்று சமய வளர்ச்சியில் ஈடுபட்ட வரலாறு இன்று மறக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சென்ற பௌத்த அறிஞர் பிற பௌத்த குருமாரைப் போன்று பாளிப் பெயர்களை அல்லது சமஸ்கிருதப் பெயர்களைத் தரித்திருந்தமையால், அவர்கள் பெயர்கள் பல ஆவணங்களில் பேணப்பட்டிருந்தாலும் அவர்களைத் தமிழ் நாட்டார் என அடையாளங் காண முடியாது.

இவ்வாறு கிழக்கு நாடுகளுக்குச் சென்ற தமிழ்ப் பௌத்த அறிஞர்களுள் ஐயத்திற்கிடமின்றி மிகவும் பிரசித்தி பெற்றவர் போதிதர்மர்

எனலாம். தமிழ்நாட்டில் இவர் பெயர் மறக்கப்பட்டாலும் இன்றும் இவர் பெயர் சீனர்களால் தமோ எனவும் ஜப்பானியரால் தரும எனவும் பேணப்பட்டு வருகின்றது. இதற்குக் காரணம் பிரசித்தி பெற்ற பௌத்த மதப் பிரிவாகிய தியான பௌத்தத்தை (ஆங்கிலத்தில்: *Zen Buddhism*) நிறுவியவராக இவர் கருதப்படுவதே. இதனால் இவர் வாழ்க்கை வரலாறு பற்றிய சில விபரங்கள் சீன நூல்களில் பேணப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு இவர் ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் காஞ்சியில் இருந்து சீனாவுக்குச் சென்றவர் என்றும் அறிய முடிகின்றது. சீன நூல்கள் சிலவற்றில் இவர் காஞ்சியில் ஆண்ட ஒரு மன்னனின் மகன் என்று கூறப்பட்டுள்ளது. போதிதர்மர் காஞ்சியில் பௌத்த பள்ளி ஒன்றில் வாழ்ந்த காலத்தில் அங்கு வந்த சீனப் பௌத்த துறவிகள் அவரைச் சீனாவுக்கு அழைத்துச் சென்றிருக்கலாம். அவரைப் போன்று வேறும் பல தமிழ்நாட்டுப் பௌத்த துறவிகள் தென்கிழக்காசியாவுக்கும் அப்பால் சீனாவுக்கும் அக்காலத்தில் சென்றனர் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய ஒரு பின்னணி தமிழ்நாட்டில் இருந்தபோது தமிழ்ப் பௌத்தர்கள் அங்கிருந்து இலங்கைக்குச் சென்று வரும் சூழ்நிலை நிலவியது எனலாம். அநுராதபுரத்தில் இக்காலகட்டத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தனர். அவர்களுடைய தமிழ்க் கல்வெட்டுகள் அநுராதபுரத்தில் கிடைத்துள்ளன. புத்தகோசர் அநுராதபுரத்தில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த மக்கள் பௌத்த போதனைகளைத் தமிழில் கேட்டு விளங்கிக் கொள்ளக் கூடிய நிலையில் இருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளார்.

சைவமும் வைணவமும்

தமிழ்நாட்டில் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டுகளில் பௌத்தம் தன் வளர்ச்சியின் உச்சக் கட்டத்தை அடைந்தது என்று கூறலாம். ஆறாம் நூற்றாண்டின் இறுதியளவில் இந்நிலை மாறத் தொடங்கியது. சைவமும் வைணவமும், பௌத்தத்தையும் சமணத்தையும் எதிர்த்து எழுந்தன. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்புதிய சூழ்நிலை பல்லவர் அரசிலும், பாண்டியர் அரசிலும் காணப்பட்டது. அப்பொழுது இரண்டு அரசுகளும் சமணத்தைத் தழுவிய மன்னர்களின் ஆட்சியில் இருந்தன. வெகு விரைவில் இந்நிலை மாறியது.

வடநாட்டு வைதிக சமயக் கருத்துகள் தென்னிந்தியாவில் வரலாற்றுத் தொடக்க காலத்திலேயே பரவத் தொடங்கின. தமிழ்நாட்டில் வாழ்ந்த பிராமணர் பற்றியும் பிராமணியச் சடங்குகள் பற்றியும் சங்க நூல்களில் சான்றுகள் காணப்படுகின்றன. படிப்படியாக வைதிக சமய வளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டு, தென்னிந்தியாவில் முன்னரே இருந்த சமய நம்பிக்கைகளுடன் கலந்து சைவமும் வைணமும் முக்கிய மதங்களாக முன்னேறின. ஆழமான தத்துவங்களைக் கொண்டிருந்தாலும், இம் மதப் பிரிவுகள் பொதுமக்கள் மட்டத்தில் பல்வகைப்பட்ட சடங்குகள் நிறைந்தவையாக அமைந்தன. சமயத்தின் மேல்மட்டத்துக்கும் கீழ்மட்டத்துக்கும் இடையில் பாலம் அமைக்கும் வகையில் நாயன்மார்களும் ஆழ்வார்களும், பக்தி இயக்கம் எனப் பெயர் பெறும் ஓர் இயக்கத்தைத் தொடங்கினர். இந்த மதப் பிரிவுகளுக்குரிய ஆழ்ந்த தத்துவ நூல்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும், பொதுமக்கள் விளங்கிக் கொண்ட தமிழ் மொழியில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் தம் தேவார திருப்பதிகங்களை இயற்றி மக்கள் ஆதரவைப் பரவலாகப் பெற்றுத் தமிழ்நாடு முழுவதும் தம் இயக்கத்தை நடத்தினர்.

இந்நிலைக்கு மாறாக, இறுக்கமான ஒழுக்க நெறிகளையும் கொல்லாமையையும்

கடைப்பிடித்துக் கடவுள் வழிபாடு இல்லாது அற வாழ்க்கையை நடத்துமாறு வற்புறுத்திய சமண, பௌத்த மதங்கள் பொதுமக்களிடையே பரவலான ஆதரவைப் பெறக் கூடிய மதங்களாக அமையவில்லை. அவற்றின் நெறிகள் பெரும்பாலும் உயர் குழாத்தினரைக் கவரக் கூடியவையாகவே காணப்பட்டன. தமிழ்நாட்டில் இம் மதங்களின் சிறப்பு உச்சநிலையை அடைந்திருந்த காலத்திலும் கூட அவை பொதுமக்கள் மத்தியில் பெரிதும் பரவியிருந்தன என்று கூறுவதற்கில்லை. இம் மதங்கள் பெரும்பாலும் நகர மையங்களிலும் வர்த்தக மையங்களிலும் உற்பத்தி நிலையங்களிலும் வேரூன்றிக் காணப்பட்டன. அம்மதங்களின் தத்துவங்கள் இவ்விடங்களில் செல்வாக்குப் பெற்ற உயர் குழாத்தினருக்குப் பொருத்தமானவையாக அமைந்தன. ஆகவே இம் மதத் தலைவர்களை எதிர்த்தெழுந்த நாயன்மார் அவர்களை வாதுக்கழைத்தபோது, அவர்கள் தத்துவங்கள் பொதுமக்கள் ஆதரவைப் பெறத் தவறியதில் வியப்பில்லை.

வல்லிபுரம் புத்தர் சிலை

Image source - namathu.blogspot.com

நாயன்மார் இயக்கம்

தமிழ்நாட்டில் நாயன்மார் தங்கள் இயக்கத்தைத் தொடங்கிய போது பொதுமக்கள் மீது அன்றி ஆட்சியாளர் மீது கவனம் செலுத்தினர். அப்பர் எனப் பலராலும் போற்றப்படும் திருநாவுக்கரசர், தானே சமணராக இருந்து சைவத்துக்கு மாறிய பின், பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்துக்கு மாற்றினார். இம் முக்கிய நிகழ்ச்சியுடன் சைவம் வெற்றிகரமாகத் தமிழ்நாடு முழுவதும் எழுச்சி பெறத் தொடங்கியது. அப்பர் காலத்தவராகிய திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில், முதலில் மன்னன் மனைவியாகிய மங்கையர்க்கரசியைச் சமணத்திலிருந்து சைவத்துக்கு மதம் மாற்றி, பின்னர் மன்னனின் மதமாற்றத்துக்கும் உதவினார். இவ்விரு நிகழ்ச்சிகளும் பல்லவ அரசிலும் பாண்டிய அரசிலும் உயர் குழாத்தினர் சைவத்தைத் தழுவி, அதன் வளர்ச்சிக்கு உதவ வழிகோலின.

சைவமும் வைணவமும் இவ்வாறு முன்னேறிச் சென்றபோது தவிர்க்க முடியாதவாறு இவை சமணத்துடனும் பௌத்தத்துடனும் மோத வேண்டிய நிலை உருவாகியது. பகிரங்க வாதுக்களும் சமயப்பொறையின்மையும் இப்பூசல்களின் பண்புகளாயின. கழுவேற்றல் மற்றும் நாடு கடத்தல் போன்ற கடுந் தண்டனைகளும் விதிக்கப்பட்டன. எட்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் சமணமும் பௌத்தமும் வலுவிழந்து வீழ்ச்சியுற, சைவமும் வைணமும் மேலோங்கின.

இத்தகைய ஒரு பின்னணியில் பல இன்னல்களுக்கு இலக்காகிய சமணர்களும் பௌத்தர்களும் தமிழ்நாட்டிலிருந்து வேறு இடங்களுக்குச் சென்று புகலிடம் பெற்றனர். சமணர்கள் பொதுவாக வடக்கு நோக்கி கர்நாடக, ஆந்திர அரசுகளுக்குச் சென்றனர். ஆனால் பௌத்தர் தெற்கு நோக்கி இலங்கைக்குச் சென்றனர். பௌத்தம் பரவிய காலத்திலிருந்தே தமிழ்நாட்டுப் பௌத்த சங்கத்தார்க்கும் இலங்கைப் பௌத்தச் சங்கத்தார்க்கும் இடையில் நெருங்கிய உறவு உருவாகியிருந்தது. இந்த உறவு பற்றிய தமிழ்நாட்டு ஆவணங்கள் கிடைக்காவிட்டாலும், இலங்கையின் பாளி நூல்களில் சான்றுகள் இருக்கின்றன. அநுராதபுரத்தில் அரசியல் நெருக்கடியால் பௌத்த சங்கத்தார் பாதிக்கப்பட்டபோது தமிழ்நாட்டுக்கு ஓடிச் சென்றனர். அநுராதபுரத்தில் பௌத்த நூல்களை ஆய்வு செய்ய தமிழ்நாட்டுப் பௌத்தப் பள்ளிகளில் இருந்து அறிஞர்கள் சென்றனர். இத்தகைய தொடர்புகள் இருந்த போது, தமிழ்நாட்டுப் பௌத்த சங்கத்தார் சைவ, வைணவ இயக்கத்தால் இன்னலுக்கு இலக்காகிய போது, இயல்பாகவே இலங்கைப் பௌத்த சங்கத்தார் உதவிக்குச் சென்றனர். அத்துடன் புகலிடமும் கொடுத்தனர்.

நாயன்மார்களுக்கும் பௌத்த சங்கத்தார்க்கும் இடையில் நிகழ்ந்த தகராறுகளில் இலங்கைப் பௌத்த சங்கத்தார் கொண்ட பங்கு பற்றி அறியப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. எனினும் இது பற்றிய கதைகள் சில இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பேணப்பட்டுள்ளன. சைவக் குரவர்களுள் ஒருவராகிய மாணிக்கவாசகர் பௌத்தர்களை வாதில் வென்ற கதை இவற்றுள் ஒன்று.

சமணர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் கூட பகிரங்க வாதுக்கள் நடைபெற்றதாகக் கூறும் கதைகளும் உள்ளன. இவற்றுள் அகலாங்கர் என்ற சமணர் பற்றிய கதை குறிப்பிடத்தக்கது. இக் கதை கன்னட மொழியிலும் தெலுங்கு மொழியிலும் உள்ள மூலங்களில் காணப்படுகின்றது. இக் கதையின்படி, கர்நாடகத்திலிருந்து வந்த சமண முனிவராகிய அகலாங்கர் காஞ்சியில் பௌத்த சங்கத்தாருடன் வாது செய்து அவர்களை வெற்றி கொண்டார். தோல்வியுற்ற பௌத்தர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவ்வாறு கிடைக்கும் கதைகளின் விபரங்களை உறுதி செய்ய முடியாவிட்டாலும், இவை அக்காலத்தில் நடைபெற்ற தகராறுகளின் விளைவாக சில பௌத்தர்கள் இலங்கைக்குப் புலம்பெயர்ந்தனர் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டுள்ளன எனலாம். அரசியல் நெருக்கடி மற்றும் பஞ்சம் போன்ற பொருளியல் சார்ந்த இன்னல்கள் ஏற்பட்டபோது இலங்கைப் பௌத்த சங்கத்தார் தமிழ்நாட்டுப் பள்ளிகளுக்குச் சென்றது போல், இக்காலத்துச் சமயப் பூசல்களின் போது தமிழ்நாட்டுப் பௌத்த சங்கத்தார் இலங்கையிலிருந்த பள்ளிகளில் புகலிடம் பெற்றிருப்பர். பிற பௌத்தர்களும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்திருப்பர். சிங்கள மொழியிலுள்ள மக்கள் இலக்கியத்தில் பேணப்பட்டுள்ள மரபுகளை ஆய்வு செய்த மானிடவியலாளர் பேராசிரியர் கணநாத் ஒபயஸேகர, இம்மரபுகளில் தென்னிந்தியாவிலிருந்து பௌத்தர்கள் புலம்பெயர்ந்து இலங்கைக்குச் சென்றதற்கான சான்றுகள் காணப்படுவதை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

பௌத்தம் வருவித்த தென்னாட்டார்

பௌத்தம் தமிழ்நாட்டில் வலுவிழந்த காலத்தில் இலங்கைக்குச் சென்ற தமிழர்களுக்கு முன்னர், அதாவது பௌத்தம் செழிப்புற்றிருந்த காலத்தில், பௌத்த கலைஞர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்று அங்கு வாழ்ந்த தமிழ் இனக்குழுவை மேலும் வலுப்படுத்துவதற்கு உதவினர். பொ.ஆ.மு. 300 இற்கும் 900 இற்கும் இடையில் ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தமிழ்நாடு மற்றும் கேரளம் ஆகிய தென்னிந்தியப் பகுதிகளிலிருந்து சிற்பிகளும் பிற கலைஞர்களும் இலங்கைக்குச் சென்று பணியாற்றினர் என்பதற்குத் தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகள் உள்ளன.

மூன்றாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் தென்னிந்தியாவிலிருந்து பரவிய பௌத்த மதச் செல்வாக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு ஆந்திரத்திலிருந்து வந்தது. அநுராதபுரத்தில் மட்டுமன்றி வடக்கில் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலும் இச் செல்வாக்குக் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஆந்திரத்திலிருந்த பிரசித்தி பெற்ற பௌத்த தலங்களாகிய அமராவதி மற்றும் நாகார்ஜுனக்கொண்டா ஆகிய இடங்களிலிருந்து பௌத்த சங்கத்தார் வந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. இலங்கையிலிருந்து ஆந்திரத்துக்குச் சென்ற பௌத்த துறவிகள் அமராவதியில் தங்கியிருப்பதற்கு ஒரு பள்ளி சிங்கள விகாரை என்ற பெயரால் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இலங்கையிலும் ஆந்திரத்துப் பௌத்த துறவிகள் தங்குவதற்குப் பள்ளிகள் இருந்திருக்கும் எனலாம்.

சங்கத்தார் மட்டுமின்றி, பௌத்த சிற்பங்களையும் கட்டிடங்களையும் அமைப்பதற்குக் கூட ஆந்திரத்திலிருந்து சிற்பிகள் வந்திருப்பர். அவர்கள் இலங்கையில் பணியாற்றியதற்குச் சான்றாக ஆந்திரக் கலையின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும் சிற்பங்கள் கிடைத்துள்ளன. சில ஆந்திரக் கலை வேலைப்பாடுகள் ஆந்திரத்திலே செய்யப்பட்டு வர்த்தகர்களால் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஆந்திரச் சிற்பக் கலையின் செல்வாக்குக் கூடுதலாகக் காணப்பட்ட இடம் இலங்கையின் வடபாகம் ஆகும். ஆந்திரப் பாணியில் அமைந்துள்ள புத்தர் சிலைகள் பல யாழ்ப்பாண மாவட்டத்தில் சுன்னாகம் மற்றும் வல்லிபுரம் ஆகிய இடங்களிலும், அநுராதபுர மாவட்டத்தில் அநுராதபுரம் மற்றும் மஹ இல்லுப்பள்ளம போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளன. இவற்றுள் சில ஆந்திரத்தில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்ட சிலைகள். ஆந்திரச் சிற்பிகள் இக்காலப் பகுதியில் இலங்கையின் வட பாகத்தில் பணியாற்றியிருப்பர் என்பதை மறுப்பது கடினம்.

ஆறாம் நூற்றாண்டுக்குப் பின் பல்லவ அரசிலிருந்து சிற்பிகளும் பிற கலைஞர்களும் இலங்கைக்குச் சென்றிருந்தனர். தமிழ்நாட்டில் பல்லவர் ஆட்சியிலேதான் தனிக் கற்களால் கோயிலமைக்கும் முறை தொடங்கப்பட்டது. இத்தகைய கட்டிடக் கலையில் திறமை பெற்ற சிற்பிகள் இலங்கைக்குச் சென்று இம்முறையை அறிமுகப்படுத்தினர். அதன் விளைவாய் அமைக்கப்பட்ட கட்டிடங்களுள் நாலந்தாவிலுள்ள கெடிகே மற்றும் தெற்கு இலங்கையில் தெவுந்தர (தெவிநுவர) என்னும் இடத்தில் உள்ள உற்பலவண்ணன் ஆலயம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

பல்லவர்களுடைய சிற்பப் பாணி கிழக்கு இலங்கையிலும் அநுராதபுரத்திலும் உள்ள பல சிற்ப வேலைப்பாடுகளில்

வெளிப்படுகின்றது. அநுராதபுரத்தில் இஸுருமுனிய என்ற இடத்தில் ஐயத்திற்கிடமின்றிப் பல்லவ அரசிலிருந்து சென்ற சிற்பிகளின் கைத்திறனை வெளிப்படுத்தும் படைப்புகளாகப் பாறையில் செதுக்கப்பட்டுள்ள புடைப்புச் சிற்பங்கள் அமைகின்றன. இவற்றுள் ஒன்று ஐயனார் சிற்பம் என அடையாளம் கண்டுகொள்ளப்பட்ட 'குதிரைத் தலையும் மனிதனும்' எனப் பொதுவாக வர்ணிக்கப்படும் சிற்பமாகும். பல்லவர் சிற்பக் கலையின் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ள இச் சிற்பம் கலை விமர்சகர்களால் போற்றப்படும் ஒரு சிறந்த வேலைப்பாடாகும். இதற்கு அருகில் உள்ள பாறைப் புடைப்புச் சிற்பம் மாமல்லபுரத்தில் உள்ள மிகப் பிரசித்திபெற்ற பாறைச் சிற்பத்தை ஒத்துள்ளது.

அநுராதபுரத்துக்கு வெளியே கிழக்குக் கரையோரத்தில் மஹாயான பௌத்தத் தலங்களில் பல்லவர் சிற்பக் கலையின் செல்வாக்கைப் பிரதிபலிக்கும் அழகிய சிற்பங்கள் சில கிடைத்துள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் திரியாய் என்னும் இடத்தில் உள்ள மஹாயான சைத்தியத்தின் துவாரபாலகர் சிற்பங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸிதுல்பவு (சித்தலப்பர்வதம்) மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களிலுள்ள பௌத்த சிற்பங்கள் பல்லவர் பாணியில் அமைந்துள்ளன.

சிற்பங்களைச் செய்வதற்கு மட்டுமின்றி, மஹாயான பௌத்தர்களுடைய சமஸ்கிருதக் கல்வெட்டுகளைத் தமிழ்நாட்டு எழுத்து முறையாகிய பல்லவ கிரந்த எழுத்தில் பொறித்து வைப்பதற்கும் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டுச் சிற்பிகள் சென்றிருந்தனர் என்பதைக் காட்டும் கல்வெட்டுகள் கிழக்கு இலங்கையிலும் வேறு இடங்களிலும் கிடைத்துள்ளன.

வர்த்தக வளர்ச்சி

பல்லவர்களுடைய ஆதிக்கப் படர்ச்சியின் ஒரு முக்கிய விளைவு கடல் வணிகம் முன்னேற்றமடைந்து வணிக கணங்களின் நடமாட்டம் வங்காள விரிகுடாவில் தென்னிந்தியாவுக்கும் தென்கிழக்கு ஆசியாவுக்கும் இடையில் பெருகியமையாகும். இதன் ஒரு கூறாக இலங்கையுடன் நடைபெற்ற வணிகம் அமைந்தது. இலங்கையில் தமிழ் இனக்குழு மேலும் வலுப் பெறுவதற்கு உதவிய காரணிகளுள் மிகவும் முக்கியமானதாக இவ் வணிக வளர்ச்சியைக் கருத வேண்டும்.

இந்தியாவுக்கும் தென்கிழக்காசியாவுக்கும் இடையில் வளரத் தொடங்கிய வர்த்தகம் முதலாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டுத் துறைகளையும் தொடர்புபடுத்தி முன்னேறியது. இவ் வர்த்தகத்தில் தமிழ்நாட்டு வணிகர்களும் படிப்படியாகக் கூடிய பங்கைப் பெற்றனர் என்று கூறலாம். ஐந்தாம் நூற்றாண்டின் பின்னர் பல்லவப் பேரரசு எழுச்சிபெறத் தொடங்கியதும், தமிழ்நாட்டின் கடல் கடந்த வர்த்தகம் செழிப்புற்றது. ஆறாம் நூற்றாண்டிலிருந்து ஏறக்குறைய ஆறு நூற்றாண்டுகளாகத் தென்கிழக்காசிய வர்த்தகத்தில் தமிழ்நாட்டு வணிகர் முக்கிய பங்கெடுத்தனர். அவர்கள் செயல்களால் வர்த்தகம் வளர்ச்சியுற்றது மட்டுமின்றித் தென்கிழக்காசியாவிலும் இலங்கையிலும் பல்லவர் பண்பாட்டுக் கூறுகளும் பௌத்த, சைவ சமயங்களின் செல்வாக்கும் பரவின.

ஆறாம் நூற்றாண்டிலிருந்து கவனிக்கக்கூடிய ஒரு விஷயமாக வணிக கணங்களின் வளர்ச்சி அமைகின்றது. பல்லவ அரசின் எழுச்சி கடல் கடந்த வர்த்தகத்துக்குத் துணையாக இருந்த சூழ்நிலையில் வணிக கணங்கள் தமிழ்நாட்டுத் துறைகளிலிருந்து இலங்கைக்கும் தென்கிழக்காசியாவுக்கும்

மாணிக்க வாசகர் சிலை

Image source - www.youtube.com/Sivoham TV

போதிலும், அவற்றில் இம் முக்கிய வர்த்தகம் பற்றிய தகவல்களைப் பெறுவது அரிது. இதற்கு விதிவிலக்காக, மணிமேகலையில் சாவகம் (இந்தோனேசியா) நோக்கிப் புறப்பட்ட கப்பல்கள் பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. தென்னிந்திய வணிகர்கள் எவ்வாறு கணங்களாக இயங்கினர்? வங்காள விரிகுடாவைத் தாண்டி அடிக்கடி தென்கிழக்கு

கூடுதலாகச் செல்லும் அளவுக்கு வலுப் பெற்றன. இதனை வெளிப்படுத்தும் தொல்லியல் சான்றுகள் தமிழ்நாடு, இலங்கை மற்றும் தென்கிழக்காசிய நாடுகளாகிய தாய்லாந்து, வியட்நாம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவ்விடங்களில் தென்னிந்திய வணிக கணங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பௌத்த சங்கத்தார், பிராமணர்கள் மற்றும் சிற்பிகள் ஆகியோரும் பங்கு கொண்டனர். கிழக்குக் கரைத் துறைகள், குறிப்பாக நாகபட்டினமும் மாமல்லபுரமும், வங்காள விரிகுடாவுக்கு அப்பால் கிழக்கு இலங்கையின் துறைகளாகிய பல்லவ வங்கம், திருகோணமலை ஆகிய துறைகளுடனும் தென்கிழக்காசியாவில் தாய்லாந்தின் தக்குவாபா, வியட்நாமின் ஒக்இயோ ஆகிய துறைகளுடனும் வர்த்தக மார்க்கங்களால் தொடுக்கப்பட்டிருந்தன.

இந்த ஆர்வமூட்டும் வர்த்தக வரலாற்றைப் பற்றி விரிவாக அறிவதற்கு பத்தாம் நூற்றாண்டு வரை ஆவணங்கள் கிடையாது போனமை கவலைக்குரிய விஷயமே. இக் காலகட்டத்தில் பெருமளவு இலக்கியப் படைப்புகள் தமிழ்நாட்டில் இருந்த

ஆசியா சென்று வர எத்தகைய கப்பல்கள் பயன்பட்டன? எடுத்துச் செல்லப்பட்ட வர்த்தகப் பொருள்கள் யாவை? இவை எவ்வாறு பொதி செய்யப்பட்டு ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்பட்டன? சென்ற இடங்களில் தமிழ்நாட்டுக் கணங்கள் எவ்வாறு இயங்கின? இவை போன்ற அடிப்படை வினாக்களுக்கு விடை காண முடியாத நிலையில் இவ் வர்த்தகம் பற்றிய அறியாமை நிலவுகின்றது. இலக்கியச் சான்றுகள் மட்டுமன்றி கல்வெட்டுச் சான்றுகள் கூட 900 இற்கு முன் அரிதாகவே கிடைக்கின்றன. அஞ்சு வண்ணம் மற்றும் மணிக்கிராமம் போன்ற வணிக கணங்கள் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் கிடைக்கவில்லை.

மிகப்பழைய தென்னிந்திய வணிக கணங்களுள் ஒன்று மணிக்கிராமம். இந்த வணிக கணத்தைப் பற்றி ஆவணங்கள் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாய் தென்னிந்தியா, இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. பத்தாம் நூற்றாண்டில் இலங்கையில் உள்ளூர்ப் பகுதியாகிய

மஹியங்கனைக்கு அருகாமையில் ஹோபிடிகம என்ற இடத்தில் மணிக்கிராமத்தவர் வர்த்தகம் நடத்தினர் என்பதற்குக் கல்வெட்டுச் சான்றுண்டு. இப்படியான உள்ளூர் வர்த்தக மையம் ஒன்றில் தம் முயற்சிகளில் ஈடுபட்ட மணிக்கிராமத்தவர் முதலில் கரையோர மையங்களாகிய திருகோணமலை, மாதோட்டம் போன்ற இடங்களில் தங்கள் நிலையங்களை நிறுவியிருப்பர் எனலாம்.

ஒன்பதாம் நூற்றாண்டில் மணிக்கிராமத்தவர் தாய்லாந்தின் தக்குவா பா என்னும் துறையில் பல வகைப்பட்ட முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதற்கு அவ்விடத்தில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று சான்று பகருகின்றது. இதே நூற்றாண்டில் இவ்வணிக கணத்தினர், கேரளக் கரையோரத்திலும் பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து வர்த்தகம் நடத்திய பிற வணிக கணங்கள் மற்றும் வர்த்தகக் குழுவினர் ஆகியோருள் நான்கு நாட்டார் என்ற கணத்தைச் சேர்ந்தோரும் செட்டிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அநுராதபுரத்தில் சில சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகின்றது. நான்கு நாட்டார், பௌத்தப் பள்ளி ஒன்றுக்கு ஆதரவு வழங்கியவர்களாகவும், செட்டிகள் சைவக் கோயில் ஒன்றுக்கு வழங்கப்பட்ட பணத்தை வைப்பாகப் பெற்றிருந்ததையும் இவற்றால் அறியலாம்.

தென்னிந்திய வணிக கணத்தினர் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளுக்கு முன்னரே சமய நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குவோராகவும் பிராமணர்களையும் பௌத்த சங்கத்தாரையும் தென்னிந்தியாவுக்கு வெளியே கொண்டு செல்ல உதவுவோராகவும், சிற்ப, கட்டிட வேலைப்பாடுகளை அமைப்பதற்கு சமய நிறுவனங்களுக்கு உதவுவோராகவும் செயலாற்றினர் என்பதை மறைமுகமான சான்று கொண்டு அறியலாம். இச் சான்று கல்வெட்டுகள், சிற்பங்கள் மற்றும் கட்டிட அழிபாடுகள் ஆகியவற்றின் வடிவத்தில் இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும் கிடைக்கின்றது. பிற்பட்ட காலத்தில் கொழும்பு, கோலாலம்பூர் மற்றும் சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இந்துக் கோயில்கள் அமைப்பதிலும் அவற்றைப் பராமரிப்பதிலும் தமிழ்நாட்டிலிருந்து சென்ற செட்டி சமூகத்தினரும் பிற வணிகர்களும் உதவியது போன்றதே முன்னர் வணிக கணங்கள் எடுத்த முயற்சிகள் எனலாம்.

ஐந்தாம் நூற்றாண்டுக்கும் ஏழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த சமஸ்கிருதக் கல்வெட்டுகள் பல இலங்கையிலும் தென்கிழக்காசிய நாடுகளிலும் கிடைத்துள்ளன. இவை தென் பிராமி எனப்படும் எழுத்திலும் அதன் வழியாக உருவாகிய பல்லவ கிரந்தம் என்ற எழுத்திலும் உள்ளன. இந்த எழுத்து முறைகள் பல்லவர் ஆண்ட பகுதிகளில் சமஸ்கிருதத்தை எழுதுவதற்குப் பயன்பட்டவை. ஆகவே, இந்த எழுத்து முறைகளைக் கையாண்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டமை பல்லவப் பிரதேசத்திலிருந்து வந்த சிற்பிகளும், பிராமணர்களும், வணிகர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று முயற்சிகளில் ஈடுபட்டதற்குச் சான்றாகும். பெரும்பாலும் இக் கல்வெட்டுகளுடன் சைவ, வைணவச் சிலைகள் மற்றும் கோயில்களின் அழிபாடுகள் ஆகியவையும் கிடைத்துள்ளமை இக் கருத்துக்கு

வலுவூட்டுகிறது.

இப்படியான தொல்லியல் ஆதாரங்களுள் மிக முற்பட்ட ஒன்றாக லாஓஸ் நாட்டில் சம்பஸ்ஸக் என்னும் இடத்தில் கிடைத்த சான்றினைக் குறிப்பிடலாம். சம்பஸ்ஸக் நகரத்தில் உயரிய தூண் ஒன்றில் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த தென் பிராமி எழுத்தில் ஒரு சமஸ்கிருதக் கல்வெட்டு உள்ளது. சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய தெய்வங்களுக்கு அமைக்கப்பட்டிருந்த நிறுவனம் ஒன்றுடன் தொடர்புடைய கல்வெட்டாக அது இருந்தது. சம்பஸ்ஸக் நகரத்துக்கு அருகாமையில் ஏழாம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வேறு இரு சமஸ்கிருதக் கல்வெட்டுகள் பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்டவையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. லாஓஸ் நாட்டுக்கு அருகில் உள்ள வியட்நாமில், பழைய 'பு - நான்' அரசு இருந்த தென் பகுதியில், இரண்டாம் நூற்றாண்டுக்கும் ஆறாம் நூற்றாண்டுக்கும் இடையில் ஒரு முக்கிய துறையாக விளங்கிய ஒக்இயோ என்ற இடத்தில் இன்னொரு சமஸ்கிருதக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது. தென் பிராமி எழுத்தில் உள்ள இக்கல்வெட்டு வர்த்தமானர் என்ற தெய்வத்துக்குக் கட்டப்பட்ட ஒரு கோயில் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவை போல மேலும் பல கல்வெட்டுகள் பல்லவ - கிரந்த எழுத்தில் எழுதப்பட்டவையாய் தாய்லாந்திலும் மலேஷியாவிலும் கிடைத்துள்ளன.

பல்லவ கிரந்த எழுத்திலுள்ள சமஸ்கிருதக் கல்வெட்டுகள் இலங்கையிலும் கிடைத்துள்ளன. இவை சிறப்பாகத் தமிழர் செல்வாக்குப் பெரிதும் காணப்பட்ட வடகிழக்கு இலங்கையில் கிடைத்துள்ளன. திருகோணமலைக்கு வடக்கே திரியாய் என்ற இடத்தில் இருந்த மஹாயான வழிபாட்டுத் தலத்தில் ஒன்றும் திருகோணமலைக்குத் தெற்கே குச்சவெளியில் இன்னொன்றும் கிடைத்துள்ளன. உள் நாட்டில் மிஹிந்தலையிலும் ஒரு சமஸ்கிருதக் கல்வெட்டுக் கிடைத்துள்ளது.

பல்லவ கிரந்தம் மஹாயான பௌத்தர்களால் மட்டுமன்றித் தேரவாத பௌத்தர்களாலும் பிறராலும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக சிங்கள எழுத்தின் வளர்ச்சியில் சில தாக்கங்கள் ஏற்பட்டன. குகைக் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்ட பிராமி எழுத்திலிருந்து படிப்படியாக மாறி சிங்கள எழுத்தாக உருவாகிக் கொண்டு வந்த எழுத்து முறை பல்லவ கிரந்தத்தினால் பாதிக்கப்பட்டுப் புதிய வழியில் பரிணாமம் பெற்றது.

இவ்வாறு பல்லவ அரசிலிருந்து பரவிய செல்வாக்கு தமிழ்நாட்டிலிருந்து பௌத்த சங்கத்தாரும், சைவ சமயத் தலைவர்களும் மற்றும் பல்லவ கிரந்தத்தில் கல்வெட்டுகளைப் பொறிப்பதற்குத் தேர்ச்சி பெற்ற சிற்பிகளும் இலங்கைக்குச் சென்றிருந்தமையைக் காட்டி நிற்கின்றது.

நீர்ப்பாசனவியல் தொழில்நுட்பம்

இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் நெருங்கிய உறவு ஏற்பட்ட இன்னொரு துறை நீர்ப்பாசனவியல் தொடர்பான துறையாகும். இது பற்றிப் பெரும்பாலும் இலங்கை வரலாற்றாசிரியர்கள் கவனம் செலுத்தவில்லை. வரலாற்றுத் தொடக்கக் காலத்திலிருந்து தொடர்ச்சியாக, இத் துறையில் ஏறத்தாழ 1000 ஆண்டுகளாகத் தொழில்நுட்ப அறிவுப் பரிமாறல் மற்றும் நீர்ப்பாசன அமைப்புத் தொழிலாளர் வருகை ஆகியவை இரு பிரதேசங்களுக்கும் இடையில் நடைபெற்றன.

இலங்கையில் நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் ஆதி இரும்பு காலப்



அமராவதி விகாரையின் வடிவம்

Image source - openresearch-repository.anu.edu.au

பண்பாட்டைத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டு வந்தோரால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவர்கள் ஆதி இரும்பு காலப் பண்பாட்டுக் கூறுகளாகிய இரும்பின் உபயோகம், நெற் பயிர்ச்செய்கை, தொடக்க நிலையிலிருந்த நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் மற்றும் சிறு குளங்களைத் தோண்டும் கலைத்திறன் ஆகியவற்றை இலங்கைக்குக் கொண்டுவந்து பரப்பினர்.

குடியிருப்புகள் பெருகி விவசாய முயற்சிகள் முக்கியத்துவம் பெற்றபோது போதிய நீரைப் பயிர்ச்செய்கைக்குத் தேக்கி வைக்க வேண்டிய அவசியம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் தோன்றிய அரசமைப்புகளில் தொடக்கக் கட்டத்திலேயே உணரப்பட்டது. அநுராதபுரத்தில் தோன்றிய அரசில் அமைக்கப்பட்ட குளங்கள் பற்றி இலங்கையின் பாளி வரலாற்று நூல்கள் தகவல் தருகின்றன. தமிழ்நாட்டின் சங்கச் செய்யுள்கள் ‘குளம் தொட்டு வளம் பெருக்கிய’ மன்னர்களைப் புகழ்ந்துரைக்கின்றன. குடிகளின் பயிர்ச் செய்கைக்குத் தேவைப்பட்ட நீரைப் போதிய அளவில் பெறுவதற்கான முறையில் குளங்களையும் அணைகளையும் அமைப்பது தொடக்க கால மன்னர்களுடைய முக்கிய இலட்சியங்களுள் ஒன்றாக இருந்தது என்பது தெளிவு. சமய நிறுவனங்களை அமைக்கும் கடமை போல் குளங்களை அமைக்கும் கடமை மன்னர்களுடைய

தலையாய கடமை ஆகியது. இக் காரணத்தினாலே தான் இலங்கையின் பாளி வரலாற்று நூல்களிலே, சுருக்கமாக ஒவ்வொரு மன்னனுடைய வரலாறும் கூறப்படும் போது, அம்மன்னன் கட்டிய சமய நிறுவனங்களும் நீர்ப்பாசனக் குளங்களும் தவறாது குறிப்பிடப்படுகின்றன. தென்னிந்திய மன்னர்களும் குளங்களை அமைப்பதில் கவனஞ் செலுத்தினர் என்பதற்குச் சான்று இருந்தாலும், அவர்கள் அமைத்த குளங்கள் பற்றிய விபரங்கள் இலங்கையைப் போல வரலாற்றேடுகளில் பேணப்படவில்லை. ஆனால் ஆறாம் நூற்றாண்டின் பின், கல்வெட்டுகள் முன்னைவிடப் பரவலாகப் பொறிக்கப்பட்ட போது, குளங்கள் பற்றிய தகவல்களும் கிடைக்கத் தொடங்குகின்றன.

கரிகாலன் கதைகள்

குளம் தொட்டு வளம் பெருக்கிய ஒரு பெரு மன்னனாக மிகவும் முற்பட்ட ஒரு கட்டத்திலேயே புகழ் பெற்ற ஒரு தமிழ் மன்னன் கரிகாலச் சோழன் ஆவான். இவன் காலத்தை உறுதியுடன் கூறுவதற்குச் சான்று இல்லை. இவன் பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்திருக்கலாம். சங்கச் செய்யுளாகிய பட்டினப் பாலையில் கரிகாலன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கி அரசின் வளர்ச்சிக்குப் பெருந் தொண்டாற்றியவனாகப் போற்றப்படுகின்றான். பிற்பட்ட காலத்துத் தெலுங்குச் சோழர் மற்றும் முதலாம் ராஜேந்திர சோழன் ஆகியோர் கல்வெட்டுகளிலும் காவேரி நதியின் அணைக்கட்டுக்களை உயர்த்திய மன்னனாக கரிகாலன் நினைவு கூரப்படுகின்றான். இலங்கையிலும், குறிப்பாகக் கரிகாலன் பற்றியும் பொதுப்படச் சோழ மன்னன் ஒருவன் பற்றியும், நீர்ப்பாசனம் தொடர்பாகப் பல கதைகள் சிங்கள வரலாற்றேடுகளிலும் பொதுமக்கள் இலக்கியத்திலும் பேணப்பட்டுள்ளன. இக் கதைகளில் காணப்படும் விபரங்களை உண்மை என ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும், மன்னர்கள் குளம் மற்றும் அணை ஆகியவற்றை அமைத்து வளம் பெருக்குவதில் காட்டிய ஆர்வம் இக் கதைகள் மூலம் வெளிப்படுகின்றது.

மூன்றாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையுள்ள காலத்தில் அநுராதபுரத்தில் அரசைக் கைப்பற்ற விழைந்தோர் பல தடவைகள் தென்னிந்தியாவுக்கு ஓடிச் சென்று படை திரட்டி வந்தனர். போரில்லாத போது இப்படிக் கொண்டுவரப்பட்ட படையினர் நீர்ப்பாசன வேலைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருப்பர். இப்படியான நிகழ்ச்சிகள் இலங்கையில் வழங்கும் கரிகாலன் கதைகளுக்கு வழிவகுத்திருக்கலாம். கரிகாலன் மற்றும் அநுராதபுர மன்னன் கஜபாகு ஆகியோர் பற்றி வழங்கும் கதைகளில் உட் பொருளாக அமைவது என்னவெனில், காவேரியில் அணைகட்ட சோழ மன்னன் 12,000 கைதிகளை இலங்கையிலிருந்து கொண்டு சென்றான் என்பதுவும், பின்னர் அதைக் கேள்வியுற்ற அநுராதபுரத்து மன்னன் கஜபாகு என்பான் சோழ நாட்டுக்குப் படையெடுத்துச் சென்று அக் கைதிகளை மட்டுமின்றி, அங்கிருந்து மேலும் 12,000 கைதிகளைக் கொண்டு வந்து இலங்கையில் குடியேற்றினான் என்பதும் ஆகும். பெருங் குளங்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்ட போது, சில இலங்கை மன்னர்கள் தென்னிந்தியாவிலிருந்து வேலையாட்களைத் திரட்டியிருக்கலாம். இப்படியாகப் பல தமிழர்கள் இலங்கைக்கு இக் காலத்தில் வந்து குடியேறித் தமிழ் பேசும் இனக் குழுவை மேலும் வலுப்படுத்தியிருப்பர்.

நீர்ப்பாசன வேலைகளில் வணிக கணங்களின் பங்கு

குளங்களையும் கால்வாய்களையும் அமைப்பதற்கு மன்னர்கள் மட்டும் பொறுப்பாக இருந்தனர் என்று கூற முடியாது. இக் காலகட்டத்தில் குளங்களை அமைப்பதிலும் பராமரிப்பதிலும் வணிக கணங்களும் பங்கு கொண்டனர் எனக் கொள்ள இடமுண்டு. தென்னிந்தியாவின் பிரசித்தி பெற்ற ஒரு வணிக கணமாகிய மணிக்கிராமம், ஒன்பதாம் நூற்றாண்டில் தாய்லாந்தில் தக்குவாபா என்னும் இடத்தில் அவனிநாரணம் என்ற குளத்தைப் பராமரிப்பதற்கு பொறுப்பேற்றிருந்தது. இவ்வாறு வர்த்தகம் அல்லாத பிற முயற்சிகளிலும் வணிக கணத்தினர் ஈடுபட்டனர்.

குளம் தொட்டுப் பராமரித்தல் மற்றும் சமய நிறுவனங்களை அமைத்தல் போன்ற முயற்சிகள் வணிக கணத்தார் ஈடுபட்ட வர்த்தகமல்லாத முயற்சிகளுள் சில ஆகும். தென்னிந்திய வணிக கணங்கள் கடல் கடந்த வர்த்தகத்தில் பெரிதும் ஈடுபட்ட காலமாகிய 300 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட தொடக்கக் கட்டம் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பிடத்தக்க நீர்ப்பாசன வசதிகள் அமைக்கப்பட்ட காலகட்டமாகும். இலங்கையில் அரசியல் உறுதியின்மை காணப்பட்ட போதும், இப்படியான பொருளியல் வளர்ச்சி ஏற்பட்டமை அதிசயிக்கத்தக்கதே. தென்னிந்தியாவில் பாண்டியரும் பல்லவரும் ஆதிக்கத்துடன் விளங்கியதால் அங்கு பெருங்குளங்கள் அமைக்கப்பட்டமை எதிர்பார்க்கக் கூடியதே. வலிமையற்ற மன்னர் பலர் அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய இக் காலப்பகுதியில், மன்னர்கள் நீர்ப்பாசனத் துறையில் பெருந் தொண்டாற்ற வலுவற்றவர்களாக இருந்தனர் எனலாம். இக் காலப் பகுதியில் வணிக கணங்கள் குளந் தொட்டு வளம் பெருக்குவதில் ஈடுபட்டிருத்தல் கூடும். அத்தகைய முயற்சிகள் எடுக்கப்பட்டபோது தென்னிந்தியாவிலிருந்து வேலையாட்களையும் கொண்டு வந்திருக்கலாம்.

அநுராதபுரத்தில் தமிழர்

இதுவரை எடுத்துரைக்கப்பட்ட அரசியல், பொருளியல் மற்றும் சமயம் சார்ந்த முன்னேற்றங்களின் விளைவாக அநுராதபுர அரசில் வாழ்ந்த தமிழர் எண்ணிக்கை மேலும் கூடி முன்னை விட வலுப்பெற்றது. பாளி வரலாற்றேடுகள் மற்றும் சிங்களக் கல்வெட்டுகள் ஆகியவற்றின் சான்று இம் முடிவுக்குச் சார்பாக உள்ளது. சிங்கள இளவரசர்களும் பிற தலைவர்களும் தென்னிந்தியாவிலிருந்து பல தடவை இலங்கைக்குக் கொண்டுவந்த படையினர் ஏழாம், எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டுகளில் அநுராதபுர மன்னர்களுக்குப் பெரும் பிரச்சினைகளை உண்டு பண்ணினர் என வரலாற்றேடுகள் குறிப்பிடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அரசைக் கூடக் கைப்பற்றினர். எடுத்துக்காட்டாகக் கூறினால், இரண்டாவது கஸ்ஸப மன்னன் (650 - 659) இறந்தபின் அவன் மருமகன் மான என்பான் தமிழ்ப் படையினரை வெளியேறும்படி ஆணையிட்டான். இந்த ஆணையை மறுத்த படையினர், அநுராதபுரத்தைக் கைப்பற்றி மன்னனையே வெளியேற்றினர். படையினருடன் போலி உடன்படிக்கை ஒன்றைச் செய்து, மன்னன் மீண்டும் ஆட்சியைப் பெற்ற போதும். வெகுவிரையில் மேலும் எதிர்ப்புகள் தோன்றின. அரசைக் கைப்பற்ற ஆசை கொண்ட ஹத்ததாட்ட என்ற ஒரு சிங்களத் தலைவன் வழமை போல் தென்னித்தியாவுக்குச் சென்று தமிழ்ப் படையினருடன் வந்தான். அவனுடைய தமிழ்ப் படையினர் அநுராதபுரத்தை நோக்கிச் சென்றபோது வழி வழியே மேலும் பல தமிழர் படையினருடன் சேர்ந்து ஹத்ததாட்டனுக்கு ஆதரவு வழங்கினர்.

ஹத்ததாட்ட தமிழர் உதவியுடன் அரசைக் கைப்பற்றினான். இப்படிப் பல நிகழ்ச்சிகள் பத்தாம் நூற்றாண்டு வரை பாளி வரலாற்றேட்டிலே குறிப்பிடப்படுகின்றன.

இப்படிக் குறிப்பிடப்படும் நிகழ்ச்சிகளைக் கொண்டு பெறக்கூடிய ஒரு முடிவு என்னவெனில் அநுராதபுர அரசின் வட பாகங்களில் தமிழர் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது என்பதாகும். இலங்கையின் வட பாதியில் இருந்த முக்கியத் துறைகளுக்கும் அநுராதபுரத்துக்கும் இடையில் உள்ள பிரதேசத்தில் தமிழர் குடியிருப்புகள் காணப்பட்டன என்பது பாளி வரலாற்றேடு மற்றும் சிங்களக் கல்வெட்டுகள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுகின்றது. தென்னிந்தியாவுக்குச் செல்வதற்குப் பயன்பட்ட இரண்டு முக்கிய துறைகள் மாதோட்டமும் திருகோணமலையும் என்பதில் என்பதில் ஐயமில்லை. இவ்விரண்டு இடங்களிலும் ஏழாம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற சிவன் கோயில்கள் இருந்தன. பிற்பட்ட நூற்றாண்டுகளில் இவ்விடங்கள் தமிழர் குடியிருந்த இடங்களாகக் காணப்படுகின்றன. ஆகவே பாளி வரலாற்றேடு குறிப்பிடும் தமிழர் குடியிருப்புகள் மாதோட்டத்துக்கும் அநுராதபுரத்துக்கும் இடையில் அல்லது திருகோணமலைக்கும் அல்லது வேறொரு கிழக்குக்கரைத் துறைக்கும் அநுராதபுரத்துக்கும் இடையில் இருந்தன என்று கொள்ளலாம்.

பாளி வரலாற்றேட்டில் அங்குமிங்குமாகக் காணப்படும் குறிப்புகளிலிருந்து பெறக் கூடிய முடிவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் சிங்களக் கல்வெட்டுகளின் சான்றுகள் கிடைக்கின்றன. சிங்களக் கல்வெட்டுகளில் ஒன்பதாம் நூற்றாண்டளவில் தமிழ் ஊர்கள் மற்றும் தமிழ் நிலங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகள் இடம் பெறுகின்றன. மன்னனுக்குச் செலுத்தப்பட்ட இறை பற்றிய குறிப்புகள் காணப்படும் கல்வெட்டுகளிலும் இக் காலப்பகுதியில் தமிழர் இறை என்று பொருள்படும் ஒரு சொல்லும் காணப்படுகின்றது. இப்படியான குறிப்புகள் அனுராதபுர அரசில் தமிழர் குடியிருப்புகள் கருத்திற் கொள்ளத்தக்க வகையில் இருந்தமை பற்றிய சான்றுகள் எனலாம். கல்வெட்டுக் காணப்படும் இடங்கள் அநுராதபுரத்துக்கும் வடகிழக்கில் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பொலநறுவைக்குக் கிட்டிய இடங்களில் கிடைக்கின்றன.

இக்காலகட்டத்தில் அநுராதபுர அரசில் தமிழ்ப் படையினர் தொடர்பான அலுவல்களைக் கவனிப்பதற்கு ஒரு சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த அதிகாரி ‘தமிளாதிகாரி’ என்ற பதவிப் பெயரைப் பெற்றிருந்ததான். இவ்வாறு ஓர் அதிகாரி நியமிக்கப்பட வேண்டிய அவசியம் எழுந்தமைக்குப் பெருந் தொகையான தமிழ்ப் படையினர் அரசில் குடியிருந்தமை காரணமாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட கல்வெட்டுகள் காணப்பட்ட இடங்கள் அநுராதபுர அரசில் தமிழர் குடியிருப்புகள் கூடுதலாக இருந்த பகுதிகளை அறிய உதவுகின்றன. இவை வடகிழக்குப் பாகத்தில், பொலநறுவைக்குச் சிறிது வடக்கே கிடைத்த கல்வெட்டுகள். வடகிழக்கில், சிறப்பாகக் கரையோரத்தில், பல்லவர் செல்வாக்கை வெளிப்படுத்தும் சிற்பங்களும் சமஸ்கிருதக் கல்வெட்டுகளும் கிடைத்தமை முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் பதினோராம் நூற்றாண்டில் இதே பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க தமிழ்க் கல்வெட்டுகளில் சைவக் கோயில்கள் இருந்தமை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் தென்னிந்திய வணிக கணங்களின் செல்வாக்கும் பெருமளவில்

இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. பதினோராம் நூற்றாண்டில் சோழர் இலங்கையில் ஆதிக்கம் பெற்றபோது இப்பிரதேசத்திலேதான் வலுவுடன் காணப்பட்டனர். இவற்றை எல்லாம் நோக்குமிடத்து வடகிழக்கு இலங்கை சோழர் ஆட்சிக்கு முன்னரே பல நூற்றாண்டுகளாகத் தமிழர் குடியிருப்புகளைக் கொண்டிருந்தது என்பது புலனாகின்றது. அதுமட்டுமின்றி அநுராதபுரத்துக்கு வடக்கே திருகோணமலை மாவட்டத்திலிருந்து மேற்கு நோக்கி மன்னார் மாவட்டம் வரை தமிழர் குடியிருப்புகள் இருந்தன என்று ஊகிக்க இடமுண்டு.

அநுராதபுரத்தின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத வடக்கும், வடகிழக்கும்

இலங்கையின் வடக்கு எல்லைப் பகுதியில், அதாவது இன்றைய யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் ஆகிய இடங்களில், இக் காலப்பகுதியில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளையும், முன்னேற்றங்களையும் அறிந்து கொள்ளச் சான்றுகள் போதா. அநுராதபுர அரசைப் பற்றிக் கூறும் பாளி வரலாற்றேட்டில் ஏழாம் நூற்றாண்டு வரை வட பகுதி பற்றிக் குறிப்பிடத்தக்க தகவல் எதுவும் இல்லை.

ஏழாம் நூற்றாண்டளவில் இருந்து பாளி வரலாற்றேடு மூன்று முக்கிய பிரதேசங்களை வேறுபடுத்திக் குறிப்பிடுகின்றது. இவை முன்பிருந்து வரலாற்றேடுகளில் குறிப்பிடப்பட்டு வந்த ரோஹண (இலங்கையின் தென் பாகம்) மற்றும் மலய (இலங்கையின் நடுவேயுள்ள மலைப் பிரதேசம்) ஆகியவற்றை விட வேறான பிரதேசங்கள். அவை: உத்தர தேஸ (வட நாடு), பசின தேஸ (கீழ் நாடு) மற்றும் தக்கிண தேஸ (தென்நாடு). இவற்றின் எல்லைகளை எவ்விதத்திலும் அறிய முடியாது. இப்பிரதேசங்கள் அநுராதபுரத்தை மையமாகக் கொண்ட அரசின் நடுப்பகுதிக்கு வடக்கிலும், கிழக்கிலும், தெற்கிலும் இருந்த பிரதேசங்கள் எனவும் திட்டவட்டமற்ற முறையில் வகுக்கப்பட்ட மாநிலங்கள் எனவும் கொள்வது தவறாகாது. அநுராதபுரத்தில் ஆண்ட மன்னன் இவற்றைத் தன் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களாகக் கருதினான். இவற்றை நிர்வகிப்பதற்கு மன்னன் தன் குடும்பத்தினரை நியமிக்கும் வழக்கமும் தோன்றியிருந்தது. வாரிசுரிமையைப் பெற்றிருந்த மகனைத் தக்கிண தேஸத்தின் ஆட்சியாளனாக நியமிப்பது பொது வழக்காக இருந்தது. பசின தேஸத்துக்கு இளவரசன் ஒருவன் நியமிக்கப்பட்டது பற்றிச் சில குறிப்புகள் இருப்பினும், வடக்கில் இருந்த உத்தர தேஸத்துக்கு யாராவது நியமிக்கப்பட்டது பற்றிச் சான்றில்லை.

உத்தரதேஸத்தைப் பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்தால் அப்பிரதேசம் ஏனைய பிரதேசங்களை விட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாக பலமுறை அதனைக் காணலாம். அநுராதபுரத்தின் ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளில் போலல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வட பகுதியில் வந்திறங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. அப்படி வந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின் அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வட பகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு.

பல்லவர் தொடர்பு

பகுதி 3

ஏழாம் நூற்றாண்டின் தொடக்கக் கட்டத்தில் ஸிலாமேக வண்ண மன்னன் (619 - 628) அநுராதபுரத்தில் ஆட்சி நடத்தியபோது ஸிரிநாக என்பான் தமிழர் படை ஒன்றின் உதவியுடன் அநுராதபுரத்து மன்னனைத் தாக்கி அரசைக் கைப்பற்ற முயன்றான். அவனுடைய படை உத்தரதேஸத்திலிருந்தே தெற்கு நோக்கி அநுராதபுரத்துக்கு முன்னேறியது. ஆட்சியைக் கைப்பற்ற எண்ணிய தலைவன் ஒருவன் வட பகுதியிலிருந்து படை கொண்டு சென்றமை கவனிக்கத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். இதன்பின் அடிக்கடி இப்படியான நிகழ்ச்சிகள் வடக்கிலிருந்து நடைபெற்றன. இவற்றுள் மிகவும் முக்கியமானது பல்லவப் பேரரசர் உதவியுடன் மானவர்மன் என்ற சிங்கள இளவரசன் நடத்திய படையெடுப்புகள் எனலாம். இக்காலத்து அரசியல் குழப்ப நிலையை விளங்கிக் கொள்ளவும், இதில் உத்தரதேஸம் கொண்டிருந்த பங்கினை மதிப்பிடவும் மானவர்மன் படையெடுப்புகள் உதவுகின்றன.

அநுராதபுரத்தில் 650 தொடக்கம் 659 வரை ஆண்ட இரண்டாம் கஸ்ஸப மன்னனின் மகனாகக் கருதப்படும் மானவர்மன் தந்தை இறந்தபோது ஏற்பட்ட அரசியல் குழப்பங்களின் விளைவாக அநுராதபுரத்தை விட்டு ஓடி ஒளித்தான். இப்படியாக உரிமையிழந்த இளவரசர்கள் அநுராதபுரத்தை விட்டு ஓடி ஒளிவது எந்த வகையிலும் புதிய நிகழ்ச்சி அன்று. அப்படி ஓடும்போது பொதுவாக இளவரசர்கள் தெற்கு நோக்கி மலைப் பிரதேசத்துக்கு அல்லது அப்பால் ரோஹணத்துக்குச் செல்வதே வழக்கம். வழமைக்கு மாறாக மானவர்மன் வடக்கு நோக்கி ஓடி உத்தரதேஸத்தில் அடைக்கலம் புகுந்தான். இதற்கு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டும். வடபகுதி இவனுக்குக் கூடுதலான பாதுகாப்பைக் கொடுத்தமை காரணமாகலாம். ஆனால் அவன் அங்கு இருப்பதை அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய ஹத்ததாட்ட அறிந்து அவனைக் கைப்பற்ற முயன்றபோது, மானவர்மன் வட பகுதியை விட்டுப் பல்லவ அரசுக்குச் சென்று பல்லவப் பேரரசனின் பாதுகாப்பைப் பெற்றான்.

மானவர்மன் இலங்கையின் வடபகுதியில் அடைக்கலம் புகுந்தமைக்கும், பின்னர் ஆபத்துத் தோன்றியபோது அங்கிருந்து காஞ்சிக்குச் சென்றமைக்கும் பல்லவர் செல்வாக்கு வடபகுதியில் பரவியிருந்தமை காரணமாக இருந்திருக்கும் எனக் கொள்ளலாம். அவன் அநுராதபுரத்தை விட்டு ஓடும் முன்னரே பல்லவர்களுடைய தொடர்பு அவனுக்கு இருந்திருக்கும். இக்காலப் பகுதியில் பல்லவர் வட பகுதியில் ஓரளவு ஆதிக்கம் பெற்றிருந்தனர் என்று சந்தேகிக்க இடமுண்டு. எப்படியும் வட பகுதியில் காணப்பட்ட அரசியல் நிலை பல்லவருக்குச் சாதகமானதாக இருந்திருக்கும் என்று தோன்றுகிறது. முன்னர் கூறியது போல, ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் ஆட்சி நடத்திய பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணு இலங்கையை வெற்றி கொண்டதாகத் தென்னிந்தியக் கல்வெட்டுச் சான்று உள்ளது. அவன் காலத்திலிருந்து வட பகுதியில் பல்லவர்களுடைய செல்வாக்கு இருந்தது எனலாம். இத்தகைய பின்னணியிலேயேதான் பல்லவ அரசிலிருந்து மஹாயான பௌத்தம், கட்டட சிற்பக் கலைகள், கிரந்த எழுத்து முறை மற்றும் வணிக கணங்களின் வர்த்தகம் ஆகியவற்றின் செல்வாக்கு வடகிழக்கு இலங்கையில் மிகுந்து காணப்பட்டது.

பல்லவர் தலைநகராகிய காஞ்சியில் மானவர்மன் பல ஆண்டுகள் தங்கியிருந்தான். அங்கிருந்த காலத்தில்

நெடுந்தீவு பௌத்த தூபி Image Source - delftmedia.com

பல்லவர் தங்கள் பகைவர்களாகிய சாளுக்கியருக்கு எதிராக நடத்திய போர்களில் பல்லவருக்கு உதவினான். இறுதியில் முதலாம் நரசிம்ம வர்மன் (630 - 668) கொடுத்த படை உதவியுடன் அநுராதபுரத்தில் தான் இழந்த அரசுரிமையைப் பெற முயன்றான். மானவர்மனின் படை வெற்றிகரமாக எதிர்ப்பின்றி அநுராதபுரத்தை நோக்கிச் சென்றபோதும் திடீரெனப் படையெடுப்பை நிறுத்திக் காஞ்சிக்குத் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதற்குக் காரணம் காஞ்சியில் பல்லவ மன்னன் நரசிம்ம வர்மன் நோயுற்றிருந்தமை என அறிகின்றோம். காரணம் எதுவாக இருந்தாலும் பல ஆண்டுகளுக்குப் பின் தன் உரிமையைக் கோருவதற்குத் தமிழ் நாட்டு மன்னன் ஒருவன் உதவியைப் பெற்று மானவர்மன் எடுத்த முதலாவது முயற்சி பலனில்லாது முடிவடைந்தது. காஞ்சிக்குத் திரும்பிச் சென்ற மானவர்மன், மேலும் பல ஆண்டுகள் காத்திருந்து, இறுதியில் இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆட்சியின் போது படையெடுத்து வந்து வடபகுதியில் தன் நிலையை வலுப்படுத்தி, அநுராதபுரத்தை நோக்கி முன்னேறினான்.

அநுராதபுரத்தில் அக் காலகட்டத்தில் பொத்தகுட்டன் என்னும் தமிழ்த் தலைவன் மிகுந்த அரசியல் ஆதிக்கத்துடன் ஹத்ததாட்ட என்பவனை மன்னனாக

நியமித்து வலுவுடன் நிர்வாகம் நடத்திக் கொண்டிருந்தான். மானவர்மன் படை அநுராதபுரத்தை அடையுமுன் பொத்தகுட்டனுடன் ஹத்ததாட்டனும் வடக்கு நோக்கிச் சென்று மானவர்மனை எதிர்த்தனர். ஆனால் பல்லவப் படையை இவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. இருவரும் கொல்லப்பட்ட பின் 684 இல் மானவர்மன் அநுராதபுரத்தில் மன்னனாக முடிசூட்டிக் கொண்டான்.

பல்லவர் படைகள் வட பகுதியில் வந்திறங்கிய நிகழ்ச்சிகளும் பல்லவர் ஆதரவைப் பெற்ற சிங்கள இளவரசன் ஒருவன் அநுராதபுரத்தில் ஆட்சி பெற்ற நிகழ்ச்சியும் இக் காலத்து வரலாற்றையும் வடக்கு இலங்கையின் அரசியல் நிலையையும் விளங்கிக் கொள்ள, முக்கியமானவை. ஆறாம் நூற்றாண்டின் பின்னர் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசும் பாண்டியப் பேரரசும் எழுச்சி பெற, அவற்றுக்கு அண்மையில் இருந்த வடக்கு இலங்கை, தெற்கு இலங்கையைக் காட்டிலும், கூடுதலான தமிழ்ச் செல்வாக்குக்கு இலக்காகியது. பல்லவ அரசில் வளர்ந்த பண்பாடு வடகிழக்கு வழியாக இலங்கையில் பரவியது. தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் இருந்த கடல் மீண்டும் ஓர் ஒற்றுமைப்படுத்தும் காரணியாகச் செயற்பட்டது. முதலில் தமிழ்நாட்டின் செல்வாக்குப் பௌத்தம் சார்ந்ததாகவும், சைவம் சார்ந்ததாகவும், தமிழ் மொழி சார்ந்ததாகவும், சமஸ்கிருதம் சார்ந்ததாகவும் அமைந்தது. பின்னர் அது பெரும்பாலும் சைவமும் தமிழும் சார்ந்ததாக மாறியது. இவ்விரண்டு காரணிகளும் வடக்கிலும் கிழக்கிலும் உருவாகிய இனக் குழுவை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கு பெற்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அங்கு உருப்பெற்றுக் கொண்டிருந்த இனக்குழு, பத்தாம் நூற்றாண்டளவில் உறுதி பெற்று வெளிப்பட்டது.

பத்தாம் நூற்றாண்டின் இறுதி

பத்தாம் நூற்றாண்டு முடியும் கட்டத்திலும் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வெளிப்படுவது என்ன? அதாவது, சோழர் இலங்கையின் வடபாகம் முழுவதையும் கைப்பற்றியபோது தெரிய வருவது என்ன? சோழர் வருகைக்கு முற்பட்ட நூற்றாண்டுகளில் வட பகுதியில் ஏற்பட்ட மாற்றத்தை இரு வகைப்பட்ட சான்றுகள் தெளிவாக உறுதிப்படுத்துகின்றன. ஒன்று, பரவலாக வடபகுதியில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகள்; மற்றது, பல இடங்களில் காணப்படும் சைவக் கோயில்களின் அழிபாடுகள். இத்தமிழ்க் கல்வெட்டுகள் பெரும்பாலும் சோழ ஆட்சியாளர்களைக் குறிப்பிடுகின்றன. அதேபோல, சைவக் கோயில்கள் பெரும்பாலும் சோழ மன்னர்களுடைய பெயர்களைத் தாங்கியவை. வட பகுதியில் ஒரு சில தமிழ்ப் பௌத்த பள்ளிகள் கூடச் சோழ ஆட்சியாளர் பெயர்களைத் தாங்கியிருந்தன. மேற்கே மாதோட்டத்திலிருந்து கிழக்கே திருகோணமலை வரையுள்ள நிலப்பகுதி மேற்கூறிய சான்றுகள் பெரும்பாலும் காணப்படும் பகுதியாக, தமிழ் மக்கள் வாழும் இடங்களையும் சிங்கள மக்கள் வாழும் இடங்களையும் எல்லைப்படுத்தும் பகுதியாகத் தோன்றியிருந்தது. வட பகுதி தமிழும் சைவமும் மேலோங்கிய இடமாக மாற்றம் அடைந்ததைப் பத்தாம் நூற்றாண்டின் இறுதியில் தெளிவாகக் காணலாம்.

மேற்கூறிய எல்லைப் பகுதிக்கு வடக்கே பத்தாம் நூற்றாண்டுக்கு முன் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியைச் சுருக்கமாகக் கூறுவதாயின், அங்கு வாழ்ந்த நாகரும் பிற இடைக்கற்கால மக்களும் பின்னர்

அங்கு சென்ற தெலுங்கர், கேரளர் மற்றும் கன்னடர் ஆகியோரும் ஹௌமக்களும் தமிழருடைய மேலோங்கிய செல்வாக்கினாலும் தமிழ் மொழியின் பரம்பலினாலும் ஓர் இனக் குழுவாக மாற்றமடையும் வழியில் சென்றனர். இவர்கள் பெரும்பாலும் பௌத்தத்தைத் தழுவியோராகத் தொடக்க நூற்றாண்டுகளில் காணப்பட்டபோதும், காலப்போக்கில் பௌத்தம் வலுவிழக்க, சைவம் அவர்களுடைய முக்கிய மதமாகியது.

வடக்கு இலங்கை 300 - 900

வடக்கு இலங்கையில் (மன்னார், வவுனியா, திருகோணமலை, முல்லைத் தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய தற்கால மாவட்டங்களையும் அநுராதபுர மாவட்டத்தின் வடபாகங்களையும் உள்ளடக்கிய பிரதேசம்) 300 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் ஏற்பட்ட வளர்ச்சி தொடர்பாக இதுவரை ஒரு சில சான்றுகளே கிடைத்துள்ளன. சில கல்வெட்டுகள், சிற்பங்கள், நாணயங்கள், பௌத்த கட்டிடங்களின் அழிபாடுகள் ஆகியவற்றுடன் பாளி வரலாற்றேடுகளிலும் கிரேக்கரோம நூல்களிலும் உள்ள சில குறிப்புகளுமே இப்பிரதேசத்தின் வரலாற்றுக்கு மூலங்களாக உள்ளன. தொல்லியல் ஆய்வு முறைப்படி நடத்தப்படும் வரை இப்பிரதேசத்தின் தொடர்ச்சியான, தெளிவான வரலாற்றை அறிந்து கொள்வது கடினம்.

இச் சான்றுகளைக் கொண்டு பெறக் கூடிய மறுக்க முடியாத முடிவு ஒன்று என்னவெனில் இவ் வட பிரதேசத்தில் பௌத்தம் முக்கியமான ஒரு மதமாக இக் காலப்பகுதியில் காணப்பட்டது என்பதாகும். அநுராதபுரத்தில் வழக்கில் இருந்த பௌத்தத்தில் இருந்து வட பகுதியின் பௌத்தம் சில வேறுபட்ட பண்புகளை வெளிப்படுத்தியது என்பதும் இச் சான்றுகளால் தெரிய வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் பௌத்தம் ஆந்திரச் செல்வாக்கைக் காட்டி நிற்க, திருகோணமலை மாவட்டத்தில் பல்லவ அரசின் மஹாயான பௌத்தத்தின் செல்வாக்கு மிகுந்திருந்தது. யாழ்ப்பாண மாவட்டத்தில் தேரவாத பௌத்தமும் பாளி மொழியும் செல்வாக்குப் பெற்ற சக்திகளாக அமைய, திருகோணமலை மாவட்டத்தில் மஹாயான பௌத்தமும் சமஸ்கிருத மொழியும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண மாவட்டத்தில் பரவத் தொடங்கிய பௌத்தம் இலங்கையின் பிற பகுதிகளைப் போல குறிப்பிடத்தக்க வகையில் இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டுகளில் வளர்ச்சி பெற்றுச் சென்றது. இங்கு எடுத்து ஆராயப்படும் காலப் பகுதியில் (300 - 900) யாழ்ப்பாண மாவட்டத்தின் பல இடங்களில் பௌத்தம் நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. கந்தரோடை, வல்லிபுரம், நயினாதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, பொன்னாலை, மாகியப்பிட்டி, சுன்னாகம், நிலாவரை மற்றும் உடுவில் ஆகிய இடங்கள் இவற்றுள் அடங்கும். இத் தொல்லியல் தலங்களுள் மிகவும் பிரசித்தி பெற்றது கந்தரோடை ஆகும்.

மேலே குறிப்பிடப்பட்ட இடங்கள் யாவற்றிலும் புத்தர் சிலைகள் அகழ்ந்து பெறப்பட்டுள்ளன. இவற்றுள் மிகப் பெரியதும் அதிகம் பழுதடையாததும் வல்லிபுரத்தில் கிடைத்த புத்தர் சிலை எனலாம். ஆந்திரத்து அமராவதிப் பாணியில் அமைந்துள்ள இச் சிலை நான்காம் நூற்றாண்டளவில் செதுக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. அழகான இச் சிலையை 1906 இல் இலங்கையின் பிரித்தானியத்

வல்லிபுரம் பொற்சாசனம்

Image Source - amazinglanka.com

தேசாதிபதியாகிய ஹென்றி பிளேக் தாய்லாந்து மன்னனுக்கு உபயமாக வழங்கினார். தற்பொழுது அது பாங்கொக் நகரில் வாட் பெஞ்ஜாப் புத்தர் கோயிலில் இருக்கின்றது. அமராவதிப் பாணியில் அமைந்த இன்னொரு புத்தர் சிலை சுன்னாகத்திலிருந்து பெறப்பட்டு அநுராதபுரத்துத் தொல்லியல் அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் நிற்கும் புத்தர் சிலைகள். அமர்ந்திருக்கும் புத்தர் சிலைகள் கந்தரோடை, பொன்னாலை மற்றும் மாகியப்பிட்டி ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. இவற்றை விட உடுவில், நிலாவரை மற்றும் பருத்தித்துறை ஆகிய இடங்களில் புத்தர் சிலைப் பாகங்கள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணத்துப் பௌத்த தொல்லியல் தலங்களுள் மிகவும் பிரசித்தி பெற்ற இடமாகிய கந்தரோடை முறையான அகழ்வாய்வு நடத்தப்பட்ட ஒரேயொரு தலமாக விளங்குகிறது. இந்த இடம் ஆதி இரும்புக் காலத்திலிருந்து குடியிருப்புகளைக் கொண்ட இடமாக வளர்ச்சியடைந்தது என்பதை 1971 இல் பென்ஸில்வேனியாப் பல்கலைக்கழகம் நடத்திய அகழ்வாய்வு உறுதிப்படுத்தியது. இவ்விடம் நகரப் பண்புகளைக் கொண்டு வளர்ச்சி பெற்றதை நோக்குமிடத்து ஆதி வரலாற்றுக் காலத்தில் அது குறுநில அரசொன்றின் ஆதிக்கத்தலமாக இருந்திருக்கலாம் எனத் தோன்றுகிறது. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பின் ஆந்திரத்தின் செல்வாக்குப் பரவியதற்கும் வர்த்தக வளர்ச்சியில் மையமான இடத்தை இவ்விடம் பெற்றிருந்தமைக்கும் சான்றுகள் கிடைக்கின்றன.

வல்லிபுரத்தில் இன்னொரு முக்கிய பௌத்த வழிபாட்டுத் தலம் இருந்தமைக்கு முதலாம் நூற்றாண்டளவில் இருந்து சான்று கிடைக்கின்றது. இங்கு முதலாம் நூற்றாண்டளவில் கட்டப்பட்ட ஒரு பௌத்த நிறுவனத்தின் அத்திவாரத்தில் பொன்னேடு ஒன்று புதைக்கப்பட்டிருந்தது. இது கடந்த நூற்றாண்டில் வெளிப்பட்டதும் ஒரு முக்கியமான ஆவணமாகியது. அங்கு பௌத்த பள்ளி ஒன்று அமைக்கப்பட்ட தகவல் இப் பொன்னேட்டின் மூலம் கிடைக்கின்றது. வல்லிபுரத்தில் அமராவதிப் பாணியில் புத்தர் சிலை ஒன்றும் கிடைத்தபடியால் அவ்விடம் ஒரு பௌத்த தலமாக விளங்கியிருக்கும் என ஊகிக்கலாம்.

யாழ்ப்பாணத் தீபகற்பத்துக்கு மேற்கேயுள்ள சிறு தீவுகள் ஆதி வரலாற்றுக் காலத்தில் பௌத்தம் பரவியபோது பௌத்த சங்கத்தார் தங்குவதற்கான ஒதுக்கிடங்களாக அமைந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. இலங்கையின் தென்

பாகத்தில் பௌத்த வரலாற்றின் ஆரம்பக் கட்டத்தில் பௌத்த துறவிகளாகிய சங்கத்தார் நகரங்களில் வசிக்காது வனப் பகுதிகளை நாடினர். அதேபோல, வனங்கள் இல்லாத பிரதேசமாகிய யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் ஆதிப் பௌத்த சங்கத்தார் ஒதுக்கிடங்களாகச் சில தீவுகளைப் பயன்படுத்தியிருக்கலாம். அப்படி ஒதுக்கிடங்களில் வாழ்ந்த சங்கத்தார் உயர்வாக மதிக்கப்பட்டனர் என்றும் கொள்ள முடியும். இதனால் காலப் போக்கில் நயினாதீவில் இருந்த பௌத்த பள்ளி பௌத்த யாத்திரைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஓர் இடமாகியது. இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் புங்குடுதீவில் வாழ்ந்த பௌத்த துறவிகள் பெரிதும் நாடு முழுவதும் மதிக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. மஹாவம்சத்தில் 'பியங்குதீப' எனப் பாளி மொழியிலும் பிற்பட்ட காலத்தில் சிங்கள இலக்கியத்தில் 'புவங்குதிவயின' எனவும் குறிப்பிடப்படும் தீவு புங்குடு தீவு என அடையாளங் காண முடியும். இத்தீவில் துட்ட காமணி மற்றும் எல்லாள மன்னர் காலத்தில் மிகவும் உயர்வாக மதிக்கப்பட்ட பௌத்த துறவிகள் வாழ்ந்தனர் என்பதும், அவர்கள் துட்ட காமணி மன்னனின் கவலையைப் போக்க உதவினர் என்பதும் மஹாவம்சத்தில் கூறப்படுகின்றது.

பிற்பட்ட காலத்தில் எழுந்த சிங்கள நூலாகிய நம்பொத (பெயர் நூல்) என்ற நூல் பௌத்தர்கள் யாத்திரை செல்ல வேண்டிய இடங்களின் பெயர்களைப் பட்டியல் படுத்தி, இலகுவில் எல்லோரும் மனதில் பதித்து வைக்கக் கூடிய வகையில் கொடுக்கின்றது. இப்பட்டியலை அண்மைக்காலம் வரை மாணவர்கள் மனப்பாடஞ் செய்வது வழக்கமாக இருந்தது. இப்பட்டியலில் யாத்திரை செல்ல வேண்டிய பிரசித்தி பெற்ற பௌத்த தலங்களுள் ஒன்றாகப் புவங்குதிவயின (புங்குடுதீவு) குறிப்பிடப்படுகின்றது. இத்தீவு மட்டுமின்றி, நாகதிவயின (நயினாதீவு), காரதிவயின (காரைதீவு) மற்றும் தனதிவயின (தனதீவு) ஆகியவை யாத்திரைத் தலங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. யாழ்ப்பாணத் தீபகற்பப் பிரதேசத்தில் (இது தெமள பட்டணம், அதாவது தமிழ்ப்பட்டினம் என நம்பொதவில் குறிப்பிடப்படுகின்றது) கொடுக்கப்பட்டுள்ள எட்டுத் தலங்களுள் நான்கு தீவுத் தலங்களாக இருப்பது கவனிக்கத்தக்கது. நம்பொத எழுதப்பட்ட காலம் வரையாவது இவை பௌத்த தலங்களாக இருந்தமையும் கவனிக்கத்தக்கது. நயினாதீவு மட்டுமே இன்று வரை ஒரு பௌத்த யாத்திரைத் தலமாக உள்ளது.

கந்தரோடை தவிர்ந்த ஏனைய யாழ்ப்பாண மாவட்டத்து இடங்களில் அகழ்வாய்வு நடத்தப்படாத காரணத்தால் அம் மாவட்டத்தில் நிலவிய பௌத்த மதம் பற்றி அதிகம் அறிய முடியாதுள்ளது. இதேபோன்று, அம்மாவட்டத்துக்குத் தெற்கே கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டம் ஆகிய இடங்களில் நிலவிய பௌத்தம் பற்றியோ பிற மதங்கள் பற்றியோ அறிவதற்கான சான்றுகள் வெளிப்படுத்தப்படவில்லை. பௌத்தம் மட்டுமின்றிச் சமணம் மற்றும் ஆசிவகம் ஆகிய மதங்களும் சைவமும் வட பகுதியில் நிலவியிருக்கும்.

திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இப்பிரச்சினை குறைவாகவே காணப்படுகின்றது. இங்கு 300 தொட்டு 900 வரையிலான காலப்பகுதியில் காணப்பட்ட பண்பாடு

மற்றும் பொருளியல் நிலைகள் பற்றி அறியச் சில சான்றுகள் கிடைத்துள்ளன. இவை கல்வெட்டுகளாகவும், கட்டிட அழிபாடுகளாகவும் சிற்பங்களாகவும் இலக்கியக் குறிப்புகளாகவும் உள்ளன. இக்காலப் பகுதியில் திருகோணமலை மாவட்டத்தில் பல்லவப் பேரரசின் செல்வாக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பரந்திருந்தது. திருகோணமலையும் அதற்கு வடக்கே பல்லவ வங்கம் என்ற துறையும் நாட்டின் முக்கிய துறைகளாக விளங்கின. இவற்றின் வழியாக வர்த்தகம் மட்டுமின்றி, சமயம், கலைகள் மற்றும் அரசியல் ஆகிய துறைகள் சார்ந்த தொடர்புகள் தென்னிந்தியாவிலிருந்தும் வேறும் பிற வெளி இடங்களிலிருந்தும் இலங்கையுடன் ஏற்பட்டன.

தென்னிந்தியாவில் வலிமையுடன் எழுந்த வணிக கணங்கள் தென்கிழக்கு ஆசியாவுடன் தூர வர்த்தகத் தொடர்புகளைத் துரிதப் படுத்தியபோது திருகோணமலை மாவட்டத்தின் துறைகள் முன்னை விடக் கூடுதலான முக்கியத்துவத்தைப் பெற்றன. இத்துறைகளில் வணிக கணங்களின் குடியிருப்புகள் மட்டுமின்றி, வணிகர்கள் நிறுவிய சமய நிறுவனங்களும் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. இக் காலப் பகுதியில் மஹாயான பௌத்தம் பல்லவப் பேரரசில் மிகுந்த செல்வாக்குடன் காணப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் திரியாய் என்ற இடத்தில் இக் காலப் பகுதியில் சிறப்புடன் விளங்கிய மஹாயான பௌத்த பள்ளி ஒன்று இருந்தது. அது வணிகர்களுடைய ஆதரவைப் பெற்றுச் செழிப்புற்ற ஒரு நிறுவனம். இதன் பெயர் கிரிகண்ட சைத்தியம். ஆனால் அதற்குப் பொதுப்படத் 'திரியாய் வட்டதாகே' என்ற பெயர் அதன் கட்டிட அமைப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது. பல்லவ அரசுக்கும் இந்நிறுவனத்துக்கும் இடையில் இருந்த நெருங்கிய தொடர்பு அங்குள்ள தொல்லியல் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படுகின்றது. அங்கு கிடைத்துள்ள மஹாயானக் கல்வெட்டு ஒன்று பல்லவ கிரந்த எழுத்தில் சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாது, அங்குள்ள கட்டிடத்தின் சிற்ப வேலைப்பாடுகள் பல்லவர்களுடைய தனித்துவமான சிற்பப்பாணியின் செல்வாக்கை வெளிப்படுத்துகின்றன. பல்லவர் தலைநகராகிய காஞ்சியிலிருந்து இலங்கைக்கு ஏழாம் நூற்றாண்டில் சென்ற வஜிரபோதி என்ற மஹாயான பௌத்த துறவி திரியாய்ப் பௌத்தப் பள்ளி போன்ற கிழக்கு இலங்கைப் பௌத்தப் பள்ளிகளில் தங்கியிருந்திருப்பார். அவர் இலங்கையிலிருந்து சீனாவுக்கும் பயணஞ் செய்தபடியால் கிழக்கிலங்கைத் துறை ஒன்றிலிருந்து சென்றிருப்பார் எனலாம். அவரைப் போன்று இன்னொரு பிரசித்தி பெற்ற மஹாயானத் துறவியாகிய குணவர்மன் என்பவர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து சில காலம் தங்கியிருந்து தென்கிழக்காசியாவுக்குப் பயணம் ஆனார்.

திருகோணமலை மாவட்டத்தில் கரையோரத்தில் இருந்த இன்னொரு மஹாயான பௌத்தப் பள்ளி குச்சவெளியில் இருந்த பள்ளியாகும். குச்சவெளிக்குத் தெற்கேயும், கிழக்குக் கரையிலும் மஹாயானப் பள்ளிகள் பல்லவர் செல்வாக்கை வெளிப்படுத்தும் சிற்பங்களுடன் அமைக்கப்பட்டிருந்தன. ஸிதுல்பவு மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களில் இச் சிற்பங்கள் கிடைத்துள்ளன. சைவ நாயன்மார் இயக்கத்தின் செல்வாக்கு காலகட்டத்தில் வட இலங்கைப் பகுதியில் நடைபெற்ற முக்கிய அபிவிருத்திகளுள் ஒன்று தமிழ்நாட்டுச் சைவ இயக்கத்தின் செல்வாக்குப் பரவிச் சைவ மதம் வலுப்பெற்றமை. தமிழ்நாட்டிலிருந்து

பரவிய மஹாயான பௌத்தத்தின் செல்வாக்கைக் காட்டிலும் நீண்ட கால விளைவுகளை வட பகுதியில் நாயன்மார் இயக்கம் ஏற்படுத்தியது. தமிழ்நாட்டில் போல, இலங்கையின் வட பகுதியில் மஹாயான பௌத்தமும் தேரவாத பௌத்தமும் வீழ்ச்சியடையச் சைவ மதம் அங்கு ஆதிக்கம் பெற்றது. நாயன்மார் இயக்கம் முடிவுற்ற பின்னரும் வட பகுதியில் தமிழ்ப் பௌத்தர்கள் தொடர்ந்து காணப்பட்டாலும், பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியளவில் வட பகுதித் தமிழர்களுடைய தனி மதமாகச் சைவம் எழுச்சியுற்றதைக் காணலாம். இதனால் தமிழ் மொழியும் சைவ மதமும் இலங்கையில் ஆக்கம் பெற்ற தமிழ் இனக் குழுவின் அடையாளச் சின்னங்களாயின.

மஹிந்த மஹாதேரர் பௌத்த சங்கம் ஒன்றைத் தேவநம்பிய திஸ்ஸ மன்னன் காலத்தில் நிறுவு முன்னரே இலங்கையில் சிவ வழிபாடு நிலவி வந்தது. தேவநம்பிய திஸ்ஸனின் தந்தை பெயர் பாளி நூல்களில் 'முடஸிவ' எனக் கொடுக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. ஸிவ (சிவன்) என்ற பெயர் வழக்கில் இருந்தமை சிவ வழிபாடு இருந்தமைக்கு அறிகுறியாகும். மிகப் பழைய ஆவணங்களாகிய பிராமிக் கல்வெட்டுகளில் பலர் 'ஸிவ' என்ற பெயருடையோராய்க் காணப்படுகின்றனர். பாளி வரலாற்றேடுகளில் சிவ வழிபாடு அநுராதபுரத்திலும் வேறிடங்களிலும் நடைபெற்றதற்குச் சான்றுண்டு.

சைவ, வைணவ இயக்கங்களின் வெற்றிக்குத் தமிழ்நாட்டு ஆட்சியாளரும் வணிக கணத்தவரும் ஒரு முக்கியமான வகையில் அடிக்கல் நாட்டியிருந்தனர். உள்ளூர் ஆட்சியாளரும் உயர் குழாத்தினரும் வட இந்திய மரபுகளை வரவேற்றுப் பின்பற்றும் போக்குக் காணப்பட்ட தென்னிந்தியா - இலங்கைப் பிராந்தியத்தில் பல்லவ வம்சத்தவர் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையில் ஈடுபட்டுப் பிராமணீயச் செல்வாக்கு வளர்வதற்கு உதவினர். தமிழ்நாட்டுக்கு வெளியே இருந்து வந்த பல்லவர், ஏற்கனவே பிராமணீய மரபுகளைக் கடைப்பிடிப்போராய் வந்தனர். வந்தபின் தொண்டைமண்டலத்தில் ஆட்சியாளராக அதிகாரம் பெற்ற இவர்கள் முன்னொரு போதும் தமிழ் அரசுகளில் காணப்படாத அளவுக்குப் பிராமணீயச் சடங்குகளை நடத்தினர். தென்னிந்தியாவில் முன்பிருந்தே பிராமணர்களுக்கு ஆட்சியாளர் ஆதரவளிக்கும் வழக்கம் காணப்பட்டாலும், பல்லவர் ஆட்சியில் பிராமணருக்குச் சிறப்பு ஆதரவு வழங்கப்பட்டது. இப்படியான ஆதரவின் ஒரு வெளிப்பாடாகப் பிரமதேயம் எனப்பட்ட பிராமணக் குடியிருப்புகள் அரசின் பல்வேறு பகுதிகளிலும் நிறுவப்பட்டன. பல்லவருடைய முன் மாதிரியைப் பாண்டியரும் பின்பற்றினர். தென்னிந்தியா முழுவதிலுமே இப் போக்குக் காணப்பட்டது எனலாம். ஆறாம் நூற்றாண்டின் பின் எழுச்சி பெற்ற புதிய அரச வம்சங்கள் கடைப்பிடித்த முக்கிய கடமைகளுள் ஒன்றாகப் பிராமணருக்கும் கோயில்களுக்கும் நிலத்தானம் வழங்குவது சிறப்பிடம் பெற்றது.

பிரமதேயம் என்பது ஒரு பிராமணக் குடியிருப்பு மட்டுமின்றி, ஊர்ப் பொருளியல் அமைப்பில் ஒரு மையமான நிறுவனமாகக் காணப்பட்டது. கோயில் ஒன்றை இதயமாகக் கொண்டு, ஏற்கனவே மந்தை மேய்ப்பிலும் விவசாயத்திலும் ஈடுபட்டிருந்த குடிகளை உள்ளடக்கி, நீர்ப்பாசன வசதிகளின் பராமரிப்புக்குப் பொறுப்பேற்ற, சமூக அதிகாரமும் பொருளியல் அதிகாரமும் கொண்ட ஊர் சார்ந்த ஒரு நிறுவனமாகப் பிரமதேயம் முக்கியத்துவம் பெற்றது. பிரமதேயத்தின் நிர்வாகத்தை நடத்த 'சபை' என்ற குழு ஒன்று இருந்தது. இக்குழுவைச்

சேர்ந்தோர் வாரியங்கள் எனப்பட்ட சிறு காரியக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றின் மூலம் நீர்ப்பாசன வசதிகளாகிய குளங்கள், கால்வாய்கள் ஆகியவற்றைப் பராமரிப்பதற்கான நடவடிக்கைகள், கோயில் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் கல்விக் கூடங்களை நடத்தும் ஏற்பாடுகள் ஆகியவை கவனிக்கப்பட்டன.

பிராமணருக்கு ஆதரவளிப்பது இந்திய மன்னர்களுடைய இலட்சியங்களுள் ஒன்றாக எப்பொழுதுமே இருந்து வந்தது. இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும், சமஸ்கிருத மயமாக்கத்தின் விளைவாக இந்த இலட்சியத்தை மன்னர்கள் கடைப்பிடித்தனர். இதனால் அவர்கள் இந்தியாவில் இருந்து, சிறப்பாகத் தென்னிந்தியாவில் இருந்து பிராமணர்களை வரவழைத்துத் தம் அரசுகளில் குடியிருத்தி, பல்வேறு சந்தர்ப்பங்களில் தானங்கள் வழங்கி ஆதரித்தனர். மன்னர்கள் மட்டுமின்றி, அரசின் உயர்குழாத்தினரும் வர்த்தகர்களும் கொடுத்த ஆதரவுடன் இப் பிராமணர்கள் இலங்கையிலும் தென்கிழக்காசியாவிலும் சைவ, வைணவ வழிபாட்டைப் பரப்புவதில் பெரும்பங்கு கொண்டிருந்தனர். இலங்கையில் பிரமதேயம் என்ற நிறுவனம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் சைவம் வளர்வதற்குத் தேவைப்பட்ட நிறுவன ரீதியான அடித்தளம் அமைக்கப்பட்டுச் சைவம் வலுப் பெறுவதற்கு வழிகோலப்பட்டது.

தென்னிந்தியாவில் சைவ, வைணவ இயக்கம் பௌத்தத்துக்கு எதிராக எழுந்த காலத்தில், அநுராதபுரத்தில் ஆட்சி நடத்திய பௌத்த மன்னர்கள் பிராமணருக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் சைவம் இலங்கையில் வலுப்பெற உதவினர் எனலாம். பல நூற்றாண்டுகளாக இவர்களுடைய முன்னோர்கள் பிராமணர்களுக்கு ஆதரவளித்து வந்தனர். குறிப்பிடத்தக்க விதிவிலக்காக ஒரு மன்னனை மட்டுமே எடுத்துக் காட்டலாம். அவன் மூன்றாம் நூற்றாண்டில் ஆட்சி நடத்திய மஹாஸேன மன்னன் ஆவான். இவன் திருகோணமலையிலிருந்த சிவன் கோயில் ஒன்றையும் பிற பிராமணீய வழிபாட்டுத் தலங்களையும் அழித்ததாக அறிகின்றோம். ஏனைய மன்னர்கள் பொதுவாகப் பிராமணர்களுக்கும் பௌத்த சங்கத்துக்கும் ஆதரவளித்தனர். ஆறாம் நூற்றாண்டு வரை பிராமணருக்கு வழங்கிய ஆதரவு பௌத்தத்தின் நிலையைப் பாதிக்கவில்லை எனலாம். பொதுவாக இந்த ஆதரவு அரச சபையில் புரோகிதர்களாகவும், சோதிடராகவும் வேறு நிர்வாகிகளாகவும், சிறப்புப் பதவி பெற்றிருந்த பிராமணர்களுக்கே வழங்கப்பட்டது எனலாம். ஆறாம் நூற்றாண்டில் பல்லவ அரசில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் இலங்கையிலும் செல்வாக்கினை உண்டு பண்ணின எனத் தோன்றுகிறது. பிராமணருக்கு மன்னர்கள் கொடுத்த ஆதரவு பாளி வரலாற்றேடுகளில் பதிவு பெறும் அளவுக்கு முக்கியத்துவம் அடைந்தது.

ஆறாம் நூற்றாண்டின் பின் அநுராதபுரத்து மன்னன் ஒருவன் 'அங்குமிங்குமாகப் பழுதடைந்திருந்த தேவாலயங்களைப் புதுக்கியும், மன்னர்களுக்கு உகந்த உணவைப் பிராமணருக்கு வழங்கியும் ஆட்சி செலுத்தினான். இன்னொரு மன்னன் பிராமணர்களைத் தமக்குரிய கடமைகளைப் புரிந்து வாழ்க்கை நடத்துமாறு ஊக்குவித்தான். வேறொரு மன்னன் ஆயிரம் பிராமணர்களுக்கு விலையுயர்ந்த கொடைகளாகிய பொன்னையும் முத்தையும் மாணிக்கத்தையும் வழங்கினான். இவற்றைக் குறிப்பிடும் பௌத்த பாளி வரலாற்றேடு, அநுராதபுரத்து மன்னர் பிரமதேயங்களை நிறுவியது பற்றிக் கூறவில்லை. ஆனால் மன்னர்கள்

பிராமணருக்கு வழங்கிய ஆதரவை நோக்குமிடத்து பிரமதேயங்களும் அமைக்கப்பட்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. பல்லவர் செல்வாக்குக்கு உட்பட்ட இடங்களிலாவது பிரமதேயங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம்.

பல்லவர் செல்வாக்கு மிகுந்து காணப்பட்ட பிரதேசமாக இருப்பது வடகிழக்குக் கரையோரமாகும். இக்கரையோரத்தில் வடக்கில் திரியாய் தொடக்கம் தெற்கில் குச்சவெளி வரையும், உள்நாட்டில் பதவியா மற்றும் கந்தளாய் ஆகிய இடங்கள் வரையும் பரந்துள்ள பிரதேசம் பல்லவர் செல்வாக்கு அதிகம் பரவிய பகுதி எனலாம். இதற்கு அப்பாலும் பல்லவர் செல்வாக்குப் பரவியிருந்தமைக்குச் சான்றுகளாக நாலந்தாவில் உள்ள மஹாயானக் கோயிலும் (கெடிகே) அநுராதபுரத்துக்கருகே இசுருமுனியாவில் உள்ள சிற்பங்களும் உள்ளன. திரியாயும் குச்சவெளியும் மஹாயான பௌத்த நிறுவனங்கள் இருந்த இடங்கள் என்பது முன்னர் குறிப்பிடப்பட்டது. கந்தளாயும் பதவியாயும் பிராமணீய நிறுவனங்கள் அமைந்த இடங்களாக இருந்திருக்க முடியும் என்பதை பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சோழர் ஆட்சி நடத்தியபோது இருந்த நிறுவனங்கள் பற்றிய சான்றுகளைக் கொண்டு கூறலாம்.

பதினோராம் நூற்றாண்டில் இலங்கையில் இருந்த பிரமதேயங்களுள் மிக முக்கியமான இரண்டு கந்தளாயிலும் பதவியாயிலும் இருந்தன. இவை பற்றிப் பின்னர் விரிவாகக் கூறப்படும். பதவியாவில் இரவிகுல மாணிக்க ஈஸ்வரம் என்ற சிவன் கோயிலை மையமாகக் கொண்ட பிராமணக் குடியிருப்பு ஒன்று இருந்தது. இது எப்பொழுது நிறுவப்பட்டது என்பதைத் தொல்லியல் ஆய்வு மூலமே அறியலாம். அதேபோல, கந்தளாயில் தென்கைலாசம் (பின்னர் விஜயராஜ ஈஸ்வரம்) என்ற கோயிலை மையமாகக் கொண்ட பிராமணக் குடியிருப்பு ஒன்று இருந்தது. இது எப்பொழுது நிறுவப்பட்டது என்பதையும் தற்பொழுது அறியச் சான்று இல்லை. இவை இரண்டும் ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் தோன்றிய பிரமதேயங்கள் என்று கொள்ள இடமுண்டு.

இவ்வாறு இலங்கையின் வடகிழக்கிலும், வேறு வட பகுதிகளிலும், பிராமணர் குடியிருப்புகளாகிய பிரமதேயங்கள் நிறுவப்பட்ட பின் சைவம் வலுப் பெறவும் தமிழ்நாட்டில் எழுந்த நாயன்மார் இயக்கத்தின் செல்வாக்கு இலங்கையில் பரவவும் வழிகோலப்பட்டது. ஏழாம் நூற்றாண்டிலிருந்து நாயன்மார்கள் நடத்திய இயக்கம் படிப்படியாக வலுப்பெற்றபோது அதன் தாக்கம் இலங்கையிலும் ஏற்பட்டது.

இலங்கையில் 600 இற்கும் 900 இற்கும் இடைப்பட்ட காலத்தில் நிலவிய சைவம் பற்றித் தொல்லியல் மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் மூலம் ஒரு சில சான்றுகளே இதுவரை கிடைத்துள்ளன. இவை சைவக் கோயில்கள் பற்றியவை. இன்று சைவம் நன்கு பேணப்பட்டுள்ள இடமாகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த கோயில்கள் பற்றிப் பிற்பட்ட நூல்களில் உள்ள சில தகவல்களை விட நம்பகமான சான்று எதுவும் தற்போது இல்லை. இவற்றின்படி அங்கு நகுலேஸ்வரம் என்ற பழைய கோயில் ஒன்று இருந்ததாக அறிகின்றோம்.

வடகரையில் நகுலேஸ்வரம் அமைந்திருந்தது போல, இலங்கையைச் சுற்றி ஈஸ்வரங்கள் இருந்தன என்று மரபுக் கதைகள் இலங்கைச் சைவ மக்கள் மத்தியில் வழங்கி வருகின்றன. அவ்வாறு மேற்குக் கரையில் முன்னீஸ்வரம் மற்றும் திருக்கேதீஸ்வரம், கிழக்குக் கரையில் திருக்கோணேஸ்வரம் ஆகியவையும் தெற்குக் கரையில் தொண்டீஸ்வரம் என்ற கோயிலும் இருந்தன என்பது மரபுக் கதை. இவற்றுள் தொண்டீஸ்வரம் தவிர்ந்த ஏனைய மூன்று கோயில்கள் பற்றியும் வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. தென் கரையில் நகரீசர் (நகரீஸ்வரம்) கோயில் என்றொரு தலம் இருந்ததாகப் பிற்பட்ட கல்வெட்டுச் சான்று ஒன்று கிடைத்துள்ளது. இக்கோயிலே தொண்டீஸ்வரம் என வழங்கியதோ தெரியவில்லை.

நாயன்மார்களுடைய இயக்கம் தொடங்கிய காலமளவில் மேலே குறிப்பிடப்பட்ட சைவத் தலங்களுள் திருக்கேதீஸ்வரமும், திருக்கோணேஸ்வரமும் பழமை வாய்ந்த முக்கிய சைவத் தலங்களாகத் தமிழ்நாட்டிலேயே கருதப்பட்டன எனலாம். இதனால் சைவ நாயன்மார் பாடிய தேவாரங்கள் இவ்விரு தலங்களை நோக்கியும் பாடப்பட்டன. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயனாராகிய திருஞானசம்பந்தர் தமிழ்நாட்டில் பல பழைய சைவத் தலங்களுக்குச் சென்று அவற்றின் சிறப்பைத் தேவாரமாகப் பாடினார். அவர் இலங்கைக்கும் சென்றாரோ என்பது தெரியவில்லை. ஆனால் இலங்கையின் இரு சைவத் தலங்கள் மீது தேவாரங்கள் பாடி அவற்றைச் சிறப்பித்துள்ளார். அத்தலங்கள் கோணேஸ்வரமும் கேதீஸ்வரமுமாம். ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் சுந்தரமூர்த்தி நாயனாரும் கேதீஸ்வரத்தின் மீது தேவாரம் பாடியுள்ளார். எட்டாம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் மாணிக்க வாசகர் இலங்கையுடன் தொடர்புடைய ஒரு சைவத் தலைவராக விளங்கினார் எனக் கருத இடமுண்டு. இவர் இலங்கைத் தலங்கள் பற்றிப் பாடல்கள் பாடாவிட்டாலும் இலங்கையுடன் தொடர்பு கொண்ட ஒருவராக சில கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளார். சைவ மரபுகளின்படி மாணிக்கவாசகர் மதுரையில் பாண்டிய மன்னனின் அமைச்சராகக் கடமையாற்றியபோது மன்னனுக்குக் குதிரைகள் வாங்குவதற்காகப் பெருந்துறை என்னும் துறைக்குச் சென்று வந்தார் என அறியக் கிடக்கின்றது. இவருடைய பிரசித்தி பெற்ற திருவாசகத்தில் பலமுறை ‘திருப்பெருந்துறையுறை சிவன்’ பற்றிப் பாடியுள்ளார். பெருந்துறை என்பதும் ‘மாதோட்டம்’ என்பதும் ஒரு பொருள் பெயர்கள். மாதோட்டம் குதிரை வர்த்தகத்துக்கும் வேறு தூர வர்த்தகத்துக்கும் நெடுங்காலம் பிரசித்தி பெற்ற துறையாக விளங்கியபடியால், மாணிக்க வாசகர் குதிரை வாங்கிய துறை மாதோட்டமாக இருக்கலாம் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது எவ்வாறாயினும் சைவ புராணங்களில் மாணிக்கவாசகர் இலங்கைப் பௌத்தர்களுடன் வாது செய்த ஒரு சைவத் தலைவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார். திருவாதவூரர் புராணத்தில் மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் இலங்கையிலிருந்து சென்ற பௌத்தர்களுடன் வாது செய்து அவர்களை வெற்றி கொண்டதாகவும், அங்கு வந்திருந்த இலங்கை மன்னன் ஒருவனுடைய ஊமை மகளைப் பேச வைத்ததாகவும், அதன் விளைவாக இலங்கை மன்னன் சைவத்தைத் தழுவியதாகவும் கூறப்படுகின்றது. இந்நிகழ்ச்சியுடன் ஒப்பிடக் கூடிய வகையில் பிற்பட்ட காலச் சிங்கள நூலாகிய நிகாய ஸங்கிரஹய நூல்,

கந்தரோடை Image Source - santhu11.blogspot.com

ஸேன என்ற மன்னன் ஒரு துறவியால் சைவத்துக்கு மதம் மாற்றப்பட்டான் என்று குறிப்பிடுகின்றது. இது மாணிக்கவாசகரைப் பற்றிய குறிப்பாக இருக்க முடியும்.

இவ்வாறு இலக்கியச் சான்றுகளால் வெளிப்படும் வரலாறு என்னவெனில் ஆறாம் நூற்றாண்டின் பின் இலங்கையில் சைவ இயக்கம் சில வகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி குறிப்பாகத் தமிழர் மத்தியில் அம் மதம் வலுப்பெற உதவியது என்பதே. இதனை உறுதிப்படுத்தும் வகையில் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் சைவம் சார்ந்த தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. இவை கிடைக்கும் இடங்களில் அகழ்வாய்வு நடத்தினால் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே அவ்விடங்களில் சைவ நிறுவனங்கள் இருந்ததை வெளிப்படுத்தும் சான்றுகள் கிடைக்கலாம்.

பெருமளவிலான அகழ்வாய்வுகள் அநுராதபுரத்தில் நீண்டகாலமாக நடத்தப்பட்ட காரணத்தினால், இங்குதான் மிகப் பழைய சைவ சமயத் தொல்லியல் சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றுள் சில பௌத்த நிறுவனங்கள் உள்ள இடங்களில் கிடைத்திருப்பதால், இவற்றுள் சிலவற்றை மஹாயான பௌத்தத் தொடர்புடையவையாகவும் கொள்ள இடமுண்டு. எடுத்துக்காட்டாக, பௌத்த பெரும்பள்ளியாகிய ஜேதவனாராம அமைந்துள்ள இடத்தில் அண்மையில் கிடைத்த அர்த்த நாரீஸ்வரர் சிலையைக் குறிப்பிடலாம். ஆனால் இப்படியான சமயஞ் சார்ந்த தனிப்பட்ட பொருள்களை விடக் கோயில்களின் அழிபாடுகளாகவும் கல்வெட்டுகளாகவும் அநுராதபுரத்தில் நிலவிய சைவ மதம் பற்றிய சான்றுகள் கிடைத்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அநுராதபுரத்தில் பல சைவக் கோயில்களின் அழிபாடுகளும் அவற்றுடன் தொடர்புடைய சில தமிழ்க் கல்வெட்டுகளும் சிவலிங்கங்களும் வெளிப்படுத்தப்பட்டன. இவை சோழர் காலத்துக்கு முற்பட்ட கலைப் பாணியில் அமைந்துள்ளன. இவை இலங்கையில் காணப்படும் மிகப் பழைய சைவ அழிபாடுகளுள் அடங்கும். இங்குள்ள கோயில்கள் சிறியவையாகவும் முக்கிய பாகங்களாகிய கர்ப்பக் கிருகம், அந்தராளம் மற்றும் அர்த்த மண்டபம் ஆகியவற்றை மட்டும் கொண்டவையாகவும் காணப்படுகின்றன.

இந்த அழிபாடுகளிடையே தமிழ்க் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. இவை சைவக் கோயில்களில் நந்தா விளக்கு எரிப்பதற்கு வழங்கப்பட்ட பணம் பற்றிய தகவல்களைத் தருகின்றன. இவற்றைக் கொண்டு இலங்கையில் அக்காலத்தில் இருந்த சைவக் கோயில்கள் தமிழ்நாட்டுக் கோயில்களைப் போன்று பராமரிக்கப்பட்டதை அறியலாம்.

இக் காலப்பகுதியில் மாதோட்டத்திலிருந்த திருக்கேதீஸ்வரம் ஒரு புனிதத்தலமாக நாட்டில் பலராலும் கருதப்பட்டது. சைவர்கள் மட்டுமல்லாது சிங்கள பௌத்தர்களும் அவ்வாறு கருதினர். இது பத்தாம் நூற்றாண்டுச் சிங்களக் கல்வெட்டுகளிலிருந்து தெரிய வருகின்றது. புனித நதி என இந்துக்களால் கருதப்படும் கங்கை நதியின் கரையில் உயிர்க் கொலை புரிவது பெரும் பாதகமாகக் கருதப்பட்டதால், இடைக் காலக் கல்வெட்டுகளில் பதிவு செய்யப்பட்ட தானங்களைப் பாதுகாப்பதற்கு அல்லது விதிகள் மீறப்படாது இருப்பதற்குக் கல்வெட்டின் இறுதியில் கங்கை நதி சார்ந்த ஓர் ஒம்படைக்கிளவி எனப்பட்ட காப்பு வசனம் சேர்க்கப்பட்டது. அது பொதுவாக, “தெற்குப் பிழைப்பார் கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைப் பெறுவார்களாக அல்லது கங்கைக் கரையில் பிராமணரைக் கொன்ற பாவத்தைப் பெறுவார்களாக” என்று பொருள்பட அமைந்தது. அதேபோல, இலங்கையில் சிங்களக் கல்வெட்டுகளில் “மாதோட்டத்தில் பசுக் கொலை புரிந்த பாவத்தைப் பெறுவார்களாக” என்று பொருள்படும் வாசகம் காணப்படுகின்றது. இது மாதோட்டத்துக்குக் கொடுக்கப்பட்ட புனித நிலையைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் அங்கு இருந்த திருக்கேதீஸ்வரர் கோயில் என்பதில் ஐயமில்லை.

திருகோணமலையிலும் மாதோட்டத்திலும் இருந்த பிரசித்தி பெற்ற ஈசுவரர் கோயில்களை விட மேலும் பல கோயில்கள் வட பகுதியில் இருந்திருக்கும் எனலாம். திருகோணமலைக்கு வடக்கே நிலாவெளியில் பத்தாம் நூற்றாண்டளவில் பொறிக்கப்பட்ட ஒரு தமிழ்க் கல்வெட்டில் ‘மற்சியேஸ்வரம்’ என்ற ஒரு கோயில் குறிப்பிடப்படுகின்றது. இது கோணேஸ்வரத்துக்குரிய இன்னொரு பெயராக இருந்தாலும், அதிலிருந்து வேறுபடும் ஒரு கோயிலாகவும் இருந்திருக்கலாம். கந்தளாயிலும் பதவியாவிலும் சோழராட்சியின் போது கல்வெட்டுகள் மூலம் தெரிய வரும் கோயில்களுள் சில, பத்தாம் நூற்றாண்டு முன்னரே நிறுவப்பட்டவையாக இருக்கலாம்.

இவ்வாறாக, சைவ சமயம் தொடர்பாகக் கிடைக்கும் சான்றுகள் நாயன்மாருடைய பக்தி இயக்கம் நடைபெற்ற காலத்தில் இலங்கையில் பரவிய சைவ மதச் செல்வாக்கை வெளிப்படுத்தும் சான்றுகள் எனலாம். இவற்றை விடக் கூடுதலான சான்றுகள் மேலும் அகழ்வாய்வுகள் நடத்தப்படும்போது வெளிப்படும் என்பதில் ஐயமில்லை.

வணிக கணங்களின் செல்வாக்கு

வடக்கிலும் கிழக்கிலும் இக் இக் காலப்பகுதியில் தமிழர் குடியிருப்புகள் மேலும் வலுப்பெற்றமைக்கு இன்னொரு முக்கிய காரணி வணிக கணங்களின் வளர்ச்சியும் செல்வாக்குமாகும். வேறு காரணிகளை விட வர்த்தகமே இலங்கையின் இப்பாகத்துக்கும் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிக்கும் இடையில் நெருங்கிய உறவு வளர்வதற்கும், பொருளியல், அரசியல் மற்றும் பண்பாட்டுச் செல்வாக்கு இரண்டு இடங்களுக்கும் இடையில் பரவுவதற்கும் உந்து சக்தியாக அமைந்தது. தென்னிந்தியாவிலிருந்து வலிமை வாய்ந்த வணிக கணங்களின் வருகை பல வணிக நகரங்கள் தோன்றுவதற்கும் அவ்விடங்கள் சைவ வழிபாட்டுத் தலங்களைக் கொண்ட மையங்களாக மாறுவதற்கும் உதவியது. அத்துடன் சிற்பிகள், பிற கலைஞர்கள் மற்றும் பல வகைத் தொழில் புரிவோர் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறுவதற்கும் வர்த்தக வளர்ச்சி வழிவகுத்தது.

பல்லவப் பேரரசின் எழுச்சியுடன் வணிக கணங்கள் தமிழ்நாட்டுத் துறைகளிலிருந்து இலங்கைக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்கும் சென்று பெருமளவு வர்த்தக முயற்சிகளை மேற்கொண்டனர். அவர்கள் சென்ற இடங்களில் ஆட்சியாளரும் உயர்குழாத்தினரும் அவர்களுடைய செல்வாக்கிற்கு உட்பட்டனர். வணிக கணங்கனின் உதவியுடன் பௌத்த நிறுவனங்களும் சைவ, வைணவ நிறுவனங்களும் அமைக்கப்பட்டன. இவற்றில் செயலாற்றப் பிராமணர்களும் பௌத்த சங்கத்தாரும் வணிகர்களால் கூட்டிச் செல்லப்பட்டனர். சிற்பங்களையும் கட்டிடங்களையும் அமைக்கச் சிற்பிகளும் கூட்டிச் செல்லப்பட்டனர். இவ்வாறு தமிழ்நாட்டிலிருந்து கடல் கடந்து சென்றோருடைய முயற்சிகளை வெளிப்படுத்தும் வகையில் இன்று இலங்கை, தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் லாவோஸ் ஆகிய நாடுகளில் பல்லவ பாணியில் அமைக்கப்பட்ட சிற்பங்கள், மற்றும் பல்லவ கிரந்த எழுத்தில் எழுதப்பட்ட சமஸ்கிருதக் கல்வெட்டுகள், பல்லவர் காலத் தமிழில் எழுதப்பட்ட தமிழ்க் கல்வெட்டுகள் ஆகியவை கிடைத்துள்ளன.

வணிக கணங்களின் செல்வாக்குத் தமிழ்நாட்டிலிருந்து சிற்பிகள், பிராமணர் மற்றும் நீர்ப்பாசன அமைப்புத் தொழிலாளர் ஆகியோரும் பிற தொழில்சார் குழுக்களும் இலங்கையின் வடகிழக்குப் பகுதியில் வந்து குடியிருப்புகளை அமைக்க உதவியது. பாதுகாப்பு வழங்கும் போராளிக் குழுக்களும் வணிக கணங்களால் கொண்டு வரப்பட்டன எனலாம்.

ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் பல்லவர் பாணியில் சிற்பிகள் உருவாக்கிய பல்வகைச் சிற்பங்கள் அநுராதபுரத்துக்கு அருகாமையிலுள்ள இசுருமுனிய என்ற இடத்திலும், திரியாய், குச்சவெளி மற்றும் குருக்கள் மடம் ஆகிய இடங்களிலும் காணப்பட்டமை முன்னர் குறிப்பிடப்பட்டது. பல்லவர் பாணியில் நாலந்தா என்ற இடத்தில் மஹாயானக் கோயில் ஒன்று உள்ளது. அதேபோலப் பல்லவர் பாணியில் தெலிநுவர என்ற தென் முனையில் இன்னொரு கோயில் உள்ளது. இவை போன்ற சிற்பங்களையும், கட்டிடங்களையும் அமைப்பதற்குத் தமிழ்நாட்டுச் சிற்பிகள் வந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. இவர்கள் பல்லவ கிரந்த எழுத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகளைப் பொறிப்பதற்கும் உதவியிருப்பர்.

இக் காலப்பகுதியில் தமிழ்நாட்டுக்கும் இலங்கையின் வடகிழக்குப் பகுதிக்கும் இடையில் இருந்த நெருங்கிய உறவினை

விளங்கிக் கொள்ளத் தென்கிழக்காசியப் பின்னணியை நோக்க வேண்டும். வங்காள விரிகுடாவைச் சுற்றியுள்ள நாடுகளில் தென்னிந்திய வணிக கணங்கள் பெருமளவு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டபோது கூடவே பல்லவப் பேரரசின் பண்பாடும் பரவியது. அரசியலில் காணப்பட்ட செல்வாக்கை வெளிப்படுத்தும் ஒரு கூறாக, மன்னர் பெயர்கள் பல அரசுகளில் பல்லவ மன்னர் பெயர்கள் போன்று 'வர்மன்' என்ற இறுதிச் சொல்லைக் கொண்டிருந்தன. தென்கிழக்காசிய அரசுகளில் இந்திரவர்மன், ஜயவர்மன், ஈசானவர்மன், யஸோவர்மன், பூர்ணவர்மன் போன்ற பெயர்கள் ஐந்தாம் நூற்றாண்டில் பரவலாக வழக்கில் இருந்தன. சமயத்தைப் பொறுத்தமட்டில், சைவ வைணவ மதங்களுடன் பௌத்த மதமும் பெருமளவு செல்வாக்கைப் பெற்றிருந்தன. இலங்கையில் மணிக்கிராமம் மற்றும் தாங்குநாடு போன்ற வணிக கணங்கள் இச் செல்வாக்கைப் பரப்புவதில் முக்கிய பங்கு கொண்டிருந்தன எனலாம்.

தென்கிழக்காசிய அரசுகளில் ஆட்சியாளராக இருந்தோர் மஹாயான பௌத்தத்தையும் சைவ, வைணவ மதங்களையும் ஆதரித்துப் பல்லவப் பேரரசிலிருந்து பரவிய செல்வாக்கு வளர்வதற்கு உதவினர். ஆனால் இலங்கையில் நிலைமை வேறாகக் காணப்பட்டது. அநுராதபுரத்தின் ஆட்சியாளர் தேரவாத பௌத்தத்தை ஆதரிக்கும் கடமையைப் பெற்றிருந்தனர். இதனால் மஹாயான பௌத்தத்தையும் சைவ, வைணவ மதத்தையும் அவர்கள் ஆதரிக்க முன்வரவில்லை. அப்படியிருந்தும் வடகிழக்கில் மஹாயான நிறுவனங்கள் அமைக்கப்பட்டுச் செழிப்புற்றிருந்தன எனின் அதற்குக் காரணம் வணிக கணங்களும் அவ்விடங்களில் வாழ்ந்த உயர் குழாத்தினரும் என்று ஊகிக்க இடமுண்டு, வடகிழக்கில் அநுராதபுரத்தின் ஆதிக்கத்தைக் காட்டிலும் பல்லவப் பேரரசின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது என்று கொள்ள இடமுண்டு. மஹாயான நிறுவனங்களுக்கும் சைவ, வைணவ நிறுவனங்களுக்கும் ஆதரவு வழங்கிய இக்குழுக்கள், வடகிழக்கில் இக்காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் அமைப்பதற்கும் காரணமாயிருந்திருப்பர்.

நீர்ப்பாசனம்

வடகிழக்குக் கரையோரம், சிறப்பாகக் கொக்கிளாய் தொடங்கித் திருகோணமலை வரையுள்ள பிரதேசம், ஏழாம் நூற்றாண்டு தொட்டு வணிக கணங்களின் செயல்கள் கூடுதலாக இடம் பெற்ற பிரதேசமாகத் தோன்றுகிறது. இக் காலத்திலே அமைக்கப்பட்ட இரு பெருங் குளங்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. ஆனால் இவற்றை அநுராதபுரத்து ஆட்சியாளர் கட்டியதாகப் பாளி வரலாற்றேட்டில் குறிப்பு எதுவும் இல்லை. இக்குளங்கள் இன்று பதவியாக்குளம் எனவும் வாஹல்கடக் குளம் எனவும் பெயர் பெற்றுள்ளன. இப் பெரிய குளங்களை அமைப்பதற்கு வணிக கணங்கள் உதவியிருக்க முடியும்.

பதவியாக்குளம் இப்பிரதேசத்திலுள்ள பெரிய குளங்களுள் ஒன்று. ஏறத்தாழ 10,000 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்குளம் பன்னிரண்டாம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகு பெருப்பித்துக் புதுக்கியமைத்த குளங்களுள் ஒன்றாகும். இதற்கு அருகேயிருந்த பழைய குடியிருப்புப் பகுதியில் பல சைவக் கோயில்களின் அழிபாடுகள் தமிழ்க் கல்வெட்டுடன் காணப்படுகின்றன. இக் கோயில்களுள் ஒன்று சோழர் ஆட்சியின் போது இரவிகுலமாணிக்க ஈஸ்வரம் என்ற பெயரைப் பெற்றிருக்கிறது. இது பொலன்னறுவையில் காணப்படும் சோழர் காலச் சைவக் கோயில்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. இக் கோயிலை ஆதரித்தோருள் ஒருவராக நானாதேசி வணிக கணத்தைச் சேர்ந்த ஒருவர் இங்குள்ள

கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளார். இவ்விடத்தில் வீரக்கொடியர் போன்ற வணிக கணங்களுடன் இணைந்த குழுக்களும் பிற வணிக கணங்களும் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை செழிப்புடன் விளங்கின.

பதவியா மற்றும் வாஹல்கடக் குளங்கள் வணிக கணங்களின் உதவியுடன் உள்ளூர்த் தலைவர்களால் அமைக்கப்பட்டன என்றே தோன்றுகிறது. இலங்கையில் அமைக்கப்பட்ட குளங்கள் அனைத்தும் அநுராதபுரத்து மன்னர்களால் மட்டுமே அமைக்கப்பட்டன என்று கூற முடியாது. அந்த அளவுக்கு அம் மன்னர்கள் ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாகத்தை நாடு முழுவதிலும் ஏற்படுத்தியிருந்தனர் என்று கூறுவதற்கில்லை. சிறப்பாக, ஆறாம் நூற்றாண்டுக்கும் பத்தாம் நூற்றாண்டுக்கும் இடையில் அடிக்கடி அரசியற் குழப்ப நிலை காணப்பட்ட போதிலும், பெருங் குளங்கள் பல அமைக்கப்பட்டன. அநுராதபுரத்து மன்னர்கள் அல்லாது செல்வம் பெற்ற வணிக கணத்தவரும் வேறு உயர் குழாத்தினரும் இவற்றை அமைப்பதற்குக் காரணமாக இருந்திருப்பர் எனலாம். முன்னர் குறிப்பிட்டது போல, பிராமணக் குடியிருப்புகளாகிய பிரமதேயங்களும் குளங்கள் மற்றும் கால்வாய்கள் போன்ற நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றை அமைக்கும் கடமைகளில் ஈடுபட்டன. அவற்றுக்கு வணிக கணங்களின் உதவி கிடைத்திருக்கும்.

வணிக கணங்கள் நீர்ப்பாசன வசதிகள் தொடர்பாகவும் செயல்களில் ஈடுபட்டனர் என்பதற்கு ஒன்பதாம் நூற்றாண்டுக் கல்வெட்டுச் சான்று கிடைக்கின்றது. தாய்லாந்தில் மணிக்கிராமம் என்ற வணிக கணம் அவனிநாரணம் என்ற குளம் தொடர்பாகச் சில பொறுப்புகளைப் பெற்றிருந்தது. தமிழ்நாட்டில் முனசந்தல் என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டு அஞ்ஞூற்றுவப் பேரேரி என்ற ஒரு குளத்தைக் குறிப்பிடுகின்றது. அஞ்ஞூற்றுவர் என்ற வணிக கணம் இதனை அமைத்திருக்கக் கூடும். இலங்கையில் இவ்வாறு நேரடியாக வணிக கணங்களை நீர்ப்பாசன வசதிகளுடன் தொடர்புபடுத்தும் சான்று கிடைக்காவிட்டாலும், வடகிழக்கில் பல்லவர் செல்வாக்கு நீர்ப்பானம் தொடர்பாகவும் இருந்தமைக்குச் சான்று காணப்படுகின்றது. இதற்கு வணிக கணங்களின் செயல்கள் காரணமாக இருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு.

வடகிழக்குப் பகுதியிலுள்ள சில குளங்களின் பெயர்கள் இது தொடர்பாகக் கவனிக்கத்தக்கவை. பொதுவாக, பிராமிக் கல்வெட்டுகளின் காலத்திலிருந்து வபி என்ற பெயர் கல்வெட்டுகளிலும் வாபி என்ற சொல் பாளி வரலாற்றேடுகளிலும் குளங்களைக் குறிக்கப் பயன்பட்டன. இச் சொற்களின் வழியாகப் பிற்பட்ட சிங்களத்தில் வவ என்ற சொல் பெறப்பட்டது. இவற்றுக்கும் தமிழில் வாவி என வரும் சொல்லுக்கும் உறவு உண்டு. தமிழ்நாட்டில் சங்க நூல்களில் குளம் என்ற சொல் பரவலாக இடம் பெறுவதைக் காணலாம். ஆனால் பிற்பட்ட காலத்தில், குறிப்பாகப் பல்லவர் ஆட்சியின் போது, ஏரி மற்றும் தடாகம் ஆகிய சொற்கள் குளங்களின் பெயர்களில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன. பல்லவர் செல்வாக்குப் பரவிய தென்கிழக்காசிய அரசுகளிலும், இப்படியான பெயர்களைக் காணலாம். தமிழ்நாட்டில் மகேந்திர தடாகம், வைர மேக தடாகம் மற்றும் பரமேஸ்வர தடாகம் ஆகிய குளப் பெயர்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. அவ்வாறே தென்கிழக்காசிய அரசுகளில் இதே காலமளவில் சங்கர தடாகம், யஸோதர தடாகம் மற்றும் இந்திர தடாகம் ஆகிய குளப் பெயர்கள்

இருந்தன. இவ்வாறே இலங்கையிலும் வடகிழக்கில் அமைக்கப்பட்ட சில குளங்கள் தடாகம் என்ற பெயரைப் பெற்றன. கந்தளாயில் அமைக்கப்பட்ட பெருங்குளம் 'கங்கா தடாகம்' என்ற பெயரைப் பெற்றிருந்தது. இதுவே பின்னர் கந்தளாய் எனத் திரிபடைந்திருந்தது. இதுபோன்று இன்னொரு குளம் 'கிரிதடாகம்' எனப் பெயர் பெற்றுப் பின்னர் கிரித்தளே என்று திரிபடைந்தது. தடாகம் என்ற ஈற்றுப் பெயர் இலங்கையின் வேறு பாகங்களில் அமைக்கப்பட்ட குளங்களுக்கு இல்லை. வடகிழக்கில் அமைக்கப்பட்ட இன்னொரு குளம் இன்று வாஹல்கடக் குளம் என்று அழைக்கப்பட்டாலும், இதற்குக் காட்டன் ஏரி என்ற பெயர் தமிழ்க் கல்வெட்டு ஒன்றில் காணப்படுகின்றது. வடகிழக்கில் உள்ள இன்னொரு குளம் இன்றும் மின்னேரி என்ற பெயரைப் பெற்றுள்ளது. இதில் வரும் ஏரி, குளத்தைக் குறிக்கும் சொல்லா என்பது ஆய்வுக்குரியது. தடாகம் மற்றும் எரி என்ற விகுதிப் பெயர் இலங்கையின் வேறு பாகங்களில் உள்ள குளங்களுக்கு இல்லையாகையால், வடகிழக்கில் பரவிய பல்லவர் செல்வாக்கை இவை பிரதிபலிக்கின்றன என்றும் இக் காலத்தில் இவற்றை அமைப்பதில் பல்லவ அரசிலிருந்து வந்த வணிக கணங்கள் பங்கு கொண்டிருந்தன என்றும் ஊகிக்க இடமுண்டு.

இவ்வாறு வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டிலிருந்து பரவிய செல்வாக்கு இப்பகுதிகளில் தமிழர் வலுவினைக் கூட்டி, ஏனைய இனக் குழுக்களை விட மேலோங்கிய குழுவாக அப்பிரதேசத்தில் தமிழ் இனக் குழு எழுச்சி பெற உதவியது. ஆனால் இலங்கையின் மத்திய பகுதியிலும் தென்பகுதியிலும் ஹெள இனக்குழு ஏனையவற்றை உள்ளடக்கி

பதவியாக்குளம்
Image Source : ta.wikipedia.org

ஆதிக்கம் பெற்ற நிலையில் இருந்தது. அநுராதபுரத்தில் தனது ஆதிக்க மையத்தை அமைத்திருந்த ஹெள இனக் குழு வடக்கிலும் தன் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்யக் கூடிய நிலையில் இருந்தது எனலாம். ஆதி வரலாற்றுக் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து வந்த தாக்கத்தால் வலுவிழக்காது எழுச்சி பெற்ற ஹெள இனக்குழு, இலங்கை முழுவதிலும் ஆதிக்கம் பெறுமோ என்பது நிச்சயிக்கப்படாத நிலை இக்காலத்தில் காணப்பட்டது. இதனை இறுதியில் நிச்சயிக்கும் சக்திகள் இக்காலத்தில் துரிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தன. தமிழ்நாட்டில் பேரரசுகளின் எழுச்சியும் சைவ இயக்கத்தின் வெற்றியும் இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் ஆதிக்கம் பெறுவதற்கும் ஹெள இனக் குழுவின் ஆதிக்கப் பரம்பலைத் தடுத்து நிறுத்துவதற்கும் உதவின. இதனால் பத்தாம் நூற்றாண்டளவில் இலங்கையின் வட பாகத்தில் தமிழ் இனக் குழுவும் நடுப்பாகத்திலும் தென் பாகத்திலும் ஹெள இனக் குழுவும் ஆதிக்கம் பெறுவது பெருமளவு நிச்சயமாகிறது. சோழர் ஆட்சியுடன் பதினோராம் நூற்றாண்டில் இந்நிலை உறுதி பெற்றது.

மலையகத் தமிழரின் சமூக, அரசியல் விடுதலைக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தை அர்ப்பணித்த நடேசய்யர் குறித்த ஆய்வுகள் அவரது பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், சில புதிய மூலங்களைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றுள் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்படாத நிலையே தொடர்கிறது. அந்தவகையில், ஏற்கனவே கிடைக்கப்பட்டுள்ள நூல்களையும் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள நூல்களையும் மதிப்பிடுவதன் மூலம் நடேசய்யரின் பங்களிப்புகளையும், அவர் காலத்து சமூக, அரசியல் அசைவையும் கண்டுகொள்ளவும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் நிலவும் இடைவெளியை நிரப்பவும் எதிர்கால ஆய்வுகளுக்கான திசைகாட்டல்களை வழங்கவும் ‘கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை’ எனும் இத் தொடர் எழுதப்படுகிறது.

● எம். எம். ஜெயசீலன்

எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார்.

கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை: அறிமுகம்

I

தென்னாபிரிக்காவில் காந்தியும் பீஜி, மொறிசியஸ் முதலான நாடுகளில் மணிலாலும் புலம்பெயர்ந்த இந்தியரின் விடுதலைக்கான போராட்டங்களைத் தலைமைதாங்கி முன்னெடுத்ததுபோல இலங்கையில் இந்தியத் தொழிலாளரின் மீட்சிக்கான போராட்டங்களை கோ. நடேசய்யர் முன்னெடுத்துள்ளார். தஞ்சாவூரின் தென் ஆற்காட்டில் வளவனூர் கிராமத்தில் ஜனவரி 14, 1887 அன்று பிறந்த அவர் 1920 ஆம் ஆண்டு முதல் மரணிக்கும் வரை (நவம்பர் 07, 1947) இலங்கையில் வாழ்ந்துள்ளார். பத்திரிகை ஆசிரியர், சட்ட நிரூபண சபை - அரசாங்க சபை உறுப்பினர், தொழிற்சங்கவாதி - தொழிற்சங்க ஸ்தாபகர், அரசியல் விமர்சகர், படைப்பாளர், பதிப்பாளர், ஆய்வாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல தளங்களில் ஆக்கபூர்வமாக இயங்கியுள்ள அவர், மலையகத் தமிழர் வாழ்விலும் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் அசைவிலும் கனதியான தாக்கங்களைச் செலுத்தியுள்ளார்.

நடேசய்யரின் தொழிற்சங்கம் மற்றும் சமூக அரசியற் செயற்பாடுகள் குறித்துக் குறிப்பிடத்தக்க ஆய்வுகள் வெளிவந்துள்ளன. குமாரி ஜயவர்த்தன (1972, 2015), சாரல்நாடன் (1988, 1998), அந்தனி ஜீவா (1990), எஸ். நடேசன் (1993), ஏ.பி. கணபதிப்பிள்ளை (2011),

நடேசய்யர்

Image Source : www.namathumalayagam.com

ரஷேல் குரியன் (2015) முதலானோரின் ஆய்வுகள் அவ்வகையில் குறிப்பிட்டுக் கூறத்தக்கன. மு. நித்தியானந்தன் நடேசய்யர் குறித்தும் மலையகம் குறித்தும் எழுதியுள்ள கட்டுரைகளில் நடேசய்யரின் பங்களிப்புகள் பலவற்றை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

மேற்படி ஆய்வுகள் நடேசய்யரின் பங்களிப்பை அறிமுகப்படுத்தல், அவற்றை மதிப்பிடுதல் என்ற தளங்களில் முன்னோடி முயற்சிகளாக விளங்குகின்றன. இருந்தபோதிலும் அவை குறிப்பிட்ட சில மட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. நடேசய்யரின் மூல ஆவணங்கள் பல கிடைக்கப்பெறாத காலத்தில், கிடைக்கப்பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டும், புதிய மூலங்கள் சிலவற்றைக் கண்டறிந்தும் அந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதனால் அவற்றில் நடேசய்யரின் மொத்தப் பங்களிப்புகளும், அவரின் கருத்தியல் தளத்தில் ஏற்பட்டுவந்த மாற்றங்களும் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. அதேவேளை, இவர்களுடைய ஆய்வுகளில் இடம்பெறுகின்ற மூலத்தரவுகளைத் தாண்டி நடேசய்யரின் ஆளுமையை, பங்களிப்பை வெளிப்படுத்துகின்ற ஆய்வுகள் மிகமிக அரிதாகவே வெளிவந்துள்ளன. இந்த இடைவெளிகளுக்கு நடேசய்யரின் எழுத்துகள் யாவும் முறையாக ஆவணப்படுத்தப்படாமையும் பேணப்படாமையும் முதன்மையான காரணங்களாக விளங்கியுள்ளன.

நடேசய்யரின் நூல்கள் திட்டமிட்ட அடிப்படையில் அழிக்கப்பட்டுள்ளன. "அவரின் நூல்களைப் பெருந்தோட்ட நிர்வாகமே விலைக்கு வாங்கி எரித்துள்ளது" (Nadesan, 1993: 90); பெரியகங்காணிமார்கள் பலர் நடேசய்யரின் நூல்களைத் தொழிலாளர்களிடம் சென்றடையா வண்ணம் தடுத்துள்ளனர். இதனை நடேசய்யரே தொழிலாளர் சட்ட புஸ்தகத்தின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் நடேசய்யருக்குப் பின் அவர் முன்னெடுத்த சமூக, அரசியற் செயற்பாடுகள் முடங்கிவிட்டன. அவருடன் தொடர்புபட்ட எவரும் அவரை முன்னிலைப்படுத்தி அரசியற் சமூக களத்தில் மேற்கிளம்பவில்லை. "நடேசய்யரைப் போன்றவர்களின் முக்கியத்துவம் பின்னால் வந்த

பல போலித் தலைவர்களாலும் அவர்களின் துதிபாடிகளாலும் மூடிமறைக்கப்பட்டுள்ளது” (இயக்கம்: டிசம்பர், 1977). அவரின் நூல்களும் நீண்டகாலமாக மறுபிரசுரம் பெறவில்லை. இந்நிலையால் நடேசய்யருடைய நூல்களின் புழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டதெனலாம். பிற்பட்ட காலத்தில் குமாரி ஜயவர்த்தன ‘இலங்கையில் தொழிலாளர் இயக்கத்தின் வளர்ச்சி’ குறித்த ஆய்வில் நடேசய்யரின் பங்களிப்பினை விரிவாக மதிப்பிடும் முயற்சியை மேற்கொண்டுள்ளார். அதன்பின்பே நடேசய்யர் பற்றிய உரையாடல் மெல்ல மெல்ல வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளது. மலையக மக்கள் இயக்கம் ‘நடேசய்யரை மலையகத்தின் தொழிற்சங்க முன்னோடி’ என முன்நிறுத்தி இயக்கம் பத்திரிகையில் நல்லதொரு அறிமுகக் கட்டுரையை 1977 ஆம் ஆண்டு பிரசுரித்துள்ளது. அதனைத் தொடர்ந்து சாரல்நாடன், அந்தனி ஜீவா முதலானோரின் அரிய முயற்சிகளால் நடேசய்யர் குறித்த தகவல்கள் தமிழ்ச் சூழலில் பரவலாக அறிமுகமாகின. இருப்பினும் நடேசய்யரின் எழுத்துகளைத் தொகுக்கும் முயற்சியோ நூல்களை மறுபதிப்பு செய்யும் முயற்சியோ இடம்பெறாததால் அவரின் மூல எழுத்துகள் பரவலான புழக்கத்துக்கு வரவில்லை. நீண்ட இடைவெளிக்குப்பின் அந்தனி ஜீவாவின் முயற்சியால் ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகம்’ இரண்டாம் பதிப்பாக (2018) வெளியிடப்பட்டது. அவ்வெளியீட்டுக்குப் பின்பே இலங்கைத் தமிழ்நாடக வளர்ச்சியில் நடேசய்யரின் பங்களிப்புப் பரவலான வெளிச்சத்துக்கு வந்தது.

அந்தனி ஜீவாவின் முயற்சியைத் தொடர்ந்து நடேசய்யரின் ‘கதிர்காமம்’ என்ற நூலை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மறுபதிப்பாக (2021) வெளியிட்டது. அதன்பின்னர் நடேசய்யரின் 75 ஆவது நினைவு ஆண்டையொட்டி ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்’ (2022), ‘தொழிலாளர் சட்ட புஸ்தகம்’ (2022) ஆகிய நூல்களை இக்கட்டுரை ஆசிரியர் (எம்.எம். ஜெயசீலன்) மறுபதிப்புச் செய்ததுடன் தேசபக்தனில் வெளிவந்த நடேசய்யரின் தன் வரலாற்றுப் பதிவான ‘எனது வாழ்க்கையின் நோக்கம்’ என்ற தொடரையும் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். பெ. சரவணகுமார் நடேசய்யரின் ‘ஒற்றன்’ (2022), ‘இந்தியா - இலங்கை ஒப்பந்தம்’ (2022) ஆகிய நூல்களை மறுபதிப்பாகக் கொண்டுவந்ததுடன் 2023 ஆம் ஆண்டுக்கான இர. சிவலிங்கம் ஞாபகார்த்த நினைவுப் பேருரையை, ‘மலையகத்தின் சமூக உருவாக்கத்தில் கோ. நடேசய்யரும் அவரது அறியப்படாத எழுத்துக்களும்’ என்ற தலைப்பில் நிகழ்த்தினார். அதனை இர. சிவலிங்கம் ஞாபகார்த்தக் குழு சிறு நூலாக வெளியிட்டுள்ளது. இம் மறுபதிப்புகளிலும் அவற்றையொட்டி எழுதப்பட்டவற்றிலும் இடம்பெறும் புதிய தரவுகள் நடேசய்யரின் பங்களிப்புகளை விரிந்த தளத்தில் உரையாடுவதற்கான வெளியினைக் கட்டமைத்துள்ளன; ஏலவே நிகழ்த்தப்பட்டுள்ள ஆய்வுகளின் காணப்படும் சில தெளிவின்மைகளைத் தெளிவுபடுத்திக்கொள்ளவும் அவற்றின் போதாமைகளை நிவர்த்தி செய்துகொள்ளவும் இப்புதிய தரவுகள் வழிசமைத்துள்ளன. உதாரணமாக, ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்’ என்ற நூல் குறித்த பதிவுகளைச் சுட்டிக்காட்டலாம்:

நடேசய்யரின் முதலாவது நூலான 'கணக்குப் பதிவு நூல்' 1914 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அவரின் இறுதி நூலான 'கதிர்காமம்' அவர் இறப்பதற்கு ஒரு வருடத்துக்கு முன்னர் 1946 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதனால் இத்தொடருக்குக் 'கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை' என்ற (உப) தலைப்பு இடப்பட்டுள்ளது.

நடேசய்யர் 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்றொரு சிறுநூலை வெளியிட்டுள்ளார் என்ற தகவல் குமாரி ஜயவர்த்தன அவர்களின் நூலில் இடம்பெற்றுள்ளது (1972: 344). நடேசய்யர் குறித்த விரிவான தகவல்களைத் தந்துள்ள சாரல்நாடனின் பதிவுகளில் இந்நூல் குறித்த வெளிப்படையான குறிப்புகள் எவையும் இடம்பெறவில்லை. இருப்பினும் 'தொழிலாளர் சட்ட புஸ்தகம்' குறித்த பதிவில் நடேசய்யர் 'தொழிலாளர்களின் உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரமொன்று வெளியிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அப்பதிவு இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும், தொழிலாளர் சட்ட புஸ்தகம் ஆகிய நூல்கள் குறித்துச் சில ஐயங்களைத் தோற்றுவிப்பதாக அமைந்துள்ளது. அப்பதிவின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு:

"நடேசய்யர் தனது வழமையான போக்கிலிருந்து விடுபட்டு ஒரு புத்தகத்தை வெளியிட்டார். தொழிலாளர் சட்ட புஸ்தகம் என்ற பெயரில் 1929 இல் வெளிவந்த அந்தப் புத்தகத்தைப் பற்றி நடேசய்யர் தனது பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறார்... இந்நூலினை வாசித்தறிந்த தொழிலாளர்கள் மூன்று தோட்டங்களில் துரைமார்கள் மிரளும் அளவிற்குக் குழப்பம் விளைவித்தனர்... தன்னுடைய சட்ட புஸ்தகம் அனைத்தையும் பெரிய கங்காணிகள் விலை கொடுத்து வாங்கித் தொழிலாளர்களிடம் போகாது பதுக்கிக் கொண்டதைக் கவனித்த நடேசய்யர், தொழிலாளர்களைச் சந்தித்து உரையாற்றும் கூட்டங்களில் 'தொழிலாளர்களின் உரிமைகளும் கடமைகளும்' என்ற தலைப்பில் சட்ட புஸ்தகத்திலுள்ள முக்கிய அறிவுரைகள் சிலவற்றை அச்சடித்துத் துண்டுப்பிரசுரங்களாக விநியோகித்தார்... தன்னை அத்தனை எளிதில் எதிரிகள் வெல்ல முடியாது என்ற நிலைமை உருவாகியிருப்பதை உணர்ந்த நடேசய்யர், மீண்டும் சட்ட புஸ்தகத்தை அச்சில் நூல் வடிவில் கொண்டு வந்தார். 1939 இல் வெளியிடப்பட்ட அந்த நூல் தொழிலாளர்களின் அமோக ஆதரவைப் பெற்றது..." (சாரல்நாடன், 1988: 136140).

இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும் என்ற சிறுநூல், 1928 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது என்பதை தற்போது கிடைக்கப்பெற்றுள்ள முதற் பதிப்பிலிருந்து கண்டுகொள்ள முடிகிறது. இந்நூலினுடைய விரிவாக்கமாகவே 1939 ஆம் ஆண்டு வெளிவந்துள்ள தொழிலாளர் சட்ட புஸ்தகம் அமைந்துள்ளது. அந்நூலின் முன்னுரையில் இடம்பெறும், "1928ம் வருஷம் நான் ஒரு புஸ்தகம் வெளியிட்டிருந்தேன். அப்புஸ்தகங்கள் தொழிலாளர்களிடம் சேராமல் பல பெரிய கங்காணிமார்களும் முயற்சி எடுத்தார்கள்.

1928ம் வருஷத்திற்குப் பிறகு சட்டங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய சட்டங்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் இப்புஸ்தகத்தில் சேர்த்திருக்கிறேன்" (நடேசய்யர்: 1939) என்ற குறிப்பும் அதனை உறுதிசெய்கின்றது. இந்நிலையால், சாரல்நாடனின் மேற்படி முடிவை மாற்றி எழுத வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.



நடேசய்யரும் மீனாட்சியம்மாளும்

Image Source : mmkcanada.blogspot.com

மீனாட்சியம்மாள் படைப்புகள் பற்றிய கண்டுபிடிப்புகளும் நடேசய்யர் பற்றிய ஆய்வுகளில் புதிய வெளிச்சங்களை ஏற்படுத்தியுள்ளன. சான்றாக, 'இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு நாடகம்' பற்றிய புதிய செய்திகளைக் குறிப்பிடலாம். அந்நூலில் உள்ள பாடல்கள் மீனாட்சியம்மாளால் எழுதப்பட்டவையாகும். அது குறித்த சாரல்நாடனின் பதிவு பின்வருமாறு அமைந்துள்ளது:

"1937ஆம் ஆண்டு கொழும்பு கமலா பிரஸ்ஸிலிருந்து இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகம் என்ற நாடக நூலை அய்யர் வெளியிட்டார். அதில் மீனாட்சியம்மையால் இயற்றப்பட்ட பல பாடல்கள் இணைக்கப்பட்டிருந்தன... மீனாட்சியம்மை 1936இல் முழுநேர அரசியல் பிரசாரகராகிவிட்டிருந்தார். அதன் உச்சகட்டமாக 1937 அக்டோபர் 31இல் காலிமுகத்திடலில் அவரது பாடலியற்றும் திறமைக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்த அய்யர், அவரது திறமையை அதே ஆண்டில், தான் வெளியிட்ட நாடக நூலில் பயன்படுத்திக்கொண்டார்" (2015: 32)

இங்கு 1937 இல் மீனாட்சியம்மாளின் பாடலியற்றும் திறமைக்குக் காலிமுகத்திடலில் (பிரேஸ் கிரேடிலிக்கு ஆதரவாக இடம்பெற்ற பொதுக்கூட்டம்) பெரும் வரவேற்பு கிடைத்தபின்பே நடேசய்யர் அதே ஆண்டில் தான் வெளியிட்ட நாடக நூலுக்கு மீனாட்சியம்மாளின் பாடல்களைப் பயன்படுத்திக்கொண்டார் என்ற கருத்தினைச் சாரல்நாடன் பதிவுசெய்துள்ளார். ஆனால், மேற்படி நாடகம் அச்சில் வெளிவர முன்பே அதன் பாடல்கள் மட்டும் 1931 ஆம் ஆண்டு 'இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு' என்ற பெயரில் இரண்டு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இந்நாடகத்தை 1928 ஆம் ஆண்டே நடேசய்யர் வெளியிடத் திட்டமிட்டிருந்துள்ளார். நடேசய்யரின் 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' என்ற சிறுநூலில் அவரின் 'சுந்திரம் அல்லது அந்தரப்பிழைப்பு' என்ற நூல் குறித்த விளம்பரம் இடம்பெற்றுள்ளது. ஆனால், அந்நூலில் இடம்பெறும் விளம்பரத்திற்கு அமைய

‘சுந்திரம் அல்லது அந்தரப்பிழைப்பு’ என்ற நூல் வெளிவரவில்லை. சிறிய இடைவெளிக்குப்பின் 1937 ஆம் ஆண்டு ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகம்’ என அந்நூல் வெளிவந்துள்ளது. திட்டமிட்டபடி அந்நூலை வெளியிட முடியாமற்போனதால் அதில் அடங்கியிருந்த பாடல்களை மட்டும் ‘இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப் பிழைப்பு’ என இரண்டு பாகங்களாக முதலில் வெளியிட்டுள்ளனர். ‘இலங்கையில் இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு’ முதற்பாகத்திற்கு மீனாட்சியம்மாள் எழுதியுள்ள முன்னுரையில் இடம்பெறும் பின்வரும் குறிப்புகளும்,

“இலங்கைத் தோட்டங்களில் வேலைசெய்யும் 8 லட்சம் இந்தியத் தொழிலாளர் நிலைமையைப் பற்றி சாதாரண சனங்கள் அறிய வேண்டியது மிக்க அவசியமாகிவிட்டது. இத்தகைய பிரசாரத்திற்கு நாடகங்களே தக்க சாதனங்களாகும். அந்நோக்கம் பற்றியே தோட்டத் தொழிலாளர் நாடகம் ஒன்று எழுதப்பெற்று வருகின்றது. அந்நாடகத்தில் சேர்க்கப்பெற்றுள்ள சில பாடல்களைச் சேர்த்து, ஓர் சிறு புஸ்தகமாய் இப்புஸ்தகம் பிரசுரிக்கப் பெற்றிருக்கிறது.”

அதன் இரண்டாம் பாகத்தில் இடம்பெறும் “... தொழிலாளர் நாடகம் கூடிய சீக்கிரம் வெளியிடும் வண்ணம் இப்புஸ்தகங்களை வாங்கி என்னை ஆதரிப்பீர்கள் எனக் கருதுகிறேன்” என்ற குறிப்பும் அதனை உறுதிப்படுத்துகின்றன.

நடேசய்யர் மற்றும் மீனாட்சியம்மாள் எழுத்துகள் பற்றிய புதிய கண்டுபிடிப்புகளால் மேற்கூறியவாறான புதிய வெளிச்சங்கள் ஏற்பட்டுள்ளன. இவை நடேசய்யரின் பங்களிப்பினை மீள் உரையாடலுக்கு உட்படுத்தவேண்டிய தேவையைத் தோற்றுவித்துள்ளன. அத்தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்வதாக அமையவுள்ள இத்தொடர், கிடைக்கப்பெற்றுள்ள புதிய தரவுகளின் பின்புலத்தில் நடேசய்யரின் நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் அறிமுகப்படுத்துவதையும் அவற்றை மதிப்பிடுவதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நடேசய்யரின் முதலாவது நூலான ‘கணக்குப் பதிவு நூல்’ 1914 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அவரின் இறுதி நூலான ‘கதிர்காமம்’ அவர் இறப்பதற்கு ஒரு வருடத்துக்கு முன்னர் 1946 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. அதனால் இத்தொடருக்குக் ‘கணக்குப் பதிவு நூல் முதல் கதிர்காமம் வரை’ என்ற (உப) தலைப்பு இடப்பட்டுள்ளது.

II

பெருந்தோட்ட நிர்வாக அமைப்பினால் கட்டுப்படுத்தப்பட்ட தொழில்நிலைமை, மிகக்குறைந்த ஊதியம், அதிதீவிர சுரண்டல், சமூகநலச் செயற்பாடுகளின்மை, கடுமையான கட்டுப்பாடுகள் முதலானவற்றைக் கொண்டிருந்த பெருந்தோட்ட அமைப்பு, தொழிலாளர்களின் மேல்நோக்கிய சமூகப் பெயர்ச்சியை இறுக்கமாக மட்டுப்படுத்தியது. இந்நிலையால் இலங்கையில் குடியேறி பல தசாப்தங்கள் கடந்தபின்பும் இந்தியத் தொழிலாளர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. ஏறக்குறைய இலங்கையில் குடியேறி ஒரு நூற்றாண்டு கடந்தபின்பே (1920 களில்) அவர்களின் வாழ்க்கை நிலைமையில் முன்னேற்றகரமான மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

குடியேற்ற நாடுகளில் வாழ்கின்ற



இந்தியத் தொழிலாளர்
அந்தரப் பிழைப்பு நாடகம்.

கோ. நடேசய்யர்

ஸ்ரீமதி. கோ. ந. மீனாட்சியம்மாளால்,

(விலை 50 சதம்.)

Image Source : mmkcanada.blogspot.com

இந்தியர்கள் குறித்த இந்தியாவின் அக்கறை மற்றும் தலையீடு, சர்வதேச ரீதியில் நிகழ்ந்தேறிய மாற்றங்கள், உழைக்கும் வர்க்க எழுச்சி முதலானவை இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர் வாழ்விலும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அடித்தளங்களை இட்டன; பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் குறித்த உரையாடல்கள் பரவலாக மேற்கிளம்பத் தொடங்கின; இந்திய அரசு குடியேற்ற நாடுகளில் வாழும் தொழிலாளர்களைக் கருத்திற்கொண்டு சிறப்புச் சட்ட ஏற்பாடுகளைக் கொண்டுவந்ததுடன் தொழிலாளர் நலன்களைப் பேணுமாறு இலங்கைக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தது; இலங்கையிலும் தொழிலாளர் நலனைக் கருத்திற்கொண்ட புதிய சட்ட ஏற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன; இந்தியர்களுக்கெனத் தனியான அரசியல் பிரதிநிதித்துவம் இலங்கையில் வழங்கப்பட்டது; பெருந்தோட்டக் கல்வியில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டது. இத்தகைய மாற்றங்கள் இடம்பெறத் தொடங்கிய சூழலிலேயே அம்மக்களுக்கான விடியலில் கோ. நடேசய்யர் தலைமை தாங்கிச் செயற்படத் தொடங்கியுள்ளார்.

நடேசய்யர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் காலனித்துவ எதிர்ப்பையும் சுதேசிய முன்னேற்றத்தையும் கருத்திற்கொண்டு இயங்கியுள்ளார். வங்காளப் பிரிவினையை அடுத்து வேகம்பெற்ற இந்திய விடுதலையுணர்வினால் உந்தப்பட்ட அவர், ஆங்கிலப் பொதுக்கல்வியைத் துறந்து, கைத்தொழில் கல்வியை நாடியுள்ளார். முதலில் சென்னை ‘கவர்ன்மெண்டால்’ முன்னெடுக்கப்பட்ட நெசவுக் கைத்தொழில் பயிற்சிபெற்று, அத்தொழிலில் சிலகாலம் இருந்துள்ளார். பின்னர் வியாபாரக் கல்வியில் டிப்ளோமா பெற்று தஞ்சை கலியாண சுந்தரம் உயர்தரக் கலாசாலையில் வியாபாரப் பயிற்சிப் போதனாசிரியராகக் கடமையாற்றியுள்ளார். அக்கல்லூரியில் கடமையாற்றுங் காலத்தில் பிறமொழியிலுள்ள சகல சாஸ்திரங்களும் தமிழ்மொழியில் வெளிவருவதால் தமிழ்மொழியும் தமிழ்ச் சமூகமும் விருத்தியடையும் என்ற நோக்கில் கணக்குப் பதிவு நூல், கணக்குப் பரிசோதனை நூல், இன்ஷியூரன்ஸ், ஆயில் என்ஜின், வங்கிகளும் அவற்றை நிர்வகிக்கும் நிர்வாகங்களும் முதலான நூல்களை எழுதியுள்ளார்.

“மேற்படி நூல்கள் சென்னை கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதும் தமிழ் மக்களுடைய ஊக்கங்குறைவால் அவை நாவல்கள் போல விற்று நல்ல வருவாயைத் தரவில்லை” (தேசபக்தன் - 03.09.1924) என்று அக்காலத்து வாசிப்புச் சூழலைப் பதிவுசெய்துள்ள நடேசய்யர், வருவாய் கிடைக்காத போதிலும் தான் தொடர்ந்து அம்முயற்சியில் ஈடுபட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் துப்பறியும் நாவல்கள் மிகுந்த பிரபல்யம் பெற்றிருந்துள்ளன. எண்ணிக்கையளவில் அதிகம் வெளிவந்துள்ள அந்நாவல்கள் விற்பனையிலும் முன்னணி வகித்துள்ளன. அதனையே நடேசய்யர் நாவல்கள் போல் தன் நூல்கள் விற்பனையாகவில்லை என்கிறார். இப்போக்கினை மனங்கொண்டே அவர் ‘ஒற்றன்’ என்ற



Image Source : www.tamildigitallibrary.in

துப்பறியும் நாவலை எழுதியுள்ளார் எனலாம். நூல்களாக வெளியிடுவதைக் காட்டிலும் பத்திரிகைகளில் தகவல்களை வெளியிடுவது அதிக பயனளிக்கும் எனக்கருதி வியாபாரம், கைத்தொழில், விவசாயம் முதலான விடயங்களைத் தாங்கிவரும் ‘வர்த்தக மித்திரன்’ என்ற பத்திரிகையை அவர் 1915 ஆம் ஆண்டு ஆரம்பித்துள்ளார்.

எழுத்து முயற்சிகளுக்கு அப்பால் சுதேசிய வியாபாரிகளின் நலன்களைப் பேணும் வகையில் அவர்களுக்கான சங்கங்களை உருவாக்கும் பணியில் நடேசய்யர் ஈடுபட்டுள்ளார். ஐரோப்பிய முதலாளிமார்கள் தமக்குள் உருவாக்கியுள்ள வியாபாரிகள் சங்கங்கள் போல சுதேசிய வியாபாரிகளும் சங்கங்களை அமைத்துத் தம்முடைய நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது அவரது விருப்பாக இருந்துள்ளது. அவ்விருப்பின் அடிப்படையில் தஞ்சாவூர், திருச்சி, கோயம்புத்தூர், திருவாரூர், குற்றாலம் முதலான இடங்களில் சுதேசியர்களுக்கென வர்த்தகர் சங்கம், வர்த்தகர் குமாஸ்தாக்கள் சங்கம், மில்காரர் சங்கம், வர்த்தக வங்கி முதலான அமைப்புகள் உருவாக அவர் காரணகர்த்தாவாகத் தொழிற்பட்டுள்ளார்.

காலனியக் காலத்தில் ஐரோப்பிய வியாபாரிகள் சுதேசிய வியாபாரிகளின் முயற்சியை நேரடியாகவும் சூழ்ச்சிகளாலும் வீழ்த்தி, வியாபார ஆதிபத்தியத்தினைத் தம் கையில் வைத்துக்கொள்ள முயன்றுள்ளனர். அதற்குக் காலனிய அரசும் துணைநின்றுள்ளது. பாரதி தன் சுயசரிதையில் எந்திர ஆலை அமைத்துத் தொழில்செய்ய முயன்ற தன் தந்தை வறுமை அடைந்தமை பற்றிக் குறிப்பிடும்போது, “ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்

ஊணர் செய்த சதியில் இழந்தனன்” என ஐரோப்பியர் செய்த சதியினாலேயே தன் தந்தை வறுமையடைந்தார் எனப் பதிவுசெய்துள்ளார். அக்காலத்தில் ஆங்கிலேயரின் பொருளாதாரக் கொள்கைகளும் ஐரோப்பிய முதலாளிமார்களின் நடவடிக்கைகளும் சுதேசிய வியாபாரிகளுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் பாதகமாகவே அமைந்திருந்துள்ளன. அத்தகைய சூழலில்தான் நடேசய்யர் சுதேசிய வியாபாரிகளின் நலன்களைப் பேணுவதற்காக அவர்களுக்கான சங்கங்களை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டுள்ளார். இங்கு சுதேசிய வியாபாரிகள் நலன் என்பது வியாபாரிகளின் நலன் என்ற எல்லைக்கு அப்பால் காலனிய எதிர்ப்பின் ஒரு வடிவமாக விளங்கியுள்ளது.

தமிழகத்தில் பல இடங்களிலும் வியாபாரிகள் சங்கங்களை அமைத்த நடேசய்யர், இலங்கையிலும் தென்னிந்திய வியாபாரிகள் சங்கமொன்று தோற்றம் பெறுவதற்குத் தூண்டுகோலாக இருந்துள்ளதோடு அச்சங்கத்தின் முதலாம் வருட நிறைவு விழாவில் கலந்து கொள்ளவே 1919 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்துள்ளார். அதன்போது தஞ்சாவூர் காங்கிரஸ் கமிட்டியின் வேண்டுகோள்படி தோட்டத் தொழிலாளரின் பொருளாதார நிலைமையை நேரில் சென்று ஆராய்ந்த அவர், அதனை ஓர் அறிக்கையாக வெளியிட்டுள்ளார். 1920 இல் மீண்டும் இலங்கைக்கு வந்த அவர், கண்டி பெரிய கங்காணிமார்கள் சங்கத்தினர், அவர்கள் சார்பாகச் சில செயற்பாடுகளை முன்னெடுக்கும்படி கேட்டுக்கொண்டதால், தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமையை ஆராய்ந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டுள்ளார். அக்காலத்தில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றின் தேவை அதிகம் உணரப்பட்டதால் ‘தேசநேசன்’ பத்திரிகையை 1921 ஆம் ஆண்டு ஆரம்பித்துள்ளார்.

நடேசய்யர் இலங்கையில் வாழ்ந்த காலப்பகுதி (1920 - 1947) இலங்கை வரலாற்றிலும் இலங்கைவாழ் இந்தியர் வரலாற்றிலும் முக்கியமான மாறுதல்கள் பல ஏற்பட்ட காலமாகும். புதிய அரசியல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தல், நாட்டின் நிர்வாகத்தில் சுதேசியரின் பங்குபற்றலை அதிகரித்தல், முதலில் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையும் பின்னர் சர்வசன வாக்குரிமையும் வழங்குதல், சிங்கள - தமிழ் அரசியல் தலைமைகளின் கூட்டிணைவில் உருவாக்கப்பட்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் பிளவுபடல், இலங்கைத் தொழிலாளர் சங்கம் (Ceylon Labour Union) உருவாக்கப்படல், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் உதயமாதல், இலங்கைவாழ் இந்தியருக்கு முதன்முதல் அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்படல், இந்தியர் மீதான எதிர்ப்புணர்வு பெருகுதல், அரசியல் கட்சிகள் தோற்றம் பெறல், இந்தியப் பின்புலத்துடன் இலங்கைவாழ் இந்தியருக்கான பெரும் அமைப்பாக இலங்கை - இந்தியக் காங்கிரஸ் உருவாக்கப்படல், இலங்கைக்குச் சுதந்திரத்தை வழங்குவதற்கான செயற்பாடுகளை பிரிட்டிஸ் அரசு முன்னெடுத்தல் என முக்கியமான நிகழ்வுகள் பல இக்காலத்தே அரங்கேறியுள்ளன.

1929 இல் ஏற்படத் தொடங்கிய உலகப் பொருளாதாரப் பெருமந்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் முதலானவையும் இலங்கையின் அரசியல், பொருளாதார நகர்வில் தாக்கங்களை ஏற்படுத்தின.

மேற்படி அசைவுகளையும் அவற்றினால் சமூக, அரசியல் மட்டங்களில் ஏற்பட்டுவந்த மாற்றங்களையும் உள்வாங்கியுள்ள நடேசய்யர், அவற்றின் பின்புலத்தில் தன் அரசியல் இயக்கத்தை முன்னெடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதனால் நடேசய்யரின் அரசியல், சமூக செயற்பாடுகள் இலங்கை வரலாற்றின் முக்கியமானதொரு காலகட்டத்தின் பிரதிபலிப்பாகவும் ஒரு சிறுபான்மை இனத்தின் சமூக, அரசியல் எழுச்சியின் வெளிப்பாடாகவும் அமைந்துள்ளன.

இலங்கையில் 'தேசநேசன்' பத்திரிகையின் ஆசிரியராக முதலில் பணியாற்றிய நடேசய்யர், மிகக் குறுகிய காலத்தில் சட்டநிரூபண சபை உறுப்பினராகவும் நகரத் தொழிலாளர் அமைப்பின் உபதலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். M.A. அருளானந்தன், டாக்டர் E.V. ரட்ணம் முதலான இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிர்வாகக்குழு உறுப்பினர்களின் நட்பு, லாரி முத்துகிருஸ்ணா, குடியேற்ற நாடுகளில் வாழும் இந்தியர்களின் விடுதலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்த மணிலால் முதலானவர்களுடனான தொடர்பு, A.E. குணசிங்கா முதலான தொழிற்சங்கவாதிகளுடனான உறவு முதலானவை நடேசய்யரின் சமூக, அரசியற் செயற்பாடுகள் வேகம் பெறுவதற்குத் தொடக்க காலத்தில் துணையாக அமைந்தன எனலாம். அத்துடன் மீனாட்சியம்மாளின் துணையும் அவரின் சமூக, அரசியற் பங்களிப்பும் நடேசய்யரின் செயற்பாடுகள் வீச்சாக வியாபகமடைய பெரிதும் துணைநின்றுள்ளன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கெனத் தொழிற்சங்கத்தை உருவாக்குதல், அத்தொழிலாளர்களிடையே தொழிலாளர் வர்க்க உணர்வை வளர்த்தல், அவர்களை அரசியல் மயப்படுத்தல் முதலானவற்றில் ஈடுபட்ட முன்னோடியாக நடேசய்யரே விளங்குகிறார். அவர் இலங்கைக்கு வருவதற்கு முன்னரேயே பெருந்தோட்டத் தொழிலாளரின் துயர்மிகுந்த வாழ்க்கை நிலைமை குறித்த தம்முடைய அதிருப்திகளைச் சிலர் தெரிவித்துள்ளதோடு இன்னும் சிலர் அம்மக்களின் துயர வாழ்வை ஆதாரங்களுடன் வெளியுலகத்துக்கு அம்பலப்படுத்தியுள்ளனர். ஆனால், அத்தொழிலாளர்களை அணிதிரட்டி, அவர்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்களை யாரும் முன்னெடுத்ததாகத் தெரியவில்லை. அதேவேளை, "தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலுள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் ஏராளமான குறைகளை நகர்ப்புறத் தொழிலாளர் தலைவர்கள் அறிந்திருந்தாலும், அவர்கள் தோட்டங்களில் தொழிற்சங்கவாதத்தைப் புகுத்தவோ நகர்ப்புறத் தொழிலாளர்களையும் தோட்டத் தொழிலாளர்களையும் கூட்டு நடவடிக்கைகளில் இணைக்கவோ எந்த முயற்சியையும் மேற்கொள்ளவில்லை" (*Jayawardena*, **1972: 332**). நடேசய்யரே **1931** ஆம் ஆண்டு 'அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம்' என்ற பெயரில் தொழிற்சங்கமொன்றை உருவாக்கி, ஸ்தாபன நிலைப்பட்ட வகையில் அம்மக்களை வலுப்படுத்தியுள்ளார். தொழிலாளர்களின் விடுதலைப் போராட்டத்தைப் புதிய தளத்தை நோக்கி நகர்த்தியதில் அத்தொழிற்சங்க உருவாக்கம் முதன்மையான இடத்தைப் பெறுகிறது.

இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளின் அரசியல் அசைவுகளையும் தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை நிலைமையையும் நன்கு அவதானித்து வந்துள்ள

நடேசய்யர், இலங்கைவாழ் இந்தியர் தம்மை இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யவேண்டும், அவர்கள் இலங்கைப் பிரஜைகளாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளார். அவ்வகையில் மலையகத் தேசியத்தின் எழுச்சிக்கான தொடக்க வித்துகளை இட்ட முன்னோடியாக அவரை அடையாளப்படுத்தலாம்.

மலையகப் படைப்பிலக்கிய வரலாற்றில் தொடக்கநிலை முயற்சிகளை மேற்கொண்ட முன்னோடியாகவும் நடேசய்யர் விளங்குகிறார். இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் தசாப்தத்திலே மலையகத்திலிருந்து ஏட்டிலக்கிய முயற்சிகள் ஆங்காங்கு இடம்பெறத் தொடங்கின. பலர் பாடலாக்க முயற்சிகளில் ஈடுபட்டனர். ஆனால், அவர்களது படைப்புகளில் மலையகத் தமிழரின் வாழ்வியல் அம்சங்கள் முனைப்பு பெறவில்லை. பக்தி, இயற்கை அழகு போன்றன பற்றியனவாக அவை அமைந்துள்ளன. நடேசய்யர், மீனாட்சியம்மாள் ஆகியோரின் இலக்கியப் படைப்புகளிலேயே மலையகத் தமிழரின் வாழ்வியல் அம்சங்கள் முதன்முதல் வெளிப்படத் தொடங்கியுள்ளன.

இலக்கியத்தைப் பிரச்சாரக் கருவியாகக் கொண்டு மக்களை அரசியல் சமூகச் சக்தியாகக் கட்டியெழுப்பும் பணியை நடேசய்யரும் மீனாட்சியம்மாளும் மேற்கொண்டுள்ளனர். அவர்கள் நடத்திய ‘தேசபக்தன்’ முதலான பத்திரிகைகளில் அவ்வப்போது பாடல்களும் கவிதைகளும் வெளியிடப்பட்டுள்ளன. நடேசய்யர் சமூக, அரசியல் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அரசியல் இலக்கிய ஆக்க முயற்சியில் ஈடுபட்டுள்ளார். அவர் உதிரியாக எழுதியுள்ள கவிதைகளும் ‘இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு’ நாடகமும் அதற்குச் சான்றாக உள்ளன.

நடேசய்யர் எழுதிய இராமசாமி சேர்வையின் சரிதத்தை மலையகத்தின் முதற் சிறுகதையாகக் கூறுவர். இருப்பினும் அக்கதையில் சிறுகதைக்குரிய வடிவச் செம்மை முழுமையற்றிருப்பதோடு நடேசய்யரும் அதனைச் சிறுகதை என்ற பிரக்ஞையுடன் எழுதியதாகத் தெரியவில்லை. மலையக இளைஞர்களைத் தட்டி எழுப்பும் நோக்கில் அவர் எழுதிய ‘நீ மயங்குவதேன்’ என்ற நூலின் இறுதியாக ‘இராமசாமி சேர்வையின் சரிதம்’ இடம்பெற்றுள்ளது. இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதை நோக்காகக் கொண்டு பத்துக் கட்டளைகளைப் பத்து அத்தியாயங்களில் விபரித்துள்ள நடேசய்யர், அக்கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் இளைஞன் எவ்வாறு வாழ்வில் வெற்றிபெறுவான் என்பதற்கு உதாரணமாக இராமசாமி சேர்வையின் சரிதத்தைக் கூறியுள்ளார். அது உண்மைச் சம்பவத்தின் விபரிப்பு என்பதை அதன் இறுதியில், அந்நூலை வெளியிட நிதியுதவி புரிந்தவர்களாக இராமசாமி சேர்வையின் குடும்பத்தினர் குறிப்பிடப்படுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

நடேசய்யரின் நாடக முயற்சி இலங்கையின் நாடக வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் உடையதாக விளங்குகிறது. சமூக, அரசியல் விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு மக்களின் மொழியில் நாடகமாக்கும் முன்னோடி முயற்சியாக அவரது இலங்கைத் தோட்ட இந்தியத் தொழிலாளர் அந்தரப்பிழைப்பு நாடகம் அமைந்துள்ளது. அந்நாடகத்திலுள்ள மீனாட்சியம்மாளின் பாடல்கள் நாடகத்துக்கு மிகுந்த கனதியைச் சேர்த்துள்ளன. அந்நாடகம் எங்கும் அரங்கேற்றப்பட்டதா என்று

அறியமுடியவில்லை. ஆனால், அரங்கேற்றம் செய்வதற்காகவே அது எழுதப்பட்டுள்ளது என்பதை நடேசய்யரின் குறிப்புகளும் நாடகத்தின் அமைப்பும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

தன்னுடைய முதலாவது இலங்கைப் பயணத்தின்போதே (1919) பெருந்தோட்டங்களுக்குப் பயணம் செய்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலைமையைத் துண்டுப்பிரசுமாக வெளியிட்டுள்ள நடேசய்யர், தொடர்ந்தும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களையும் துண்டுப்பிரசுரங்களையும் வெளியிட்டு வந்துள்ளார். ஆங்கிலத்தில் அமைந்த நூல்களும் துண்டுப்பிரசுரங்களும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் அவலங்கள், நடைமுறையில் இருந்த பெருந்தோட்டத் தொழிலாளர்சார் சட்ட ஏற்பாடுகளின் போதாமைகள், பெருந்தோட்ட முறைமையின் குறைபாடுகள், அதிகாரிகளின் அராஜகங்கள், பெருந்தோட்டத்துறையில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் முதலானவற்றைப் பிரிட்டிஷ் இலங்கை - இந்திய அரசுகள், பிரிட்டிஷ் அரசு முதலானவற்றுக்கும் அரசாங்க அதிகாரிகள், பெருந்தோட்ட உடைமையாளர்கள், நிர்வாகிகள், அரசியல்வாதிகள் முதலானோருக்கும் அறியப்படுத்துவதை இலக்காகக்கொண்டு எழுதப்பட்டவையாகும்.

தமிழில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்களும் நூல்களும் தோட்டத் தொழிலாளரை இலக்குக் குழுவாகக் கொண்டே பெரிதும் எழுதப்பட்டுள்ளன. தொழிலாளர்களின் கடமைகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல், அவர்களை அணிதிரட்டல், தொழிலாளர்களிடையே சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பல், வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கு வழிகாட்டல், விடுதலைக்காகப் போராடத் தூண்டல், தொழிற்சங்கச் செயற்பாடுகளின் அவசியத்தை வலியுறுத்தல், தொழிலாளர்களை அரசியல்மயப்படுத்தல் முதலானவை அவற்றில் மேலோங்கியுள்ளன.

பத்திரிகை எழுத்துகளிலும் இலக்கிய ஆக்கங்களிலும் தொழிலாளர் சட்டங்களையும் அவற்றின் போதாமைகளையும் வெளிப்படுத்தி வந்துள்ள நடேசய்யர், அச்சட்டங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் ஏட்டளவில் மட்டும் இடம்பெறுவதைக் கண்டித்துள்ளார். இந்நிலைக்கு அச்சட்டங்கள் தொடர்பில் மக்களிடத்தில் விழிப்புணர்வு இன்மையும் ஒரு காரணமெனக் கூறும் அவர் அக்குறைபாட்டை நீக்கும் வகையில் 'இந்தியத் தொழிலாளர் கடமைகளும் உரிமைகளும்' (1928), 'தொழிலாளர் சட்ட புஸ்தகம்' (1939) ஆகிய சட்ட வழிகாட்டி நூல்களை எழுதியுள்ளார். அவரின் 'இந்தியா - இலங்கை ஒப்பந்தம்' (1941) என்ற நூலும் ஒரு வழிகாட்டி நூலாகவே அமைந்துள்ளது.

தோட்டத் தொழிலாளரிடையே விழிப்புணர்வும் சமூக சீர்திருத்தமும் ஏற்பட்ட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தி அவற்றுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டுவந்துள்ள நடேசய்யர், அத் தொழிலாளர்களிடையே தன்நம்பிக்கையை வளர்த்து சுய முன்னேற்றத்துக்கு ஊக்கப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார். 'நீ மயங்குவதேன்', 'வெற்றியுனதே' முதலான நூல்கள் அதற்குச் சான்றாகும். இளைஞர்களின் அக எழுச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ள அந்நூல்கள் மிகவும் எளிமையான வகையில் எல்லோரும் புரிந்துகொள்ளக்கூடிய முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

> நடேசய்யர் அரசியற் களத்தில் தீவிரமாக இயங்கிய காலத்திலேயே அவருக்கு எதிரான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானதாக அவரைப் பார்ப்பனர், பார்ப்பன ஆதரவாளர் எனும் முத்திரை குத்தல் அமைந்துள்ளது. இலங்கையில் இயங்கிய இந்திய அமைப்புகளும் துரைமார் சங்கத்தினரும் அதனை அழுத்தமாக முன்வைத்து வந்துள்ளதோடு தமிழகத்திலும் அதன் பிரதிபலிப்பு வெளிப்பட்டுள்ளது. பெரியாரும் 'தேசபக்தன்' பத்திரிகை பற்றிய பின்வரும் குறிப்பில் நடேசய்யரைப் பார்ப்பனச் சிமிழுக்குள் அடக்கியுள்ளார்

வெற்றியடைந்த பெரியோர்கள் பலரின் வாழ்க்கைச் செய்திகளை நூலின் பொருண்மையோடு இணைத்து வெளிப்படுத்தியுள்ள நடேசய்யர், சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களைச் சான்றாகக் கொண்டு வாழ்வில் வெற்றி பெறுவதற்கான வழிகளை விளக்கிக் காட்டியுள்ளார்.

நடேசய்யர் பிற்காலத்தில எழுதிய 'அழகிய இலங்கை' (1944), 'கதிர்காமம்' (1946) என்ற இரு நூல்களும் அவர் முற்காலத்தில் எழுதிய நூல்களிலிருந்து பல்வேறு வகையில் வேறுபட்டுள்ளன. தொடக்கத்தில் வியாபாரம், கைத்தொழில் முதலியன தொடர்பான நவீன விடயங்களைத் தமிழில் தந்த அவர், இலங்கையில் குடியேறி சமூக, அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடத் தொடங்கியதும் சமூக, அரசியல் எழுத்துகளுக்கே அதிக முதன்மை கொடுத்து வந்துள்ளார். ஆனால், பிற்காலத்தில் வெளிவந்துள்ள மேற்படி இருநூல்களும் அவற்றிலிருந்து மாறுபட்டு இலங்கையையும் கதிர்காமத்தையும் அறிமுகப்படுத்துவதாக அமைந்துள்ளன.

நடேசய்யர் தன் பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் துறையாகவும் சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான துணைக்கருவியாகவும் இதழியலைக் கொண்டியங்கியுள்ளார். நூல்களாக வெளியிடுவதைக் காட்டிலும் பத்திரிகைகளில் தகவல்களை வெளியிடுவது அதிக பயனளிக்கும் என்பதை அனுபவத்தில் உணர்ந்து அதன்படி செயற்பட்டுவந்துள்ள அவர், எழுத்துத் துறையில் இயங்கத் தொடங்கிய ஆரம்ப காலம் முதல் இறுதிக் காலம் வரை இதழியலுடன் பிணைந்த வாழ்க்கையை முன்னெடுத்துள்ளார். அவர் 'வர்த்தக மித்திரன், தேசநேசன், தேசபக்தன், தோட்டத் தொழிலாளி, வீரன், சுதந்திரன்' முதலான தமிழ்ப் பத்திரிகைகளிலும் 'தி சிட்டிசன், ஃபோர்வார்ட்' முதலான ஆங்கிலப் பத்திரிகைகளிலும் பணியாற்றியுள்ளார்.

நடேசய்யர் அரசியற் களத்தில் தீவிரமாக இயங்கிய காலத்திலேயே அவருக்கு எதிரான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முதன்மையானதாக அவரைப் பார்ப்பனர், பார்ப்பன ஆதரவாளர் எனும் முத்திரை குத்தல் அமைந்துள்ளது. இலங்கையில் இயங்கிய இந்திய அமைப்புகளும் துரைமார் சங்கத்தினரும் அதனை அழுத்தமாக முன்வைத்து வந்துள்ளதோடு தமிழகத்திலும் அதன் பிரதிபலிப்பு வெளிப்பட்டுள்ளது. பெரியாரும் 'தேசபக்தன்' பத்திரிகை பற்றிய பின்வரும் குறிப்பில் நடேசய்யரைப் பார்ப்பனச்

சிமிழுக்குள் அடக்கியுள்ளார்:

"...திரு. நடேசய்யரை ஆசிரியராகக் கொண்ட தேசபக்தன் தாங்கி வரும் கட்டுரைகள் ஒரே ஒரு குறிப்பிட்ட ஜாதியின் மாட்டு அன்போடும் அபிமானத்தோடும் எழுதி வருவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். வெளிப்படையாகக் கூறப்புகின் தேசபக்தனும் பார்ப்பனப் பிரசாரம் செய்யத் தொடங்கிவிட்டான் என்றே கூறவேண்டும்... கறுப்பு நிறங்கொண்ட ஆட்டை வெள்ளாடு என்பது போல பார்ப்பனப் பக்தனாயிருப்பவன் 'தேசபக்தன்' என்று பெயர் பூணி தமிழர்களைப் பாழ்படுத்த முயலுவதை நாம் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. ஆதலால் இதை இனித் தமிழ் மக்கள் ஆதரிப்பது கொள்ளிக்கட்டை எடுத்து தலையைச் சொறிந்து கொள்வதாகும்" (குடி அரசு, 08.08.1926).

நடேசய்யரின் செயற்பாடுகளையும் எழுத்துகளையும் அவதானிக்கின்றபோது அவரிடம் பார்ப்பனச் சார்பைவிட தோட்டத் தொழிலாளர்மீதான நேயம் மிகுதியாக வெளிப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அத்தொழிலாளர்களுள் அதிகமானவர்கள் பிற்படுத்தப்பட்ட சாதியினர் என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

நடேசய்யர் சட்டநிரூபண சபைக்குத் தெரிவானபோது அவரை வாழ்த்தும் விதத்தில் 'தமிழ்நாடு' பத்திரிகை எழுதியுள்ள பின்வரும் குறிப்பு, பெரியாரின் மதிப்பீட்டுக்கு முற்றிலும் மாறாக அமைந்துள்ளமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கதாகும்:

"... இலங்கைத் தோட்டங்களில் இந்தியக் கூலிகள் படும் துயரங்களை நீக்கும் பொருட்டு ஸ்ரீமான் நடேசய்யர் செய்திருக்கும் பெரிய அரிய காரியங்கள் யாவரும் அறிந்த விஷயம். ஐயர் பிராம்மணராயினும் வேற்றுமை புத்தியும் ஜாதிக்கர்வமும் கடுகளவும் அவரிடம் கிடையாதென்பதை 1917ம் வருஷத்திலிருந்து நாம் கவனித்து வந்திருக்கிறோம். குருகுலப் போராட்டம் நடைபெற்றுவந்த காலத்தில் ஸ்ரீமான் ஐயர் தமது தேசபக்தன் பத்திரிகையில் போராட்டத்தை ஆதரித்து எழுதி வந்தது நண்பர்கள் அறிந்த விஷயமேயாகும். பிராம்மணர்களிலும் ஜாதி அகம்பாவமற்றவர்கள் உண்டு என்பதற்கு அய்யரை உதாரணமாகக் கூறலாம்..." (தேசபக்தன், 23.12.1925).

நடேசய்யரின் செல்வாக்கு அதிகரிக்கின்றபோது, அவரைப் பார்ப்பனரென வெளியொதுக்கும் முயற்சிகள் மேலும் மேலும் வியாபகமடைந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகிறது. தேர்தல் காலங்களில் நடேசய்யரை வீழ்த்தும் பிரதான ஆயுதமாகப் 'பார்ப்பன முத்திரை' கைக்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய அவதூறுகளுக்கான எதிர்வினைகளை நடேசய்யரும் மீனாட்சியம்மாளும் அவ்வப்போது நிகழ்த்தி வந்துள்ளனர். சான்றாக, சாரல்நாடன் சுட்டிக்காட்டியுள்ள மீனாட்சியம்மாளின் பின்வரும் பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்:

"பார்ப்பான் பார்ப்பானென்று நீங்கள்
பல தடவை சொன்னாலுமே
பார்ப்பான் அல்ல வென்று அய்யர்
பறையடித்துச் சொல்லலையே...
பனையைச் சேர்ந்தானோ அல்லது
பழங்கள் விற்றானோ
தொழிலாளர் கஷ்டங்களை
தொலைக்க பாடுபட்டவரை
பழியாகப் பேசி நீங்கள்
பச்சை நோட்டீஸடித்து மெத்த
பசப்புவதேனோ சும்மா
உசுப்புவதேனோ" (சாரல்நாடன், 2015: 26).

நடேசய்யர் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுள் தனிமனித இயக்கமாக

அவரது அமைப்பை நடத்தினார் என்பதும் ஒன்றாகும். சி.வி. வேலுப்பிள்ளை அதனை, “மக்களுடைய கருத்துகள் மாறும் என்பதனை அவர் உணரத் தவறினார். அவருக்கு நல்ல ஆலோசனை கூறுவோர் இருக்கவில்லை. ஆமாம் போடுபவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவருடைய ஸ்தாபனம் ஒரு திட்டவட்டமான கொள்கையுடையதல்ல. ஆனால், தான் மட்டும் தனியாய் நின்று நாடகத்தை நடத்தினார். அவருடைய சம்மேளனம் - அவர் ஏறிச் சென்ற

நடேசய்யர் தன் பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் துறையாகவும் சமூக, அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான துணைக்கருவியாகவும் இதழியலைக் கொண்டியங்கியுள்ளார். நூல்களாக வெளியிடுவதைக் காட்டிலும் பத்திரிகைகளில் தகவல்களை வெளியிடுவது அதிக பயனளிக்கும் என்பதை அனுபவத்தில் உணர்ந்து அதன்படி செயற்பட்டுவந்துள்ள அவர், எழுத்துத் துறையில் இயங்கத் தொடங்கிய ஆரம்ப காலம் முதல் இறுதிக் காலம் வரை இதழியலுடன் பிணைந்த வாழ்க்கையை முன்னெடுத்துள்ளார்.

அந்த இரதம் - 1947ம் ஆண்டில் நொருங்கிச் சிதைந்தது” (2022: 33) எனச் சுட்டிக்காட்டியுள்ளார். நடேசய்யருக்குப் பின்னர் அவர் கட்டியெழுப்பிய அமைப்பு இயக்கமற்று மறைந்தமை சி.வி. இன் கருத்துகளை நியாயப்படுத்தும் வலுவான காரணியாக அமைந்துள்ளது.

நடேசய்யர் தோட்டத் தொழிலாளரின் நலனை மையப்படுத்தி சமூக, அரசியல் செயற்பாடுகளை விரிந்த தளத்தில் முன்னெடுத்திருந்தாலும் சிங்களத் தொழிலாளர்கள், வடக்கு - கிழக்குப் பிராந்தியத்தில் இருந்த தமிழ்த் தொழிலாளர்கள் முதலானவர்களுடனும் அவர்களுடைய தொழிற்சங்கங்களுடனும் இணைந்து செயற்படுவது, நகரத் தொழிலாளர் சங்கங்களுடனான உறவைக் கட்டியெழுப்புவது, ஒட்டுமொத்தத் தொழிலாளர் விடுதலையை அவாவுவது முதலானவற்றில் அக்கறை செலுத்தாததுடன் இலங்கைவாழ் இந்திய மக்கள் சார்ந்த ஏனைய அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதிலோ இந்திய அரசியல் தலைவர்களுடன் நெருக்கமான தொடர்பைப் பேணுவதிலோ ஆர்வம் காட்டவில்லை. இந்தத் தனித்த இயக்கம் வர்க்க விடுதலைப் போராட்டத்தில் முழு வெற்றியைப் பெற்றுத்தருவதில்லை. அத்துடன் அது எதிர்நிலையான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடியதாகும்.

நடேசய்யரின் சமூக, அரசியல் செயற்பாடுகள் மீது மேற்படியான விமர்சனங்கள் நிலவினாலும் இற்றைவரையான மலையக அரசியல், சமூக வரலாற்றில் அம்மக்களின் நல்வாழ்வுக்கென அக்கறையுடன் செயற்பட்ட ஒப்பற்ற தலைவராக அவரே விளங்குகிறார். அவருடைய செயற்பாடுகளினாலேயே நூற்றாண்டு காலமாக மலையகத் தமிழரின் வாழ்வை மூடியிருந்த இருள் மெல்ல மெல்ல அகற்றப்பட்டது; அம்மக்களின் வாழ்வும் பிரச்சினைகளும் புதிய தளத்துக்கு நகர்த்தப்பட்டன. தோட்டத் தொழிலாளரின் வாழ்வில் பிற்காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்களுக்கு எல்லாம் வளமானதொரு அத்திபாரத்தை அவரே இட்டுள்ளார். அதனாலேயே மலையகத்தின் நிர்மாணச் சிற்பியாக அவர் நிலைபெற்றுள்ளார் - நினைவுகொள்ளப்படுகிறார்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

● பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

பூநகரிப் பிராந்தியத்தில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட வேள், ஈழம் பற்றிய தமிழ்ப் பிராமிச் சாசனங்கள்

அறிமுகம்

இலங்கைத் தமிழரின் பாரம்பரியத் தாயகங்களில் ஒன்றான யாழ்ப்பாணப் பிரதேசத்தின் ஆதிக்குடிகள், அவர்களின் மொழி, பண்பாடு என்பன பொறுத்து வரலாற்று ஆசிரியர்களிடையே முரண்பட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோர் இங்கு தொன்மையான தமிழர் நாகரிகமும், சுதந்திர தமிழரசும் ஆதியில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளனர். உறுதியான தொல்லியல் ஆதாரங்கள் அற்ற நிலையில் இலக்கியச் சான்றுகளை மட்டும் வைத்து இக்கருத்து கூறப்பட்டதினால் பிற்கால வரலாற்று ஆசிரியர்கள் பலரும் இக்கருத்துகளுடன் உடன்பட்டு நிற்கவில்லை. முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்றோரின் கருத்துகளை அப்படியே ஏற்க முடியாவிட்டாலும் அண்மையில் யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் உள்ள கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி, வல்லிபுரம் போன்ற இடங்களில் கிடைத்த திராவிடருக்குரிய பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் இவர்களின் கருத்துகளை முற்றாக நிராகரிக்க முடியாதென்பதற்கு ஓரளவு இணை நிற்பதாகக் கொள்ளலாம். இருந்தும் இப்பண்பாட்டு மக்கள் தமிழ் மொழியைத்தான் பேசினார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

கந்தரோடையிலும், வல்லிபுரத்திலும் இரு பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவை

பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுபவையாக உள்ளன. இப்பிராந்தியங்களில் தமிழ்நாட்டையொத்த பௌத்தப் பண்பாடு இருந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் கூட, இலங்கையில் பௌத்த பண்பாடு ஒரு மதத்தின் பண்பாடாக நோக்கப்படாது குறிப்பிட்ட ஒரு இனத்தின் பண்பாடாகக் கருதப்பட்டது. இதனால் இப் பிராந்தியங்களில் ஆதிகாலத்தில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதை தென்னிலங்கை வரலாற்றாசிரியர்கள் பலரும் ஏற்க முன்வரவில்லை. இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டுடன் தொடர்புடைய பூநகரிப் பிராந்தியத்தில் திராவிடருக்குரிய பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் கிடைத்திருப்பதோடு மட்பாண்டங்களில் பொறிக்கப்பட்ட தமிழ்ப் பிராமி வரி வடிவங்களும், ஒரு சில மட்பாண்டச் சாசனங்களும் கிடைத்துள்ளன. இதன் மூலம் பூநகரியிலும் அதையண்டிய தமிழ்ப் பிராந்தியங்களிலும் ஆதியில் தமிழர் நாகரிகம் நிலவியதென்பதை தொல்லியல் அடிப்படையில் நிச்சயப்படுத்த முடிகின்றது.

பூநகரிப் பிராந்தியம் என்பது இலங்கையின் பெருநிலப்பகுதிக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இடைப்பட்ட கல்முனை தொட்டு ஆலடி வரையிலான ஒடுங்கிய நிலப்பரப்பையும், அதன் தொடர்ச்சியாக மாந்தையில் வட எல்லை வரை அமைந்த மணல் நீட்சிப் பிரதேசத்தையும் குறிப்பதாகும். இதன் அமைவிடம் தமிழ்நாட்டிற்கு மிகக் கிட்டிய தூரத்தில் அமைந்து இருப்பதனால், அங்கு காலத்திற்குக்



பூநகரிப் பிரதேசம்

Image Source : noolaham.net

காலம் ஏற்பட்ட பண்பாட்டலை சமகாலத்தில் இப்பிராந்தியத்திலும் செல்வாக்குச் செலுத்தியதுடன், இலங்கையுடனான அரசியல், வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகளுக்கும் இது முக்கிய போக்குவரத்து மையமாகவும் விளங்கியது. இருந்தும் நீண்டகாலமாக தொல்லியலாளரின் கவனத்தை ஈர்க்காத பிரதேசமாகவே இது விளங்கிற்று. 1982 இல் கலாநிதி பொ. இரகுபதி அவர்கள் ஒரு சில இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வைத் தொடர்ந்து, அண்மையில் ஆசிரியர் பல இடங்களில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் விளைவாக அரிய பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச்சான்றுகள், வடக்கே கல்முனை தொட்டு தென்மேற்கே சோழமண்டலம் வரையான இப்பிராந்தியத்தில்

குறுணிக் கற்காலம் (Microlithic Period) தொட்டு ஐரோப்பியர் காலம் வரை தொடர்ச்சியாகத் தமிழ்நாட்டு நாகரிகத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்தது என்பதை நிச்சயப்படுத்த உதவின. இங்கு கிடைத்தது போன்று ஒரு பிராந்தியத்தின் நீண்டகால வரலாற்றை தொடர்ச்சியாக அறிய உதவும் தொல்பொருட் சான்றுகள் இலங்கையில் தமிழ்ப் பிராந்தியத்தின் ஏனைய இடங்களில் கிடைக்கவில்லை எனக் கூறலாம். இவற்றுள் தமிழ் மொழியின் தொன்மையைக் கோடிட்டுக் காட்டும் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் பிராமி வடிவங்கள்

தென்னாசியாவில் பயன்படுத்தப்பட்ட காலத்தால் முந்திய வரிவடிவங்கள் பிராமி என அழைக்கப்படும். இதன் தோற்ற காலம் சிந்துவெளி எழுத்துகளுடன் ஒருசில மட்பாண்டங்களிலும் பொற்தகடுகளிலும் எழுதப்பட்டிருந்தன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இதுவரை மூன்று பிராமிச் சாசனங்கள் மட்டுமே கந்தரோடை (மட்பாண்ட சாசனம்), வல்லிபுரம் (பொற்சாசனம்), ஆனைக்கோட்டை (செப்பு - சாசன முத்திரை) போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஆனைக்கோட்டையில் கிடைத்த ஈரெழுத்துச் சாசன முத்திரை தமிழ்ப் பிராந்தியத்தில் கிடைத்த முக்கிய சான்றாதாரமாகும். ஆயினும் இதன் வரிவடிவம், வாசகம், மொழி என்பதையிட்டு சாசனவியலாளரிடையே முரண்பட்ட கருத்துகள் நிலவுகின்றன. இந்நிலையில் யாழ். குடா நாட்டுடன் இணைந்த பூநகரிப் பிராந்தியத்தில் மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற இடங்களில் ஓரிரு வரிவடிவங்களைக் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழரது வரலாற்றாய்வில் முக்கிய சம்பவமாகக் கருத இடமளிக்கின்றது. இம்மூன்று இடங்களும் வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலுக்கும் தெற்கே தமிழ்நாட்டுடன் தொடர்பு கொள்ளக்கூடிய பெருங்கடலுக்கும் இடைப்பட்ட ஒடுங்கிய நிலப்பரப்பில் அமைந்துள்ளன. உயர்ந்த மணல் மேடுகளைக் கொண்ட இதன் பௌதீக அமைப்பு காலத்திற்கு காலம் பருவகால மாற்றத்திற்கும், நீரோட்டத்தின் தாக்கத்திற்கும் உட்பட்டதினால் புராதன கலாசாரப் படைகள் குழம்பிய நிலையில் காணப்படுகின்றன. இதனால் முற்பட்ட கால கலாசார சின்னங்களைக் கூட பிற்பட்ட கால சின்னங்களுடன் அடையாளம் காண வேண்டியுள்ளது. அவ்வாறு அடையாளம் காணப்பட்டவற்றுள் மட்பாண்ட பிராமி வரிவடிவங்கள் சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

தமிழுக்குரிய தனிச் சிறப்பெழுத்துகள்

தொல்வரி வடிவவியலில் இலங்கைக்கும் தமிழ்நாட்டிற்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை சாசனவியலாளர் பலரும் சுட்டிக்காட்டி உள்ளனர். இவ்வொற்றுமை வரிவடிவ அமைப்பில் மட்டுமன்றி தமிழ்ப் பிராமிக்குரிய சில தனித்துவமான வரி வடிவங்களிலும் காணப்படுகின்றது. இதுவரை இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் தமிழ்ப் பிராமிக்குரிய ளகரம், மகரம், ஈகரம் போன்ற எழுத்துகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ்ப் பிராமியில் பயன்படுத்தப்பட்ட தமிழ் மொழிக்கே உரிய தனித்துவமான எழுத்துகளான ழகரம், றகரம், லகரம் போன்ற எழுத்துகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பொதுவாக பூநகரிப் பிராந்திய மேலாய்வில் கிடைத்த பெரும்பாலான சாசனங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டாலும், அவற்றுள் பரமன்கிராய், மண்ணித்தலை ஆகிய இடங்களில் கிடைத்த மூன்று சாசனங்கள் தமிழ்ப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கிய வரலாற்று ஆதாரங்களாகக் கொள்ளத்தக்கன.

ஆயினும் கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் இருந்தே இவை பரவலாக பயன்படுத்தப்பட்டு வந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. இதிலும் அசோகன் ஆட்சியில் தமிழ்நாடு தவிர்ந்த இந்தியாவின் பெரும் பகுதியில் பிராகிருத மொழியை எழுதுவதற்கு இவை பயன்படுத்தப்பட்டன. இதனால் வட பிராமி எனவும், அசோக பிராமி எனவும் இவை அழைக்கப்பட்டன. இதை ஒத்த வரி வடிவங்கள் பல சமகாலத்தில் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டாலும், தமிழ் மொழிக்கே உரிய தனிச் சிறப்பெழுத்துகள் பயன்படுத்தப்பட்டதோடு சாசனங்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டன. இதனால் இச் சாசனங்கள் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் என அழைக்கப்பட்டன.

இலங்கை பாரம்பரியமாக இந்தியப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்ததினால் அங்கு ஏற்பட்ட எழுத்துகளின் தோற்றம் சமகாலத்தில் இங்கும் அறிமுகமாயின. இவை பெரும்பாலும் பிராகிருத மொழியில் பௌத்தமதம் சார்ந்த செய்திகளைக் கூறுவதனால் இவற்றை வட இந்தியாவில் இருந்து பரவிய வரி வடிவங்கள் எனவும், சிங்கள மக்களின் மூதாதையினர் அங்கிருந்து வந்து குடியேறியதற்கு இவையொரு சான்று எனவும் பேராசிரியர் பரணவிதான, கைகர் போன்ற அறிஞர்கள் கூறினர். ஆனால் இங்கு வடபிராமி எழுத்துகள் பரவ முன்னரே தமிழ்ப் பிராமி எழுத்துகள் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரங்கள் உண்டு. அண்மையில் இலங்கையின் காலத்தால் முந்திய வெசகிரி, மிகிந்தலைப் பிராமிக் கல்வெட்டுகளை ஆராய்ந்த கலாநிதி ஆரிய அபயசிங்கா, இவற்றில் உள்ள பல எழுத்துகள், பௌத்த மதத்துடன் வடபிராமி எழுத்துகள் இங்கு பரவ முன்னர் தமிழ்நாட்டில் இருந்து சமண மதத்துடன் பரவிய திராவிட எழுத்துகள் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வெழுத்துகள் வடபிராமி எழுத்துகளின் செல்வாக்கால் படிப்படியாக மறைந்து போனாலும் அவை முற்றாக மறைந்து போகாது பிற்காலத்தில் தொடர்ந்து இருந்தன என்பதற்கு கி.பி. 2 ஆம் 3 ஆம் நூற்றாண்டுப் பிராமிக் கல்வெட்டுகள் சான்றாகும். பேராசிரியர் ரி.வி. மகாலிங்கம் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுகளில் வரும் தமிழ்ப் பிராமி வரிவடிவங்களைச் சுட்டிக்காட்டி இக் கல்வெட்டுக்களை நுணுக்கமாக ஆராய்ந்தால் அவற்றில் பல தமிழ்ப் பெயர்கள் இருப்பதை அவதானிக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட தொல்லியல் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் இருந்துதான் ஓரிரு பிராமி எழுத்துகளைக் கொண்ட நூற்றுக்கும் மேற்பட்ட மட்பாண்ட ஓடுகள் கிடைத்தன. இவ்வளவு பெருந்தொகையான மட்பாண்ட வரிவடிவங்கள் ஒரேயிடத்தில் அதுவும்

தொல்லியல் மேலாய்வின் போது இலங்கையின் ஏனைய பாகங்களில் கிடைத்ததாகக் கூறமுடியாது. இவை தமிழ்நாடு அரிக்கன் - மேட்டில் கண்டு பிடிக்கப்பட்டவையை நினைவுபடுத்துவதாக உள்ளன. இவ் வரி வடிவங்கள் மட்பாண்டத்தில் வெளிப்புறங்களில் மட்டுமன்றி உட்புறத்திலும், பானையின் உட்புற விளிம்புகளிலும் தெளிவாக எழுதப்பட்டிருப்பது, இதுவரை இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனங்களில் இருந்து சற்று வேறுபாடாகக் கொள்ள வைக்கின்றது. சாதாரண மக்களின் பாவனைப் பொருட்களான மட்பாண்டங்களில் இவ்வெழுத்துகள் காணப்படுவது ஆதியில் எழுத்து வாசனை உடைய தமிழ் மக்கள் இங்கு வாழ்ந்துள்ளனர் என்பதை உறுதி செய்வதாக உள்ளது. சிந்துவெளி நாகரிகத்தில் உள்ள தொல்லியல் சின்னங்களிலும், பொருட்களிலும் எழுத்துகள் காணப்படுவதால் அங்கு வாழ்ந்த சாதாரண மக்களும் எழுத்து வாசனை உடையவர்களாக விளங்கினர் எனப் பேராசிரியர் ஏ.எல். பசாம் கூறிய கருத்து இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கது.

வேள் அல்லது வேளான்

பொதுவாக பூநகரிப் பிராந்திய மேலாய்வில் கிடைத்த பெரும்பாலான சாசனங்கள் உடைந்த நிலையில் காணப்பட்டாலும், அவற்றுள் பரமன்கிராய், மண்ணித்தலை ஆகிய இடங்களில் கிடைத்த மூன்று சாசனங்கள் தமிழ்ப் பிராந்திய வரலாற்றாய்வில் முக்கிய வரலாற்று ஆதாரங்களாகக் கொள்ளத்தக்கன. இவற்றுள் பரமன்கிராயில் கிடைத்த முதலாவது சாசனம் கி.மு. 3 ஆம் 2 ஆம் நூற்றாண்டுக்குரியவை என்பதை எழுத்தமைதியில் இருந்து நிச்சயித்துக் கொள்ளலாம். இதில் மூன்று எழுத்துகள் காணப்பட்டாலும் முதலிரு எழுத்துகளையும் தெளிவாக வாசிக்க முடிகின்றது. இதை வேள் அல்லது வேள என வாசிக்கலாம். இதில் உள்ள மூன்றாம் எழுத்தை 'த்' அல்லது 'து' என வாசிக்கலாம் போல் தெரிகின்றது. ஆனால் இச்சாசனத்தை அண்மையில் வாசித்த தமிழ்நாட்டின் முதன்மைச் சாசனவியலாளரான ஐராவதம் மகாதேவன் அவர்கள் மூன்றாவது எழுத்து தலைகீழாக இருப்பதனால் அதை தமிழ்மொழிக்குரிய 'ன'வாகக் கொண்டு இச்சாசனத்தை 'வேளான்' என வாசித்துள்ளார். இச் சாசனத்தில் உள்ள இரண்டாவது பிராமிச் சாசனம் ஒன்றில் தமிழுக்குரிய 'ழகரம்' இருப்பதாகச் சுட்டிச் காட்டியுள்ளனர். இதை ழகரமாக கொள்வதே பொருத்தமாகத் தெரிகின்றது. இதை ழகரமாகக் கொண்டாலும் இதையொத்த வடிவ அமைப்பில் 'ழகரம்' தமிழ்நாட்டுப் பிராமிச் சாசனங்களில் பயன்படுத்தப்பட்டதற்கு ஆதாரமில்லை.

பூநகரிப் பிராந்தியத்தில் உள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற இடங்களில் கிடைத்த மட்பாண்ட பிராமி - வரிவடிவங்கள் வடிவ அமைப்பில் தமிழ்ப் பிராமி எழுத்துகளையும் தமிழ்ப் பிராமியில் பயன்படுத்தப்பட்ட ளகரம், மகரம், ஈகரம் போன்ற வரிவடிவங்களையும் கொண்டிருப்பதோடு தமிழ் மொழிக்கேயுரிய சிறப்பெழுத்தான ழகரம், றகரம், னகரம் எழுத்துகளையும் கொண்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இதில் தமிழ் மொழிக்குரிய மூன்று சிறப்பெழுத்துகளும் மண்ணித்தலையில் ஒரே இடத்தில் கிடைத்திருப்பது இங்கே சிறப்பாக நோக்கத்தக்கது.

இங்குதான் அண்மையில் எமது ஆய்வின் போது சோழர் காலத்திற்குரிய சிவாலயம் ஒன்றும் இடிந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. இவ்வாலயத்திற்கு கிழக்கே சற்றுத் தூரத்தில் மழைக் காலத்தில் நீரோடும் பள்ளமான நிலத்தில் பல்வேறு காலப் பகுதிக்குரிய அரிய பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன. குறுணிக் கற்காலப் பண்பாட்டிற்குரிய (*Mesolithic Culture*) குவாட்ஸ் (*Quartz*) கல்லாயுதங்களும், பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய (*Megalithic Culture*) கறுப்பு - சிவப்பு நிற மட்பாண்ட ஓடுகள் (*Black and Red Pottery*), தனிக் கறுப்பு - சிவப்பு நிறம் கொண்ட மட்பாண்டங்கள், தாழிகளின் உடைந்த பாகங்கள், சுடுமண் அகல் விளக்குகள் கெண்டியுடன் கூடிய முழுப்பானை (*Spouted Pot*), ஓவியம் தீட்டப்பட்ட மட்பாண்ட ஓடுகள், மட்பாண்டக் குறியீடுகள், பல்வேறு வகையான இரும்பாயுதங்கள், இரும்பினாலான வேல் - சேவல் சின்னங்கள், பல்வேறு மணி வகைகள் என்பனவும் சற்றுப் பிற்பட்ட கால புராண - லக்ஷ்மி ரோம நாணயங்களும், ரோம - அரேபிய மட்பாண்ட ஓடுகளும், மதுச்சாடி என்பனவும் இங்கே கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இச் சான்றுகள் அனைத்தும் இங்கு தொன்மையான குடியிருப்புகள் இருந்ததை உறுதி செய்வதோடு அக்காலத்தில் இம்மக்கள் தமிழ்நாட்டுடனும் பிற அயல் நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர் என்பதும் தெரிய வருகின்றது.

'ள' தமிழ்ப் பிராமியில் காணப்படும் தனிச் சிறப்பெழுத்தாகும். இதை அசோகப் பிராமியில் காண முடியாது. இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வவுனியாவில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டில் இவ்வெழுத்தை அவதானித்த பொறியியலாளரான பாக்கர்

வேள் என்ற வாசகம் கொண்ட மட்பாண்ட பிராமிச் சாசனம்

Image Source : noolaham.net

இது திராவிடர் இங்கு வாழ்ந்ததற்கு ஒரு சான்று என்றார். ஆனால் இதை ஏற்காத பேராசிரியர் பரணவிதான அதனை அசோக பிராமிக்குரிய 'ல' வாகக் கருதி இலங்கைப் பிராமிக் கல்வெட்டில் வரும் பெயர்களை 'வேல' அல்லது 'வேலு' என வாசித்துள்ளார். ஆனால் பிற்காலத்தில் கருணாரத்தின போன்றோர் பரணவிதானவின் வாசிப்பு பிழை எனச் சுட்டிக்காட்டி இது தமிழ்ப் பிராமிக்குரிய 'ள' என வாசித்துள்ளனர்.

தமிழ்நாட்டுப் பிராமிக் கல்வெட்டில் வேள் என வரும் பெயர்களை வாசித்த அறிஞர் பலரும் இவை சங்க காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த வேளீர் எனப்பட்ட குறுநில மன்னர்களைக்

குறித்ததென்பர். இந்த வேள் பன்மையில் வேளீர் எனப்பட்டது. இவர்களைச் சங்க இலக்கியம் ‘தென்முடி வேளீர், முதுகுடி வேளீர், வேந்தரும் வேளீர்’ எனப் பலவாறு விபரிக்கின்றது. தமிழ் நாட்டில் பிற்காலத்தில் தோன்றிய வேள்நாடு கூட இவர்கள் வழியால் தோன்றிய ஒன்றாகும். பரமன்கிராயில் கிடைத்த மட்பாண்டச் சாசனத்தை வாசித்த அறிஞர் ஐராவதம் மகாதேவன் கூட கி.மு. *3* ஆம் *2* ஆம் நூற்றாண்டுகளில் சங்ககாலத்தைப் போல பண்டைய யாழ்ப்பாணத்தில் தமிழ் வேளீர் அல்லது வேளார் என்போர் குடியேறியிருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றானது சங்ககாலத்தைப் போல் இங்கும் வேளீர் என்ற பெயருடைய குறுநில மன்னரின் ஆட்சியிருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கின்றது. அத்துடன் சங்க இலக்கியத்தில் வரும் வேள் என்ற பெயர் முதன்முறையாக மட்பாண்டச் சாசனத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழ் வரி வடிவத்தினதும் சங்க இலக்கியத்தினதும் தொன்மையை ஆராய்வதற்கு முக்கிய சான்றாதாரமாகக் கொள்ளத்தக்கது.

ஈழம்

மண்ணித்தலையில் கிடைத்த இரண்டு மட்பாண்டச் சாசனங்கள் தமிழ்ப் பிராந்திய வரலாற்றாய்வில் மேலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகின்றது. இவ்விரு சாசனங்களும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திற்குரியவை என்பதை இவற்றின் எழுத்தமைதியில் இருந்து கணிப்பிட்டுக் கொள்ளலாம். இவற்றுள் இரண்டு எழுத்துகளை உடைய முதலாவது சாசன மட்பாண்டம் உடைந்த நிலையில் இருந்தாலும் இரு எழுத்துகளுக்கு இடையிலான இடைவெளியை நோக்கும்போது வேறு எழுத்து இச்சாசனத்திற்கு அருகே இருந்திருக்க முடியாது போல் தெரிகின்றது. இதனால் இதையோர் முழுச் சாசனமாக எடுத்துக் கொள்ளலாம். இதன் முதலாவது எழுத்திற்கு ‘ஈ’ என்ற ஒலிப் பெறுமானமும், இரண்டாம் எழுத்திற்கு ‘ல’ என்ற ஒலிப் பெறுமானமும் கொடுத்து ‘ஈல’ அல்லது ‘ஈலா’ என வாசிக்க முடிகின்றது.

மூன்று எழுத்துகளை உடைய இரண்டாவது சாசனம் உடைந்த நிலையில் இருப்பதால் இதையோர் முழுச் சாசனம் எனக் கொள்ள முடியாது. இதன் முதல் எழுத்திற்கு ‘ஈ’ என்ற ஒலிப் பெறுமானமும் இரண்டாவது எழுத்திற்கு ‘ழ’ என்ற ஒலிப் பெறுமானமும் கொடுத்து ‘ஈழ’ என வாசிக்கலாம். மூன்றாவது எழுத்து உடைந்த நிலையில் சிறுகோட்டை மட்டும் கொண்டிருப்பதால் அவ்வெழுத்து என்ன என்பதை நிச்சயப்படுத்திக் கூற முடியாதிருக்கிறது. இவ்விரு சாசனங்களிலும் வரும் ‘ஈலா, ஈழ’ என்ற பெயர்களை நோக்கும் போது இவை சங்க இலக்கியத்திலும், திருப்பரங்குன்றப் பிராமிக் கல்வெட்டிலும் வரும் ‘ஈழம்’ என்னும் இலங்கையின் புராதனப் பெயரையே குறிப்பதாகக் கருத இடமளிக்கின்றது. அக்கால உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தில் பொருட்களின் கொள்கலன்களாக மட்பாண்டங்கள் பயன்படுத்தப்பட்டதால், அப் பொருட்களுக்குரிய நாடுகளின் பெயரைக் குறிக்க அக் கொள்கலன்களில் நாடுகளின் பெயர்கள் எழுதப்பட்டிருக்க வேண்டும். இதையே மண்ணித்தலையில் கிடைத்த சாசனங்களும் உணர்த்துவதாகத் தெரிகின்றது.

ஈழம் என்னும் இப் பண்டையப் பெயர் பூநகரியில் தொடர்ந்தும் புழக்கத்தில் இருந்து வருகின்றது என்பதற்கு அங்குள்ள ‘ஈழ ஊர்’ என்னும் புராதனக் கிராமம் ஒரு சிறந்த சான்றாகும். இவ்விடம் பாண்டியரோடு தொடர்புடைய

வீரபாண்டியன் முனைக்கும், சோழரோடு தொடர்புடைய பல்லவராயன் கட்டுக்கும் இடையில் அமைந்துள்ளது. போர்த்துக்கேயர் தமது ஆட்சியில் ஈழ ஊரிலும் ஒரு கத்தோலிக்கத் தேவாலயம் கட்டியதாக தமது ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளனர். 1911 ஆம் ஆண்டில் எழுதி முடிக்கப்பட்ட கந்தபுராண ஏட்டில், தற்போது பொன்னாவெளியில் வசிக்கும் ஐந்து தலைமுறைக்கு முற்பட்டோர் ஈழ ஊரில் வசித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ் ஈழ ஊரில் தான் திருவாலங்காட்டு சாசனத்தில் கூறப்பட்டுள்ள ஈழத்தில் உள்ள புலச்சேரி என்ற இடத்தை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இச் சான்றுகள் அனைத்தும் ஈழ ஊர் என்ற பெயர் இக் கிராமத்திற்குப் பாரம்பரியமாக இருந்து வந்ததை உறுதிப்படுத்துகின்றன. பண்டைய காலத்தில் இலங்கை ஈழம், தம்பபன்னி, தாமரபர்னி, லங்கா எனப் பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டதற்கு ஆதாரங்கள் உள. இவற்றுள் ஈழம் தவிர்ந்த ஏனைய பெயர்களை இந்திய இலக்கியங்களும், வெளிநாட்டார் குறிப்புகளும், ஈழத்துப் பாளி - சிங்கள இலக்கியங்களும், கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. ஆனால் தமிழ்நாட்டு வரலாற்று மூலங்களில் மட்டும் வரும் ஈழம் பற்றி ஏனைய சான்றுகள் உறுதி செய்யவில்லை. உண்மையில் ஈழம் என்பது முழு இலங்கையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்குமாயின் இலங்கை வரலாற்று மூலங்களில் அவை குறிப்பிடப்பட்டிருக்கும்.

இதனால் இந்த ஈழம் இலங்கையின் ஒரு பாகத்தைக் குறித்ததா என்ற கேள்வி எழுகின்றது. சங்க இலக்கியமான பட்டினப்பாலையில் ஈழத்து உணவு பற்றியும் திருப்பரங்குன்ற பிராமிக் கல்வெட்டில் ஈழக் குடும்பிகன் பற்றியும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. பத்தாம்



மண்ணித்தலையில் கிடைத்த மட்பாண்டங்களில் காணப்படும் அச்சினால் பதிக்கப்பட்ட சித்திரங்கள்

Image Source : noolaham.net

நூற்றாண்டு இராஜராஜசோழன் கல்வெட்டில் வரும் ‘முரட்டொழில் சிங்கள ஈழ மண்டலம்’ என்ற ஆதாரம் இதை மேலும் வலியுறுத்துகின்றது. முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியன் கல்வெட்டு வட இலங்கையை ஈழம் எனவும், விஜயநகரக் கல்வெட்டு யாழ்ப்பாணத்தை ஈழம் எனவும் கூறுகிறது. இவைகளுக்குச் சற்றுப் பிற்பட்டகால நன்னூல் மயிலநாதர் உரையில் தமிழ்நாட்டைச் சூழவுள்ள நாடுகளாக ஈழமும் சிங்கள தேசமும் தனித் தனியே கூறப்பட்டுள்ளன. சில சான்றுகளில் இந்த ஈழம் முழு இலங்கையையும், சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதியையும் குறித்தன. ஒரே வரலாற்று மூலத்தில் ஒரு இனத்தின் பெயரால் ஒரு நாட்டைக் கூறி, அதே

வரலாற்று மூலத்தில் ஈழமும் கூறப்படுவதை நோக்கும் போது ஈழத்தை இலங்கையின் ஒரு பாகமாகக் கருத இடமளிக்கின்றது. இதற்குப் பூநகரியில் கிடைத்த ஈழம், ஈழ ஊர் பற்றிய சான்றுகள் துணையாக உள்ளன. இங்குள்ள 'ஈழ வள நகருக்கும்' தமிழ்நாட்டு கருங்காலக்குடி பிராமிக் கல்வெட்டில் வரும் 'ஏழை வள நகருக்கும்' தொடர்பு இருக்கலாம் போல் தெரிகிறது.

முடிவுரை

மண்ணித்தலை, வெட்டுக்காடு, பரமன்கிராய் போன்ற கிராமங்களை உள்ளடக்கிய பூநகரிப் பிராந்தியத்தில் கிடைத்த தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் புகை படர்ந்த நிலையில் உள்ள இலங்கைத் தமிழரின் புராதன வரலாற்றிற்கு ஓரளவு வெளிச்சமூட்டும் சான்றுகளாக கொள்ளத்தக்கன. புராதன இலங்கையில் அரசியலிலும் பண்பாட்டிலும் தமிழர்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை பாளி இலக்கியங்களும் ஆதிப் பிராமிக் கல்வெட்டுகளும் ஓரளவு எடுத்துக் கூறுகின்றன.

இலங்கையில் தமிழ், சிங்கள மன்னர்களிற்கிடையிலான போராட்டத்தை இனப் போராட்டமாக சித்திரித்துக் கூறும் மகாவம்சமே கிறிஸ்துவுக்கு முன்னர் எண்பது ஆண்டுகளுக்கு மேல் தமிழர்கள் ஆட்சி புரிந்ததாகக் கூறுகின்றது. இக்கூற்றானது இக் காலப்பகுதியில் தமிழரின் மேலாதிக்கம் இங்கு நிலவியதென்பதை எடுத்துக் காட்டுகின்றது. இருந்தும் இச்சான்றுகள் தமிழரின் பாரம்பரிய வரலாற்றை தொடர்ச்சியாக எடுத்துக் கூற உதவவில்லை. மாறாகத் தமிழ்நாட்டுடன் கொண்ட அரசியல், வர்த்தகத் தொடர்பு அவ்வப்போது தமிழர்கள் இங்கு வந்து முக்கிய நகரங்களிலும் துறைமுகங்களிலும் குடியேற வழிவகுத்தது எனவும், உண்மையான தமிழ்க்



மட்பாண்டத்தில் காணப்படும் 'ழ' என்ற தமிழ்ப் பிராமி எழுத்து
Image Source : noolaham.net

குடிகளின் பெருக்கம் இங்கு சோழராட்சி ஏற்பட்டதன் பின்னரே நடந்ததெனவும் வாதிட வழி வகுத்தது. இதற்கு தமிழர்கள் பற்றிய சான்றுகள் இன்று சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களோடு தொடர்புடையதாக இருந்தமை காரணமாக இருக்கலாம்.

இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு கிட்டிய தூரத்தில் நேர் எதிரே அமைந்த பூநகரிப் பிராந்தியத்தில் தமிழ்ப் பிராமிச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை இங்கு தொன்மையான தமிழர் நாகரிகம் இருந்ததென்பதற்குச் சான்றாகும். இது அநுராதபுர அரசின் மீது மேற்கொண்ட தமிழர் படையெடுப்புகளை, தமிழ்நாட்டுடன் மட்டும் தொடர்புபடுத்தாது இலங்கையில் உள்ள தமிழ்ப் பிராந்தியங்களுடனும் தொடர்புபடுத்தி ஆராய வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டுகின்றது எனலாம்.

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில்

வலிகாமம் – நல்லூர்

சென்ற கட்டுரையில் சுண்டிக்குழிக் கோவிற்பற்றுத் தொடர்பாக நிலப்படத்தில் உள்ள விவரங்களைப் பற்றிப் பார்த்தோம். இனிப் போர்த்துக்கேயருக்கு முன் தலைநகரமாக இருந்த நல்லூரரை உள்ளடக்கிய நல்லூர்க் கோவிற்பற்றைப் பற்றி ஆராயலாம். இக் கோவிற்பற்றில் நல்லூர், தின்னவேலி (திருநெல்வேலி), கொக்குவில், கோண்டாவில் ஆகிய நான்கு துணைப் பிரிவுகள் உள்ளன.

லெயுசிக்காமின் நிலப்படத்திலுள்ள நல்லூர்க் கோவிற்பற்றின் எல்லைகளைப் பார்க்கும்போது அது முழுவதும் இன்றைய நல்லூர் பிரதேசச் செயலர் பிரிவுக்குள் அடங்கியிருப்பதைக் காணமுடிகிறது. உள்ளூராட்சிப் பிரிவுகளைப் பொறுத்தவரை கோவிற்பற்றின் நல்லூர் துணைப் பிரிவின் பெரும்பகுதி யாழ்ப்பாண மாநகர சபைக்குள் அடங்கியிருக்க ஏனைய மூன்று துணைப் பிரிவுகளும் நல்லூர் பிரதேச சபைக்குள் அடங்குகின்றன.

எல்லைகள்

நல்லூர்க் கோவிற்பற்றின் தெற்கு எல்லையில் வண்ணார்பண்ணை, சுண்டிக்குழி ஆகிய கோவிற்பற்றுகளும்; கிழக்கு எல்லையில் சுண்டிக்குழி, கோப்பாய் ஆகியனவும்; வடக்கில்

கோப்பாயும்; மேற்கு எல்லையில் உடுவில், மானிப்பாய் ஆகியனவும் உள்ளன. இதற்கு நீரேரி அல்லது கடல் எல்லை கிடையாது. நாற்புறமும் நிலத்தால் சூழப்பட்டது. கோவிற்பற்றின் தெற்கு எல்லையை அண்டி, மேற்கிலிருந்து கிழக்காகக் கொக்குவில், தின்னவேலி, நல்லூர் என்னும் ஒழுங்கில் அத் துணைப்பிரிவுகள் அமைந்துள்ளன. கோண்டாவில் பிரிவு, வடக்கு எல்லையோரமாக அமைந்துள்ளது. (படம்1, 2)

படம்-1: யெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள வலிகாமப் பிரிவுக்கான நிலப்படத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நல்லூர் கோவிற்பற்றுப் பகுதி.



படம்-2: யெயுசிக்காமின் வலிகாமப் பிரிவு நிலப்படத்தில் உள்ளபடி நல்லூர்க் கோவிற்பற்றிலுள்ள பல்வேறு அம்சங்களைக் காட்டும் படம்.

குடியேற்றவாதக் காலத்துக்கு முன்னர் யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகராக இருந்தது நல்லூர். வரலாற்றில், நல்லூர்ப் பகுதி தொடர்பான ஓரளவு விவரங்களையாவது காட்டுகின்ற மிக முந்திய நிலப்படமாக இந்தக் கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துள்ள வலிகாமப் பிரிவின் நிலப்படத்தைக் குறிப்பிடலாம். குடியேற்றவாதக் காலத்துக்கு முந்திய நல்லூரின் எல்லைகளுக்கும் இந்த நிலப்படம் காட்டும் நல்லூர்த் துணைப் பிரிவின் எல்லைகளுக்குமிடையே எத்தகைய தொடர்புகள் இருக்கக்கூடும் என்பது பற்றித் தெளிவாகக் கூறமுடியாது. அதேவேளை, பழைய நல்லூர் நகரம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்பட்டபோது இருந்த எல்லைகள், நிலப்படம் காட்டும் நல்லூர்ப் பிரிவின் எல்லைகளோடு ஏறத்தாழப் பொருந்தி வரக்கூடிய வாய்ப்பையும் முற்றாக மறுக்க முடியாது. எனினும் நிலப்படம் தரும் தகவல்களிலிருந்து ஒரு காலத்தில் மதிலால் சூழப்பட்டிருந்ததாகக் கருதப்படும் பழைய நல்லூர் நகரத்தின் வடிவத்தைத் துல்லியமாகக் கூறமுடியாது. இது சதுர வடிவில் அமைந்திருக்கக்கூடும் என்ற கருத்து இருந்தாலும்,[1] நிலப்படம் இதை உறுதிசெய்யவில்லை. (படம்3) எனினும் நிலப்படம் வரைவதற்கு முந்திய நூறு ஆண்டுகளில் எல்லைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டனவா என்பது பற்றி அறிய ஆழமான ஆய்வுகள் தேவை.

வீதிகள்

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண நகரத்தைக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைத்த இரண்டு முக்கிய வீதிகள் நல்லூர்க் கோவிற்பற்றை ஊடறுத்துச் செல்கின்றன. நிலப்படத்தின்படி யாழ்ப்பாணத்தைத் தெல்லிப்பழையுடன் இணைத்த வீதி கொக்குவில், கோண்டாவில் ஆகிய பிரிவுகளூடாகச் செல்கிறது. இது ஏறத்தாழ

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாண நகரத்தைக் குடாநாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைத்த இரண்டு முக்கிய வீதிகள் நல்லூர்க் கோவிற்பற்றை ஊடறுத்துச் செல்கின்றன.



படம்-3: குடியேற்றவாதக் காலத்துக்கு முன்னர் சதுர வடிவாக இருந்திருக்கக்கூடிய நல்லூர் நகரத்தின் எல்லைகளுக்கும் ஒல்லாந்தர்கால நல்லூர்த் துணைப் பிரிவுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் படம்.

இன்றைய காங்கேசந்துறை வீதியின் தடத்தில் அமைந்திருந்ததாக ஏற்கெனவே குறிப்பிட்டோம். நிலப்படத்திலுள்ள வீதியும் இன்றைய வீதியைப் போலவே கோண்டாவில் பிரிவின் மேற்கு எல்லைக்கு மிகவும் அண்மையாகச் செல்வதைக் காணமுடிகிறது. அடுத்தது, யாழ்ப்பாண நகரத்தைப் பருத்தித்துறையுடன் இணைக்கும் வீதி. இது நல்லூர்த் துணைப் பிரிவை ஊடறுத்துச் செல்கிறது. மேற்கு - கிழக்குத் திசையில் நல்லூருக்குள் நுழையும் இவ்வீதி நல்லூர்த் தோட்டம் என்று பெயர் குறிக்கப்பட்டுள்ள அரசாங்க வதிவிடத் தோட்டம் வரை செல்கிறது. இந்த இடம் இன்று முத்திரைச் சந்தை என அழைக்கப்படும் இடம் என எளிதில் அடையாளம் காணலாம். மேலே குறிப்பிட்ட வீதி இங்கிருந்து ஏறத்தாழ வடக்குத் திசை நோக்கித் திரும்பி நல்லூரின் வடக்கு எல்லையைக் கடக்கும்போது மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்புவதைக் காணமுடிகிறது.

இந்த வீதியின் மேற்கு - கிழக்குத் திசையில் செல்லும் வீதிப் பகுதியின் ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு வீதி தொடங்கி, வடக்கு நோக்கிச் சென்று தின்னவேலிப் பகுதிக்குள் மீண்டும் கிழக்கு நோக்கித் திரும்பி, கோப்பாய்க் கோவிற்பற்றுக்குள் நுழைகிறது. இன்று நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்கு மேற்கே பருத்தித்துறை வீதியை வெட்டிச் செல்லும் கோவில் வீதியின் வடக்குப் பகுதியே இது என்பதில் ஐயமில்லை. இந்த வீதியையும், முத்திரைச் சந்தைப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியையும் குறுக்காக இணைக்கும் வகையில் ஒரு வீதியும் நிலப்படத்தில் உள்ளது. இது இன்று சட்டநாதர் கோவிலுக்கு அருகில் உள்ள சட்டநாதர் வீதியுடன் பொருந்துகிறது. இதுவும் ஒரு பழைய வீதி என்பதற்கு நிலப்படம் சான்றாக அமைகின்றது.

மேற்குப் பக்கத்திலிருந்து முத்திரைச் சந்தைவரை வரும் பருத்தித்துறை வீதிப் பகுதியின் நீட்சி போல ஒரு சிறிய வீதி, நல்லூர்த் தோட்டத்தின் தெற்கெல்லையை அண்டிச் செல்வதாகக் நிலப்படம் காட்டுகிறது. தற்காலத்தில் இந்த வீதி செம்மணி வரை செல்கிறது.

படம்-4: நிலப்படத்தில் நல்லூர்த் துணைப் பிரிவுக்குள் காட்டப்பட்டுள்ள நல்லூர்த் தோட்டமும் தாமரைக் குளமும் பெருப்பிக்கப்பட்டது.

நிலப்படம் இந்த வீதியை முழுமையாகக் காட்டவில்லை. இவ்வீதி அக்காலத்தில் இருக்கவில்லையா, அல்லது இருந்தும் நிலப்படம் அதைக் காட்டவில்லையா என்பது தெரியவில்லை. மேற்குறிப்பிட்ட செம்மணி வீதி, பழைய நல்லூர் நகரத்தில் தெற்கு வாயிலூடாகச் சென்றிருக்க வாய்ப்பு உள்ளதாலும், இந்த வீதியே நல்லூரை நாயன்மார்கட்டு, சிவியாதெரு முதலிய குடியிருப்புப் பகுதிகளுடன் இணைத்திருக்கும் என்பதாலும் இவ்வீதி ஒல்லாந்தர் காலத்திலும் இருந்திருக்கும் எனலாம்.

தற்காலத்தில் பிராமணக்கட்டுக் குளத்தின் வடக்குப் பக்கத்தில் உள்ள பருத்தித்துறை வீதி நிலப்படத்தில் தெற்குப் பக்கத்தில் உள்ளது. இது தவறாக வரையப்பட்டதா அல்லது ஒல்லாந்தர் காலத்தில் வீதி குளத்துக்குத் தெற்குப் பக்கமாகச் சென்றதா என்பது தெரியவில்லை. பெரும்பாலும் வரைபடத்தில் இது பிழையாக வரையப்பட்டிருக்கவே வாய்ப்பு அதிகம். இன்று பருத்தித்துறை வீதியிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் கோவில் வீதிப் பகுதி நிலப்படத்தில் இல்லை. பிரித்தானியர் காலத்தின் முதற் சில பத்தாண்டுகளில் நான்காம் குறுக்குத் தெருவுக்கு அப்பால் பிரதான வீதியின் இரண்டு பக்கங்களிலும் காணப்படும் வீதிகள் (இராசாவின் தோட்ட வீதி தவிர) இருக்கவில்லை என்று ஜோன் மார்ட்டினின் நூலில் குறிப்பொன்று உள்ளது.[2] இதிலிருந்து கோவில் வீதியின் தெற்குப் பகுதி பிரித்தானியர் காலத்தில் அமைக்கப்பட்டது என்பது விளக்கமாகிறது.

முக்கியமான கட்டடங்கள்

குடியேற்றவாதக் காலத்துக்கு முந்திய யாழ்ப்பாண இராச்சியத்தின் தலைநகரமான நல்லூர், நிலப்படம் காட்டும் நல்லூர்த் துணைப் பிரிவுக்குள் அடங்கியிருந்தது. எடுத்துக்கொண்ட நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் நல்லூர் தலைநகரத் தகுதியை இழந்து ஏறத்தாழ நூறு ஆண்டுகளாகிவிட்டன. இக்காலப் பகுதியுள் அரச மாளிகைகள் உள்ளிட்ட யாழ்ப்பாண இராச்சியக் காலக் கட்டடங்கள் அனைத்தும் அழிந்துவிட்டதாகவே தெரிகிறது.

அவ்வாறான கட்டடங்கள் இருந்திருந்தாற்கூட அவற்றை இந்நிலப்படத்தில் குறித்துக் காட்டவேண்டிய தேவை இருந்திருக்காது.

நல்லூர்த் தோட்டம்

இந்நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் இப்பகுதியில் ஒல்லாந்தரின் முக்கியமான கட்டடங்கள் சில இருந்தது பற்றி வேறு எழுத்து மூலப் பதிவுகளிலிருந்து அறியமுடிகிறது. ஆனால், 'நல்லூர்த் தோட்டம்' எனப் பெயரிட்ட, இரண்டு கட்டடங்களைக் கொண்ட ஒரு வளாகத்தை மட்டும் இங்கே குறித்துக் காட்டியுள்ளனர். இது, ஒல்லாந்தக் கிழக்கிந்தியக் கம்பனியின் உயர் அதிகாரிகள் பயன்படுத்துவதற்கான ஒரு வதிவிடத் தோட்டம் ஆகும். நிலப்படத்திலுள்ள குறியீட்டிலிருந்து இதற்குள் ஒரு மாளிகையும் பிற வசதிகளுக்கான கட்டடங்களும் இருந்ததாக அறிய முடிகிறது. இந்தத் தோட்டத்தின் சுற்றுமதிலுக்கு வெளியே அதன் மேற்கிலும் தெற்கிலும் மரங்களை நட்டு மனதுக்கு இதமான சூழலை உருவாக்கியிருந்ததை நிலப்படத்தில் காணமுடிகின்றது.

1658 இல் யாழ்ப்பாணத்தின் கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்ற அந்தனி பவிலியன் என்பவருக்கு ஒல்லாந்தரின் இந்தியப் பகுதிகளுக்கான ஆளுநர் நாயகம் ரைக்குளோஃப் வான் கூன்ஸ் (மூத்தவர்) (*Ryclof van Goens - Sr.*), உள்ளூர் அதிகாரி ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த நிலமொன்றை மீளப் பெற்று இவ்வாறான தோட்டம் ஒன்றை அமைப்பதற்கு ஆணையிட்டிருந்தார்.[3] இதன் விளைவாகவே நிலப்படம் காட்டும் தோட்டம் அமைக்கப்பட்டதாகக் கருத இடமுண்டு. 1767 ஆம் ஆண்டில் கொழும்பிலிருந்த ஒல்லாந்த ஆளுனர் இமான் வில்லெம் ஃபல்க் பத்து நாட்கள் தனது மனைவியுடன் இங்கே தங்கியிருந்தது குறித்த தகவல்களும் உள்ளன.[4]

இதைத் தவிர, யாழ்ப்பாணக் கட்டளையகத்தில் ஒல்லாந்தர் நிறுவிய செமினரி இப்பகுதியிலேயே இருந்தது.[5] இதுவும் ஒரு பெரிய கட்டடத் தொகுதி. 1692 ஆம் ஆண்டில் தொடங்கிய இச்செமினரி 1722 ஆம் ஆண்டுவரை இயங்கியது. எனவே, நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் இந்நிறுவனம் இயங்கு நிலையில் இருந்தது என்பதில் ஐயமில்லை. எனினும், இதை நிலப்படம் காட்டவில்லை. நல்லூர்க் கோவிற்பற்றில் இருந்திருக்கக்கூடிய தேவாலயமும் நிலப்படத்தில் இல்லை. இதற்கான காரணம் தெரியவில்லை. இது பற்றி இத்தொடரின் முன்னைய கட்டுரையொன்றிலும் குறிப்பிட்டுள்ளோம்.

குளங்கள்

கமநல அபிவிருத்தித் திணைக்களத்திலும் யாழ்ப்பாண மாநகர சபையிலும் உள்ள தகவல்களின்படி தற்காலத்தில் இப்பகுதியில் மொத்தமாக ஏறத்தாழ 25 குளங்கள் இருப்பதாகத் தெரிகிறது. லெயுசிக்காமின் நிலப்படத்தின்படி நல்லூர்ப் பிரிவில் ஐந்து நீர்நிலைகளும், தின்னவேலியில் இரண்டும், கோண்டாவிலில் மூன்றுமாக மொத்தம் பத்துக் குளங்களே நல்லூர் கோவிற்பற்றுக்குள் காணப்படுகின்றன. கொக்குவிலில் நீர்நிலை எதுவும் குறிக்கப்படவில்லை. குறிப்பாக இன்று கொக்குவிலில் இருக்கும் பெரிய குளமான நந்தாவில் குளம் நிலப்படத்தில் இல்லை. ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல் நிலப்படம் அக்காலத்திலிருந்த எல்லாக் குளங்களையும் காட்டவில்லை என்றே கொள்ளவேண்டும்.

நிலப்படத்தில் உள்ளவற்றில் ஆறு குளங்களைப் பொதுப் பெயர்களாலும் நான்கைச் சிறப்புப் பெயர்களாலும் குறித்துள்ளனர். நல்லூர்ப் பிரிவுக்குள் மூன்று குளங்கள் சிறப்புப் பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளன. பிராமணன் குளம், பண்டாரக் குளம், தாமரைக் குளம் ஆகிய இம்மூன்று குளங்களுள் முதல் இரண்டும் தற்காலத்திலும் அதே பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. தாமரைக் குளத்தின் அமைவிடத்தைக் கவனத்திற் கொண்டு பார்க்கும்போது இதைத் தற்போதைய நாயன்மார்கட்டுக் குளத்துடன் அடையாளம் காணமுடியும். நல்லூரில் உள்ள ஏனைய இரண்டு குளங்களை 'Tanck' (குளம்) என்னும் டச்சு மொழிப் பொதுப் பெயரால் குறித்துள்ளனர். இவற்றுள் தெற்கு எல்லையோரமாக அமைந்துள்ள குளத்தை இன்றைய மக்கிக் குளத்துடன் அடையாளம் காணலாம். கிழக்கு எல்லையோரம் அமைந்துள்ள மற்றக் குளம் பிற்காலத்தில் மூடப்பட்டுவிட்ட ஒரு குளமாக இருக்கக்கூடும்.

தின்னவேலிப் பிரிவுக்குள் அடங்கியதாக நிலப்படம் காட்டும் இரண்டு குளங்களுள் ஒன்று கால்வாய்க் குளம். மற்றது 'Tanck' (குளம்) என்னும் பொதுப் பெயருடன் கூடியது. கால்வாய்க் குளம் இன்றைய பூதராயர் குளமாக இருக்கக்கூடும். மற்றது தற்காலத்தில் பரவைக் குளம் என அழைக்கப்படும் குளம் எனக் கொள்ளலாம். கோண்டாவிலில் காணப்படும் மூன்று நீர்நிலைகளுக்கும் நிலப்படத்தில் 'Tanck', துரவு, கேணி எனப் பொதுப் பெயர்களையே கொடுத்துள்ளனர்.

தாமரைக் குளம்

மேலே குறிப்பிட்ட குளங்களுள், நாயன்மார்கட்டுக் குளம் என அடையாளம் காணப்பட்ட தாமரைக் குளம் ஏனைய குளங்களைவிட வித்தியாசமாகவும் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்தும் காட்டப்பட்டுள்ளது. (படம்4) இக்குளத்தைச் சுற்றிலும் மரங்கள் வரையப்பட்டுள்ளதுடன் குளத்தின் நான்கு பக்கங்களிலும் படிகள் போன்ற அமைப்புகளும் காணப்படுகின்றன. இவ்வம்சங்கள், அக்காலத்தில் மேற்படி குளத்துக்குச் சிறப்புப் பயன்பாடுகள் இருந்ததைக் காட்டுவதாகக் கொள்ளமுடியும். ஒல்லாந்தர்கால இறுதியில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த ஹாஃப்னர் என்பார் அக்காலத்தில் நல்லூர் ஒல்லாந்தக் குடும்பங்களின் சுற்றுலாத் தலமாக இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.[6] பொழுதுபோக்கு நோக்கத்துக்காகவே இக்குளத்தையும் அதன் சுற்றாடலையும் ஒல்லாந்தர் பயன்படுத்தியிருக்கக்கூடும்.

மேற்படி குளமும் அதை அண்டிய பகுதிகளும் தமிழ் மன்னர் நல்லூரிலிருந்து ஆண்ட காலத்திலேயே முக்கியத்துவம் பெற்றிருந்ததாகக் கருதப்படுகிறது. இப்பகுதியில் பல்வேறு பண்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெற்றன என்ற கருத்தும் உண்டு.

குறிப்புகள்

1. வ. ந. கிரிதரன், நல்லூர் இராஜதானி நகர அமைப்பு, (சென்னை/டொராண்டோ: ஸ்நேகா/மங்கை பதிப்பகம், 1996), 68.

2. *John H. Martyn, Notes on Jaffna (New Delhi: Asian Educational Services*, 2003), 156-157.

3. *Instructions from the GovernorGeneral and Council of India to the Governor of Ceylon* 1656-1665, *trans. Sophia Pieters (Colombo: Ceylon Government Printer*, 1908),

4. *R. RavenHart, Travels in Ceylon* 1700 - 1800 *(Colombo: The Associated News Papers of Ceylon Ltd., date not indicated)*, 60.

5. இ. மயூரநாதன், யாழ்ப்பாண நகரின் வளர்ச்சி வரலாறு (பதிப்பில்)

6. 6. *J. Haafner, "Travels on foot through the island of Ceylon," (New Delhi: Asian Educational Services*, 1995), 23.

இலங்கையுடனான அரேபியர் மற்றும் பாரசீகர்களின் வர்த்தக, கலாசார தொடர்புகள் ; கி.பி 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 16 ஆம் நூற்றாண்டுகள் வரை

● அப்துல் ரஹீம் ஜெஸ்மில்

அப்துல் ரஹீம் ஜெஸ்மில் தனது தொல்லியல் கலாநிதிப் பட்டத்தினை பாகிஸ்தானில் உள்ள ஹசாரா பல்கலைக்கழகத்திலும், வரலாற்றில் முதுகலைமானிப் பட்டத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலைமானிப் பட்டத்தினைப் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றிருக்கின்றார். தற்போது தொல்லியல் திணைக்களத்தில் பணிபுரிந்து வருகின்றார். ஜெஸ்மில் அவர்கள் முஸ்லிம் வரலாறு, பண்பாடு குறித்துப் பேசி வருவதுடன் தொல்பொருள் ஆராய்ச்சியாளராகவும், கலாசாரத்திற்கும் பாரம்பரியத்துக்கும் இடையிலான பின்னடைவுகள் குறித்து ஆராய்வதிலும் ஈடுபாடு காண்பித்து வருகின்றார். இவர் ‘காத்தான்குடியின் வரலாறும் பண்பாடும் : மத தூய்மைவாதத்தின் பின்புலம்’ என்ற நூலினுடைய ஆசிரியராவார்.

இஸ்லாம் தோன்றுவதற்கு வெகுகாலத்திற்கு முன்பிருந்தே அரேபியர் சிறந்த வணிகர்களாக ஆசியாக் கண்டம் முழுவதும் பிரபல்யம் பெற்றிருந்தனர். ஆயினும், அரேபியர்களுக்கு முன்பிருந்தே பாரசீகர்கள் சீனாவுடனும் தூர கிழக்கு நாடுகளுடனும் வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இத்தகைய வர்த்தகத்தின் ஒரு முக்கிய தலமாக இலங்கை விளங்கியது. கிபி. 5 ஆம் நூற்றாண்டில் அனுராதபுர மன்னனோடு பாரசீகத்தின் சாசானியச் சக்கரவர்த்திகள் இராஜதந்திர ரீதியான உறவுகளைக் கொண்டிருந்தனர் (இமாம், 1944, 1965:13). பட்டுத் துணிகளை ஏற்றிவந்த சீனக் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்துக்குள் நங்கூரமிட்டிருந்த அதே வேளையில் மேலைத் தேசத்திலிருந்து பொருட்களைக் கொண்டுவந்த கடல் வணிகர்களும் அண்டைய இந்தியாவிலிருந்து வந்த வணிகர்களும் பொருட்களை விற்கும், விநியோகிக்கும் வாங்கும் மத்திய தலமாக இலங்கை விளங்கியதோடு இந்நாட்டு உற்பத்திகளையும் அவ் வணிகர்கள் கொள்வனவு செய்தனர்.

அரேபியாவில் இஸ்லாம் தோன்றியவுடன் பாரசீகர்கள் அம் மதத்தைத் தழுவியதோடு அரபு மொழியையும் உபயோகிக்கத் தொடங்கினர். பரந்து விரிந்த அவர்களது வணிக நடவடிக்கைகளுக்கு இப் புதிய சமயம் உந்து சக்தியை வழங்கியது. ஏனெனில் இஸ்லாமிய சமுதாயத்தில் வணிகர்களுக்கு உயரிய அந்தஸ்து வழங்கப்பட்டதோடு வர்த்தக நடவடிக்கைக்காகவும் சமயப் பணிகளுக்காகவும் மேற்கொள்ளப்படும் பிறநாட்டுப் பயணங்கள் மிகவும் உற்சாகப்படுத்தப்பட்டன. இஸ்லாம் தோன்றிய

மிகக் குறுகிய காலத்தினுள் மேற்காசியா முழுவதுமாக அட்லாண்டிக் சமுத்திரம் வரையான வட ஆபிரிக்கா நாடுகளும் இஸ்லாத்தின் வெற்றிக் கொடியின் கீழ் வந்துவிட்டன. 8 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் சிந்து முல்தான் வரையில் விரிவடைந்தது. பலதரப்பட்ட இனங்களுக்கு இடையே ஆத்மீக உரிமைப்பாடு ஒன்றினை புதிய மார்க்கம் ஏற்படுத்தியது. பக்தாதை தலைநகராகக் கொண்ட அப்பாசிய சாம்ராஜ்யத்தின் (7511258) எழுச்சியுடன் ஆசியாவில் முஸ்லிம்களின் வர்த்தக மேலாதிக்கம் ஆரம்பித்தது. அரபு மொழியைப் பேசிய காரணத்தினால் அரேபியர் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட முஸ்லிம்களான பாரசீகர், அரேபியர், அபிசீனியர்கள் என்போர் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் இருந்து சீனா வரையான வாணிபத்தினை தமது பூரண ஆதிக்கத்தினுள் கொண்டுவந்தனர்.

9 ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில், குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் அரேபிய வணிகக் குழுக்கள் நன்கு வேரூன்றி இருந்தன. அவர்கள் ஆட்சியாளர்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு உள்ளூர் வாசிகளுடன் சுமூகமான உறவுகளைக் கொண்டிருந்தனர். இப்னு குர்தாஹ்பி (கி.பி 845) தனது ‘கீதாபுல் மக்சிகுவா இப்னு மாலிக்’ என்னும் நூலில் இலங்கையைப் பற்றிப் பலமுறை குறிப்பிடுகின்றார். செரந்திப் எனும் பெயரை உபயோகிக்கும் மிகப் பழைய அரபு புவியியல் நூல் இதுவாகும். ‘சிங்களதுவிப’ எனும் சொல்லும் இதில் உபயோகிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் முழுத்தீவும் ‘செய்லான்’ அல்லது ‘சஹிலான்’ என அழைக்கப்பட்டது. அத்துடன், கிரேக்கச் சொல்லான ‘தப்ரபேன்’ எனும் பெயரும் அரேபிய எழுத்தாளர்களினால் உபயோகிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இலங்கையைப் பற்றி பல்வேறு இடங்களில் கூறப்பட்டிருப்பதானது இலங்கைக்கும் அரேபியாவுக்கும் இடையேயான தொடர்பு வெறும் வர்த்தக ரீதியானது மட்டுமன்றி கலாசார அடிப்படையிலானது என்பதையும் காட்டுகிறது. நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளைப் பற்றிக் கேள்வியுற்ற இலங்கை மக்கள் நபிகளார் காலத்திலேயே தமது தூதுவராக ஒருவரைத் தேர்ந்தெடுத்து இஸ்லாமியப் போதனைகளைப் பற்றிய மூலாதாரத் தகவல்களைப் பெறுவதற்காக அத்தூதுவரை அரேபியாவுக்கு அனுப்பி வைத்ததாக கி.பி 953 ஆண்டளவில் இப்னு க்ஷஹ்ரியார் தனது ‘அஜாயிபுல் ஹிந்’ எனும் நூலில் குறிப்பிடுகிறார். ஆபத்தான இந்நெடும் பயணத்தின் பின்னர் இத்தூதுவர் மதீனாவை அடைந்த பொழுது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கி.பி 632 இல் மரணம் அடைந்திருந்தார். கலிபா உமர் (633 - 644) அவர்களை இத்தூதுவர் சந்தித்து நபிகள் நாயகம் பற்றியும் அவர்களது போதனைகள் பற்றியதுமான எல்லா விவரங்களையும் கேட்டறிந்தார். ஆனால் அவர் இலங்கைக்குத் திரும்பி வரும்போது வழியில் மரணம் அடைந்து விட்டார்.

ஆயினும் அவருடன் சென்ற உதவியாளர் இலங்கைக்குத் திரும்பி வந்து அப்புதிய மார்க்கத்தைப் பற்றியும் அதன் ஆரம்ப கால வரலாற்றைப் பற்றியும் தாம் அறிந்தவற்றைப் பற்றியும் எடுத்துக் கூறினார். இஸ்லாமியப் போதனைகளைப் பற்றி தனது எஜமான்களிடமிருந்து அறிந்தவற்றை தெள்ளத் தெளிவாக கூறக்கூடிய வல்லமை உடையவராய் இவ் உதவியாளர் இருந்திருப்பார் என எதிர்பார்க்க முடியாது. அவரது எஜமானர் இலங்கைக்குத் திரும்பி வந்திருந்தால் அதனால் ஏற்பட்ட விளைவுகள் முற்றிலும் வேறுபட்டதாக இருந்திருக்கும். எனினும் திரும்பி வந்த உதவியாளர் இஸ்லாத்தைப் பற்றிய நல்லெண்ணம் ஒன்றை இந்நாட்டில் உருவாக்கியதன் காரணமாக இலங்கைக்கு வந்த முஸ்லிம்கள் வரவேற்று நன்கு உபசரிக்கப்பட்டனர் (இமாம், 1944, 1965:13).

இதே போன்ற குறிப்பினை 16 ஆம் நூற்றாண்டின் பாரசீக வரலாற்று ஆய்வாளரான பிரிஸ்தோ என்பவரினது குறிப்புகளிலும் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையுடனான முஸ்லிம்களின் தொடர்பு குலபா எர்ராக்ஷிதீன்களுடைய காலத்திலேயே ஆரம்பித்து விட்டதாக அவர் குறிப்பிடுகின்றார் (இமாம், 1944, 1965:13). எனினும் இத்தகைய தகவல்களை அவர்கள் எங்கிருந்து பெற்றதாக இப்னு க்ஷஹ்ரியாவோ அல்லது பிரிஸ்தோவோ தமது நூல்களில் குறிப்பிடவில்லை. எனினும் இரண்டு நாடுகளுக்கும் இடையே இருந்த நீண்ட வர்த்தகத் தொடர்புகளை கவனத்தில் கொள்ளும் பொழுது இக்குறிப்புகளை நம்பக் கூடியதாய் உள்ளது. தமது தாய் நாட்டில் ஏற்பட்ட சமயப் புரட்சியைப் பற்றி கேள்விப்பட்ட இந்நாட்டில் வாழ்ந்த இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியர்கள் அரேபியாவுக்கான இத் தூதுக் குழுவினை ஏற்பாடு செய்திருக்கக்கூடும் என்ற யூகமும் இங்கு நியாயமானதே.

கி.பி 892 இல் மரணம் அடைந்த 'பலதூரி' எனும் வரலாற்று ஆசிரியரின் கூற்றுப்படி இஸ்லாமிய உலகுடன் நல்லுறவைப் பேணிப் பாதுகாப்பதற்காக எல்லா முயற்சிகளையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் மேற்கொண்டனர் எனத் தெரிகிறது. இவர்களது வணிக முயற்சிகளுக்கு இந்நல்லுறவு மிக அவசியமான ஒன்றாகவே கருதப்பட்டது. 715 ஆம் ஆண்டில் சிந்து மாகாணத்தை அரேபியர் வெற்றி கொள்வதற்கு முற்பட்ட காலத்தில் 'மாணிக்கத் தீவு' எனக் கூறப்பட்ட இலங்கையின் மன்னன் ஈராக்கின் பலம் பொருந்திய ஆட்சியாளரான 'ஹஜ்ஜாஜ் பின் யூசுப்' என்பவரின் நன்மதிப்பைப் பெறுவதற்காக இலங்கையில் பிறந்து அனாதைகளான பெண் குழந்தைகள் சிலரினை அந்நாட்டுக்கு அனுப்பி வைத்தார். முஸ்லிம் வணிகர்களான அவர்களின் தந்தைமார் இலங்கையில் இறந்து விட்டனர். இவர்களை ஏற்றிச் சென்ற கப்பல்களை இன்றைய கராச்சியின் அருகே கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கினர். இதற்குப் பதிலடியாகவே சிந்து மாகாணம் வெற்றி கொள்ளப்பட்டு அரேபிய சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது (இமாம், 1944, 1965:13).

முஸ்லிம் வரலாற்று ஆசிரியர்களின் இலங்கையைப் பற்றிய பல குறிப்புகள் ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் உள்ளன. சுலைமான் தாஜிர், இப்னு மசூத், இபுன் க்ஷஹ்ரியா என்போர் அவர்களுள் முக்கியமானவர்களாவர். இவ்வாசிரியர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் உற்பத்திப் பொருட்களுள் வாசனைத் திரவியங்கள், சந்தனக்கட்டைகள், மாணிக்கக் கற்கள், மன்னர்களாலும் பிரதானிகளாலும் பெரிதும் விரும்பப்பட்ட கித்துல்பாணி, மருத்துவ மூலிகைகள், இரும்பு என்பன சிலவாகும். 9 ஆம் நூற்றாண்டில் இருந்து 15 ஆம் நூற்றாண்டு வரை சீனப்

பட்டாடைகளை மேலைத்தேயச் சந்தைகளுக்கு விநியோகிக்கும் மத்திய தலமாகவும் இலங்கை விளங்கியது.

ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் அரேபிய வர்த்தகம் பெருமளவு அதிகரித்ததோடு கரையோர நகரங்களில் கணிசமான முஸ்லிம் குடியிருப்புகள் தோன்றியதையும் அகழ்வாராய்வுகள் நிரூபிக்கின்றன. பாரசீகரின் கட்டுப்பாட்டின் கீழ் கிழக்கு, மேற்கு வர்த்தகம் இருந்த காலத்தில் இலங்கையின் வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிய மாந்தை பல்வேறு காரணங்களினால் முதன்மை நிலையைக் கொண்டிருந்தது. மாந்தை அனுராதபுர இராஜ்ஜியத்தின் பிரதான துறைமுகம். தலைநகரத்துடன் மாந்தையை இணைக்கும் பாதை ஒன்றும் இருந்தது. சர்வதேசக் கடல் வர்த்தகப் பாதைகளை இணைக்கும் கேந்திர நிலையமாக மாந்தை துறைமுகம் அமைந்திருந்ததால், மலபார் கரையோரமாகச் சென்று பின்னர் அரேபியா, பாரசீகம், எகிப்து என்பவற்றுக்குச் செல்லும் வழியாகவும் மாந்தை துறைமுகம் இருந்தது. மேலும் கரையோரமாக வங்காள விரிகுடாவிற்குச் சென்று அங்கிருந்து மலாக்கா, சுமாத்திரா, ஜாவா, மொலுகாஸ், சீனா என்பவற்றுக்குச் செல்லும் வழியையும் மாந்தை துறைமுகம் கொண்டிருந்தது. எனவே எவ்வாறு பாரசீகருக்கு மாபெரும் வணிகத்தலமாக மாந்தை விளங்கியதோ அவ்வாறே அரேபிய வணிகருக்கும் அது மாபெரும் வணிகத்தலமாக விளங்கியது.

இத்தகைய சுமூகமான வர்த்தகத்தின் மூலம் இலங்கையர் பெரும் பயடைந்தனர் என்பதை அலெக்சாண்டர் ஜோன்சனின் குறிப்புகளிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது (450 -473). மாந்தைக்கருகில் கட்டிய இராட்சதக் குளம் (யோதவாவி) அரேபிய வர்த்தகம் செழிப்புற்றிருந்த காலத்தில் மிக நன்றாகப் பராமரிக்கப்பட்டதோடு, பெரும் பரப்பளவிலான வயல்களுக்கு நீர்ப்பாசன வசதிகளையும் வழங்கியது. வறண்ட வலய விவசாயம் முற்று முழுதாக நீர்ப்பாசனத்திலேயே தங்கி இருந்தது. இன் நீர்ப்பாசன வசதிகளை உச்சப் பயன்பாட்டு நிலையில் வைத்திருப்பதற்கும் பராமரிப்பு, மனித வளம், பொருளாதார வளம் என்பன தேவைப்பட்டன. இதற்கான மேலதிக பொருளாதார வளம் அரேபியருடனான வெளிநாட்டு வர்த்தகம் மூலமே கிடைக்கப்பெற்றது. இராட்சதக் குளம் பின்னர் கைவிடப்பட்டு, சூழவுள்ள பிரதேசம் வனாந்தரமாக தனது காலத்தில் காணப்பட்டதாக அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் மேலும் கூறுகிறார். ஆகையால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரேபிய வர்த்தகம் இன்றியமையாததாக இருந்தது (அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன், *1911:537*).

அரபு உலகத்துடனான தொடர்பு வர்த்தக ரீதியிலானது மட்டுமல்லாது சமய, பண்பாட்டுத் தொடர்புகளையும் கொண்டிருப்பதை பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கூபி எழுத்திலான அரபுக் கல்வெட்டு ஒன்று நிரூபிக்கின்றது. இஸ்லாமியக் கோட்பாடுகளையும் வழிமுறைகளையும் தமக்குப் போதித்து அவற்றை நடைமுறையில் பின்பற்ற வழிகாட்டுவதற்காக சமயப் போதகர் ஒருவரை அனுப்பி உதவுமாறு கொழும்பில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தினர் பக்தாதிய கலீபாவை வேண்டினார். இவ் வேண்டுகோளை ஏற்று கொழும்பு முஸ்லிம்களுக்கு இஸ்லாத்தைப் போதிக்கவும் இஸ்லாமிய வாழ்வு நெறிகளைப் பின்பற்றி வாழ்வதற்கான வழிகாட்டல்களை வழங்குவதற்காகவும், தொழுகை நடத்துவதற்குரிய பள்ளிவாசல் ஒன்றை அமைக்கும் முகமாகவும் அறிவியலாளரும் பண்புமிக்கவருமான காலித் இப்னு அபூபக்காயா இலங்கைக்கு அனுப்பப்பட்டார். இலங்கை மக்களுக்கு



'பாவா ஆதம்' மலை

Image Source : dailyexpress.lk

நல்ல இஸ்லாமிய வழிகாட்டல்களை வழங்கிய அபூபக்காயா கி.பி 948 இல் கொழும்பில் காலமானார். அவர் கட்டிய பள்ளிவாசலின் அருகிலேயே அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் இறந்ததன் பின்னர் அவரது அடக்கஸ்தலத்தின் மேல் கல்வெட்டுகளைப் பொழிவதற்காக வேண்டி சில அறிஞர்களை பக்தாதிய கலீபா கொழும்புக்கு அனுப்பி வைத்தார். அக் கல்வெட்டு அவரது அடக்கஸ்தலத்தின் மேல் சுமார் 800 வருடங்களாக இருந்தது. ஆயினும் கொழும்பிலிருந்த ஒல்லாந்த திசாவை (கலக்டர்), இதனையும் கொழும்பு முஸ்லிம்கள் மையவாடியில் இருந்த ஏனைய கல்வெட்டுகளையும் அகழ்ந்தெடுத்து தனது வீட்டின் படிக்கல்லாகப் பதித்தார். அலெக்சாண்டர் ஜோன்சன் காலத்தில் அது படிக்கல்லாகவே இருந்தது. அதன் பின்னர் கொழும்பு நூதனசாலைக்கு அது எடுத்துச் செல்லப்பட்டது. அபூபக்காயாவின் மறுமை வாழ்வுக்கான பிரார்த்தனை அக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது (சோமசிறி தேவந்திர). இலங்கை அரசர்கள் மதச் சகிப்புத்தன்மை மிகுந்தவர்கள் என அரேபிய நூலாசிரியர்கள் தமது பதிவுகளில்

குறிப்பிட்டுள்ளனர். 12 ஆம் நூற்றாண்டில் 'இத்ரீசி' தமது நூலில் இலங்கை அரசவையில் 4 பௌத்தர்கள், 4 இந்துக்கள், 4 முஸ்லிம்கள், 4 கிறிஸ்தவர்கள் என 16 பேரைக் கொண்ட ஆலோசனை சபை ஒன்று இருந்ததாகவும் எல்லா மதத்தவரும் வரவேற்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டதை இது காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். வர்த்தக விடயங்களில் அரசனுக்கு ஆலோசனை கூறும் சபையாகவே இது கணிக்கப்பட்டது.

ஆட்சியாளர்களின் ஆசியோடு இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தாலும் உள்நாட்டில் வாழ்வதற்கு அவர்களுக்குச் சில காலம் பிடித்தது. குறிப்பாக உலகளாவிய ரீதியில் சந்தை வாய்ப்பைப் பெற்ற இரத்தினக் கற்களை உடைய சப்ரகமுவ அவர்களது விசேட கவனத்தை ஈர்த்தது. இந்நாட்டின் நவரத்தின வளங்களைப் பற்றி மார்க்கோ போலோ பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "தலைசிறந்ததும் உண்மையானதுமான மாணிக்கக் கற்கள் இத்தீவிலேயே உற்பத்தியாகின்றன. உலகில் வேறு எங்கேயுமே அவை உற்பத்தியாகுவதில்லை. நீலக்கல் புக்ஷ்பராகம், செவ்வந்திக்கல் மணிகள் என்பன இந்நாட்டிலேயே உற்பத்தியாகின்றன. உலகத்திலேயே அதிசிறந்த மாணிக்கக் கல் இலங்கை நாட்டு மன்னன் வசமே உள்ளது. இதுவரை நாம் கண்ட அல்லது எப்போதாவது காணப் போகின்ற கற்களை விட இதுவே மிகச் சிறந்ததாகும் (லத்தோம் பெங், 1958:231).

'பாவா ஆதம்' மலையுடன் முஸ்லீம்கள் கொண்டிருந்த கலாசார தொடர்புகள்

இத்தகைய வளங்கள் அனைத்தையும் கொண்ட இரத்தினபுரிக்குச் செல்ல அரேபியர் விரும்பியமை இயற்கையானதே. புனித பாதை அடையாளத்தைக் கொண்ட பாவா ஆதம் மலைக்கு இரத்தினபுரி ஊடாகவே பயணித்தனர். பாவா ஆதம் மலையை புத்தருடைய பாத அடையாளம் என பௌத்தர்கள் நம்பிய அதே வேளை சிவபெருமானின் பாத அடையாளம் என இந்துக்கள் நம்பினர். ஆனால் ஆதம் சுவர்க்கத்திலிருந்து வந்திறங்கிய இடமென ஒன்பதாம் நூற்றாண்டில் அது கருதப்படலாயிற்று. தமது மூதாதையினரான ஆதம் தொடர்புபட்ட இவ்விடயத்தினை பாவா ஆதம் மலை எனக் கூறி முஸ்லிம்கள் கண்ணியப்படுத்த ஆரம்பித்தனர். சுவர்க்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டவுடன் ஆதம் இவ்வுலகத்தில் முதலாவது காலடி வைத்த இடம் இதுவே என முஸ்லிம் உலகம் எங்கும் பாவா ஆதம் மலை பிரபல்யம் பெற்றது. சுவர்க்கத்திலிருந்து ஆதம் தன்னுடன் எடுத்து வர அனுமதிக்கப்பட்ட மரக்கிளையில் இருந்து இலங்கையின் வாசனைத் திரவியங்கள் உற்பத்தியாகின எனவும் கூறப்பட்டது (இஸ்லாமிய கலைக்களஞ்சியம்). 1344 இல் இலங்கைக்கு வந்த இப்னு பதூதா இந்நாட்டின் உட்பிரதேசங்களுக்குள் முஸ்லிம்கள் இலகுவாகச் செல்வதை சிங்களவர்கள் எதிர்த்ததாகக் குறிப்பிடுகிறார் (ஹீசைன், 1953:219). ஆனால் சிறீபாத என்பது பாவா ஆதம் மலையாக மாறியதும், மாணிக்கங்களைத் தேடிச் சென்றோர், சிங்களவருக்கு தம்மை யாத்திரிகர்களாகக் காட்டிக் கொண்டு, அப் பிரதேசங்களுக்குச் சென்றனர். இதனால் முஸ்லிம் யாத்திரிகர்களோடு வர்த்தகர்களும் ஒன்றாகச் சென்று மலை உச்சியில் தமது காணிக்கைகளைச் செலுத்தி விட்டு திரும்பி வரும் வழியில் இரத்தினக் கற்களையும் கொள்முதல் செய்து கொண்டு வந்தனர். இதன் மூலம் தமது சமயச் சடங்கு ஒன்றினை நிறைவேற்றியதோடு வர்த்தகத்திலும் ஈடுபட்டனர்.

பாவா ஆதம் மலை முஸ்லிம்களின் பிரபல்யமான யாத்திரைத் தலங்களில் ஒன்றாகும் என்பதற்கான பல ஆதாரங்களை அரேபிய யாத்திரிகர்களின் குறிப்புகளில் காணலாம். அரபு வர்த்தகரும் நாடுகாண் பயணியுமான சுலைமான் என்பவர், தான் கிறிஸ்துவுக்குப் பின் 850 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகை தந்ததை விபரிக்கும் பொழுது பாவா ஆதம் மலைக்குச் சென்றதைப் பற்றி இவ்வாறு விபரிக்கிறார்: “இஸ்லாமிய நாடொன்றாக இல்லாத நாட்டில் காடுகளுக்குள் அமைந்திருக்கும் மலைப் பிரதேசமொன்றில் மேற்கொள்ளும் இத்தகைய பயணங்கள், அதிலும் குறிப்பாக அந்நாட்டு மக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் மிகவும் ஆபத்தானவையாகவே இருந்திருக்கும். கரையோரச் சிங்களவர்கள் அரபு வர்த்தகர்களைக் கண்டு பழக்கப்பட்டவர்களாயினும் உள்நாட்டுச் சிங்களவர்களுக்கு ஆரம்பத்தில் இவர்கள் பழக்கப்படாதவர்களாகவே இருந்திருப்பர். அதனால் அவர்களது வருகைக்கு ஆரம்பத்தில் (சிங்களவர்கள்) தடையாக இருந்தனர். பௌத்தர்கள் ஆரம்பத்தில் முஸ்லீம்கள் பாவா ஆதம் மலைக்குச் செல்வதைத் தடுத்ததோடு அவர்களை வெறுத்து ஒதுக்கி, அவர்களோடு உணவு அருந்துவதையும் அல்லது வேறு விதமான தொடர்புகளை வைத்திருப்பதையும் தவிர்த்தனர்” (ஹீசைன், 1953:219). சிங்களக் கிராமத்தவர்களின் சந்தேகங்களை நீக்கி இரத்தினக் கற்கள் அமைந்துள்ள பிரதேசத்திற்குள் சென்றமை முஸ்லிம்களின் பலவிதமான முயற்சிகளின் சாதுரியமாகும். இதற்கு முஸ்லிம் சமயப் பெரியார்களின் பக்தியும் விசுவாசமும் அவர்களது தெய்வீக சக்தியும் சிங்கள மக்களிடையே முஸ்லீம்கள் பற்றி நன்மதிப்பை ஏற்படுத்தியமை ஒரு காரணமாகும்.

இப்னு பதூதாவின் கூற்றுப்படி இலங்கைக்கு கிபி. 929 இல் வருகை தந்த ஷெய்க் அபு அப்துல்லா ஹபீப் என்பவரே பாவா ஆதம் மலைக்கான பாதையைத் திறந்து விட்ட முதல் யாத்திரிகர் ஆவார் (ஹீசைன், 1953:219). இருப்பினும் இச் சம்பவத்துக்கு முன்னரே ஏனைய அரபு யாத்திரிகர்கள் இம்மலையைத் தரிசித்ததற்கான தகவல்கள் உள்ள காரணத்தினால், சிங்கள மக்கள் மனதிலே இருந்த சகல சந்தேகங்களையும் நீக்கி, வருங்கால யாத்திரிகர்களுக்கு எவ்வித தங்கு தடையும் இன்றி இம்மலையை தரிசிப்பதற்கான வசதி வாய்ப்புகளை இலகுவாக்குவதிலேயே ஷேக் அபு அப்துல்லாவின் பணி அமைந்திருக்கலாம். இதனையே இப்னு பதூதாவும் குறிப்பிட்டு இருக்கலாம். பாரசீகத்தில் அதிக மதிப்பு வாய்ந்த ஷேக் அவர்கள் மேலும் 30 தர்வேஷிகளுடன் இலங்கைக்கு வந்ததாக இப்னு பதூதாவின் ரிஹ்லாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவேளை மலைக்குச் செல்லும் பாதையினூடே அவர்கள் சென்று கொண்டிருக்கும் பொழுது இவர்களுக்கு உணவு தேவைப்பட்டது. பெருந்தொகையான யானைக் குட்டிகள் உலாவித் திரிவதைக் கண்ணுற்ற தர்வேஷிமார் பசி தாங்க முடியாமல் அவற்றைப் பிடித்து உணவாக்க விரும்பினர். ஆனால் ஷேக் அவர்கள் அதற்கு அனுமதி கொடுக்கவில்லை. ஆனால் பசியினாலும் களைப்பினாலும் வாடிய தர்வேஷிமார் அவரின் கருத்தைப் புறக்கணித்துவிட்டு யானைக் குட்டி ஒன்றைக் கொன்று அதனை உணவாக்கி உண்டனர்.

ஷேக் அவர்கள் அவ் உணவினை உண்ணவில்லை. அன்று நள்ளிரவில் தர்வேஷிமார் தூக்கத்தில் இருக்கும் பொழுது யானைக் கூட்டம் ஒன்று அவர்களைத் தாக்கிக் கொன்று, பழிதீர்த்துக் கொண்டது. ஆனால் யானைக் கூட்டம் ஷேக் அவர்களை முகர்ந்து பார்த்து, அவருடைய குற்றமற்ற தன்மையை அறிந்து

கொண்டன. அவற்றுள் ஒரு யானை தன் தும்பிக்கையால் அவரைத் தூக்கி, தனது முதுகில் நிறுத்தி, மக்கள் வாழும் பகுதிக்கு சுமந்து சென்றது. ஆச்சரியமுற்ற கிராமத்தவர்கள் கூட்டமாகச் சேர்ந்து குதூகலித்தனர். யானை தனது தும்பிக்கையால் அவரைக் கீழே இறக்கி, எல்லோரும் அவரைத் தரிசிக்கும் வண்ணம், நிலத்தில் இறக்கியது. அந்த மக்கள் ஷேக் அவர்களை மன்னனிடம் அழைத்துச் சென்று, நடந்த அதிசயச் சம்பவங்களை அரசனுக்குக் கூறினர் (ஹீசைன், 1953: 219).

யானைக் கதைகள் தொடர்பாக பல்வேறு சம்பவங்கள் இலங்கை வரலாற்றில் கூறப்படுவதால், இச்சம்பவமும் ஒரு கதையாகவே கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். இதனைத் தொடர்ந்து, ஷேக் அவர்கள் சிறிதுகாலம் சிலாபத்தில் சிங்கள மக்களிடையே வாழ்ந்ததாகவும், பின்னர் தனது தாயகம் சென்று கி.பி 943 இல் ஹிராஸ் நகரில் மரணம் அடைந்ததாகவும் வரலாறுகள் கூறுகின்றன (ஹீசைன், 1953: 219). இம் மெய்ஞானி பற்றிய கதைகள் நாட்டின் பல பாகங்களில் உள்ள சிங்கள மக்களிடையே பரவி, அதன் மூலம் அரபு யாத்திரிகர்கள் பற்றிய நல்லெண்ணம் சிங்கள மக்களிடையே அதிகரிக்கக் காரணமாக அமைந்தது.

பாவா ஆதம் மலையைச் சுற்றியுள்ள மலைப் பிரதேசங்களில் பெறுமதிமிக்க அனைத்து வகை மாணிக்கக் கற்களையும் அவர்கள் சேகரிப்பதோடு, அவற்றை அண்டிய பள்ளத்தாக்குகளில் மோதிரங்களில் பதிக்கும் வைரக் கற்களையும் கண்டெடுக்கின்றனர். இதே மலைக் குன்றுகளில் நறுமணம் வீசும் வாசனைத் திரவியங்களும் மரங்களும் உள்ளதோடு, இத்தீவில் வாழ்வோர் நெல், தென்னை, கரும்பு என்பவற்றை உற்பத்தி செய்கின்றனர். பிரகாசமானதும் பெரிய அளவிலானதுமான பளிங்கு கற்களும் ஆறுகளிலே காணப்படுகின்றன. சூழவுள்ள கடலிலே விலைமதிப்பற்ற முத்துக்கள் பெருந்தொகையாகப் பெறப்படுகின்றன. செரன்தீப் அரசனுடைய செல்வத்துடன் ஒப்பிடக்கூடிய செல்வமுடைய இளவரசர் எவரும் இந்தியா எங்கும் கிடையாது. அவர் வசமுள்ள அளவற்ற செல்வமும், முத்துக்களும், ஆபரணங்களும் அவரது சொந்த நாட்டிலும் கடலிலும் பெறப்பட்டவை ஆகும். சீனாவிலிருந்து மற்றும் ஏனைய அண்டைய நாடுகளிலிருந்தும் வந்த கப்பல்களும், பாரசீகத்தின் குடிபானங்களைக் கொண்டு வந்த கப்பல்களும் இங்கு நங்கூரமிட்டுள்ளன. இக் குடிபானங்களை தனது பிரஜைகளுக்கு விற்பனை செய்வதற்காக மன்னர் கொள்வனவு செய்கிறார். குடிபானங்கள் அருந்துவது அனுமதிக்கப்பட்டுள்ளது. விபச்சாரம் தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவின் ஏனைய இளவரசர்கள் விபச்சாரத்தை அனுமதித்து, குடிபானங்களை விலக்கி உள்ளனர். செரன்தீப்பின் ஏற்றுமதிப் பொருட்களில் பட்டு, மாணிக்கக் கற்கள், பளிங்கு, வைரம், வாசனைத் திரவியங்கள் என்பன அடங்கியிருந்தன (அல் இத்ரீசி).

இப்னு பதூதா இந்நாட்டிற்கு வருகை தந்த காலத்தில், சிங்கள மன்னர்களால் மிகவும் கண்ணியமாக மதிக்கப்பட்ட பல முஸ்லிம் மதப் பெரியார்கள் இங்கு வாழ்ந்தனர். கொங்கார் (இது எந்த இடம் என்பது இனங் காணப்படவில்லை) எனப்படும் ராஜதானியின் சுற்றுப்புறத்தில் அமைந்திருந்த தனது பள்ளிவாசலில் வாழ்ந்த ஷேஹ் உஸ்மான் என்பவர் அவர்களுள் ஒருவராவார். இவரையே தனது வழிகாட்டியாக இப்னு பதூதா பாவா ஆதம் மலைக்கு அழைத்துச் சென்றார். மன்னனும் மக்களும் அடிக்கடி தரிசிக்கும் தலைநகருக்கு அருகில் இருந்த குகை

ஒன்றில் வாழ்ந்த பக்தியான உஸ்தாத் மஹ்முத் லூரி என்பவரையும் இப்னு பதூதா குறிப்பிட்டுள்ளார். தனது இலங்கை விஜயத்தின் போது பாபா தாஹிர், பாபா குக்ஷ்தி ஆகிய ஏனைய முஸ்லிம் மதப் பெரியார்களையும் சந்தித்ததாகவும் அவர் கூறியுள்ளார். இப்னு பதூதா மன்னாரில் 'மண்டெல' எனக் குறிப்பிடும் இடத்தில் குராசான் தேசத்திலிருந்து இங்கு வந்து, சுகவீனம் காரணமாகத் திரும்பிச் செல்ல முடியாமல் தங்கி இருந்த ஒரு முஸ்லிமையும் சந்தித்ததாகக் குறிப்பிடுகிறார் (ஹீசைன், 1953: 219).

தலைநகரைச் சுற்றியுள்ள பல முஸ்லிம் வணக்கஸ்தலங்களும் மதப் பெரியார்களும், புனித பாவா ஆதம் மலைக்குச் செல்லும் பாதையில் அமைந்திருந்தமை, சிங்கள சமுதாயத்தினரால் முஸ்லிம்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், கண்ணியப்படுத்தப்பட்டதையும் காட்டுகின்றது. மலையின் உச்சிக்கு ஏறும் பாதையில் அமைக்கப்பட்டுள்ள இரும்புத் தூண்களில் தொங்கும் பத்து சங்கிலித் தொடர்களில் ஒன்று 'இஸ்லாமிய சங்கிலி' என அழைக்கப்படுவதில் இருந்தும், இப்னு பதூதாவின் இலங்கை தரிசனத்தின் போது, பெருமளவிலான அரபு யாத்திரிகர்கள் பாவா ஆதம் மலைக்குச் சென்றனர் என அறிய முடிகிறது. இந்த யாத்திரிகர்கள் இச் சங்கிலியை அடைந்து, கீழ்நோக்கிப் பார்ப்பதன் மூலம் காணும் பாரிய பாதாளத்தால் ஏற்படும் பயத்தால் உடனடியாக பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இதனால் முஸ்லிம்கள் இச் சங்கிலிகளுக்கு இவ்வாறு பெயரிட்டனர் எனக் கூறப்படுகின்றது (ஹீசைன், 1953: 219).

இக்காலத்தில் நாட்டின் உட்பிரதேசங்களில் பெரிய முஸ்லிம் குடியிருப்புகள் இருந்ததற்கான ஆதாரம் கிடையாது. ஆனால், ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து பதின்நான்காம் நூற்றாண்டுவரை பாவா ஆதம் மலை உச்சிக்குச் செல்லும் யாத்திரிகர்கள் அதிகரித்துள்ளனர். இதன் வழிநெடுகிலும் மார்க்கப் பெரியார்களின் அடக்கஸ்தலங்களும் குகை வாழ்விடங்களும் காணப்பட்டன. பாவா ஆதம் மலையின் உச்சிக்கு சுமார் 100 அடி கீழே காணப்படும் 'பாதவலேனா' எனப்படும் குகையில் காணப்படும் 13 ஆம் நூற்றாண்டுக்குரிய அரபுக் கல்வெட்டு, இம்மலைக்கு வந்த முஸ்லிம் யாத்திரிகர்களின் சிறந்த ஞாபகச் சின்னமாக விளங்குகின்றது. அத்துடன், நிசங்கமல்ல (1187-1296) எனும் அரசன் இம்மலைக்கு விஜயம் செய்து, அப் புனித தலத்தின்



இப்னு பதூதாவின் பயணப்பாதை
Image Source : ibnbattutasa.wordpress.com

பராமரிப்புக்காக பல கிராமங்களையும் அன்பளிப்பாக வழங்கியதை குறிப்பிடும் சிங்களக் கல்வெட்டுக்கு அருகில் இக்கல்வெட்டும் அமைந்திருப்பது அதனுடைய முக்கியத்துவத்தை அதிகரிக்கிறது. இவ் அரேபியக் கல்வெட்டில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "அகிலத்தாரின் சிருஷ்டி கர்த்தாவான இறைவன், முஹம்மத் நபி (ஸல்) மீது அருள்பாலிப்பானாக" (இலங்கை விஞ்ஞான சஞ்சிகை, பகுதி *V*, பாகம் 11, பகுதி 1, ப:20).

புனிதமான இம்மலையில், ஒன்றின் அருகே இன்னொன்றாக சிங்கள பௌத்த கல்வெட்டும், அரேபிய இஸ்லாமியக் கல்வெட்டும் காணப்படுவது, இப்புனித மலையில் ஏறும் பல்வேறு இன, மத யாத்திரிகர்கள் இடையே காலாகாலமாக நிலவி வந்த சமய நல்லிணக்கத்தின் அடையாளச் சின்னமாக இம்மலை திகழ்கின்றமைக்குச் சான்றாகும்.

11 ஆம் நூற்றாண்டில் அரபு நாடுகள் இலங்கைக்கு வழங்கிய அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புகள்

பதினோராம் நூற்றாண்டின் முடிவோடு, இலங்கையின் அரசியல் ஒருமைப்பாடு ஸ்திரமற்ற நிலைக்குச் சென்றது. யாழ்ப்பாணம் உட்பட பல சிற்றரசுகளாக இந்நாடு சிதறுண்டது. யாப்பகூவ, தம்பதெனிய, குருநாகல், கம்பல என காலத்துக்கு தலைநகரங்கள் மாற்றம் பெறலாயின. மன்னர்கள் எதிர்நோக்கிய அச்ச நிலையை இது பிரதிபலித்தது. சில பிரதேசங்கள், வன்னியர் எனப்படும் பிராந்தியத் தலைவர்களின் ஆளுகையின் கீழ் சென்றன. இதனால், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணம் வேறுபடுத்தப்பட்டது. அடுத்த சில நூற்றாண்டுகளுக்கு இந்நிலைமை தொடர்ந்திருந்ததோடு, போர்த்துக்கேயரின் வருகையின் போது (1505) கோட்டை, கண்டி, யாழ்ப்பாண இராச்சியங்களாகவும், வேறு சில சிற்றரசுகளாகவும் நாடு பிளவுபட்டிருந்தது. மன்னர்களின் ஆளுமைக்கேற்ப இச்சிற்றரசுகள் எழுச்சியும் வீழ்ச்சியும் அடைந்தன.

அரசியல் ஸ்திரமற்ற நிலைமையினாலும், அதனைத் தொடர்ந்து இராஜரட்டையின் நெற்களஞ்சிய வீழ்ச்சியினால் பரந்த விவசாயப் பூமிகள் கைவிடப்பட்டதனாலும், பொருளாதார வீழ்ச்சி இலங்கையில் தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக மாறியது. நீர்ப்பாசன நாகரிகம் உச்சக் கட்டத்தில் இருந்த காலத்தில் நிலவரியே அரசாங்கத்தின் முக்கிய வருமானமாக இருந்து வந்தது. ஆனால் தற்போது மாற்று வருமானங்களுக்கான வழிகளை தேட

பதினோராம் நூற்றாண்டின் முடிவோடு, இலங்கையின் அரசியல் ஒருமைப்பாடு ஸ்திரமற்ற நிலைக்குச் சென்றது. யாழ்ப்பாணம் உட்பட பல சிற்றரசுகளாக இந்நாடு சிதறுண்டது. யாப்பகூவ, தம்பதெனிய, குருநாகல், கம்பல என காலத்துக்கு தலைநகரங்கள் மாற்றம் பெறலாயின. மன்னர்கள் எதிர்நோக்கிய அச்ச நிலையை இது பிரதிபலித்தது. சில பிரதேசங்கள், வன்னியர் எனப்படும் பிராந்தியத் தலைவர்களின் ஆளுகையின் கீழ் சென்றன. இதனால், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் இருந்து யாழ்ப்பாணம் வேறுபடுத்தப்பட்டது.

வேண்டிய அவசியம் இலங்கை அரசுகளுக்கு ஏற்பட்டது. இதற்கான சாதகமான சூழலை தென்கிழக்காசியாவின் செழிப்பான வர்த்தகத்தில் அவர்கள் கண்டனர். இவ்வர்த்தகம் முஸ்லிம்களின் கைகளில் இருந்ததினால், இலங்கைக்கு சாதகமான பதிலே அதனால் கிடைத்தது. இம்முஸ்லிம்கள் ஏற்கனவே இத்தீவின் துறைமுகங்களில் நிலை பெற்றிருந்ததோடு, அதன் உள்ளூர் வர்த்தகத்திலும் ஈடுபட்டிருந்தனர். இத்தகைய பொருளாதார இக்கட்டான சூழ்நிலைக்கு, பாரம்பரியமாக முஸ்லிம்களுடன் இலங்கை கொண்டிருந்த சினேக உறவு பெரும் துணையாக அமைந்தது.

இப்னு பதூதா

Image Source : www.ancient-origins.net

12 ஆம், 13 ஆம் நூற்றாண்டுகளில், வர்த்தகம் செய்யக்கூடிய அனைத்துப் பொருட்களையும் நாடளாவ ரீதியில் கொள்வனவு செய்யும் முகவர்களையும் உபமுகவர்களையும் முஸ்லிம்கள் எவ்வாறு இந்நாட்டில் நிறுவியிருந்தனர் என்பதைப் பற்றி அலெக்சாண்டர் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டில் சேகரிக்கப்படும் பொருட்களைப் பெற்றுச் சேமித்து அனுப்புவதற்காக, ஒவ்வொரு துறைமுகத்திலும் தமது முகவர்களை அவர்கள் நியமித்திருந்தனர். இவ்வாறு, கிழக்கு மாகாணத்தில் உள்ள அரிசி, நீலச்சாயம் என்பவற்றை திருகோணமலையிலிருந்தும்; சிவப்புச் சாயம், வீட்டுக் கூரைகளுக்கான பனைமரங்கள், கோவில்களில் சமயச் சடங்குகளில் உபயோகிக்கப்படும் சங்குகள் என்பனவற்றை யாழ்ப்பாணத்திலிருந்தும்; முத்துக்களை குதிரை மலையிலிருந்தும்; பாக்கு, வெற்றிலை, கருங்காலி மரத் தளபாடங்களுக்கு உரிய குதிரைமரம், ஆரஞ்சு நிறச் சாயத்துக்கான மரம் முதலியவற்றை புத்தளத்திலிருந்தும்; கறுவா, இரத்தினக்கல் என்பவற்றை கொழும்பிலிருந்தும்; தேங்காய் எண்ணெய், தும்புப் பொருட்கள் என்பவற்றை பேருவளையிலிருந்தும்; யானை, தந்தம் என்பவற்றை காலியில் இருந்தும் பெற்றனர். இவ்வாறு பெறப்பட்ட பெறுமதிமிக்க பொருட்கள் அனைத்தும் முஸ்லிம் வர்த்தகர்களினால் மன்னாரிலும் மாந்தையிலும் கட்டப்பட்டிருந்த பாரிய கிடங்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. மன்னார் தீவுக்கு அருகில் தம் சொந்தச் செலவிலே முஸ்லிம் வர்த்தகர்களால் நிறுவப்பட்ட ஆயுதக் கப்பல்களின் துணைகொண்டு, இந்திய சமுத்திரத்தில் நடமாடிய கடற் கொள்ளைக்காரர்களிடமிருந்து கடல் வர்த்தகப் பாதைகளையும் தமது வணிகத்தையும் பாதுகாத்தனர் (அலெக்சாண்டர் ஜோன்சன்).

இப்னு பதூதா கொழும்புக்கு வருகை தந்த போது, ஜெலஸ்தி எனும் பெயருடைய அமைச்சரும், கடற்படைத் தளபதியுமான

ஒருவரும் அங்கு வாழ்ந்ததாகவும், இவர் தன்னுடன் 500 அபிசீனியர்களை வைத்திருந்ததாகவும், காலியில் வாழ்ந்த கேப்டன் இப்ராஹீம் என்பவர் பதூதாவிற்கு தனது இல்லத்தில் விருந்தளித்துக் கௌரவித்ததாகவும் குறிப்பிடுகின்றார் (ஹீசைன், 1953:219). பேருவளையில், குவாஜா ஜஹான் எனும் சரசானிய கொடுங்கோலன் வாழ்ந்ததாக ஜோன் டி மெரிக்நொல்லி குறிப்பிடுகிறார் (கொட்றிங்கடன், 1924:157). 1410 ஆம் ஆண்டு சீனக் கப்பல் தலைவன் செங்கோ என்பவரால் நிறுவப்பட்டு, தற்போது கொழும்பு தேசிய நூதனசாலையில் உள்ள காலி மும்மொழி சிலாசனம் பாரசீகம், தமிழ், சீனம் ஆகிய மொழிகளில் எழுதப்பட்டுள்ளது. பௌத்த, இந்து, முஸ்லிம் மத நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளை குறிப்பிடும் இவ்வாவணம், காலியில் வாழ்ந்த முஸ்லிம் வர்த்தக சமூகத்தின் அளவையும் முக்கியத்துவத்தையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டும் சான்றாகும்.

மேலும் தங்களது சொந்தச் சட்டங்களின் கீழ் விசாரிக்கப்படுவதற்கான மிக முக்கிய சலுகை ஒன்றினையும் சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து முஸ்லிம் வர்த்தகர்கள் பெற்றிருந்தனர். முஸ்லிம்கள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள துறைமுகங்களில் ஏதாவது ஒன்றில் பிணக்குகள் ஏதும் ஏற்பட்டால் அது எவ்வித தாமதமோ செலவோ இன்றி முஸ்லிம் மதத்தலைவர், வர்த்தகர், மாலுமி என்பவர்களை உள்ளடக்கிய விசாரணைக் குழு ஒன்றினால் விசாரிக்கப்பட்டு விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதும் ஒரு சலுகையாகும். ஆசிய முஸ்லிம்கள் அனைவருக்கும் பொருத்தமானதாய் அமுல் செய்யப்பட்டு வந்த சட்டக் கோவைகளுக்கு ஒத்ததாகவே இவர்களது விசாரணையும் அமைதல் வேண்டும் என்ற நிபந்தனையும் அதில் பின்பற்றப்பட்டு வந்தது. நேரத்தை பெறுமதியாக மதிக்கும் இவ் வர்த்தகர்கள் நீண்ட காலத்தை எடுக்கும் விரிவான விசாரணைகளில் தமது காலத்தை வீணாக்க விரும்பாமல் இச் சலுகைகளைக் கேட்டுப் பெற்றனர். நெல் உற்பத்தியில் மட்டும் தங்கியிருந்த இந்நாட்டுப் பொருளாதாரம் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு மாறிக்கொண்டிருந்த இக்காலகட்டத்தில் அவ் ஏற்றுமதிப் பொருளாதார வருமானத்தை பெரிதும் வேண்டிய ஆட்சியாளர்கள் இச் சலுகையை முஸ்லிம்களுக்கு வழங்கினர்.

13 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பல்வேறு காரணங்களினால் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே இருந்த பிணைப்பு மேலும் விரிவடைந்தது. சிங்கள இராச்சியங்கள் தென்மேற்கு நோக்கி நகர்ந்ததற்கும், அதன் விளைவாய் ஏற்றுமதி பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததற்கும் தென்னிந்தியப் படையெடுப்புகளும் ஓரளவு காரணமாக அமைந்தன. இத்தகைய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வர்த்தகம் முஸ்லிம்களின் கையிலே இருந்ததனால் சிங்கள ஆட்சியாளர்கள் அவர்களின் மேல் தங்கி இருக்கும் நிலை மென்மேலும் அதிகரித்தது. முஸ்லிம்களின் தென்னிந்திய ஆதிக்கம் சுதந்திரமான யாழ்ப்பாண இராச்சியம் தோன்றுவதற்கும் காரணமாக இருந்தது. இவ் இராச்சியம் ஆரம்பத்தில் பாண்டியர் செல்வாக்கிற்கு உட்பட்டதாய் இருந்தது. யாழ்ப்பாணம், வாசனைத் திரவிய வர்த்தகத்தில் மிகவும் ஈடுபாடுடையதாக இருந்த காரணத்தினால், யாழ்ப்பாணத்துக்கு எதிரான சிங்கள - முஸ்லிம் இணைப்பு மேலும் விருத்தியடைந்தது. கீழைத்தேய வாசனைப்

மார்க்கோ போலோ

Image Source : www.britannica.com

மார்க்கோ போலோ, தனது காலத்தில் (1292) இலங்கை மக்களுக்கு போர் வீரர்களின் சேவை தேவைப்படும் போது, சரசானியர்களை சேவைக்கமர்த்தியதாக குறிப்பிடுகிறார். ஐந்தாம் புவனேகபாகுவின் (1372- 1408) ஆட்சிக் காலத்தில் ஆரியச் சக்கரவர்த்தி தெற்கின் மேல் இரண்டாவது முறையாக படையெடுத்தான். ஆனால் இவ்விரு படையெடுப்புகளும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

பொருட்களுக்கான கிராக்கி மேலைத்தேய நாடுகளில் அதிகரித்தது. அதன் விளைவாக தென்கிழக்காசியாவில் வாசனைத் திரவியங்களின் வர்த்தகம் வளர்ச்சி அடைந்தது. இவ்வர்த்தகப் பொருட்களை மேலைத்தேசங்களுக்கு கொண்டு செல்பவர்கள் அரேபியர் என்ற காரணத்தினால் வாசனைத் திரவியங்கள் அபரிமிதமாய் உள்ள தீவில் அவர்களது அந்தஸ்தும் மதிப்பும் உயர்ந்தன. கல்கி துக்ளக் என்பவரின் தலைமைத்துவத்தின் கீழ் இஸ்லாமியப் படைபலம் இந்தியாவில் உச்ச நிலை அடைந்ததனையும், அவர்களின் நாகரிக வளர்ச்சியையும் இலங்கை நன்கறிந்திருந்தது.

இப் பின்னணியிலேதான் யாப்பகூவையில் அரசாண்ட முதலாம் புவனேகபாகு மன்னன் (1273 - 1284) அல்ஹாஜ் அபூ உதுமான் தலைமையில் 1283 ஆம் ஆண்டில் எகிப்திய மன்னன் மம்லுக் என்பவரைச் சந்திக்க அனுப்பிய இராஜதந்திர தூதுக் குழுவின் முக்கியத்துவத்தை நோக்குதல் வேண்டும் (மெண்டிஸ்:1983: 184). பக்தாத் தலைநகரத்தை விட அப்போது பிரபல்யம் பெற்று விளங்கிய எகிப்தோடு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி, அதன் மூலம் தனது அரசியல் செல்வாக்கையும், நலிவடைந்து கொண்டு செல்லும் பொருளாதார வளத்தையும் அதிகரிக்க முடியுமென மன்னனின் அரேபிய ஆலோசகர்கள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையிலேயே இத் தூதுக்குழு அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான நல்லுறவை தொடர்ந்து வைத்துக் கொள்வதற்காக எகிப்திய தூதுவரை இலங்கைக்கு அனுப்புமாறும், சுல்தானின் இராஜ்ஜியத்தில் உள்ள வர்த்தகர்களை இலங்கைக்கு வர்த்தகம் செய்ய வருமாறும் இலங்கை மன்னன் அழைப்பு விடுத்தான். அவ்வாறு வர்த்தகம் செய்யக்கூடிய நீண்ட பொருட்பட்டியலில் மாணிக்கக் கற்கள், முத்துக்கள், யானைகள், கறுவா என்பனவும் பட்டியலிடப்பட்டிருந்தன. சிங்கள அரசவையில் இருந்த பலம் பொருந்திய முஸ்லிம் செல்வாக்கின் விளைவாகவே இத் தூதுக்குழு அனுப்பப்பட்டுள்ளது என்பது மன்னனது கடிதத்திலிருந்து தெளிவாகின்றது. முஸ்லிம்களின் அபிலாசைகளோடு இந்நாட்டு ஆட்சியாளர்களது அபிலாசைகளும் மிகவும் நெருக்கமாக இருந்த காரணத்தினால் முஸ்லிம்களின் ஆலோசனைகள் தங்கு தடையின்றி மன்னர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் தென்னிந்தியாவிலிருந்து படையெடுப்புகள் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் இருந்தமையினாலும், அவற்றைத் தாக்குப்பிடிக்கக் கூடியவாறு முஸ்லிம்

உலகுடன் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகளின் மறைமுக ஏற்பாடாகவும் இவ் வர்த்தகத் தூதுக்குழு சென்றிருக்கலாம் எனக் கருத முடியும் (மெண்டிஸ் 1981: 423).

இத் தூதுக்குழுவின் பயன் யாதென்பதை பற்றிய தெளிவுகள் இல்லையாயினும், இத் தூதுக்குழு இடையிலான தொடர்புகள் நீடித்திருந்ததை அவதானிக்க முடிகின்றது. ஏனெனில், கைரோவின் மம்லுக் மன்னர்களது காலத்து நாணயங்கள் கொழும்புக்கும் கண்டிக்கும் இடையிலே கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் அனேகமானவை சிங்கள மன்னன் இத் தூதுக்குழுவை வரவேற்று உபசரித்த சுல்தானது (1279-1290) காலத்துக்குரியதாகும். இக் காலப்பகுதயில் வாசனைத் திரவியங்களுக்கு ஐரோப்பாவில் ஏற்பட்ட அதிகரித்த தேவை காரணமாக, மிகவும் இலாபத்தை தந்து கொண்டிருந்த கறுவா வர்த்தகத்தையும், முத்துக் குளிப்பையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக யாழ்ப்பாண ஆரியச் சக்கரவர்த்திகளுக்கும் தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கும் இடையே பலத்த போட்டி நிலவியதையும் காணக்கூடியதாக உள்ளது. இதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் ஆதரவுடன் சிங்கள இராச்சியத்துக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் இடையே ஏற்பட்ட பிணக்குகள் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான போட்டியாய் அல்லது வர்த்தக வளங்களைப் பெருக்குவதற்கான போட்டியாய் அமைந்தது (ஹொட்றிஹ்கடன் 1924: 158).

1344 இல் இப்னு பதூதா இலங்கைக்கு வருகை தந்த போது, சிங்கள இராச்சியத்தில் நிலவிய அமைதியின்மையால் யாழ்ப்பாண மன்னன் பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் உயர்நிலையை

அரபுச் சந்தையைப் பிடிக்க சிங்கள மற்றும் தமிழ் ஆட்சியாளர்களுக்கிடையே பலத்த போட்டி நிலவியது. முஸ்லிம் வர்த்தகர்களுடன் ஏற்கனவே இருந்த தொடர்புகளின் காரணமாக சிங்கள மன்னனுக்கு சாதகமான நிலை இருந்தது. இந்தியாவில் இந்து முஸ்லிம் பிணக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், தென்னிந்தியாவின் இந்து ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்த யாழ்ப்பாண இந்து மன்னனுக்கு எதிராக, இலங்கையில் முஸ்லிம்கள் சிங்களவருடன் இணைந்தனர்.

அடைந்து கொண்டிருந்தான். ஏமன் தேசம் வரைக்கும் வர்த்தகம் செய்யும் வர்த்தகக் கப்பல்களையும் ஆயுதம் தரித்த கடற்கொள்ளைக் கப்பல்களையும் ஆரியச் சக்கரவர்த்தி தன் வசம் வைத்திருந்தான். முத்துக் குளிப்பினால் அவனது வருமானம் பலம் பெற்றிருந்தது. மார்க்கோ போலோவின் கூற்றுப்படி, மன்னார் குடாவில் காணப்பட்ட முத்துக்கள் விலைமதிப்பற்றவையாகவும் உருண்டையாகவும் செழிப்பாகவும் அமைந்திருந்ததால், உலகம் முழுவதும் அதற்கு பெரும் கிராக்கி இருந்து வந்தது. வர்த்தகர்கள் தமது வருமானத்தில் ஒரு பகுதியை வரியாகச் செலுத்தியதின் காரணமாக, முத்துக்குளிப்பிலிருந்து கணிசமான வருமானம் மன்னனுக்குக் கிடைத்ததாக மார்க்கோ போலோ குறிப்பிடுகிறார். மதுரையினதும் யாழ்ப்பாணத்தினதும் ஆட்சியாளர்களும் சிங்கள ஆட்சியாளர்களும் இப் பொருளின் மேல் கண் வைத்து இருந்தனர். ஆரியச் சக்கரவர்த்தி தனது கடற்கரையோரங்களில்

வந்திறங்கிய வர்த்தகர்களுடன் தென்னிந்தியத் துணிகளைப் பரிமாற்றம் செய்தான். இதனால் தென்கரையோரப் பிரதேசத்தை கைப்பற்றுவதற்கும் அவன் விரும்பினான். பாரசீக மொழியை சரளமாகப் பேசுவதோடு, அவனது ஆற்றல் இப்னு பதூதாவுக்கு வியப்பை ஏற்படுத்தியது. தனது விருந்தினரை பாவா ஆதம் மலைக்கு பாதுகாப்பாக அனுப்பக்கூடிய அளவிற்கு, யாழ்ப்பாண ஆட்சியாளன் தெற்கில் அதிகாரம் கொண்டிருந்தான்.

ஆரியச் சக்கரவர்த்தி தனது முஸ்லிம் விருந்தினரை உபசரித்ததற்கு பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, இப்னு பதூதா ஆரியச் சக்கரவர்த்தியின் நண்பனான மாபார் சுல்தானின் மைத்துனர் ஆவார். இரண்டாவதாக, ஆரியச் சக்கரவர்த்தி சிங்கள இராச்சியத்தில் உள்ள முஸ்லிம் இடைத்தரகர்களைத் தவிர்த்து, மேற்காசியாவுடன் நேரடி வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பினான். மேலும், 1284 இல் எகிப்திய சுல்தானோடு சிங்கள மன்னன் மேற்கொண்ட தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, தானும் தனது சொந்தத் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பியிருக்கலாம்.

அரபுச் சந்தையைப் பிடிக்க சிங்கள மற்றும் தமிழ் ஆட்சியாளர்களுக்கிடையே பலத்த போட்டி நிலவியது. முஸ்லிம் வர்த்தகர்களுடன் ஏற்கனவே இருந்த தொடர்புகளின் காரணமாக சிங்கள மன்னனுக்கு சாதகமான நிலை இருந்தது. இந்தியாவில் இந்து - முஸ்லிம் பிணக்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால், தென்னிந்தியாவின் இந்து ஆட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டிருந்த யாழ்ப்பாண இந்து மன்னனுக்கு எதிராக, இலங்கையில் முஸ்லிம்கள் சிங்களவருடன் இணைந்தனர். ஆகவே, பொருளாதாரமும் அரசியலும் சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் ஒன்றிணைத்தது.

மூன்றாம் விக்ரமபாகுவின் (1357-1374) ஆட்சியின்போது, ஆரியச் சக்கரவர்த்தி நீர்கொழும்பு மற்றும் கொழும்பைத் தாக்கி மேற்குக் கரையோரத் துறைமுகங்களை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தான். இப்னு பதூதாவின் கூற்றுப்படி, அச்சமயத்தில் முஸ்லிம் வர்த்தக நடவடிக்கைகள் சிறப்புற்று விளங்கிய இடமாக கொழும்பு திகழ்ந்தது. தங்கள் குடியிருப்புகளை பாதுகாக்க, அரேபியர் முக்கிய கவனம் செலுத்தியதோடு, தமது சிங்கள நண்பர்களுக்கு கடற்பாதுகாப்பை வழங்கியதன் மூலம் தமது பலத்தையும் அந்தஸ்தையும் அதிகரித்தனர். சிங்கள இராணுவம் முஸ்லிம் போர் வீரர்களை சேவைக்கு அமர்த்தியதிலிருந்து இது தெளிவாகிறது.

மார்க்கோ போலோ, தனது காலத்தில் (1292) இலங்கை மக்களுக்கு போர் வீரர்களின் சேவை தேவைப்படும் போது, சரசானியர்களை சேவைக்கமர்த்தியதாக குறிப்பிடுகிறார். ஐந்தாம் புவனேகபாகுவின் (1372-1408) ஆட்சிக் காலத்தில் ஆரியச் சக்கரவர்த்தி தெற்கின் மேல் இரண்டாவது முறையாக படையெடுத்தான். ஆனால் இவ்விரு படையெடுப்புகளும் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டன.

தென்னிந்தியாவில் விஜயநகர இராச்சியத்தின் அதிகாரம் (1360-1370) பரவ ஆரம்பித்ததினாலும், ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (1412-1467) கோட்டை இராச்சியத்தின் அதிகாரம் விரிவடைந்ததின் விளைவாகவும் ஆரியச் சக்கரவர்த்தியின் செல்வாக்கும் அதிகாரமும் குறையத் தொடங்கின. பலம் பொருந்திய வடபுறத்து சாம்ராஜ்யத்தின்

மேலாதிக்கத்திற்கு எதிர்ப்புக் கொடுக்க முடியாத யாழ்ப்பாண அரசன், விஜயநகர ஆட்சியினை அங்கீகரித்து கப்பம் செலுத்த வேண்டியதாயிற்று. இவ்வாறு தமது வர்த்தகப் போட்டியாளரின் அரசியல் அதிகாரம் அஸ்தமித்த காரணத்தினால் நாட்டின் ஏனைய பகுதிகளின் அனைத்து வர்த்தகமும் மிகவும் அமைதியான முறையில் முஸ்லிம்களின் கைவசமாயிற்று.

இதே நேரம் இந்திய உபகண்டத்தில் மற்றுமொரு மாற்றம் ஏற்பட்டது. 13 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் பக்தாத் ஆட்சிப் பீடம் வீழ்ச்சியுற்றதோடு இந்து சமுத்திரத்தில் அரேபியரது வர்த்தக நடவடிக்கை நலிவடைந்தது. இந்து சமுத்திரத்தின் மேற்குப் புறப்பிரதேசத்துக்கு அரேபிய வர்த்தகர்கள் தொடர்ந்து வர்த்தகம் செய்து வந்தாலும் கூட, கிழக்குப் பிரதேசத்தின் வர்த்தகம் முற்று முழுதாக முஸ்லிம் வர்த்தகர்களான குஜராத்தியர், மலபாரி மற்றும் சோழ மண்டலத்திலிருந்து வங்காளம் வரை வாழ்ந்தவர்களின் கைகளுக்கு மாறியது. இந்து வர்த்தகர்கள் தரைப் பகுதிகளிலேயே தங்களது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு முஸ்லிம்களுக்கு சொந்தமான கப்பல்களில் தமது பொருட்களை வர்த்தகப் பொருட்களை ஏற்றுமதி செய்தனர்.

இந்து மத சமூக அமைப்பில் ஆழமாகப் பதிந்துவிட்ட சாதிப் பாகுபாட்டின் காரணமாக உயர்சாதி இந்துக்கள் வெளிநாட்டுப் பயணங்களை தவிர்த்துக் கொண்டனர். அவ்வாறான பயணங்களை மேற்கொண்டால் திரும்பி வந்ததும் சாதி அமைப்பிலான தமது உயர் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்வதற்காக தம்மை பரிசுத்தப்படுத்துவதற்கான சடங்குகளைச் செய்ய வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. முஸ்லிம்களுடனும் ஐரோப்பியருடனுமான தொடர்புகளும், பிற நாட்டாருக்குச் சொந்தமான கப்பல்களில் பிரயாணம் செய்வதும் உயர்சாதி இந்துக்களை ஆசார ரீதியாக அசுத்தப்படுத்தின. இஸ்லாத்தின் சகோதரத்துவ, சமத்துவக் கொள்கை பிற மதத்தாரை மதம் மாறக் கவர்ந்ததோடு, குறிப்பாக சாதியப் பாகுபாட்டில் ஊறிப் போயிருந்த இந்து சமுதாயத்தின் தாழ்ந்த சாதியினரை, தன்பால் ஈர்த்தது. இதன் மூலம் ஏற்கனவே இருந்த அரேபிய குடியிருப்புகள் விரிவடைந்து பலம் பெற்றன. மேலும் கடலோடி வர்த்தகர்கள் தமது குடும்பங்களை மிக அரிதாகவே தம்முடன் அழைத்துச் செல்வர். அதிலும்

தென்னிந்தியாவில் விஜயநகர இராச்சியத்தின் அதிகாரம் (1360-1370) பரவ ஆரம்பித்ததினாலும், ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (1412-1467) கோட்டை இராச்சியத்தின் அதிகாரம் விரிவடைந்ததின் விளைவாகவும் ஆரியச் சக்கரவர்த்தியின் செல்வாக்கும் அதிகாரமும் குறையத் தொடங்கின.

குறிப்பாக அரேபிய பெண்கள் வீட்டோடு வாழ்வதிலேயே விருப்பம் காட்டினர். முஸ்லிம் கடல்சார் வர்த்தகர்கள் தமது மனைவிமாரை தம்முடன் அழைத்துச் செல்வதில்லை. இதனால் தான், செல்லும் நாடுகளில் அவர்கள் மனைவிமாரைப் பெற்றுக் கொண்டனர். அவ்வாறு மணம் முடித்த பெண்கள், இஸ்லாத்தை தழுவியதோடு அவர்களது குழந்தைகளும் முஸ்லிம்களான மாறினர். இதனால் அரேபியர்களின் குடியிருப்புகள் எண்ணிக்கையில் அதிகரித்ததோடு, அவர்கள் மேலும் பலம் பெற்றனர். இவ்வாறு மக்கள் மதம் மாறி, அரேபியருக்கான உள்ளூர்த் தளத்தையும் ஆதரவையும் மனித வளத்தையும் வழங்கினர். அதனால் அவர்களும் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும்

நன்மை அடைந்தனர். இவ்வகையில் மேற்கு ஆசியாவில் இருந்து வருகை தந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட முன்னோடிகளின் இடத்தினை இந்தியாவின் மேற்கு, தெற்குக் கரைகளில் உள்ள துறைமுகங்களில் வாழ்ந்த இஸ்லாத்தை தழுவிய இந்தியர்கள் பெற்றனர்.

திரிப்போலி, மொரோக்கோ வரையிலான தூர தேசங்களோடும் கூட வர்த்தக உறவுகளைக் கொண்ட செழிப்பான முஸ்லிம் வர்த்தகர்கள் எவ்வித வன்முறையையும் உபயோகிக்காது மிகச் சமாதானமான முறையில் இந்தியக் கரையோரம் எங்கும் தமது வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்தனர். உள்ளூர் ராஜாக்கள் இவ் வர்த்தகர்களோடு மிகுந்த நல்லுறவைக் கொண்டிருந்ததோடு அவர்களுக்கு விசேட பாதுகாப்பும் வழங்கினர். அவ்வாறே மன்னர்களுக்குத் தேவையான அனைத்தையும் இவ் வர்த்தகர்கள் வழங்கியதோடு நாட்டின் உற்பத்திப் பொருட்களுக்கு மிகக் கூடிய விலையையும் வழங்கினர். இலங்கையில் நடைபெற்றது போன்று முஸ்லிம் வர்த்தகர்களின் கடற் பயண அனுபவங்களையும் கடலோடித் திறமைகளையும் இந்திய ராஜாக்களும் நன்கு பயன்படுத்திக் கொண்டனர். குறிப்பாக, தனது பொது எதிரியான போர்த்துக்கேயர்களுக்கு எதிராக இலங்கை நாடானது முஸ்லிம் தூதுவர்கள் மூலம் எவ்வாறு கள்ளிக்கோட்டை சமோரிய மன்னனது உதவியை நாடியதோ, அவ்வாறு இந்திய மன்னர்களும் முஸ்லிம் தளபதிகளின் கீழ் இருந்த சமோரிய மன்னனின் உதவியோடு தமது எதிரிகளை விரட்டி அடிப்பதில் வெற்றி கொண்டனர். சமோரிய மன்னன், இவர்களின் மூலம், எகிப்திய - பாரசீக ஆட்சியாளர்களோடும் வட இந்திய சுல்தான்களோடும் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தான். மேலும் முஸ்லிம்களின் சிறப்பான பொருளாதார வர்த்தக நிலையமாக காயல்பட்டணம் விளங்கியது. அரபுத் தலைவன் ஒருவன் இங்கிருந்து தனது முகவர் மூலம் பாண்டிய மன்னனுக்கு வருடாந்தம் பத்தாயிரம் குதிரைகளை விநியோகம் செய்தான். இவ்வாறான சூழ்நிலைகளில், முஸ்லிம் சமூகம் தமது அமைதியான பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாகவும் சமயத் தனித்துவத்தின் காரணமாகவும் இந்தியத் துணைக் கண்டத்தில் தனித்துவமான வளர்ச்சி அடைந்தது.

உசாத்துணை

1. *Alexander Johnston. (1827), An Account of an Inscription found near Trincomalee, in the Island of Ceylon,V.I, London*
2. *Codrington, H. W. (1924), Ceylon Coins and Currency (CCC), Memoirs of The Colombo Museum Series A. No. 3..*
3. *Dewaraja, Lorna (2000). Muslim Merchants and Pilgrims in Serendib c. 900 to 1500 A. D., Reflection on a Heritage, History and Archaeology of Sri Lanka, Volume I, (ed) Gunawardana, R. A. L. H., Pathmanathan, S., Rohanadeera, M., Central Cultural Fund, Ministry of Cultural and Religious Affairs.*
4. *Hussain Mahdi.(1953), The Rehla of Ibn Batuta, (ed), Baroda.*
5. *Imam.S.A, (194465) "CeylonIran Cultural Relationship", "Moors Cultural Home Souve nior, P.1013. Colombo.*
6. *Perera, B. J. (1951), The Foreign Trade and Commerce of Ancient Ceylon - The Ports of Ancient Ceylon. The Ceylon Historical Journal, Volume. I, No. 2, 109-119.*
7. *Tennent, J.E. (1859), Ceylon an Account of the Island.London ,2nd edition,vol, I.*

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றிகொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக 'இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்' அமைகின்றது.

இளங்கோ

யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, 'டிசே தமிழன்' என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார்.

நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.

கைதி 1056 : ரோய் ரத்தினவேல் அவர்களின் சுயசரிதை



ரோய் ரத்தினவேல் அவர்களின் இளமைக்காலப் புகைப்படம்

Image Source : www.royratnavel.com

மனவடுக்களின் காலம்

'*Prisoner #1056*' என்கின்ற இந்தச் சுயசரிதை நூலை இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம். முதலாவது பகுதி, ரோய் ரத்தினவேல் என்பவர் இலங்கையில் பெற்ற போர்க்கால வடுக்கள் பற்றியது. இரண்டாவது பகுதி கனடாவில் அவர் பெறுகின்ற அனுபவங்கள் குறித்தது.

இலங்கையில் பிறந்த ரோய் ரத்தினவேல் போரின் நிமித்தம் அனுபவித்தவை மிகுந்த துயரமானவை. ரோய் கொழும்பில் பிறந்தாலும், நாட்டு நிலைமைகளால் அவரது தாயாரோடும், தமையனோடும் பருத்தித்துறைக்கு அனுப்பப்படுகின்றார். தகப்பன் மட்டும் கொழும்பில் தங்கி

வேலை பார்க்கின்றார். அதுவரையும் கொழும்பில் ரோயின் குடும்பத்தார் வாடகைக்கு இருக்கும் இடம் ஒரு இலங்கை இராணுவ கேர்ணலின் வீடாகும்.

ரோய் பருத்தித்துறையில் இருக்கும்போது, இலங்கை இராணுவத்தின் ஒப்பரேஷன் லிபரேஷன் (1987) நடவடிக்கையின்போது பெற்றோரின் முன்னால் இராணுவத்தால் கைது செய்யப்படுகின்றார். அவ்வாறு கைது செய்யப்படும் ரோய் கப்பலின் மூலம் பூஸா சிறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றார். கிட்டத்தட்ட 2700 பேர் தன்னைப் போல கைது செய்யப்பட்டு காலில் சங்கிலியோடு கப்பலில் இருந்து காலி நகரின் தெருக்களில் சிறைக்கு இழுத்துக் கொண்டு செல்லப்பட்டதாக ரோய் குறிப்பிடுகின்றார். அங்கே அவருக்குக் கொடுக்கப்படும் இலக்கமே 'கைதி #1056'.

கிட்டத்தட்ட 2 மாதங்கள் சிறைச்சாலைக்குள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் ரோய், அன்றைய பாதுகாப்புத்துறை அமைச்சரான லலித் அத்துலத் முதலியின் மனைவியான சிறிமணியைச் சந்திக்கின்றார். தனது நிலவரத்தை, தங்களின் குடும்பத்து நண்பரான கேர்ணல் பெர்னாண்டோவிற்குச் சொல்லும்படி கூறுகின்றார்.

கேர்ணல் பெர்னாண்டோ அதற்கு முதல் வருடம் (1986) அவரது மகன்களில் ஒருவரை புலிகளின் ஒட்டுசுட்டான் தாக்குதலில் இழந்திருக்கின்றார். எனினும் அதை ஒருபுறம் ஒதுக்கிவைத்து கேர்ணல் கொழும்பிலிருந்து 3 மணித்தியாலங்கள்

ரோய் பருத்தித்துறையில் இருக்கும்போது, இலங்கை இராணுவத்தின் ஒப்பரேஷன் லிபரேஷன் (1987) நடவடிக்கையின்போது பெற்றோரின் முன்னால் இராணுவத்தால் கைது செய்யப்படுகின்றார். அவ்வாறு கைது செய்யப்படும் ரோய் கப்பலின் மூலம் பூஸா சிறைக்குக் கொண்டு செல்லப்படுகின்றார். கிட்டத்தட்ட 2700 பேர் தன்னைப் போல கைது செய்யப்பட்டு காலில் சங்கிலியோடு கப்பலில் இருந்து காலி நகரின் தெருக்களில் சிறைக்கு இழுத்துக் கொண்டு செல்லப்பட்டதாக ரோய் குறிப்பிடுகின்றார். அங்கே அவருக்குக் கொடுக்கப்படும் இலக்கமே 'கைதி #1056'.

பயணித்து காலிக்கு வந்து ரோயை சிறையிலிருந்தும் சித்திரவதைகளிலிருந்தும் மீட்கின்றார்.

யாழ் தீபகற்பத்தைக் கைப்பற்றும் இலங்கை இராணுவத்தின் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கை இந்திய அரசின் தலையீட்டால் இடை நடுவில் நிறுத்தப்பட்டதை நாம் அறிவோம். ரோய் ஜெயிலில் இருந்து வெளியே வரும்போது இலங்கை - இந்தியா உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுவிட்டது.

கேர்ணல், ரோயை சிறைச்சாலைக்குள் இருந்து காப்பாற்றியதற்கு முன்பு, 1983 இனப் படுகொலைகளின் போது ரோயின் தகப்பனை சிங்களக் காடையர்களிடம் இருந்து காப்பாற்றி பத்திரமாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்திருந்தார். 84 களில் வீட்டைவிட்டு ஓடிய (இங்கே வெளிப்படையாகச் சொல்லப்படாத போதும், அவர் இயக்கம் ஒன்றில் சேர்ந்திருக்கக்கூடும்) ரோயின் தமையன், பூஸா முகாமில் சிறை வைக்கப்படுகின்றார். தன் சொற்கேளாது

வீட்டைவிட்டு ஓடிய மகன் என்பதால் ரோயின் தகப்பன் அவரை சிறையிலிருந்து மீட்க விரும்பவில்லை. அப்போதும் இந்தக் கேர்ணலே ரோயின் தமையனை சிறைச்சாலையில் இருந்து வெளியே எடுக்கின்றார். பின்னர் தமையன் இந்தியாவிற்குப் படகில் சென்று, 1986 இல் டென்மார்க்கிற்கு போய்விடுகின்றார்.

ரோய் தொடக்கத்திலிருந்தே புலிகளின் ஆதரவாளராக தன்னைக் காட்டிக் கொண்டாலும், ரோயின் தகப்பன் புலிகளை எதிர்ப்பவராகவே இருக்கின்றார். ஒருவகையில் அவர்கள் அஹிம்சை வழியில் எல்லாவற்றையும் தீர்க்க விரும்பிய முந்தைய தலைமுறை எனச் சொல்லலாம். அத்துடன் புலிகள் ஏனைய இயக்கங்களைச் சேர்ந்தவர்களை சகோதரப் படுகொலை செய்ததால் ரோயின் தகப்பனுக்கு புலிகளைப் பிடிப்பதில்லை.

பூஸா சிறைச்சாலையில் இருந்து வந்த ரோயை, பெற்றோர் தொடர்ந்து இலங்கையில் வைத்திருக்க விரும்பவில்லை. அவரை ஏதேனும் நாட்டுக்கு பத்திரமாக அனுப்பிவிட விரும்புகின்றனர். ரோய் கனடா செல்வதற்காக, தகப்பன் கனடா தூதராலயத்துக்கு விண்ணப்பிக்கின்றார். ரோயை கனடா விஸாவுக்காய் நேர்காணல் செய்யும் கனடிய அதிகாரி, ரோயின் சித்திரவதை அடையாளங்களைக் காட்டச் சொல்கின்றார். அவர் தனது சட்டையைக் கழற்றிக் காட்டுகின்றார். ரோயிக்கு நடந்த சித்திரவதைகள் காரணமாக அவருக்கு எளிதாக விஸா கிடைத்துவிடுகின்றது.

1988 ஏப்ரல் மாதத்தில் ரோய் கனடாவில் புதிய வாழ்வைத் தொடங்க வருகின்றார். வந்த மூன்று நாட்களிலேயே இலங்கையில் இருந்து ஒரு பேரிடிச் செய்தி அவருக்கு வருகிறது. பருத்தித்துறையில் அவர்களின் வீட்டில் வைத்து ரோயின் தகப்பனை இந்திய இராணுவம் சுட்டுக் கொன்று விடுகின்றது. அடுத்த அறையை முன்னரே பூட்டிவிட்டதால், தாயார் எப்படியோ தப்பிவிடுகின்றார்.

சிறைச்சாலைக்குள் இலங்கை இராணுவத்தால் பெற்ற சித்திரவதைகளோடு, தகப்பனையும் இந்திய இராணுவத்துக்குப் பலிகொடுத்து, தனது மனவடுக்களுக்கோ, சித்திரவதைகளுக்கோ உரிய சிகிச்சையோ, ஆலோசனைகளோ பெறாமல் கனடாவின் குதிரை போல நில்லாமல் ஓடும் கடின வாழ்வுக்குள் தன்னை உடனேயே நுழைத்துக் கொள்கின்றார் ரோய்.

கனடா கனவு

250 பக்கங்கள் இருக்கும் இந்நூலில், இவை அனைத்தையும் 75 பக்கங்களுக்குள் ரோய் சொல்லிவிடுகின்றார். மிகுதிப் பக்கங்கள் கனடாவில் அவர் பெற்ற அனுபவங்களை விபரிப்பதாய் இருக்கின்றது. யாழில் தகப்பனின் இழப்போடு தவித்தபடி இருக்கும் தாயைக் கனடாவுக்கு அழைக்க அவர் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது. பதினெட்டு வயதில் ஒரு பதின்மனாக கனடாவில் வந்திறங்கி, இங்குள்ள பாடசாலையில் கல்வியைத் தொடர்ந்தாலும், அதைக் கைவிட்டுவிட்டு தொழிற்சாலையொன்றில் பணியாளராகவும், அலுவலகங்களைச் சுத்திகரிப்பவராகவும், அடுக்ககங்களில் பாதுகாவலனாகவும் ஒரே நேரத்தில் பல்வேறு தொழில்களைச் செய்யத் தொடங்குகின்றார்.

இவ்வாறான அடிநிலை வேலைகளைச் செய்தால், தன்னால் ஒருபோதும் பொருளாதாரத்தில் முன்னேறவோ, தாயைக் கனடாவுக்கு அழைக்கவோ முடியாது என்று உணர்ந்து, ஒரு நிரந்தர அலுவலக வேலையை ரோய் தேடத் தொடங்குகின்றார். எந்த அனுபவமோ, உரிய சுய விபரக் கோவையோ இல்லாது, ஒரு முதலீட்டு நிறுவனத்தின் 'மெயில் ரூமில்' ஒரு வேலையைப் பெற்றுக் கொள்கின்றார்.

இப்படி ஒரு அடிநிலைப் பணியாளராக வேலையைத் தொடங்கும் ரோய், எப்படி பல பில்லியன் மதிப்புள்ள அந்த நிறுவனத்தின் ஒரு பகுதிக்கு, பிற்காலத்தில் 'Executive Vice President' ஆக ஆகின்றார் என்பதுதான் மிகுதிக் கதை. ஒருவகையில் இது, 'அமெரிக்க கனவு' போல ஒரு குடியேற்றவாதியின் 'கனடா கனவு' எனச் சொல்லலாம்.

ரோயினது சித்திரவதை அனுபவங்கள், தகப்பனை இந்திய இராணுவம் பலியெடுப்பது ஆகியன மிகவும் துயரமான சம்பவங்கள். கணவரின் இறந்த உடலோடு பல மணித்தியாலங்கள் தனித்து இருந்தது, பின்னாட்களில் நிரந்தர உளவடுவாகியதால், 'ஸ்கிரினோபோபியா' எனும் நோய்க்கு உள்ளான அந்தத் தாயாரின் அனுபவங்களையும் இந் நூலில் நாம் வாசிக்கின்றோம். ரோயையும் இந்தத் துயர நினைவுகளும், அவர் அனுபவித்த சித்திரவதைகளும் கோபக்காரராக மாற்றி, உளவியல் ஆலோசனைகளைப் பெறச் செய்வதையும் விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

தகப்பன் இறந்த துயரை தனக்குள் அடக்கிக் கொண்ட ரோய், கிட்டத்தட்ட 14 வருடங்களின் பின் (2002) பருத்தித்துறைக்குச் செல்கிறார். அங்கு தகப்பன் கொல்லப்பட்ட வீட்டைப் (அந்த வீட்டை ரோயின் தாய் கொஞ்சக் காலத்திலேயே வேறொருவருக்கு விற்று விடுகின்றார்) பார்த்து, மண்டியிட்டு தகப்பனுக்கு உரிய பிரியாவிடை கொடுத்து சில காலத்தின் பின்னரே அவரால் நெஞ்சை அடைத்துக் கொண்டிருந்த துயர நினைவுகளிலிருந்து ஓரளவுக்கு விடுதலைபெற முடிகின்றது.

இரு உலகுகளின் இணைவும் விரிசலும்

ரோய் கனடாவுக்கு வந்தவுடன் ஏனைய குடியேற்றவாதிகளைப் போல மெதுவாகத்தான் மேலே ஏற வேண்டியிருக்கின்றது. ஆனால் அவருக்கு விரைவில் நல்ல மனிதர்கள் அறிமுகமாவது, அவரது காதலி அவருக்கு வேலையில்லாத காலங்களில் உதவுவது போன்ற நிகழ்வுகள் விதிவிலக்கானவை.

ரோயினது சித்திரவதை அனுபவங்கள், தகப்பனை இந்திய இராணுவம் பலியெடுப்பது ஆகியன மிகவும் துயரமான சம்பவங்கள்.

இது எல்லா குடியேற்றவாதிகளுக்கும் எளிதில் சாத்தியமாவதில்லை. முக்கியமாக எல்லா ஆவணங்களையும் அடையாளமின்றி அழித்துவிட்டு அகதிகளாக வந்தவர்களுக்கு, கனடாவில் இது எளிதாக நடப்பதில்லை. தனது சொந்த அனுபவமென ரோய் இதனைச் சொல்லியிருந்தால் பரவாயில்லை; கனடாவை ஒரு 'சொர்க்கபுரியாக' அவர்

கட்டமைப்பது, வாசிக்கும் எம்மை அவரோடு முரண்பட வைக்கின்றது.

அவர் வேலையின் நிமித்தம், வெள்ளையினத்தவர்கள் நிரம்பியிருக்கும் கனடாவின் மத்திய பகுதிகளுக்கும், சிற்றூர்களுக்கும் பயணித்ததால் அவரது அனுபவங்கள் அவ்வகையில் அமைந்திருக்கக் கூடும். எனினும் அவருக்குள் அவரையறியாமலே இங்குள்ள பல தமிழர்களைப் போல, தேசிய நீரோட்டத்துக்குள் குதிக்கும் கனடா வலதுசாரியினர் போன்ற 'பெருமை' வந்துவிடுகின்றது. எப்போதும் இங்கு வெளியாகும் 'நாஷனல் போஸ்டையே' வாசிப்பேன் என்று அவர் சொல்லும்போதே அவரின் அரசியல் எந்தப் பக்கம் உள்ளது என்பது விளங்குகின்றது (அதற்காக கனடாவின் ஏனைய அரசியல் கட்சிகள் எல்லாம் சிறப்பானது எனச் சொல்லவரவில்லை). இந்த நாடு ஒரு சிறந்த நாடு; நீங்கள் கடினமாக உழைத்தால் உங்களுக்குரிய தடைகளைத் (இனவாதம், நிற வித்தியாசம்) தாண்டி உங்கள் கனவுகளைச் சாத்தியப்படுத்தலாம் என்று தொடர்ந்து வலியுறுத்தும் 'கப்பிட்டலிஸ்ட்களின்' கனடா கனவையே ரோயும் வெவ்வேறு பகுதிகளில் ஒரே குரலில் ஒலித்தபடி இருக்கின்றார்.

உலகில் பல நாடுகளை விடவும் கனடா ஒரு சிறந்த நாடென்பதில் எனக்கும் மாற்றுக் கருத்தில்லை. இலங்கையில் இருக்கும் பேசும்/ எழுதும்/ நடமாடும் சுதந்திரத்தைவிட பன்மடங்கு சுதந்திரம் கனடாவில் இருப்பதை, ரோயைப் போலவே நானும் உணர்கிறேன் என்பது உண்மைதான். ஆனால் கனடா வாழ்வதற்கு



Image Source : sangam.org

நல்ல நாடென்றால், 'எல்லோருக்குள்ளும் இனவாதம் இருக்கின்றது. எனவே வெள்ளையர்களை மட்டும் இனவாதிகள் எனச் சொல்லி எங்கள் பிள்ளைகளை வளர்க்கக் கூடாது' என்று நமக்கு வலியுறுத்திச் சொல்லும் ரோய், கனடாவில் இந்த வெள்ளையர்கள் இங்கிருக்கும் ஆதிக்குடிகளுக்கு என்ன செய்தார்கள்/ செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதைச் சொல்வதற்கும் நிறைய மினக்கெட்டிருக்க வேண்டும். அதைப் பற்றிய சிறு சலசலப்பைக் கூட இந் நூலில் காணவில்லை. கனடா, அமெரிக்கா

ரோய் ரத்தினவேல்

Image Source : tamilculture.com

விபரித்தவை உட்பட) கடந்தகால வரலாற்றைச் சொல்லாமல், நினைவூட்டாமல் இலங்கை ஒரு சிறந்த நல்லிணக்க நாடு என்று சொன்னால் வரலாறு நம்மை மன்னிக்காது அல்லவா? அவ்வாறே கனடாவை அதன் சிறப்புகளுக்காகப் போற்றும் போது, அதன் கீழ்மைகளையும் நினைவூட்ட வேண்டும்.

அண்மையில் கூட ஆபிரிக்காவிலிருந்து வந்த அகதிகளை உரிய வசதிகள் இல்லாது தெருக்களில் வாழவிட்டு நாமும், இந்த அரசும் அவர்களுக்குச் செய்த அவலத்தையிட்டு வெட்கித் தலைகுனிய வேண்டுமல்லவா? ஆகவேதான் கனடா ஒரு 'சொர்க்கபுரி' என மட்டும் கட்டமைப்பதைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும் எனச் சொல்கின்றேன். இந்த நூலை, ரோய் தனது அனுபவங்களைச் சொல்வதோடு மட்டும் நிறுத்தியிருந்தால் இதையெல்லாம் பேசியிருக்க வேண்டியிருக்காது. பெரும்பான்மைக் கனடியர்களை உச்சி குளிரச் செய்வதற்காக அவர் எழுதியிருக்கும் 'கனடா அனுபவங்களை' தான் நாம் இடைமறிக்க வேண்டியிருக்கின்றது.

உள்ளிட்ட வட அமெரிக்க நாடுகளில் 'கட்டமைக்கப்பட்ட நிறவாதம்' தனி மனிதர்களை நீண்டகாலமாய் பாதிக்கின்றது எனும் உண்மையை ரோய் எளிதாய்க் கடந்து போகவும் செய்கின்றார். ரோய் கனடா வந்தபோது உணர்ந்த இனவாதச் சொற்களைத்தான், இந்த நாட்டில் பிறந்த அவரது பிள்ளையும் இப்போது கேட்கின்றது என்றால், இந்த நாடு ஏன் இன்னும் இவ்வாறான விடயங்களில் முன்னேறாமல் இருக்கின்றது என்றும் அவர் யோசிக்க வேண்டும் அல்லவா? ஆடைகளில் படும் அழுக்கைப் போல எளிதாக இவற்றைத் தட்டிக் கழித்து முன்னேறி விடவேண்டும் என்று ரோய் சொல்வது அநியாயமல்லவா?

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரோடு நல்லிணக்கம் செய்து நிம்மதியாக வாழ்கின்றார்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படியெனில் சிங்கள் மக்கள், தமிழ் மக்கள் உள்ளிட்ட சிறுபான்மையினருக்குச் செய்த (ரோய்

ஓரிடத்தில், 'நான் மிகப்பெரும் விடுதலையை உணர்கிறேன். அதனை கனடா தந்திருக்கின்றது (*I'm a free man*)' என்கிறார். இன்னொரு இடத்தில், 'கனடாவில் எப்போதும் நாம் போரிட்டுக் கொண்டிருக்க வேண்டும்' என்கிறார். 'போரிடுவதன் மூலமே நாம் வாழ்வின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ளலாம்'

எனவும் சொல்கின்றார். எனது கேள்வி என்னவென்றால், ஒருவர் விடுதலை அடைந்தபின் எதற்காகப் போராட வேண்டும்? ஏதோ ஒரு விலங்கு இருப்பதால்தானே தொடர்ந்து நாம் போராட வேண்டியிருக்கிறது? அப்படியெனில், எப்படி ஒருவர் தன்னை விடுதலையானவராக உணர்கிறேன் என்று எழுத முடியும்?

ரோய், அவரது முப்பது வயதுக்குள் 'மியூட்சுவல் பண்ட்களில்' முதலிட்டு மில்லியனர் ஆகிவிட்டேன் என்கிறார். அதற்குப் பிறகு சில வருடங்களில் உலகப் பொருளாதார வீழ்ச்சியில் தனது வங்கிக் கணக்கு வீழ்ச்சியடைந்துவிட்டது என்றும் குறிப்பிடுகின்றார். அதனால் ஏற்பட்ட மன நெருக்கடிகளையும், வாழ்வாதாரச் சிக்கலகளையும் கூட விரிவாக விபரிக்கின்றார். மேலும் அவர், ஏணிப்படிகளில் ஒவ்வொரு உயரங்களாக மேலே ஏறும்போதும் பல்வேறு போராட்டங்களை அடுத்தே உயர்நிலைகளை அடைகின்றார். ஒருவகையில் பார்த்தால், ரோய் எப்போதும் போராடிக் கொண்டே - பொருளாதாரம் உட்பட - இருக்கின்றார். அப்படியெனில், 'கனடா தனக்குத் தந்த விடுதலை' என்று இவர் சொல்வதன் அர்த்தம் என்ன என்றே எமக்குக் கேள்விகள் எழுகின்றன.

'இந்த வாழ்க்கையில் துன்பம் தவிர்க்க முடியாதது' என புத்தர் கூறியதை வாசிப்பவர்க்கு ரோய் நினைவூட்டுகின்றார். புத்தர் கூறிய 'துன்பம்' ரோய் சொல்லும் பொருளாதாரத் துன்பம் மட்டுமல்ல. அவர் கூறிய 'துன்பம்' வயதாகுதல், நோயுறுதல், மரணமுறுதல் என்ற விரிந்த தளத்தில் செல்லக் கூடியது. அந்தத் துன்பத்தை ஒருபோதும் தவிர்க்க முடியாது; ஆனால் அதன் வலியைக் குறைக்க முடியும் என்றே அவரடைந்த ஞானத்தின் மூலம் புத்தர் நமக்குப் போதிக்க விழைந்தார். பணம் மட்டுமே வேண்டும் என கடைசிக்காலம் வரை ஓடியோடி நம் வாழ்வைத் தொலைக்கக் கூடாது என்றும் கூட அவர் போதித்தார்.

ரோய் ரத்தினவேல் என்ற பெயரோடு இந்த நூலைக் குறித்துக் கேள்விப்பட்ட போது இந்தப் பெயரை எங்கேயோ முன்பு அறிந்திருக்கிறேன் எனத் தோன்றியது. கொஞ்சம் நினைவைக் கிளறியதில், இவர் பலமான ஒரு நிறுவனமான 'கனடிய தமிழ் காங்கிரஸின்' உபதலைவராக இருந்திருக்கின்றார் என்பது புலப்பட்டது. ஈழ இறுதி யுத்த காலத்தில் இனத் துவேசத்தோடு நமது போராட்டத்தைப் பற்றி எழுதிய 'நாஷனல் போஸ்டில்' அக் கருத்துகளை மறுத்து எழுதவும் செய்திருக்கின்றார் என்பதையும் அறிய முடிந்தது.

கனடிய தமிழ் காங்கிரஸில் இருந்து, சில பொது அரங்குகளில் இலங்கை அரசுக்கு எதிராக இறுதி ஈழ யுத்த காலத்தில் பேசியதால், இலங்கை அரசால், இலங்கைக்குச் செல்லத் தடை செய்யப்பட்ட சிலரில் இவரின் பெயரும் இருந்தது (இப்போதும் இருக்கின்றதா தெரியவில்லை). ரோயின் உண்மையான பெயர் வேறு. அதை இணையத்தில் தேடினால் கிடைக்கும். அவரே அந்தப் பெயரை இங்கே பதிவு செய்துமிருக்கின்றார் என்பது வேறு விடயம். தன்னை இலங்கை அரசு தடை செய்தது தனக்குப் பெருமை



ரோய் ரத்தினவேல் அவர்கள் தனது சுயசரிதை நூலுடன்
Image Source : sangam.org

ஒருவரின் வெற்றிக்கதை (அல்லது அவ்வாறாக நம்புகின்ற) எல்லோரினதும் கதையாகாது; எதையும் பொதுமைப்படுத்துவது ஆபத்தானதாகவே முடியும்.

என்கிறார் ரோய். இலங்கை அரசுக்கும், நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதை விட, யாரை நாட்டுக்குள் அனுமதிக்கக் கூடாது என்பதுதான் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இப்போது கனடிய அமைச்சராகிவிட்ட ஹரி ஆனந்தசங்கரிக்கும் இலங்கை செல்வதற்கான பயணத் தடையை அந்த அரசு நீண்டகாலமாக விதித்து வைத்திருக்கின்றது. ஹரி தொடர்ச்சியாக, இலங்கை அரசு செய்த தமிழினப் படுகொலைகளைப் பற்றி பல்வேறு தளங்களில் பேசிக் கொண்டிருக்கின்றார் என்பது மட்டுமே இதற்குரிய காரணம்.

ரோயின் இந்தப் புத்தகத்தை யாருக்காவது வாசிக்கப் பரிந்துரைப்பேனா என்றால், நிச்சயம் செய்வேன் என்றே சொல்வேன். இதில் சொல்லப்பட்ட அனுபவங்கள் முக்கியமானவை. ஆனால் ஒரு தனிமனிதரின் அனுபவம் என்று மட்டுமே நினைத்து வாசியுங்கள் என்றே அவர்களுக்கு அறிவுறுத்துவேன். இலங்கையில் நடந்த போர், கனடாவில் புலம்பெயர்ந்தோர் பெற்ற அனுபவங்கள் என்பவற்றை இங்கே பிறந்த அடுத்த தலைமுறையினர் அறிய, வாசிக்கப் பரிந்துரைப்பேன்.

என் நெருங்கிய உறவினர் ஒருவரின் வயதை ஒத்தவரே ரோய். ரோய் கனடாக்கு வந்து ‘உயர்ந்தது’ ஒருவகை என்றால், என் நெருங்கிய உறவினரைப் போன்றவர்கள் உக்கிரேன் போன்ற பனி நாடுகளில் சிக்கி, கனடாவின் வடபகுதியில் ஆவணங்களின்றி அகதியாய் வந்திறங்கி, உணவில்லாது இரண்டு நாட்களாய் இரயிலில் பயணித்து, குளிர்காலத்தில் ரொறொண்டோவில் வந்திறங்கியமை இன்னொரு வகை. அவ்வாறு ஒவ்வொருவரும் கனடா வந்த கதைகளும், அந்நாட்டில் அவர்கள் தத்தளித்து எழுந்த கதைகளும், இன்னமும் தத்தளித்துக் கொண்டிருக்கும் கதைகளும் பல்லாயிரம் உண்டு.

ரோய் இந்த நூலின் பிற்பகுதியில் இந்தியா - இலங்கையில் தலித்துகளிடமும், அமெரிக்கா - கனடாவில் கறுப்பர்களிடமும், உங்களுக்குத்தான் இப்போது படித்து, கடினமாக வேலை செய்து முன்னேற ஒரு தடையும் இல்லையே, பிறகேன் இந்த நாட்டை நீங்கள் எப்போதும் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றீர்கள் எனும் கருத்தைத் திணிக்கிறார்.

ஒருவரின் வெற்றிக்கதை (அல்லது அவ்வாறாக நம்புகின்ற) எல்லோரினதும் கதையாகாது; எதையும் பொதுமைப்படுத்துவது ஆபத்தானதாகவே முடியும். வித்தியாசங்களைப் புரிந்து கொள்ள மறுப்பது, பிறரின் குரலை நசுக்குவதைப் போன்றதாகும். இதைத்தான் இந்த முதலாளித்துவ நாடுகள் ‘அமெரிக்க கனவு’ என்று சொல்லி, நம்மை உசுப்பேற்றிக் கொண்டிருக்கின்றன.

இந்தக் குரலை ரோயின் பிற்கால கனடா அனுபவங்களில் அடிக்கடி கேட்பது சலிப்பூட்டுகின்றது. அதைத் தவிர்த்திருந்தால் இந்த நூல் இன்னும் சிறப்பானதாக ஆகியிருக்கும். ஆனாலும் இதன் முதற் பகுதியில் வரும் போர்க்கால நினைவுகளாலும், ரோயின் தனிப்பட்ட கனடா அனுபவங்களினாலும் இந்த நூல் ஒரு முக்கியமான நூல் ஆகுகின்றது என்பதில் எந்த மாற்றுக் கருத்துமில்லை.

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம், மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல. சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.

● நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

பாட்டாளி வர்க்க, விடுதலைத் தேசியப் புரட்சிகள்

பிரஞ்சுப் புரட்சியை விளக்கும் ஓவியம்

Image Source : www.thoughtco.com

மிக நீண்டநெடிய காலச் சுழற்சியுடன் இயங்கியவாறுள்ள இந்தப் பூமிப் பந்தின் மிகக் குறுகிய இலட்சம் வருடங்களுக்கான வாழ்வைப் பெற்ற ஹோமோ சேப்பியன்ஸ் எனப்படும் மனிதர்களான நாம் சில ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் பூமிப் பந்தின் அனைத்துத் திசைகளிலும் பரந்து வியாபித்து ஆட்சி செலுத்தும் சக்தியாக ஆகியிருந்தோம். மிகச் சில நூற்றாண்டுகளில் தோற்றம்பெற்று விருத்தியடைந்த மூலதனம் பூவுலக நாடுகள் அனைத்தையும் ஒரு கிராமம் போல ஒருங்கிணைத்துக் கொண்டது. மூலதன விருத்தியின் நல்ல

பல அம்சங்களுக்கு அப்பால், அதன் அபகரிப்பு வாயிலாக வாழ்வியல் கேடுகளை வளர்த்து வரும் ஏகாதிபத்தியத் திணையை முறியடித்து உலகம் பொதுவுடமை வாழ்நெறிக்கு மாற்றம்பெற என 1917 ஒக்ரோபரில் ருஷ்யப் புரட்சி வாயிலாக உதயமான சோவியத் யூனியன் மூலமாக எடுக்கப்பட்ட எத்தனங்கள் சில தசாப்தங்கள் நீடித்திருந்து 1991 ஆம் ஆண்டில் வீழ்த்தப்படலாயிற்று. இன்னமும் சமத்துவ நெறியைக் கட்டியெழுப்பும் முயற்சியில் ஒவ்வொரு தேசமும்!

கடந்த மாதம் (செப்ரம்பர், 2024) இலங்கையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியுள்ள 'தேசிய மக்கள் சக்தி' (தே.ம.ச.) தனக்கான ஒரு வழிமுறை ஊடாக எமது தேசத்தை சமத்துவம் நோக்கித் திசைமுகப்படுத்த முயல்வதாக அதனது கொள்கைப் பிரகடனத்தில் தெரிவித்துள்ளது. முன்னதாக ருஷ்ய, சீன, கியூபப் புரட்சிகள் ஆயுதப் போராட்டம் வாயிலாக சோசலிசப் பாதையை முன்னெடுத்தது போல 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் , 1987 - 1989 ஆகிய இரு தடவைகளில் முயற்சிக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் வாயிலாக மாற்றத்தைச் சாத்தியப்படுத்த எண்ணியிருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்ற அரசியல் கட்சியின் தலைமையில் கட்டியெழுப்பப்பட்ட வெகுஜன அமைப்புத் தான் தே.ம.ச. (என்.பி.பி.). இன்றைய தே.ம.ச. மீது நம்பிக்கையீனத்தையும் கடும் விமரிசனங்களையும் முன்வைப்பவர்கள் ஜே.வி.பி. இன் நீடிப்பாக இந்த அமைப்பை இனங்காணும் தவறுடன் உள்ளனர். அரைநூற்றாண்டு காலம் இயங்கிய ஜே.வி. பி. தனக்கான சொந்த அனுபவங்களின் பேறாக மட்டுமன்றி மாறிவரும் உலகச் செல்நெறிக்கு அமைவாகத் தனது வேலைப் பாணியையும் ஸ்தாபனக் கட்டமைப்பையும் மாற்றிக்கொண்டுள்ளது என்பதனைக் கவனங்கொள்வது அவசியம்.

இத்தகைய பண்புரீதியான மாற்றம் ஏற்படக் காரணமாகும் வண்ணம் உலகப் புரட்சிச் செல்நெறியில் ஏற்பட்ட மாற்றத்துக்கான வரலாற்றுத் திருப்புமுனை முழுமையாகக் கண்டு காட்டப்படுவதில்லை. சோவியத் யூனியனிலும் மக்கள் சீனத்திலும் ஏற்பட்ட (முறையே வலது, இடது) தவறுகளைத் திருத்தும் வகையிலான பண்பு மாற்றத்தை '21 ஆம் நூற்றாண்டு சோசலிசம்' என தென்னமெரிக்க மார்க்சியர்கள் அடையாளப்படுத்துகின்றனர். இரு பெரும் தேசங்களும் ஜனநாயக - மத்தியத்துவக் கோட்பாட்டை பிரயோகிப்பதாகக் கூறிய போதிலும் கட்சி மேலிட மையத்தின் சர்வாதிகாரமே செயற்பாட்டில் இருந்து (மேலிருந்து கீழ்நோக்கிய திணிப்புக்கு அப்பால்) வந்தது; ஜனநாயக அடிப்படையில் 'கீழிருந்து மேல் நோக்கிய' கொள்கை வகுப்பும் நடைமுறையும் கையாளப்படாமையே சோவியத் யூனியனதும் மக்கள் சீனத்தினதும் பின்னடைவுகளுக்கான அடிப்படைக் காரணம் என தென்னமெரிக்க மார்க்சியர்கள் சுட்டிக்காட்டுவர். இதற்கப்பால் சமூக மாற்றப் புரட்சிகர சக்திக்கு உரியதாக ஏற்பட்ட பண்பு ரீதியிலான மாற்றம் பற்றிப் போதிய கவனத்தை அவர்கள் வெளிப்படுத்தத் தவறிய போதிலும் இந்த அடிப்படை மாற்றப் பிரயோகத்துடன் தத்தமது விடுதலைத் தேசிய அரசியல் செல்நெறியில் இயக்கம் கொள்வதனால் தென்னமெரிக்க நாடுகள் பலவும் குறிப்பிடத்தக்க சாதனைகளை இன்று வெளிப்படுத்தி வருகின்றன.

தே.ம.ச. இனை வழிநடாத்தும் ஜே.வி. பி. உம் கூட வரலாற்றுப் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தை முழுமையாக உள்வாங்கவில்லை; இந்த மாற்றத்துக்கு உரியதான அரசியல் சாராம்சத்தை

விளங்கிக் கொள்ளவில்லை. அதேவேளை 21 ஆம் நூற்றாண்டு சோசலிச முன்னெடுப்பு என்ற பொருளாதாரக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படுகின்ற மாற்றியமைத்தலைச் செயலாக்க இயலும் என்ற நம்பிக்கையுடன் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றுள்ளனர். முந்திய ஜே.வி.பி. இன் வறட்டுத்தனமான நிலைப்பாடுகளைக் கைவிட்டு அணிசேராக் கொள்கைப் பிரயோக அடிப்படையில் அனைத்து நாடுகளுடனும் நட்புறவு கொள்ளும் முயற்சியில் தே.ம.ச. ஈடுபடத் தொடங்கியுள்ளது. புவியரசியலுக்கான ஒரு கூர்முனையாகவுள்ள இலங்கையை சீனத்தின் சார்பில் முன்னெடுக்க முனைந்து மற்றைய இரு பிரதான வல்லரசுகளான இந்தியாவையும் ஐக்கிய அமெரிக்காவையும் பகைக்கும் தவறினை இவர்கள் மேற்கொள்வர் எனும் வலதுசாரி அரசியல் ஆய்வாளர்களது ஆரூடம் இவ்வகையில் பொய்ப்பிக்கப்படவுள்ள வாய்ப்பே நிலவுகிறது!

அதற்காக ஐக்கிய அமெரிக்கா - இந்தியா என்பன ஒன்றிணைந்து செயற்படும் ஏகாதிபத்தியத் திணையானது இவர்களது இடதுசாரித்துவ முன்னெடுப்பை தொடர்ந்து அனுமதிப்பார்கள் என்பதற்கில்லை. இவர்களது வெற்றியைச் சாத்தியமற்றதாக ஆக்கித் தமக்கு உவப்பான தரப்பை அரியாசனமேற்ற அவர்கள் விரும்பிய போதிலும் மக்களின் கோபக் கொந்தளிப்புக்கு இடமளித்து இடைக்கால மாற்றம் ஏற்பட வாய்ப்பளித்துள்ளனர்; 2019 ஆம் ஆண்டிலும் இது போன்று மக்கள் உணர்வுக்கு இடமளித்ததன் வாயிலாகச் சந்தர்ப்பவாத மொட்டுக்கட்சி ஆட்சிப்பீடமேற அனுமதித்த போதிலும் இரண்டு வருடங்களிலேயே அதனை விரட்டியடித்தனர் என்பது கவனிப்புக்கு உரியது. மக்கள் நலத்தைவிடவும் தமக்கான கொள்ளையடித்தலில் அதிக

பாட்டாள வர்க்கம் முன்கையெடுக்கும் சமூக மாற்றச் செயலொழுங்கில் இருந்து தேசங்கள் சமத்துவத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்தப் புதிய மாற்றம் வேறுபட்ட அடிப்படைகளைக் கோண்டது; இது உலகுக்கோரு புதுமை. இவ்வகையில் ஏற்பட்டுள்ள அடிப்படையான அரசியல் வடிவ மாற்றத்தைக் கவனங்கோள்ளாமல் தேசிய இனப்பிரச்சினை என எதுவும் இல்லையேனப் பாராமுகமாக இயங்கும் இடம் அதனது வீழ்ச்சிக்கான தோடுபோறியில் தோடங்குவதன் பாற்பட்டதாகும்.

ஆர்வம் காட்டிய மொட்டுக் கட்சி போல தே.ம.ச. இல்லை; ஊழல் மோசடிகளுக்கு இடமளிக்காமல் புதிய உலக ஒழுங்குக்கு உட்பட்ட வரையறைக்குள் செயற்பட்டுக் கொண்டே இலங்கைப் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் உறுதியுடன் உள்ள தே.ம.ச. அதற்கமைவான தெளிந்த கொள்கைப் பிரகடனத்தையும் ஸ்தாபனக் கட்டமைப்பையும் கொண்டுள்ளது. மாற்றத்துக்கான பற்றுறுதி உடன் இளைஞர்கள் - மாணவர்கள் இடையிலும் கிராமிய மக்களிடையிலும் நீண்ட காலமாக அரசியல் களமாடி வருகின்ற ஒரு அமைப்பின் தலைமையில் தே.ம.ச. இயங்கி வருகிற காரணத்தால் மொட்டுக் கட்சியைப் போல பொலுபொலுவென இவர்கள் வீழ்ந்துவிட மாட்டார்கள்.

அதேவேளை, தமது வீழ்ச்சிக்கு உரிய ஒரு இடைவெளியை விட்டுவைத்துள்ளனர்; மாற்றத்துக்கான புதிய பொருளாதார உலக ஒழுங்கு என்பது விடுதலைத் தேசங்கள் தம்மிடையே கொண்டும் கொடுத்தும்

ஊடாடியபடி ஏகாதிபத்தியப் பிணைப்பைத் தகர்ப்பதுடன் தொடர்புடையது. விடுதலைக்கான இந்த மாற்றத்தை 1994 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிக்கா வெற்றியீட்டியதன் வாயிலாக (அதுவரை நிலவிய யுத்த வெறிக்குரிய ஐ.தே.க. ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததன் மூலமாக) ஏற்பட்ட மாற்றத்துடன் ஒப்புவமையாக்கிப் பார்க்கின்றவர்கள் இருக்கின்றார்கள். பூகோளமயமாகும் அன்றைய உலக ஒழுங்குப் பிரகாரம் திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தி ஏகாதிபத்தியத்தின் வேட்டைக்காடாக எமது நாட்டைக் கொள்ளையடிக்க 1977 ஆம் ஆண்டு முதலாக அனுமதித்த ஐ.தே.க. அரசை முறியடித்து ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அத்தகைய பொருளாதார உறவை மாற்றுவதற்கு எத்தகைய முயற்சியையும் மேற்கொள்ளத்தக்க வாய்ப்பைப் பெற்றிருக்கவில்லை. இன்றும் மிக மோசமான சந்தர்ப்பவாத முன்னெடுப்பில் மக்கள் விரோத சக்திகளுக்கு உதவுவதைப் போலவே அப்போதும் ‘மனித முகத்துடன் கூடிய உலகமயமாதல்’ பற்றியே அக்கறைப்பட்டார். மாறாக, டொலரின் மேலாதிக்கம் தகர்க்கப்பட்டு தேசங்கள் இடையே சமத்துவ ஊடாட்டத்தை வளர்க்கும் வகையில் இரு தரப்பினரும் ‘வெற்றி - வெற்றி’ எனத்தக்க வர்த்தக உறவைச் சாத்தியப்படுத்துகிற வகையில் ஏற்பட்டு வருகின்ற புதிய உலக ஒழுங்கு இன்று ஏற்பட்டு வருகிறது; இதனுடன் ஒப்பிடத்தக்கதாக 1970 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றம் அமைந்திருந்தது. அப்போது அணிசேராக் கொள்கையுடன் இயங்கிய, முன்னதாக ஒடுக்கப்பட்ட காலனித்துவ நாடுகளாக இருந்து விடுதலை பெற்ற எமது தேசங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தை முன்னெடுத்தன. அதனுடனேயே இன்றைய இருப்பை ஓரளவேனும் ஒப்பிட இயலும். அந்தச் சுயசார்புப் பொருளாதார முன்னெடுப்புக்கு சோவியத் யூனியன் பின்னணிப் பலம் வழங்கியது - இன்றைய தேசங்கள் இடையே சமத்துவ எத்தனிப்புக்கு மக்கள் சீனம், ருஷ்யா என்கிற இரு ஏகாதிபத்திய எதிர்ப்புத் தேசங்களின் தலைமையிலான ‘BRICS’ அமைப்பு வலுச் சேர்ப்பதாய் உள்ளது!

பாட்டாளி வர்க்கம் முன்கையெடுக்கும் சமூக மாற்றச் செயலொழுங்கில் இருந்து தேசங்கள் சமத்துவத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கும் இந்தப் புதிய மாற்றம் வேறுபட்ட அடிப்படைகளைக் கொண்டது; இது உலகுக்கொரு புதுமை. இவ்வகையில் ஏற்பட்டுள்ள அடிப்படையான அரசியல் வடிவ மாற்றத்தைக் கவனங்கொள்ளாமல் தேசிய இனப்பிரச்சினை என எதுவும் இல்லையெனப் பாராமுகமாக இயங்கும் இடம் அதனது வீழ்ச்சிக்கான தொடுபொறியில் தொடங்குவதன் பாற்பட்டதாகும். ஏற்பட்டு வந்த வரலாற்றுச் செல்நெறி மாற்றத்தைப் புரிந்து கொள்வதன் வாயிலாக இதன் பாரதூரத் தன்மை குறித்துக் காண இயலும்!

சுக்கானும் மாற்றப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய பாரிஸ் கொம்யூன்

முதலாளித்துவம் உலக நாடுகள் அனைத்தையும் மூலதனத்தின் ஆளுகைக்குள் உட்படுத்தியது என்றால் அதற்கான முழுமைப்பட்ட ஆட்சி வடிவத்தை ஏற்படுத்திக் கொண்டது 1789 ஆம் ஆண்டில் வெற்றிபெற்ற பிரான்சியப் புரட்சி வாயிலாகத் தான். தொடர்ந்தும் வர்க்கப் போராட்டத்தின் குவிமையமாக பிரான்ஸ் இருந்தது. அங்கு முதலாளித்துவ ஆட்சி எதிர் நோக்கிய அரசியல் நெருக்கடிகளுடன் பாட்டாளி வர்க்கம் தனக்கான அதிகாரத்தை வென்றெடுக்கும் வர்க்கப் போராட்ட வளர்ச்சியில் 1848

பிரித்தானியாவுக்கு நாடு கடத்தப்பட்ட பின்னர் அங்கு மேற்கொண்ட ஆய்வு அடிப்படையில் மூலதனம் நூலை கார்ல் மார்க்ஸ் எழுதியிருந்தார்; ஜேர்மன் மொழியில் எழுதப்பட்ட அந்த நூலின் முதலாம் பாகம் வர்க்கப் போராட்டக் கொந்தளிப்புடன் அதுவரை இருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் எந்த மொழிகளிலும் அல்லாமல் ருஷ்ய மொழியிலேயே முதன் முதலில் மொழிபெயர்க்கப்பட்டமை புரட்சி அலை கிழக்கு நோக்கி நகர்வதனை உணர்த்துவதாக அமைந்தது.



Image Source : www.flipkart.com

ஆம் ஆண்டு முதலாக முன்னெடுத்து வந்த போராட்ட அனுபவங்கள் குறித்து 'பிரான்சில் உள்நாட்டுப் போர்' என கார்ல் மார்க்ஸ் முக்கியத்துவமிக்க நூலொன்றை எழுதி இருந்தார். அத்தகைய வர்க்கப் போராட்ட முனைப்புடன் இருந்த 1848 ஆம் ஆண்டில் தான் மார்க்சும் ஏங்கெல்சும் இணைந்து எழுதிய 'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' வெளிவந்தும் இருந்தது. பின்னர் ஏற்பட்ட பாட்டாளி வர்க்கப் புரட்சிகளது அனுபவங்கள் 'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' இல் மாற்றங்களைக் கோரிய போதிலும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கு உரிய அடிப்படை நூலென்ற வகையில் அதன்மீது தலையீடு செய்யாமல் புதிய பதிப்புகளுக்கான முன்னுரைகளிலேயே தேவைப்பட்ட விருத்திகளைக் குறிப்பிட்டு வந்தனர். பாரிய திருத்தம் ஒன்றுக்கான அவசியம், 1871 ஆம் ஆண்டில் பாட்டாளி வர்க்கம் பாரிஸ் நகரைக் கைப்பற்றி இரண்டு மாதங்களுக்கு மேலாகத் தனது ஆட்சியைக் கொண்டு நடாத்திய 'பாரிஸ் கம்யூன்' வீழ்ச்சியினால் ஏற்பட்டிருந்தது. ஏற்கனவே நிலவி வந்த சுரண்டும் வர்க்கத்துக்கு உரியதான அரசு யந்திரத்தைத் தகர்த்தெறிந்து தனக்கான புதியதொன்றைப் பாட்டாளி வர்க்கம் உருவாக்க வேண்டும் என்பதையும் 'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' இன் புதிய பதிப்பைக் கண்டபோது பதிப்புரையிலேயே வலியுறுத்தி இருந்தனர்.

பிரித்தானியாவுக்கு நாடு கடத்தப்பட்ட பின்னர் அங்கு மேற்கொண்ட ஆய்வு

அடிப்படையில் 'மூலதனம்' நூலை கார்ல் மார்க்ஸ் எழுதியிருந்தார்; ஜேர்மன் மொழியில் எழுதப்பட்ட அந்த நூலின் முதலாம் பாகம் வர்க்கப் போராட்டக் கொந்தளிப்புடன் அதுவரை இருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளின் எந்த மொழிகளிலும் அல்லாமல் ருஷ்ய மொழியிலேயே முதன் முதலில் மொழிபெயர்க்கப்பட்டமை புரட்சி அலை கிழக்கு நோக்கி நகர்வதனை உணர்த்துவதாக அமைந்தது. 'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' இல் பிற்போக்கின் தலைமைக் கேந்திரங்களில் ஒன்றாகச் சுட்டிக்காடப்பட்டு இருந்த ருஷ்ய ஆட்சியாளரான ஜார் மன்னன் புரட்சியின் கைதியாக மாறிவிட்டார் என்பதனை மார்க்ஸ் குறிப்பிடத் தவறவில்லை. மார்க்சின் மறைவுக்குப் பின்னர் 'பிரான்சில் வர்க்கப் போராட்டம்' நூலுக்கான புதிய பதிப்பொன்றை வெளியிட்ட போது ஏங்கெல்ஸ் "வரலாறு எங்களையும் பொய்ப்பித்துவிட்டது" எனச் சுட்டிக்காட்டினார்!

மார்க்சிய முன்னோடிகள் கருதியிருந்ததைப் போல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் நிரந்தரப் புரட்சியின் வீச்சு வளர்ந்து உலகம் பூராகவும் ஒரே கதியில் சோசலிச மாற்றம் ஏற்பட்டுவிடும் என்ற எதிர்பார்ப்புப் பொய்த்துப் போனபோதிலும் ருஷ்யப் புரட்சி சாத்தியப்பட்டு இன்னொரு திசை மார்க்கத்தில் சமத்துவப் புத்துலகம் மலரும் என்ற நம்பிக்கையை அவர்கள் கைவிட்டுவிடவில்லை. புதிய மொழிகளைக் கற்கும் வேகம் கைவரப் பெற்றவரான மார்க்ஸ் மாற்றத்தை நாடும் ருஷ்யச் சமூகத்தை ஆராயும் பொருட்டு ருஷ்ய மொழியைக் கற்கத் தொடங்கினார். முதலாளித்துவ வளர்ச்சியின் தொட்டில் பருவத்தில் இருந்த போதிலும், புராதன பொதுவுடமைச் சமூக எச்சங்களைக் கொண்டிருக்கும் ஆசிய உற்பத்தி முறையுடனுள்ள ருஷ்யா சுரண்டும் வர்க்க ஆட்சியதிகாரத்தை வீழ்த்திய கையுடன் அந்தப் புராதன பொதுவுடமை அமைப்பின் நீடிப்பாக, நேரடியாக சோசலிச அமைப்பை நோக்கி முன்னேற இயலும் என்ற நம்பிக்கையை மார்க்ஸ் வெளிப்படுத்தி இருந்தார்.

இத்தகைய மாற்று வழித்தடம் பற்றிய மார்க்சின் தேடல் குறித்துப் பின்னர் அதிகம் நாட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. ஒக்ரோபர் புரட்சி (1917) வாயிலாக பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப்படை ஆட்சியதிகாரத்தை வெற்றிகொண்ட காரணத்தால் வர்க்கப் புரட்சி வாயிலாகக் கட்டமைக்கப்படும் சோசலிச முன்னெடுப்புக்கு மார்க்சும் ஏங்கெல்சும் எவ்வகையில் ஆற்றுப்படுத்தினர் என்பதிலான நாட்டமே தீவிரப்பட்டு வந்தது. சோவியத் சோசலிச முன்னெடுப்பு 1991 ஆம் ஆண்டில் தகர்ந்துபோய் வர்க்க அரசியல் வீச்சை மேவியதாக அடையாள அரசியல் முனைப்படைந்து வளரத்தொடங்கிய போது விளிம்பு நிலை மக்கள் பற்றியும் தேசியம் குறித்தும் மார்க்ஸ் என்ன சொன்னார் என்ற தேடலில் அதுவரை வெளிவராத மார்க்சின் எழுத்துகளையும் வெளிக்கொணரும் முயற்சிகள் முனைப்படையலாயின.

மார்க்சியச் சிந்தனை முறைமையைக் கைவிட்டு 'புரட்சி இறை தூதர்' என்ன சொன்னார் எனும் தேடலில் மார்க்சியர்கள் முற்பட்ட போதே மார்க்சியமானது மதம் போலக் கட்டிறுக்கம் பெற்றுவிடுகிறது. உலகளவில் இன்று மார்க்சியம் பின்னடைவைச் சந்தித்து இருப்பதற்கான ஒரு அடிப்படையாக இவ்விவகாரம் அமைந்துள்ளது. மாற்று வழித்தடம் பற்றி மார்க்ஸ் எத்தகைய கருத்தைக் கொண்டிருந்தார் என்ற தேடலானது புதிய சூழலை முகங்கொள்ள ஏற்ற வழிகாட்டலைப் பெறுவதற்கு ஆற்றுப்படுத்த வேண்டுமே அல்லாது மார்க்ஸ் ஏற்றுக்கொண்டு முன்வைத்த

கருத்துகளைத்தான் கடைப்பிடிப்போம் என்பது மார்க்சிய மார்க்கமாக மாட்டாது!

புராதன பொதுவுடமை அமைப்பின் நீடிப்பு சோவியத்

ருஷ்யப் புரட்சியின் கோரிக்கை, பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கையகப்படுத்தல் என்பதற்கு முன்னுரிமை வழங்குவதனைக் காட்டிலும் சோவியத் எனும் மக்கள் கூட்டமைப்பு அதிகாரத்தைப் பெறுவதாகவே இருந்தது. மேற்கு ஐரோப்பாவில் தலைமறைவாக இருந்தபடி ருஷ்ய போல்ஷ்விக் கட்சிக்கு வழிகாட்டல்களை மேற்கொண்டு வந்த லெனின் *1917* பெப்ரவரிப் புரட்சி வாயிலாக ஜார் மன்னன் வீழ்த்தப்பட்டு மெனஷ்விக்குகள் ஆட்சிக்கு வந்த பின்னர் நாடு திரும்பினார்; ஏற்பட்டிருந்த முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை வளர்த்தெடுத்துப் பாட்டாளி வர்க்கம் ஆட்சி மாற்றத்தை வென்றெடுக்கும் வகையில் “உள் நாட்டுப் போரை முன்னெடுங்கள்” என்ற அறைகூவலை முன்வைக்கும் நோக்கத்துடன் ருஷ்யாவினுள் வந்தவருக்கு மக்கள் மத்தியில் ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான கோப உணர்வே மேலோங்கி இருப்பதனைக் கண்டுணர்ந்தார். போர்முனைப்பை வெளிப்படுத்துவதை விட முன்னதாகப் புரட்சி எழுச்சி சாத்தியப்படுத்தி இருந்த முதலாளித்துவ அரசை நோக்கி “அனைத்து அதிகாரங்களையும் சோவியத்துகளிடம்

லெனின்

Image Source : frontline.thehindu.com

கையளி” என்ற கோரிக்கையை முன்னிறுத்தினார் லெனின்.

பின்னர், 1917 ஒக்ரோபர் புரட்சி வாயிலாகப் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை வென்றெடுத்தவுடன் சோவியத் எனும் மக்கள் கூட்டுறவு அமைப்புகளுக்கு அதிகாரங்களை வழங்கும் அரசியல் வடிவம் முன்னிலைப்பட்டது; அந்தவகையில் உருவாகி எழுந்த புது நாட்டை 'சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம்' என லெனின் தலைமையிலான போல்ஷ்விக் கட்சி (பின்னர் 'சோவியத் கொம்யூனிஸ்ட் கட்சி' என அழைக்கப்பட்டது) அறிவித்திருந்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சியைச் சாதித்த ருஷ்யாவை முன்னிறுத்திச் 'சோவியத் ருஷ்யா' என அழைப்பதாக அன்றி ஜாரிஸ ருஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டு இருந்து ருஷ்யப் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் கைகோர்த்து இணைந்திருந்த ஒடுக்கப்பட்ட தேசங்கள் அனைத்துக்குமான குடியரசுகளின் ஒன்றியமாகப் புதிய நாட்டைக் கட்டமைத்திருந்தமை கவனங்கொள்ளத்தக்க பிரதான அம்சமாகும்.

பூரண முதலாளித்துவ மாற்றியமைத்தலைச் சாத்தியப்படுத்தி இருந்த மேற்கு ஐரோப்பாவின், சோசலிசத்தைக் கட்டமைப்பது போல பாட்டாளி வர்க்கம் பலம் பெறாது, விவசாயி வர்க்கத்தை வலுவான நட்புச் சக்தியாக அரவணைத்தவாறு, சோவியத் அமைப்பு வாயிலாக முன்னெடுக்கப்படும் ருஷ்யச் சோசலிசப் பிரயோகத்தின் தனித்துவப் பண்புகளை லெனின் கவனத்தில் எடுத்திருந்தார். மார்க்சின் வசனங்களுக்குள் முடங்கிவிடாமல் 'ஸ்தூல நிலைமைகளின் ஸ்தூலமான ஆய்வு முறையியலாக' மார்க்சியத்தைப் புரிந்துகொண்டு பிரயோகித்த லெனின் புறநிலை நிதர்சனத்துக்கு அமைவான 'புதிய பொருளாதாரக் கொள்கை' ஒன்றை வகுத்தளித்து இருந்தார். புரட்சிகரமான தனியொரு வர்க்கம் என்பதற்கப்பால் வர்க்கங்களின் கூட்டமைப்பான சோவியத் எனும் சமூக சக்தி தனக்குரிய முதலாளித்துவ மாற்றியமைத்தலையும் நிறைவு செய்துகொண்டு சோசலிசம் நோக்கி முன்னேற வேண்டி இருந்தது; தவிர, ஒடுக்கப்பட்டிருந்த தேசங்களாக இருந்து குடியரசுகளாக மலர்ந்தவற்றின் சமூக அமைப்பு மாற்றத்திலும் புதிய பொருளாதாரக் கொள்கை அவசியமானதாய் அமைந்திருந்தது!

இத்தகைய புதிய பாதை குறித்து வலியுறுத்துகிற போது மார்க்சியத்தின் அடிப்படைகள் திரிபுபடுத்தப்படுவதற்கு இடமளிக்கக் கூடாது என்பதிலும் லெனின் அதிக அக்கறை உடையவராக இருந்தார். இருபதாம் ஆண்டுகளை எட்டிய நிலையிலும் மேற்கு ஐரோப்பாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி சாத்தியப்படலாம், அவ்வாறு ஏற்படும் பட்சத்தில் சோவியத் புரட்சிக்கான முக்கியத்துவம் வலுவிழந்து போகும் என ('இடதுசாரிக் கொம்யூனிசம் இளம் பருவக் கோளாறு' எனும் நூலில்) சுட்டிக்காட்டி இருந்தமை மனங்கொள்ளத்தக்கது. பின்தங்கிய - முதலாளித்துவ மாற்றம் நிறைவுறாத - ருஷ்யாவில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை வைத்துப் பாட்டாளி வர்க்கமே சமூக மாற்றத்தின் அடிப்படையான சமூக சக்தி எனும் மார்க்சிய அத்திவாரம் இழக்கப்படலாகாது என்பதனை அழுத்தியுரைக்கும் கடப்பாடு தமக்கு இருப்பதாக அவர் கருதியமைக்கு மேற்கு ஐரோப்பியப் புரட்சி இன்னமும் சாத்தியம் என்ற நம்பிக்கையே அடிப்படையாகும்.

இந்த இரு அம்சங்களும் அவையவற்றுக்கு உரிய தளங்களில் மிக அவசியமானவை; இந்த வேறுபட்ட நிலைமைகள் பற்றி அல்லாது

மார்க்சியம் திரிபுபடுத்தப்படுவதற்கு எதிரான கண்டனங்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் லெனினால் வெளிப்படுத்தப்பட்டன. அதேவேளை இந்த வேறுபட்ட சமூக - வரலாற்று அடிப்படைகள் கவனங்கொள்ளப்படுதல் அவசியமானதாகும். வரலாற்று மாற்றப்போக்கில் விடுதலை பெறும் ஒடுக்கப்பட்ட தேசங்கள் நேரடியாக சோசலிசம் நோக்கிச் செல்வதற்கான சாத்தியம் சோவியத் யூனியனைப் பாட்டாளி வர்க்கம் கட்டமைத்து உள்ளமையால் ஏற்பட்டுள்ளது; பின்தங்கிய அவற்றுக்கான புதிய பொருளாதாரக் கொள்கை ஒன்றை சோவியத் யூனியன் நடைமுறைப்படுத்தி வந்தது. அதேவேளை, பூரணமான முதலாளித்துவ மாற்றியமைத்தலை வெற்றிகொண்ட மேற்கு ஐரோப்பா இறுக்கமான பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டுக்கு உரிய மிக முன்னேறிய சோசலிசப் பிரயோகத்தை எத்தகைய திரிபுகளுக்கும் இடமற்ற வகையில் முன்னெடுத்தாக வேண்டும்!

மேற்கு ஐரோப்பாவில் வலது திரிபு வாதம் ஏற்பட்டுவிடலாகாது என்பதற்காகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு அதீத அழுத்தத்தைக் கொடுத்து விவாதங்களை முன்வைத்த தர்க்ககங்கள் பின்னர் ஸ்டாலின் தலைமையில் இடது திரிபு வாதச் சரிவுக்கு இடமேற்படுத்தி இருந்தது. புதிய பொருளாதாரக் கொள்கையை லெனினின் மறைவுக்குப் பின்னர் கட்சித் தலைமையை ஏற்ற ஸ்டாலின் முன்னெடுத்து வந்தார்; நான்கு வருடங்களில் அதன் பிரயோகம் துரித வளர்ச்சியை எட்டிய காரணத்தால் 1928 ஆம் ஆண்டு முதல் பாட்டாளி வர்க்கச் சோசலிச முன்னெடுப்பில் முழுக் கவனத்தை ஸ்டாலின் முன்னெடுக்கலானார். இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் மக்கள் சீனமும் சோசலிச நாடுகளாக உதயமான பின்னர்

பாரதியார்
Image Source : en.wikipedia.org

மேற்குலகு முன்னெடுக்கும் பாட்டாளி வர்க்கப் புரட்சிச் சகாப்தம் முடிவுக்கு வந்து விட்டமையை ஸ்டாலினால் புரிந்துகொள்ளப்படவில்லை. விடுதலைத் தேசங்களின் சோசலிச நிர்மாணத்தில் விவசாயி வர்க்கம் அடித்தள சக்தி என்பதைக் கண்டுகொள்ளாமல் சோவியத் யூனியனின் பொருளாதாரம் விவசாயிகளைச் சுரண்டித் தொழிலாளர்களை மூலதன விருத்தி செய்வதாக உள்ள போக்குத் தவறானது எனும் விமரிசனத்தை மாஓ சேதுங் முன்வைத்தார்.

ஆக, பாட்டாளி வர்க்கம் கட்டமைக்கும் கொம்யூன் போல கூட்டுறவுப் பொருளாதார இணைப்பை உடைய சோவியத்தின் சோசலிச முன்னெடுப்பு இருக்கும் பட்சத்தில் பின்னடைவுக்கு ஆளாகுவதைத் தடுக்கவியலாமல் ஆகும். ஸ்டாலினின் தவறுகளைத் திருத்துவதாகக்

கூறியவாறு பின்னர் அதிகாரத்துக்கு வந்தவர்கள் சோவியத் யூனியன் கொம்யூனிஸ்ட் கட்சியை வலது திரிபுப் பாதைக்கு ஆட்படுத்தலாயினர்.

கலியுக உச்சமும் கிருத யுக எழுச்சியும்

ருஷ்ய ஒக்ரோபர் புரட்சியை சோவியத் யூனியனுக்கு வெளியே வாழ்த்தி எழுதப்பட்ட உலகளவிலான முதல் படைப்பாக பாரதியின் 'புதிய ருஷ்யா' எனும் பாடலே அமைந்துள்ளது என்பர். கொடுங்கோலாட்சி புரிந்த ஜார் மன்னனின் வீழ்ச்சியை "கலி வீழ்ந்தான்" என்பார் பாரதி; ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாகக் கருதப்படுவதும் பணத்தின் பயன்பாடு ஒழிக்கப்படும் வகையில் உழைப்புப் பெரு மதிப்பைப் பெறுவதும் ஏழ்மை ஒழிக்கப்பட்டு ஏற்றத்தாழ்வுகளைத் தகர்க்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதையும் புதிய சமூக எழுச்சியாக மதித்து (இவை பெப்ரவரிப் புரட்சியில் இடம்பெறாதன), இவற்றினூடாக 'கிருத யுகம் எழுக' எனப் பாடுவார். மனிதருழைப்பை மனிதர் பறிக்கும் கலியுகத்தை ஒழித்துக்கட்டி, கிருத யுகத்தின் சமத்துவ நெறியை இந்தியாவே உலகுக்கு உணர்த்தும் எனக் கூறி வந்த பாரதிக்கு ருஷ்யா அதனை முன்னதாகச் சாதித்தது குறித்து இலட்சிய பூர்வமான பொறாமை உணர்வுடன் கூடிய பாராட்டினைத் தெரிவிக்காமல் இருக்க இயலவில்லை.

வர்க்கப் பிளவுறாமல் முழுச் சமூக சக்தி (திணை) மேலாதிக்கம் புரிந்த காரணத்தால் புராதன பொதுவுடைமைச் சமூகக் கூறுகளின் தொடர்ச்சியாக எமது ஏற்றத்தாழ்வான வாழ்வியல் அமைந்து வந்தது. நிலவிய சமத்துவக் கூறுகள் காரணமாகவே இந்தியா முன்னதாகச் சமத்துவ வாழ்நெறியை உலகுக்கு உணர்த்தும் எனக்கூற இயலுமாய் இருந்தது - திணைகள் இடையே

ருஷ்ய ஒக்ரோபர் புரட்சியை சோவியத் யூனியனுக்கு வெளியே வாழ்த்தி எழுதப்பட்ட உலகளவிலான முதல் படைப்பாக பாரதியின் 'புதிய ருஷ்யா' எனும் பாடலே அமைந்துள்ளது என்பர்.

சமத்துவம் நிலவிய தமிழ்ப் பண்பாடு உருப்பெற்றதில் இருந்து மூன்று, நான்கு நூற்றாண்டுகளின் பின்னர் கிமு. 3 ஆம் நூற்றாண்டில் மருதத் திணை மேலாதிக்கம் ஏற்பட்ட போதிலும் தொடர்ந்தும் 'தமிழ் வாழ்வியலில் சமத்துவம் நிலவியதான' கருத்து ஊடாடி வந்துள்ளது. முன்னாளில் நிலவியதாகக் கருதப்படும் கிருத யுகத்தைத் தொடர்ந்து ஏனைய இரு யுகங்களில் உயர் விழுமியப் பண்புகள் நலிவடைந்து வரலாயிற்று; அவற்றுக்குரிய பதிவுகளை கிமு. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து நிலவி வந்த வேளிர் ஆட்சிக்கால வாழ்வியல் வெளிப்படுத்தும் சாத்தியம் நிலவின. மருதத் திணை மேலாதிக்கத்தில் முடிவேந்தர் ஆட்சி ஏற்பட்ட பின்னர் கலியுகம் பற்றிய ஐதிகம் அர்த்தம் பெறுவதாக அமைந்து காலனித்துவப் பிடியில் உழலும் வரலாற்று நிலை கலியுக உச்சமாகப் பார்க்கப்பட்டது. ஏற்கனவே முந்திய பகுதியில் காலனிய - சாதிய ஒடுக்குதல்கள் ஏகாதிபத்தியத்தால் கையாளப்பட்ட பாங்கு காரணமாக இந்தியப் புரட்சி சமத்துவ நெறி நோக்கிச் செல்ல இயலாமல் போனமையைப் பார்த்து வந்துள்ளோம்.

திணை மேலாதிக்கத் தகர்ப்பின் வாயிலாக சோசலிசத்தை அடையும் வரலாற்று இருப்புப் பற்றி அடுத்து வரும் இயல்களில் அலசுவோம்!

"யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்: ஒரு வரலாற்றுக் குறிப்பு

பகுதி - 3

● நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.

பரமேஸ்வராக் கல்லூரியில் சேர் பொன். இராமநாதன் அவர்களின் நூலகத்தில் இருந்த அரிய நூல்களையும் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம் கொண்டிருந்த 30,000 வரையிலான நூல்களையும் மேலும் பருவ இதழ்கள், அரச ஆவணங்கள், சிறு பிரசுரங்கள் போன்றவற்றையும் கொண்டு யாழ் வளாகம் தன் நூலகச் சேர்க்கைகளைக் கட்டியெழுப்பத் தொடங்கியது. நூலகச் சேர்க்கையையும் தளபாட வசதியையும் படிப்படியாக வளர்த்துச் சென்று பின்னாளில் பிரதம நூலகராகப் பதவியேற்ற சி. முருகவேள் அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து நூலகர் ஆர்.எஸ். தம்பையா விலகிக் கொண்டார். ஒகஸ்ட் 1974 முதல் டிசம்பர் 1978 வரையிலான நூலகப் பொறுப்பாளர் பதவிநிலையிலும், ஜனவரி 1979 முதல் செப்டெம்பர் 1981 வரையிலுமான பதில் நூலகர் பதவிநிலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகராகப் பணியாற்றிய வேளையில் யாழ்ப்பாணப் பொது நூலக ஆலோசகர் குழுவிலும் 70 களில் திரு ஆர்.எஸ். தம்பையா சேவையாற்றி வந்தார்.

அவர் பல்கலைக்கழகத்தில் இணையும் வேளை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் நூலகச் சேர்க்கைகளின் பெரும் பகுதியை பல்கலைக்கழகம் உள்ளீர்த்துக் கொண்டதால், யாழ்ப்பாணக் கல்லூரி நிர்வாகம் அவற்றைத் திரும்பிப்

பெற இலங்கை அரசாங்கத்துடன் நீண்டகாலம் போராடி 1980 இல் தமது நூற் சேர்க்கையின் ஒரு பகுதியை மட்டும் மீளப் பெற்றுக்கொண்டது. நாம் அவரது நூலகவியல்துறைப் பிரிவின் மாணவர்களாகப் பயின்றுவந்த வேளையில், இக் காலகட்டத்தில் திரு ஆர். எஸ். தம்பையா அவர்கள் யாழ்ப்பாணக் கல்லூரியின் பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வந்ததை எம்மிடம் வருத்தத்துடன் பகிர்ந்து கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து ஒக்டோபர் 1981 இல் நீங்கிய திரு ஆர்.எஸ். தம்பையா அவர்கள், நைஜீரியாவுக்குச் சென்று அங்கு 'Maiduguri' பல்கலைக்கழகத்தில் (University of Maiduguri, Nigeria) 1981 முதல் 1995 வரை நூலகவியல் தகவல் விஞ்ஞானத் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றி வந்தார். 1995 இல் பணியிலிருந்து ஒய்வுபெறும் வேளையில் அவர் அப்பல்கலைக்கழகத்தின் நூலகவியல் தகவல் விஞ்ஞானத் துறைத் தலைவராகப் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நைஜீரியாவில் 1995 இல் பணி ஓய்வுபெற்றதும் பிரித்தானியாவுக்கு வந்து, 2020 இல் தான் மறையும் வரையும், குடும்பத்தினருடன் தனது ஓய்வு காலத்தினை அமைதியாக சமய, சமூகப் பணிகளில் கழித்து வந்தார்.

யாழ்ப்பாணக் கல்லூரியில் பணியாற்றிய காலத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்திலும் பின்னர் நைஜீரியாவில் நூலகவியல்துறை விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்திலும் அமரர் ஆர். எஸ். தம்பையா அவர்கள் தனது பெயரில் துறைசார்ந்த நூல்கள் எதனையும் வெளியிட்டிராதது ஒரு பெரும் குறையாகும். குறைந்தபட்சம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றையாவது, அதன் ஆரம்பகால உள்வீட்டுப்பிள்ளை என்ற வகையில் பதிவுசெய்து வைத்திருந்திருக்கலாம். குறிப்பிடத்தகுந்த ஓரிரு கட்டுரைகளை மட்டுமே துறைசார்ந்து அவர் எழுதியிருக்கிறார் என அறிய முடிகின்றது. நூலக தகவல் விஞ்ஞானக் கலைக்களஞ்சியத் தொகுப்பில் (*Encyclopedia of Library and Information Science published by M. Dekker. New York*) இவர் எழுதியிருக்கும் '*Chain Indexing*' என்ற கட்டுரை வாயிலாக இவரது பெயர் நூலகவியல்துறை மாணவர்களிடையேயாவது நின்று நிலைத்திருக்கும்.

அமரர் ஆர்.எஸ். தம்பையாவின் இறுதிக் காலத்தில் நூலகப் பணிகளைவிட தான் சார்ந்த கிறிஸ்தவ, சமூக நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொண்ட சமயம் மற்றும் சமூகம் சார்ந்த பணிகளே அவரிடம் முனைப்புப் பெற்றிருந்தன. 07.06.2020 அன்று அமரர் ஆர்.எஸ். தம்பையா மறையும் வேளை அவருக்கு வயது 93.

சிற்றம்பலம் முருகவேள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது நூலகராக அமரர் சிற்றம்பலம் முருகவேள் அவர்கள் ஜனவரி 1982 முதல் மே 1994 வரை பணியாற்றினார். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏழாலைக் கிராமத்தில் முருகேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் வழித்தோன்றலான சிற்றம்பலம் - பராசக்தி தம்பதியினரின் மூத்த புதல்வராகப் பிறந்தவர் இவர்.

ஏழாலைக் கிராமத்தில் தனது ஆரம்பக் கல்வியைப் பெற்ற இவர் பின்னர் யாழ். பரமேஸ்வராக் கல்லூரியில் சிலகாலமும், கொழும்பு ரோயல் கல்லூரியில் சில காலமுமாகப் பயின்று பல்கலைக்கழகம் புகுந்தார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம்

அமரர் முருகவேள் அவர்களின் நூல்கள் இரண்டு இதுவரை வெளிவந்திருக்கின்றன. அவரது ஆழ்ந்தகன்ற சைவசித்தாந்த அறிவும் வடமொழிப் புலமையும் இந்நூல்களின் வழியாக புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அமரர் ஆர்.எஸ். தம்பையா போன்று நூலகத்துறை சார்ந்து அமரர் முருகவேள் விரிவாக எழுதாமை இன்றும் ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துவிட்டது.

திரு. சி. முருகவேள்
Image Source - www.govern.jfn.ac.lk

ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்ற திரு. முருகவேள், ஒரு தமிழ் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறி, பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரியப் பணியில் இணைந்துகொண்டார். இதே பாடசாலையில் ஆசிரியராகவும், பின்னாளில் அதிபராகவும் இருந்த இவரது சிறிய தந்தையாரான ஞானப்பிரகாசம் ஆசிரியரின் வழியாக சைவ விசார, சிவஞானப் பசிக்கு இரைதேடிக் கொண்டார். நீறில்லா நெற்றிபாழ் என்பதற்கேற்ப, முருகவேள் அவர்களின் அகன்ற நெற்றி திருநீறு பூத்ததாகவே எப்பொழுதும் காணப்படுவதை அவருடன் பழகியவர்கள் நன்கு அறிவர்.

முருகவேள் அவர்கள் திருமணம் செய்த காலகட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பிரிவு நூலகராகப் பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டார். பின்னாளில் ஆர். எஸ். தம்பையா அவர்கள் இளைப்பாற, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகராகப் பதவியேற்று தான் இளைப்பாறும் வரையில் அப்பணியில் தன் வாழ்வின் பெரும்பொழுதைச் செலவிட்டார். முருகவேள் அவர்களின் காலகட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் வெள்ளிதிசைக் காலம் எனலாம்.

இலங்கையின் கல்வி அமைச்சராக பதியுதீன் முகம்மது அவர்கள் சேவையாற்றிய காலகட்டத்தில், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது வளாகமாக 15.7.1974 இல் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வேளைமுதல், பின்னர் சுதந்திரமான பல்கலைக்கழகமாக 1979 இல் மாற்றம்பெறும் வரையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு ஏராளமான ஏட்டுச்சுவடிகள் (ஓலைச்சவடிகள்) பொதுமக்களால் நன்கொடையாகவும், வேறு வழிகளிலும் கையளிக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக நூலகத்தின் ஆரம்பகால நூலகரான திரு ஆர்.எஸ். தம்பையா அவரது

காலத்தில் இவ்வேட்டுச் சுவடிகள் நூலகத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தனவேயன்றி அவற்றை வாசித்துப் பட்டியலிடும் பணிகள் எதுவும் சாத்தியமாகி இருக்கவில்லை. இந்நிலையில் திரு முருகவேள் அவர்கள் ஜனவரி **1982** இல் புதிய நூலகராகப் பணியேற்றதன் பின்னர், இவ்வேட்டுச் சுவடிகளைப் பார்வையிட்டு விஞ்ஞான பூர்வமாகப் பட்டியலிடும் பணியை முடுக்கி விட்டார். ஒவ்வொரு ஏட்டுச் சுவடிக்குமான தலைப்பு, பிரதிப்பாடத் தொடக்கம், பிரதிப்பாட முடிவு, ஓலைகளின் எண்ணிக்கை, அளவும் பிற பௌதிக விபரங்களும், குறிப்பு என பல்வேறு தகவல்களுடன் இப்பட்டியலை இவர் தயாரித்தார். கிரந்த லிபியில் அமைந்த வடமொழிச் சுவடிகளை இனங்காண பிரம்மஸ்ரீ து. சுந்தரமூர்த்தி போன்ற அறிஞர்களின் உதவிகளையும் பெற்றிருந்தார். இவரது பணிக்கு அந்நாளில் பல்கலைக்கழகப் பணியாளர்களாக இருந்த க. நிரஞ்சனாதேவி, செ. சண்முகநாதன் ஆகியோர் பெருந்துணை புரிந்தனர். அரபு எண் ஒழுங்கில் அமைந்த பிரதான பட்டியல், தலைப்புச்சுட்டு, பொருட்சுட்டு ஆகிய மூன்று பிரிவுகளில் அப்பட்டியலை ஒழுங்கமைத்து, **1992** இல் ஒரு சிறு நூலுருவிலும் பல்கலைக்கழக நூலகத்தின் வெளியீடாக கல்லச்சுப் பிரதியாக நூலகர் முருகவேள் வெளியிட்டார்.

அமரர் முருகவேள் அவர்களின் நூல்கள் இரண்டு இதுவரை வெளிவந்திருக்கின்றன. அவரது ஆழ்ந்தகன்ற சைவசித்தாந்த அறிவும் வடமொழிப் புலமையும் இந்நூல்களின் வழியாக புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. அமரர் ஆர்.எஸ். தம்பையா போன்று நூலகத்துறை சார்ந்து அமரர் முருகவேள் விரிவாக எழுதாமை இன்றும் ஒரு கேள்விக் குறியாகவே அமைந்துவிட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவர் பணியாற்றிய காலகட்டம் மிகவும் சிறப்பானதொரு காலகட்டமாகும். அதுபற்றி பல்கலைக்கழகத்தில் அவரது நிர்வாகத்தில் பணியாற்றிய வி. வேல்தாஸ் அவர்கள் அண்மையில் யாழ். உதயன் பத்திரிகையில் (உதயன் **3.1.2015**) எழுதிய நீத்தார் நயப்புரையில் உணர்வுபூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழகத்தின் நூலக டிப்ளோமா பரீட்சைக்கென செப்டெம்பர் **1965** இல் நூலகர் முருகவேள் சமர்ப்பித்த விரிவான நூற்பட்டியல் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். **1960** ஆம் ஆண்டு வரை ஐரோப்பிய மொழிகளில் எழுதப்பட்டிருந்த சைவசமயம் தொடர்பான நூல்கள் பற்றிய விரிவான நூற்பட்டியல் இதுவாகும். இப்பட்டியலுக்கான விரிவான பகுப்பாக்கம் ஒன்றினை இவரே உருவாக்கியிருந்தார். சைவ சமயம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் எவருக்கும் தமது தேடலை விரிவுபடுத்த இப்பட்டியல் நிச்சயம் உதவியாக இருக்கும். இதன் ஒரு பிரதி தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்தில் பேணப்படுகின்றது (ஆய்வேடுகளின் சேர்க்கை இலக்கம் **76336**). இவ்வாய்வு விரிவான பயன்பாடு கருதி நிச்சயம் நூலுருவாக்கப்படல் வேண்டும். இக் கைங்கரியத்தை அமரர் சி. முருகவேள் அவர்களின் நினைவாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகச் சமூகம் அல்லது இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சு முன்னெடுக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான வேண்டுகோளாகும். முதலாம் பாகமாகவாவது இவ்வேடு வெளிவருமிடத்து, **1961** முதலாக இந்நாள் வரை வெளிவந்த சைவசமய ஆய்வுகள்

பற்றிய பட்டியல்படுத்தும் பணியை வேறொருவர் பின்னாளில் மேற்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம். சைவத்தையும் தமிழையும் தன் வாழ்வு நெறியாக ஏற்று வாழ்ந்து மறைந்த ஏழாலையின் புதல்வன் முருகவேளுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடனாக இது அமையும்.

திருமதி ரோகிணி பரராஜசிங்கம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகத்தை வளர்த்தெடுத்த நூலகர்களின் பட்டியலில்; ஆர்.எஸ். தம்பையா, சிற்றம்பலம் முருகவேள் வரிசையில் திருமதி ரோகிணி பரராஜசிங்கம் மூன்றாமவராவார். இவர் தனது நூலகப் பணிக்காலத்தில் மே **1994** முதல் பெப்ரவரி **1995** வரையிலான காலப் பகுதியில் பிரதி நூலகராகவும், மார்ச் **1995** முதல் செப்டெம்பர் **2005** வரை நூலராகவும் பணியாற்றியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் **30.04.1940** இல் பிறந்தவர். இரண்டு பெண் பிள்ளைகளுக்குத் தாயான இவர் சிறுவயது முதலே வாசிப்பில் ஆர்வம் மிக்கவர். தன் இளமைக் காலத்தில் பென்குவின் பதிப்புகளைத் தேடித் திரிந்து வாசித்து மகிழ்ந்தவர். அவரது நூல்களின் மீதான ஆர்வமே விலங்கியல் பட்டதாரியான அவரது வாழ்வின் திசையை நூல்களையும் நூலகங்களையும் நோக்கித் திருப்பியுள்ளது.

திருமதி ரோ. பரராஜசிங்கம் **1961** இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில், தனது B.Sc. சிறப்புப் பட்டத்தை விலங்கியல்துறையில் பெற்றுக்கொண்டவர். தமிழகத்திலிருந்து இலங்கைக்குத் திரும்பிய பின்னர் சிறிது காலம் கார்கில்ஸ் நிறுவனத்தின் புத்தக விற்பனைப் பிரிவின் (*Cargill's Book Centre*)

திருமதி ரோகிணி பரராஜசிங்கம்
Image Source - www.geotamil.com

பொறுப்பாளராகப் பணியாற்றி வந்தார்.

தனது பட்ட மேற்படிப்பு டிப்ளோமாவை (*Post Graduate Diploma*) நூலகவியல் துறையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் **1964 - 1965** காலகட்டத்தில் பெற்றுக்கொண்டார். இக்காலகட்டத்தில் இலங்கையின் புகழ்பெற்ற நூலக அறிஞர்களான சி. முருகவேள், எச்.ஏ.ஐ. குணத்திலக்க, திரு சோமதாச, கலாநிதி போல் குரூஸ் ஆகியோர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவரது வழிகாட்டிகளாக இருந்திருக்கிறார்கள். இவர்களின் சிறப்பான வழிகாட்டலின் கீழ் திருமதி ரோ. பரராஜசிங்கம், சிறந்ததொரு நூலக ஆளுமையாகச் செதுக்கப்பட்டார்.

02.03.1978 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இணைந்து, உதவி நூலகராக அங்கு சேவையாற்றத்

தொடங்கினார். சிக்கலான போர்க் காலப்பகுதியில், குறிப்பாக 1983 இனக் கலவரக் காலத்திலும், அதன் பின்னர் இந்திய இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலைகொண்டிருந்த 1987 - 1990 காலகட்டத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தை சிறப்புற நிர்வகித்து வந்தவர் இவர்.

ஏப்ரல் 1983 இல் தனது MLIS நூலக உயர்கல்விப் பட்டத்தினை சென்னைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புச் சித்திகளுடன் பெற்றுக்கொண்டார். இப்பட்டத் தேர்ச்சியின் பயனாக 1983 இல் சிரேஷ்ட உதவி நூலகராகப் பதவி உயர்வினைப் பெற்றுக்கொண்டார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகமும் இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட ஒரு இராணுவ முகாமாகவே அது மாறிவிட்டிருந்தது. அவ்வேளையில் பல்கலைக்கழக நூலகத்தின் சேர்க்கைகளை சமயோசிதமாக பாதுகாத்த பெருமை இவருக்கு உரியதாகும். இக்காலகட்டத்தில் பிரதம நூலகர் திரு சி. முருகவேள் அவர்கள் ஓராண்டு கல்விசார் விடுப்பில் (Sabbatical Leave) சென்றிருந்தார். பல்கலைக்கழக நூலகத்தின் தலைமைப் பொறுப்பினை திருமதி பரராஜசிங்கம் அவர்களே ஏற்று நடத்தவேண்டிய சூழல் அன்று இருந்தது. அவ்வேளையில் திருமதி பரராஜசிங்கம் அவர்கள் குடும்பத்தினருடன், திருநெல்வேலியில் இடம்பெயர்ந்து வாழ்ந்திருந்தார். உள்ளக இடப்பெயர்வுகளால் அதிகம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுள் இவருடைய குடும்பமும் ஒன்று.

இவரது நூலகப் பணிகளில் அவரது கணவர் பரராஜசிங்கம் அவர்கள் பின்னணியில் நின்று பல விதங்களிலும் உதவி புரிந்து வந்துள்ளார். ஆங்கிலத்தில் மிகவும் திறமையாக எழுத்தாற்றலை கொண்டிருந்த இவரது கணவர் பல சந்தர்ப்பங்களில் சட்ட நுணுக்கமான கடிதங்களை எழுதி இவரது பணிக்கு உதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய இராணுவம் பல்கலைக்கழகத்தை ஆக்கிரமித்திருந்த ஒருநாள் இரவு அவரது உதவி நூலகர் ஒருவரிடமிருந்து அவசர அழைப்பு வந்திருந்தது. அவரின் கூற்றுப்படி நூலகக் கட்டிடம் தாக்கப்பட்டிருந்தது. நூல்கள் சிதறுண்டு கிடக்கின்றன. அந்நியர்களால் நூல்கள் கபளீகரம் செய்யப்பட்டு வருகின்றன. மழைவேறு சிதறுண்டு கிடந்த நூல்களை நனைத்தழித்துக் கொண்டிருந்தது. அவற்றை உடனடியாகவும், பாதுகாப்பாகவும் அப்புறப்படுத்தாவிட்டால், பல்கலைக்கழக நூலகச் சேர்க்கைகள் அனைத்தும் அழிந்துவிடும். துரிதமாகச் சிந்தித்து மிக முக்கியமான முடிவொன்றினை உடனடியாக எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம்.

மழையுடன் கூடிய காரிருள் சூழ்ந்திருந்த அவ்வேளையில், மின்சார வெளிச்சம் தடைப்பட்டிருந்த நிலையில், கூப்பிட்ட குரலுக்கு வரக்கூடியதாகவிருந்த ஒரு சில நூலக உதவியாளர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்குச் சென்று இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகிக் கைவிடப்பட்டிருந்த நூலகப் பகுதியைக் கண்டு திருமதி பரராஜசிங்கம் அதிர்ச்சியடைந்துள்ளார். அங்கே பல நூல்கள் இந்திய இராணுவத்தினால் கையகப்படுத்தப்பட்டு, தீவைத்துக் குளிர் காயவும் பயன்படுத்தப்பட்ட சான்றுகள் சாம்பல் மேடுகளாகக் காட்சியளித்தன. மேலும் பல நூல்கள் சேர்த்தடுக்கப்பட்டு இராணுவத்தினருக்கான இருக்கைகளாகவும், படுக்கைகளாகவும் உருமாற்றப்பட்டிருந்தன. புள்ளிவிபரவியல் பகுதியில் காணப்பட்ட

நூற் தட்டுக்கள் வெறிச்சோடியிருந்தன. அவர் முன்னிருந்த ஒரே தீர்வு எஞ்சிய நூல்களையாவது பாதுகாப்பாக மீட்டெடுத்து லொறியொன்றின் மூலம் அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்துவதேயாகும்.

அயலவர்களாலும் இந்திய இராணுவத்தினராலும் சூறையாடப்பட்டவை போக தப்பிப் பிழைத்த நூல்களையும், மழையில் நனைந்து கொண்டிருந்த நூல்களையும் அவசர அவசரமாகச் சேர்த்து எடுத்து லொறிகளில் ஏற்றி, தன்னிடமிருந்த சில்க் சேலைகளினால் அவற்றை மழையிலிருந்து ஓரளவு பாதுகாத்து, அவற்றை சாவகச்சேரியிலுள்ள ஒரு பாடசாலை மண்டபத்துக்குக் கொண்டுசென்று சேர்த்திருக்கிறார். அதற்கான முழுச் செலவினையும் அப்பொழுது 44 வயதேயான அவர், தானே பொறுப்பேற்று இந்த அவசரகாலப் பணியை ஆற்றியிருக்கிறார்.

நூல்களை அனுமதியின்றி அப்புறப்படுத்திய இவரது அருஞ்செயலை பல்கலைக்கழக நிர்வாகம் முதலில் கண்டித்த போதிலும், பின்னாளில் அவரால் பாதுகாத்து வழங்கப்பட்ட 35,000 நூல்களையிட்டு அவருக்கு அதே நிர்வாகம் பாராட்டுக் கடிதமொன்றினையும் வழங்கியிருந்தது. அங்கே இழக்கப்பட்ட ஆயிரக்கணக்கான நூல்களை, பின்னாளில் திட்டமிட்டுக் கட்டியெழுப்ப அவர் மிகுந்த பிரயாசையுடன் செயற்பட வேண்டியிருந்தது.

திருமதி பரராஜசிங்கம் அவர்கள், துஷ்யந்தி கனகசபாபதிப்பிள்ளை என்பவருக்கு வழங்கிய நேர்காணலொன்றில் தனது உணர்வுகளை விரிவாகப் பதிவு செய்திருக்கிறார். அந்த நேர்காணலில் பல்கலைக்கழக நூலக அழிப்புப் பற்றித் தான் கொழும்பிலிருந்த இந்திய உயர் ஸ்தானிகருக்கு ஒரு காரசாரமான கடிதத்தை எழுதியிருந்ததாகவும், அதில் இந்திய இராணுவத்தினர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் சேர்க்கைகளுக்கும் கட்டிடத்திற்கும் தளபாடங்களுக்கும் ஏற்படுத்தியிருந்த மீளப்பெறமுடியாத சேதத்தை, கலாசாரப் படுகொலையை விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இந்திய இராணுவம் ஏற்படுத்திய சேதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவ்வேளையில் இருப்பிலிருந்த 64,000 நூல்களில் 35,000 நூல்களையே மீட்டெடுக்க முடிந்ததாகத் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணப் பொது நுலகம் இழந்த நூல்களைப் பற்றிப் பேசுமளவிற்கு எவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்களின் இழப்புப் பற்றிப் பேசுவதில்லை என்பது அவதானிக்கத்தக்கது. பல்கலைக்கழகத்தின் நூலகப் பிரிவில் மாத்திரமல்ல, சில கல்வித்துறைகளுக்கான பீடங்களின் அலுவலகங்களில் இந்திய இராணுவத்தினர் தங்கியிருந்த வேளை, தமக்கு இடைஞ்சலாகவிருந்த சொத்துகளையும் அப்புறப்படுத்தியிருந்தார்கள். குறிப்பாக, பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வேடுகளின் பிரதிகளை பல்கலைக்கழகத் தண்ணீர்த் தாங்கியின் அருகே குப்பை மேடாகக் குவித்து வைத்திருந்த அவலத்தை, அவ்வேளையில் அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருந்த ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் வாழ்ந்திருந்த என்னால் கண் கூடாகப் பார்த்துக் கண்ணீர் வடிக்கவே முடிந்திருந்தது. வரலாற்றுத்துறைப் பிரிவினரால் பாதுகாக்கப்பட்டு வந்த தொல்பொருட்கள் சிதறடிக்கப்பட்டிருந்தன. அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த 5000 ஆண்டுப் பழமையான ஆனைக்கோட்டை

அகழ்வாராய்ச்சிப் பொருட்களுக்கும், குறிப்பாக அங்கு பேணி வைத்திருந்த முதுமக்கள் தாழிக்கும் என்ன நடந்திருக்கும் என்று கற்பனைகூட செய்திருக்க என்னால் முடியவில்லை. முப்பதாண்டுகள் கழிந்த நிலையிலும் எமது தலைமுறையினரின் மனத்திரையை விட்டு அகலாத வடுக்கள் இவை.

இந்திய இராணுவம் ஏற்படுத்திய சேதத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அவ்வேளையில் இருப்பிலிருந்த 64,000 நூல்களில் 35,000 நூல்களையே மீட்டெடுக்க முடிந்ததாகத் தெரிவித்திருந்தார். யாழ்ப்பாணப் பொது நூலகம் இழந்த நூல்களைப் பற்றிப் பேசுமளவிற்கு எவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூல்களின் இழப்புப் பற்றிப் பேசுவதில்லை என்பது அவதானிக்கத்தக்கது.

படிப்படியாகத் தன் பதவியுயர்வுகளைப் பெற்று 16 ஆண்டுகள் உதவி நூலகராகச் சேவையாற்றிய பின்னர் அப்போது பிரதம நூலகராகவிருந்த திரு சி. முருகவேள் அவர்கள் 1994 இல் ஓய்வுபெற்ற வேளையில் திருமதி பரராஜசிங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் நூலகராகப் பதவியேற்றிருந்தார். பின்னர் 01.03.1995 இல் பிரதம நூலகராகப் பணியில் தொடர்ந்தார். இவரது பொறுப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் இருந்த வேளையில்தான் மீண்டும் ஒரு பாரிய சிக்கல் ஏற்பட்டது. வரலாற்று முக்கியத்துவமான 1995 வலிகாமம் இடப்பெயர்வு அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் காணப்பட்ட அந்த இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பிற்குள்ளும் பாரிய போக்குவரத்துச் சங்கடங்களுக்குள்ளும், பல்கலைக்கழக நூலகத்தை மீளவும் ஒழுங்கமைத்து வழிநடத்த வேண்டி இருந்தது.

இவரது நூலகப் பணிகளில் அவரது கணவர் பரராஜசிங்கம் அவர்கள் பின்னணியில் நின்று பல விதங்களிலும் உதவி புரிந்து வந்துள்ளார். ஆங்கிலத்தில் மிகவும் திறமையாக எழுத்தாற்றலை கொண்டிருந்த இவரது கணவர் பல சந்தர்ப்பங்களில் சட்ட நுணுக்கமான கடிதங்களை எழுதி இவரது பணிக்கு உதவியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 27 ஆண்டு இடையறாத நூலகப் பணியினை மேற்கொண்டுவந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் 30.09.2005 இல் பல்கலைக்கழக நூலகர் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

பல்கலைக்கழக புத்திஜீவிகளுக்கு பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும் ஒரு வருட கல்விசார் விடுமுறையையும் இரண்டு தடவைகள் பெற்றுக்கொள்ளாமல் நூலகத்தை வளர்த்தெடுப்பதிலேயே அக்கறை செலுத்திவந்தவர் திருமதி பரராஜசிங்கம். தொடர்ந்து 27 ஆண்டுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்துறைக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்றியிருக்கின்றார். ஒரு தடவை இவர் 3 மாத விடுமுறையை மாத்திரம் பெற்றுக்கொண்டு பல்வேறு சர்வதேச நூலகங்களுக்கும் விஜயம் செய்து, தான் அவதானித்து வந்திருந்த நூலக நிர்வாக, வடிவமைப்புச் சிந்தனைகளை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் செயற்பாட்டில் அறிமுகம் செய்ய முன்வந்திருந்தார். அவ்வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நூலகச் சேர்க்கைகளை கணினிமயப்படுத்தும் *'Library Automation'* நடவடிக்கைக்கு 2003 இலிருந்தே பெரும் பங்காற்றியிருக்கின்றார்.

நூலகவியல் கல்வியை தமிழ் மாணவர்களுக்கு வழங்கும் பணியில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலேயே நூலகவியல் துறைக்கான பட்டப்பின் கல்வி டிப்ளோமா துறையை (DIPLIS) இலங்கை நூலகச் சங்கத்தின் உதவியுடன் 2002 - 2003 காலகட்டத்தில் மீளுருவாக்கம் செய்வதில் முன்நின்று உழைத்தவர் இவர்.

பல்கலைக்கழகத் தேவைகளுக்கான ஆராய்ச்சித் துறையில் இவர் ஈடுபாடு காட்டி வந்ததன் பயனாக, லேசர் தொழில்நுட்பத் துறைக்கான சுட்டி மற்றும் சாராம்ச சேவைகள் பற்றிய வழிகாட்டிகளையும் (*Major Indexing and Abstracting Services in the field of Laser Technology*), நூலக விஞ்ஞான - தகவல் தொழில்நுட்பக் கல்விக்கான குறிப்புரையுடனான வழிகாட்டியொன்றினையும், பட்டியலாக்கம் - பகுப்பாக்கம் - சுட்டிகள் மற்றும் நூலக முகாமைத்துவம் சார்ந்த பல ஆய்வுக் கட்டுரைகளையும் ஆங்கிலத்தில் எழுதியிருக்கின்றார்.

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம், இலங்கை நூலகச் சங்கம் ஆகியவற்றின் ஆயுட்கால உறுப்பினராகவிருந்து இந்த அமைப்புகளின் வளர்ச்சிக்கும் தனது கடின உழைப்பினை இவர் வழங்கியிருக்கிறார்.

2005 இற்குப் பின்னரான தனது ஓய்வுக் காலத்திலும்கூட, நூலகவியல் துறையைத் தேர்வு செய்திருந்த தமிழ் மாணவர்களுக்கு உதவும் வகையில் தான் முன்னர் வழங்கிவந்த விரிவுரைச் சேவையினைத் தொடர்ந்தும் வழங்கி வந்திருந்தார். அவ்வகையில், ஸ்ரீலங்கா நூலகச் சங்கம் வழங்கி வந்த நூலகவியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிவந்த நூலகவியல் துறைக்கான பட்டப் பின்படிப்பு, யாழ்ப்பாணத் தேசிய கல்வியியற் கல்லூரி வழங்கிவந்த நூலகக் கல்வி ஆகியவற்றால் பல மாணவர்களும் பயனடைந்துள்ளனர். உரும்பிராயில் இருந்தபோது பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு கல்வியறிவை ஊட்டியதோடு அவர்களது தடையுறாத கல்விக்காக பண உதவியும் செய்து வந்தார். இயல்பாகவே மிகவும் இரக்க குணம் படைத்தவரான இவர் உதவி கேட்டு வருபவர்களுக்கு தன்னாலான உதவிகள் செய்து வந்தார் என்பதை இவருடன் நெருங்கிப் பழகிவந்த சக நூலக ஊழியர்கள் நினைவு கூர்ந்துள்ளனர்.

பின்னாளில் பருத்தித்துறையில் தனது இளைய மகளோடு அமைதியாகத் தனது ஓய்வினை அனுபவித்து வந்த திருமதி ரோகிணி பரராஜசிங்கம் அவர்கள் 27.04.2022 அன்று இயற்கை எய்தினார்.

திருமதி ரோகிணி பரராஜசிங்கம் அவர்கள் இளைப்பாறியதன் பின்னர் திருமதி ஆர். கருணானந்தராஜா அவர்கள் ஒக்டோபர் 2005 முதல் செப்டெம்பர் 2008 வரையிலான மூன்றாண்டு காலப்பகுதியில் பதில் நூலகராகப் பணியாற்றி ஓய்வுபெற்றிருந்தார். அவரைத் தொடர்ந்து செல்வி எஸ். அருளானந்தம் அவர்கள் ஒக்டோபர் 2008 முதல் பெப்ரவரி 2012 வரை பதில் நூலகராகவும், பின்னர் மார்ச் 2012 முதல் 25.12.2019 இல் அவர் மறையும் வரை நூலகராகவும் பணியாற்றியிருந்தார். அவரது மறைவினைத் தொடர்ந்து கலாநிதி எஸ். கேதீஸ்வரன், கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர் ஆகியோர் பதில் நூலகர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

இலங்கையில் தூய்மைவாத இஸ்லாமிய அமைப்புகள் தோன்றும் முன்னர் இலங்கை முஸ்லிம்கள் பிற பண்பாடுகளோடும், மக்களோடும் சகவாழ்வை முன்னெடுப்பதற்கு முக்கிய காரணமாக சூஃபித்துவம் விளங்கியது. பாரம்பரிய இஸ்லாத்தின் மெய்யியல் வடிவமாக சூஃபித்துவம் இருந்து வருகிறது. எனினும் முஸ்லிம்களாலேயே தவறாகப் புரியப்பட்ட ஒரு கருத்தியலாக சூஃபித்துவம் இன்று சவாலுக்குள்ளாகியுள்ளது. அந்தவகையில், சூஃபித்துவத்தின் உண்மை நிலையையும் இன நல்லிணக்கத்துக்கு அதன் பங்களிப்பையும் முன்வைக்கும் ‘இலங்கையில் சூஃபித்துவம்’ எனும் இத் தொடர் இலங்கையில் சூஃபித்துவத்தின் வரலாற்றையும், அதன் போக்குகளையும், நடைமுறைகளையும் ஆய்வுரீதியாக முன்வைப்பதோடு அதன் சமகால நிலையையும் விரிவான பார்வைக்கு உட்படுத்துவதாக அமைகிறது.

● ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது ‘போர்க்குணம் கொண்ட ஆடுகள்’, ‘அகாலத்தில் கரைந்த நிழல்’ ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இலங்கையில் சூஃபித்துவம்: ஓர் அறிமுகம்

இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாத்தை தமது வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்து வருபவர்கள். தங்களது மத அடையாளமான இஸ்லாமும், மொழி அடையாளமான தமிழும் இணைந்த ஒரு தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தை நிறுவி தங்களை ஒரு தனி இனமாக நிறுவிக் கொண்டவர்கள். இதனால் இலங்கை வரலாற்றில், அவர்கள் பின்பற்றி வரும் இஸ்லாம் பாரம்பரியத் தன்மைகளோடு இலங்கை - இந்திய மண்ணோடும், பிற பண்பாடுகளோடும் ஊடாட்டம் கொண்ட மதமாகவும் இருந்து வருகிறது. தனது மொழி அடையாளமான தமிழ்ப் பண்பாடு மற்றும் இனத்துவ மூலங்களிலிருந்து தோன்றி வளர்ந்துள்ள முஸ்லிம்கள் பிற பண்பாடுகளோடு நெருக்கமான ஊடாட்டத்தோடு தங்களது பாரம்பரிய இஸ்லாத்தைப் பின்பற்றி வருகின்றனர். அதுவே பாரம்பரிய இஸ்லாமாகும். முஸ்லிம்கள் மத்தியில் மதத் தூய்மைவாத இயக்கங்கள் வருவதற்கு முன் பிற பண்பாடுகளோடு நெருக்கமாக, சகவாழ்வை முன்னெடுத்த முஸ்லிம்களின் சமூகவியல் அடையாளங்கள் நவீன தூய்மைவாத இஸ்லாமிய இயங்கங்களால் பெரிதும் கேள்விக்குள்ளாகியுள்ளன. இலங்கைப் பாரம்பரிய இஸ்லாத்திலும் அது ஒரு நெருக்கடியான சூழலையே தோற்றுவித்துள்ளது. பிற பண்பாடுகளோடும், மக்களோடும் முஸ்லிம்கள் சகவாழ்வை முன்னெடுப்பதற்கு முக்கிய காரணமாக சூஃபித்துவம் விளங்கியது. பாரம்பரிய இஸ்லாத்தின் மெய்யியல் வடிமாக சூஃபித்துவம் இருந்து வருகிறது. ‘இலங்கையில் சூஃபித்துவம்’ எனும் எனது

இந்தக் கட்டுரைத் தொடர் இலங்கையில் சூஃபித்துவத்தின் வரலாறு, அதன் முக்கிய போக்குகள், பிரபலமான சூஃபிகள் பற்றிய ஆய்வாக விரிய உள்ளது.

சூஃபித்துவத்தைப் புரிந்துகொள்ளுதல்

சூஃபித்துவம் தத்துவத்தன்மை கொண்டது; இறுக்கமான மதச்சட்டங்கள், விதிகள் என எந்த வரையறைக்குள்ளும் குறுகிவிடாத ஒரு திறந்த ஆன்மீக நிலையாகும். ஒரு வணிக, உலகியல் சமூகத்தினால் சூஃபிஸம் போன்ற மெய்ஞானக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளவோ அதைத் தொடர்ந்து கைக்கொள்ளவோ முடியாது. இலங்கை முஸ்லிம்கள் அதிகமும் தத்துவ, மெய்ஞான மரபுகளில் ஈடுபாடற்றவர்கள்.

சூஃபித்துவம் தத்துவத்தன்மை கொண்டது; இறுக்கமான மதச்சட்டங்கள், விதிகள் என எந்த வரையறைக்குள்ளும் குறுகிவிடாத ஒரு திறந்த ஆன்மீக நிலையாகும். ஒரு வணிக, உலகியல் சமூகத்தினால் சூஃபிஸம் போன்ற மெய்ஞானக் கொள்கைகளைப் புரிந்துகொள்ளவோ அதைத் தொடர்ந்து கைக்கொள்ளவோ முடியாது.

இஸ்லாத்தை அதன் ஆன்மீகப் பரிமாணத்தைத் துறந்துவிட்டு அதனை வெறும் மதமாக அதன் சட்டங்களையும், சடங்குகளையும் மட்டுமே கடைப்பிடிக்க முனையும் ஒரு சமூகமாக இன்று அவர்கள் மாறியுள்ளனர். இதனால் உலகியல் நலன்கள் மீது அதிக நாட்டம் கொண்டவர்களாகவே முஸ்லிம்கள் உள்ளனர். இதனால் அவர்களின் வணிகமும், கல்வியும் உலகியல் தன்மையோடு மட்டுமே நின்றுவிட்டது.



Image Source : www.pererahussein.com

அதைக் கடந்து ஒரு தத்துவார்த்த ஆன்மீக நிலையைப் போதிக்கும் மெய்ஞான மரபுகளோடு பெரும்பாலும் தொடர்புகளைத் துண்டித்து வருகின்றனர். இதற்கு மிக முக்கிய காரணம் சவுதியைத் தளமாகக் கொண்ட அரபுத் தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்களின் தீவிரச் செயற்பாடேயாகும். வணிகம் மற்றும் ஏனைய உலகியல் நலன்கள் மீது மட்டுமே நாட்டம் கொண்டவர்களுக்கு இலகுவாகப் பின்பற்றவும், பரப்பவும் உவப்பான மத அமைப்பையே இந்த மதத் தூய்மைவாத இயக்கங்கள் முன்வைக்கின்றன. அனைத்திலும் ஒரு உலகியல் இலாபம் கொண்ட சமூகத்தையே தூய்மைவாத இயக்கங்கள் காண விரும்புகின்றன. இதனால் அவை சூபித்துவம் போன்ற மெய்யில் சார்ந்த

சிந்தனைகளின் ஆன்மீக நிலைமையை முதலில் மாற்றியமைக்க விரும்பின. சூஃபித்துவம் போன்ற சிந்தனைகள் இந்திய - இலங்கைத் தன்மைகளோடும், உள்ளூர்த் தன்மையோடும் இருப்பதால் அதை அந்நியப் பண்பாடாக தூய்மைவாத இஸ்லாமிய இயக்கங்கள் இலகுவாகக் கட்டமைத்து விடுகின்றன. அதனை நம் வாழ்க்கையிலிருந்து விலக்குவது, அதிலிருந்து நீங்கிக்கொள்வது இன்றியமையாதது என வலியுறுத்துகின்றன.

சூஃபித்துவமும் இஸ்லாமும் இலங்கையில் நீண்டதும், செழுமையானதுமான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளன. இதன் வரலாறும், ஆய்வுகளும் நன்கு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, அபயகோன் (1976), குணவர்த்தன (1976), டென்னிஸ் மெக்கில்ரே (1982; 1998; 2004; 2011), மஹ்ரூஃப் (1979); மோகன் (1987), காத்ரி (2005), சுக்ரி (1986), ஸ்பிட்டல் (1933, 2011) போன்றவர்கள் இது தொடர்பில் முன்னோடி ஆய்வுகளை நிகழ்த்தியுள்ளார்கள். சமீபத்தில் வெளிவந்த சுனிலா ஜெயவர்த்தனவின் ‘The line of Lanka’ அமீனா ஹூஸைன் எழுதிய ‘Ibn Battuta in Sri Lanka’ ஆகிய புத்தகங்களிலும் இலங்கையில் சூஃபிசம் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. எனது இந்த ஆய்வுக்கு நான் பெரும்பாலும் இவர்களைப் பயன்படுத்திக் கொள்வேன்.

சூஃபித்துவம் இரட்டைமுனை அர்த்தத்தைக் கொண்டது. முதலாவதாக, இது ஒப்பீட்டளவில் ஒத்திசைவான மாய நம்பிக்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்கமைப்புகளின் (Order) தொகுப்பாகும் (அதாவது தரீக்கா). இந்த சூஃபித்துவமானது, ஒன்பதாம் நூற்றாண்டில் (அல்லது இஸ்லாமிய நாட்காட்டியின்படி மூன்றாம் நூற்றாண்டளவில்) பக்தாத்தில் தோன்றி, இஸ்லாமிய உலகின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது (கரமுஸ்தபா 2007; டிரிமிங்ஹாம் 1998). இரண்டாவதாக, இது உள்ளூர், சுதேச, பாரம்பரிய இஸ்லாமிய மத நடைமுறைகளை பொது இஸ்லாமிய நடைமுறைகளுடன் இணைக்கும் நம்பிக்கைகள் மற்றும் சடங்குகளைக் குறிக்கும் ஒரு சொல்லாகச் செயற்படுகிறது. இலங்கையில் சூஃபித்துவமானது கூடியபட்சம் இந்த இரண்டாவது அர்த்தத்தில் அல்லது இரண்டும் இணைந்த விதத்தில் பின்பற்றப்பட்டு வந்தது என்று நான் புரிந்துகொள்கிறேன்.

இஸ்லாமிய மெய்யியல் பரிமாணம் என்றவகையில் சூஃபித்துவத்தைச் செயற்படுத்தியவர்கள் சூஃபிகள் அல்லது இறைநிலையாளர்கள் என அழைக்கப்பட்டனர். ‘Sufi’ என்பது ‘Shophi’ எனும் கிரேக்கச் சொல்லிருந்து பிறந்திருக்க வேண்டும். ஏனெனில் கிரேக்கத்தில் தத்துவத்தைக் குறிக்க ‘Shophi’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. ஆரம்பகால இஸ்லாமிய இறைநிலையாளர்கள் அணிந்த கம்பளி ஆடைகள் (சூப்) அல்லது கடினமான ஆடை என்பதிலிருந்தும் இந்த ‘Sufi’ என்கிற சொல் பெறப்பட்டிருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் நம்புகின்றனர். சூஃபித்துவம் என்பதை மதிப்புகள், சடங்கு முறைகள், கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குகள் போன்ற இயல்புகளை உள்ளடக்கிய இஸ்லாமிய இறைநிலை நடைமுறையாகும்[i] என்றும் வரையறுக்கலாம். சூஃபிகளின் சிந்தனை, நடைமுறை, கருத்தியல்களைக் கொண்ட மொத்த தொகுப்பாகவே

நாம் ஸூஃபித்துவத்தை (*Sufism*) பார்க்க வேண்டியுள்ளது. இஸ்லாமிய சமூகவியல் அறிஞர் இப்னு கல்தூன் முன்வைக்கும் ஸூஃபித்துவத்தின் பண்புகள் கவனிப்புக்குரியன. வணக்க வழிபாடுகளில் பூரண ஈடுபாடு; இறைவனை முற்றிலும் சார்ந்திருத்தல்; உலகக் கவர்ச்சி, அதன் மயக்கங்களிலிருந்து ஒதுங்கி இருத்தல்; பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் இன்பங்கள், செல்வம், பட்டம், பதவி ஆகியவற்றைப் பொறுத்தளவில் பற்றற்ற மனநிலையைக் கடைப்பிடித்தல்; தனிமையில் இறை வணக்கத்தில் ஈடுபடல் போன்றவற்றை இக்கலையின் அடிப்படைகளாக அவர் கருதுகிறார். *[ii]*

விக்டர் மன்ங் (வலது)

Image Source : vu-lt.academia.edu

இந்த ஸூஃபித்துவ சிந்தனையும் நடைமுறையும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் ஸூஃபி மகான்கள் மூலம் அறிமுகமாகி நிறுவனங்கள் வழியே வளர்ச்சியடைந்தன. ஸூஃபித்துவம் குறித்து ஆய்வுகளை மேற்கொண்ட *'Pnina Werbner'* மற்றும் *'Helene Basu'* போன்ற ஆய்வாளர்கள் ஸூஃபித்துவத்தை (அதன் நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள்) சாதாரண முஸ்லிம்களுடனும் மற்றும் முஸ்லிம் சமூகத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்புகளுடனும் (எடுத்துக்காட்டாக பள்ளிவாசல்கள், திக்ர் வட்டங்கள் - திக்ர் செய்யும் ஸூஃபிகளின் கூட்டங்கள் - கந்தூரிகள் போன்றவற்றுடன்) இணைத்துப் பார்க்கின்றனர். உண்மையில் ஸூஃபி பக்தி நடைமுறைகள் உடல், மனம், மக்கள் கூட்டம், இடம் மற்றும் தொடர்புடைய கலைப்பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இந்த 'உள்ளடக்கங்கள்' ஸூஃபித்துவத்தின்/ புனிதத்தின் கூட்டு அனுபவங்களையும், தனிப்பட்ட அனுபவங்களையும் வடிவமைக்கின்றன. அந்தவகையில் பார்த்தால் ஸூஃபித்துவம் ஒரு தனிப்பட்ட அனுபவம் மட்டுமல்ல; அது ஒரு சமூக அனுபவமும் கூட.

இலங்கையில் ஸூஃபித்துவம் குறித்த களப்பணி மூலம் மானிடவியல் ஆய்வொன்றை மேற்கொண்ட 'விக்டர் டி மங்க்' (*Victor de Munck*) மற்றும் 'கிறிஸ்தோபர் மனோகரன்' (*Christopher Manoharan*) ஆகிய ஆய்வாளர்கள் எழுதிய *'Accessing the interiority of others: Sufism in Sri Lanka'* என்கிற ஆய்வுக் கட்டுரை இலங்கையில் ஸூஃபித்துவ நடைமுறைகளை அறிந்துகொள்ள உதவும் மிக முக்கிய ஆய்வாக உள்ளது. இவர்கள் மொனராகல மாவட்டத்திலுள்ள 'குடாலி' (புனைப்பெயர்) எனும் கிராமத்தில்

சூஃபித்துவ நடைமுறைகள் எவ்வாறு உள்ளன என்பதைப் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

இந்த இரு ஆய்வாளர்களில் முதலாமவரான விக்டர் டி மங்க், 1990 களில் இலங்கை முஸ்லிம் கிராமமான குடாலியில், நீடித்த இனவரைவியல் களப்பணிகளை மேற்கொண்டார். குடாலி என்பது கிழக்குக் கடற்கரையில் உள்ள நகர்ப்புற மையங்களிலிருந்து 60 மைல் தொலைவில் உள்ள ஒரு கிராமமாகும். இங்கு சூஃபித்துவ நடைமுறைகள் குறித்து அவர் மேற்கொண்ட களப்பணியிலிருந்து பெற்றுக்கொண்ட அனுபவங்களை தனது கட்டுரையில் பகிர்ந்திருக்கிறார்.

“இந்தக் கிராமம் பல்வேறு சூஃபி பயிற்சியாளர்களால் நிறைந்திருந்தது. சிலர் கலைநயமிக்கவர்கள், சிலர் பக்தர்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் சாதாரண சுன்னா முஸ்லிம்கள். அவர்கள் சடங்குகள், விழாக்களில் பங்கெடுத்தனர். ஆனால் தஸவ்வுஃப் (சூஃபி) நடைமுறைகளில் தாங்களும் பங்கேற்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை. பாரம்பரியமாக அவ்வாறு செய்தனர் என்று தன் கட்டுரையில் விக்டர் டி மங்க் குறிப்பிடுகிறார். இறைக்காதலின் பக்தி வெளிப்பாடு மூலம் பக்தர்களை புனிதத்தின் இருப்புக்கு நெருக்கமாக கொண்டு வரும் ஆத்மீகச் சடங்கில் ஈடுபடுபவரையே மானிடவியலாளர்கள் ‘சூஃபி’ என்று பெயரிடுகின்றனர். அந்த அர்த்தத்தில் பார்த்தால் குடாலியில் சூஃபித்துவ நடைமுறைகளில் ஈடுபட்ட அனைவரையும் சூஃபிகளாக விக்டரால் கருத முடியவில்லை என்பது நியாயமானது.

இங்கு இன்னுமொரு விடயத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இங்கு விவரிக்கப்பட்டுள்ள சூஃபி நடைமுறைகள் இலங்கையிலும், மேலும் பொது இஸ்லாமிய உலகிலும் அடிக்கடி சித்தரிக்கப்படுவது போன்று பிரதான இஸ்லாத்திற்கு எதிரானவை அல்ல. மாறாக சுன்னாப் பிரிவினரின் நடைமுறைகளுடனும், கோட்பாடுகளுடனும் ஒத்துப் போகக் கூடியதாகவும் இவை இருக்கின்றன. நாகூரில் நடந்த சூஃபி மகான் சாகுல் ஹமீது நினைவுக் கொடியேற்றம் மற்றும் கந்தூரி நிகழ்வின் சடங்குகள் பெரும்பாலும் தென்னிந்தியக் கிராமிய முஸ்லிம்களின் மதப் பழக்க வழக்கங்களுடன் ஒத்திருந்ததாக விக்டர் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது. உதாரணமாக, ‘பள்ளி’ என்ற சொல் பாரம்பரியமாக சூஃபி புனிதர்களின் தலங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது என்று அவர் குறிப்பிடுகிறார். ஆனால் முஸ்லிம்கள் மத்தியில் பொதுவாக இச்சொல் முஸ்லிம்கள் தொழும் ஒரு பள்ளிவாசலைக் (Mosque) குறிக்க பேச்சுவழக்கில் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. அதேநேரம், விக்டர் டி மங்க் இலங்கையில் ஆராய்ச்சி செய்த கிராமத்தில், பள்ளிவாசல் ‘பள்ளி’ என்றும், அதன் நீட்டிக்கப்பட்ட பெயரான ‘மொஹிதீன் ஆண்டவர் பள்ளி’ என்றும் குறிப்பிடப்பட்டதை சுட்டிக்காட்டுகிறார்.

“குடாலி, மொனராகல மாவட்டத்தில் நில்கல வனப் பகுதியை அண்டி அமைந்திருந்ததனால் புவியியல் ரீதியாகவும் இனத்துவ ரீதியாகவும் ஒப்பீட்டளவில் தனிமைப்படுத்தப்பட்ட கிராமமாகும். மொனராகல மாவட்டமானது 2010 ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 98 சதவீதம் சிங்கள - பௌத்தர்களைக் கொண்ட மாவட்டம். அதே மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, குடாலி 1,400 முஸ்லிம்களையும், 110 சிங்கள - பௌத்தர்களையும் கொண்ட,

நாகூர் தர்காவின் கந்தூரி விழாவின் போது

Image Source : tamil.samayam.com

மாவட்டத்தின் மிகப்பெரிய முஸ்லிம் கிராமமாகும். இலங்கையில் பலவிதமான சூஃபி சிந்தனைப் பள்ளிகள் உள்ளன. ஆனால் ஷேக் மொஹிதீன் அப்துல் காதர் ஜெய்லானியின் பெயரிடப்பட்ட காதிரி சிந்தனைப் பள்ளியே அதிக எண்ணிக்கையிலானது என்று தோன்றுகிறது; டென்னிஸ் மெக்கில்ரேயின் (2011: 57) கருத்துப்படி, அவர் இலங்கை (மற்றும் தெற்காசிய) முஸ்லிம்கள் மத்தியில் மிகவும் பிரபலமான புனிதர் ஆவார். சூஃபித்துவம், இலங்கையின் மேற்கு கரையோரத்திலும், ஏனைய பகுதிகளிலும் இருப்பதைவிட கிழக்கு கரையோரத்தில் அதிகமாக காணக்கூடியதாகவும், ஒழுங்கமைக்கப்பட்டதாகவும் உள்ளது. இரு கரையோரங்களிலும் நான் சூஃபி கூட்டங்களுக்குச் சென்றபோது, இதனை வெளிப்படையாக உணர முடிந்தது [iii] என்று விக்டர் டி மங்க் தனது ஆய்வில் குறிப்பிடுகிறார்.

இவ்விரு மானிடவியல் ஆய்வாளர்களும் சூஃபித்துவம் குறித்த தங்களது ஆய்வை மூன்றாக வகுத்துக் காண்கின்றனர். "சூஃபி சம்பிரதாயப் பழக்கவழக்கங்கள் பற்றிய எங்கள் இனவியல் (Ethnographic Study) ஆய்வானது, மூன்று தனித்துவமான சமூக அமைப்புகள் மீது கவனம் கொண்டுள்ளது: கிராமம் (மற்றும் அண்டைப் பகுதி), வாராந்திர திக்ர் வட்டம், கந்தூரி (எடுத்துக்காட்டாக, இலங்கையில் உள்ள ஜெய்லானியில் இடம்பெறும் ஒரு பெரிய சூஃபி கந்தூரி நிகழ்வு). உள்ளார்ந்த அறிதிறன் வாய்ந்த மானிடவியலாளர்களாக (Cognitive Anthropologists), இந்த மூன்று வெவ்வேறு சூஃபி நடைமுறைகள் எவ்வாறு வெவ்வேறு அனுபவங்களை வழங்குகின்றன, மேலும் அவை ஒவ்வொன்றும் எவ்வாறு வெவ்வேறு கூட்டு அனுபவங்களையும் வழங்குகின்றன என்பதில் எங்கள் பகுப்பாய்வு கவனம் செலுத்துகிறது [iv]" என்று குறிப்பிடுகின்றனர். இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் சூஃபித்துவம் குறித்த இவர்களது ஆய்வு நோக்கில் ஜெய்லானி ஒரு முக்கிய சூஃபித்தலமாக குறிப்பிடப்படுகிறது. இவர்களது ஆய்வில் மட்டுமல்ல இலங்கையில் சூஃபித்துவம் குறித்து எழுதப்படும் அத்தனை ஆய்வுகளிலும் ஜெய்லானி ஒரு முக்கிய சூஃபித்தலமாக இடம்பெறுவதைக் காண முடியும்.

உசாத்துணை

[i] Wikipedia.org

[ii] கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி - தஸவ்வுப்: இஸ்லாத்தின் ஆன்மீகப் பெறுமானம். நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம். 2022, பக்.09

[iii] Victor de Munck and Christopher Manoharan: Accessing the interiority of others: Sufism in Sri Lanka, P. 02

[iv] ibid. p. 02

இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சேர்.பொன். அருணாசலத்தின் வகிபாகம்

(யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் நடத்திய 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நினைவரங்கம் - 2024' இல் வழங்கப்பெற்ற நினைவுப் பேருரை.)

எல்லாம் வல்ல இறையருளைப் பிரார்த்தித்து, இந்த நிகழ்வைத் தலைமையேற்று நடத்துகின்ற யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் உபதலைவர் அருட்பணி. ஜெறோம் செல்வநாயகம் அடிகளார்களே, இங்கு பிரசன்னமாயிருக்கும் தனிநாயகம் அடிகள் ஆய்வு மையத்தின் இயக்குனர் அருட்கலாநிதி.அ.பி. ஜெயசேகரம் அடிகளார் உள்ளிட்ட அருட்தந்தையர்களே மற்றும் அருட்சகோதரிகளே, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பெருந்தலைவர் தகைசால் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களே அவர் தம் பாரியார் கலாநிதி. மனோன்மணி சண்முகதாஸ் அம்மையார் அவர்களே, தமிழ்ச்

இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா

இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா, அளவெட்டி மற்றும் இணுவில் கிராமங்களை பூர்விகமாகக் கொண்டவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் விஞ்ஞானமாணி சிறப்பு பட்டத்தைப் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உதவிப் பதிவாளராக பணியாற்றிய இவர், சிரேஷ்ட உதவிப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்று ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் பரீட்சைகள் கிளைக்குப் பொறுப்பாக இருந்தார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் முகாமைத்துவ கற்கைகள் நிறுவனத்தில் பொது நிர்வாக முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்ட இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வியியலில் முதுமாணிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டமாணி கற்கையையும் பூர்த்தி செய்துள்ளார்.

2018 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையின் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். சிட்னி பல்கலைக்கழகத்தில் கல்வி உளவியலில் முதுமாணிப் பட்டத்தை அண்மையில் நிறைவு செய்துள்ளார். பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக கல்வி மற்றும் சமூகப் பிரச்சினைகள் சார்ந்த பல்வேறு விடயங்களில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி வருகிறார். குறிப்பாக, யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்று, பல்வேறு கல்விசார் சமூகம்சார் புலமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தலைமை கொடுத்துள்ளார்.

சங்கத்தின் தலைவர் சிரேஸ்ட பேராசிரியர் தி. வேல்நம்பி, செயலாளர் செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் மற்றும் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்களே, அங்கத்தவர்களே, திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் திரு. யோன்சன் ராஜகுமார் அவர்களே, அரங்கம் நிறைத்துள்ள பெரியவர்களே மற்றும் பாடசாலை மாணவர்களே உங்கள் அனைவருக்கும் என் இனிய மாலை வணக்கங்கள்.

தமிழ் மொழியின் தனித்துவத்தையும் அதன் ஆழ அகலத்தையும் தனது ஆய்வுப் பணிகளின் ஊடாகவும் அறிவுப்பரவலாக்கச் செயன்முறைகளின் ஊடாகவும் பல தளங்களுக்கு எடுத்துச் சென்ற தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவரங்க நாளில் நாங்கள் சந்தித்து இருக்கின்றோம். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் பல பணிகளினுள் தனிநாயகம் அடிகள் பற்றிய நினைவுகளை சமூகப் பரவலாக்கம் செய்ய அவ்வப்போது எடுக்கும் இந்த நினைவரங்கம் மிகவும் காத்திரமானது. பல பரிமாணங்களில் காலத்தனித்துவமிக்கது. வருடம் தோறும் தொடர்ச்சியாக இவ் நினைவரங்கு தவறாது நிகழ்த்தப்பட வேண்டியது மிகவும் அவசியமான தமிழ்த் தொண்டாகும்.

இவ் வருடம் இவ் அரங்கத்தில் தனிநாயகம் அடிகள் தொடர்பில் நடைபெறும் இரண்டாவது நினைவரங்கம் இதுவாகும். கடந்த சித்திரை மாதம் 21 ஆம் திகதி தனிநாயகம் அடிகள் ஆய்வு மையம் மற்றும் யாழ்ப்பாணக் கலாசாரப் பேரவை என்பவற்றின் ஏற்பாட்டில் ஒரு நினைவரங்கம் இடம்பெற்றது. அதில்

தனிநாயகம் அடிகள்
Image Source : www.tlstrichy.com

தனிநாயகம் அடிகளாரின் கல்விச் சிந்தனைகள் எனும் தலைப்பில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் மேலாண்மைத் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன் நினைவுரையாற்றியிருந்தார். அந் நிகழ்வில் காலப் பொருத்தமின்மையால் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் இணைந்து கொள்ளமுடியாது போனமை வருத்தமே.

தனிநாயகம் அடிகளாரின் தமிழ்ச் சமூகத்துக்கான, அதுவும் குறிப்பாக ஈழத்தமிழ்ச் சமூகத்துக்கான பங்களிப்பு என்பது பல பரிமாணங்களில் நன்றியுணர்வுடன் நினைக்கத்தக்கது. அவரது பங்களிப்புகளினால் விளைந்த நேரடி அனுகூலங்கள் குறித்து கணிசமானளவு பதிவுகள் உள்ளன. அதேவேளை அடிகளாரின் முயற்சிகளின் விளைவாக நிகழ்ந்த பல வெளித்தெரியாத விடயங்கள் குறித்தும் ஆய்வுக்

கண்ணோட்டத்துடன் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தகைய விடயங்களுக்குள் முதன்மையானதாக நான் கருதுவது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றம். தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டும் எனும் கோரிக்கை பல தசாப்தங்களாக விடுக்கப்பட்ட போதும் அது அரசாங்கத்தினால் செவிசாய்க்கப்படவில்லை. கோரிக்கைகளுக்குச் சமனாக நிராகரிப்புக்கான முன்மொழிவுகளும் அரசாங்கத்துக்கு முன்வைக்கப்பட்டிருந்தன. நிராகரிப்புக்களுக்குப் பின்னாலும் வலுவான நியாயப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. அவற்றை இவ்விடத்தில் குறிப்பிடுவது விடயப் பொருத்தமற்றது என கருதுகின்றேன்.

அதேவேளை தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினர் திருகோணமலையை மையப்படுத்தி தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்பதில் தீவிரமாகச் செயற்பட்டு அதற்கான ஆரம்பகட்ட முயற்சிகளில் ஏற்கனவே இறங்கியிருந்தனர். முன்னதாகவே நாவலர் மண்டபம் எனும் பெயரில் கொழும்பில் ஒரு நிலையத்தை ஆரம்பித்து அதனை ஒரு பல்கலைக்கழகத்துடன் சேர்த்திணைக்கப்பட்ட நிறுவனமாக தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் இயக்க ஆரம்பித்திருந்தது. தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் முன்னெடுத்த தன்னாண்மை மிக்க ஒரு பல்கலைக்கழகத்தை தாபிக்கும் முயற்சிகள் பல காரணிகளால் கைகூடவில்லை.

இப் பின்னணியில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியின் விளைவாக பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அவ் மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அப்போது ஆட்சியில் இருந்த அரசுக்கும் யாழ்ப்பாண மாநகரத்தை நிர்வகித்த அரசியல் தலைமைக்கும் மனவிருப்பு இருக்கவில்லை என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். உங்களுள் சிலர் அந்தக் காலத்தின் சாட்சியமாகவும் இருக்கின்றீர்கள்.

தமிழாராய்ச்சி மாநாடும் அது நடத்தப்பட்ட போக்கும் அதில் பங்கு கொண்டவர்களின் துறைசார் தகமையும் ஒரு பல்கலைக்கழகம் முன்னெடுக்கும் முயற்சிக்கு ஈடான தகமையை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு கொடுத்திருந்தது. மாநாட்டில் தொடக்கவுரை ஆற்றிய தனிநாயகம் அடிகள் தனது உரையை பின்வருமாறு ஆரம்பிக்கின்றார்.

“சங்க இலக்கியத்தில் கூறிய ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ எனும் கொள்கையையும், இந்த நூற்றாண்டில் பாரதியார் கூறிய ‘திறமான புலமை எனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்’ எனும் கோட்பாட்டையும் அடிப்படைக் கொள்கைகளாக கொண்டிருப்பது அனைத்து உலக தமிழ் ஆராய்ச்சிக் கழகம். இந்தக் கழகம் ஆற்றி வரும் தொண்டுகள் பல. உலகில் உள்ள தமிழ் அறிஞர் பலரையும் ஒன்று சேர்ப்பதும் அவர்களை அறிமுகப்படுத்துவதும் அவர்கள் ஆராய்ச்சியை வெளிப்படுத்துவதும் இந்தக் கழகத்தின் சிறப்புப் பணிகள். இக் கழகம் ஓர் ஆராய்ச்சிக் கழகம். அதுவும் பல்கலைக்கழக நிலையில் உள்ள ஆராய்ச்சிக் கழகம்.” (நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு, 1977)

என ஆரம்பித்த தனது உரையை அடிகளார் பின்வருமாறு நிறைவு செய்கின்றார்.

"யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று இருந்திருந்தால் இந்த மாநாட்டினை இன்னும் எவ்வளவோ சிறந்த முறையில் நடத்தியிருக்கலாம். தமிழ் ஆராய்ச்சி நம் நாட்டில் வளர்வதற்கு வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் வேண்டும்." (நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டுக் கட்டுரைத் தொகுப்பு, 1977)

இந்த உரையின் உட்பொருள் வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட வேண்டும் எனும் நோக்கத்தை அழுத்துவதாக அமைந்திருந்தது. உலகப் பல்கலைக்கழகங்களுடன் மிகவும் அணுக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த அடிகளாரும் அவருடன் சேர்ந்திருந்த கூட்டமும் தனியாகவே ஒரு பல்கலைக்கழகத்தை தாபிக்கும் வல்லாண்மை கொண்டது என்பது வெளிப்படையாக உணரத்தக்க விடயமாகவிருந்தது. இப் புலமைத்துவக் கூட்டத்துக்கு இயைபுள்ள ஆட்சி அதிகாரம் அமைகின்றபோது அவர்களது முயற்சியால் தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு பல்கலைக்கழகம் தோன்றுவதற்கான வாய்ப்புகளும் இருந்தன. ஆட்சி மாற்றத்துக்கான சூழ்நிலைகளும் இருந்தன. இது இப் புலமைத்துவக் கூட்டத்துக்கு எதிர்க் கூடாரத்தில் இருந்த புலமைத்துவ அணியினருக்கும் புரிந்திருந்தது.

அத்துடன் தமிழாராய்ச்சி மாநாட்டுக்குப் பின்னர் நடைபெற்ற துன்பியல் சம்பவங்களின் காரணமாக ஆட்சியில் இருந்த அரசாங்கத்தின் மீதும் அதனது யாழ்ப்பாணப் பிரதேசப் பிரதிநிதிகள் மீதும் தமிழ் மக்கள் கடும் கோபத்தில் இருந்தார்கள். அந்தக் கோபம் தேர்தல் அரசியலில் தாக்கம் செலுத்தும் என்பது வெளிப்படையானதே. இதனால் தமிழ் மக்களின் கோபத்தைத் தணிப்பதற்கு ஏதும் செய்தாக வேண்டும் எனும் அவசியம் அரசுக்கு ஏற்பட்டது. அரசுக்குச் சார்பான புலமையாளர்களுக்கும் அந்நிலையில் அரசுக்கு துணைசெய்ய வேண்டிய கடமையிருந்தது.



சேர். ஜேம்ஸ் பீரிஸ்
Image Source : en.wikipedia.org

இந்தச் சூழ்நிலைப் பின்னணிகளில் அரசு எடுக்கும் முடிவு தமிழ் தேசியச் சார்புமிக்க அரசியல் தலைவர்களது சித்தாந்தத்துக்கு முரணானதாகவும் அமைய வேண்டும் என்பதும் அவசியமாகவிருந்தது. தமிழ்த் தேசியச் சார்புமிக்க அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கான பல்கலைக்கழகத்தை திருகோணமலையில் அமைப்பதிலேயே

குறியாகவிருந்தனர். அவர்களது சிந்தனைக்கு மாறாகவும் அரசு மீது கோபத்துடன் இருந்த யாழ்ப்பாண மக்களைச் சாந்தப்படுத்தவும் அரசு எடுத்த திடீர் முடிவுதான் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகம் ஒன்றை நிறுவும் முயற்சி. தமிழாராய்ச்சி மாநாடு நிறைவுற்று ஆறு மாத காலப் பகுதிக்குள் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக வளாகமொன்றை நிறுவுவதற்கான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகம் ஒன்றைத் தனியாக அமைப்பதற்குரிய எந்தவிதமான பௌதிக வளத் தேவைகளும் அரசாங்கத்தினால் வழங்கப்படாமல் பரமேஸ்வராக் கல்லூரியினதும் யாழ்ப்பாணக் கல்லூரியினதும் சொத்துகளைச் சுவீகரித்து யாழ்ப்பாண வளாகம் அமைக்கப் பெற்றது வரலாற்றில் பதியப்பட்டுள்ள செய்தியாகும்.

இந்த வரலாற்றுப் போக்குகளை ஒன்றுடன் ஒன்று இணைத்து ஆய்வுக் கண்ணோட்டத்துடன் பார்க்கும் போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தோற்றுவாய்க்கு நான்காவது தமிழாராய்ச்சி மாநாடும் அதற்காய் உழைத்த தனிநாயகம் அடிகள் போன்றவர்களின் பங்களிப்பும் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டியுள்ளது.

இந்த வருடம் (2024) யாழ்ப்பாணப் பல்கலைகழகம் தனது ஐம்பதாவது ஆண்டை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கின்றது. இந்த ஆண்டு பல வழிகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஆண்டு. நான்காவது தமிழராய்ச்சி மாநாடு நடைபெற்றும் ஐம்பது ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன. அத்தோடு

சேர். மார்கஸ் பெர்ணாண்டோ
Image Source : en.wikipedia.org

இது சுவாமி விபுலானந்தர் துறவு பூண்ட நூற்றாண்டு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும் தனிநாயகம் அடிகளுடன் மிக நெருங்கிச் செயற்பட்டவருமான பேராசிரியர் சு. வித்தியானந்தனின் நூற்றாண்டும் கூட. மேற்குறிப்பிட்ட இந் நிகழ்வுகள் ஏதோவொரு வகையில் நினைவுகூரப்பட்டுள்ளன. அதேவேளை இவ்வாண்டு இலங்கைப் பல்கலைக்கழக முறைமையின் தந்தை எனக் கொண்டாடத்தக்க சேர்.பொன். அருணாசலத்தின் சிரார்த்த நூற்றாண்டு. ஆனால் அந் நிகழ்வு அவ்வளவு கவனம் கொடுக்கப்பட்டு நினைக்கப்பட்டதாக நான்

கருதவில்லை. கடந்த 2021 ஆம் ஆண்டு, இலங்கைப் பல்கலைக்கழகங்களில் சமூக விஞ்ஞான மற்றும் மனிதப் பண்பியல் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டு நூற்றாண்டு நிறைவு பெற்றிருந்தது. இந்த நிகழ்வை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்னெடுத்திருந்தது. அதன்போது இலங்கைப் பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படும் சமூக விஞ்ஞான மனிதப் பண்பியல் கற்கைகளினதும் அவற்றைப் போதிக்கும் பீடங்களினதும் மற்றும் துறைகளினதும் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய ஒரு தொகுப்பை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இத் தொகுப்பில் சேர்.பொன். அருணாசலம் அவர்கள் குறித்து மிகச் சிறியளவில் ஒரு குறிப்பு இருந்தது. ஆனால் அவரது பங்களிப்புக் குறித்து விரித்துப் பேசப்பட்டிருக்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இது போன்றே இலங்கைப் பல்கலைக்கழக வரலாறுகள் மற்றும் போக்குகள் குறித்து இதுவரை வெளிவந்த நூல்கள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளிலும் அவரது பங்களிப்புகள் சரியான விதத்தில் பதிவு செய்யப்படவில்லை. தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளுக்கு முன்னால் உள்ள பெரும் பொறுப்பு சேர்.பொன். அருணாசலம் போன்ற மகத்தான மனிதர்களை நினைவுகூரத்தக்க வெளிகளை உருவாக்குதல் என நான் கருதுகின்றேன். இதனடிப்படையிலேயே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட மறைகரமாகச் செயற்பட்டவரும் பேராதனைப் பல்கலைக்கழக கல்வியியல் பேராசிரியருமான வண. தனிநாயகம் அடிகளாரின் நினைவரங்கப் நினைவுப் பேருரையை 'இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சேர்.பொன்.

சேர்.பொன். அருணாசலம் அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட முத்திரை

Image Source : lankastamp.com

அருணாசலத்தின் வகிபாகம்' எனும் தலைப்பில் அமைக்க விரும்பினேன். அதற்கு அனுமதியளித்த யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்துக்கு எனது நன்றிகள். தனிநாயகம் அடிகளாரின் ஆத்மாவும் இந்த முயற்சியை ஆசிர்வதிக்கும் எனும் பெருநம்பிக்கை எனக்குண்டு. இப்போது உரையின் பிரதான பகுதிக்கு நகர்வோம்.

உரையின் சாராம்சம்

நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி இலங்கையில் பல்கலைக்கழகங்களில் மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகள் கற்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டுடன் நூறு ஆண்டுகள் கடந்துள்ளன. மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகள் கற்பிக்கப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவுற்றன எனக் கருதுவது போல இலங்கையில் சுதேசிய ஏற்பாடுகளுடன் கூடிய பல்கலைக்கழகக் கல்விக்கான ஆரம்ப நிகழ்வின் நூறு வருடங்கள்

நிறைவுற்றன எனவும் இந் நிகழ்வைக் கருத முடியும். அத்துடன் 2024 ஆம் ஆண்டு சேர்.பொன். அருணாசலம் மறைவின் நூற்றாண்டு. எனவே இந்தப் பின்னணியில், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியின் தந்தையாக பிரகடனப்படுத்தத்தக்க சேர். பொன். அருணாசலம் அவர்கள் இலங்கையில் பல்கலைக்கழக கல்வி முறைமை ஒன்றை தாபிப்பதற்காக ஆற்றிய பணிகளை மீள்பார்வை பார்ப்பதே இவ் உரையின் நோக்கமாகும். கிடைக்கத்தக்க வரலாற்று நூல்கள், வரலாற்று ஆவணங்கள், அறிக்கைகள், தனிப்பட்ட மனிதர்களின் கூற்றுகள் என்பவற்றை அடிப்படையாக வைத்து இவ் உரையில் உள்ள விடயங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

சேர்.பொன். அருணாசலம், சேர். ஜேம்ஸ் பீரிஸ் மற்றும் சேர். மார்கஸ் பெர்ணாண்டோ ஆகியோரே இலங்கையில் பல்கலைக்கழக கல்வி முறைமை ஒன்றைத் தாபிப்பதற்கான பூர்வாங்கத்தை உருவாக்கிய முன்னோடிகள். இவர்கள் மூவரினதும் இணைவால் 1906 ஆம் ஆண்டு 'இலங்கைப் பல்கலைக்கழக அமையம்' (*Ceylon University Association*) எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு இலங்கையில் பல்கலைக்கழக கல்வியைத் தாபிப்பதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டன. இருந்தும் சேர். பொன். அருணாசலம் அவர்கள் ஏனைய இருவருடன் இணைந்து முன்மொழிவுகளை முன்வைப்பதற்கு முன்னரே இலங்கையில் பல்கலைக்கழக முறைமை தாபிக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ தொடர்பாடல்களை ஆரம்பித்திருந்தார். இதனடிப்படையில் இலங்கைப் பல்கலைக்கழக கல்வியின் தந்தையாக சேர். பொன். அருணாசலத்தை உரிமைகோர முடியும். இதற்கு வலுவான சான்றாதாரமாக, சேர்.பொன். அருணாசலம் அவர்களின் மறைவுக்கு, இலங்கையில் தாபிக்கப்பட்ட முதலாவது பல்கலைக்கழக கல்லூரியான இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரி சார்பில் வெளியிடப்பட்ட அஞ்சலிச் செய்தியில், அதன் முதலாவது அதிபர் பேராசிரியர் மார்ஸ் அவர்கள் சேர்.பொன். அருணாசலம் அவர்களை 'இலங்கைப் பல்கலைக்கழக செயற்றிட்டத்தின் தந்தை' (*Father of the University Project in Ceylon*) என விளித்தமையைக் கொள்ளமுடியும். எனவே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வியின் தந்தையாக சேர்.பொன். அருணாசலம் அவர்களை மேன்மைப்படுத்தி அடையாளப்படுத்த முடியும் என்பதில் இருவேறு கருத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அதற்கான முன்மொழிவுகள் இதுவரை முறைமைப்படுத்தப்பட்ட விதத்தில் செய்யப்படவில்லை. அதற்கான ஒரு தொடக்கப் புள்ளியாக இன்றைய தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரையை நான் கருதுகின்றேன்.

அத்துடன் இலங்கைப் பல்கலைக்கழக கல்வியில் சேர்.பொன். அருணாசலம் அவர்களது பங்களிப்புக் குறித்துப் பேசுகின்ற போது அது வெறுமனே அவர் குறித்த வரலாற்றை மீள்பார்வை பார்ப்பதாக அமையாது. சமாந்தரமாக பல்கலைக்கழக கல்வி முறைமை மற்றும் அதனது நோக்குநிலைகள் என்பன குறித்தும் ஒரு விமர்சனச் சிந்தனையைக் கிளறுவதாகவே அமையும். குறிப்பாக சேர். பொன். அருணாசலம் பல்கலைக்கழகங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் எனத் தன் கருத்தியல்களில் வலியுறுத்தினாரோ அதன் தாக்கத்தை தனிநாயகம் அடிகள் கொண்டிருந்த கருத்தியல்களுடனும்

சேர்.பொன். அருணாசலம்

Image Source : www.lankabusinessonline.com

இணைத்துப் பார்க்கவும் முடியும். மேலும் ஐம்பதாண்டு கடக்கும் ஈழத்தமிழர் பல்கலைக்கழகத் தனித்துவம் பயணிக்க வேண்டிய செல்நெறி குறித்த சிந்தனைகளை மேற்கிளப்பும் தளமாகவும் இவ் உரையினை எடுத்துக்கொள்ளலாம்.

அறிமுகம்: சேர்.பொன். அருணாசலம் அவர்களின் சுருக்க முறையிலான வாழ்க்கைக் குறிப்பு

சேர்.பொன். அருணாசலம் அவர்கள் 1853 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி மானிப்பாயில் இராசவாசல் முதலியார் என அழைக்கப்பட்ட பொன்னம்பல முதலியார் மற்றும் செல்லாச்சி அம்மையார் தம்பதிகளுக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். இவரது தாயார், இங்கிலாந்தில் பரிஸ்டர் பட்டம் பெற்ற முதலாவது கிறிஸ்தவரல்லாதவர் எனும் பெருமையைக் கொண்ட சேர். முத்துக்குமாரசாமி அவர்களது சகோதரி என்பது குறிப்பிடத்தக்கது (வைத்திலிங்கம்,1977).

கொழும்பு றோயல் கல்லூரியில் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்த சேர். பொன். அருணாசலம் 1870 ஆம் ஆண்டு இராணிப் புலமைப் பரிசிலைப் (Queen Scholarship) பெற்று இங்கிலாந்தின் மிக முக்கியமான மரபுசார்ந்த பல்கலைக்கழகமான கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் தனது உயர் கல்விக்காக இணைந்தார். அங்கு கிறிஸ்ட் கல்லூரியில் கணிதம் மற்றும் புராதன இலக்கியம் ஆகிய இரு பரப்புகளையும் கற்று இரட்டைத் தகமை பெற்று கலைமாணிப் பட்டத்தை நிறைவுசெய்தார். இதன் பின்னர் 1875 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று அரச சேவைக்குள் ஓர் உயர்நிலை அதிகாரியாக இணைந்து கொண்டார். இவ்வாறு இணைந்த முதல் இலங்கையர் எனும் பெருமையும் இவரைச் சாரும். 1875 இல் ஆரம்பித்த அரச பணியிலிருந்து 1913 ஆம் ஆண்டு ஒய்வுபெறும் வரை பல உயர் பதவிகளை வகித்தார். குறிப்பாக சட்டத்துறையிலும் பாண்டித்தியம் மிக்க இவர் மாவட்ட நீதிபதியாகவும் கடமையாற்றினார். அப்போது இவரது நிர்வாக மற்றும் சட்டப் புலமையைக் கண்டு பிரித்தானிய ஆளுநரால் பதிவாளர் நாயகமாக நியமிக்கப்பட்டார். இப் பதவியில் 1888 ஆம் ஆண்டு தொடக்கம் 1902 ஆம் ஆண்டு வரை கடமையாற்றிய இவர் இலங்கையின் காணிப் பதிவுகள் தொடர்பான குறிப்பிடத்தக்க நடைமுறை ஒன்றை உருவாக்கியிருந்தார். அரச சேவையில் இவர் ஆற்றிய கணிசமான பங்களிப்புக்காக பிரித்தானியாவின் ஐந்தாம் ஜோர்ஜ் மன்னரால் ‘சேர்’ பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அரச

சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் சட்ட சபையில் உத்தியோகப்பற்றற்ற உறுப்பினராகச் செயற்பட்டார்.

அரச சேவையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதும் சமூகத்தின் நலனுக்காக அரசியல் மற்றும் பல்வேறு சமூகப் பணிகளில் தன்னை இணைத்துக் கொண்டார். 1915 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி சமூக சேவைச் சங்கம் என ஒன்றை உருவாக்கிக் கொண்டார். அதன் பின்னர் 1919 ஆம் ஆண்டு ஜனவரி 25 ஆம் திகதி இலங்கை தொழிலாளர் சேமாவிருத்திச் சங்கம் என ஒன்றை உருவாக்கினார். இச் சங்கம் பின்னர் 1920 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் எனப் பெயர் மாற்றப்பட்டது. 1919 ஆம் ஆண்டு இலங்கைத் தேசிய காங்கிரஸ் எனும் அரசியல் இயக்கத்தை இவர் ஆரம்பித்து தலைவராக இருந்தபோதும், சிங்களத் தலைவர்கள் மற்றும் சிங்கள மக்களின் மனப்பாங்கு தமிழ்த் தலைவர்கள் இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஊடாக அரசியலில் முனைப்புடன் பங்குபெற இடம்கொடாது என்பதைப் பல்வேறு அனுபவங்களின் வழி உணர்ந்து, 1921 ஆம் ஆண்டு தமிழர் மகாஜன சபை எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். மிக முக்கியமாக 1906 ஆம் ஆண்டு இவரால் தோற்றுவிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக அமையம் எனும் அமைப்புத்தான் இலங்கையில் பல்கலைக்கழக கல்வி முறைமை ஆரம்பிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்தது (வைத்திலிங்கம், 1977).

பல்கலைக்கழக கல்வி குறித்த சேர்.பொன். அருணாசலத்தின் கருத்தியல்

பல்கலைக்கழக கல்வி முறைமை குறித்து சேர்.பொன். அருணாசலம் அவர்கள் தெளிவானதும் தூரநோக்குக் கொண்டதுமான கருத்தியல்களைக் கொண்டிருந்தார். அவர் குறிப்பாக தேசிய நீக்கம் செய்யப்பட்ட பல்கலைக்கழக கல்வி முறைமை குறித்து எதிர்ப்புணர்வு கொண்டவராகவிருந்ததுடன் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் தாபிக்கப்படுவதன் மூலமே தேசிய தேவைக்கான உயர் கல்வியை உற்பத்திசெய்ய முடியும் என்பதில் திடமாக நம்பிக்கை கொண்டு தனது கருத்துகளை முன்வைத்தார் (கிங்ஸ்லி டி சில்வா, 1978).

1964 ஆம் ஆண்டு ஆர். பீரிஸ் அவர்களால் இலங்கையில் பல்கலைக்கழகங்களும் அரசியலும் எனும் தலைப்பில் எழுதப்பட்ட சர்வதேச மயப்படுத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் சேர்.பொன். அருணாசலம் அவர்கள் பல்கலைக்கழகக் கல்வி குறித்துக் கொண்டிருந்த அபிப்பிராயம் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

“வெளிநாட்டுப் பரீட்சைகளுக்குத் தோற்றத்தக்க வகையில் உள்ளூர் மாணவர்களுக்கு வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் மற்றும் கற்பிக்கப்படும் பாடங்கள் தொடர்பில் அநேகமான மாணவர்கள் அக்கறை கொண்டவர்களாக இல்லை. அதற்கான காரணம் அவர்களுள் அநேகமானோர் மேலைத்தேயக் கலாசாரத்துக்கு அந்நியப்பட்டவர்களாக உள்ளனர்.”

அதேவேளை அருணாசலம் அவர்கள் பல்கலைக்கழகங்கள் தமது இலட்சிய நோக்குகளை அடையும் அல்லது அடைய வேண்டும் என்பதில் மிகுந்த நம்பிக்கை உடையவராகவிருந்தார். தேசிய நீக்கம் செய்யப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி முறைமையினால் பல்கலைக்கழகங்கள் தமது இலட்சிய நோக்குகளை அடைவது முழுமையாகச் சாத்தியப்படமாட்டாது என்பது அவரது திடமான

கருத்தாகவிருந்தது. இந்தக் கருத்தியல் பின்னணியிலேயே இலங்கையில் பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதில் அவர் மிகவும் அக்கறையுடனிருந்தார் (பீரிஸ், 1964).

தேசிய நீக்கம் செய்யப்பட்ட பல்கலைக்கழக முறைமைக்கு எதிராக சேர்.பொன். அருணாசலத்தின் இந்தக் கருத்தியலை தனிநாயகம் அடிகள் பல்கலைக்கழகங்கள் குறித்துக் கொண்டிருந்த கருத்தியலுடன் பொருத்திப் பார்க்க முடியும். பல்கலைக்கழகங்கள் மேற்றிசைக் கண்ணும் கீழ்த்திசைக் கண்ணும் கொண்டிருத்தல் வேண்டும். பல்கலைக்கழகங்கள் மூலம் தமிழ்க் கலைகளின் தனித் தன்மையை உலகிற்கு உணர்த்துதல் வேண்டும் எனத் தனிநாயகம் அடிகள் குறிப்பிடும் கருத்து பல்கலைக்கழகங்களுக்குள் சுதேசிய நீட்சி இருக்க வேண்டும் என்பதுடன் அவை தேசிய நீக்கம் செய்யப்படலாகாது எனும் கருத்தியலை வலியுறுத்துகின்றது (தனிநாயகம் அடிகள், 1998).

சேர்.பொன். அருணாசலம் ஆற்றிய ஒரு பகிரங்க உரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். “ஒரு பல்கலைக்கழத்தின் அதியுச்ச நன்மை என்பது அங்கு பெற்றுக்கொள்ளப்படும் வெறும் நூலறிவு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. பல்கலைக்கழகங்கள் உயர் கலாசார விழுமியங்கள் மற்றும் உயர் இலட்சியங்களை சுவாசிக்கும் ஒரு இடம். பல்கலைக்கழகங்கள் மனதுடன் மனது தொடர்பு கொள்வதன் மூலமாகவும் ஆசிரியர்களுடனும் சக மாணவர்களுடனும் இணைவதன் மூலமாகவும் கலந்துரையாடுவதன் மூலமாகவும் இடம்பெறும் கருத்து மோதல்களுக்கான களம் என்பதுடன் அறிவார்ந்த மற்றும் ஆன்மிகம் சார்ந்த வளர்ச்சிக்கும் உதவும் இடமாகும். இலங்கையில் இத்தகைய வாழ்வின் அடித்தளமான அமைப்பின்றி நாம் இழக்கும் விடயங்களை யாரால் மதிப்பீடு செய்ய முடியும்? இந்த உணர்வுகளின் விளைவு தான் கலாநிதி.எச்.எம். பெர்ணாண்டோ மற்றும் ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோருடன் இணைந்து நாம் சில ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கிய இலங்கைப் பல்கலைக்கழக அமையமாகும்.” (கிங்ஸ்லி டி சில்வா, 1978).

இவ் உரையின் மூலமாக 1906 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக அமையத்தின் நோக்கத்தையும் அவ் அமையத்தை உருவாக்குவதில் சேர்.பொன். அருணாசலம் வகித்த வகிபாகத்தையும் உணரக்கூடியதாகவுள்ளது.

இலங்கைப் பல்கலைக்கழக அமையமும் அதனூடான அருணாசலம் அவர்களின் பங்களிப்பும்

1906 ஆம் ஆண்டு சேர்.பொன். அருணாசலம் அவர்களது சிந்தனையின் விளைவாக உருவாக்கப்பட்ட இவ் அமைப்பே இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கான அவசியம் குறித்து வலியுறுத்திய முதலாவது அமைப்பாகும். இவ் அமைப்பின் தலைவராக சேர்.பொன். அருணாசலம் அவர்களே பதவி வகித்தார். இவ் அமைப்பைத் தாபிப்பதற்கான முதலாவது கூட்டம் புறக்கோட்டை நூல்நிலைய மண்டபத்தில் 1906 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் திகதி நடைபெற்றது. இக் கூட்டத்துக்கு தலைமை தாங்கி சேர். பொன். அருணாசலம் ஆற்றிய உரை இலங்கைப் பல்கலைக்கழக வரலாற்றில் மிகவும் முக்கியமாக கவனம் கொடுக்கப்பட வேண்டிய உரையாகும். இவ் உரையின் நிறைவில் இலங்கைப் பல்கலைக்கழக அமையத்தின் நோக்கம் குறித்தும் மிகவும் தெளிவாக அவர் வரையறை செய்திருந்தார்.

‘*Ceylon University Association*’ என்பது பல்வேறு ஆய்வாளர்கள் மற்றும் கட்டுரையாளர்களினால் தமிழில் பல்வேறு சொற்பதங்களினால் குறிக்கப்பட்டுள்ளமையையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக இவ்வுரையில் அதனை ‘இலங்கைப் பல்கலைக்கழக அமையம்’ எனும் கலைச் சொல்லால் அடையாளப்படுத்தும் சந்தர்ப்பத்தில், வேறு சில கட்டுரைகளில் ‘இலங்கை சர்வகலாசாலைச் சங்கம்’ எனவும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் கவனிக்க வேண்டும். பல்கலைக்கழகங்களை சர்வகலாசாலைகள் என அழைக்கும் மரபின் வழி இக் கலைச் சொல்லாக்கம் உருவாக்கப்பட்டிருக்கலாம்.

இவ் அமைப்பின் மூலமாக வெளியிடப்பட்ட பருவகால இதழ்களில் பல்கலைக்கழகக் கல்வி குறித்த தனது சிந்தனைகளையும், இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டிய அவசியம் குறித்தும், அவ்வாறு ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படும் போது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் சேர்.பொன். அருணாசலம் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதினார்.

‘*A plea for Ceylon University*’ (இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கான ஒரு வேண்டுகை) எனும் தலைப்பில் மேற்குறிப்பிட்ட பருவ இதழின் முதலாவது தொகுதி, இரண்டாவது இதழில் 1906 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அவர் ஒரு ஆய்வுக் கட்டுரையை எழுதினார். இக் கட்டுரையில் இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் ஏன் நிறுவப்பட வேண்டும் எனும் தனது கருத்தை வலுவாக நியாயப்படுத்துவதற்காக 1800 களின் பிற்பகுதியிலும் 1900 களின் முற்பகுதியிலும் இங்கிலாந்தில் பல பல்கலைக்கழகங்கள் உருவாக்கப்பட்ட பின்னணி, அவற்றின் உருவாக்கத்துக்கான தேவை எவ்வாறு உணரப்பட்டது எனும் விடயங்களை புள்ளிவிபரங்கள் மற்றும் ஆதாரங்களுடன் முன்வைத்திருந்தார்.

1900 களில் இலங்கையில் ஏற்றுக்கொள்ளத்தக்க தரமான பாடசாலைக் கல்வி முறைமை இருந்தமையை வலியுறுத்திய சேர்.பொன். அருணாசலம் இந் நிலமையை இந்தியாவுடன் ஒப்பிட்டு இந்தியப் பல்கலைக்கழகங்கள் போன்று சுதேசிகளுக்கான பல்கலைக்கழகம் இலங்கையில் தாபிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் என வலியுறுத்தினார்.

1900 களில் இலங்கையில் ஏற்றுக்கொள்ளத்தக்க தரமான பாடசாலைக் கல்வி முறைமை இருந்தமையை வலியுறுத்திய சேர்.பொன். அருணாசலம் இந் நிலமையை இந்தியாவுடன் ஒப்பிட்டு இந்தியப் பல்கலைக்கழகங்கள் போன்று சுதேசிகளுக்கான பல்கலைக்கழகம் இலங்கையில் தாபிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும் என வலியுறுத்தினார்.

இலங்கையில் தாபிக்கப்படும் பல்கலைக்கழகங்களில் முதலில் சட்டம், மருத்துவம் மற்றும் பொறியியல் பீடங்கள் தாபிக்கப்பட வேண்டும் என்பதுடன் பின்னர் கலை மற்றும் விஞ்ஞானப் பீடங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பது சேர்.பொன். அருணாசலத்தின் கருத்தியலாகவிருந்தது. இலங்கையில்

பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் மறுதலிப்பான கருத்தியல்களைக் கொண்டிருந்தவர்களையும் கருத்தியல் ரீதியாக அருணாசலம் அவர்கள் எதிர்கொண்டார். குறிப்பாக இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்குத் தேவையானளவு மாணவர்கள் இல்லை என்பது பல்கலைக்கழகக் கோரிக்கையை மறுதலிப்பவர்களின் வாதமாகவிருந்தது. இவ் வாதத்தை மறுதலித்த சேர்.பொன். அருணாசலம் அவர்கள் இலங்கையில் சட்டக்கல்விப் பேரவை, தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் மருத்துவக் கல்லூரியில் ஏறக்குறைய 450 மாணவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருப்பதையும், 1905 ஆம் ஆண்டு ஏறக்குறைய 700 மாணவர்கள் இங்கிலாந்து மெற்றிக்குலேசன் தேர்வுக்கு தோற்றியதையும், அவர்களுள் 300 மாணவர்கள் சித்தி பெற்றமையையும் புள்ளிவிபர ரீதியாக எடுத்துக்காட்டி, இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்பட்டால் அதனை நிரப்புவதற்குத் தேவையானளவு மாணவர் எண்ணிக்கை இருப்பதை நிறுவினார். இங்கிலாந்தின் பிரபலமான ஸ்கொட்ச் பல்கலைக்கழகம் 1904 ஆம் ஆண்டு 477 மாணவர்களை மட்டுமே கொண்டிருந்தமையையும் சுட்டிக்காட்டி இவ் எண்ணிக்கை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்க எதிர்பார்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையின் பாதியளவு எனவும் வலியுறுத்தினார். அத்துடன் 1900 களில் அரை நூற்றாண்டு வரலாற்றைக் கொண்ட மெல்பேர்ண் பல்கலைக்கழகம் 615 மாணவர்களையும், 1881 இல் நிறுவப்பட்ட அடிலோயிட் பல்கலைக்கழகம் 622 மாணவர்களையும் கொண்டிருந்தமையையும் சுட்டிக்காட்டி இலங்கையில் பல்கலைக்கழகம் நிறுவப்படுவதற்கு மாணவர்களின் எண்ணிக்கை போதாது என முன்வைக்கப்படும் அடிப்படை வாதம் புள்ளிவிபர ரீதியாக வலுவற்ற வாதம் என நிறுவினார். அத்துடன் இந்திய மற்றும் இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, உயர்கல்வி கற்கும் இலங்கை மாணவர்களின் எண்ணிக்கை மேலே குறிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் உள்ளடக்கப்படவில்லை எனவும் அவ் எண்ணிக்கை ஏறக்குறைய 200 இனை அண்மிக்கும் எனவும் குறிப்பிட்டார். குறிப்பாக இந்தியாவின் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் மட்டும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 61 மாணவர்கள் மெற்றிக்குலேசன் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். எனவே இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் போது மாணவர்களின் எண்ணிக்கை என்பது ஒரு தடையான விடயமாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை எனும் வாதத்தை மிகவும் துல்லியமாக சேர். பொன். அருணாசலம் முன்வைத்தார். இவரது இந்தக் கருத்து இலங்கைப் பல்கலைக்கழகம் தொடர்பாக மாணவர்களின் எண்ணிக்கையை மையப்படுத்தி மறுதலிப்புப் போக்கு கொண்டிருந்தவர்கள் தமது கருத்தியலை மீள் பரிசீலனைக்கு உட்படுத்தும் அவசியத்தைத் தோற்றுவித்தது.

அத்துடன் பௌத்த கலாசாரப் பின்னனியைக் கொண்ட பர்மா, பூட்டான், ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் இருந்து இலங்கையை நோக்கி சமஸ்கிருதம் மற்றும் பாளி கற்கைகளுக்காக மாணவர்கள் வருவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டிய சேர்.பொன். அருணாசலம் அவர்கள் இந் நாடுகள் மாணவர்களை வழங்குவது மட்டுமன்றி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியிலும் பல்வேறு விதமான தாக்கங்களைச்

செலுத்தும் எனவும் குறிப்பிட்டு இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

இலங்கையில் அமைக்கப்படும் பல்கலைக்கழகம் எத்தகைய நோக்கங்களைக் கொண்டிருக்க வேண்டும், அங்கு கற்பிக்கப்படும் பாடங்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது குறித்தும் சேர். பொன். அருணாசலம் அவர்கள் மிகுந்த கரிசனை கொண்டிருந்தார். கற்பித்தல் முறைமைகள் பரீட்சை மையமானதாகவன்றி அறிவுற்பத்தி மையமாக அமைய வேண்டும் என்பது அவரது பிரதான சிந்தனையாகவிருந்தது. அத்துடன் ஆழமான மேலைத்தேய இலக்கியப் பயில்வு இலங்கை மாணவர்களுக்கு அவசியமற்றது எனவும், அவர்கள் தமிழ் மற்றும் சிங்கள மொழி இலக்கியங்களை ஆழமாகக் கற்று அவற்றை மேலைத்தேய இலக்கியங்களுடன் ஒப்பீடு செய்யும் வாண்மையுடையவர்களாக நிமிர வேண்டும் என்பது அருணாசலம் அவர்களின் பிரதான எண்ணக்கருவாகவிருந்தது. ஆங்கிலத்தில் இலக்கியப் புலமை பெறுவதில் இலங்கை மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள்வது சகஜமானது எனவும், அவர்கள் ஆங்கிலத்தில் இலக்கியப்புலமை பெறுவதற்கு அப்பால் ஆங்கிலச் சூழலில் தம்மைத் தக்க வைத்துக் கொள்ளத்தக்கவர்களாக இருப்பதே அவசியமானது எனவும் வலியுறுத்தியதுடன், இலங்கைப் பல்கலைக்கழகச் செல்நெறி அவ்வாறே அமைய வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்படும் போது அதனுடைய செயற்பாட்டு ஒழுங்குகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது மட்டுமன்றி, பதவிநிலை ஆளணிகள் எவ்வாறு கட்டமைக்கப்பட வேண்டும், அவர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள் எவ்வளவு தொகையாக அமைய வேண்டும் என்பது குறித்தும் மிகவும் விபரமாகவும் துல்லியமாகவும் சேர். பொன். அருணாசலம் அவர்கள் பதிவுகளை மேற்கொண்டார்.

ஒரு பல்கலைக்கழகத்தை நடத்துவதற்கு வருடம் ஒன்றுக்கு எவ்வளவு நிதி தேவைப்படும் என்பதைக்கூட கணித்திருந்தார். அவரது கணிப்பின் பிரகாரம் **1905** களில் பல்கலைக்கழகம் ஒன்றை இயக்குவதற்கு மாதாந்தம் இலங்கைப் பணம் ஒரு லட்சம் தேவைப்பட்டிருந்தது. றோயல் கல்லூரி பல்கலைக்கழகக் கல்லூரியாக மாறினால் இத் தொகை இன்னும் கணிசமாகக் குறையும் எனவும் சேர்.பொன். அருணாசலம் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

அவர் பல்கலைக்கழகக் கல்வி குறித்த தனது கரிசனையை இலங்கையில் ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்படுவதற்கு முன்னரே பல கட்டுரைகளிலும் பொது அரங்க உரைகளிலும் பிரதிபலித்தார். அத்துடன் ஆட்சியிலிருந்த பிரித்தானிய அரசின் நிர்வாகத் தலைமைகள் பலருடன் கடித வழியாகத் தொடர்பு கொள்ளத்தக்க சந்தர்ப்பங்கள் மூலமும் இலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என்பதை அவர் பல தடவைகள் வலியுறுத்தினார்.

இலங்கைப் பல்கலைக்கழக அமையம் குறித்தும் அதில் சேர்.பொன். அருணாசலம் அவர்களின் பங்களிப்புக் குறித்தும் ச. அம்பிகைபாகன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“அரசியல் விடுதலைக்குப் போல் இலங்கையில் ஒரு சர்வகலாசாலை தாபிக்கப்பட வேண்டும் எனும் கிளர்ச்சிக்குத் தலைவராக விளங்கியவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம்

அவர்களே. அவர் செய்த பிரசாரத்தின் பயனாக 1906 ஆம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைச் சங்கம் தாபிக்கப்பட்டது. பல இனத்தவர்களைக் கொண்ட இச் சங்கத்துக்கு சேர்.பொன். அருணாசலம் அவர்களே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இச் சங்கத்தின் முயற்சியினாலேயே 1921 ஆம் ஆண்டில் இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரி தாபிக்கப்பட்டது. இச் சங்கம் ஒரு சஞ்சிகையையும் நடத்தி வந்தது. இச் சஞ்சிகையின் இதழ்கள் இலங்கையின் கல்வி வளர்ச்சியை அறிவதற்கு மிகவும் பிரயோசனமுள்ளதாகக் காணப்படுகின்றது.

இலங்கைச் சர்வகலாசாலை நிர்வாகத்தில் சேர்.பொன். அருணாசலம் பெரும் பங்கெடுத்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் பெரும் நூல் நிலையத்துக்கு வித்திட்டவர் இவரே. அகால மரணமடைந்த தனது மகன் பத்மநாபா பெயரால் அவர் சேகரித்து வைத்திருந்த நூல்களை சர்வகலாசாலைக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்." (அம்பிகைபாகன், 1980)

மேற்குறிப்பிட்ட இக் கருத்து சேர்.பொன். அருணாசலம் இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் கொண்டிருந்த ஆழ்ந்த கரிசனையை வெளிப்படுத்துகின்றது.

இலங்கைப் பல்கலைக்கழக அமையம் போன்று பின்நாளில் உருவான தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் முக்கியஸ்தரான பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள், குறித்த இயக்கத்தின் வரலாறு குறித்து ஆங்கிலத்தில் எழுதிய தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் தினக்குறிப்பு எனும் நூலில் இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் சேர்.பொன். அருணாசலத்தின் பங்களிப்புக் குறித்துப் பதிவு செய்துள்ளார். "1921 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தின் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியாக தாபிக்கப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக கல்லூரிக்குப் பின்னால் சேர்.பொன். அருணாசலத்தின் பங்களிப்பும் அழுத்தமும் இருந்தது. இதன் தொடர்ச்சியாகவே 1928 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது" எனக் குறிப்பிடுகின்றார்.

அரசியல் விடுதலைக்குப் போல் இலங்கையில் ஒரு சர்வகலாசாலை தாபிக்கப்பட வேண்டும் எனும் கிளர்ச்சிக்குத் தலைவராக விளங்கியவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே. அவர் செய்த பிரசாரத்தின் பயனாக 1906 ஆம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைச் சங்கம் தாபிக்கப்பட்டது. பல இனத்தவர்களைக் கொண்ட இச் சங்கத்துக்கு சேர்.பொன். அருணாசலம் அவர்களே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இச் சங்கத்தின் முயற்சியினாலேயே 1921 ஆம் ஆண்டில் இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரி தாபிக்கப்பட்டது.

இவ் உரையின் வழியாக பின்வரும் கருத்தை அழுத்தமாகப் பதிவு செய்து எனது உரையை நிறைவு செய்ய விரும்புகின்றேன்.

இலங்கையில் பல்கலைக்கழக முறைமை தாபிக்கப்பட வேண்டும் என்பதிலும் அப் பல்கலைக்கழகம் சுயாதீனமானதாகவும் சுதேசியக் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தக்கதாகவும் இருக்க வேண்டும் எனும் சிந்தனையை வலுவாக முதலில்

பதிந்தவர் சேர்.பொன். அருணாசலமே. அவர் இது தொடர்பில் பல்வேறு தொடர்பாடல்களை மேற்கொண்டதுடன் பிரித்தானிய அரசுக்கும் அழுத்தங்களைக் கொடுத்து வந்தார். இலங்கைப் பல்கலைக்கழக அமையம் எனும் அமைப்பை உருவாக்கி அதன் தலைவராக செயற்பட்டு தன் வாழ்வுக் காலத்தில் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியைத் தாபித்தார். அதுவே பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகமாக மாற்றம் பெற்றது. எனவே இலங்கைப் பல்கலைக்கழக முறைமை தொடர்பில் ஆழமான கரிசனையுடன் நீண்ட காலமாகச் செயற்பட்டு இதனை தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் செயற்படுத்தியவர் எனும் பெருமை சேர்.பொன். அருணாசலத்துக்கு உண்டு. எனவே இவரை 'இலங்கைப் பல்கலைக்கழக முறைமையின் தந்தை' எனப் பிரகடனப்படுத்துவதில் இரு வேறு கருத்து நிலைகள் இருக்க முடியாது. இருந்தும் அண்மைக் காலமாக பல்கலைக்கழக வரலாறுகள் குறித்துப் பேசப்படும் இலங்கையின் ஆவணங்களில் சேர்.பொன். அருணாசலத்தின் பங்களிப்புக் குறித்துப் பேசப்படுவதில்லை. அல்லது மாறாக ஒற்றை வரிகளில் குறிப்பிட்டுவிட்டு வேறு நபர்கள் முதன்மைப்படுத்தப்படுகின்றார்கள். வரலாறு மறைக்கப்படுவதை மன்னிக்க முடியாது என்பார்கள் வரலாற்றாசிரியர்கள். எனவே, அவரது மறைவின் நூற்றாண்டு நினைக்கப்படும் 2024 ஆம் ஆண்டில் 'இலங்கைப் பல்கலைக்கழக முறைமையின் தந்தை' எனும் கௌரவத்தை வழங்குவதற்கு இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்வரவேண்டும்.

இந்தச் சிந்தனையையும் கோரிக்கையையும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் பிரசன்னத்தின் முன்னிலையில் தமிழ் ஆராய்ச்சிக் கல்விக்காக உழைத்த பல்கலைக்கழகப் பேராசிரியர், வணக்கத்துக்குரிய தனிநாயகம் அடிகள் நினைவுப் பேருரை ஊடாக வலியுறுத்தக் கிடைத்தமையை ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாக நான் கருதுகின்றேன். அதற்கு வழியமைத்த அத்தனை பேருக்கும் எனது நன்றிகள்.

உசாத்துணைகள்

1. Ariyapala, M. B., & St. J. Bastiampillai, B. E. (1987). University Education in Sri Lanka – Some Aspects. Journal of the Royal Asiatic Society of Sri Lanka, 32, 1–24.
2. De Silva, K. (1978). The Universities and the Govern ment in Sri Lanka. Minerva, 16(2), pp 251–272.
3. 3. Matthews, B. (1995). University Education in Sri Lanka in Context: Consequences of Deterio rating Standards. Pacific Affairs, 68(1), 77–94.
4. Pieris, R. (1964). Universities, Politics and Public Opinion in Ceylon. Minerva, 2(4), 435–454.
5. Ponnambalam Arunachalam Scholar and Statesman 18531924 (1953), Sir Ponnambalam Arunachalam Centenary Committee Ltd, Colombo, Sri Lanka.
6. Sinnathampy, A (1981). The Diary of the Tamil University Moment, Ganesharatnam, P. Jaffna, Sri Lanka.
7. Vythilingam, M.(1977). Ramanathan of Ceylon, The life of Sir Ponnampalam Ramanathan, Thirumagal Press. Chunnakam, Sri Lanka
8. அம்பிகைபாகன்,ச.(1980). சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்சினைகள்.
9. அறிஞர் தனிநாயகம் அடிகள் தமிழ்த்தூது – கட்டுரைக் கொத்து, (1998). உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
10. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு (1977). அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

‘மில்க்வைற்’

சுதேச நிறுவனம்; உள்ளூர் உற்பத்திக்கான உந்து சக்தி

வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக ‘இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை’ என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் ‘M.A in Peace Study’ ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

முகப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆய்வுகள் (2023) இலங்கையின் ‘சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள்’ பொருளாதார மீட்சியில் முக்கிய பங்கு வகிக்க முடியும் என மதிப்பிட்டுள்ளது. மதிப்புச் சங்கிலிகளுடன் (*Value Chain*) மீண்டும் அக்கறையுடன் ஈடுபடுவதன் மூலம், உற்பத்தி மற்றும் வணிகங்களை புத்துயிர் பெறச் செய்ய முடியும். இலங்கையில், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் 75% இற்கும் அதிகமான நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளன. இவை 20% இற்கும் அதிகமான ஏற்றுமதிகள், 45% வேலைவாய்ப்பு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 52% ஆகியவற்றைக் கொண்டுள்ளன. இன்றைய நிலையில் உலகளாவிய பெறுமதிச் சங்கிலியுடன் இலங்கையை இணைக்க நடவடிக்கைகள் உடனடியாகத் தேவை. இந்தச் செயற்பாட்டில் வரும் வெற்றிகள் அதிக உள்ளூர் வேலை வாய்ப்புகளையும் நிலையான

Image Source : www.madathuvaasal.com

வெளிநாட்டு நாணய வரவையும் உருவாக்கும். முக்கியமாக இறக்குமதியைக் கணிசமாகக் குறைக்க பங்களிப்பு நல்கும்.

போர் இலங்கையின் பொருளாதாரத்தைச் சிதைத்த மூல வேராக இருந்து வந்துள்ளது. முக்கியமாக வடக்கு - கிழக்கின் சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் செயற்பாட்டை அது அழித்தது. அல்லது இயங்க விடாமற் செய்தது. இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தமிழரின் பங்களிப்பும் அவசியமானதாகும். மீண்டும் தமிழரைப் புறக்கணிக்கும் நிலை தொடர்ந்தால் இலங்கை மீண்டும் ஒரு பொருளாதார நெருக்கடியை விரைவில் உணர நேரலாம். ஆகவே கடந்த காலத்தின் பொருளாதார நிலையை மாற்ற வேண்டியுள்ளது. அதற்கு வடக்கு - கிழக்கில் இயங்கி வந்த சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களின் மீள் எழுச்சி அவசியமானதாகிறது. 'மில்க்வைற்' நிறுவனம் அவ்வாறாக வடக்கின் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த முக்கியமான ஓர் உள்ளூர் நிறுவனம் ஆகும். அந் நிறுவனத்தைப் பற்றி அறிவது, ஒரு வகையில் வடக்கு - கிழக்கின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான நல் அம்சங்களை அறிவதும் ஆகும்.

'மில்க்வைற்' இன் கதை

யாழ்ப்பாணத்தின் உள்நாட்டு உற்பத்திகளை ஒரு வகையில் இடம்சார் பெருமை தரும் உள்ளூர் உற்பத்தி வகைகள் எனக் குறிப்பிடலாம். உதாரணமாக பருத்தித்துறை வடை, வியாபாரிமூலை எள்ளுருண்டை, கொழும்புத்துறை நண்டு, பளை தேங்காய், நீர்வேலி வாழைப்பழம், நெடுந்தீவு ஒடியல், மட்டுவில் கத்தரிக்காய் போன்றவற்றைச் சொல்லலாம். தொழில்சார் திறன், நீண்ட

கே. கனகராஜா

Image Source : namathu.blogspot.com

குடும்பப் பாரம்பரியம், திரண்ட தொழில் நுணுக்கம், மண்ணின் தரம், காலநிலைசார் இட அமைவு என்பன இடம்சார் உள்ளூர் உற்பத்தி வகைகளின் செயற்பாட்டிற்கு காரணங்களாக அமைகின்றன.

யாழ்ப்பாணத்தில் சுதேச உற்பத்திகள் செழிப்போடு இருந்த நேரம், உள்ளூர்த் தேவைகளுக்கு உள்ளூர் உற்பத்திகள் மிக அவசியம் என்ற விழிப்புணர்வு சமூக மட்டத்தில் இருந்தது. இக் காலத்தில் 'மில்க்வைற் தொழிலகம்' தம் பங்கிற்கு சவர்க்கார உற்பத்தியில் கவனிப்பை ஏற்படுத்தியிருந்தது. பலரும் சேமித்துக்

மில்க்வைற் செய்தி
Milk White News

தபாற் பெட்டி இலக்கம்: 77 யாழ்ப்பாணம். தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ தை 1977 — இதழ் - 13

உழவுத் தொழிலின் உயர்வு

உழவுத் தொழிலின் உயர்வைப் பற்றித் திருவள்ளுவரும், ஏர் பிடிப்போரின் ஏற்றத்தைப் பற்றிக் கம்பரும் இருவேறு காலங்களில் போற்றியிருக்கிறார்கள். தன்குடி உயர்தற்குரிய காரியத்தைச் சலியாது ...செய்பவனுக்கு மேலான பெருமை உண்டாகும் என்று குடி ...செயல்வகை கூறியபின், திருவள்ளுவர் உழவுத்தொழிலின் சிறந்ததைக் கூறினார். அஃது இல்லாவிட்டால் வருவதாகிய வறுமையை அடுத்து நல்குரவு என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

உழுதற்றொழில் குடியுயர்த்தற்கு ஏது என்பர். ஏர் பிடித்து உழுவார் வழியிலே உலகம் நடக்கிறது. உழவுத் தொழிலே உலகில் முதன்மையானது. வேறு தொழில்கள் செய்வாரையும் உழவர் தாங்குவதால் அவர்கள் உலகத்துக்கு அச்சாணி போன்றவர்கள். உழவுத் தொழிலால் விளைவைப் பெற்று உண்டு வாழ்பவரே உண்மையான வாழ்வு வாழ்பவர். ஏனையோர் எல்லோரும் பிறரைத் தொழுதுண்டு வாழ்பவர். உழவர் தங்கள் நெற்கதிர் நிழலில் அதிகாரிகளையும் வாழவைப்பர். அவர்கள் பிறரிடஞ் சென்று எதனையும் இரந்து வேண்டாது, தாமே பிறருக்கு உபகரிப்பவராவர். உழவர் இல்லாவிட்டால் துறவறத்தினரும் தம் நெறியில் நிற்பது அருமை.

உழுதலினும் எருவிடுதல் நல்லது. அதனினும் நல்லது களைபெடுத்தல். அதனினும் நல்லது நீர்பாய்ச்சுதல். அதனினும் நல்லது மிருகங்கள் அழிக்காமல் பாதுகாத்தல். எனவே மனைவியைப் பாதுகாக்கும் கணவனைப் போல

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

இணுவில் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்கள் பசளை விதைத்தல் உபகரிக்கிறார்கள்.

★ ★ உழவர் மலர் ★ ★

Image Source : noolaham.net

கொடுத்த வேப்பங் கொட்டைகளைச் சுத்தம் செய்து, நுளம்பை விரட்ட மில்க்வைற் வேப்பங்கொட்டைகள் என்றும், அந்த வேப்பங்கொட்டைகளை மூலப் பொருளாக உபயோகித்து 'நீம் சோப்' என்றும், வேப்பெண்ணெய் என்றும், 'நீமியா' உரம் என்றும் மில்க்வைற் தொழிலகம் தன் உற்பத்திகளை அறிமுகப்படுத்தியது.

'மில்க்வைற்' என்பது சவர்க்காரத்தின் பெயர் மட்டும் அல்ல; அது உள்ளூர் உற்பத்திக்கான ஒரு குறியீடும் கூட. 'மில்க்வைற்' ஒரு காலத்தில் பட்டிதொட்டி எங்கும் காணக்கிடைக்கும் ஒரு பெயராக இருந்தது. ஒரு தொழில் நிறுவனம் எவ்வளவு தூரம் தன் சமூகம்சார் அக்கறையுடன் செயற்பட முடியும் என்பதற்கு 'மில்க்வைற்' ஒரு சிறந்த உதாரணம். காலப்போக்கில் உற்பத்தி மற்றும் செயற்பாடுகளில் மங்கிப்போனாலும் 'மில்க்வைற்' ஒரு சந்ததியின் பெருமைக்குரிய நினைவாக உள்ளது. தற்போதைய காலத் தேவையின் புத்தாக்கங்களுக்கு இசைந்து, மீண்டும் துளிர்விடக் கூடிய ஒரு சுதேச உற்பத்திக்கான பல அம்சங்கள் 'மில்க்வைற்' இல் உண்டு.

'மில்க்வைற்' இன் உரிமையாளர் கே. கனகராஜா அவர்களின் முன்னோடி முயற்சிகள் பற்றி அமெரிக்க எழுத்தாளரும் அறிஞருமான டொக்டர் ஹோம்ஸ் 'யாழ்ப்பாணம் 1981' என்னும் நூலில் எழுதியிருக்கிறார். கந்தையா கனகராஜா நவம்பர் 2, 1927 இல் கந்தையா வீரகத்தி மற்றும் மீனாட்சி முருகேசு ஆகியோரின் மகனாக இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்தார். ஐந்து பிள்ளைகளில் ஒருவரான கனகராஜா, சிறுவயதிலேயே படிப்பைக் கைவிட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார். ஏனெனில் அவரது குடும்பத்தால் அவருக்கு கல்வியை வழங்க முடியவில்லை. 12 வயதாகும் போது, கண்டிக்கு அருகிலுள்ள கம்பளையில் புகையிலை வியாபாரியான உறவினருடன் வேலை செய்யத் தொடங்கினார். பின்னர் அவர் தனது சகோதரருடன் நுவரெலியாவிற்கு அருகிலுள்ள கினிகத்தேனையில் உள்ள இறப்பர் தோட்டத்தில் இறப்பர் உற்பத்தியாளராகப் பணியாற்றினார். கனகராஜாவின் தந்தை சவர்க்காரம் தயாரிப்பதை குடிசைத் தொழிலாக அமைத்தபோது, மகன் தனது வேலையை விட்டுவிட்டு யாழ்ப்பாணத்திற்கு திரும்பினார். சவர்க்கார உற்பத்தி மற்றும் விநியோகம் இரண்டையும் கற்றுக்கொண்டார். தந்தை மற்றும் மகனின் விடாமுயற்சியால், மில்க்வைற் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளுடன் கூட போட்டியிட முடிந்தது. நீலச் சவர்க்காரம், 'பார்' சவர்க்காரம், மருந்துச் சவர்க்காரம், சலவைத் தூள் ஆகியன மில்க்வைற் தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் உற்பத்திகளின் தொகுப்பாக இருந்தன. இயற்கை முறையில் உற்பத்தி செய்யப்படும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் கரிம உரங்களும் மில்க்வைற் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. "உயர் தரம், குறைந்த விலை, நல்ல விநியோகம் மற்றும் திருப்தியான பணியாளர்கள் என்பன தயாரிப்பின் வெற்றிக்குப் பங்களித்தன" என்று கனகராஜா அவர்கள் கூறியுள்ளார்.

கனகராஜாவின் ஆர்வங்களில் சமூக சேவையும் ஒரு பகுதியாக இருந்தது. மில்க்வைற் மூலம் வன்னிப் பிரதேசத்தில் குடியேற்றவாசிகளுக்கு உதவுவதற்காக கிணறுகள் தோண்டப்பட்டன; தொட்டிகள் தோண்டப்பட்டன. மரம் நடும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. நடவு செய்வதற்காக தென்னை மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. மருத்துவமனைகள், பள்ளிகள், அனாதை இல்லங்கள் மற்றும்

Image Source : www.madathuvaasal.com

வழிபாட்டுத்தலங்கள் என மில்க்வைற் தொழிற்சாலையின் இலாபத்தில் சமூகம் பயனடைந்தது.

“உள்நாட்டு உற்பத்திகளுக்கான உள்ளூர்த் தேவையும், உள்ளூர்த் தயாரிப்புகளில் நமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையும் எங்களை முன்னோக்கிச் செல்ல உதவியது” என ஒரு செவ்வியில் கனகராஜா கூறுகிறார். “ஆனால் காலம் மாறிவிட்டது. இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பலர் வெளிநாட்டு விழுமியங்களால் தூண்டப்படுகிறார்கள். இது எங்கள் வீழ்ச்சிக்குப் பங்களித்துள்ளது.” மில்க்வைற் சவர்க்காரம் மட்டும் கனகராஜாவுக்குப் பாராட்டுகளைப் பெற்றுத் தரவில்லை. தயாரிப்பை பொதி செய்யும் அவரது புதிய முறை டாக்டர் ஹோம்ஸ் உட்பட பல அபிமானிகளைக் கவர்ந்தது. “புதிய விடயங்களை முதலில் உள்வாங்குவது எனது ஆழ் உணர்விலிருந்து வெளிப்படுகிறது” எனக் கூறுகிறார் திரு. கனகராஜா.

கல்வித்துறையில், குறிப்பாக அறநெறித்துறையில், அரிவரியில் ‘ஆனா ஆவன்னா’ எழுதிப் பழகப் பனையோலையில் அரிச்சுவடி செய்து பள்ளிக்கூடங்களுக்கும், கோயில்களுக்கும் அனுப்புவதில் இருந்து, ஆத்திசூடி - நீதி நூல் வாசகங்கள் கொண்ட சிறு வெளியீடுகள் அச்சிட்டு விநியோகிப்பது வரை அவரது சமூக சேவை விரிந்த தளத்தில் பயணித்தது.

மில்க்வைற் சவர்க்காரத்தின் வெளிப்புற விளம்பரங்களுக்குச் செலவு செய்வதற்குப் பதிலாக உள்ளூர்த் தயாரிப்புகள் பரிசுகளாக விநியோகிக்கப்பட்டன. இதனால் மில்க்வைற் மட்டுமல்ல, ஏனைய உள்ளூர்த் தயாரிப்புகளும் பயனடைந்தன. “உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்” என்று கோஷம் பூண்டார் திரு. கனகராஜா. களிமண்ணால் செய்யப்பட்ட பொருட்கள், சங்கானையில் உள்ள மட்பாண்ட உற்பத்தியாளர்களிடமிருந்து கவிஞர் பாரதியின் சிலைகள், கைத்தறி மற்றும் பிற பொருட்கள் என்பன வாடிக்கையாளருக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மில்க்வைற் சவர்க்காரத்திற்கான உறைகளுக்குப் பணம் செலவழிப்பதை விட, திருவள்ளுவர் ஸ்டிக்கர்கள், அவரது பட நகல், திருக்குறள் என்பன தயாரிப்புடன் வழங்கப்பட்டன. ‘மில்க்வைற் செய்தி’ பத்திரிகை 1970 களில் தொடங்கப்பட்டு, யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான பல்துறை இதழ். மில்க்வைற் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட இந்த இதழின் ஆசிரியர் க.சி குலரத்தினம் ஆவார். இலக்கியம், கலை, சமயம், வியாபாரம் என பல்துறை சார்ந்த விடயங்களைத் தாங்கி இந்த இதழ் வெளியானது. மக்களுக்கு அறிவைப்

போதிக்க வேண்டும் என்ற நோக்குடன் இது வெளியானது. இது, அடிமட்ட மக்களின் விழிப்புணர்வில் கணிசமான பங்களிப்பைச் செலுத்தியது. இன்றும் இவை எண்ணிம வடிவில் பாதுகாக்கப்பட்டுள்ளன (*https://noolaham.org*).

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் குடாநாட்டில் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது, சவர்க்காரம் தயாரிக்கும் நடவடிக்கையை தென்மராட்சிக்கு மாற்றி, சிறிய அளவில் மீண்டும் ஆரம்பிக்க வேண்டியிருந்தது. சவர்க்காரங்களின் கடுமையான பற்றாக்குறையால் ஒரு தொற்றுநோய் வெடிக்கும் சாத்தியம் இருந்தது. "தமிழ் மக்களுக்குத் தேவையான நேரத்தில் அவர்களுக்கு உதவ முடிந்ததால் நான் மிகுந்த திருப்தி அடைந்தேன்" என இது குறித்து கனகராஜா கூறும் வார்த்தைகள் மிகப் பெறுமதியானவை. ஒரு அசுர நெருக்கடியில் பலரின் தேவைக்கு மில்க்வைற் உதவியது. ஒரு நெருக்கடி நிலையின் போது, உள்ளூர்ப் பொருளாதாரம் தரும் உள்நாட்டு உற்பத்திகள் தான் மக்களுடன் நெருங்கி இருக்கும் என்பதற்கு மில்க்வைற் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. "சகிப்புத்தன்மை, தன்னடக்கம், ஒற்றுமை, விடாமுயற்சி, கடின உழைப்பு போன்ற விழுமியங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். திருக்குறளின் விதிகளின்படி அனைவரும் வாழ வேண்டும். அதுவே எனது விருப்பம்" எனக் கூறும் கனகராஜாவில் ஆன்மீகத்தின் பாதிப்பு அதிகம் இருந்தது.

இந் நெருக்கடிக் காலங்களில் கடைகளில் மெல்ல மெல்ல குளிக்கும் சவர்க்காரத்தின் இருப்புத் தீர்ந்து போனது. சவர்க்காரத்தை சின்னச் சின்னத் துண்டாக்கிப் பாவிப்பது; துணியில் சுருட்டிப் பாவிப்பது என்று சிக்கன நடவடிக்கைகள் நாளடைவில் அரங்கேறின. கையிருப்பில் இருந்த பகட்டான சவர்க்காரங்கள் தீர்ந்து போக, தாய் வீடு தேடி வரும் மகள் போல எல்லோரும் 'மில்க்வைற்' இனை நோக்கி ஓடினர். மில்க்வைற் தன்னால் முடிந்தளவு கைகொடுத்தது. இரண்டாம் கட்ட ஈழப் போர் கனத்த போது பொருளாதார முடக்கம் மேலும் அதிகரித்தது. தொண்ணூறுகளின் முற்பகுதியில் பெற்றோல், டீசல் உட்பட பல பொருட்கள் பட்டியலிட்டுத் தடை செய்யப்பட்டன. மில்க்வைற் சவர்க்காரம் விலை மலிவு என்றாலும் வேகமாகக் கரையக் கூடியது. உள்ளூர் உற்பத்தியாக இருந்தாலும், தயாரிப்பதற்கான மூலப் பொருட்களுக்கு தென்னிலங்கையையே நம்பியிருக்க வேண்டிய சூழல் நிலவியதால், மில்க்வைற் தொழிற்சாலையும் மெல்ல முடங்கிப் போனது. மில்க்வைற் சவர்க்காரமும் இல்லாத ஒரு காலமும் எமக்கு இருந்தது.

போர் கனகராஜாவின் வியாபாரத்தைச் சுருங்கியது; போக்குவரத்து கடினமாகிவிட்டது; பாதுகாப்பின்மை அதிகரித்தது; மூலதனம் குறைந்தது; காப்பீட்டுத் தொகை, வங்கி வசதி, மின்சாரம், தொலைபேசித் தொடர்புகள் எதுவும் இல்லை. யாழ்ப்பாண மக்களின் தொடர்ச்சியான இடப்பெயர்வு மற்றும் கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலை ஆகியவை உற்பத்தியாளரின் துயரங்களை அதிகரித்தன. உற்பத்திக்கான உள்ளீடுகளை வாங்குவதில் உள்ள சிரமங்கள் அதிகரித்தன. குறைந்து வரும் சந்தை தவிர்க்க முடியாமல் மூலதனப் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது. கடன்களை திருப்பிச் செலுத்த முடியவில்லை. இது புதிய மூலதனத்தை திரட்டுவதில் சிக்கல்களை ஏற்படுத்தியது. 'மில்க்வைற்' நாளடைவில் கரைந்து போனது.

மில்க்வைற் உற்பத்திக்கும் அதன் உற்பத்தியாளர் கனகராஜாவுக்கும் இடையே ஒரு சோகமான ஒற்றுமை உள்ளது. அவர்கள் இருவரும் இப்போது செயலில், சேவையில்

இல்லை. எவ்வாறாயினும், யாழ்ப்பாணத்தில் ஒரு காலத்தில் செழித்தோங்கிய உள்ளூர்த் தொழிற்துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தியதில் 'மில்க்வைற்' இற்கு ஒரு அளப்பரிய பங்களிப்பு உண்டு. அதன் கடந்த காலப் பங்களிப்பும் அர்ப்பணிப்பான தொழில்சார் அக்கறையும் எமது சமூகத்தின் முதுசங்கள்.

போரின் பின்பு 15 வருடங்கள் கடந்த பிறகும் 'மில்க்வைற்' இன் தகுதி அறியாது அதனைத் தூங்கவிடுவது ஒரு புகழ் பூத்த சுதேச உற்பத்தியின் நிரந்தர மறைவுக்கு வழிகோலுவதாகிவிடும். சுதேச உற்பத்தியின் வளர்ச்சி தான் உள்ளூர்ப் பொருளாதாரத்தின் ஆதாரம். அதன் அடையாளங்கள் மீட்கப்படாவிட்டால் நாம் எல்லோரும் மிகப் பெரியதொரு பொருளாதாரச் சிக்கலைச் சந்திக்க வேண்டிய ஒரு நிலை வரும். 'மில்க்வைற்' இன் மீள்எழுச்சிக்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை.

உசாத்துணை

1. *Five Ways to Connect Sri Lanka's Small Businesses to Global Value Chains, https://blogs.adb.org/index.php/blog/fivewaysconnectsri lankassmallbusinessesglobalvaluechains Accessed on 15 October 2024*

2. *Impact of multiple crises on Sri Lanka's micro, small and mediumsized enterprises, First published 2023, International Labour Organi zation; https://www.ilo.org/sites/default/files/wcmsp5/groups/public/@asia/@robangkok/@ilocolombo/documents/publication/wcms_901205.pdf.*

3. *Lakhtakia,Shruti; Atapattu Mudiyanselage,Uda hiruni Shashadari Atapat; Walker,Richard Ancrum. Sri Lanka Development Update – Opening up to the Future (English). Washing ton, D.C. : World Bank Group. http://documents.worldbank.org/curated/en/099654510092428580/IDU1d5aa8c921ec43144c81b75b17ddf3456747e*

4. *Milk white reflects the ailing industry in Jaffna, https://www.tamilnet.com/art.html?catid=13&artid=1020*

5. *https://prabook.com/web/kandiah.kanagara jah/1038857*

6. *Northern Entrepreneur P.Nadaraja, owner of 'Anna Coffee' fame, no more, https://tamildiplo mat.com/blacktigersdaycommemoratedwith inthejaffnacampus2/*

7. *https://www.facebook.com/photo.php?fbid=145 0379701812973&id=633899963460955&set=a.633903053460646*

8. மில்க்வைற் அதிபர் க. கனகராசா, பதிப்பகம் மகாஜனா விடுதி மாணவர் மன்றம், 1978, பக்கங்கள்14, *https://noolaham.org.*

9. மில்க் வைற் யாழின் சுதேச நிறுவனம் | *Milk white soap factory Jaffna | How to make soap https://www.youtube.com/watch?app=desk top&v=SOsTDhxX6AM, Brand Podiyal.*

10. 10. யாழ் குடாநாடும் நீர்வளமும், திரு.க. கனகராசா ஜே.பி. *noolaham.net https://noolaham.net > project*

11. அமரர் பூபாலசிங்கம் மறைந்து 30 ஆண்டுகள் கடந்த நிலையில் இக்கட்டுரை அவரது வாழ்வும் பணியும் பற்றிய பதிவுகளை இரை மீட்கின்றது. அமரர் ஆர்.ஆர். பூபாலசிங்கம்: சில நினைவுகள். *https://noolthettamns.blogspot.com/2012/*

12. யாழ்ப்பாணத்துத் தொழில் சாலைகளும் புலம்பெயர்ந்தோரின் கடப்பாடுகளும். *https://eelamlife.blogspot.com/2012/09/blog post_19.html*

'இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்' எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.

● என். கே. எஸ். திருச்செல்வம்

கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என். கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் 'தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்', 'புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்', 'இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்', 'யார் இந்த இராவணன்', 'பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை', 'பண்டைய தமிழ் நூல்களில் சிவன்', 'கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்', 'தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?' போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

நாக மன்னன் பற்றியும், நாகக் கால்வாய் பற்றியும் குறிப்பிடும் இலங்கைத்துறை, கல்லடி நீலியம்மன் மலைக் கல்வெட்டுகள்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் நகரைக் கடந்து மட்டக்களப்புக்குச் செல்லும் வீதியில் உள்ள ஈச்சிலம்பத்தைச் சந்தியில் பிரதேச செயலகம் காணப்படுகிறது. இச்சந்தியில் இருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியில் ஈச்சிலம்பத்தையைக் கடந்து செல்லும்போது சுமார் 3 கி.மீ தூரத்தில் உப்பாறு எனும் ஆறு ஓடுகிறது. இவ்விடத்தில் கல்லடி ஆற்றுத் துறையடி அமைந்துள்ளது. சுமார் 100 மீற்றர் அகலமான இவ்வாற்றை படகு மூலம் கடந்து கிழக்குப் பக்கமாக மேலும் ஒரு கி.மீ சென்றால் நீலியம்மன் மலையை அடையலாம்.

இங்கு செல்வதற்கு தரைவழிப் பாதை ஒன்றும் உள்ளது. ஈச்சிலம்பத்தைச் சந்தியில் இருந்து மட்டக்களப்பு நோக்கி வெருகல் பாலத்திற்குச் செல்லும் பிரதான வீதியில் 3 கி.மீ தூரத்தில் இலங்கைத்துறைச் சந்தி உள்ளது. இங்கிருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் வீதியின் வலது பக்கம் பண்டைய ஆனைத்தீவு குளம் அமைந்துள்ளது. குளத்தின் அணைக்கட்டில் பாதை ஓரத்தில் பழமை வாய்ந்த கட்டம்மன் கோயிலும், கோயிலுக்குச் சற்றுத் தூரத்தில் குளத்தின் வடக்குப் பக்கத்தில் பண்டைய குடியிருப்பு

கல்லடி நீலியம்மன் மலை

நாக மன்னன் மற்றும் நாக கால்வாய் பற்றி பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

பாறையில் பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கல்வெட்டு

மலையின் மேல் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இடம்

நீலியம்மன் மலை அடிவாரத்தில் கோயில் இருந்த இடத்தில் கட்டப்பட்டுள்ள பௌத்த சிலைமனை

தற்போது பாதை ஓரத்தில் காணப்படும் நீலியம்மன் கோயில்

நீலியம்மன் மலையின் பின் பக்கம் ஓடும் உப்பாறு (1800 ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட நாக கால்வாயாக இருக்கலாம்)

ஒன்றின் எச்சங்களும் காணப்படுகின்றன. இவற்றைக் கடந்து செல்லும்போது முட்டுச்சேனை கரச்சி ஆறும், அதை அடுத்து சிறிது தூரத்தில் முட்டுச்சேனைச் சந்தியும் அமைந்துள்ளன. இங்கிருந்து வடக்குப் பக்கமாக இலங்கைத் துறைக்குச் செல்லும் வீதியில் முட்டுச் சேனை, வாழைத்தோட்டம் ஆகிய ஊர்களைக் கடந்து சென்றதும் 4 கி.மீ தூரத்தில் கல்லடி நீலியம்மன் மலை அமைந்துள்ளது.

இம்மலை அமைந்துள்ள கல்லடி எனும் இடத்தில் இலங்கையின் ஆதிக்குடிகளான வேடர் பண்டைய காலம் முதல் வாழ்ந்து வருவதாகவும், இவர்களின் மூதாதையர் மிகப் பண்டைய காலத்தின் இம்மலையில் நீலியம்மன் எனும் பெண் தெய்வத்தை வழிபட்டு வந்ததாகவும் முதியோர் கூறுகின்றனர்.

நீலியம்மன் தமிழர்களின் மிகப்பண்டைய கிராமியத் தெய்வமாகும். 2500 ஆண்டுகளுக்கு முன்பு நீலியம்மன் வழிபாடு தோற்றம் பெற்றதாக தமிழக ஆலய வரலாற்றுக் குறிப்புகள் கூறுகிறன. தமிழ்நாட்டில் பழையனூர், கோவில்பாளையம், உனையூர், அரணாரை, முதியானெரிச்சல் ஆகிய இடங்களில் நீலியம்மனுக்கு கோயில்கள் உள்ளன.

மிகப்பண்டைய காலத்தில் இலங்கைத்துறை - கல்லடி பகுதியில் வேடர் குல மக்கள் வாழ்ந்து வந்த காலத்தில் இங்கு மலைப் பாறைகள் நிறைந்து காணப்பட்டன. இவற்றில் பிரதானமானது நீலியம்மன் குடி கொண்டிருக்கும் மலையாகும். ஏனையவை நாசவன் கல் மலை, உழுவ மலை, கல் முகத்து மலை ஆகிய சிறிய மலைப்பாறைகளாகும். இங்கு



பரதர் குலத்தைச் சேர்ந்த சுவாமி நாகன் பற்றிய கல்வெட்டின் பிரதி

மலைப்பாறைகள் நிறைந்து காணப்பட்டதாலும், இவற்றில் பிரதான மலைப்பாறை அடிவாரத்தில் நீலியம்மன் குடி கொண்டிருந்ததாலும் இவ்வூர் கல்லடி எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. நீலியம்மன் குடி கொண்டிருந்ததால் இங்கிருந்த மலை நீலியம்மன் மலை எனப் பெயர் பெற்று விளங்கியது.

வேடர் குல மக்கள் தினமும் பயபக்தியுடன் மலையடிவாரத்தில் இருந்த நீலியம்மனுக்கு பூஜை வழிபாடுகள் நடத்தி வந்தனர். 1830 ஆம் ஆண்டு இவ் அம்மனுக்கு மலையில் கோயில் கட்டி வழிபட்டு வந்தனர்.

உள்நாட்டு யுத்தம் நிலவிய காலத்தில் 2006 ஆம் ஆண்டு இங்கிருந்த மக்கள் ஊரைவிட்டு இடம்பெயர்ந்து சென்ற காலகட்டத்தில் விமானத் தாக்குதலினால் கல்லடி நீலியம்மன் கோயில் முற்றாகச் சேதமடைந்ததாகவும், 2007 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின் ஊர் மக்கள் மீண்டும் இங்கு வந்தபோது கோயில் அழிக்கப்பட்டு, கோயில் இருந்த இடம் ஆக்கிரமிக்கப்பட்டு, அங்கு விகாரை அமைக்கப்பட்டு, அம்மன் சிலை வீதியில் போடப்பட்டிருந்ததாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. அதன் பின்பு ஊர் மக்கள் அம்மன் சிலையை எடுத்து நீலியம்மன் மலையின் முன்பாக உள்ள பிரதான வீதியின் அருகில் ஒரு சிறிய கோயில் கட்டி அங்கு சிலைகளை ஸ்தாபித்து வழிபட்டு வருகின்றனர்.

இவ்விதம் இரண்டாயிரம் ஆண்டு கால தொன்மை வரலாற்றைக் கொண்ட இம்மலைப்பகுதி நாக மன்னர்களுடன் தொடர்பு பெற்று விளங்கியுள்ளது. இலங்கையை ஆண்ட குட்டகண்ண தீசன் எனும் மன்னனின் இரண்டாவது மகனான மகாதாத்திய மகாநாகன் எனும் மன்னன் இங்கிருந்த வழிபாட்டுத்தலத்திற்கு மானியங்கள் வழங்கியமை பற்றிய கல்வெட்டுகள் இம்மலையில் பொறிக்கப்பட்டுள்ளன. இம்மன்னன் பொ.ஆ. 7 முதல் 19 ஆம் ஆண்டு வரை இலங்கையின் மன்னனாக ஆட்சி செய்து வந்துள்ளான். இவனது காலத்தில் பொறிக்கப்பட்ட ஏழு பிற்கால பிராமிக் கல்வெட்டுகள் இம்மலையில் உள்ளன. இவை அனைத்தும் பாறைக் கல்வெட்டுகளாகும். இவற்றில் 3 கல்வெட்டுகளில் நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது கல்வெட்டு நான்கு வரிகளில் எழுதப்பட்டுள்ளது.



பாமர பக்தன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி

இக்கல்வெட்டின் முதலாவது வரியில் "மகாததிய நாக மஹா ரஜ" எனவும், இரண்டாவது வரியில் "நாக அலிய" எனவும் எழுதப்பட்டுள்ளது. நாக அலிய என்பது நாக கால்வாய் எனப் பொருள்படுகிறது. மேலும் இம்மலை "பஹன பவத்த" என அழைக்கப்பட்டுள்ளமை பற்றியும் கல்வெட்டுக் கூறுகிறது. பஹன பவத்த என்பது தமிழில் "ஒளி மலை" எனப் பொருள்படும். இக்கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களின் படி, நாக மகாராஜன் இங்கு பஹன பப்பத விகாரை அமைத்து, அங்கு வசிக்கும் பிக்குகளுக்காகப் பூஜை ஒன்றை நடத்தியதாகவும், இங்குள்ள நாக எனும் பெயருடைய கால்வாய்க்குரிய நீர் வரியையும், இருபது பங்கு நெற் காணிகளுக்குரிய காணி வரியையும் விலக்குவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டாவது கல்வெட்டு மூன்று வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் முதலாவது வரியில் "மகா நாக ரஜ" என எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் படி, மகா நாக மன்னன் 24 கஹவனு பணம் விலை கொடுத்து வாங்கிய நிலத்தை பஹன பப்பத விகாரைக்கு வழங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மூன்றாவது கல்வெட்டின் இரண்டாவது வரியில் "நாக அலிஹி" எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் உள்ள விபரங்களின்படி, ரபா எனும் அமைச்சர் நாக கால்வாயின் நீர்ப்பாசனம் மூலம் கிடைக்கும் வரிப் பணத்தையும், அத்துடன் 500 கஹவனு பணத்தை வங்கியில் முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் வட்டியையும் பஹன பப்பத விகாரையில் வாசம் செய்யும் பிக்குமாரின் தேவைக்காகப் பயன்படுத்த வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் "நாக கால்வாய்" இப் பிரதேசத்தில் இருந்த விளை நிலங்களுக்கும், நெல் வயல்களுக்கும் நீர்ப்பாசனம் வழங்கிய முக்கிய பெரிய நன்னீர்க் கால்வாயாக இருந்திருக்க வேண்டும். இப்பிரதேசத்தில் பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் எதுவும் இல்லாதபடியால் நாக கால்வாயில் இருந்து கிடைக்கும் நீரின் மூலம் இப்பகுதி மக்கள் அதிக நெற் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு சிறந்த பயன் பெற்றிருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நன்னீர்க் கால்வாய் இன்று இப்பகுதியில் காணப்படவில்லை. இருப்பினும் நீலியம்மன் மலையின் பின் பக்கம் ஓடும் உப்பாறு அன்றைய நாக கால்வாயாக இருந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இன்று உப்பு நீர் கலந்து காணப்படும் இவ் ஆறு அன்று கடல் நீர் உட்புகாத வண்ணம் அமைக்கப்பட்டிருக்கலாம்.

கல்வெட்டுக்கள் காணப்படும் ஈச்சிலம்பத்தை வட்டவன் மலை

ஈச்சிலம்பத்தை வட்டவன் மலைப் பாறைகள்

கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள கற்குகை

பரதர் குலத்தைச் சேர்ந்த சுவாமி நாகன் பற்றிய கல்வெட்டின் அண்மித்த தோற்றம்

கல்லடி நீலியம்மன் மலையின் தெற்கில் 5 கி.மீ தூரத்தில் வெருகல் ஆறு ஓடுகிறது. அன்றைய நாக மன்னர்கள் இவ்வாற்று நீரை மறித்து அணைகட்டி, அங்கிருந்து வடக்கு முனை வரை ஒரு கால்வாயை வெட்டி இப்பகுதிக்கு நீர்ப்பாசனம் வழங்கியிருக்க வேண்டும். வெருகல் ஆற்றில் இருந்து இலங்கைத்துறை முகத்துவாரம் வரையான 12 கி.மீ தூரத்திற்கு இக்கால்வாய் வெட்டப்பட்டிருக்க வேண்டும். அல்லது வெருகல் ஆற்றில் இருந்து கால்வாய் வெட்டி இப்பகுதியில் ஏற்கனவே இருந்த சிற்றாறுகளுடன் இணைத்திருக்க வேண்டும். இப்பகுதியின் நீர்ப்பாசனத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அகலமான பெரிய கால்வாயை வெட்டி அதற்கு நாக கால்வாய் எனப் பெயரிட்டிருக்க வேண்டும். ஏனெனில் இன்று நீலியம்மன் மலையின் பின்பக்கம் நாம் காணும் உப்பாறு சுமார் 100 மீற்றர் அகலத்தில் ஒரே சீராக ஓடுவதைக் காணலாம்.

ஈச்சிலம்பத்தை - வட்டவன் கல்வெட்டுகள்

பரதர் குலத்தைச் சேர்ந்த சுவாமி நாகன் பற்றிய கல்வெட்டு

திருகோணமலையில் இருந்து தெற்கு நோக்கி மூதூர் ஊடாக மட்டக்களப்புக்குச் செல்லும் நெடுஞ்சாலையில், மூதூரில் இருந்து 23 கி.மீ தூரத்தில் சுங்கான்குழி சந்தி காணப்படுகிறது. இச்சந்தியின் கிழக்குப் பக்கத்தில் ஈச்சிலம்பத்தை, இலங்கைத்துறை ஆகிய கிராமங்களும், சந்தியின் தெற்குப் பக்கத்தில் 2 கி.மீ தூரத்தில் வட்டவன் எனும் கிராமமும் அமைந்துள்ளன.

வட்டவன் கிராமத்தின் கிழக்குப் பக்கத்தில் பிரதான மட்டக்களப்பு வீதியும், அதன் கிழக்குப் பக்கம் வயல் வெளிகள் நிறைந்த பகுதியும் காணப்படுகின்றன. பிரதான வீதியில் இருந்து 800 மீற்றர் தூரத்தில் வயல் வெளிகளின் மத்தியில் ஒரு ஒடுங்கிய நீண்ட காடுகளுடன் கூடிய மலைப்பாறைத் தொடர் காணப்படுகிறது. இப்பாறைத் தொடரின் அருகில் சுங்கான் குழி ஆறு ஓடுகிறது. ஆற்றுக்கு சமாந்திரமாக சுமார் 50 மீற்றர் அகலத்தில் 700 மீற்றர் நீளமான இப்பாறைத் தொடர் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஆங்காங்கே சிறிய காடும், ஒன்றோடு ஒன்று ஒட்டிய வண்ணம் மலைப் பாறைகளும், குன்றுகளும் காணப்படுகின்றன. இச் சிறிய காட்டில் உள்ள மலைப்பாறைகளில் இயற்கையாக அமைந்துள்ள 10 கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் பல குகைகளில் கற்புருவங்கள் வெட்டப்பட்டுள்ளன.

இவற்றில் 5 கற்குகைகளில் மொத்தமாக 5 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. 3 முற்காலப் பிராமிக் கல்வெட்டுகளும், 2 பிற்காலப் பிராமிக் கல்வெட்டுகளும் இதில் அடங்குகின்றன. இவற்றில் தமிழ் மொழியில் பெருமகன் எனும் அர்த்தம் கொண்ட பருமக எனும் சொல் 2 கல்வெட்டுகளிலும், பாண்டியரைக் குறிக்கும் மஜ்ஜிம எனும் சொல் ஒரு கல்வெட்டிலும், நாகரைக் குறிக்கும் நாக எனும் சொல் 2 கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது.

இவற்றில் நாக எனும் சொல் காணப்படும் முதலாவது கல்வெட்டில் நாக எனும் சொல்லுக்கு முன்பாக “பத” எனும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது. அதாவது “பத நாக” என எழுதப்பட்டுள்ளது. பத, பரத ஆகிய பதங்கள் “பரதர்” குலத்தவரைக் குறிக்கும் சொற்கள் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் குறிப்பிட்டுள்ளார். அதே சமயம் பேராசிரியர் எஸ். பத்மநாதன் “பத”

கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கற்குகை

எனும் சொல்லின் பெண்பால் வடிவமே "பதி" எனும் சொல் எனவும், "பத்தன்" எனும் தமிழ்ச் சொல்லே "பத" என பிராமிக் கல்வெட்டுகளில் வந்துள்ளது எனவும் கூறியுள்ளார்.

பேராசிரியர் பரணவிதான இச்சொல்லுக்கு ஆங்கிலத்தில் "Lord" எனப் பொருள் கூறியுள்ளார். எல்லாவல மேதானந்த தேரர் இதற்கு சிங்களத்தில் "சுவாமி" எனப் பொருள் கூறியுள்ளார். இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

"புசஹ பத்த நாகச மகாசித்தச"

இதன் பொருள் ஆங்கிலத்தில், "*Of Pussa, of Lord Naga, of Mahacitta*" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தமிழில், "புஸ்ஸவுடைய, சுவாமி நாகனுடைய மற்றும் மகாசித்தனுடைய" எனப் பொருள்படுகிறது. மேலும் பேராசிரியர்களின் கருத்துப்படி சுவாமி நாகனுடைய என்பதை பரதர் குலத்தைச் சேர்ந்த நாகனுடைய எனவும், பத்தன் நாகனுடைய எனவும் பொருள் கொள்ளலாம். இக்கல்வெட்டின் மூலம் நாக வழிபாடு செய்த ஓர் முனிவர் இப்பகுதியில் வாழ்ந்துள்ளார் எனத் தெரிகிறது.

பாமர பக்தன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

ஈச்சிலம்பத்தையில் உள்ள நாக எனும் சொல் காணப்படும் இரண்டாவது கல்வெட்டு பிற்காலப் பிராமிக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு பொ.ஆ. 1 ஆம், 2 ஆம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்டதாகும். இக்கல்வெட்டு பக்தன் நாகன் பற்றிக் கூறுகிறது. இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

"திஸ்ஸ தேரஹ லேன கடு திசிக பிகு சஹயே நியதே பிதஹ உபசக நாகஹ லேன"

இதற்கு ஆங்கிலத்தில் "*The cave of the elder Tissa has been dedicated to the Sangha of the four quarters. The cave of his father, the lay devotee Naga*" எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. இது தமிழில் "தேரர் திஸ்ஸவின் குகை நாலா பக்கங்களிலும் இருந்து வரும் சங்கத்தார்க்கு வழங்கப்படுகிறது. இவனின் தந்தையான பாமர பக்தன் நாகனின் குகை" எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டுகள் மூலம் ஈச்சிலம்பத்தை பகுதியில் நாக வழிபாடு செய்தவர்கள் வாழ்ந்துள்ளனர் என்பது தெரிய வருகிறது.

நாகர் பற்றிக் குறிப்பிடும் ரஜகல எனும்

ராசமலைக் கல்வெட்டுகள்

● என். கே. எஸ். திருச்செல்வம்

அம்பாறை மாவட்டத்தில், அம்பாறை நகரில் இருந்து மகாஓயாவுக்குச் செல்லும் வீதியில் 26 கி.மீ தூரத்தில் பக்கியல்ல என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு பிரதான வீதியின் மேற்குப் பக்கத்தில் ரஜகல மலை அமைந்துள்ளது. மலையின் தெற்குப் பக்கத்தில் நவக்கிரி குளம் காணப்படுகிறது. இம்மலை ராஸ்ஸ ஹெல, ராஸ்ஸகல, ரஜகலதென்ன, ராசமலை ஆகிய பெயர்களிலும் அழைக்கப்பட்டுள்ளது.

கடல் மட்டத்தில் இருந்து 1038 அடி உயரத்தில், அடர்ந்த காடுகளையும், மலைகளையும் கொண்ட இம்மலையில் 983 ஏக்கர் பரப்பளவில் பண்டைய இடிபாடுகள் காணப்படுகின்றன. மலையின் உச்சியில் உள்ள ஒரு சமதரையில் ஒரு சிறிய குளம் அமைந்துள்ளது. இது ரஜகல குளம் என அழைக்கப்படுகிறது. இக்குளத்தைச் சுற்றி பண்டைய கால வழிபாட்டிடங்கள் பல அக்கால மன்னர்களாலும், அரச பிரதானிகளாலும் கட்டப்பட்டுள்ளன.

ரஜகல என்றழைக்கபடும் ராசமலையும், அதன் தெற்கில் உள்ள நவக்கிரி ஆறு குளமும்

ரஜகல மலை உச்சியில் அமைந்துள்ள குளம்

இம்மலைக்கு ராஸ்ஸகல (ராசமலை) எனும் பெயர் வந்தமைக்கு இவ்விடத்தை ஆய்வு செய்த தொல்லியல் ஆய்வாளரான டி.எம். டி. பண்டார ஒரு காரணத்தையும் குறிப்பிட்டுள்ளார். ராக்சஸர் எனும் பழங்குடி இனத்தவர்கள் இம்மலையில் வாழ்ந்ததாகவும், சாதாரண மக்களைப் போன்ற இவர்கள் ராக்சஸ வழிபாட்டைக் கடைப்பிடித்தவர்கள் எனவும், இதனால் இது ராக்சஸகல என அழைக்கப்பட்டு அதுவே ராஸ்ஸகல என திரிபடைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

ராக்சஸ என்பது இராவணனின் வம்சத்தவர்களைக் குறிக்கும் பெயராகும். இராவணன் சிவ வழிபாட்டை மேற்கொண்ட மன்னன் என்பது அனைவரும் அறிந்ததே. இமயமலைப் பகுதியில் உள்ள கைலாச மலையின் தெற்கில் அமைந்துள்ள ஒரு ஏரி 'ராக்சஸ தல் ஏரி' என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் இராவணன் ஏரி என்பதாகும். இலங்கையில் பலாங்கொடையின் அருகில் உள்ள ஒரு மலையும் ராக்சஸ ஹெல எனப் பெயர் பெற்றுள்ளது. இது இராவணன் இருந்த மலை எனக் கூறப்படுகிறது. அந்த வகையில் ராஸ்ஸ கல எனும் ரஜகல மலையும் இராவணனுடன் தொடர்புடைய மலையாக இருக்க வேண்டும். இவர் குறிப்பிடும் ராக்சஸர் வழிபாடு என்பது யக்ஷ தெய்வ வழிபாடாக இருக்க வேண்டும். அதே சமயம் யக்ஷ குளத்தைச் சேர்ந்த இராவணன் சிவ வழிபாட்டை மேற்கொண்டவன் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஜகல மலையில் சிவ வழிபாடு மற்றும் நாக வழிபாடு போன்றவை 2000 ஆண்டுகளுக்கு

முன்பிருந்து இருந்துள்ளன என்பதற்கு இங்கு காணப்படும் பிராமிக் கல்வெட்டுகள் சான்றுகளாக விளங்குகின்றன. இவற்றைத் தவிர இங்கு இவ்வழிபாடுகளின் சான்றுகள் பல காணப்படுகின்றன. நாகராஜரின் புடைப்புச் சிற்பம், ஐந்து தலை நாகத்தின் சிற்பம், சுடுமண்ணில் செய்யப்பட்ட பெண் தெய்வத்தின் சிலை, சதுரவடிவ ஆவுடையாருடன் கூடிய சிவலிங்கம், முற்றுப்பெறாத வடிவம் கொண்ட ஆவுடையார், மகரக் கோமுகி, மேலும் சில கோமுகிகள் ஆகியவை இங்கு காணப்படுகின்றன.

மேலும் இங்குள்ள கற்குகைகளில் ஆதிவாசிகள் வரைந்த கற்கால ஓவியங்கள் உள்ளதாகவும், இவை சுமார் 35,000 ஆண்டுகள் பழமையானவை எனவும் அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். சாம்பல் மற்றும் சுண்ணாம்பு ஆகியவற்றால் வரையப்பட்ட இவ் ஓவியங்களில் திரிசூலக் குறியீடுகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மலை உச்சியில் உள்ள ரஜகல குளத்தைச் சுற்றியும், மலைச் சரிவுகளிலும், மலையின் அடிவாரத்திலும் இயற்கையாக அமைந்துள்ள நூற்றுக்கணக்கான கற்குகைகளும், ஏராளமான வழிபாட்டிடங்களின் இடிபாடுகளும் காணப்படுகின்றன. சுமார் 500 இற்கும் மேற்பட்ட தொல்லியல் இடிபாடுகள் இங்குள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

இங்கு மொத்தமாக 64 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் 49 குகைக் கல்வெட்டுகளும், 11 பாறைக் கல்வெட்டுகளும், 2 கற்பலகைக் கல்வெட்டுகளும், 2 தூண் கல்வெட்டுகளும் அடங்குகின்றன. இவற்றைத் தவிர எழுத்துகள் எழுதப்பட்ட 34 செங்கல் துண்டுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவற்றில் 48 குகைக் கல்வெட்டுகள் முற்கால பிராமி எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் காலம் பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டாகும். ஒரு குகைக் கல்வெட்டு மட்டும் பொ.ஆ. 7 ஆம் நூற்றாண்டுக்குரிய சிங்கள எழுத்துகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு பாறையின் மீது பொறிக்கப்பட்டுள்ள 11 பாறைக் கல்வெட்டுகளும் பொ.ஆ. 1 முதல் 4 ஆம் நூற்றாண்டு வரை பொறிக்கப்பட்டவையாகும். எஞ்சியுள்ள 2 கற்பலகைக் கல்வெட்டுகளும், 2 தூண் கல்வெட்டுகளும் பொ.ஆ. 7 முதல் 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பொறிக்கப்பட்டவையாகும்.

பிரதான வீதியில் இருந்து சுமார் ஒன்றரை கி.மீ தூரத்தில் ரஜகல மலை உச்சி அமைந்துள்ளது. பண்டைய காலத்தில் மலையடிவாரத்தில் இருந்து மலை உச்சிக்குச் செல்வதற்கு தென்மேற்கு பக்கமாகவும், வட கிழக்குப் பக்கமாகவும் இரண்டு கற்படிப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கற்படிகள் பல இடங்களில் சிதைந்தும் உடைந்தும் காணப்படுகின்றன. ஒவ்வொரு பாதையும் சுமார் 1000 மீற்றர் (ஒரு கிலோ மீற்றர்) நீளமானவை. இப்பதைகள் இரண்டும் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில், மலை உச்சியில் உள்ள ரஜகல குளத்தின் கரையில் இணைகின்றன.

மலையடிவாரத்தில் உள்ள வாகனத் தரிப்பிடத்தில் இருந்து ஆரம்பமாகும் இப்பாதைகளில் தென்மேற்குப் பக்கமாகச் செல்லும் பாதையில் முதலாவதாக திறந்தவெளி தொல்பொருள் காட்சிச்சாலை காணப்படுகிறது. ரஜகல மலையில் கிடைக்கப்பெற்ற பல பண்டைய தொல்லியல் சின்னங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இதை அடுத்து மேல்

நாகராஜர் புடைப்புச் சிற்பம்

நோக்கிச் செல்லும் பாதையில் சுமார் 900 மீற்றர் தூரத்தில் இப்பாதை இரண்டாகப் பிரிகிறது. ஒரு பாதை வடமேற்கு நோக்கி சிலைமனை மற்றும் தூபிகள் அமைந்துள்ள இடத்திற்குச் செல்கிறது. அடுத்த பாதை வடக்கு நோக்கி குளக்கரைக்குச் செல்கிறது.

பிரதான வாகனத் தரிப்பிடத்தில் இருந்து செல்லும் வடகிழக்குப் பக்கப் பாதையில் மேலும் மூன்று வாகனத் தரிப்பிடங்கள் உள்ளன. இவற்றை அடுத்து மலை உச்சிக்குச் செல்லும் பாதை தொடங்குகிறது. இப்பாதையில் மேல் நோக்கிச் செல்லும் போது கற்புருவங்கள் வெட்டப்பட்ட இரண்டு கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றில் பிராமி எழுத்துகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கடந்து மேலும் மேல் நோக்கிச் செல்லும் ஒரு சிறிய கற்சுனை காணப்படுகிறது. இதை கடந்து செல்லும் போது சிறிது தூரத்தில் பாதை இரண்டாகப் பிரிகிறது. இதில் மேற்குப் பக்கம் செல்லும் பாதை குளக்கரைக்கும், வடக்கு நோக்கிச் செல்லும் பாதை பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ள பல கற்குகைகளுக்கும் செல்கிறது. இப்பாதையிலும், பாதையின் முடிவிலும் 15 இற்கும் மேற்பட்ட கற்குகைகள் அமைந்துள்ளன. இவற்றில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

மலை உச்சியில் உள்ள குளத்தைச் சுற்றி மேலும் சில கற்குகைகளும், கல்வெட்டுகளும், பல கட்டிட இடிபாடுகளும் காணப்படுகின்றன. தெற்குப் பக்கத்தில் மகிந்த தூபியும், கல்வெட்டுகள் பொறிக்கப்பட்ட பாறையும் காணப்படுகின்றன. குளத்தின் வலது பக்கம் வடக்கு நோக்கிச் செல்லும் பாதையின் இரு மருங்கிலும் பல கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. இப்பாதையின் வலது பக்கம் கல்குடை என்றழைக்கப்படும் கற்குகையும், ஆதி மனிதர்கள் வரைந்த ஓவியங்களுடன் கூடிய ஒரு கற்குகையும் காணப்படுகின்றன. இவற்றை அடுத்து கற்பாத்திரங்களும், மகரக் கோமுகியும், மேலும் சில கோமுகிகளும் காணப்படும் கட்டிட இடிபாடும், இரு கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. பாதையின் இடது பக்கம் சதுர வடிவமான இரு கட்டிடங்களின் சிதைவுகளும், நீள்வட்ட வடிவமான கட்டிட இடிபாடு ஒன்றும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் ஏராளமான கற்தூண்களுடன் காணப்படுகின்றன. இவற்றைக் கடந்து சென்றதும் பாதை இரண்டாகப் பிரிகிறது. நேராக வடக்கு நோக்கிச் செல்லும் பாதையில் சிறிய கற்பாலமும், அதை அடுத்து வலது பக்கம் கற்கால மனிதர்கள் வாழ்ந்த கற்குகையும் உள்ளன. இக்கற்குகையில் திரிசூலக் குறியீடுகள் வரையப்பட்டுள்ளன. பாதையின் இடது பக்கம் இரட்டைத் தூபிகள் அமைந்துள்ளன.

நீள்வட்டக் கட்டிட இடிபாட்டை அடுத்து பிரிந்து செல்லும் மேற்குப் பக்கப் பாதையின் ஓரத்தில் படுத்த நிலையில் உள்ள, 18 அடி நீளமான புத்த பகவானின் சிலை காணப்படுகிறது. மண்ணில் சற்று புதைந்த நிலையில் காணப்படும் இச்சிலை முழுமையாக வடிக்கப்படாத, முற்றுப்பெறாத சிலையாகும். சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் இடிபாடுகள் காணப்படும் ரஜகல மலையில் இருந்து கிடைக்கப்பெற்ற ஒரே ஒரு புத்தரின் சிலை இது மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து மேற்குப் பக்கத்தில் மேலும் சில கட்டிடங்களின் சிதைவுகள் காணப்படுகின்றன.

ஐந்து தலை நாக சிற்பம்

நாகத்தின் வடிவில் உள்ள கற்பாறை



மலை உச்சிக்குச் செல்லும் பண்டைய கற்படிப் பாதை



ரஜகல மலையிலிருந்து கிடைக்கப்பெற்ற சிவலிங்கம்



ரஜகல மலையிலுள்ள மகரக் கோமுகி

கல் பாத்திரங்கள்

குளத்தின் தென்மேற்குப் பக்கமாகச் செல்லும் பாதையின் இடது பக்கம் கற்புருவங்கள் வெட்டப்பட்டு கல்வெட்டு பொறிக்கப்பட்ட இரண்டு கற்குகைகள் அமைந்துள்ளன. இவற்றை அடுத்து குளத்தின் மேற்குப் பக்கத்தில் வட்ட சிலை மனை, சிலை மனை, மேலும் சில கட்டிடங்கள் ஆகியவற்றின் சிதைவுகள் காணப்படுகின்றன.

இலங்கையில் அனுராதபுரம், மிகுந்தலை, சிகிரியா, பொலநறுவை ஆகிய பண்டைய தொல்லியல் மையங்களை அடுத்து அதிகமான கட்டிட இடிபாடுகளையும், தொல்லியல் சின்னங்களையும், அதிகமான கற்குகைகளையும், பிராமிக் கல்வெட்டுகளையும் கொண்ட இடமாக ரஜகல மலை காணப்படுகின்றமை இதன் சிறப்பம்சமாகும்.

நாகசேன தேரர் மற்றும் நாகதேரர் பற்றிக் குறிப்பிடும் பிராமிக் கல்வெட்டுகள்

ரஜகல மலையில் காணப்படும் 60 பிராமிக் கல்வெட்டுகளில் நான்கு கல்வெட்டுகள் நாகர் பற்றிக் குறிப்பிடுகின்றன. இக்கல்வெட்டுகளில் இரண்டு குகைக் கல்வெட்டுகளாகும். ஏனைய இரண்டும் பாறைக் கல்வெட்டுகளாகும். நாகர் பற்றிக் குறிப்பிடும் முதலாவது குகைக் கல்வெட்டில் மொத்தமாக 11 எழுத்துகள் பொறிக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது:

“நாகசேன தேரச சுதசனே”

இதன் பொருள் ஆங்கிலத்தில் “*(The cave named) Sudassana of the elder Nagasena*” என்பதாகும். தமிழில் இது “நாகசேன தேரரின் சுதர்சன எனும் பெயருடைய குகை” எனப் பொருள்படும்.

இரண்டாவது கல்வெட்டும் ஒரு வரியில் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் மொத்தமாக 13 எழுத்துகள் காணப்படுகின்றன. இதிலுள்ள விபரங்கள் பின்வருமாறு:

“நாக தேரக லேனே இடசல கொஹ”

இதன் பொருள், “நாக எனும் தேரரின் இந்தசால குகா எனும் பெயருடைய குகை” என்பதாகும். இது ஆங்கிலத்தில் “*The cave of the elder Naga, named Indasala Guha*” எனப் பொருள்படுகிறது.

இவ்விரண்டு கல்வெட்டுகள் மூலம் நாக எனும் பெயரில் தேரர்கள் இருந்துள்ளார்கள் எனத் தெளிவாகத் தெரிகிறது. பண்டைய கால நாகர் தமிழரின் ஓர் இனக்குழு என பேராசிரியர் பத்மநாதன் கூறியுள்ளார். அக்கூற்றின்படி இவர்கள் நாக வழிபாட்டை மேற்கொண்ட தமிழர்களாக இருக்க வேண்டும். பின்பு இவர்கள் பௌத்த நெறியை ஏற்றுக் கொண்டு தேரர்களாக மாறியிருக்க வேண்டும். எனவே இவர்களை பண்டைய கால தமிழ் பௌத்தர்கள் எனக் கொள்ளலாம். அந்த வகையில் ரஜகல மலையில் பண்டைய காலத்தில் தமிழ் பௌத்தர்கள் வாழந்துள்ளார்கள் எனவும் கொள்வது தவறல்ல.

உபராஜன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

ரஜகல மலை உச்சியில் உள்ள ரஜகல குளத்தின் கிழக்குப் பக்கத்தில் உள்ள ஒரு கற்பாறையில் நான்கு கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் உபராஜன் நாகன் பொறித்த கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இது பொ.ஆ 1 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட பிற்கால பிராமிக் கல்வெட்டாகும். 1961 ஆம் ஆண்டு பேராசிரியர் பரணவிதான இந்தக் கல்வெட்டைக் கண்டுபிடித்த போதும், 1983 ஆம் ஆண்டுதான் நூல்களில்



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கற்குகை

பாறையில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

இக்கல்வெட்டு பதிவு செய்யப்பட்டது. இக்கல்வெட்டில் எழுதப்பட்டுள்ள வாசகங்கள் பின்வருமாறு:

“லஜக ரஜஹ அதி சமஹி கட கபடுக வபி குபிலபி திச பவதஹி நியதே குடகண கமினி திசஹ புத உபராஜ நாகய படிகணபய இம விஹரஹி நியதே”

இதன் பொருள் “லஜ்ஜ மன்னனால் கட்டப்பட்ட கபடுக எனும் குளம், மன்னன் குட்டகண்ண காமினி தீஸனின் மகனான யுவராஜன் நாகனால் மீண்டும் புனரமைக்கப்பட்டு குபிலபி திச பர்வதம் எனும் மலையில் உள்ள விகாரைக்கு வழங்கப்பட்டது.” என்பதாகும்.

நாக தேரர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி (ரஜகல)

நாகனின் மகன், குதிரை வீரன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு

நாகன் பற்றிய இரண்டாவது கல்வெட்டும் இதே பாறையில் பொறிக்கப்பட்டுள்ள இன்னுமோர் கல்வெட்டாகும். இதுவும் பிற்கால பிராமிக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டு மொத்தமாக மூன்று வரிகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டில் உள்ள விபரங்கள் பின்வருமாறு:

பாறையில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு

“1. சித்தம் திக அவ அசனஹி வட மனயஹ வசன கபகதர நாகயஹ

புத அச அறுக நாகயஹ

2. கிரிகபல அவி திசமஹா விஹரஹி எக சதக கஹவன ஆரியவாச

வடட வெடின தினி மெ

3. கஹவனக வடகென மெ விஹரஹி ஆரியவாச கரனக கொடு தினி”

இதன் பொருள் “வெற்றி, தீகவாபியின் அருகில் உள்ள வட்டமானக எனும் இடத்தில் வசிக்கும் குதிரை வீரன் நாகன், கபகதர என்னுமிடத்தைச் சேர்ந்த நாகன் என்பவனின் மகன், கிரிகும்பில தீச விகாரைக்கு 100 கஹவனு பணத்தை வைப்புச் செய்து அதில் இருந்து கிடைக்கும் வட்டிப் பணத்தில் இங்கு நடைபெறும் ஆரியவாச எனும் பூஜையை தொடர்ந்து நடத்த வேண்டும்.” என்பதாகும்.

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத்தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த செய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் 'இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.

பி. ஏ. காதர்

பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்', 'சுயம் நிர்ணயம் உரிமை' மற்றும் 'மேதின வரலாறும் படிப்பினைகளும்' போன்ற நூல்கள் அமைகின்றன.

பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின் கீழ்

புதிய உயரடுக்கும் பழைய உயரடுக்கும்

இலங்கையில் உயரடுக்கின் உருவாக்கமானது பிரித்தானியக் காலனிய ஆட்சி காலத்தில் ஆங்கிலம் கற்ற உயர் வகுப்பினரின் தோற்றத்தோடு உருவானது என்ற தவறான கருத்து சிலரிடையே நிலவுகிறது. உண்மையில் முன்பே குறிப்பிட்டதைப் போல இந்தியாவைப் போலல்லாமல், இலங்கையில் காலனித்துவத்திற்கு முந்தைய ஆளும் வர்க்கத்தின் மேல்தட்டு அழிக்கப்பட்டு, இரண்டாம் நிலைப் பிரிவு தகவமைக்கப்பட்டு காலனித்துவக் கட்டமைப்பில் இணைக்கப்பட்டது.

இலங்கையின் பாரம்பரிய உயரடுக்கினர்
Image Source - karava.org

மாட்டு வண்டிலில் தேயிலை அனுப்பப்படுதல்

Image Source - lankapura.com

காலனித்துவ ஆட்சியின் உருவாக்கத்தின் போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான மற்றொரு குறிப்பிடத்தக்க வேறுபாடு என்னவென்றால், இந்தியா இயந்திரக் கைத்தொழில்துறையின் வளர்ச்சியிலும், தேசிய முதலாளித்துவ வர்க்கத்தின் உருவாக்கத்திலும் முதலாளித்துவ வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தை அடைந்திருந்தது. இலங்கையோ அப்போது பொருளாதார ரீதியாக இந்தியாவை விட மிகவும் பின்தங்கியிருந்ததுடன் நிலப்பிரபுத்துவத்தின் பிடியினால் தேக்க நிலையில் இருந்தது. இங்கு சிறு வணிக அணி ஒன்று உருவாகியிருந்தாலும் தேசிய முதலாளித்துவ வர்க்கம் ஒன்று உருவாகி இருக்கவில்லை.

அதுவே இலங்கையில் சுதந்திரப் போராட்ட இயக்கம் ஒன்று வலுவாக உருவாகாததற்கான காரணமானது. அதற்குத் தலைமை கொடுக்ககூடிய தேசிய முதலாளித்துவ வர்க்கமோ அல்லது பாட்டாளி வர்க்கமோ இங்கு உருவாகியிராததுதான் அதற்கான காரணமாகும். இலங்கையில் அவ்வாறான ஒரு விடுதலை இயக்கமோ அல்லது சுதந்திர இயக்கமோ உருவாகி இருந்தால், முழு நாட்டு மக்களையும் அணிதிரட்ட வேண்டிய தேவை எழுந்திருக்கும்; அச் சூழல் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக அனைத்துச் சமூகங்களையும் ஒன்றிணைத்திருக்கும்; பிற்காலத்தில் இனவாத அரசியல் கோலோச்சிய நிலைமை அநேகமாக ஏற்பட்டிருக்காது.

கோப்பி சகாப்தத்தில் மாட்டு வண்டிகள் மூலம் உருவாக்கப்பட்ட சிங்களவர்களின் போக்குவரத்து நிபுணத்துவம், இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் சாலைப் போக்குவரத்தின் ஆதிக்கத்துக்கும் காரணமானது. இதனால் மோட்டார் பேருந்துகள், லொறிகள் மூலமான போக்குவரத்து இரண்டிலும் இவர்களின் ஆதிக்கமே காணப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் உயரடுக்கு உருவாக்கத்தில் பிரதான காரணியாக இருந்தது, கோப்பித் தோட்டத்தின் அறிமுகமும் அதன் வேகமான வளர்ச்சியுமாகும். அதன் பிறகு தேயிலை, ரப்பர் மற்றும் தென்னைப் பெருந்தோட்ட வளர்ச்சி இந்தப் போக்கை அடுத்த கட்டத்துக்கு கொண்டு சென்றது. எனினும் தேயிலையே பெருந்தோட்டப் பொருளாதரத்தையும் நாட்டின் அபிவிருத்தியையும் நீண்டகாலம் தாங்கி நின்றது. இலங்கையில் முதலாளித்துவ வளர்ச்சி பெருந்தோட்டக் கைத்தொழில் வளர்ச்சியோடு பின்னிப் பிணைந்ததாக மாறியது. பெருந்தோட்டக் கைத்தொழில் வளர்ச்சி ஒருபுறத்தில் பாரிய இயந்திரக் கைத்தொழிலோடு இணைந்த ஒன்றாக இல்லாமல் பல நிலப்பிரபுத்துவ அம்சங்களை உள்வாங்கிக் கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட முதலாளித்துவ உற்பத்தி முறையைக் கொண்டிருந்தது.

இது இலங்கையின் நிலத்தையும், பிரித்தானிய மூலதனம் - தொழில்நுட்பம் - நிர்வாகம் - உலகச்சந்தை ஆகியவற்றையும் பின்னர் இலங்கையாரான இந்தியத் தொழிலாளரின் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. இதில் ரப்பர், தென்னைப் பெருந் தோட்டங்கள் உருவாகும் வரை ஒருவரைத் தவிர வேறு எவரும் கோப்பி பெருந் தோட்டத்துறையில் ஈடுபடவில்லை. எனவே கோப்பி பெருந்தோட்டம் பெரும்பாலும் பிரித்தானியரின் ஏகபோகமாகவே இருந்தது. ஆயினும், பெரும்பாலான வெப்பமண்டல காலனிகளைப் போலல்லாமல் இலங்கையின் பெருந் தோட்டத்துறை வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் சுதேசிகள், குறிப்பாக சிங்களவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். உள்ளூர் தனவந்தர்கள் கோப்பி பெருந் தோட்டத்தினாலும் தேயிலைப் பெருந் தோட்டத்தினாலும் மறைமுகப் பயனை பெருமளவில் அனுபவித்தனர். ரப்பர் பெருந் தோட்டத்தில் கணிசமான அளவும், தென்னைப் பெருந் தோட்டத்தில் பெருமளவும், கறுவா பயிரில் பெருமளவும் இவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. அதைவிட இலங்கையர்கள் ஏற்றுமதி வர்த்தகத்தில் அதுவரை இருந்ததை விட மிகப் பெரும் பங்கை வகித்தனர். முக்கியமாக, பெருந் தோட்டச் சேவைகள் பலவும் கிட்டத்தட்ட சிங்களவர்களால் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டது. தோட்டங்களை நிறுவுவதற்காக காடுகளை வெட்டும் குத்தகை, தோட்டங்களில் இருந்து விளைபொருட்களை துறைமுகங்களுக்கு கொண்டு செல்வது ஆகியவை இதில் அடங்கும்.

கோப்பி சகாப்தத்தில் மாட்டு வண்டிகள் மூலம் உருவாக்கப்பட்ட சிங்களவர்களின் போக்குவரத்து நிபுணத்துவம், இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் சாலைப் போக்குவரத்தின் ஆதிக்கத்துக்கும்

இலங்கையில் இரயில் பாதை அமைக்கப்படுதல்

Image Source - travellanka88.blogspot.com

காரணமானது. இதனால் மோட்டார் பேருந்துகள், லொறிகள் மூலமான போக்குவரத்து இரண்டிலும் இவர்களின் ஆதிக்கமே காணப்பட்டது.

இத்தனைத் தவிர காரீய அகழ்வும் ஏற்றுமதியும், முக்கிய நெடுஞ்சாலைகளில் பாலங்கள் அமைத்தல் படகுகளின் மூலமும் வாடகை அறவிடுதல் (ரயில்வே கட்டப்பட்ட பிறகு இத்தகைய வாடகையின் முக்கியத்துவம் குறைந்தது), பெரும் இலாபத்தை ஈட்டித்தந்த சாராய விற்பனையின் ஏகபோகம், நகர்ப்புற சொத்துகளில் முதலீடு செய்தல், சாலைகள் அமைத்தல், இரயில் பாதைகள் அமைத்தல், மரம் அறுத்து பலகைகள் செய்து விநியோகம் செய்தல், பாடசாலைகள் - மருத்துவ மனைகள் - இரயில் நிலையங்கள் - அரச அலுவலகங்கள் - உயர் அதிகாரிகளின் வாசஸ்தலங்கள் போன்ற அரச கட்டிடங்கள் அமைக்கும் குத்தகை, அவற்றுக்குத் தேவையான செங்கல் - பலகை - மணல் - போன்றவற்றை விநியோகித்தல் போன்ற வாய்ப்புகளால் புதிய தனவந்தர்கள் உருவானார்கள். இப் பொருளாதார வாய்ப்பு பெருந்தோட்ட விரிவாக்கத்துடன் கூடவே விரிவடைந்தது. நகரங்கள் உருவாகி, துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு கட்டிடத் தொழில் வளர்ச்சியடைந்த போது மேலும் பல புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகின; இலங்கையில் தனவந்தர்களின் எண்ணிக்கை அதிகரித்தது; அவர்களில் அதிக



பிரித்தானிய ஆசிரியருடன் வெள்ளாளச் சாதி மாணவர்கள்

Image Source - karava.org

வசதி படைத்தவர்கள் உயரடுக்கு அந்தஸ்தைப் பெற ஆர்வம் காட்டினார்; இதனால் பாரம்பரிய உயரடுக்கின் சமூக அந்தஸ்து அச்சுறுத்தலுக்குள்ளானது.

புதிய - பழைய உயரடுக்கினருக்கிடையிலான போட்டி முதன் முதலில் நில உடமைத் தளத்தில் ஏற்பட்டது. அதுவரை பாரம்பரிய உயரடுக்கு மாத்திரமே நில உடமையைக் கொண்டிருந்தது. 1832 ஆம் ஆண்டின் பின்னர் நிலமானியமுறை ஒழிக்கப்பட்டு, ஏல முறையின் மூலம் அரசால் தரிசு நிலத்தை விற்பனை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம், நிலம் சமூகத்தில் அனைத்து வகுப்பினரும் வாங்கக்கூடியதாக மாறியது. இதனால் பாரம்பரிய உயரடுக்கின் அந்தஸ்து ஆட்டம் கண்டது. ஆரம்ப கட்டங்களில் கொய்கம முதலியார்களில் ஒரு பகுதியினர் புதிய இம்முறையின் முக்கிய பயனாளிகளாக உருவெடுத்தனர். அவர்கள் தங்கள் நிலங்களை வணிக ரீதியாக இலாபகரமான பெருந் தோட்டங்களாக மாற்றினர். அத்துடன் மேலதிகமாக நிலங்களை வாங்கிப் பெருக்கிக் கொண்டனர். பெருந்தோட்டக் கைத்தொழில் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் பகுதிக்கு விரிவடையாததால், இவ்வளவு பெரிய நில அபகரிப்பு அல்லது விரிவாக்கம் அங்கு நடைபெறவில்லை. இருப்பினும், வெள்ளாளர்கள் இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி தங்கள் நில உடைமைகளை விரிவுபடுத்தினர்.

ஆனால், கொய்கமவின் நில ஆதிக்கம் குறுகிய காலமே நீடித்தது. ஏனெனில் மொரட்டுவயை மையமாகக் கொண்டு உருவான கராவ சாதித் தனவந்தர் விரைவில் அவர்களை விஞ்சினர். அப்போது நில

உடமை புதிய பணக்காரர்களுக்கு சமூகத்தில் மேல்நோக்கி உயரும் வழியைச் சமைத்தது. கொய்கம அல்லாத மூன்று சாதியினரான கராவ, சலாகம, துரவா ஆகியோரில்ச் இருந்து விகிதாசார ரீதியில் கூடுதலான எண்ணிக்கையிலான புதிய பணக்காரர்கள் உருவாகினர். இவர்கள் பெருந்தோட்ட விவசாயம், வணிகம் மற்றும் வர்த்தகம் ஆகியவற்றில் அடைந்த வெற்றி அவர்களை பாரம்பரிய உயரடுக்கினரை விட மிகவும் பணக்காரர்களாக ஆக்கியது.

இருப்பினும், பழைய - புதிய உயரடுக்குகள் இருவரும் காலனித்துவப் பொருளாதாரத்தை மட்டுமல்ல, காலனித்துவ ஆட்சியாளர்களையும் முழுமையாகச் சார்ந்தே இருந்தனர். அதனால்தான் அவர்களால் தங்கள் எஜமானர்களுக்கு எதிராகச் சென்று சுதந்திரத்தைக் கோர முடியவில்லை.

ஆயினும் கொய்கம சாதியினர் அரசியலில் ஈடுபட்டு படித்த யாழ்ப்பாண வெள்ளாளரின் உதவியைப் பெற்று, இம் மூன்று புதிய உயரடுக்கின் எழுச்சியை பின்தள்ளி விட்டு, இனவாத ரீதியில் தமது அரசியல் பலத்தை மேம்படுத்திக் கொண்டு, தமது படிப்பின் பலத்தால் அரசியலில் முன்னணி வகித்த வெள்ளாளரையும் உதறித் தள்ளிவிட்டு, தமது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொண்டனர். இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் உருவான இனவாத அரசியலின் பின்னணி இதுவாகும்.

அதனால்தான் கொய்கம சாதியினர், உயரடுக்கு ஆதிக்கத்திற்கான போட்டியில் முதலில் எழுச்சி பெற்றுவரும் தமது இனத்தைச் சேர்ந்த பிற சாதிகளுக்கு எதிராகவும், பின்னர் இலங்கைத் தமிழர்கள், நகர்ப்புற இந்தியர்கள் மற்றும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகவும் திரும்பினர். சுவாரசியமாக, சுதந்திரத்தின் பின்னர் சிறிது காலத்திற்கு, அவர்கள் மீண்டும் ஒருமுறை தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக இலங்கைத் தமிழ் உயரடுக்குகளுடன் சமரசம் செய்து கொண்டனர். இதனை பின்னர் நாம் விரிவாகப் பார்க்கலாம்.

உசாத்துணை

1. *De Silva K.M* (1981), *A History of Sri Lanka, Delhi: Oxford University Press.*
2. *Ferguson A.M. () 'Plumbago: with special refer ence to the position occupied by the mineral in the commerce of Ceylon, Journal of the Royal Asiatic Society, Ceylon Branch, vol ix.*
3. *Gumperz, Ellen McDonald,* 1974, *Cityhinterland relations and the development of a regional elite in nineteenth century Bombay, The Journal of the Royal Asiatic Society, vol xxxiii*4.
4. *Jayawardena Kumari,* 2000, *Nobodies to Some bodies - The Rise of the Colonial Bourgeoisie in Sri Lanka, New Delhi: Leftword Book*
5. *Jiggins Janice,* 1979, *Caste and Family in the Politics of the Sinhalese, Cambridge University Press.*
6. *Robert Michael* (1982), *Caste Conflict and Elite Formation - The Rise of a Karava Elite in Sri Lanka* 1500 - 1931. *ISBN* 8170131391
7. *Russell R. Ross and Andrea Matles Savada,* (1988) *editors. Sri Lanka: A Country Study. Washington: GPO for the Library of Congress.*
8. *JRASCB, The Journal of the Royal Asiatic Society Ceylon. Branch XXI* 1909 *No.* 62
9. *Peebles Patrick.* 1995. *Social Change in Nine teenth Century Ceylon.*
10. *Vythilingam M.,* 1971. *The life of Sir Ponnambal am Ramanathan Volume I.*
11. *Wright. A.W.* (2007), *Twentieth Century Impres sions of Ceylon: Its History, People, Commerce, Industries and Resources Asian Educational Services, India.*

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே ‘வளரும் வடக்கு’ எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

● ஜெகன் அருளையா

இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

தமிழில் : த. சிவதாசன்

சிலிக்கன் பள்ளத்தாக்கை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரும் ‘யாழ் ஜீக் சலஞ்’ மற்றும் ‘அரிமா டெக்னோலொஜீஸ்’

“உன்னைக் கொல்லாமல் விடுவது எதுவோ, அதுவே உன்னை மேலும் பலப்படுத்தும்” என்றொரு பிரபலமான சொல்வழக்கு 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜேர்மன் தத்துவ ஞானி பிறெட்றிக் நீட்சேயினால் முதலில் பாவிக்கப்பட்டது என்பார்கள். இக்கூற்று கொஞ்சம் மிகை நாடகப் பாணியானதும் பெரும்பாலும் உண்மையற்றதுமெனக் கருதப்பட்டாலும் யாழ் ஜீக் சலஞ் (Yarl Geek Challenge - YGC) இற்கு இது மிகவும் பொருத்தமானது. YGC ஒரு போட்டி நிகழ்வு. எனக்குப் பிடித்தமான அதற்கு, கடந்த சில வருடங்களாக, என்னால் முடிந்த அளவுக்கு ஆதரவும் வழங்கி வருகிறேன்.

தொழில்நுட்பத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளையும், சேவைகளையும் அறிமுகம் செய்வது தொடர்பாக நடைபெறும் இப்போட்டியில் இலங்கை முழுவதிலுமிருந்து வரும் இளையவர்கள் குழுக்களாகப் பங்குபற்றுவது வழக்கம். இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட உலகெங்கும் பரந்து வாழும் தொழில்நுட்ப நிபுணர்களின் மையமாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் Yarl IT Hub எனப்படும் நிறுவனம் வருடா வருடம் இப்போட்டியை நடத்தி வருகிறது. அதன் நோக்கம் யாழ்ப்பாணத்தை அடுத்த ‘சிலிக்கன் பள்ளத்தாக்கு’ ஆக மாற்றுவது.

இலங்கை முழுவதிலுமிருந்து போட்டியாளர்கள் YGC யில் பங்குபற்றுகிறார்கள். மூன்று அங்கங்களாக

YGC Season 1, 2012

Image Source : www.lankabusinessonline.com

நடைபெறும் இப்போட்டியின் முதலிரண்டு அங்கங்களும் யாழ்ப்பாணத்திலும் இறுதி அங்கம் கொழும்பிலும் நடைபெறுகிறது. 2012 இல் ஆரம்பமான இப்போட்டி நிகழ்வு, இவ்வருடம் (2019) தனது எட்டாவது நிகழ்வை நடத்துகிறது. YGC போட்டியாளர்களின் நோக்கம் போட்டியில் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு போவதேயாக இருப்பினும் போட்டியில் பங்குபற்றுவதே ஒருவகையில் கிடைக்கும் ஒரு பரிசுதான்.

YGC போட்டியாளர்கள் ஒவ்வொரு படிநிலையிலும் வழிகாட்டலையும் ஊக்குவிப்பையும் பெறுகிறார்கள். போட்டியின் இறுதியில் போட்டியாளர்களின் ‘கண்டுபிடிப்புகளை’ வாங்குவதற்கென முதலீட்டாளர்கள் காத்திருப்பார்கள். தமது கண்டுபிடிப்புகள் முன்னிலைக்குச் சென்றுவிட வேண்டும் என்பதற்காக போட்டியாளர்கள் மிகக் கடுமையாக உழைப்பார்கள். முதலீட்டாளர்களும் தமது பணமீட்டல் முயற்சிகளில் வெற்றியீட்டியும் தோல்விகளைக் கண்டும் அனுபவம் பெற்றவர்களாக இருப்பார்கள். முதலாவது அங்கத்தில் போட்டியாளர்களுக்குக் கிடைக்கும் ஊக்கமும் வழிகாட்டலும் ஒரு பெற்றோரிடமிருந்து பிள்ளைக்குக் கிடைக்கும் வகையில் சிறப்புடையதாக இருக்கும். இரண்டாவது அங்கத்தின் இறுதித் தேர்வின் போது வழங்கப்படும் தீர்ப்பு சில வேளைகளில் மிகவும் கடுமையானதாக, நிஜ வாழ்வையொத்ததாக இருப்பதுண்டு. இரண்டுமே பெறுமதி மிக்க அனுபவங்களாகவே இருக்கும்.

இறுதியாக வழங்கப்படும் பரிசு உண்மையில் இறுதியானதல்ல. போட்டி முழுவதும் அவர்கள் கற்றுக்கொள்ளும் பாடங்களும் பெறும் அனுபவங்களுமே போட்டியாளர்களுக்குக் கிடைக்கும் உண்மையான பரிசுகள். கடுமையான உழைப்பினாலும் சோம்பல், நேர்த்தியின்மை காரணமாகக் கிடைக்கும் படு தோல்விகளினாலும் ஒருவர் பெறும் அனுபவம் தான் இங்கு மிகவும் பெறுமதியானது. தாம் போகும் பாதை சரியானதா அல்லது அவை மாற்றப்பட வேண்டியவையா என்பதைத் தீர்மானிக்க அவர்கள் ஒவ்வொருவரும் தம்மைத் தாமே சவால் செய்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தம்மைத் தாமே சவால் செய்ய முடியாதவர்களாக

Image Source : www.lankabusinessonline.com

இருப்பார்களானால் இரண்டாம், மூன்றாம் அங்கங்களின் போது நீதிபதிகளின் சவால்களைச் சமாளிக்க முடியாமல் அவர்கள் தோற்றுப்போகவும் நேரிடும். போட்டியாளர்கள் குழுவாகவும், தனியாகவும் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழிகள் காப்பாற்றப்படும்போது மட்டுமே வெற்றி நிச்சயம் என்பதை அவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். கால தாமதம், நம்பகத்தன்மையின்மை, அற்பத்தனம் ஆகியவற்றுக்குப் பெயர்போன நம் நாட்டில் புகார் செய்பவர்களும் அவர்களது புகார்களைக் கண்டு கொள்ளாதவர்களுமே அதிகம். இப்படியான குணாதிசயங்கள் ஒருபோதுமே உதவப்போவதில்லை என்பதை YGC போட்டியாளர்கள் கற்றுக்கொள்கிறார்கள்.

உங்கள் பணியகத்தில் வேண்டுமானால் ஓரளவு ஒழுக்கம் இருக்கலாம் ஆனால் நீங்கள் சமூகமளித்த எத்தனை பொதுக் கூட்டங்கள் சரியான நேரத்திற்கு ஆரம்பித்திருக்கின்றன? சரியான நேரத்திற்குச் சமூகமளித்து மேடையில் உட்கார்ந்து கொண்டு ஒழுங்கமைப்பாளர்கள் அப்போதுதான் அங்குமிங்கும் அலைந்து திரிந்து காலத்தை வீணடிப்பதன் மூலம் அடுத்த தடவை நாமும் பிந்தி வரலாம் என்ற பாடத்தை நாமும் கற்றுக்கொள்ள வைக்கும் சம்பவங்களை எத்தனை தடவை எதிர்கொண்டிருக்கிறீர்கள்?

YGC போட்டிகளில் போட்டியாளர்கள் தம்மிடையே அளிக்கும் வாக்குறுதிகள் காப்பாற்றப்படாத போது தமது கண்டுபிடிப்புகள் தோற்றுப்போகும் என்பதைப் போட்டியாளர்கள் கற்றுக்கொள்கின்றனர். போட்டியிலிருந்து நீக்கப்படுவதன் மூலம் அடுத்த கட்டத்திற்கு மேலும் உத்வேகத்தோடு பயணிக்கும் ஆற்றல் அப்போதுதான் கிடைக்கிறது. “உன்னைக் கொல்லாமல் விடுவது எதுவோ, அதுவே உன்னை மேலும் பலப்படுத்தும்” என்பது இங்கு தான் பிரயோசனப்படுகிறது.

YGC போட்டிகளின் போது கற்றுக்கொள்ளும் முக்கிய பாடம் எவரொருவர் எதிர்காலத்தில் சிறந்த சக ஊழியராக இருக்கக்கூடியவர் என்பதைத் தீர்மானிப்பதே. யார் தீர்க்கமானவர், யார் இலக்கை நோக்கிப் பயணிக்கக் கூடியவர், யார் நம்பகத்தன்மையுடையவர், யாரெல்லாம் உங்கள் திறமைகளுக்கு வலுச்சேர்க்கும் திறமைகளைக் கொண்டிருப்பவர், இன்னும் சிறப்பாக, யார் கேட்டு, அவதானித்து, கற்று, கற்பித்து, மரியாதை செய்து சிரமங்களை எதிர்கொள்ளும் போதும் மனம்

'அரிமா' குழு

Image Source : www.lankabusinessonline.com

தளராதிருந்து செயலாற்றுபவர் போன்ற கற்கைகள் இப்போட்டிகளின் விளைபொருட்களாகின்றன.

YGC போட்டிகளில் பங்குபற்றும் குழுவினரிடையே இருந்து புதிய நிறுவனங்கள் உதயமாகின்றன என்பதும் இங்கு முக்கியமானது. போட்டியின் போது அவர்கள் உருவாக்கிய கண்டுபிடிப்பே அவர்களது எதிர்கால நிறுவனத்தின் தயாரிப்பாக இருக்க வேண்டுமென்பதில்லை. YGC போட்டியின் விளைவாக உருவாக்கப்பட்ட எனக்குத் தெரிந்த ஒரு நிறுவனம் ஏறத்தாழ மூடப்படும் நிலைக்குச் சென்றதையும் நானறிவேன். அவர்களது தொழில் முனைவின் காரணமாக பெருந்தொகையான பணத்தை அவர்கள் இழந்திருந்தார்கள். ஆனாலும் அவர்கள் ஓய்ந்துவிடவில்லை. அவர்கள் கற்ற அனுபவம் இப்போது அவர்களை மேலும் பலசாலிகளாக்கியிருக்கிறது. புதிய பல முதலீட்டாளர்களை ஈர்த்து புதிய தொழில்நுட்பங்களிலும் சேவைகளிலும் ஈடுபட்டு மிகவும் சிறப்பாக அவர்கள் பயணிக்கிறார்கள். அவர்களைப் பற்றி நான் இன்னுமொரு கட்டுரையில் எழுதுவேன்.

இக்கட்டுரை 2012 இல் YGC போட்டியில் வெற்றிபெற்ற Team Arima பற்றியது. YGC இல் சந்தித்து இறுக்கமாக இணைந்துகொண்ட ஒரு குழுவே 'அரிமா'. 'அரிமா' என்ற பெயரை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்? என நான் அந்நிறுவனத்தின் முதன்மை நிர்வாகியான ஜெயகிருஷ்ணன் ராஜகோபால சர்மாவிடம் கேட்டேன். "போட்டிக்குத் தொழில்நுட்பத்தைத் தயாரிப்பதில் குழு எமது கவனத்தைச் செலுத்தியதால் எமது குழுவிற்கான பெயரொன்றை வைப்பதற்கு தாம் முற்றாக மறந்துவிட்டிருந்தோம். போட்டி ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே நாம் எங்கள் மண்டைகளைப் போட்டுடைத்து 'அரிமா' என்ற பெயரைத் தீர்மானித்தோம். இது எவரையும் நோக வைக்காது, கவர்ச்சியானது என நாங்கள் யோசித்து இம்முடிவுக்கு வந்தோம்" என்றார் ஜே.

2012 இல் YGC இல் முதல் போட்டியிடும்போது ‘அரிமா’ குழுவில் இருந்தவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் படித்துக்கொண்டிருந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்கள். 1990 களில் நான் கொழும்பில் ஒரு மென்பொருள் அபிவிருத்தி நிறுவனத்தை நடத்திக்கொண்டிருந்த போதே நான் மொறட்டுவ பல்கலைக்கழகம் பற்றி அறிந்திருந்தேன். எங்கள் நிறுவனத்திற்கு ஆட்சேர்ப்பில் ஈடுபடும்போது மொறட்டுவ பல்கலைக்கழகப் பட்டதாரிகளே தேர்வுப் பட்டியலில் உயர்ந்த இடத்தில் இருப்பார்கள் என்னுமளவுக்கு அப் பல்கலைக்கழகம் பெயரெடுத்திருந்தது.

“மொறட்டுவ பல்கலைக்கழக வாழ்க்கை யாழ்ப்பாண வாழ்க்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாக இருந்தது” என்கிறார் ஜே. தனிப்பட்டவராகவும் சரி சமூகமாகவும் சரி விருப்புகளை உருவாக்கும் நகரமல்ல யாழ்ப்பாணம். இளையோரை உசார்ப்படுத்துமளவுக்கு யாழ்ப்பாணத்தில் போதியளவு உதாரண புருஷர்கள் இல்லை. மாறாக கொழும்பிலோ அல்லது வெளிநாடுகளிலோ சிறந்த வேலைகளைப் பெறுதற்கேற்ற பாதைகளை மொறட்டுவ காட்டி விடுகிறது. திறமைக்கும் கடின உழைப்புக்கும் எப்போதும் தகுந்த சன்மானம் காத்திருக்கும் என்ற நம்பிக்கையை யாழ்ப்பாணத்தில் காண்பது மிக அரிது. வடக்கிலிருந்து மொறட்டுவைக்குச் சென்றவர்கள் திரும்பி யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயங்குகிறார்கள் என்கிறார் ஜே. 2013 இல் பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பின்னர் ‘அரிமா’ குழுவினர் எவருமே யாழ்ப்பாணம் திரும்பவில்லை; இவர்களில் இருவர் சிங்கப்பூருக்குச் செல்ல வேறிருவர் கொழும்பிலேயே தங்கிவிட்டனர்.

2017 இல் யாழ்ப்பாணம் திரும்பிய ஜே, YGC யில் வெற்றியைத் தேடித்தந்த அந்த மங்களகரமான ‘அரிமா’ என்ற பெயரில் நிறுவனமொன்றை ஆரம்பிக்க எண்ணுகிறார். *Yarl IT Hub Challenge* என்ற நிகழ்வைத் தத்து எடுத்து ‘யாழ்ப்பாணத்தை அடுத்த சிலிக்கன் பள்ளத்தாக்கு ஆக்குதல்’ என்ற முழக்கத்துடன் செயற்பட ஆரம்பிக்கிறார். சிங்கப்பூருக்குச் சென்ற இருவருடன் சேர்த்து ஆரம்ப YGC குழுவிலிருந்த நால்வரில் மூவர் யாழ்ப்பாணம் திரும்புகிறார்கள். 2019 ஆம் ஆண்டு வாக்கில் ‘அரிமா’ 25 பணியாளர்களைத் தன்னகத்தே கொண்டதாக வளர்ந்துவிட்டிருந்தது.

நேர்காணல்கள் மூலம் மாத்திரம் பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஜே இற்கு நம்பிக்கை இல்லை. அதற்குப் பதிலாக நம்பிக்கை தரும் புதியவர்களைச் சம்பளத்துடனான பயிற்சியாளர்களாகவே ஜே உள்வாங்குகிறார். பணியாளராக ஒருவரை நியமிப்பதற்கு முன் ஓரிரு மணித்தியாலங்கள் அவருடன் பேசுவதாலோ அல்லது அவரைப் பரீட்சிப்பதனாலோ மட்டும் அவரது பலங்களையும் பலவீனங்களையும் அறிந்துவிட முடியாது. அவரது பணிமுறை எப்படியானது என்பது பரீட்சிக்கப்பட்ட பின்னர் அவரைப் பணிக்கெடுப்பதே சிறந்தது. புகழ் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் படித்ததாலோ அல்லது ஒருவர் பெற்றிருக்கும் உயர் தரப் பட்டங்களினாலோ ஜே மயங்கிவிடும் ஒருவரில்லை. பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற இவை உதவி செய்திருப்பினும் வணிக உலகில் சிறப்பாகச் செயலாற்ற இவை உதவி செய்யா. ‘அரிமா’ வில் பணிபுரிபவர்களில் பலர் பட்டதாரிகளும் பட்டதாரிகளல்லாதோருமாக இருப்பினும் இவர்களெல்லாம் ‘அரிமா’ வின் பயிற்சிகளின்போது தமது ஆற்றல்களை வெளிப்படுத்தியவர்களே. ‘அரிமா’ வில் பணியாற்றும் யாழ்ப்பாணக் குழுவில் முக்கியமானவர்கள் யாழ். பல்கலைக்கழகப்

பட்டதாரிகளும், உயர் கல்விக்குப் போக முடியாதவர்களுக்கான *Yarl IT Hub* இன் ஊக்கி பயிற்சித் திட்டப் பட்டதாரிகளுமாவர். இவ்விடயத்தில், போர்க்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வளர்ந்து 1990 களில் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து அங்கு கலிபோர்னியாவில் தொழில்நுட்பத் துறையில் உயர் பதவிகளை வகித்து வரும் ரமோஷன் கனகசபையின் பங்களிப்பை ஜே மிகவும் நன்றியோடு நினைவுகூர்கிறார். வடக்கின் தொழில்நுட்பக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் *Yarl IT Hub* வகித்த வகிபாகம் பற்றியும் ஜே குறிப்பிடத் தவறவில்லை.

“அரிமாவில் எப்படி இணைந்து கொண்டீர்கள்?” என பட்டதாரிகளல்லாத சில மென்பொருள் அபிவிருத்தியாளர்களிடம் நான் கேட்ட போது அவர்கள் சொன்னது:

“2011 இல் நான் இலங்கை வங்கியில் பயிற்சியாளராகச் சேர்ந்தேன். 2013 இல் யாழ்ப்பாணத்தில் ஒரு இரண்டாம் நிலைப் பாடசாலையில் கற்பித்தேன். 2017 இல் ஊக்கி பயிற்சித் திட்டத்தில் இணைந்தேன். நவம்பர் 2017 இல் ‘அரிமா’ வில் இணைந்தேன்.”

“2012 இல் *National Apprentice and Industrial Training Authority* (NAITA) NVQ நான்காம் நிலைத் தராதரத்தில் சித்தியெய்தினேன். 2015 - 2017 வரை *Sri Lanka Advanced Techno logical Institute* (ATI) இல் கற்று தகவற் தொழில்நுட்பத்தில் HND டிப்ளோமா பெற்றேன். 2018 இல் ‘அரிமா’ வில் இணைந்தேன்.”

“2012 இல் மொண்டிசோரி பள்ளியில் கற்பித்தேன்; 2015 - 2017 வரை *Sri Lanka Advanced Technological Institute* (ATI) இல் தகவல் தொழில்நுட்பத்தில் HND டிப்ளோமா பட்டம் பெற்றேன். 2017 இல் ‘அரிமா’ வில் இணைந்தேன்.”

“2014 இல் வவுனியாவிலுள்ள ஒரு *Call Centre* இல் இணைந்து ஒன்றரை வருடங்கள் பணியாற்றினேன். ஜனவரி 2018 இல் ஊக்கியில் பயின்று பின்னர் ‘அரிமா’ வில் இணைந்தேன்.”

“2016 இல் க.பொ.த உயர்தரத்தை முடித்தேன். 2017 இல் ஊக்கியில் பயின்று பின்னர் நவம்பர் 2017 இல் ‘அரிமா’ வில் இணைந்தேன்.”

‘அரிமா’ வை இயக்கும் பிரதான குழு யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டிருந்தாலும் அதன் சிறிய குழுவொன்று கொழும்பிலும் இயங்குகிறது. இவ்விரு இடங்களிலும் பணி புரிபவர்கள் தமிழ், சிங்கள மொழிகளைப் பேசுபவர்களானாலும் இவர்களின் இணைப்பு மொழியாக ஆங்கிலமே இருக்கிறது. ‘அரிமா’ வின் பிரதான வருமானம் அமெரிக்காவிலிருந்து கிடைப்பதால் ஆங்கிலப் புலமை இங்கு அத்தியாவசியமாகிறது. கடல் கடந்த நாடுகளிலுள்ள பல நிறுவனங்களில் இயக்குநர்களாகவும் முகாமைத்துவப் பதவிகளில் இருப்பவர்களும் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டிருப்பதனால் அந்நிறுவனங்களின் வேலைகளை இலங்கைக்கு அனுப்புவதையே விரும்புகிறார்கள். ஆனால் பணிகளின் தகமை சர்வதேச தரத்தில் இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பார்கள். இப்படியான வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்கும் நிதியைக் கொண்டு ‘அரிமா’ தனது சொந்த தொழில்நுட்ப மற்றும் சேவை உற்பத்திகளில் முதலீடு செய்கிறது. அப்படியானதொன்றே *Arogya Life* என்ற மருத்துவ மனை முகாமைத்துவ மென்பொருள். கொழும்பிலுள்ள *Hemas Hospitals* மற்றும் மூளாயிலுள்ள *Moolai Hospi tal* ஆகிய மருத்துவமனைகள் *Arogya Life*

மென்பொருளையே பாவிக்கின்றன.

Arogya Life, மருத்துவ மனையின் தொழிற்பாடுகள் சீராக இயங்குவதற்கு உதவி செய்கிறது. மருத்துவமனையில் ஏற்கெனவே பாவனையிலிருக்கும் தரவுக்கொத்துகளிலிருந்து தரவுகளைப் பெற்று அவற்றை அறிக்கை வடிவங்களில் இலகுவாக்கி முகாமைத்துவப் பணியாளர்களுக்குத் தருகிறது. அதே போன்று பணிகள் முடிவடைந்ததும் அவற்றுக்கான கட்டணப் படிவங்களைத் தயாரித்து உரிய இடங்களுக்கு அனுப்பிவிடுகிறது. இவையெல்லாவற்றையும் ஒன்றிணைந்த தொகுதியாகச் செய்யாமல் அங்கங்களாகப் பிரித்து (modules) இத் தொழில்நுட்பம் கையாள்வதால் பிரதான தொழிற்பாட்டிற்குப் பங்கம் விளைவிப்பதில்லை. தேவையானால் அங்கங்கள் தனித்தனியாகப் பராமரிக்கப்படுகின்றன. உதாரணமாக நோயாளிகளோடு மருத்துவமனை நிர்வாகம் மேற்கொள்ளும் தொடர்பாடல்களை கணனிகள் மூலம் செய்துகொள்ள வசதியுண்டு.

YGC குழுவில் அங்கம் வகிக்கும் சத்தியவரதன் (சத்தி) மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் இன்னுமொரு பட்டதாரி. படிப்பை முடித்த பின் பல வருடங்களாக சிங்கப்பூர், கொழும்பு ஆகிய இடங்களில் பணி புரிந்தபின்னர் 2018 இன் இறுதியில் யாழ்ப்பாணம் திரும்பி ஜே யுடன் 'அரிமா' வில் இணைகிறார். இப்போது அவர் 'அரிமா' வின் முதன்மை தொழில்நுட்ப அதிகாரி (*Chief Technology Officer - CTO*). மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும் 2012 இல் YGC யில் வெற்றி பெற்ற குழுவின் உறுப்பினருமாகிய ஹரீசன் ராஜேந்திராவும் சிங்கப்பூரிலிருந்து திரும்பி வந்து 'அரிமா' வின் தயாரிப்பு நிர்வாகத்தில் முதன்மைத் தொழில்நுட்ப அதிகாரியாகப் பணி புரிகிறார்.

கொழும்பிலும் சிங்கப்பூரிலும் பணியாற்றியதை விட யாழ்ப்பாணத்தில் பணியாற்றும்போது எதிர்கொண்ட சவால்கள் என்ன என நான் சத்தியிடம் கேட்டேன். "சிறப்பான அறிவும் திறன்களும் கொண்ட பணியாளர்களைக் கண்டுபிடிப்பது சிரமம். கடல் கடந்த வாடிக்கையாளர்களைச் சமாளிக்க வல்ல தொழில்நுட்பமும் ஆட்திறனும் ஒருங்கிணைந்த பணியாளர்களைக் கண்டுபிடிப்பது சிரமமாக இருந்தாலும் அது சாத்தியமாகாதது என்றில்லை; அப்படியான சிலரை நான் 'அரிமா'வில் இணைத்திருக்கிறேன்" என்கிறார் சத்தி.

"பெரிய தொழில்நுட்ப நிறுவனங்களும் பணியாளர் சமூகங்களும், பயிற்சிப் பட்டறைகளும், கருத்தரங்குகளும் இருக்கக்கூடிய சூழலில் கொழும்பு, சிங்கப்பூர் போன்ற இடங்களில் தொழில்நுட்ப சமூகங்கள் அபார வளர்ச்சி காண்கின்றன. பன்முகப்பட்ட ஆற்றல்களையும் அனுபவங்களையும் கொண்ட பணியாளர்களைக் கொழும்பிலோ அல்லது சிங்கப்பூரிலோ சந்திக்குமளவுக்கு யாழ்ப்பாணத்தில் காண்பது சங்கடமாகவே இருக்கிறது" என்கிறார் சத்தி.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் சத்தி கணனி விஞ்ஞானத்தில் கற்று பட்டம் பெற்றார். தொழில்நுட்பத்தின் தத்துவங்கள் பற்றிய பரந்த அறிவை அது அவருக்கு வழங்கியிருந்தது. இந்த அடிப்படைக் கல்வியைக் கொண்டு இதர தொழில்நுட்பங்களுக்குள் இலகுவாகப் பாய்ந்து செல்ல அவரால் முடிந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள பல பயிற்சிக் கல்லூரிகளில் ஒரு மென்பொருளை மட்டுமே இலக்காக வைத்துக் கற்பிக்கிறார்கள். இதனால் அவர்கள் இதர தேவைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய நெகிழ்வுத்தன்மை அற்றவர்களாகி விடுகிறார்கள். இவ்விடயத்தை 'அரிமா'

Image Source : www.lankabusinessonline.com

வித்தியாசமாகக் கையாள்கிறது. பணியாளர்கள் தமது பன்முக ஆளுமைகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் அவர்கள் சுயாதீனமாகத் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கு வசதியான கருவிகளைத் தந்துதவுகிறது 'அரிமா'. யாழ்ப்பாணத்தில் தகமையுள்ள பணியாளர்களைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் அவர்களின் இதர திறன்களை நீங்கள் தான் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

'அரிமா' வினால் சிறந்த தகமைகளைக் கொண்ட பணியாளர்களைக் கவர்ந்துகொள்ள முடியும். காரணம் அது சிறந்த தரமுள்ள பணிகளைக் கையாள்கிறது; ஆரோக்கியமான சூழலைத் தருகிறது; வேலை - வாழ்க்கைச் சமநிலையில் அது அதீத அக்கறை கொண்டிருக்கிறது. வீட்டிலிருந்து பணி புரிவது தொடர்பாக 'அரிமா' அதிகம் இறுக்கமாக இருப்பதில்லை எனினும் பலர் அலுவலகத்தில் இருந்து பணி புரிவதையே விரும்புகிறார்கள். வசதியான சூழல், பணியாளரிடையேயான நட்புறவு போன்ற காரணங்களினால் அலுவலகம் ஒரு குடும்பம் போலவே இயங்குகிறது என்கிறார் சத்தி.

இருப்பினும் கல்வியிலும், உட்கட்டுமானத்திலும் அரசாங்கம் நிறைய முதலீடுகளைச் செய்யவேண்டும் என்கிறார் சத்தி. கற்கை நெறிகள் உட்பட்ட பயிற்சி நிறுவனங்களின் தராதரம் முன்னேற்றமடைய வேண்டும். தொழில்நுட்பம் தொடர்பான புத்தகங்களிலும் சுய கல்விக்கான கருவிகளிலும் நூலகங்கள் தம்மைத் தரமுயர்த்திக் கொள்ள வேண்டும். யாழ்ப்பாண நகருக்குள் தொலைத் தொடர்பு கட்டுமானம் திருப்தியாக இருந்தாலும் நகருக்கு வெளியே இணையத் தொடர்புகள் இன்னும் *ADSL* தரத்திலேயே இருக்கின்றன. நல்ல சம்பளத்துடன் சிறந்த மேதைகளையும் அவர்களது குடும்பங்களையும் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவர வேண்டுமானால் இங்கு போதுமான பொழுதுபோக்கு வசதிகள் இருக்க வேண்டும். பிட்சா ஹட்டில் மாலை வேலைகளில் மணித்தியாலக் கணக்கில் தூங்குவதை விட மாலைப் பொழுதுகளைக் கழிக்க வேறு வழிகள் அவசியம் என்கிறார் சத்தி.

அடுத்த 5 வருடங்களுக்குள் தனது யாழ்ப்பாணப் பணியாளர்களின் தொகையை 100 ஆக அதிகரிக்க வேண்டுமென்பதே 'அரிமா' வின் திட்டம். தனது வேலைகளைப் புற நிறுவனங்களுக்கு ஒப்பந்தத்தில் விட்டுவிட்டுத் தனது தொழில்நுட்பக் கருவிகள், சேவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்பதே அதன் அவா. *Yarl IT Hub* இன் கனவான 'யாழ்ப்பாணத்தை அடுத்த சிலிக்கன் பள்ளத்தாக்கு ஆக்குதல்' திட்டத்தில் முக்கிய பங்கை ஆற்றுவதென 'அரிமா' திடசங்கற்பம் பூண்டுள்ளது.

அரிமா தொழில்நுட்பத்தின் ஜே ராஜகோபால சர்மாவுடன் தொடர்பு கொள்ள: *jaykrish@arima.xyz*

Yarl IT Hub உடன் தொடர்பு கொள்ள: *sayanthan@yarlithub.org*

இக்கட்டுரை லங்கா பிஸினெஸ் ஒன்லைன் ஜுன் 26, 2019 பதிப்பில் ஆங்கிலத்தில் வெளியாகியிருந்தது.

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.

வை. ஜெயமுருகன்

சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

கூட்டுறவுக்குள் கூட்டுறவு : பிலிப்பைன்ஸ் அனுபவம்

கூட்டுறவின் குறிக்கோள் என்ன என்பது தொடர்பாக கூட்டுறவாளர்களிடையே பல கருத்துக்கள் உள்ளன. உண்மையில், கூட்டுறவின் நோக்கம் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் அதைச் சுற்றியுள்ள சமூகத்தின் பொருளாதார, கலாசார மற்றும் சமூகத் தேவைகளை உணர்ந்து கொள்வதாகும். கூட்டுறவுகள் தங்கள் சமூகத்தின் மீது வலுவான அர்ப்பணிப்போடு சமூகத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும். கூட்டுறவுகள், மக்கள் தங்கள் பொருளாதார எதிர்காலத்தைக் கட்டுப்படுத்த அனுமதிக்கின்றன. அவை

பங்குதாரர்களுக்குச் சொந்தமானவை அல்ல என்பதால், கூட்டுறவுச் செயற்பாட்டின் பொருளாதார மற்றும் சமூக நன்மைகள் அவர்களது சமூகங்களுக்கே செல்கிறது. கூட்டுறவின் மூலம் உருவாக்கப்படும் இலாபம் நிறுவனத்தில் மீண்டும் முதலீடு செய்யப்படுகின்றது அல்லது உறுப்பினர்களுக்குத் திருப்பித் தரப்படுகிறது.

வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வருமானம் ஈட்டுவதற்கான வளங்களைத் திரட்டுவதற்குமான கருவியாகக் காணப்படுவது கூட்டுறவின் முதன்மையான பங்களிப்பு எனக் கருதலாம். கூட்டுறவு, நிலையான மனித வளர்ச்சிக்குப் பங்களிப்பதுடன் சமூக ஒதுக்கலை எதிர்ப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது எனலாம். பொருளாதாரத்தில் பின்னடைவான சமூகத்தின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதில் கூட்டுறவுகளின் வகிபாகம் அளப்பரியது. கூட்டுறவுகள் வறுமையைக் குறைக்க உதவும் விதமும் முக்கியமானது. அவை தங்கள் உறுப்பினர்களுக்கான பொருளாதார வாய்ப்புகளை அடையாளம் காண்கின்றன. பின்தங்கியவர்களின் நலன்களைப் பாதுகாக்க அதிகாரம் அளித்தல்; தனிப்பட்ட இடர்களை கூட்டு அபாயங்களாக (Collective Risk) மாற்ற அனுமதிப்பதன் மூலம் ஏழைகளுக்கு பாதுகாப்பை வழங்குதல் என்பன வறுமை ஒழிப்பில் முக்கியமான விடயங்கள் ஆகும்.

கூட்டுறவுகள், ‘உள்ளடக்கிய’ நிறுவனங்கள் எனும் வகையைச் சார்ந்தவை. கூட்டுறவின்



Image Source - www.penguinrandomhouse.com

தனித்துவம் என்பது முடிவெடுப்பதில் பரந்த பங்கேற்பை அனுமதிப்பதும், திறமை மற்றும் படைப்பாற்றலுக்கான ஊக்கத்தை வழங்குவதுமாகும். மறுபுறம், கூட்டுறவு அல்லாத நிறுவனங்கள் பெரும்பாலும் ஒரு சிறிய உயரடுக்கிற்கு பயனளிக்கும் நிறுவனங்களாக உள்ளன. அவை நீண்ட காலகட்டத்தில் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கின்றன. கூட்டுறவு கூட அதன் கொள்கை சார் விடயங்களிலிருந்து விலகி, ஒரு சிலரின் கட்டுப்பாட்டில், அவர்களது நலனின் பால் கட்டுண்டு பயணிக்கும் போது, காலப்போக்கில் அவையும் ‘பிரித்தெடுக்கும் நிறுவனங்கள்’ எனும் நிலைக்கு மாறி காலப்போக்கில் கரைந்து போவதை தற்போது அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

கூட்டமைப்பு அணுகுமுறை

ஒரு கூட்டுறவுக் கூட்டமைப்பு, பல்வேறு ஒன்றோடொன்று தொடர்புடைய இலக்குகளை தொடர்ந்து அடைய

வேண்டும்: 1) அதன் துணை நிறுவனங்களின் சுயாட்சியை வலுப்படுத்தும் அதேவேளை சமூக வலைப்பின்னல்களைப் பராமரித்தல், நம்பகத்தன்மையை மேம்படுத்துதல் மற்றும் அதன் உறுப்பினர்களுக்கு சேவை செய்யும் திறனை மேம்படுத்துதல்; 2) கூட்டுறவுகளைப் புரிந்துகொள்வதற்கும் நிர்வகிப்பதற்கும் புதிய வழிகளை ஆராய்தல்; 3) ஒரு புதுமையான, பொருளாதார ரீதியாக சாத்தியமான, போட்டி நிறுவனமாக இருக்கத் தேவையான நிலைமைகளை வளர்த்துக் கொள்ளுதல்.

இத்தகைய இலக்குகளை அடைய நடைமுறையில் சில முக்கியமான விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும்.

1. கூட்டுறவு நிறுவனங்களுக்கான புதிய முகாமைத்துவ மாதிரிகளை அறிமுகப்படுத்தக்கூடிய நியதிச் சட்டங்களை உருவாக்கல். இன்றைய தேவை கருதி, தேவையான படைப்பாற்றலை புதுமையானதாக மாற்றுவதற்கான வழிகளை அமைத்துக்கொள்ள வேண்டும். மாறிவரும் வணிகச் சூழல்களில் இணைந்து வளர்ச்சி அடையத்தக்க வகையில் கூட்டுறவை இசைவாக்கிக் கொள்ளல்.

2. சமூக மூலதனத்தின் சக்தி உருவாக்கம் மூலம் கூட்டுறவின் பலத்தை உள்ளுணர்தல்; இணைத்தல்; கட்டமைப்புகள் மூலம் வலுப்படுத்தல். சமூகங்களில் நம்பிக்கை, ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கைக்கான அடிப்படையை வழங்குதல் (ஜேக்கப்ஸ், 1961).

3. இலங்கையில் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூட்டுறவு நிறுவனங்களின் சவால்கள் பல உள்ளன. சமூக, பொருளாதாரச் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு உள்ளூர் கூட்டுறவாளர்களின் வேர்களை விட்டுக்கொடுக்காமல் போட்டி நன்மைகளை உருவாக்குதல்; தக்கவைத்தல். மாறிவரும் உலகளாவிய வணிகச் சூழலில் மிகவும் பொருத்தமான, கள நிலைகளுக்குப் பொருந்தக்கூடிய மாற்றங்களை உள்வாங்குதல். உள்ளூர் பொருளாதாரத்தின் படி தெரிவுகளை உள்வாங்கல்.

உள்ளடக்கிய அரசியல், பொருளாதார நிறுவனங்கள்

‘நாடுகள் ஏன் தோல்வியடைகின்றன: அதிகாரம், செழிப்பு மற்றும் வறுமையின் தோற்றம்’ எனும் நூல் 2012 இல் வெளியிடப்பட்டது. இது பொருளாதார வல்லுநர்களான டேரன் அசெமோக்லு (Daron Acemoglu) மற்றும் ஜேம்ஸ் ஏ. ராபின்சன் (James A. Robinson) ஆகியோரின் ஆராய்ச்சிப் புத்தகமாகும். நாடுகளுக்கிடையிலான செழுமை பற்றிய ஒப்பீட்டு ஆய்வுகளில் பங்களித்ததற்காக இவர்கள் 2024 இல் நோபல் பரிசைப் பெற்றார்கள். உள்ளடக்கிய அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்கள் (Inclusive Political And Economic Institutions) செழுமைக்கு வழிவகுக்கும் எனவும், பிரித்தெடுக்கும் நிறுவனங்கள் (Extractive Institutions) வறுமை மற்றும் தோல்விக்கு வழிவகுக்கும் என்றும் இவர்கள் வாதிடுகின்றனர். ‘உள்ளடக்கிய’ அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்களைக் கொண்ட நாடுகள் நீண்ட காலத்திற்கு வெற்றி பெற்று உயிர்வாழும் நாடுகளாக உள்ளன. அந் நாடுகள் அவற்றின் அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்களால் (அரசு, சந்தை அமைப்பு) மற்றவர்களை விட செல்வந்தர்களாகவும், செழிப்பாகவும் இருக்கின்றன என்றும், அந் நாடுகளின்

பிலிப்பைன்ஸில் கூட்டுறவு உறுப்பினர்களுடன் கட்டுரையாளர்

தட்பவெப்பநிலை, புவியியல் அல்லது கலாசாரம் காரணமாக அல்ல என்றும் இந்நூல் வாதிடுகிறது. அமெரிக்கப் பொருளாதார வல்லுநரான ஜெஃப்ரி சாக்ஸ், உள்நாட்டு அரசியல் நிறுவனங்களில் மிகக் குறுகிய கவனம் செலுத்துவதும், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் புவிசார் அரசியல் போன்ற பிற காரணிகளைப் புறக்கணிப்பதும் தான் ஒரு நாட்டின் தோல்விக்கு காரணம் என்கிறார்.

உள்ளடக்கிய நிறுவனங்களைக் கொண்ட நாடுகள் பரவலான செழுமையை மேம்படுத்த முனைகின்றன. உள்ளடக்கிய அரசியல், பொருளாதார நிறுவனங்கள் சொத்து உரிமைகள், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் நிலையான பொருளாதார வாய்ப்பு ஆகியவற்றை வழங்குவதில் உதவுகின்றன; நீண்ட கால வளர்ச்சிக்கு உகந்த சூழலை உருவாக்குகின்றன. இந்த நிறுவனங்கள், தனிநபர்கள் கூட்டாக இணைந்து அவர்களின் கருத்தைப் பலமாக வழங்கச் சந்தர்ப்பம் தருகின்றன. சொத்துகளைப் பாதுகாக்கின்றன; எதிர்காலச் செழிப்புக்கான முதலீட்டை ஊக்குவிக்கின்றன. தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் கூட்டாக முதலீடு செய்வதற்கும், புதுமைகளை உருவாக்குவதற்கும், பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கும் உரமிடுகின்றன.

இதற்கு நேர்மாறாக, பிரித்தெடுக்கும் நிறுவனங்கள், எதேச்சதிகாரத்தின் மூலம் ஒரு சிலரின் கைகளில் அதிகாரத்தைக் குவிக்க உதவுகின்றன. அவை உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பதிலாக மக்களைச் சுரண்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. இத்தகைய அமைப்புகள், உயரடுக்குகளுக்கு சமூகத்தின் பரந்த செழுமைக்கு மேல் அதிகாரத்தையும் செல்வத்தையும் தக்கவைத்துக் கொள்வதற்கு முன்னுரிமை அளிப்பதால், நீண்ட கால வளர்ச்சியைத்

தொடர்வதற்கான ஊக்கங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. இந்த நிறுவனக் கட்டமைப்பானது புதுமைகளைத் தடுக்கிறது; வாய்ப்புகளைக் குறைக்கிறது; பொருளாதாரத் தேக்கத்திற்கு வழிவகுக்கிறது.

சில ஏழ்மையான நாடுகளில் பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும், பணக்கார நாடுகளுக்கும் ஏழ்மையான நாடுகளுக்கும் இடையிலான இடைவெளி தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்தக் கவலைக்குரிய புள்ளிவிபரம் உலகளாவிய சமத்துவமின்மையின் சவாலை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. உலகமயமாக்கல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஏழை நாடுகளை வளர அனுமதித்திருந்தாலும், இடைவெளியை நிரப்புவதற்குத் தேவையான வேகத்தில் அவை பணக்கார நாடுகளை முந்திச் செல்ல பல தடைகளைத் தாண்ட வேண்டிய நிலையில் உள்ளன. மிக முக்கியமான தடைகளில் முதன்மையானது உள்ளக நிறுவனங்களின் வகிபாகம் ஆகும்.

சுருக்கமாகக் கூறின், இலங்கை உட்பட, பல தேசங்கள் இன்று தோல்வியடைகின்றன. ஏனெனில் அவற்றின் பிரித்தெடுக்கும் பொருளாதார நிறுவனங்கள் சேமிக்க, முதலீடு செய்ய மற்றும் புதுமைகளை உருவாக்கத் தேவையான ஊக்கத் தொகைகளை மக்களுக்குக் கொடுக்கவில்லை. பிரித்தெடுக்கும் அரசியல் நிறுவனங்கள், பொருளாதார நிறுவனங்களை பிரித்தெடுப்பதன் மூலம் பயனடைபவர்களின் அதிகாரத்தை உறுதிப்படுத்துகின்றன.

இரண்டு தசாப்தங்களாக, பிலிப்பைன்ஸில் உள்ள கூட்டுறவுகள், நிதிச் சேர்க்கை மற்றும் பொருளாதார வலுவூட்டலை ஊக்குவிப்பதில் பல சாதனைகளைப் புரிந்துள்ளன. கூட்டுறவுகள் அங்கே நிதிச் சேர்க்கைக்கு இன்றியமையாத பங்களிப்பாளர்களாக இருந்து வருகின்றன. மேலும் தொலைதூரக் கிராமப் புறங்களுக்கு தங்கள் பாரிய வலைப்பின்னல் மூலம் சேவை செய்யும் திறனைப் பெற்றிருக்கின்றன. சேமிப்பு மற்றும் மூலதனத்தை உருவாக்குதல், கடன் உதவிகளை விரிவுபடுத்துதல் ஆகியவற்றின் மூலம் உள்ளூர் வளங்களைத் திரட்டுகின்றன. சிறு கூட்டுறவுகளை பலமான கூட்டுறவுகளுடன் இணைத்து, இசைந்து இயக்குவதில் அனுபவங்களைக் கொண்டுள்ளன.

பிலிப்பைன்ஸ் அனுபவம்

கூட்டுறவு என்பது கூட்டாகச் சொந்தமாக்கிக் கொண்ட, ஜனநாயகக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தின் மூலம் பொதுவான பொருளாதார, சமூக, கலாசாரத் தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய தன்னார்வமாக ஒன்றுபட்ட நபர்களின் தன்னாட்சி சங்கம் எனலாம்.

கூட்டுறவுகள் மக்களை ஜனநாயகம் மற்றும் சமமான வழியில் ஒன்றிணைக்கின்றன. உறுப்பினர்கள் வாடிக்கையாளர்களாக இருந்தாலும், பணியாளர்களாக இருந்தாலும், பயனர்களாக இருந்தாலும் அல்லது குடியிருப்பாளர்களாக இருந்தாலும், கூட்டுறவுகள் ‘ஒரு உறுப்பினர், ஒரு வாக்கு’ விதியால் ஜனநாயக ரீதியாக நிர்வகிக்கப்படுகின்றன. உறுப்பினர்கள் நிறுவனத்தில் முதலீடு செய்த மூலதனத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் சமமான வாக்குரிமையைப் பகிர்ந்து கொள்கிறார்கள். கூட்டுறவானது, மலிவு விலையில் தரமான பொருட்கள், சேவைகள், விநியோகம் மற்றும் சந்தைகளுக்கான அணுகலை அதிகரிக்கவென பலமான கட்டமைப்பைக் கொண்டுள்ளது. செலவுகளைக் குறைத்தல், சந்தைகள் மற்றும் சமூகங்களுக்குச் சேவை

மிண்டானோவில் கூட்டுறவுக் கண்காட்சி

செய்தல் ஆகியவை, வரலாற்று ரீதியாக பங்களிப்புச் செய்வதில் அதிக கவனம் கொண்டுள்ளன. கூட்டுறவு, ஒரு உதவி அமைப்பாக, அரசாங்கத்தின் முறையான கண்காணிப்பு மற்றும் ஆதரவுடன் பல புதுமைகளை வெளிக்கொணர உதவுகின்றது; விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிக்கின்றது. ஏனெனில் கூட்டுறவுகள், சேமிப்பு மற்றும் மூலதனத்தை திரட்டும் சக்தியால் குறைந்த சலுகை பெற்றவர்களின் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியில் உள்ளீடுகளாகச் செயற்பட முடியும் என்பதோடு சமூகத்தின் உறுப்பினர்கள் கூட்டுப் பங்காளிகளாக உருமாறவும் உதவுகின்றன. கூட்டுறவு நிறுவனங்கள், உலகின் பல பகுதிகளில் உள்ள உள்ளூர்ப் பொருளாதாரங்கள் மற்றும் சமூகங்களில் பெண்களின் வாய்ப்புகளை விரிவுபடுத்துவதன் மூலம் பாலினச் சமத்துவத்திற்கு பங்களிப்புச் செய்கின்றன; வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் மற்றும் பல்வேறு வகையான சேவைகளை வழங்குவதன் மூலம் வறுமையைக் குறைப்பதில் பங்களிக்கின்றன.

'பிலிப்பைன்ஸ்' இல் 1900 களின் ஆரம்பத்திலிருந்து கூட்டுறவுகள் செயற்படுகின்றன. கூட்டுறவு மேம்பாட்டு ஆணையத்தின் (CDA) படி, 1915 முதல் 1927 வரை, நாட்டில் கூட்டுறவு அமைப்புகளை வலுப்படுத்தும் சட்டங்கள் இயற்றப்பட்டன. டாக்டர். ஜோஸ் ரிசால் அவர்கள் விவசாய சந்தைப்படுத்தல் கூட்டுறவு அமைப்பை மிண்டானோவில் உருவாக்கினார். ஜோஸ் ரிசால் ஒரு பிலிப்பைன்ஸ் தேசியவாதி, எழுத்தாளர், பிலிப்பைன்ஸில் ஸ்பானிய காலனித்துவ காலத்தின் முடிவுக்கு வித்திட்டவர். கிளர்ச்சி குற்றத்திற்காக அவர் ஸ்பானிஷ் காலனித்துவ அரசாங்கத்தால் தூக்கிலிடப்பட்டார்; புரட்சி அவரது எழுத்துகளால் ஈர்க்கப்பட்டது. அவர் பிலிப்பைன்ஸ் சுதந்திரத்திற்கு வழிவகுத்த சுதந்திர வீரர். கூட்டுறவு, சுதந்திரப் போராட்ட மக்கள் இணைப்புக்கு வழிதிறந்து விட்டது. இன்றும் கூட அதன் நீட்சி தொடர்கிறது. பொருளாதாரச் சுதந்திரத்தில் இன்றும் கூட்டுறவுகள் தான் முன்னணி வகிக்கின்றன. மிண்டானோவில் கூட்டுறவு ஒரு பலமான அடித்தளக் கட்டமைப்பின் ஆதாரம்; ஒரு வலுவான

பொருளாதாரக் கோட்பாடாக நவீன தேவைகளுக்கு இசைந்து தன்னை உருமாற்றி வருகிறது. பிலிப்பைன்ஸில் கூட்டுறவுத் திணைக்களமும் கூட்டுறவாளர்களும் இணைந்து திட்டமிடுகிறார்கள். ஆண்டு தோறும் நடைபெறும் கூட்டுறவு மகாநாடுகளில் கூட்டுறவு ஒரு வலுவான குரலாக இருக்கிறது. பெரிய கூட்டுறவுக் கட்டமைப்புகளை உருவாக்குவதில் இணைந்து உழைக்கிறார்கள். பல்கலைக்கழகங்கள் தமது கூட்டுறவுத்துறை ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்து கொள்ளைத் திட்டமிடலுக்கு உதவுகின்றன. அங்கு கூட்டுறவின் அரசியல் பலம் வலுவானது; வாக்கு வங்கி, அரசின் கொள்கை உருவாக்கத்தில் கூட்டுறவின் குரல் வலுவானது.

பிலிப்பைன்ஸில் கூட்டுறவுத் திணைக்களமும் கூட்டுறவாளர்களும் இணைந்து திட்டமிடுகிறார்கள். ஆண்டு தோறும் நடைபெறும் கூட்டுறவு மகாநாடுகளில் கூட்டுறவு ஒரு வலுவான குரலாக இருக்கிறது. பெரிய கூட்டுறவுக் கட்ட மைப்புகளை உருவாக்குவதில் இணைந்து உழைக்கிறார்கள்.

கூட்டுறவுத் திணைக்களம் மூலம் திறன் அபிவிருத்தி, முகாமைத்துவ மேம்பாடு, நிர்வாகம் மற்றும் செயற்பாட்டு திறன்களை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியான பயிற்சித் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் கிடைப்பதற்கு அரசு நிதி உதவி செய்கிறது. புதிதாக ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூட்டுறவுத் திணைக்கள (CDA) ஊழியர்களின் வழித்துணை உண்டு. கூட்டுறவு வணிகத்தை எவ்வாறு நடத்துவது என்பது குறித்த வலுவான திட்டமிட்ட ஆலோசனைகள் மிண்டானோவின் கூட்டுறவு அபிவிருத்திக்கு உரமூட்டுகிறது.

நிதிக்கான அணுகல் என்பது ஒரு கூட்டு உழைப்பு. அரசாங்கத் திட்டங்கள், நிதி நிறுவனங்களுடனான கூட்டாண்மை மற்றும் நன்கொடையாளர்களின் ஆதரவின் மூலம் மூலதனத்தை அணுகுவதற்கான கூட்டுறவின் வழிகளை அரசும் கூட்டுறவுச் சம்மேளனங்களும் கூட்டாக உருவாக்குகின்றன. புதிதாக உருவாக்கப்பட்ட கூட்டுறவுகளுக்கு எப்போதும் முன்னுரிமை உண்டு. பெரும்பாலான பெரிய கூட்டுறவு நிறுவனங்கள் அரசு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியை எளிதாகப் பெற முடியும். ஏனெனில் அவர்கள் ஏற்கனவே தங்கள் மதிப்பை நிரூபிப்பதற்கான ஒரு சாதனைப் பதிவைக் கொண்டுள்ளனர். சில கூட்டுறவு அமைப்புகள் பல வழிகளில் சுயமான நிதி

Image Source - www.facebook.com/FEDCO

ஆதாரங்களை நாடுகின்றன. அதில் முக்கியமானது ‘கூட்டுறவு பிணை முறி’ (Cooperative Bond). கூட்டுறவு தொடக்க நிறுவனங்கள் மற்றும் பெண்கள் கூட்டுறவு அமைப்புகள் பெரும்பாலும் இந்த வாய்ப்பைப் பெறுகின்றன. கூட்டுறவுப் பங்குப் பத்திரங்கள் அல்லது கூட்டுறவு முறி (Coop Share Bond) அல்லது கூட்டுறவு சமூக நிதி என்பது பிரபலமான கூட்டுறவு நிதி முதலீடாகும். கூட்டுறவுச் சமூக நிதி, கூட்டுறவு மற்றும் சமூகம் ஆகிய இரண்டின் நீடித்த நன்மைக்காக, கூட்டுறவு வணிக மாதிரி முதலீட்டு வடிவங்களாக, சுற்றுச்சூழல், சமூகம் மற்றும் ஆளுகை (ESG) ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் நிதிச் சேவையை வழங்குகிறது. கூட்டுறவுச் சமூக நிதி ஒரு சட்ட வலுவுக்கு உட்பட்டது. கூட்டுறவு அமைப்புகள் கூட்டுறவுச் சமூக நிதி உருவாக்கத்தில் முழுமையாக ஈடுபடலாம். இது கடல் கடந்த பிலிப்பினோக்களின் சேமிப்பு (Cooperative Share Bond) மூலம் திரட்டப்படுகிறது. கடல் கடந்த பிலிப்பினோக்கள் மாதாந்தம் 3 பில்லியன் ‘பெசோ’ இனை அரசின் நிதிக்கு பங்களிப்பாகத் தருகின்றனர். நாடு கடந்தாலும், கடல் கடந்த பிலிப்பினோக்களுக்கு வாக்குரிமை உண்டு. அரசியல் பலம் உள்ளவர்கள் கூட்டுறவின் நிதி ஆதாரத்தை உறுதிப்படுத்துகின்றனர். கூட்டுறவின் முதலீட்டில் பங்களிப்பு நல்குவதன் மூலம் நாடு திரும்பும்போது, கூட்டுறவு வாழ்வாதார மூலங்களை வழங்குகின்றன.

கூட்டுறவுக் கொள்கை, கூட்டுறவுச் சம்மேளனங்களின் நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் இணக்கத்திற்கான ஊக்குவிப்புகளை வழங்குகின்றது. இதன் காரணமாக சிறிய கூட்டுறவுகளின் நிர்வாகச் சுமைகள் குறைக்கப்படுகின்றன.

சந்தை இணைப்புகள் மூலம் சந்தை அணுகலை எளிதாக்குதல் மற்றும் மதிப்புச் சங்கிலி ஒருங்கிணைப்புக்கான ஆதரவை வழங்குதல் ஆகியவை கூட்டுறவுச் சம்மேளனங்களின் முக்கிய வகிபாகம். பெரிய சந்தைகளை அடையவும் அவற்றின் போட்டித் தன்மையை மேம்படுத்தவும் சம்மேளனங்கள் திட்டமிட்டு உழைக்கின்றன.

கூட்டுக் கூட்டுறவுகள், கூட்டுறவுகள் - அரச நிறுவனங்கள் - தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார்துறை நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பை ஊக்குவித்து, கூட்டுப் பலத்தைப் பயன்படுத்தி பொதுவான சவால்களை எதிர்கொள்வதற்கான பலமான கூட்டுறவு முறைமையை உருவாக்குவதற்கு வழிவிடுகிறது.

கிராமப்புறங்களில் அதிக எண்ணிக்கையிலான கூட்டுறவுகள் உள்ளன. வெற்றிகரமான, பெரிய கூட்டுறவு நிறுவனங்கள் தங்கள் வளங்களை விவசாய வளர்ச்சியைத் தூண்டுவதற்குப் பயன்படுத்துவதோடு பெறுமதிசார் கவனம் கொண்டும் இயங்குகின்றன.

ஒரு பெரிய கூட்டுறவுச் சங்கம் என்பது உறுப்பினர் கூட்டுறவுகளின் பங்களிப்புகளிலிருந்து திரட்டப்பட்ட அதிக ஆதாரங்களைக் குறிக்கிறது. வளங்கள் ஒன்றிணைக்கப்படும் போது, அது உறுப்பினர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. இதனால் கூட்டுறவு விவசாயத் துறைக்கு புத்துணர்ச்சி கிடைக்கிறது.

மிண்டானோவில் கூட்டுறவு என்பது ஒரு தனித்துவமான சங்கமாகும்; ஏனெனில் கூட்டுறவு தங்கள் வளங்களைத் திரட்டுவதற்கும், கூட்டுறவு அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் கூட்டுறவு அமைப்பின் இணை உரிமையாளர்களாக இருப்பதற்கும் எப்போதும் உறுதி செய்கிறது. கூட்டுறவு, அமைந்துள்ள இடத்தின் அடையாளமாக மாற, கூட்டுறவு வாழ்வு உறுதிசெய்கிறது. ஒரு கூட்டுறவுச் சங்கத்தின்

முறையான நிர்வாகம், அது வெற்றிகரமாக, உரிமையாளர் - உறுப்பினர்களுக்கு பயனுள்ளதாக மாறும் தன்மையை எப்போதும் பேணும்.

பிலிப்பைன்ஸ் பொருளாதாரத்தில் கூட்டுறவுகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சமூக - பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கின்றன; நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துகின்றன. 2023 ஆம் ஆண்டு நிலவரப்படி, பிலிப்பைன்ஸில் விவசாயம், நிதி, நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய 20,105 இற்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுகள் உள்ளன. இந்தக் கூட்டுறவுகளில் சிறிய சமூக அடிப்படையிலான முன்முயற்சிகள் முதல் பெரிய, பல்துறை நிறுவனங்கள் வரை உள்ளன. பிலிப்பைன்ஸ் ஒரு விவசாய நாடு. அதனால், கூட்டுறவுகளின் கணிசமான பகுதி விவசாயத்தை மையமாகக் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லை. விவசாயக் கூட்டுறவுகள் விவசாயிகள் மற்றும் கிராமப்புறச் சமூகங்களை ஆதரிக்கின்றன. கூட்டுறவுகள் மூலம், அதன் உறுப்பினர்கள் வளங்கள், தொழில்நுட்பம் மற்றும் சந்தைகளை அணுகலாம். இது அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துகிறது.

பமிலியாங் பிலிப்பைன்ஸ் விவசாயிகளின் விவசாயக் கூட்டுறவு (*The Pamilyang Filipino Farmers Agricultural Cooperative - PFFAC*) முப்பத்து மூன்று நிறுவனக் கூட்டுறவு நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டது. இது குடும்ப விவசாயிகள், அவர்களது குடும்பங்கள் மற்றும் பண்ணைப் பணியாளர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுப் புத்தாக்கம் ஆகும். பெரும்பாலும் பிலிப்பைன்ஸின் தெற்கு மற்றும் வடக்கில் உள்ள உறுப்பினர்களைக் கொண்ட ‘*Calabarzon*’ பகுதிகளில் சிறிய அளவிலான குடும்ப விவசாயிகள் உள்ளனர். முதலில் இவர்கள் ஒரு குடும்பக் கூட்டுறவு சமூக வலைப்பின்னல் ஒன்றை உருவாக்கினார்கள். இந்தக் குடும்ப விவசாயிகள், அவர்களது விவசாயத் தொழிலாளர்கள் உட்பட அதன் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய விவசாயக் கூட்டுறவு ஒன்றை வைத்திருக்கும் பொறுப்பை ஏற்க முடிவு செய்தனர். பமிலியாங் பிலிப்பினோ விவசாயிகள் சமூகம் 21 ஆம் நூற்றாண்டின் குடும்பக் கூட்டுறவு விவசாயச் சமூகமாக உள்ளது. கிராமப்புற வளர்ச்சிக்குப் பங்களிப்பதற்கான நிலையான வழிக் குடும்ப விவசாயம் என்ற நம்பிக்கையில் அவர்கள் ஒன்றாகச் செயற்படுகின்றனர்; குடும்ப விவசாயம் சமூகத்தில் பல செயற்பாட்டுப் பாத்திரங்களை வகிக்கிறது என்ற கருத்தை ஏற்றுக்கொள்கின்றனர். இது அதிகாரபூர்வமாக 2019 இல் கூட்டுறவு மேம்பாட்டு ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்க அனுமதிக்கப்பட்டது.

மிண்டானோவில் (*Mindanao, Southern Philippines*) உள்ள கூட்டுறவுகளின் கூட்டமைப்பு (FEDCO) என்பது ஒவ்வொருவரினதும் விருப்பத்தக்க கூட்டுறவு அடையாளம் ஆகும். மிண்டானோ மக்களின் பெருமை, பலம் மற்றும் ஆதாரமாக இது உள்ளது. ‘FEDCO’ வாழைப்பழ உற்பத்திக்குப் பெயர் பெற்றது; விவசாய விளைவுகளைப் பொதிசெய்து மத்திய கிழக்கு, தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளுக்கு வர்த்தகம் செய்கிறது; வாழைப்பழக் கூட்டுறவுகளை இணைத்து, நிர்வகித்து, தொலைதூரக் கொள்வனவாளர்களை நேரிடையாக நிர்வகிப்பதற்கான திறமையை உருவாக்குகிறது.

ஜப்பான், சீனா, கொரியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கொள்வனவாளர்களுடன் நேரடிச் சந்தை

இணைப்புகளைத் திட்டமிட்டு வளர்த்த பெருமை ‘FEDCO’ இனையே சாரும். இதன் மூலம், அர்த்தமற்ற செலவுகளைக் குறைக்க முடிந்தது. வாழைக் கூட்டுறவு விவசாயிகள் தங்கள் பொருட்களை மிகவும் பாதுகாப்பாக, நல்ல விலையில் விற்பனை செய்வதற்கு உதவியது. வாழைச் சாகுபடியாளர்கள் இப்போது உலக வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் சிறந்த வாழைப்பழங்களை நேரடியாக வழங்க முடியும். இது வாழை உற்பத்தியாளர்களுக்கும் வாங்குபவர்களுக்கும் ஒரு சாதகமாக நிலையை பல்தேசியக் கம்பெனிகளுக்குப் போட்டியாக உருவாக்கியது.

‘FEDCO’ கூட்டுறவு விவசாயிகளைச் சந்தைகளுடன் இணைப்பதிலும், வாங்குபவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதிலும், ஒருங்கிணைத்தல் - சந்தைப்படுத்தல் - செயலாக்கல் சேவைகளை வழங்குவதிலும், முதன்மைப் பொருட்களுக்கான விநியோக வழிகளை வழங்குவதிலும், பயிற்சி - வணிகத் திட்டமிடல் - திறன் மேம்பாட்டுச் சேவைகளை வழங்குவதிலும் முக்கிய வகிபாகம் வகிக்கிறது.

பிலிப்பைன்ஸில் விவசாயக் கூட்டுறவுகள் உள்ளூர்த் துறையைப் பற்றி அறிந்திருப்பதன் தனித்துவமான அம்சத்தைக் கொண்டுள்ளன. விவசாயக் கூட்டுறவாளர்களின் மதிப்பு, கூட்டுறவுத் துறைக்கு வெளியே இருப்பதை விட, விவசாயிகளுக்கு அதிக இலாபம் தரும் நன்மைகளைக் கொண்டுள்ளது. விவசாயிகளின் நம்பிக்கை கூட்டுறவில் கலந்துள்ளமைக்குக் காரணம், கூட்டுறவுத் துறை ஒரு ‘உள்ளடக்கிய’ துறையாக கருத்தியல் ரீதியாக கட்டமைக்கப்பட்டமையாகும்.

‘FEDCO’ இன் சம்மேளன இணைவு இரண்டு வகைகளில் இடம்பெறுகிறது. 1) விநியோகக் கூட்டுறவு மற்றும் சந்தைப்படுத்தல் கூட்டுறவு நடவடிக்கைகளை ஒரு புள்ளியில் இணைத்தல். 2) பெறுமதி கூட்டல், பரந்த அளவில் கூட்டுறவாளர்களை இணைத்தல் மற்றும் நிதி மூலங்களைத் திரட்டுதல்.

மிண்டானோவின் கூட்டுறவு, பெரும்பாலும் ‘உள்ளடக்கிய’ நிறுவன அம்சங்களை உள்வாங்கியவை. நீடித்த பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு, உள்ளடங்கிய அரசியல் மற்றும் பொருளாதார நிறுவனங்களை கூட்டுறவுத் துறை மூலம் முனைப்புடன் இணைக்கின்றன. கூட்டுறவு இணைவுகள் பொருளாதார மற்றும் அரசியலில் பரந்த பங்கேற்பை அனுமதிக்கின்றன; அனைத்துத் தரப்பு மக்களுக்கும் வாய்ப்புகளை உருவாக்குகின்றன.

முடிவு

வடக்கு - கிழக்கின் பல கூட்டுறவு அமைப்புகள், குறிப்பாக முதன்மையான சங்கங்கள், சமாசங்கள் மற்றும் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் (சம்மேளம்) ஆகியன ‘உள்ளடக்கிய’ நிறுவனங்களுக்குரிய உள்ளக அம்சங்களைக் கவனம் கொள்ளாது விலகிப் பயணிக்கும் போது, அவை ‘பிரித்தெடுக்கும்’ நிறுவனங்களாக உருவாகும் நிலை வரலாம். ஏனெனில், பல கூட்டுறவுகள் உண்மையான அதன் தாற்பரியத்தை அறியாமல் ‘பிரித்தெடுக்கும்’ நிறுவனங்கள் என்ற வகைக்குள் சென்று கொண்டிருக்கின்றன.

போரின் பின் கடல் வளங்கள் சுரண்டப்படுகின்றன. கடலை நம்பி வாழும் சமூகம் ஒரு கனதியான சமூக, பொருளாதார நெருக்கடியில் தினமும் அவதிப்படும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. தீவுப்பகுதிகளில் தினமும் இந்திய மீனவர்களின் வளச்சுரண்டல் நடைபெறுவதை அவதானிக்கலாம். பலம் பொருந்திய இந்தியா ஒரு அச்சுறுத்தும் அண்டை நாடாக உருவாகி வருகிறது. இதற்கு எதிராகப் போராடும் மீனவர்கள் அனைவரும் கூட்டுறவு அமைப்புகளின் பங்காளிகளாகவே

உள்ளனர். இன்று வரை மீனவர்களின் போராட்டம் அவர்களின் போராட்டமாகவே தனித்துவிடப்பட்டுள்ளது. வட மாகாணத்தில் பல கூட்டுறவுச் சம்மேளனங்கள் (தெங்கு - பனை, சிக்கன கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனம்) உள்ளன. ஆனாலும், மீன்பிடித்துறை விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் சூழ்நிலையில், மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கங்கள் போராடும் கொதி நிலைக்கு உட்படும் நிலையில், அது குறித்த ஏனைய கூட்டுறவு அமைப்புகளின் அக்கறை என்னவாக இருக்கிறது என்ற கேள்வி எம் முன்னே உள்ளது. பரஸ்பர நலன்களில் அக்கறை கொண்ட கூட்டுறவு அமைப்புகளின் 'உள்ளடக்கிய' தன்மை பற்றிய அறியாமையே இதற்கு மிக முக்கிய காரணம்.

எமது கூட்டுறவு அமைப்புகள் கடந்த காலங்களில் பல சாதனைகள் புரிந்தவை; பல முன்னோடித் திட்டங்களை மக்களின் நன்மைக்கு அர்ப்பணித்தவை. ஆனால் இன்று பலவீனமான கூட்டுறவுக் கட்டமைப்புகளாய் பிரிந்து, தனித்து நிற்கும் பனை மரங்களாய் உள்ளன. அவை தோப்புகளாக மாறினால் ஒழிய கூட்டுறவின் வளர்ச்சி உறுதி செய்யப்படப் போவதில்லை. தற்போது தேவைப்படுவது எல்லாம் கூட்டுறவுத் தலைவர்களிடையே உடன்பாடு தான். எல்லோரும் ஒன்றிணைந்த ஒரு சந்திப்பு நிகழுமாயின் எல்லாவற்றுக்கும் வழிபிறக்கும்.

உசாத்துணை

1. Bill No. 124 Bangsamoro Cooperative and Social Enterprise https://parliament.bangsamoro.gov.ph 2022/03 B
2. Cooperative Summit in Mindanao, https://www.icaap.coop/icanews/cooperativesummitmindanao
3. Cooperative for tech services eyed in Mindanao, https://www.bworldonline.com/thenation/2021/11/14/410435/cooperativefortechserviceseyedinmindanao/
4. Farmers Fighting Poverty through Value Chain Development in Mindanao, https://micdp.coops4dev.coop/project/farmersfightingpovertythroughvaluechaindevelopmentmindanao
5. Federation of Cooperatives in Mindanao (FEDCO), https://www.philfarm.com/federationcooperativesmindanaofedco/. https://www.facebook.com/p/federationofcooperativesinmindanaofedco100057486968320/
6. How can we make sure our cooperatives are inclusive?, Cooperative identity, values & principles, https://ica.coop/en/cooperatives/cooperativeidentity.
7. Jaffna District Federation of Fisheries Cooperative Unions, https://www.icsf.net/wpcontent/uploads/2022/12/Sam_88_Roundup.pdf.
8. MASSSPECC Cooperative Development Center, https://microfinancecouncil.org/massspecccooperativedevelopmentcenter/
9. Mindanao coops get Foccus certification, https://www.sunstar.com.ph/morearticles/12mindanaocoopsgetfoccuscertification
10. Philippine Banana Cooperatives' Successes and Challenges, https://archive.foodfirst.org/philippinebananacooperativessuccessesandchallenges/
11. SRI: Northern Province Sustainable Fisheries Development Project – PPTA, https://www.adb.org/sites/default/files/projectdocuments/49325/49325001tacren.pdf
12. The Mindanao Peace and Normalization through Cooperative Development (MPNCD 2019), https://cda.gov.ph/themindanaopeaceandnormalizationthroughcooperativedevelopmentmpncd2019/
13. Why Nations Fail: The Origins of Power, Prosperity, and Poverty, Paperback – September 17, 2013 by Daron Acemoglu (Author), James A. Robinson (Author), https://www.amazon.com/WhyNationsFailOriginsProsperity/dp/0307719227
14. Notes: Jose Rizal, who travelled to Spain, set up the first cooperative in 1896 for agricultural marketing. Similarly, Teodoro Sandiko, influenced by the German cooperative banking model, prepared the 1915 Rural Credit Act. chromehttps://cda.gov.ph/wpcontent/uploads/2021/01/basicinfooncoops.pdf.

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதனை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக ‘இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்’ என்ற இத்தொடர் அமைகிறது.

சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.

கறவை மாடுகளின் நலன் (welfare) தொடர்பான அவதானிப்புகள்: இலங்கை நிலைப்பாடு

Image Source : www.solidaridadnetwork.org

ஒரு கால்நடை வைத்தியராக இலங்கையின் கறவை மாடுகளின் நலன் தொடர்பாக அவதானித்தவை மற்றும் நடைமுறைகளை இந்தக் கட்டுரையில் ஆராயப் போகிறேன். உலகளாவிய ரீதியில் கறவை மாடுகள் மற்றும் ஏனைய விலங்குகளின் நலன் தொடர்பாக நவீன எண்ணக்கருக்களுடன் கூடிய சட்டங்கள் உள்ளதுடன் அந்தச் சட்டங்கள் மிக மிக இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இலங்கையில் 1907 இல் பிரித்தானியர் ஆட்சியில் உருவாக்கப்பட்ட சட்டமான *'Prevention of cruelty to animals ordinance'* (1907) நடைமுறையில் உள்ளதோடு இன்னும் இந்தச் சட்டத்தின் படிதான் விலங்கு நலன் மற்றும் அவற்றின் மீறல் தொடர்பான தண்டனைகளும் வழங்கப்படுகின்றன. அதாவது மிகப் பெரும் விலங்கு உரிமை மீறல் தொடர்பாக 100/ ரூபா வரையான தண்டப் பணமே அறவிடப்படுகிறது. அரச கால்நடை வைத்தியராக அடிக்கடி ஒரு பிரதேசத்திலிருந்து இன்னொரு பிரதேசத்துக்கு விலங்குகளின் பயணம் தொடர்பாக அனுமதி வழங்கும் அதேவேளை, அவை தொடர்பான மீறல் வழக்குகளில் சாட்சியாளராகவும் இருப்பதால், மிகப்பெரிய விலங்கு நலன் மீறல்களின் போதும் வெறும் 100 ரூபாய் தண்டத்துடன் பலர் தப்புவதைக் கண்டிருக்கிறேன்.

நவீன விலங்கு நலன் தொடர்பான எண்ணக்கருக்களுடன் உருவாகியுள்ள புதிய விலங்கு நலச் சட்டம் நீண்ட காலமாக சமர்ப்பிக்கப்படாத நிலையே உள்ளது. இதன் உள்ளடக்கத்தில் விலங்குகளை சரியாகக் கவனிக்காமல் புறக்கணித்தல், பொருத்தமற்ற விலங்கு வீடுகள், உணவு - தண்ணீர் போன்ற அடிப்படை நலன்களை புறக்கணிக்கின்றமைக்கு வழங்கப்படும் கடும் தண்டனைகளோடு விலங்குகளின் பிரயாணம், இறைச்சிக்கு கொல்லுதல், சிகிச்சையளித்தல், வேலைக்குப் பாவித்தல், இராட்சத கறவை மாட்டுப் பண்ணைகள், விலங்கு விற்பனை போன்றவற்றை நெறிப்படுத்தும் விடயங்களும் உள்ளடங்கியுள்ளன. மாடுகள் போன்ற பண்ணை விலங்குகள் மாத்திரமன்றி செல்லப்பிராணிகள், காட்டு விலங்குகள், வளர்ப்பு யானைகள் போன்ற விலங்குகள் தொடர்பாகவும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. குற்றம் நிரூபிக்கப்படும் போது இலட்சக் கணக்கில் தண்டம் மற்றும் சிறைத் தண்டனைகளும் வழங்கப்படும் வகையில்தான் இந்த திருத்தச் சட்டம் உள்ளது. இது நடைமுறைக்கு வரும் போது இலங்கையில் விலங்கு நலன் தொடர்பான பல பிரச்சினைகள் தீர்க்கப்படலாம்.

கறவை மாடுகளின் நலன் என்பதை, கறவை மாடுகள் தமது உடற் தொழிலியல், மனநலம் மற்றும் இயல்புகளை சரியாக தாம் வாழும் சூழலில் சுதந்திரமாக வெளிப்படுத்துதல் எனக் கூறலாம். இது முறையான இருப்பிடம், உணவு ஊட்டம், நோய்க் காப்பு/ மருத்துவ வசதிகள், இயல்புகளை சரிவர வெளிப்படுத்துதல் போன்றவற்றைக் கொண்டிருக்கிறது.

கறவை மாடுகளில் விலங்குநலன் தொடர்பான கூறுகள்

1. இருப்பிடம் தொடர்பான விடயங்கள் (Housing)

சுத்தமான மற்றும் போதிய இடைவெளியுடனான இருப்பிடம் அவசியமாகிறது. மாடுகள் படுத்திருக்கும் நிலம் சிதைவடையாததாகவும் வழுக்கி விழாத வகையிலும் அமைய வேண்டும் (முறையற்ற நிலத்தால் காயமடைதல்

Image Source : www.redcross.lk

மற்றும் நொண்டும் நிலை தோன்றும்). கீழ் நிலம் சீராக இருப்பதோடு உமி, வைக்கோல், இறப்பர் மெத்தைகள் போன்றவற்றால் நிரப்பப்பட்டிருந்தால் கால்நடைகள் பாதிப்படைவது தடுக்கப்படும். மேலும் மழை, வெய்யில், குளிர் பாதிக்காத வகையில் இருப்பிடம் மேலே மறைக்கப்பட்டதாக அமைய வேண்டும். அவை உள்ளேயும் வெளியேயும் சுதந்திரமாக நடமாடவும் தமது இயல்புகளை எந்தவித இடையூறும் இன்றியும் வெளிப்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும்.

சில வருடங்களுக்கு முன் வடக்கு இலங்கையில் ஏற்பட்ட குளிருடனான மழைச் சூழலில் எந்தவித மறைப்பும் இல்லாத திறந்த வெளியில் கட்டப்பட்ட பல கால்நடைகள் குளிர் அழுத்தம் (Cold shock) காரணமாக இறந்திருந்தன. மேலும் வருடாந்தம் பல கால்நடைகள் வெப்ப அயர்ச்சி (Heat stroke) காரணமாக இறப்பதுடன் சினைப்படுதல் தாமதமடைதல் மற்றும் கருச்சிதைவுக்கும் உள்ளாகின்றன.

சுகாதாரமற்ற இருப்பிடம் மற்றும் சூழல் பல தொற்று நோய்கள் மற்றும் இலையான், நுளம்பு போன்றவற்றின் பெருக்கத்துக்கு காரணமாக அமைகிறது. காற்றோட்டமற்ற இருப்பிடங்கள் சுவாச நோய்த் தொற்றுக்கு காரணமாக அமைகிறது. மிக நெரிசலாக கால்நடைகளை வைத்திருப்பது இலகுவாக நோய்கள் தொற்ற ஏதுவாக அமைவதுடன் அவற்றின் மன அழுத்தம் (stress) அதிகரிக்க வாய்ப்பையும் தருகிறது.

2. உணவூட்டல் தொடர்பான விடயங்கள் (Feeding)

மாடுகளுக்கு புரதம், மாப்பொருள், கொழுப்பு, விற்றமின், கனியுப்புகளுடன் கூடிய சமச்சீரான உணவு (Balanced diet) போதியளவு வழங்கப்பட வேண்டும். குடிநீர் தொடர்ச்சியாக கிடைக்க வேண்டும். இலங்கையில் மாடுகளுக்கு தொடர்ச்சியாக தண்ணீர் வைக்கப்படுவது மிக மிகக் குறைவே. வறட்சியான காலத்தில் அவை உணவு மற்றும் தண்ணீர் கிடைக்காமல் அவற்றின் உடற் தொழிற்பாடுகள் பாதிக்கப்படுவதுடன் பல அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றன. பருவ மழை பெய்யும் மற்றும் நெற்பயிர் செய்யும் காலத்தில் மேய்ச்சலின்றி பல கறவை மாடுகள் பாதிக்கப்படுவதுடன் அவற்றின் உடல் நிலைச் சுட்டெண் (BCS - Body Condition Score) குறைவடைகிறது. இதனால் பல நோய்த் தொற்றுகளுக்கு உள்ளாகும் தன்மையும் தோன்றுகிறது.

3. கால்நடைச் சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு வசதிகள்

சில முக்கிய நோய்கள் வராமலிருக்க உயிர்ப்பாதுகாப்பு முறைகள் மற்றும் நோய்த்தடுப்பு முறைகள் அவசியமாகின்றன. இவற்றை முறையாகச் செய்யாத பண்ணையாளர்கள் அவர்கள் வளர்க்கும் கறவை மாடுகளின் உரிமையை மீறுகின்றனர். பலர் நோய்ப்பட்ட கால்நடைகளுக்கு முறையான சிகிச்சைகளை வழங்குவதில்லை. குடற்புழு நீக்க மருந்துகள் வழங்குவதில்லை. தடுப்பூசி வழங்க அனுமதிப்பதில்லை. வருமானத்தை மாத்திரம் பெறுவதோடு

Image Source : www.thehindu.com

சிகிச்சைகள், மருந்துகள் கிடைக்க வழி செய்வதில்லை.

4. வேதனை தரக்கூடிய நடைமுறைகள் (Painful Procedures)

கொம்பு நீக்கம், குறிசுடல், நலம் தட்டுதல் போன்ற வேதனை தரத்தக்க நடைமுறைகளில் விலங்குகளின் நலன் பேணப்படுவதில்லை. வேதனையைத் குறைக்கும் நடைமுறைகளை பின்பற்றுவதில்லை. இறைச்சிக்கு கொண்டு செல்லும் கால்நடைகளின் உடல், உள நலன்கள் பெரியளவில் கருத்திற் கொள்ளப்படுவதில்லை. நீண்ட தூரம் நடக்க வைக்கப்படுகின்றன. வாகனங்களில் அதிக நெருக்கடியில் அவை கொண்டு செல்லப்படுகின்றன. கொண்டு செல்லும் வாகனங்களில் தண்ணீரோ உணவோ இருப்பதில்லை. அவை படுத்திருக்கும் பகுதிகளில் வைக்கோல், உமி போன்ற பொருட்கள் இருப்பதில்லை. அவை அதனால் காயமுறுகின்றன. முறையற்ற விதத்தில் வேதனை தரத்தக்க விதத்தில் அவை பழைய முறையில் கொல்லப்படுகின்றன. இறந்த விலங்குகள், கொல்லப்படும் முறைகள் ஏனைய

கறவை மாடுகள் சமூக விலங்குகள் (Social Animals). ஏனைய விலங்குகளுடன் தொடர்பைப் பேண விரும்புபவை. அதற்கு சரியான இடைவெளி அவசியம். ஏனைய விலங்குகளுடன் சுதந்திரமாக படுத்திருக்க வழி ஏற்படுத்த வகை செய்யப்படுவதுடன் தாய்ப் பசு கன்றுடன் உணர்வுகளைப் பரிமாறும் வகையிலும் இடவசதி இருக்க வேண்டும்.

கால்நடைகள் பார்க்கத்தக்க வகையில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

5. இயல்புகளை வெளிப்படுத்தும் தன்மைகள்

கறவை மாடுகள் சமூக விலங்குகள் (Social Animals). ஏனைய விலங்குகளுடன் தொடர்பைப் பேண விரும்புபவை. அதற்கு சரியான இடைவெளி அவசியம். ஏனைய விலங்குகளுடன் சுதந்திரமாக படுத்திருக்க வழி ஏற்படுத்த வகை செய்யப்படுவதுடன் தாய்ப் பசு கன்றுடன் உணர்வுகளைப் பரிமாறும் வகையிலும் இடவசதி இருக்க வேண்டும். நவீன கறவை மாடு வளர்ப்பில், குறிப்பாக மேலை நாடுகளில் (இலங்கையில் அம்பேவல போன்ற நவீன பண்ணைகளில்) கன்று பிறந்தவுடன் தாயிடம் இருந்து பிரிக்கும் நடைமுறையும், ஆண் கன்றுகள் பிறந்ததும் இறைச்சிக்குக் கொல்லப்படுவதும் நடைமுறையில் இருப்பதை கருத்திற் கொள்ள வேண்டும்.

பல இடங்களில் ஒரு மாடு இன்னொரு மாட்டுடன் பிணைத்து விடப்படுகின்றது. மாடுகள் தொடர்ச்சியாகக் கட்டி வைக்கப்படுகின்றன. நெருக்கமாக அடைத்து வைக்கப்படுகின்றன. இந்த மாதிரியான நடவடிக்கைகள் மாடுகளின் இயல்பான நடத்தைகள் வெளிப்படுவதைத் தடுக்கின்றன.

6. அதிகரித்த கால்நடைகள்

இலங்கையின் சமய, கலாசார நிலை காரணமாக மாடுகள் பரந்தளவில் இறைச்சிக்கு வெட்டப்படுவதில்லை. இது அதிகரித்த மாடுகளின் எண்ணிக்கைக்கு காரணமாக அமைகிறது. அதிகரித்த மாடுகளின் எண்ணிக்கை உணவு மற்றும் இருப்பிடப் போட்டியை ஏற்படுத்துகிறது. இது ஊட்டச்சத்துக் குறைவு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவுக்கு காரணமாக அமைகிறது. பல விலங்குகளின் நோய் நிலை கவனிக்கப்படாது, சிகிச்சை கிடைக்காமல் கைவிடப்படுகின்றன. உற்பத்தியற்ற விலங்குகள் பெருகுவதால் செலவும் அதிகம் ஏற்படுகிறது. இவை வீதியில் விடப்படுவதால் விபத்துகளில் சிக்குகின்றன. இதனால் மனித மற்றும் விலங்குகளின் விபத்துகள் அதிகரிக்கின்றன. பல விலங்குகள் விபத்துகளினால் அங்கவீனமடைகின்றன.

7. பால் கறத்தல் மற்றும் பாலுற்பத்தியை அதிகரிக்கும் நடவடிக்கைகள்

தவறான பால் கறக்கும் முறைகளால் முலைச் சுரப்பி பாதிக்கப்படுகின்றது. இதனால் பாலுற்பத்தி குறைவதோடு மாடுகள் வேதனைக்கும் உள்ளாகின்றன. சுத்தமின்மையால் மடியழற்சி போன்ற நோய்களும் ஏற்படுகின்றன. மாடுகளின் கறவையை நிறுத்தி, அடுத்த சினைப்பருவம் மற்றும் பால் உற்பத்திச் சக்கரத்துக்குள் நுழைய முன், முலைச் சுரப்பிக்கு ஓய்வு கொடுக்கப்பட வேண்டும். இதனை பால் வற்றுக் காலம் என்பர். இந்த நடைமுறையை பல பண்ணையாளர்கள்



Image Source : www.eurogroupforanimals.org

பின்பற்றுவதில்லை. இதனால் மாடுகளின் உற்பத்தி குறைவதோடு முலைச் சுரப்பிகளும் பாதிப்படைகின்றன. கறவை மாடுகளை பால் கறக்கும் இயந்திரமாக மட்டும் பார்க்காமல், அவற்றைச் சக உயிரியாகச் சிந்திக்கும் நிலை வந்தால்தான் இதற்கு தீர்வு வரும். குறித்தளவு பண்ணைகளில் பால் உற்பத்தியை தூண்டும் ஓமோனான 'ஒக்சிடோசின்' தொடர்ச்சியாகப் பாவிக்கப்படுகிறது. இது மாடுகளின் உடற் தொழிற்பாட்டை கடுமையாகப் பாதிப்பதோடு சினைப்படுதலில் சிக்கலையும் தோற்றுவிக்கிறது.

8. களவு மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள்

இலங்கையில் அண்மைக் காலத்தில் மாடுகளைக் கடத்தல், களவாடல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. கடத்தப்படும் மாடுகள் இறைச்சிக்கு அறுக்கப்படுகின்றன. கன்றுகள், பெரிய மாடுகள் என்று பாராமல் களவுச் செயற்பாடும் அறுவையும் இடம்பெறுகிறது. இந்த மாதிரியான செயற்பாடுகளைத் தடுக்க, இறுக்கமான சட்ட நடவடிக்கையும் தண்டனையும் அவசியமாகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகளில் மாடுகளில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள் 'சென்சார்கள்' மற்றும் இரசாயன குறிகாட்டிகள் மூலம் அறியப்பட்டு அவற்றின் நலன் பேணப்படுகிறது. சென்சார்கள் மூலம் களவெடுத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளையும் தடுக்க முடியும்.

மாடு வளர்ப்பின் போது இலாபத்தை மட்டும் பார்க்காமல் அவற்றை சக உயிர்களாக மதிக்க வேண்டும். விலங்கு நலனுக்குரிய, காலத்துக்குப் பொருத்தமான சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுவதோடு தண்டனைகளும் கடுமையாக்கப்பட வேண்டும். அதேவேளை, உருவாக்கப்படும் சட்டங்கள் கால்நடை வளர்ப்பின் அடிப்படைகளை பாதிக்காத வகையிலும் அமைய வேண்டும்.

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக 'பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை' எனும் தொடர் அமைகின்றது.

● நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார்.
வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்தில் இடி – மின்னல் நிகழ்வுகள்

அறிமுகம்

அனர்த்தம் என்பது இயற்கை மற்றும் மானிடவியற் காரணிகளினால் தூண்டப்படுகின்றது. அது உலகின் ஒட்டுமொத்த உயிர்ச்சூழலுக்கும், குறிப்பாக மனித சமூகத்திற்கு உடல், உள, சொத்துகள் மற்றும் சுற்றுச் சூழலியல் ரீதியாக இடர்பாடுகளினை ஏற்படுத்துகின்ற அனைத்து நிகழ்வுகளினையும் குறித்து நிற்கின்றது (*Amri et al.*, 2023). மேற்குறிப்பிட்ட இயற்கை அனர்த்தங்களில் இடி - மின்னலும் ஒன்றாகும். அதாவது இயற்கை மற்றும் மானிடக் காரணிகளினால் தூண்டப்படுகின்ற காலநிலை மற்றும் நீர் சார்ந்த அனர்த்தங்களில் (*Climate and water Disaster*) இவ் இடி - மின்னலும் ஒன்றாக அமைகின்றது (*Leinonen et al.*, 2022). ஆரம்ப காலங்களில் இடி - மின்னல் தொடர்பில் பாரியளவு கவனம் செலுத்தப்படவில்லை என்றே கூறவேண்டும்.

இயற்கை அனர்த்தங்களில், குறிப்பாக அயன மண்டலம் சார் நாடுகளை அதிகம் பாதிக்கும் முக்கிய அனர்த்தங்களில் ஒன்றாக இடி - மின்னல் காணப்படுகிறது (*Kuleshov et al.*, 2002). அயனப் பகுதிகளிலே அதிகளவு உயர்வெப்பம் நிலவி இடைக்கிடை தாழமுக்கங்கள் தோன்றக் காரணமாவதுடன், முகில்களின் வேறுபட்ட உயரங்களிலான உருவாக்கம், நகர்ச்சி, மோதுகை என்பன நடைபெறுவதனால் ஒப்பீட்டளவில் அயனத்திலேயே இடி - மின்னல்களால் தாக்கங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன (*Kuleshov et al.*, 2002).



படம் 13.1 வடமாகாணத்தில் இடி - மின்னல் நிகழ்வு இறப்புகளும், காயங்களும் வீட்டுப் பாதிப்புகளும்

இடி - மின்னல் நிகழ்வுகளுடன் தொடர்பான அனர்த்தங்கள், குறிப்பாக இறப்புகள் மற்றும் காயங்கள் வட மாகாணத்தில் அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது (படம் 13.1). இதனடிப்படையில் இடி - மின்னல் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றமையும் கண்கூடு. அனர்த்தங்களினை ஏற்படுத்தும் இடி - மின்னலிலிருந்து மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பான பல விடயங்கள் சம்பந்தமான கருத்துகளும் தெரிவிக்கப்படுகின்றன.

இடி - மின்னல் தொடர்பில் ஆரம்ப காலங்களில் வேறுபட்ட கருத்துகள் நிலவி வந்துள்ளன. அதாவது சமய மற்றும் மதக் கொள்கைகளுடன் தொடர்புடையதொரு நிகழ்வாகவே இதனைக் கருதி வந்துள்ளனர். உதாரணமாகக் கூறுவதாயின் இடியும் மின்னலும் கடவுளின் கோபத்தின் வெளிப்பாடுகள் எனக் கருதி வந்துள்ளனர். இவ்வாறாகவே இடி - மின்னல் வானத்திலிருந்து வருகின்றதெனும் அடிப்படையில் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு சூழ்நிலைகளில், சமய மற்றும் மதக் கொள்கைகளுக்குட்பட்ட வேறுபட்ட சமூக பின்னணியில் வாழ்ந்தவர்களால் அவர்களின் கற்பனைக்கேற்ப வேறுபட்ட கருத்துகள் கூறப்பட்டு வந்துள்ளன.

வடக்கு மாகாணத்தின் அண்மைய இயற்கை அனர்த்த நிகழ்வுகளில் இடி - மின்னல் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த அனர்த்தமாக மாறி வருகின்றது. சமீப காலமாக இடி - மின்னல் நிகழ்வுகளின் எண்ணிக்கையும் இடி - மின்னல் நிகழ்வுகளின் பாதிப்புகளும் அதிகரித்து வருவதைக் காண முடியும். குறிப்பாக இடி - மின்னல் என்பது அதிக அளவு பாதிப்பையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்தி வருவதை அறிய முடிகின்றது. கடந்த 30 ஆண்டுகாலத் தரவுகளை ஒப்பிடுகின்ற பொழுது இடி - மின்னல் நிகழ்வுகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்து வருவதனைக் காணமுடிகின்றது (படம் 13.2, 13.3



படம் 13.2 வட மாகாணத்தின் இடி - மின்னல் நிகழ்வுகளின் இடம்சார் பரம்பல்



படம் 13.3 கடந்த 30 வருட கால இடி - மின்னல் காரணமான இறப்புகளின் இட ரீதியிலான பரம்பல்



படம் 13.4 வட மாகாணத்தில் கடந்த 30 வருட காலத்தில் வயல்வெளிகளில் இடம்பெற்ற இடி - மின்னல் நிகழ்வுகளின் இட ரீதியிலான பரம்பல்

மற்றும் 13.4). அத்தோடு இடி - மின்னல் காரணமாக பல்வேறுபட்ட பாதிப்புகளும் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

வடக்கு மாகாணத்தினுடைய வெப்பநிலை அதிகரிப்பும் வடக்கு மாகாணத்தினுடைய வானிலையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றமும் இடி - மின்னல் நிகழ்வுகளின் எண்ணிக்கையை அதிகரித்துச் செல்லுகின்ற நிலைமையைக் காண முடிகின்றது. இடி - மின்னல் என்பது வடக்கு மாகாணத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்துகின்ற அனர்த்தமாக மாறி உள்ளது. அந்த அடிப்படையில் இப்பகுதி வடக்கு மாகாணத்தினுடைய இடி - மின்னல் பாதிப்பு வலயங்களையும் பாதிப்பினுடைய தன்மைகளையும் ஆராய்வதாக உள்ளது. வடக்கு மாகாணத்தின் முதலாவது இடைப்பருவ காலத்திலும் இரண்டாவது இடைப்பருவ காலத்திலுமே அதிக அளவிலான இடி - மின்னல் நிகழ்வுகள் இடம்பெற்று இருப்பதனை அறிந்து கொள்ள முடிகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் வடக்கு மாகாணத்தில் 182 பேர் இடி - மின்னல் காரணமாக இறந்திருக்கின்றனர். மேற்காவுகைச் செயற்பாடுகளின் காரணமாகவும் வடக்கு மாகாணத்தில் அதிக அளவிலான இடி - மின்னல்கள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக மார்ச், ஏப்ரல், மே, ஜூலை, ஓகஸ்ட், செப்டம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நிகழ்கின்ற இடி - மின்னல் நிகழ்வுகளின் காரணமாக அதிக அளவிலான உயிரிழப்புகள் பதிவாகி வருவதனை அறிந்து கொள்ள முடிகின்றது.

வடக்கு மாகாணத்தில் இடி - மின்னலுக்கான காரணங்கள்

வடக்கு மாகாணத்தின் மழை வீழ்ச்சியைத் தீர்மானிப்பதில் பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. அதில் மொன்சூன் சுற்றோட்டம் (Monsoon Circulation), வங்காள விரிகுடாக் கடற்பிரதேச வெப்பநிலையும் அமுக்க வேறுபாடுகளும் (Sea surface temperature and Atmospheric pressure variations), எல்நினோ தெற்கு அலைவு (El Nino Southern Oscillation - ENSO), மேடன் யூலியன் அலைவு (Madden Julian Oscillation - MJO), இந்து சமுத்திர வெப்பச் சுட்டெண் (Indian Ocean Dipole - IOD), றொஸ்பி அலைகள் (Rossby waves), கடல் தரைக் காற்றுகள் (Land and Sea Breezes), மேற்காவுகைச் செயற்பாடுகள் (Convectional Process) போன்றன பங்களிப்புச் செய்கின்றன. எனினும் அண்மித்த 20 ஆண்டுகளில் வருடத்தின் மொத்த மழைவீழ்ச்சியில் மேற்காவுகைச் செயற்பாட்டின் பங்களிப்பினால் கிடைக்கின்ற மழையின் அளவு அதிகரித்து வருவதனைக் காண முடிகின்றது. அதேசமயம் வடக்கு மாகாணத்தின் வெப்பநிலை அதிகரிப்பு, அதிகரித்த அளவிலான மேற்காவுகைச் செயற்பாடுகளையும் தூண்டி வருவதனை அவதானிக்க முடிகின்றது. அதிகரித்த மேற்காவுகைச் செயற்பாடுகளின் விளைவாக இடி - மின்னல் நிகழ்வுகளினுடைய எண்ணிக்கையும் அதிகரித்து வருவதனை அவதானிக்கலாம். அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் மேற்காவுகைச் செயற்பாடு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வானிலைச் செயற்பாடாக மாறி வருகின்றது. பிற்பகல் 2 மணி வரைக்கும் நிலவுகின்ற அதிக அளவிலான வெப்பநிலை, அதிக ஆவியாக்கத்தையும் ஆவியுயிர்ப்பையும் தூண்டி அதிகளவான மேற்காவுகைச் செயற்பாடுகள் இடம்பெறச் செய்கின்றன. ஆவியாக்கச் செயன்முறை மூலம் மேலே செல்லுகின்ற நீர், மாறன் மண்டலத்தில் ஒரு குறிப்பிட்ட உயரம் செல்வதற்கு இடையில் குளிர்வடைந்து, பிற்பகலில் குறிப்பாக மாலை அல்லது இரவு வேளைகளில் அல்லது அதிகாலை வேளைகளில், மழையாகக் கிடைக்கின்ற நிலைமையை அவதானிக்கலாம்.

மழைக் காலங்களில் மேகங்களின் இடையே ஏற்படும் மிகப்பெரிய தீப்பொறி போன்ற மின்பொறி, கீற்றாக கண்ணைப் பறிக்கும் ஒளிக்கதிர்களோடு கோடுகளாய் வானில் நொடிப் பொழுதில் தோன்றி மறையும் நிகழ்வு மின்னல் ஆகும். மின்னலோடு சேர்ந்து கேட்கும் பெரும் சத்தத்தையே இடி என்கிறோம். அணுக்கள் மேகங்களில் மின்னூட்டல் பெற்று எதிர் மின்னூட்டத்தால் ஈர்க்கப்படும் போது வெளியாகும் மின்சாரப் பாய்ச்சலே மின்னலாகின்றது. அதாவது மழை முகிலில் காணப்படும் நேர் அயன்களும் (Positive ions) மறை அயன்களும் (Negative ions E) ஒன்றுடன் ஒன்று தாக்கம் புரிவதன் காரணமாக ஏற்படும் மின்னேற்றம் மின்னலாகின்றது. மழை மேகங்களுக்குள் இருக்கும் அணுக்கள் பல வழிகளில் உராய்ந்து மின்னோட்டம் பெறுகின்றன. இவ்வாறு சில மேகக் கூட்டங்கள் நேர் மின்னோட்டமும், சில மேகங்கள் எதிர் மின்னோட்டமும் பெறுகின்றன. இவ்வாறாக எதிர் எதிரான மின்னோட்டம் கொண்ட பிற மேகக் கூட்டங்கள் அருகருகே வரும் பொழுது மின்னோட்ட ஈர்ப்பு விசையால் காற்றின் வழியே மின்னாற்றல் பாய்ந்து மின்னூட்டத்தைக் கடத்துகின்றன. இவ்வாறு காற்றின் வழியே மின்னோட்டம் பாயும் பொழுது தீப்பொறி போல் ஒளி தெரிகின்றது. இப்பகுதியின் காற்றானது மின் மயமாக்கப்படுகின்றது (Bhardwaj & Singh, 2018).

இவ்வாறாக மின்னல் ஏற்படும் பொழுது அதனோடு கேட்கின்ற ஒலியே இடியாகும். அதாவது மின்னல் மின்னும் போது வெளியிடப்படும் மிக அதிகமான வெப்பம் அதைச் சுற்றிலும் உள்ள காற்றினால் ஓர் அலையைக் கிளப்பி விடுகின்றது. இவ்வாறு அதிகளவு அழுத்தத்துக்குள்ளான காற்று அழுத்தக் குறைவான பகுதிக்கு அதிவேகமாக இடமாற்றம் செய்யப்படும் போது ஏற்படும் ஒலியே இடியோசை எனலாம். ஒளியின் (மின்னல்) வேகம் ஒலியின் வேகத்தை விடவும் மிக அதிமாக இருப்பதனாலேயே முதலில் மின்னலின் வெளிச்சம் தென்பட்டு சிறிது நேரத்தின் பின்னர் இடி ஓசையைக் கேட்க முடிகின்றது. எளிமையாகக் கூறுவதாயின் மின்னலென்பது மின்சாரம் தான். அடர்ந்த ஈர மின்சாரம்; அது அடர் ஈர மேகங்களில் உலவிக் கொண்டேயிருக்கும். அம்மின்சாரம் மேகத்திற்குள்ளேயே மேலும் கீழுமாக அசையும். மழைக் காலங்களில் வானத்தை அவதானித்தால் மேகத்துக்குள்ளேயே வெளிச்சம் மின்னி மின்னி மறைவதனைக் காணலாம். இது மின்சாரத்தின் உலாவலாலேயே ஏற்படுகின்றது. அவ்வப்போது நேர், எதிர் மேகங்கள் அருகருகே வரும் போது மேகங்களிடையே இவ்வாறாக மின்னல் உருவாகின்றது. இதனுடன் கூடவே இடியும் உருவாகின்றது.

சிலவேளைகளில் ஒரு மரத்தையோ நிலத்தையோ இடி - மின்னல் அல்லது மேகங்களுடன் கலந்துள்ள மின்னோட்டம் பாய்ந்து தாக்கும். இதுவே இடி விழுதல் எனப்படுகின்றது. இடி - மின்னலானது மழைக் காலங்களில் தோன்றுகின்றது. இது எதிர்பாராதவொரு இயற்கை அனர்த்த நிகழ்வாகும். எனவே எதிர்பாராத விதமாகவே தாவரங்கள், விலங்குகள், மனிதன் உட்பட சகல

சிலவேளைகளில் ஒரு மரத்தையோ நிலத்தையோ இடி மின்னல் அல்லது மேகங்களுடன் கலந்துள்ள மின்னோட்டம் பாய்ந்து தாக்கும். இதுவே இடி விழுதல் எனப்படுகின்றது. இடி மின்னலானது மழைக் காலங்களில் தோன்றுகின்றது. இது எதிர்பாராதவொரு இயற்கை அனர்த்த நிகழ்வாகும். எனவே எதிர்பாராத விதமாகவே தாவரங்கள், விலங்குகள், மனிதன் உட்பட சகல உயிரினங்களினையும் இது பாதிப்பதோடு, இறப்பிற்கும் காரணமாக அமைகின்றது.

உயிரினங்களினையும் இது பாதிப்பதோடு, இறப்பிற்கும் காரணமாக அமைகின்றது.

கன மழையுடன் கூடிய இடி - மின்னல் கலந்த காற்றுக்கு இடி - மின்னல் புயல் (Thunder storm) என்று பெயர். இவை கார்திரள் மேகங்களிலிருந்து ஏற்படக்கூடியவை. வெப்பநிலை 20 பாகை செல்சியசிற்கும் கீழாகக் குறையும் வகையில் நீர்த்துளி மற்றும் பனித்துளிகள் பெருமளவில் அதிக உயரத்திற்கு எடுத்துச் செல்லப்படும் போதுதான் இடியும் மின்னலும் தோன்றுகின்றன. இடி - மின்னல் புயலில் கடுங்காற்று, கார்திரள் மேகம், இடி - மின்னல், கனமழை போன்றவை உருவாகுவதால் இவை வானிலை உற்பத்திக்கூடம் (Weather factory) என அழைக்கப்படுகின்றது.

இடி - மின்னலில் இருந்து பாதுகாப்பு பெறுதல்

தற்போது வடக்கு மாகாணத்திற்கு கிடைக்கின்ற மழைவீழ்ச்சி மேற்காவுகைச் சுற்றோட்டத்தின் (Conventional

current) விளைவாகக் கிடைக்கின்ற மழை வீழ்ச்சியாகும். செறிவான மேற்காவுகை மழைவீழ்ச்சி (*Intensive convectional rainfall)* எப்போதும் இடி - மின்னலுடன் தொடர்புடையது. மேற்காவுகைச் செயற்பாட்டின் போது உருவாகின்ற கார்திரள் (*Cumulonimbus)* முகில்களுக்கிடையிலான மின்னேற்றமே இடி - மின்னலுக்கான அடிப்படையாகும். இடி - மின்னல் இரண்டு வகைப்பட்டதாகும்.

1. இரண்டு முகில்களுக்கிடையிலான கிடையான (*Horizontal)* மின்னேற்றம்.
2. பூமியின் மேற்பரப்பிற்கும் முகில்களுக்கும் இடையிலான குத்தான (*Vertical)* மின்னேற்றம்.

இதில் குத்தான மின்னேற்றமே எமக்கு உயிர், உடல் மற்றும் சொத்துப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. இதில் உயிர் மற்றும் உடற் பாதிப்புகளை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தொடர்பான சில ஆலோசனைகள் தரப்படுகின்றன:

1. ஏப்ரல், மே, ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் செறிவான மழைவீழ்ச்சி (20 மி.மீ.) தொடங்கும் போதே அடுத்து இடி - மின்னல் நிகழ்வு இடம்பெறும் என்பதனை அனுமானித்து பாதுகாப்பிடத்திற்கு நகர்தல்.
2. பரந்த மற்றும் வெட்ட வெளிகளில் நிற்பதனைத் தவிர்த்தல்.
3. திறந்த வெளிகளில் திறந்த வாகனப் (சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்) போக்குவரத்தைத் தவிர்த்தல்.
4. தொலைபேசி மற்றும் மின்சாதனப் பயன்பாட்டைத் தவிர்த்தல்.

மழைக் காலங்களில் மேகங்களின் இடையே ஏற்படும் மிகப்பெரிய தீப்பொறி போன்ற மின்பொறி, கீற்றாக கண்ணைப் பறிக்கும் ஒளிக்கதிர்களோடு கோடுகளாய் வானில் நொடிப் பொழுதில் தோன்றி மறையும் நிகழ்வு மின்னல் ஆகும். மின்னலோடு சேர்ந்து கேட்கும் பெரும் சத்தத்தையே இடி என்கிறோம். அணுக்கள் மேகங்களில் மின்னூட்டல் பெற்று எதிர் மின்னூட்டத்தால் ஈர்க்கப்படும் போது வெளியாகும் மின்சாரப் பாய்ச்சலே மின்னலாகின்றது.

5. மரங்களுக்கு அண்மையில் அல்லது கீழே நிற்பதனைத் தவிர்த்தல்.
6. விவசாயிகள் விவசாய உபகரணங்களைப் பாவிக்காதிருத்தல்.
7. ஒரு பிரதேசத்தில் தொடர்ச்சியாக இடி - மின்னல் நிகழ்வுகள் இடம்பெறுமாயின் தாடையைத் தொடர்ந்து அசைத்துக் கொண்டிருத்தல். இது செவிப்பறைப் பாதிப்பைத் தடுக்கும் (இதனால் தான் எமது முன்னோர் இடி - மின்னலின் போது 'அர்ஜுனனுக்கு அபயம்' எனக் கூற வேண்டும் என்று தெரிவித்தனர்).
8. இயன்றவரை கால் பாதத்தின் குதிப்பகுதி நிலத்தின் மீது படுவதனைத் தவிர்த்து காதுகளை மூடி நிலத்தில் இருத்தல்.
9. வீட்டில் நின்றாலும் சமையலறைப் பகுதியில் நிற்பதனைத் தவிர்த்தல்.

மேற்கூறிய பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் இடி - மின்னல் பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. ‘ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை’ என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.

கணபதிப்பிள்ளை ரூபன்

கந்தரூபன் (ரூபன்) கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் ”Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

ஈழத்தில் கற்ற அடிப்படையில் சிலிக்கன் வலியில் வணிகம்

“வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை”

திருக்குறள் (512)

மு. வரதராசனார் விளக்கம்: *பொருள் வரும் வழிகளைப் பெருக்கச் செய்து, அவற்றால் வளத்தை உண்டாக்கி, வரும் இடையூறுகளை ஆராய்ந்து நீக்க வல்லவனே செயல் செய்ய வேண்டும்.*

நான் எதிர்பாராத விதமாக எனது முகநூல் உள்பெட்டியில் நண்பர் ஒருவர், 63 வருடங்களுக்கு முந்தைய சில ஆவணங்களை தனது தாத்தாவின் பழைய ஆவணக் கோப்புகளிலிருந்து எடுத்து எனக்கு அனுப்பியிருந்தார். அந்த ஆவணமானது எனது தாத்தாவும் (தந்தையின் அப்பாவும்), எனது தந்தையும் எமது கிராமத்தில் நடாத்திய கடையின் (General Store) ரசீது (Receipt) ஆகும். அவை அவர்களின் கையெழுத்தோடு எமது கடையான ‘K. V. கந்தப்பர்’ எனும் தலைப்பில் இருந்தது. அந்த ரசீதில் இருந்ததன் படி, அவர்கள் கடையில் விற்ற பொருட்களைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது. ஒரு பக்கம் பலசரக்குப் பொருட்கள், மருந்துச் சரக்குகளும்; மறுபக்கம் விளக்குகள், தும்புக்கட்டை, கட்டிடப் பொருட்களும் விற்றார்கள். அதனோடு தோட்டம் செய்ய தேவையான பொருட்களும் விற்றார்கள். அது மட்டுமன்றி 1961 ஆம் ஆண்டு காலத்தில், வெளி உலகத்தோடு தொடர்பு கொள்ள தொலைபேசி வைத்து, அதனை கிராமத்தவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்தார்கள். இதனை இப்போது ‘Communication’ என்று கூறுவார்கள்.

நான் கடையில் வேலை செய்யத் தொடங்கியது எனக்கு 8 - 9 வயது இருக்கும்



புலோலியில் எனது தாத்தாவும் அப்பாவும் நடாத்திய கடையின் ரசீதுகள்
Image Source : www.indiatoday.in



புலோலியில் எனது தாத்தாவும் அப்பாவும் நடாத்திய கடையின் ரசீதுகள்
Image Source : www.indiatoday.in

போது. அதேபோல், எனது நான்கு அண்ணாக்களும் பாடசாலைக்குப் பின், விடுமுறைக் காலத்தில் அப்பாவுக்கும் தாத்தாவுக்கும் உதவி செய்வார்கள். தாத்தாவின் மடியில் இருந்து ரசீது போட்டதும், எண்களைக் கூட்டப் பழகியதும், மிச்சப் பணத்தை வாடிக்கையாளருக்கு மாற்றிக் கொடுத்ததும் எனது ஆரம்ப கால ஞாபகங்கள். நாங்கள் எல்லோரும் கடையில் பொருட்களை அடுக்குவோம்; அலுமாரிகளை துப்பரவாக்குவோம்; இரவில் கணக்குப் புத்தகங்களைப் பார்த்து கணக்குகளைச் சரிசெய்வோம். எனது தந்தையார் ட்ராக்டர் ஒன்றை விவசாய நடவடிக்கைகளுக்கு வாடகைக்கு வழங்கவென வாங்கினார். எனது அண்ணாக்களும் நானும் வாகனங்கள் ஓட்டப் பழகியது இந்த ட்ராக்டரில் தான். எனக்கு அப்போது 12 வயதிருக்கும்.

இப்போது, 40 வருடங்களுக்குப் பின், எனது வாழ்க்கையை நினைத்துப் பார்த்தால், நான் உலகின் முன்னணியான சிலிக்கன் வலியில் தொழில் செய்வதற்கு, நான் அன்று கற்ற பாடங்கள் - அனுபவங்கள் அடித்தளமாக இருக்கின்றன என்று புரிகிறது. ஒரு சிறிய கிராமமான புலோலியில் பிறந்து, முதல் 19 வருடங்களை அங்கு கழித்து, பின்னர் வட அமெரிக்காவிற்கு வந்து இரண்டு பெரிய நிறுவங்களை உருவாக்கியதற்கு, எனது சிறு வயது அனுபவங்கள் அடிப்படையாக இருந்திருக்கின்றன. அவற்றில் சிலவற்றை இந்தக் கட்டுரையில் பகிரலாமென்று இருக்கின்றேன்.

மனப்பான்மை வளர்ச்சி/ கடின வேலை: நான் சிலிக்கன் வலியில் ஆரம்ப நிறுவனங்களை நிறுவி, அதனை பெரும் நிறுவனமாக ஆக்கி, பல நூறு தொழிலாளர்களை வேலைக்கு

புலோலியில் எமது கடையின் இன்றைய தோற்றம்

வைத்து, பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை வாடிக்கையாளர்களுக்கு விற்றேன். அதற்கு ஒவ்வொரு நாளும் 12 மணி நேரத்திற்கும் மேல் வேலை செய்து, தொழிலாளர்களுடன் கூடி நின்று பொருட்களை வடிவமைக்க வேண்டியிருந்தது.

எனது கிராமமான புலோலியில், காலையில் எழுந்து கடைக்கு அல்லது வயலுக்குப் போய் வேலை செய்துவிட்டு, நேரத்திற்கு பள்ளிக்கூடம் போவோம். பள்ளி முடிந்த பின், எமது நண்பர்கள் ஊரெல்லம் விளையாடிக் கொண்டிருக்க, நாங்கள் மீண்டும் கடைக்குப் போய், தாத்தாவுக்கும் அப்பாவுக்கும் உதவி செய்வோம். மாலை நேரத்தில் கடை மிகவும் பரபரப்பாக இருக்கும். அப்போதும் எமது வயதிற்கேற்ற வேலைகளை நாங்கள் செய்வோம். கடையை மூடும்போதும், கணக்குகளை எழுதிவிட்டே வீடு செல்வோம். வீடு செல்ல இரவு 9 மணியாகிவிடும். பின்னர், இரவுச் சாப்பாடு அருந்திவிட்டு, பள்ளிப் பாட வேலைகளை முடித்துவிட்டுத் தூங்குவோம். சிறுவயதில் கடின வேலைக்குப் பழகியமையே, இப்போது அமெரிக்காவில் நீண்ட நேரம் வேலை செய்யும் மனப்பான்மையை வளர்த்தது என நம்புகிறேன்.

சரியான நேரத்தில் தேவையான பொருள்:

எமது கடை, பலசரக்கு கடையாக ஆரம்பிக்கப்பட்டு பின் விவசாயப் பொருட்களையும் விற்கத் தொடங்கியது. பின்னர், சீமெந்தில் வீடு கட்டும் கலாசாரம் ஆரம்பித்ததும், அதற்குத் தேவையான இரும்புக் கம்பிகள், சீமெந்து, மண், 'பெயிண்ட்' அடிப்பதற்கான பொருட்கள் போன்றவற்றை விற்பதாக அது விரிவடைந்தது. அக் கிராமத்தில், எமது கடையிலேயே முதலாவதாக தொலைபேசி இணைப்பு வந்தது. அதனைக் கொண்டு, ஊர் மக்கள் தூரத்திலிருக்கும் தமது உறவுகளுடன்

தொடர்பு கொள்ள ‘Communication Center’ போன்ற ஒன்றை உருவாக்கினோம். எமது கடை கால மாற்றத்திற்கு ஏற்ப, சரியான நேரத்தில் தேவையான பொருட்களை விற்பனை செய்ததால், ஊர் மக்கள் எமது கடையை நாடி வரவேண்டிய தேவை எப்போதும் இருந்தது.

எனது முதலாவது ஆரம்பத் தொழில் நிறுவனத்தில், சரியான நேரத்தில் இணையத்தின் மூலம் தொலைபேசி அழைப்புகளை (Voice over Internet Protocol) சுலபமாகவும் மலிவாகவும் வழங்குவதற்கான தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தினேன். அதன் மூலம், உலகில் சகல மூலையிலும் இருந்தவர்களை இணைக்க முடிந்தது. இச் சிந்தனைக்கு எமது கடையின் வியாபார அனுபவம் உதவியது.

தேவை உருவாக்கம் (Demand Creation): ஓர் ஊரின், நாட்டின் பொருளாதாரத்தை ஊக்குவிக்க, முதலில் தேவையை உருவாக்க வேண்டும். அதன்பின், தேவையைக் கொள்வனவு செய்யக் கூடிய, வாடிக்கையாளர்கள் தேவை. எமது பிரதேசத்தில் கல்வியறிவு பணம் படைத்தவர்களை உருவாக்கியது. கிராமங்களில் கல்வியை வழங்க பாடசாலைகள் அமைத்தோம். எனது ஆரம்பக் கல்வியை புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்றேன். ஆரம்பத்தில் ஓர் சிறிய திண்ணைப் பள்ளியாக இருந்த அதனை அரசாங்க மகா வித்தியாலயமாகப் பதிவு செய்து, அதன் மூலம் பல வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், கணக்காளர்கள் என்று பலர் உருவாக எமது முன்னோர்கள் வழியமைத்தார்கள். அதனால் அவர்களது பொருளாதார பலம் அதிகரித்தது. அவர்களது தேவையை விற்பனை செய்ததன் மூலம் எமது வர்த்தக சாலையின் வியாபாரம் கூடியது.

அமெரிக்கா நாட்டில் வர்த்தகமானது மக்களின் பொருள் வாங்கும் பலத்தினால் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனைச் சரிவரப் பயன்படுத்த வேண்டுமானால் அவர்களுக்கு வேண்டிய தேவைகளை உருவாக்க வேண்டும். பின், அத் தேவைகளுக்கு ஏற்ப பொருட்களை வடிவமைக்கக் கூடிய துறைசார் நிபுணர்களைக் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும். சிலிக்கன் வலியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் அது இருக்கும் இடம். அந்த இடம் நான் மேற் கல்வி படித்த ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகத்திற்கும் உலகப் பெருமை பெற்ற பல்கலைக்கழகமான பேக்கிளி பல்கலைக்கழகத்திற்கும் மத்தியில் அமைந்திருக்கிறது. இந்தச் சூழல், மக்களின் தேவைகளை அறிந்து அல்லது உருவாக்கி, பொருட்களை உற்பத்தி செய்யக் காரணமாவதுடன், அதற்கான பாவனையாளர்களையும் உருவாக்கி வருகிறது.

தலைமைத்துவமும் ஆளிடைத் தொடர்புகளும்: எனது தந்தையார் ஊரின் சமாதான நீதவானாகவும், எமது வலயத்தின் பெரிய கோவிலான வல்லிபுர ஆழ்வார் கோவிலின் தர்மகர்த்தாவாகவும் இருந்தார். அவை மூலம், பல சேவைகளைப் புரிந்தார். பல அரசாங்க அதிகாரிகளுடனும் அரசியல்வாதிகளுடனும் வலயத்தின் சக வர்த்தகர்களுடனும் தொடர்பு வைத்திருந்தார். அதன் மூலம் எமது வர்த்தகத்தின் அடைவுகளைப் பெருக்கினார்.

இப்படியான தொடர்புகளை ஆங்கிலத்தில் ‘Networking Effect’ என்று கூறுவார்கள். நான் ஆரம்ப நிறுவனங்களைத் தொடங்கும் போது, இதனைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் காலம் செல்லச் செல்ல, தலைமைத்துவம் மற்றும் ஆளிடைத் தொடர்புகளின் முக்கியத்துவம் தெரியவந்தது. அதன் மூலம் பெரிய நிறுவனங்களுடனும் நிதி முதலிடுபவர்களுடனும் இணைந்து எனது நிறுவனங்களைப் பெரிதாக்க முடிந்தது.

வாடிக்கையாளர், தொழிலாளர்கள் மேல் கரிசனை: அந்தக் காலகட்டத்தில் மக்கள் மண் வீடுகளிலிருந்து சீமெந்து வீடுகளுக்கு மாறிக் கொண்டிருந்தார்கள். இளம் பெண்களை மணம் முடித்துக் கொடுக்க, சீமெந்து வீடுகளை சீதனமாகக் கேட்ட காலம் அது. பலருக்கு ஒரே தடவையில் பணம் கொடுத்து கட்டிடப் பொருட்களை வாங்கி வீடு கட்ட வசதி இருக்கவில்லை. இதனால், எமது கடையிலிருந்த கட்டிடப் பொருட்களை, மாதத் தவணையில் பணம் செலுத்தும் அடிப்படையில் விற்பனை செய்தோம். சிலருக்கு அதனையும் செலுத்த முடியாது போனது. ஆனால் அப்பாவும் தாத்தாவும் அது பற்றி பெரிதாக அலட்டிக் கொண்டதில்லை.

ஆரம்பத் தொழில் நிறுவனம் ஒன்றை சர்வதேச ரீதியில் உருவாக்குவது என்பது பல நூறு தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல், அவர்களிடமிருந்து ஆக்கபூர்வமாக வேலையை வாங்குதல் போன்ற செயல்களை உள்ளடக்கியது. அதே நேரம் தொழிலாளர்களது பிரச்சினைகளை அறிந்து அதற்கேற்ப அனுசரித்து நடந்து, அவர்களை ஊக்குவித்து, சிறப்பான விளைவுகளை உருவாக்குவதும் முக்கியமானது. நான் அந்த நெறியைக் கைப்பற்றியதால், எனது தொழிலாளர்கள் நீண்ட நேரம் வேலை புரிந்து எனது நிறுவனத்தை வெற்றிகரமாக இயக்க உதவினார்கள். அவர்களில் பலர் எனது இரண்டாவது நிறுவனத்திலும் இணைந்து வேலை புரிந்தார்கள். இதனை ‘விசுவாசம்’ (loyalty) என்று கூறுவார்கள். வாடிக்கையாளர், தொழிலாளர்கள் மேல் கரிசனை செலுத்துவதன் மூலம் இதனை அடையலாம்.

எல்லாவற்றிற்கும் வரம்பு உண்டு:

வியாபாரத்தில், எமது நல்ல குணங்களை சிலர் தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு. அப்படியானவர்களுடன் கவனமாக இருப்பது அவசியம் என்பதை எனது தந்தையாரின் நடத்தைகளின் மூலம் கற்றுக்கொண்டேன். அவர் சமாதான நீதவான் என்பதாலும், வியாபாரம் புரிந்து பணம் உழைத்திருப்பதாலும் பலர் அவரிடம் பத்திரங்கள் நொத்தாரிசு செய்யவும், காசோலைகள் மாற்றவும் வருவார்கள். சிலர் போலி ஆவணங்களோடு, சட்டத்திற்குப் புறம்பான வேலை செய்யவும் முனைவார்கள். அந்த நேரங்களில் எனது தந்தையார் எச்சரிக்கையோடு நடந்து கொள்வதையும், அவர்களிடம் ரௌத்திரம் அடைவதையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன்.

எனது இரண்டாவது ஆரம்ப நிறுவனத்தில் வேலை செய்த மூத்த அதிகாரி (CEO) ஒருவர், தனது வேலைகளை ஒழுங்காகச் செய்யாமல் மற்றவர்களின் வேலைகளில் இடையிட்டு அவற்றைக் குழப்பினார். நான் எச்சரிக்கையோடு நடந்து கொண்டு அவரை வேலையிலிருந்து நீக்கினேன். அதே போல் இன்னொரு அதிகாரி, தனது பிழைகளுக்கு தான் பொறுப்பெடுக்காமல், தனது அணியின் அடிநிலை வேலையாளர்களை குற்றம் சாட்டினார். நான் அவரது தவறை பிற தலைவர்கள் மத்தியில் சுட்டிக்காட்டி, உண்மையை வெளியே கொண்டு வந்தேன்.

நான் ஈழத்தின் கிராமமான புலோலியில் கற்றவை இன்றும் எனக்குத் துணையாக இருந்து வருகிறது. நேர்மையாகவும் துணிச்சலாகவும், உலகில் வர்த்தகத்தில் உச்ச நாடாக விளங்கும் ஐக்கிய அமெரிக்காவின் சிலிக்கன் வலியில் மற்றவர்களுக்கு இணையாக வியாபாரம் செய்ய முடிகிறது. நான் எப்போதும் இளையவர்களுக்கு கூறுவது ஒன்றுதான்: “நீங்கள் எங்கு தொடங்குகிறீர்கள் என்பது அல்ல, எங்கு முடிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்! (*It’s not where you begin, it is where you end, what is important!*).”

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.

அமரசிங்கம் கேதீஸ்வரன்

பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012ஆம் ஆண்டு 'திட்டமிடல் மூல தத்துவங்கள்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் மனிதவள அபிவிருத்தியில் கல்வி முதலீடு

Image Source - slguardian.org

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் மனிதவள அபிவிருத்தியில் கல்வியின் மீதான முதலீடும் அது சார்ந்து செய்யப்படும் அதீத வளப் பயன்பாடும் பற்றிய ஆய்வானது இவ்விரு மாகாணங்களின் அபிவிருத்தியில் அதீத அக்கறைக்குரியதாகும். வரலாற்றின் ஆரம்பம் முதல் கற்றல் செயன்முறை என்பது இவ்விரு மாகாணங்களின் பிரதான முதலீட்டு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. எல்லையோரத்திலிருந்த பல குடும்பங்களின் மெய்யான அபிவிருத்தியை வெளிக்கொண்டு வந்ததற்கு, கல்வியினால் அக் குடும்பங்களிலிருந்து மேற்கிளம்பிய ஒரு சில பிள்ளைகள் காரணமாகினர். அக் குடும்பங்கள் வசதியுடையதாகவும் சமூகப் பாகுபாடுகளைக் கடந்து சமநிலையுடைய குடும்பங்களாகவும் மாறத் தொடங்கியதால் கல்வி மீதான அக்கறை அதிகரித்தது. தனியே பொருளாதார நன்மைகளுக்காக மட்டுமன்றி சமூக அடக்குமுறைகளுக்கு எதிரான பிரதான நுழைவாயிலாகவும் கல்வி அமைந்தது. கல்வியில் உயர்வாய்ப்பைப் பெற்றவர்களால் புலப்பெயர்வும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இலங்கையின் ஏனைய பகுதிகளில் கல்வியை வளர்த்ததில் மதத் தாபனங்கள் முன்னிலை

வகித்தது போல, எமது பிரதேசத்திலும் திண்ணைப் பள்ளிகள் சிறு முதலீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றின் இயக்கம் வறுமைக்கு மத்தியிலும் வளரும் ஒரு முதலீட்டுத் துறையாக கல்வியை மாற்றியது. ஆறுமுக நாவலரின் செயற்பாடுகள், அச்சுத் தொழில்நுட்பம் காரணமாக உருவான பாடப் புத்தகங்கள் போன்றன சுதேச கல்வியை வளர்த்தன. மதத் தாபனங்களின் செல்வாக்கினால் கல்வி வளர்ச்சியடையும் நிலை காலனிய ஆதிக்க காலத்தில் ஏற்பட்டிருந்தது. சுதேசிகளினது ஆட்சியில் அமைந்த சுதந்திரத்தின் பின்னான காலத்தில் இலவச கல்வித் திட்டத்தின் மூலம் கல்வியின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கல்வியின் மீதான முதலீடு, தனியே பொருள் முதலீடாக மட்டுமன்றி சமூகம் - பண்பாடு - சிந்தனைப் பாங்கு மீதான முதலீடாகவும் முன்னிலைப்படுத்தப்பட்டது. கல்விக்கான கட்டமைப்பும் அபிவிருத்தியும் அரச நிதி முதலீட்டில் பெரும்பங்கை உள்வாங்கி வருவதனை நாம் கண்டுகொள்ள முடியும்.

Image Source - unhabitat.lk

இந்த வகையில் கிழக்கு மாகாணத்தில் 17 வலயக்கல்வி அலுவலகங்களும், 48 கோட்டக்கல்வி அலுவலகங்களும், 1,115 மாகாண - தேசிய பாடசாலைகளும் உள்ளடங்கலாக 23,278 ஆசிரியர்களும், 399,105 மாணவர்களும் கல்வித்துறையில் ஈடுபடுகின்றனர். வடக்கு மாகாணத்தில் 14 வலயக்கல்வி அலுவலகங்களும், 35 கோட்டக்கல்வி அலுவலகங்களும், 1091 பாடசாலைகளும் உள்ளடங்கலாக 13,812 ஆசிரியர்களும், 158,041 மாணவர்களும் கல்வித்துறையில் ஈடுபடுகின்றனர். வடக்கு மாகாணத்தில் '1AB' தரத்திலான உயர்தர வசதியுள்ள 118 பாடசாலைகளும், '1C' தரத்தில் 123 பாடசாலைகளும், 'தரம் II' வகையில் 294 பாடசாலைகளும், 'தரம் III' வகையில் 461 பாடசாலைகளுமாக, 996 பாடசாலைகள் திருப்தியடைந்த மட்டத்திலான வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்தில் '1AB' தரத்திலான 110 பாடசாலைகளும், '1C' தரத்திலான 184 பாடசாலைகளும், 'தரம் II' வகையில் 362 பாடசாலைகளும், 'தரம் III' வகையில் 459 பாடசாலைகளுமாக, 1115 பாடசாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் 23,278 ஆசிரியர்கள், 17 மாணவருக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 18,225 ஆசிரியர்கள், 11 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வகையில் கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர். வடக்கு மாகாணத்தில் 4,727 பயிற்றப்பட்ட

Image Source - www.we.org

பட்டதாரி ஆசிரியர்களும், 4,356 பட்டதாரி ஆசிரியர்களும், 8,185 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 1,617 பயிற்றப்படாத ஆசிரியர்களும், ஏனைய வகை சார்ந்து 24 ஆசிரியர்களும் தகமையடிப்படையில் கல்வி கற்பித்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் 8,291 பட்டதாரி ஆசிரியர்களும், 3,729 கல்வி டிப்ளோமா ஆசிரியர்களும், 6,237 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், 1,139 பயிற்றப்படாத ஆசிரியர்களும், ஏனைய வகை சார்ந்து 61 ஆசிரியர்களும் தகமையடிப்படையில் கல்வி கற்பித்து வருகின்றனர். இந்த வகையில் மனிதவள அபிவிருத்திக்கான கல்வி முன்னெடுப்பானது ஆரம்பம் மற்றும் இடைநிலை மட்டங்களில் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகிறது. தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் தனிநபர் வழிப்படுத்தல் நிலையங்கள் மூலமும் கல்வியறிவுக்கான மிகப் பரந்த அக்கறையை இவ்விரு மாகாணங்களும் வெளிப்படுத்துகின்றன. மனித வளத்துக்கு தேவைப்படும் அறிவு, திறன், உளப்பாங்கு என்பன இவ்விரு மாகாணங்களிலும் முதன்மையானவையாகக் கருதப்படுகின்றன.

கல்வியின் விளைபயன்

கல்வியமைப்பில் தேசிய ரீதியில் எடுக்கப்படும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் உதவியளிப்புகளும் இவ்விரு மாகாணங்களுக்கும் சரிவர வழங்கப்பட்டுள்ள போதும், கல்வியின் உயர் இலக்கான அனைவருக்கும் சமவாய்ப்பு என்பது இவ்விரு மாகாணங்களுக்கும் சவாலாகவே அமைந்து வருகின்றது. பரந்த நிலப்பரப்பைக் கொண்ட இம் மாகாணங்களில் ஆசிரிய வளத்தைப் பகிர்வு செய்வதில் காணப்படும் நடைமுறைச் சவால்கள் காரணமாக, கிராமப் புறப் பாடசாலைகளில் பாடவாரியாக அதிக வெற்றிடங்கள் காணப்படுகின்றது; நகர்ப்புறப் பாடசாலைகளில் மேலதிக ஆளணி இனங் காணப்பட்டுள்ளது. சனச்செறிவு மிகுந்த நகரங்களிலிருந்து அதிகளவானவர்கள் கல்விச் சேவைக்கு தெரிவாகும் நிலையில், இவர்களை கிராமங்களை நோக்கி அழைத்து வருவது, அவர்களுக்கான விடுதி வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது போன்றன சவாலாகக் காணப்படுகின்றது. இதனால் கிராமத்துக்குரிய ஆளணி ஈர்ப்பானது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பொதுவான பிரச்சினையாக அமைகிறது. கிராமிய வீதிகளின் சீரின்மை காரணமாக போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது பாரிய நிதியைக் கோரும் பிரச்சினையாக உள்ளது. இதனால் கிராமியப் பயணங்கள் வசதியுடைய ஒன்றாக மாற்றப்பட முடியாத நிலையில், குறைபாடுகளுடன் பயணிக்கும் வாய்ப்பு மட்டுமே கிராமங்களுக்குக் காத்திருக்கின்றன. இருந்த போதும் பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்த பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், புலம்பெயர் நாடுகளில் வாழும் மக்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் உருவாக்கப்பட்டுள்ள சமூக முதலீடுகள் வடக்கில் கல்வியின் வளர்ச்சியை சாத்தியப்படுத்தியுள்ளன. ஆனால் கிழக்கில் இந்நிலை சற்றுக் குறைவாகவே உள்ளது. பாடசாலை நிர்வாகத்தில் காணப்படும்

நிர்வாக வேறுபாடுகளும் கல்வி அடைவை பாதிக்கும் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன. வட மாகாணத்தில் 73 மத்திய அரசுப் பாடசாலைகளும், 1011 மாகாணப் பாடசாலைகளும் செயற்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் 40 மத்திய அரசுப் பாடசாலைகளும், 6 தனியார் பாடசாலைகளும், 1075 மாகாணப் பாடசாலைகளும் செயர்படுகின்றன. இவை பெற்றுக் கொள்ளும் நிதி ஒதுக்கீட்டு வேறுபாடுகள் காரணமாக சம வளர்ச்சி என்பது சவாலுக்குரியதாகக் காணப்படுகிறது. இதனைவிட பல பாடசாலைகள் செயற்படாத பாடசாலைகளாகவும் உள்ளன. வட மாகாணத்தில் 94 பாடசாலைகள் இயங்காத நிலையில் இருக்கின்றன. முன்பள்ளிகளின் நிர்வாகம் கல்வி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் மேற்பார்வை செய்யப்படுகின்ற போதிலும், இவற்றின் நேரடி நிர்வாகம் கிராமிய அமைப்புகள், மத அமைப்புகள், பிரதேச சபை எனப் பல்வேறு தரப்புகளாலும் செய்யப்படுகின்றன. வட மாகாணத்தில் 1664 முன்பள்ளிகள் இயங்குவதுடன் 2925 முன்பள்ளி ஆசிரியர்கள் பணி செய்கின்றனர். இதில் 35,592 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். ஆசிரியர்களின் சம்பளம் பல்வேறு நிலைகளில் வழங்கப்படுகின்றன. பலர் தொண்டர் சேவையாகவே இதனைச் செய்து வருகின்றனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தால் இணைப்புச் செய்யப்பட்ட பல பாதுகாப்பு அலுவலர்கள், முன்பள்ளி ஆசிரியர்களாக செயற்படுகின்றனர். கிழக்கு மாகாணத்தில் 1832 முன்பள்ளிகள் செயற்படுவதுடன் இவற்றில் 4054 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்; 46,643 பிள்ளைகள் கல்வி கற்று வருகின்றனர். முன்பள்ளி

Image Source - unhabitat.lk

தொடர்பில் ஒரு முறையான திட்டமும் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் போதுதான் வளர்ந்த நாடுகளில் உள்ளது போல் கல்வி நடைமுறையினை இப் பருவப் பிள்ளைகளிடத்தில் ஏற்படுத்த முடியும்.

பிள்ளைகளின் செயற் திறனைத் தூண்டி, புத்தாக்கச் சிந்தனையும் நேர் மனப்பாங்கும் கொண்டவர்களாக அவர்களை உருவாக்க கல்வி உதவ வேண்டும். தற்சார்புச் சிந்தனையுடன் தன்னம்பிக்கையும் தேசப்பற்றுமுள்ள கலைத்திட்டத்தினூடாக அதனை அடைந்து கொள்ள முடியுமா என்ற விவாதம் கல்வியியலாளர்களிடையே தொடர்ந்து வருகிறது. எவ்வாறாயினும் பொருளாதார நோக்கில் அதிகமான பொது முதலீட்டைப் பெற்றுக் கொள்ளும் கல்வித் துறையின் பொருளாதார வெளியீடுகள் உத்தம மட்டத்தில் கிடைக்கப் பெறவில்லை என்பதே உண்மையாகும். கல்விக்கு இடப்பட வேண்டிய முதலீடுகளை விட, வெளியீடுகளை மேம்படுத்தும் கலைத்திட்ட மாற்றமும், வேலைச் சந்தையின் கேள்விக்கான திறன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான மறுசீரமைப்புகளும் கல்வித்துறையில் கொண்டுவரப்பட வேண்டும் என்பது மீள மீள வலியுறுத்தப்படுகிறது.


SpotOn Money
SEND MONEY to
SRI LANKA
FIRST TRANSFER FEE FREE*
Immediate Payment to Any Account
Partnership with
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT
Cash Pickup at any
Cargills food city
get 5% Discount*
on Purchases
0207 341 7300
www.spoton.money
Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)
* T & C Apply

வணக்கம் London
www.vanakkamlondon.com



யாதும் ஊரே யாவரும் கேளிர்

தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்

vanakkamlondon.com /vanakkam.london /vanakkamlondon

/Vanakkam_London /TheVanakkamLondon

Protection For You & Your Family

Our services

Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «

Are You Getting Million Dollar Advice?

Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

Sritharan Thurairajah CLU, CHS

Simple Solution in a Critical Situation

Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant

nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE

ALL OF THE GTA & ONTARIO

ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

We work with 35 financial institutions

Business & Personal Insurance

Free Financial Education for everyone

We work with 35 financial institutions

Long Term Care | Elder's Insurance
Children's Insurance

Best Services

1. RESP/PRSP
2. Life Insurance
3. Auto Insurance
4. Estate Planning
5. Home Insurance
6. Disability Insurance
7. Mortgage Insurance
8. Travel/Visa Insurance
9. Non-Medical Insurance
10. Critical illness Insurance
11. Dental & Drug Insurance
12. Guaranteed Investments

416-731-2829

யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK

abc
DRIVING SCHOOL
We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.
CAR DRIVING LESSONS
Class 5 Driving License
Refresher Lessons
Knowledge Test Preparation
ENROLL NOW!
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy
528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8
(514) 278-1824
abc.conduire@gmail.com
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon
4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6
(514) 866-4777
abc.driving4295@gmail.com

SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

London

#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

Colombo

#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

Jaffna

#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து வகையான
மரக்கறி மற்றும் பலசரக்கு
பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட இன்றே நாடுங்கள்
MEGAA STORE
மெகா ஸ்டோர்ஸ்
- Fresh Meat
- Asian Groceries
- Fruits & Vegetable
- Frozen Foods
- Off Licence
OPENING HOURS
EVERYDAY
7AM - 11PM
020 8336 0061 | 074 9414 7547
Email: hellomegaastore@gmail.com
MEGAA STORE LTD - 99 Burlington Road, New Malden, KT3 4LR.

மானுடம் நிறுவனம்
maanudam foundation
www.maanudam.org

இலங்கையில் சமகாலத்தில் தமிழ் காட்டூன் துறையில் இயங்கிக் கொண்டிருக்கும் இவர் காட்டூன் ஓவியத்திற்காக சனாதிபதி விருது பெற்ற ஒரேயொரு முதல் இலங்கையராவார். இலங்கையின் மூத்த பத்திரிகையான வீரகேசரி பத்திரிகைக்கு தொடர்ச்சியாக அரசியல் காட்டூன்கள் வரைந்து வருவதுடன் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகைகளுக்கும் காட்டூன் வரைந்து வருகிறார். இவரது காட்டூன்களை உள்ளடக்கிய ஒரு தொகுப்பு நூலாக "செல்வனின் காலவரை காட்டூன்கள்" எனும் ஓவியநூல் வெளிவந்துள்ளது. இதனை எமது மாணவர்களிடமும், மக்களிடமும் சேர்க்கும் பணியில் மானுடம் நிறுவனம் இணைந்துள்ளது.



எமது ஆளுமைகளின் படைப்புகளை எம்மவர்களிடம் கொண்டு சேர்க்கும் பணியில் உங்கள் கரங்களும் இணையட்டும்.

ஈழத்து மூத்த ஓவியக கலைஞர் அமரர் ஆசை இராசையா அவர்களது வாழ்கை வரலாறு, கலைப் படைப்புகள், ஓவியக்கலையுலகில் அவரது அனுபவங்கள் அனைத்தும் உள்ளடங்கிய நூலாக "விம்பம்" எனும் நூல் 2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலானது ஓவியக்கலை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்கள் அனைவருக்கும் மிகவும் பயனுள்ள நூலாகும். இதனை எமது மாணவர்களிடமும், மக்களிடமும் சேர்க்கும் பணியில் மானுடம் நிறுவனம் இணைந்துள்ளது.

வாசிப்போம்! வளர்ப்போம்! நேசிப்போம்!!

Books are being donated to the School libraries by Maanudam Foundation

Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY